வெளியீடு—5—1—1972]
Issued—5—1—1972]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1971 ஜூலை 12

Monday 12th July 1971

தொகுதி VII—எண் 1

Volume VII—No. 1

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

3897

D

V211,31 N71

31N71.7

61517

# Tamil Nadu Legislative Assembly Debates.

SECOND SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*12th, 13th, 14th, 15th and 16th July* 1971.

*Volume VII (Nos. 1 to 5)*

PAGES

## TABLE OF CONTENTS.

***Monday*, 12th *July* 1971.**


1. Questions and Answers ... ... ... ... 1–35
2. Calling Attention—
   Compulsory collection of payment towards I.M.S. loan from the agriculturists in Seranthapoomangalam, Tirunelveli district ... ... ... 36
3. Announcements—
   Tamil Nadu Sales Tax (Surcharge) Bill, 1971 37
4. Government Bills—
   (*a*) Tamil Nadu Sales Tax (Surcharge) Bill, 1971. 37
   (*b*) Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971 ... ... 37–39
   (*c*) Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971) ... ... ... 37–39
   (*d*) Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971) ... ... ... 40–86
   (*e*) Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971) ... 87–90
5. Papers laid on the Table ... ... ... ... 91

PAGES

*Tuesday, 13th July 1971.*

1. Questions and Answers ... ... ... ... 99–120
2. Calling Attention—
   Palladam Constituency, hardship to people in villages due to dearth of drinking water ... ... 120–122
3. Government Bills—
   (a) Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971) ... 122–155
   (b) Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 12 of 1971) ... ... ... ... 162–165
   (c) Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971) ... ... ... ... ... ... ... 165–174
   (d) Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971) ... ... 174–184
4. Government Resolutions—
   (a) Tamil Nadu City Municipal Corporation Act, 1919, alteration of Schedule IV ... ... ... 156–161
   (b) Tamil Nadu Cotton Transport Rules, 1950, amendments ... ... ... ... ... ... 161
5. Announcement—
   Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... 162
6. Papers laid on the Table ... ... ... 184–186

*Wednesday, 14th July 1971.*

1. Questions and Answers ... ... ... ... 187–209
2. Privilege Matter—
   Publication of expunged portions in the 'Indian Express' ... ... ... ... ... 209–210
3. Adjournment Motion—
   Cauvery Waters Dispute, Centre's action over the resolution passed by this House ... ... ... 211–216
4. Privilege Issue—
   Remarks made by Thiru N. Sivappa in Lok Sabha on Cauvery Water Dispute ... ... ... 216–217

PAGES

*Wednesday, 14th July 1971—cont.*

5. Presentation of Reports—
   (a) Committee on Subordinate Legislation—Presentation of Second Report ... ... ... 217
   (b) Committee on Government Assurances—Presentation of First Report ... ... ... 217
6. Announcement—
   Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1971 ... ... ... ... 218
7. Government Bill—
   Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1971 ... ... ... ... 218
8. Voting on Demands for Grants for the year 1971–72—
   (a) Demand No. 3 General Sales Tax and Other Taxes and Duties—Administration ... 218–245
   (b) Demand No. 34—Stationery and Printing ... 245–252
9. Papers laid on the Table ... ... ... 253

*Thursday, 15th July 1972.*

1. Questions and Answers ... ... ... 269–296
2. Adjournment Motion—
   Promulgation of prohibitory order under City Police Act ... ... ... ... ... 296–300
3. Presentation of Reports—
   Committee on Public Accounts—Report on Excess over Voted Grants and Charged Appropriations for the year 1968-69 ... ... ... ... 300
4. Voting on Demands for Grants for the year 1971–72—cont.
   (a) Demand No. 25-A—Welfare of the Backward Classes ... ... ... ... ...
   (b) Demand No. 10—Administration of Justice ...
   (c) Demand No. 11—Jails ... ... ... 300–364
5. Papers laid on the Table ... ... ... 365–366

PAGES

*Friday, 16th July 1971.*

1. **Questions and Answers** ... ... ... ... 383-404
2. Announcement—
   Election to the Tamil Nadu Land Improvement Board ... ... ... ... ... 403
3. Calling Attention—
   **Strike proposed by Taxi drivers in Madras City on 19th July 1971** ... ... ... ... 409-412
4. Statement by Minister—
   Correction to particulars given earlier by Minister for Food and Revenue ... ... ... 412
5. Voting on Demands for Grants for the year 1971-72—
   (a) Demand No. 7—Elections
   (b) Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ...
   (c) Demand No. 33—Miscellaneous
   (d) Demand No. 6—State Legislature ... ... 413-483
6. **Papers laid on the Table** ... ... ... 484



## HOW TO USE THE INDEX.

**The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.**

Under every **main heading including various** names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., **(M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication** will mean that it pertains to a question, except in the case of **Bills** and Financial Business the entry in which cases will be **self-**explanatory.

**All the Bills are alphabetically arranged under the main heading** ' Bill's '.

**Various bodies like Committees, Councils, Boards, Corporations,** etc., are consolidated under the said main headings, i.e., **'(Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.**

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

**All the Papers laid on the Table of the House are indexed only** under the main heading " Papers Laid on the Table ".

**Rulings and Observations** from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./A. Motion ... ... | Adjournment Motion. |
| Ann. ... ... ... | Announcement. |
| B.O.H. ... ... | Business of the House. |
| C.A. ... ... | Calling Attention to a **Matter of Urgent Public Importance.** |
| C.A.St. ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... | Consideration stage of a Bill. This stage includes : (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer tc Select/Joint Select Com- mittee. (iii) Amendment to circulate (iv) Motion to consider a reported by Select/Join Select Committee. |

| | |
|---|---|
| | (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. ... ... ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. ... ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| G.D. ... ... ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. ... | Half-hour Discussion. |
| Int. ... ... ... ... | Introduction stage of a Bill |
| L.A. ... ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| M. ... ... ... ... | Motion. |
| P.M. ... ... ... | Privilege Motion |
| R/Res. ... ... ... | Resolution |
| St. ... ... ... ... | Statement. |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்.

திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதலமைச்சர்): கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்—வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (பொதுநலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், எழுது-பொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், சிரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—உணவு, வணிக வரிகள், வருவாய், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள்,

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை, மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU KODARDAS KALIDAS SHAH

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Local Administration) : Minister in-charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Public Health) : Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Labour) : Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Harijan Welfare) : Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM : (Minister for Food and Revenue) : Minister in-charge of Food, Commercial Taxes, Revenue Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Agriculture): Minister in-charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Backward Classes): Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport): Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்:

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்

### பேரவைத் துணைத் தலைவர்:

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன்

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. வெ. கரிவேங்கடம்
திருமதி ஜோதி வெங்கடாசலம்
திரு. நா. வீராசாமி
திரு. நீ. அன்புச்செழியன்
திரு. என். கே. பழனிசாமி
திரு. எம். ஏ. லத்தீப்

### சட்டப் பேரவைச் செயலாளர்

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)
திரு. ஜி. இராகவன்
திரு. சி. கே. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி. எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. சி. வி. எம். | காஞ்சிபுரம். |
| 2 | அபுசாலி, திரு. எம். எ. | புவனகிரி. |
| 3 | அப்துல் ஜப்பார், திரு. வா. மை. | அரவக்குறிச்சி. |
| 4 | அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 | அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 7 | அழகுத்தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 8 | அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 9 | அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 | அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 11 | ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 | ஆதித்தனர், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 | ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 14 | ஆல்டா எம். ஃபௌலர் திருமதி | நியமன உறுப்பினர். |
| 15 | ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், திரு. எஸ். | வீரபாண்டி. |
| 17 | ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 18 | இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திகுளம். |
| 19 | இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 20 | இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி (செ.வ.) |
| 21 | இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 22 | இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 23 | இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 | இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 | இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். | தண்டராம்பட்டு. |
| 27 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |
| 28 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 | இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 30 | இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 31 | இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.) |
| 32 | இராமன், மாண்புமிகு திரு. ஒ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 33 | இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 | இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 | இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 36 | இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 37 | இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 38 | எட்டியப்பன், திரு. பூ. | பேரணமல்லூர். |
| 39 | எட்மண்ட், திரு. க. உரோ. | திருச்செந்தூர். |
| 40 | கணபதி, திரு. நா. | பாபநாசம். |
| 41 | கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 42 | கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 43 | கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 44 | கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 | கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின்பிரிட்ஜ். |
| 46 | கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 47 | கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம். |
| 48 | கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 49 | கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 50 | கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 51 | கருணாநிதி, மாண்புமிகு திரு. மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 52 | கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 53 | கருணாநாதன், திரு. சோ. | கூனூர். |
| 54 | கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 55 | காசிராமன், திரு. நா. | கும்பகோணம் |
| 56 | காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 57 | காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 58 | கார்த்திகேயன், திரு. வீ. | இராதாபுரம். |
| 59 | காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 60 | காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 61 | கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 62 | கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு, (செ. வ.) |
| 63 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 64 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 65 | கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 66 | குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 67 | குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 68 | குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 69 | குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 70 | கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 71 | கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 72 | கோபால், திரு. எம். | குன்னத்தூர், (செ. வ.) |
| 73 | கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 74 | கோபால், திரு. பி. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 75 | கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 76 | கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 77 | கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 78 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார்கோயில். |
| 91 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 92 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சோழவந்தான்... |
| 95 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி, (செ. [illegible]) |
| 97 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டான் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 101 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, டாக்டர் வ. .. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. .. . | ஹரூர், (செ.வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வ. |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 106 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்யமங்கலம். |
| 107 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 108 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 109 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 110 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 111 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 112 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.). |
| 113 சுப்பையா, திரு. எ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 114 சுப்பிரமணியம், திரு. எ. .. .. | சிங்கநல்லூர். |
| 115 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 116 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போடிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 119 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 120 ஜெயராமன், திரு. ஓ. .. .. .. | சேலம்-1. |
| 121 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 122 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 124 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 125 சோனையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. .. .. | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 129 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 133 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடபட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ராம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 138 துரைசாமி, திரு. எ. க. .. .. .. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 142 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. எ. சி. .. .. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.). |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. .. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு திரு. இரா. (அமைச்சர்—பேரவை முன்னவர்). | திருவல்லிக்கேணி. |
| 157 நைனாமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி எ. கோ. .. .. | முதுகுளத்தூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 160 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம. | தாரமங்கலம் |
| 162 பலராமன், திரு. என். என். | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி. திரு. என். கே. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. | வெள்ளகோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. | பழனி (செ.வ.). |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. | வாசூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. வி. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 173 பன்னீர்செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஏ. | அவினாசி. |
| 180 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. எ. ஆர். | காரியாபட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 189 மதியழகன், மாண்புமிகு திரு. கே. எ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 198 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னாகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 197 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ, | தலைவாசல் (செ.வ.). |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 200 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோவில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 218 ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சி. க. | தோட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 228 வெள்ளைத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 234 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் | உசிலம்பட்டி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண்ணும், பெயரும். | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 திரு. எஸ். கோவிந்த் சுவாமிநாதன் | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**திங்கட்கிழமை, 1971 ஜூலை 12.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. அ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Production of salt.*

* 172. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are examining the report of the consultants appointed by the State Development Corporation about cultivation of salt; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(ஆ) மாநிலத்தில் உப்பளத் தொழில் வளர்ச்சி பற்றிய வாய்ப்புக்கூறு அறிக்கை ஒன்று தயாரிக்கும் பணியை தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் சென்னையிலுள்ள உப்பு ஆலோசகரான திரு. எம். எம். குருநாத்திடம் ஒப்படைத்தது. அவர் அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார். உப்பு தொடர்பான இரசாயனப் பொருட்களுக்கான தமிழ் நாடு வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. வாரியம் விரைவில் செயல்படத் துவங்கும். அது திரு. குருநாத் அறிக்கையில் உள்ள யோசனைகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரைக்கும்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, உப்பிலிருந்து மருந்து தயார் செய்யும் திட்டம் ஏதாவது அரசினிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, உப்பின் அடிப்படையில் ரசாயனத் தொழிற்சாலைகள் எவை எவை அமைக்கப்படும் என்பது இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தமிழ் நாடு வாரியம் ஒன்று அமைக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த வாரியத்திற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா? அப்படியானால் எப்பொழுது இந்த வாரியம் வேலை செய்ய ஆரம்பிக்கும்? உப்பை உபயோகப்படுத்தும் பல தொழிற்சாலைகள் இருக்கின்றனவே, அவற்றிற்கு உப்பு சப்ளை செய்வதற்கு இந்த வாரியத்தில் ஏதாவது ஆலோசனை கூறப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது அடுத்த கேள்வியில் வருகிறது.

## *Advisory Board for salt works*

* 173. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Advisory Board for salt has been set up in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) உப்பு—தொடர்பான இரசாயனப் பொருட்களுக்கான தமிழ் நாடு வாரியம் ஒன்றை அமைத்து அரசு 1971 பிப்ரவரித் திங்களில் ஆணைகள் பிறப்பித்துள்ளது. தொழில் துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராவர். தொழில் வாணிபத்துறை இயக்குநர் இதன் செயலாளராவர். இதில் மற்றும் 13 உறுப்பினர்கள் இருப்பர். அடுத்தடுத்து உள்ள பகுதிகளில் பெரிய உப்பளங்கள் அமைப்பது குறித்துத் திட்டமிடுதல், அவற்றை அமைத்தல், உப்பின் தரத்தை உயர்த்துவதில் தொழில் நுட்ப உதவியளித்தல், உப்பு ஏற்றுமதி செய்தல், உப்பை அடிப்படையாகக் கொண்ட கடல் இரசாயனத் தொழிற்சாலைகளைத் தொடங்குதல் ஆகியவை குறித்த கொள்கை பற்றி அரசுக்கு ஆலோசனை நல்குவது இவ்வாரியத்தின் முக்கிய அலுவல்களாகும்.

**திரு. என். டென்னிஸ்:** உப்பின் தரத்தை உயர்த்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** குருநாத் அறிக்கையில் சுமார் 40,000 ஏக்காரவில் உப்பைத் தரமுள்ளதாக உற்பத்தி செய்வதற்கு 15 ஆண்டுத் திட்டம் ஒன்றை அவர் சிபார்சு செய்திருந்தார். அதை நிறைவேற்றுவதற்கு சுமார் 4.6 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். அவருடைய யோசனையின் மீது, இந்த 40,000 ஏக்காரவில் கிழக்குக் கடற்கரை முழுவதும் பல இடங்களில் உற்பத்தி செய்கின்ற முயற்சியில் ஈடுபடும் போது, தரமுள்ள உப்பாக உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தமிழ் நாட்டில் எங்கெங்கெல்லாம் உப்பு அதிகமாக உற்பத்தி ஆகிறது? கன்யாகுமரியில் உப்பு தாராளமாகக் கிடைக்கிறது. கன்யாகுமரியையும் அரசு இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எந்தெந்த இடம் என்கிற விவரம் இல்லை. கிழக்குக் கடற்கரை முழுவதும், எங்கெங்கே இந்த வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த முயற்சிகளை எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, இந்த உற்பத்தியின் அடிப்படையில், ஏற்றுமதிக்கு எந்த அளவு வாய்ப்பு இருக்கிறது என்பதையும் ஆராய்ந்து வருகிறோம். ஜப்பான் நாட்டுக்கு நாம் தரமுள்ள உப்பை கொடுக்க இசைந்தால் அவர்கள் ஏராளமாக வாங்குவதற்குத் தயார் என்று கூறியுள்ளார்கள். அந்த அடிப்படை நோக்கத்தையும் கருத்தில் கொண்டு இதனுடைய வளர்ச்சி பற்றி சிந்திக்கப்படும்.



THIRU R. PONNAPPA NADAR: Sir, may I know from the Hon. Minister whether there is any proposal on hand to start an industry on the basis of salt that is available in the southern districts?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தூத்துக்குடியில் உப்பின் அடிப்படையில் பல தொழிற்சாலைகள் அமைக்க வேண்டும் என்ற முயற்சி இப்பொழுது இருக்கிறது. உதாரணத்திற்கு, சோடா ஆஷ் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அங்கே அனுமதி நமக்குக் கிடைத்திருக்கிறது. இதுபோல் இன்னும் பல இடங்களில் அங்கே அமைக்க வாய்ப்பு இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தாமரைக்குளத்தில் உப்பு இப்பொழுது எடுக்கப்படுகிறது. அதனுடைய தரத்தை உயர்த்துவதற்கு வகை செய்யப்படுகிறதா? தமிழ்நாட்டில் தயாரிக்கும் உப்பின் தரம், ராஜஸ்தான் உப்பின் தரத்தின் அளவுக்கு இல்லை என்று சொல்கிறார்களே அது உண்மையா? அப்படியானால், மேட்டூர் கெமிகல்ஸ் போன்றோர் எடுக்கக்கூடிய உப்பின் தர அளவுக்காவது பல இடங்களில் எடுக்கும் உப்பின் தரத்தை உயர்ந்த வாரியம் முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியம் செயல்படத் தொடங்கவில்லை. குஜராத் மாநிலத்தில் உப்பு உற்பத்தி மிக உன்னதமான முறையில் நடைபெறுகிறது என்று அரசு அறிந்து அந்த அடிப்படையில் இந்த வாரியம் செயல்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி:** தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தியின் காரணமாக அங்கிருக்கும் உப்பளத் தொழிற்சாலையைக் காலி செய்யச் சொல்லி அரசு ஏதாவது உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? தூத்துக்குடி கடற்கரையோரத்தில் இப்பொழுது உப்பளங்கள் இருக்கும் இடத்தைத் தவிர வேறு இடங்களில் உப்பு உற்பத்திக்கு வாய்ப்பு இருக்கிறது. துறைமுகத்தை ஒட்டியுள்ள உப்பளங்களை நாம் தொழிற்சாலைக்காக ஒதுக்கி வேறு இடங்களில் உப்பளங்களைத் தொடங்கவேண்டும் என்று ஏற்பாடு செய்து வருகின்றோம்.

## *Commencement of Production by Southern Structurals Limited*

* 174. *Q.*—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Messrs. Southern Structurals Limited has started production from January, 1971; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) மெஸர்ஸ் சதர்ன் ஸ்டாக்சுரல்ஸ் கம்பெனித் தொழிற்சாலை 8—1—1971 அன்று மீண்டும் திறக்கப்பட்டது. இதில் நிறுவப்பட்ட இயந்திரக் கருவிகள் பாரந்தூக்கிப் பொறிகள் முதலியவற்றைப் பேணுவதற்கு அவசியமான சில பணியாளர்களோடு இத்தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது. இத்தொழிற்சாலை படிப்படியாக வேலை செய்யத் தொடங்கி வருகின்றது. இதுவரையில் 242 பணியாளர்கள் மீண்டும்

வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ரயில் சரக்குப் பெட்டிகள் தயாரிப்பு வேலை மீண்டும் தொடங்கப்பட்டு தேவைக்குறிப்பு ஆணைகள் கிடைக்கின்றபோது இந்தத் தொழிற்சாலை அதிக அளவில் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள இயலும், அதற்காக எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

DR. H. V. HANDE: Sir, is it not a fact that on 8—1—1971 an agreement was signed between the trade unions and the managements that the total amount of six months' salary would be paid to all workers on or before 31-7-1971 and also is it not a fact that an assurance was given that almost all the workers would be taken back on or before 30—4—1971 and if so, may I know whether these things have been implemented and if not, the reasons therefor?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒப்பந்தக் குறிப்புகள் என்னிடம் இல்லை. நாங்கள் அவர்களோடு பேசும்போது, எப்படியாவது விரைவில் முழு அளவிற்குத் தொழிற்சாலை தன்னுடைய உற்பத்தியைத் தொடங்கவேண்டும் என்று வற்புறுத்தினோம். இதிலே மத்திய அரசுக்குச் சொந்தமாக மேற்கு வங்கத்தில் உள்ள ஒரு கம்பெனி—கார்டன் வெல்ஸ் கம்பெனியார்—தங்களுடைய 'ஆர்டர்' களை இந்தத் தொழிற்சாலைக்குக் கொடுப்போம் என்று என்னிடத்தில் பேசினார்கள். அவர்களும் பணம் போடுவதாக ஒத்துக் கொண்டார்கள். நாம் பணம் போட்டு நடத்தினோம். அவர்கள் இடையிலே இதுபற்றி மறு பரிசீலனை செய்வதாகத் தோன்றுகிறது. உடனடியாக, நாம் நினைத்தபடி ஆர்டர்கள் அதிகமாகக் கிடைக்காததால் இதில் சுணக்கம் ஏற்படுகிறது. நாம் மட்டும் சுமார் 32 லட்சம் ரூபாய் நம்முடைய வாரியத்திற்குக் கடன் கொடுத்திருக்கிறோம். இன்னும் நம்முடைய தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷனிடமிருந்து குறைந்தபட்சம் 30 லட்ச ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இவையெல்லாம் கிடைத்தால் முழு உற்பத்தி பெருகும். தொழிலாளர்கள் அத்தனை பேரையும் எடுத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மாதம் ஆறு ஆகியும் இன்னும் 500 தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஏற்கனவே இருந்த நிர்வாகம் சரியான முறையில் நடக்காத காரணத்தினால் தான் அந்தத் தொழிற்சாலைக்கு இந்த நிலை வந்திருக்கிறபோது முன்னால் பொறுப்பில் இருந்தவர்கள் திரும்ப அங்கே பொறுப்பில் இல்லாதிருக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது அரசாங்கத்திற்கும் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்படி பொறுப்பில் உள்ளவர்களை எல்லாம் நாமே போட்டுக் கொண்டுதான் வருகிறோம். ஜெனரல் மானேஜர், வொர்க்ஸ் மானேஜர், செக்ரடரி, அக்கவுண்ட்ஸ் ஆபீசர் ஆகியவர்களை எல்லாம் நாமே போட்டிருக்கிறோம். முன்பு இருந்த தலைவர் இருக்கிறார். அவரையும் ராஜீநாமாச் செய்ய வலியுறுத்தியிருக்கிறோம். அவருக்குப் பதிலாகவும் நம்முடைய அதிகாரியைப் போட இருக்கிறோம்.



**திரு. நா. வீராசாமி:** அந்தத் தொழிற்சாலையின் மூலதனம் எவ்வளவு? அரசாங்கம் 32 லட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள், அரசாங்கமே அதை எடுத்து நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது அவர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி 32 லட்சம் ரூபாய் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. அங்கே உள்ள மூலதனக் கணக்கைப் பார்த்தால் மூலதனம் அதிகமா, கடன் அதிகமா என்பது சந்தேகம் ஏற்படும்.

### *Law College at Madurai*

* 193 *Q.*—THIRU N. K. PALANISAMI
THIRU P. S. MANIYAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Law College at Madurai; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் பலர் பேசுகின்றபோது மதுரையில் சட்டக் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். தென்மாவட்டங்களுக்கு உதவியாக இருக்கும் முறையில் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த மறுபரிசீலனை செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை பல தடவைகளில் வந்ததுண்டு. அரசாங்கமும் அதைப் பரிசீலனை செய்து அங்கே அமைக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டது. ஆனால் நாட்டில் இப்போதே வழக்கறிஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சென்னை சட்டக் கல்லூரியில் ஆண்டுக்கு எழுநூறு, எண்ணூறு பேர்கள் படித்து வருகிறார்கள். மாலை நேர வகுப்புகளிலும் பலர் படிக்கிறார்கள். ஆகவே மதுரையிலும் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டு அதிகமான வழக்கறிஞர்கள் உருவாக்கப்பட்டால் அவர்கள் மத்தியில் வேலையில்லாத் தன்மை ஏற்படுமோ என்ற அச்சம் பலருக்கு ஏற்பட்டது. போன ஆண்டு சட்டக் கல்லூரி மாணவர்களும் ஊர்வலமாக வந்து இதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். மேலும் உயர்நீதி மன்றம் போன்றவைகள் சென்னையில் இருக்கின்ற காரணத்தினால் சென்னை சட்டக் கல்லூரி தற்போது போதும், தேவை ஏற்பட்டால் பின்னர் பரிசீலிக்கலாம் என்கிற அளவில் மதுரையில் சட்டக் கல்லூரி ஏற்படுத்தும் யோசனை ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. கைவிடப்படவில்லை.

**திரு. டி. கணபதி:** கூடுதலான கல்லூரிகள் திருநெல்வேலியில் இருப்பதாலும், தென்கோடியிலிருப்பதாலும் மாணவர்களின் நலனைக் கருதி திருநெல்வேலியில் இந்த சட்டக் கல்லூரியை அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நீதிமன்றங்கள் உள்ள இடங்களில்தான் சட்டக் கல்லூரி அமைவது வசதியாக இருக்கும். சென்னைக்கு அடுத்தபடி மதுரையில் அமைப்பது வசதியாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். மேலும் மதுரையில் ஒரு தனிப் பல்கலைக் கழகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மதுரைப் பல்கலைக் கழகத்திடம் இருந்தும் மதுரையில் சட்டக் கல்லூரி அமைப்பது சம்பந்தமான கருத்து வரட்டும் என்று காத்திருக்கிறோம். மதுரையில் ஆரம்பிக்கும் முயற்சியை அறவே விட்டுவிடவில்லை.

திரு. பெ. மலைச்சாமி: எல்லாத் துறைகளுக்குமான பட்டங்களை வழங்குவது தான் முழுமையான பல்கலைக் கழகம். இன்றைக்கு மதுரை பல்கலைக் கழகம் எல்லாத் துறைகளுக்குமான பட்டங்களை வழங்கினாலும் சட்டப் படிப்புக்கான பட்டங்களை வழங்க இடமில்லை. மேலும், உயர்நீதி மன்றத்தின் ஒரு பிரிவையே மதுரையில் ஏற்படுத்த மாண்புமிகு சட்ட அமைச்சர் முயன்று கொண்டிருக்கும்போது, மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்பட அரசு நன்கு யோசித்து முடிவு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முன்பே குறிப்பிட்டேன். வழக்கறிஞர்களை அதிகமான அளவுக்கு உண்டாக்கி, அவர்களிடையே வேலையில்லாத் தன்மையை உண்டாக்கலாமா என்பதுதான் யோசிக்கப்படுகிறது. அப்படி ஆரம்பிப்பது என்றாலும் சென்னை சட்டக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தி மதுரைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் ஒரு சட்டக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டிய நிலை வரும். அதுவும் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சென்னை சட்டக் கல்லூரியில் சேருவதற்கு இடநெருக்கடி இருக்கிறது. கேரளத்தில் கூட திருவனந்தபுரத்திலும், எர்ணாகுளத்திலும் இரு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே நம் மாநிலத்திலும் இரண்டு சட்டக் கல்லூரிகளை ஏற்படுத்த அரசு புனராலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவ்வாறு நம் மாநிலத்தில் இரண்டு சட்டக் கல்லூரிகள் இருக்கவேண்டும் என்றால்—மதுரையில் ஒன்றை ஏற்படுத்துகிறபோது—சென்னைக் கல்லூரியின் எண்ணிக்கையைக் குறைத்து மதுரையில் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தென் மாவட்ட மாணவர்களின் வசதியை உத்தேசித்து மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது. அதோடு சட்ட அறிவு பெற்றவர்கள் அதிகமாக நாட்டுக்குத் தேவை. சட்டப் பட்டம் பெற்றவர்கள் அரசாங்கத்திடம் வேலை கொடுங்கள் என்ற கோரிக்கையை எப்போதும் வைக்கவில்லை, வைக்கப்போவதும் இல்லை. வாழ்க்கையின் பல துறைகளிலும் சட்ட அறிவு பெற்றவர்கள் இருப்பது நாட்டுக்கு நன்மையாகத்தான் இருக்கும். ஆகவே மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்துவது எந்த வகையிலும் தீமை இல்லை என்பதை உணர்ந்து உடனடியாக அங்கே அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: சட்டப் பட்டம் பெற்றவர்கள் வழக்கறிஞர் தொழிலில்தான் ஈடுபடவேண்டும் என்பதில்லை. அவர்கள் பல துறைகளிலும் இருப்பது நன்மை அளிப்பதாக இருக்கும். அது சம்பந்தமாக



மதுரை பல்கலைக் கழகத்திடம் இருந்தும் முயற்சி வரட்டும் என்று அரசாங்கம் இருக்கிறது. அதை அமைக்கும் யோசனையை இப்போதைக்கு அரசு ஒத்திவைத்திருக்கிறதே தவிர கைவிடவில்லை.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கத்தினர் அவர்கள் கூறிய மாதிரி, சட்டம் படித்தவர்கள் எந்தத் துறையிலும் செல்லலாம் என்ற நியதி இருப்பதாலும், சட்டப் படிப்பு தேவை என்று கருதுவதாலும் இதுபற்றி பரிசீலிப்பதற்கு ஒரு கமிட்டியை அமைத்து நன்மை தீமைகளை ஆராய அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக் கமிட்டி அமைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. நான் முதலிலேயே சொன்னபடி இதிலுள்ள கூறுகளையெல்லாம் ஆராய்ந்தறிந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே பகல் நேரக் கல்லூரி, மாலைநேரக் கல்லூரி இருக்கிற காரணத்தினால் சென்னையில் பணியாற்றக்கூடியவர்களுக்குத்தான் படிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. வட மாநிலங்களிலே எல்.எல்.பி. போன்ற பட்டம் போஸ்டல் ட்யூஷன் மூலமாகவே சொல்லித் தருகிறார்கள். அதுபோல நம்முடைய மாநிலத்திலேயும் போஸ்டல் மூலமாக சட்டப் படிப்பு சொல்லித்தர ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கடிதப் போக்குவரத்தின் மூலம் பட்டப் படிப்பு சொல்லிக் கொடுப்பதை சென்னைப் பல்கலைக் கழகம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியிருந்தால் கடிதப் போக்குவரத்தின் மூலம் பட்டப் படிப்பு சொல்லிக் கொடுக்கும் சூழ்நிலை ஏற்படுமானால் சட்டப் படிப்பைப் பொறுத்தவரையிலும் தக்க முடிவு எடுத்துக் கொள்ளப்படும். மதுரைப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆண்டிலிருந்து கடிதப் போக்குவரத்து மூலம் பட்டப் படிப்பை ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறோம். அந்தச் சூழ்நிலையை ஆராய்ந்தறிந்துதான் மற்றவைகளைப் பற்றி முடிவு எடுக்கவேண்டும்.

திரு. குப்பல் கே. எல். இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கிராமங்களில் டாக்டர் பட்டப் படிப்பு படித்தவர்கள் அரிதாக இருக்கிற காரணத்தினால், டாக்டர் படிப்பு முடிந்தவுடன் கட்டாயமாக இரண்டு ஆண்டுகள் கிராமங்களில் பணியாற்ற வேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்யுமா?

(பதில் இல்லை).

## Rural Development.

*194 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government propose to take steps for istensifying the tempo of Rural Development through the Community Project administration?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கிராம வளர்ச்சிக்கென சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அதிக நிதி ஒதுக்கப்படவேண்டும் என உறுப்பினர் விரும்புகிறார் என கருதப்படுகிறது. அப்படியானால் இதற்கு விடை

'ஆம்' என்பதாகும். இந்த அரசு கிராமப் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து அதற்காக எல்லா வளர்ச்சித் தலைப்புகளின் கீழும் பெருமளவு நிதி ஒதுக்கம் செய்துள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டதன் விளைவாக ஒரு வட்டாரம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் I ஆம் நிலை, II ஆம் நிலையில் இருப்பினும் அல்லது II ஆம் நிலைக்குப் மேம்பட்டு இருப்பினும், வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கத்தைப் பொறுத்தவரையில் எல்லா வட்டங்களும் ஒரே அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது.

**திரு. டி. கணபதி:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர், நாங்குனேரி, இராதாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் பஞ்சப் பிரதேசமாக இருப்பதால், அவைகளுக்குக் கூடுதலான நிதி ஒதுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தனிக் கேள்வி போடவும்.

### *Conference of Employees of Panchayat Unions*

* 195 *Q*.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether a conference of Employees of Panchayat Unions was held on 1-5-1971 at Madurai; and

(*b*) whether the resolutions passed at the conference were communicated to the Government; and

(*c*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:**

(அ) ஆம்;

(இ) ஆம்;

(உ) அவை அரசின் பரிசீலனையிலுள்ளன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றும் ஊழியர்கள் சுமார் 15 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டுமென்றும், தங்களை உள்ளாட்சித் துறையின் கீழ் நேரடியாகக் கொண்டுவர வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். நிர்வாக சீரமைப்புக் குழுவில் அவர்களுடைய விஷயங்களையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதா? எந்தெந்த விஷயங்களில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கைக்கு வரப்பெற்று, ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அதுபற்றி கருத்துக்கள் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதுபற்றி யோசிக்க வேண்டும். சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பதைக் குறித்து நிதித் துறை ஆராய்ந்து அனுப்ப வேண்டியிருக்கிறது. மற்றொரு கோரிக்கை அவர்களை வருவாய்த் துறையிலிருந்து பிரித்து, உள்ளாட்சித் துறையின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தைப்



பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினிடத்தில் கருத்துரை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் ஆராய்ந்தறிந்து தக்க முடிவுகள் எடுத்த பிறகுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எம். முத்தையா:** தலைவர் அவர்களே, யூனியனில் வேலை செய்பவர்களை யூனியன் ஸ்டாப் என்றும், கவர்ன்மென்ட் ஸ்டாப் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து பாகுபாடு செய்யப்படுகிறது. எல்லோரையும் கவர்ன்மென்ட் ஸ்டாப் என்ற அளவில் ஒரே சீராகக் கொண்டுவர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எல்லோரையும் ஒரே நிலையில் கொண்டுவர முடியாது. உள்ளாட்சித் துறை தனியாக இருக்கிறது. அதில் பல வகையான நிர்வாக சீர்திருத்தங்கள் செய்யலாமா என்பதைக் குறித்து ஆராய நிர்வாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எல்லோரையும் ஒரே துறையில் கொண்டு வருவது என்பது சரியாக இருக்காது. உள்ளாட்சித் துறை பல்வேறு அரசாங்கத் துறைகளோடு தொடர்பு கொண்டுதான் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் எடுத்து விட்டால் பின்னர் உள்ளாட்சித் துறை என்று தனியாக இருக்க முடியாது.

### மங்கலத்திலுள்ள மருத்துவ மனை

* 196 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலத்திலுள்ள மருத்துவமனை மூடப்பட்டு விட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**

(அ) ஆம்;

(இ) மங்கலத்தில் உள்ள நாட்டு மருத்துவமனையில் பணிபுரிய எந்த மருத்துவரும் முன் வராததால், அம் மருத்துவமனை மூடப்பட்டது.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே அங்கே இருக்கிற மக்களுக்கு மருத்துவ வசதி வேண்டுமென்றால், அவர்கள் 7 மைல் தூரத்திலுள்ள திருப்பூருக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. இந்தக் குறையைப் போக்குகின்ற முறையில் எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற டாக்டர் ஒருவரை அங்கே போட அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அது நாட்டு மருத்துவமனையாக இருந்து வந்தது. ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு மொத்த ஊதியம் என்று வழங்கப்படுகிற நிலையிலிருந்தது. இந்தக் காரணத்தால் பணி புரிய யாரும் வராததால் மருத்துவமனை மூடப்பட்டது. திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் சார்பாக 1½ ஆண்டுக்கு முன்னாலே நாட்டு மருத்துவ மனையை, நவீன மருத்துவமனையாக, ரூரல் டிஸ்பென்சரியாக, மாடர்ன் டிஸ்பென்சரியாக மாற்றியமைக்க வேண்டும் என்று கோரிக்கை அனுப்பப்பட்டது. புதிய நவீன மருத்துவமனையாக ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் பொங்கலூர் பஞ்சாயத்து யூனியனிலிருந்து ஒரு மருத்துவரை மருத்துவம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, அவரும்

ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்கு அரசாங்கத்தின் சம்மதம் கேட்டு எழுதி யனுப்பப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதை பரிசீலனை செய்து, சம்பந்தப் பட்ட வேறு இலாகாவுக்கு எழுதியனுப்பும்படி கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே பஞ்சாயத்து யூனியன் நடத்த ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

**மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிப்படும் புகை**

*197 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயமுத்தூர், மதுக்கரை ஏ.சி.சி. சிமெண்ட் தொழிற்சாலையில் பெரிய அளவில் வெளிப்படுகின்ற புகையை நவீன பில்டர் முறையை பயன்படுத்தி கட்டுப்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இல்லை.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற்சாலையில் வெளியாகின்ற புகையினால் சுற்றுவட்டாரத்தில் ஐந்து மைல் விஸ்தீரணத் திற்கு புல்பூண்டுகள்கூட முளைப்பதில்லை. மேலும் பக்கத்தில் இருக்கிற கிராமங்களிலுள்ள மக்களுக்கு சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே, புகையைக் கட்டுப்படுத்தி, உள்ளே இழுத்துக்கொள்கிற வகையில் நவீன பில்டர்களை உபயோகிக்க வேண்டுமென்று ஆலை முதலாளிக்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அப்படிச் செய்தால்தான் பக்கத்தில் இருக்கிற கிராமங்களி லுள்ள மக்களுக்கு சௌகரியம் ஏற்படும் என்பதை உணர்ந்து அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்த சிமெண்ட் தொழிற்சாலை தமிழகத்தில் ஏற்பட்ட மிகப் பழைய தொழிற்சாலைகளில் ஒன்றாகும். அதனுடைய புகை போகின்ற அமைப்பை மாற்றியமைக்க நவீன முறையில் 'எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர்ஸ்' என்ற சாதனம் அதற்காக அமைக்கப்பட வேண்டும். அந்த சாதனத்தைப் பொருத்த வேண்டு மென்றால், அதை வெளிநாட்டிலிருந்துதான் வரவழைக்க வேண்டும்; அல்லது அந்த சாதனத்தின் பெரும்பகுதி வரவழைக்கப்பட்டு, உள்நாட்டுச் சாதனங்களோடு பொருத்தியமைக்க வேண்டும். வெளிநாடுகளிலிருந்து அந்தச் சாதனத்தையோ, அதன் மற்ற பாகங்களையோ வரவழைக்க வேண்டுமென்றால், அதற்கு அந்நிய நாட்டுச் செலாவணி செலவழிக்க வேண்டியிருக்கும். அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். மத்திய அரசாங்கம் இதை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. Dust control by water spraying and other mechanical devices like chain screens and canvas bags' என்ற முறையில் கேன்வாஸ் பைப்புகளின் மூலம், சங்கிலிகளால் ஆன screens முறைகளால் தண்ணீரை தெளிக்கின்ற ஸ்பேரேயிங் மூலமாக செய்தால் புகையினால் வருகின்ற தூசிகள் தடுக்கப்படுகின்றன. அப்படித் தடுக்கின்ற முயற்சிகளை "Assistant Director in-charge of Industrial Hygiene" தொழில் துறையிலே சுகாதாரத்தைக் கவனிக்கின்ற துணை இயக்குநர் அவர்கள் அவ்வப்போது கவனித்து வருகிறார்கள். இந்த அளவிற்குத்தான் அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது, நிறைவேற்ற முடிகிறது.



**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, சிமெண்ட் தொழிற்சாலை யிலிருந்து புகை வருவதன்மூலம் மக்களின் ஆரோக்கியம் கெட்டுவிடுகிறது. இதேமாதிரி பேப்பர் தொழிற்சாலை, இரசாயன தொழிற்சாலை இவைகளி லிருந்து புகையும், கழிவுநீரும் வெளியாகி, அந்தப் பகுதியிலுள்ள பலருடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கும் வகையில் காற்றும் கெடுகிறது, தண்ணீரையும் கெடுக்கிறது. தொழிற்சாலைகள் அதிகமாகிவிடுவதால் இது முக்கியமான விஷயம் என்பதை எண்ணி, ஒவ்வொரு தொழிற்சாலையையும் பரிசீலித்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை விரைவாகச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, நாம் நாட்டினுடைய பொருளாதார, தொழில் வளர்ச்சி நிலைமைகளையும் சிந்தித் தாக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒரு தொழிற்சாலையை அமைக்க ஒரு கோடி ரூபாய், 50 லட்சம் ரூபாய் என்ற அளவில் செலவழிக்க வேண்டி யிருக்கிறது. தொழில்புரிவோர்களின் நலனுக்காகவும், சுகாதார முறைகளுக் காகவும், வேறுபல குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காகவும் 15 லட்சம் 20 லட்சம் என்ற அளவில் செலவழித்து பாதுகாக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளினால் போதுமான முன்னேற்றம் காணமுடியவில்லை. தொழிற்சாலைகள் அதிகப்படுகின்ற சூழ்நிலை உருவாகவேண்டும். தொழிற் சாலைகளின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறபோது நாம் இந்த இடையூறுகளை யெல்லாம் சமாளித்துத்தான் ஆக வேண்டும்.

*Regulation of work in Beedy Industry*

*198 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether Central Legislation for regulating work in the Beedy Industry has been implemented in the State; and

(b) if not, the reasons therefor?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) இல்லை.

(இ) 1966-ஆம் ஆண்டு பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (வேலை நிலைகள்) சட்டம் (மத்திய சட்டம் 32/1966) செயல்படுவதை தடை செய்து உயர்நீதி மன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், மத்திய அரசால் ஒரு ஆறு வருஷத் திற்கு முன்பாகவே பீடித் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடியவர்களுக்கும் சுருட்டுத் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடியவர்களுக்கும் இப்படி பாது காப்புக் கொடுக்கக்கூடிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத் தைத் தடைசெய்யவேண்டுமென்று கேட்டு ஹைகோர்ட்டிலே சில முதலாளிகள் மனுச்செய்து இருக்கிறார்கள். அந்தத் தடையை வெக்கேட் செய்வதற்கு அந்தச் சட்டத்தை அமல்செய்வதற்கும் ஏற்றவகையில் ஹைகோர்ட் மூலமாக துரித நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தால் இந்தச் சட்டம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்கை விரைவில் முடிக்கவேண்டுமென்று அரசாங்க தலைமை வழக்கறிஞரும் அரசாங்க வழக்குரைஞரும் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். அந்த ரிட் மனுக்கள் இன்னும் முடிவுபெறா நிலையில் இருக்கின்றன.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்த பீடித் தொழிலாளர்களுடைய கூலி உயர்வு சட்ட சம்பந்தமாக பல முதலாளிகள் இதை அமல் நடத்துவதில்லை. அமல் நடத்தவேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்டால் அவர்கள் பேக்டரியை மூடிவிட்டு வேறு மாநிலங்களுக்குக் கொண்டு போய் தொழிலை ஆரம்பிக்கின்ற போக்கினை தடுத்து நிறுத்த வேறு விசேஷமான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, சில முதலாளிகள் அப்படிப்பட்ட போக்கினைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கும் தெரியும். அதைப்பற்றி என்ன செய்வது என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், ரிட் மனுப்போட்டு தடை உத்திரவு போடப்பட்டு 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் அது முடியவில்லையென்று சொன்னால் எந்த முறையில் அதைச் சொல்வது என்றே தெரியவில்லை. ஆகவே ரிட் மனுவின்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு வேறு இலாக்காக்களைக் கலந்து விசேஷ ஜட்ஜ்களை நியமித்து இதை ஒரு அவசர நடவடிக்கையாக எடுக்க அரசு முயற்சிசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மூக்கூடலில் உள்ள திருவாளர் சொக்கலால் ராம்சேட் நிறுவனம் தாக்கல் செய்த ரிட் மனுவின் பெயரால் போடப்பட்ட அந்தத் தடை பொதுவான தடை என்ற நிலைமையிலே உள்ளது. மாநிலத்திலுள்ள மற்ற நிறுவனங்களுக்கும் என்றில்லாமல் மனுத் தாக்கல் செய்த தொழிற்சாலைக்கு மட்டும் பொருந்துமாறு செய்யவேண்டுமென்று ஆணை உறுதிப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் விரைவிலே முடிவுசெய்வதற்கு அரசு முயற்சி செய்யும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனை. அதைத்தான் ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கையும் சொல்லியிருக்கிறது. நானும் மத்திய சட்ட அமைச்சரிடம் பேசியபொழுது, சட்ட மன்றம், நாடாளுமன்றம் இவற்றினால் உருவாக்கப்பட்ட சட்டங்கள் செல்லுமா செல்லாதா என்ற பிரச்னை வருமானால் தலைமை நீதி மன்றமும், உயர் நீதிமன்றமும் அவற்றிற்கு முதலிடம் கொடுத்து உடனடியாக நான்கைந்து நீதிபதிகளை நியமித்து விசாரிக்கச் செய்து அந்தச் சட்டம் செல்லுபடியாகுமா ஆகாதா என்பதை அறிவித்துவிட வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அப்படிச் செய்யவில்லையென்றால் அது சமுதாயத்திற்கே விரோதமாக அமைந்துவிடும் என்று எடுத்துச்சொல்லியிருக்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் 1963-ஆம் ஆண்டு நாம் கொண்டுவந்த இனும் ஒழிப்புச்சட்டம் இன்னும் தலைமை நீதிமன்றத்திலே செல்லுமா செல்லாதா என்று முடிவுசெய்யப்படாமல் இருக்கிறது, இது சமுதாயத்திற்கு ஏற்ற செயல் இல்லை என்பதை மத்திய சட்ட அமைச்சருக்கு நான் எடுத்து விளக்கிக் கூறியுள்ளேன்.



**DR. H. V. HANDE:** Sir, fair wages to beedi workers has been posing a problem in this State for a number of years and it has been eluding any solution by the Government also, probably because there are different States with different rates and there is no Central Legislation in force now. Even about two years ago the Hon. Minister for Industries had promised that he would have consultation with the Centre and see that all the other States also implement this legislation. May I know from the Hon. Minister whether any attempts have been made by this Government to see that a uniform legislation is enacted in the surrounding States, so that the beedi workers in other States also will be benefited by this measure?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1955-ஆம் ஆண்டு நம்முடைய மாநிலத்திலே அப்படியொரு சட்டம் வந்தது. அந்தச் சட்டத்தை நாம் அமல்நடத்த முயற்சித்தபொழுது அப்படிப்பட்ட பிரச்னை எழுப்பப்பட்டது. நாம் அப்படிச் சட்டம் இயற்றியதற்குப் பின்னாலே மத்திய அரசு நாடு முழுமைக்கும் அப்படிச் சட்டம் இயற்றப்படவேண்டுமென்ற முறையிலே தொழிலாளர் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே கேட்டார்கள். நாமும் ஒப்புக்கொண்டோம். நம்முடைய சட்டத்தை பின்பற்றி அவர்களும் சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தச்சட்டத்தை அமல்நடத்த அந்த அந்த மாநிலங்கள்தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் சில மாநிலங்கள் அமல் படுத்தாத நிலையில் சில சங்கடங்கள் ஏற்பட்டன. தென் மாநிலங்களைப் பொறுத்தவரையிலும் தமிழ்நாட்டிலே சட்டம் கொண்டு வந்தால் ஆந்திராவிற்கோ அல்லது மைசூர் பார்டருக்கோ செல்கின்ற போக்குகளைத் தடைசெய்யவேண்டும். மத்திய அரசு விரைவிலே எல்லா மாநிலங்களுக்கும் அந்தச் சட்டத்தை அமல்படுத்துமாறு செய்தால்தான் பாதுகாப்பு இருக்கமுடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஹைகோர்ட்டில் உள்ள இந்த ரிட் மனுவை உடனடியாகத் தீர்ப்பதற்கு மத்திய சட்ட அமைச்சரோடு ஏதாவது ஆலோசனை செய்திருக்கிறார்களா? அவர்கள் ஏதாவது உறுதிமொழி கூறியிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய சட்ட அமைச்சர் முன்னாள் உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்தவர். அவர்கள் இப்படிப்பட்ட சங்கடங்களை ஆழ்ந்து கேட்டார்கள். நாம் ஒரு யோசனை கூறியிருக்கிறோம். உயர் நீதி மன்றம் விசாரணை செய்யவேண்டுமென்று அரசு சொல்லமுடியாது. எனவே அரசியலமைப்புச் சட்டத்திலே இதற்கு ஒரு வழி செய்யவேண்டும். ஏனென்றால் இது ஒரு தனி நபர் பிரச்னையல்ல, ஒரு சமுதாயத்தினுடைய பிரச்னையென்ற அடிப்படையிலே—முதலிலே ரிட் கொடுப்பது, நீதிபதி ஒரு தீர்ப்பைக் கொடுப்பது, பிறகு ரிட் அப்பீல் என்று கொடுப்பது அதற்கு தீர்ப்பை கொடுப்பது பிறகு தலைமை நீதிமன்றத்திற்குச் செல்வது அவர்கள் தீர்ப்பைக் கொடுப்பது என்ற நிலைமையில்லாமல்—இப்படிப்பட்ட பிரச்னைகள் வருகின்றபொழுது அதற்காக ஒரு பெஞ்சு கான்ஸ்டிட்யூட் செய்து அந்த பெஞ்சு அதற்குத் தீர்ப்பு கொடுக்கவேண்டுமென்ற யோசனையைக் கூறியிருக்கிறோம். அவர்கள் ராஜமன்னார் குழு அறிக்கையையும் கையிலே வைத்திருந்தார்கள், இதைப் பரிசீலித்து முடிவு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கா. வேழவேந்தன் :** தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிற நோக்கிலே அந்த நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் அண்டை மாநிலமான ஆந்திராவுக்குப் போய்விடுகிறார்கள். அதற்குக் காரணம் ஆந்திரத்தில் பீடித் தொழிலாளர் ஊதியம் குறைந்துள்ளதுதான், இதனால் தமிழ் நாடு அரசிலிருந்து ஆந்திர அரசுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக் கடிதம் எழுதியிருக்கிறதே, அதற்கு ஆந்திர அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, பதில் வந்திருப்பதாகத் தெரியவில்லை. எனினும், இதுபற்றி திட்டவட்டமாக விசாரித்தறிய முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

## நிலமற்றவர்களுக்கு நிலங்கள்

* 199 **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1967 மார்ச் மாதத்திலிருந்து 13—1?—1969-ம் தேதி முடிய எத்தனை நிலமற்றவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தமிழ்நாட்டில் 1967 மார்ச் மாதத்திலிருந்து 31—12—1969-ம் தேதி முடிய சாகுபடிக்காக 86,518 பட்டாக்கள் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, 1957-ஆம் ஆண்டிலேயுள்ள சட்டமன்ற நடவடிக்கை குறிப்புகளைப் பார்க்கிறபோது அப்பொழுது ஏழை மக்களுக்குப் பட்டா வழங்குவதற்குத் தனித்தாசில்தார்கள் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அரசு அப்படி இருந்துவிட்டது, ஆனால் நம்முடைய அரசு ஏழை மக்களுடைய அரசாக இருக்கிற காரணத்தினாலே இதிலே அதிகமான அக்கறை வைத்து மிக அதிகமான வேகத்துடன் செயல் படுகிறது என்பது இதிலிருந்து தெரிகிறது அல்லவா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வியிலேயே பதில் இருக்கிறது, அப்பொழுது செய்யவில்லை, இப்பொழுது செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தக் கேள்வி நேரத்தைப்பற்றி நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுக்கப்படுவதுபற்றி வருவாய்த் துறை மானியத்திலிருந்து இன்னும் பல தலைப்புகளிலே விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியிலே இருபது உறுப்பினர்கள் துணைக்கேள்விகள் கேட்க விரும்புகிறார்கள் என்று தெரிகிறது. நாம் பத்து மணிக்குள் இந்திரா நகர் பள்ளியிலே சென்று தமிழ் அர்ச்சனைவரை போகவேண்டும். (சிரிப்பு)

ஒவ்வொரு கேள்விக்கும் நான்கைந்து துணைக்கேள்விகள் என்ற முறையிலே சில முறைகளை அனுசரித்து சில தொகுதிகளைப்பற்றி சில மாவட்டங்களைப்பற்றி இருந்தால் அதைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுப்பது, மதுரையைப்பற்றி இருந்தால் அந்த உறுப்பினர்களுக்கு, நெசவாளர்களைப்பற்றி இருந்தால் அதைப்பற்றியவர்களுக்கு, வக்கீல்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களுக்கு இப்படிக் கொடுக்கப்படுகிறது. எல்லோரும் துணைக் கேள்விகள் கேட்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் சில நேரங்களிலே கேள்விகள் முடிக்க முடியாமல் போய்விடக்கூடும்.



இன்னும் இங்கே உரத் தொழிற்சாலை போன்ற முக்கியமான கேள்விகள் இருக்கின்ற காரணத்தினாலே சில கேள்விகளுக்கு மட்டும் அனுமதி கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். எல்லோரும் அழைக்கப்படவில்லையென்பதால் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கவேண்டாம். சில கேள்விகளுக்கு மட்டும் அனுமதி கொடுக்க நினைக்கிறேன். உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## இராமநாதபுரம் மாவட்டத்தில் உள் வட்டங்களை வட்டங்களாக்கல்

* 200 **வினா.—திரு. க. சுப்பு :** மாண்புமிகு உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள காரைக்குடி, விருதுநகர், இராஜபாளையம் ஆகிய உள் வட்டங்களை தாலுக்காக்களாக மாற்றி, வேலை முறையைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா உள்வட்டங்களையும் வட்டங்களாக்குவதற்கு எல்லா கோட்டாட்சி தலைவர்களிடமிருந்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் செயற்குறிப்புகள் கேட்டிருக்கிறார்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஏற்கனவே திருப்பத்தூர் தாலுகாவிலிருந்து காரைக்குடி, சாத்தூர் தாலுகாவிலிருந்து விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலிருந்து இராஜபாளையம் இவைகள் இப்போது சப்-தாலுகாக்களாக அமைக்கப்பட்டு, இந்தக் குறிப்பு வருகிறவரையில் காத்திராமல் இவைகளையெல்லாம் அப்கிரேட் செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பொதுத் தேர்தலுக்காக இவையெல்லாம் ஒத்திவைக்கப்பட்டு தேர்தல் முடிந்து விட்ட பிறகு இப்போது அவை பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## *Review on work of Export Promotion Councils*

* 201 Q.—**THIRU S. SANGUMUTHU THEVAR :** Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any special Committee appointed by the Central Government to evaluate the working of the Export Promotion Councils visited Madras on or about the 3rd May 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம் இக்குழு மே மாதம் மூன்றும் நான்காம் நாட்களில் சென்னைக்கு வருகை தந்தது.

(இ) அவை முன் ஒரு விவர அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் உரத் தொழிற்சாலை

*202 வினா.—திரு. க. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்தில் சிறிய அளவு உரத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. க. துரைசாமி: கோவை மாவட்டத்தில் தனியார் துறையில் உரத் தொழிற்சாலை இருக்கிறது. அதுபோலவே அரசாங்கத் துறையில் அல்லது பொதுத் துறையில் அல்லது கூட்டுத் துறையில் ஒரு உரத் தொழிற்சாலை ஏற்பட்டால் அந்த வட்டார மக்களுக்குப் பயன்படும். ஆகவே, அப்படித் துவங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியார் துறையில் கோவை மாவட்டத்தில் ஐந்து இருக்கின்றன. அரசாங்கத்திலிருந்து ஆரம்பிக்க இப்போது தேவை இல்லை.

தூத்துக்குடி ரசாயன உரத்தொழிற்சாலை

*203 வினா.—திரு. க. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தூத்துக்குடி ரசாயன உரத் தொழிற்சாலையில் எப்போது உற்பத்தி துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திட்டப் பணி மதிப்பீடுகளின்படி 1974-ம் ஆண்டின் துவக்கத்தில் தூத்துக்குடி ரசாயன உர தொழிற்சாலையில் உற்பத்தி துவங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. க. துரைசாமி: 1974-ல் துவங்கும் என்று சொன்னார்கள். இவ்வளவு டன் உற்பத்தி செய்யும் என்ற முறையில் ஏதாவது திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அம்மோனியா 1100 டன், யூரியா 1600, என். பி. கே. 600, ஸல்ஃப்யூரிக் ஆசிட் 470, ஃபாஸ்பாரிக் ஆசிட் 165.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த உரத் தொழிற்சாலை பொதுத் துறை யின்தானே அமைகிறது என்று அறிய விரும்புகிறேன்.

*94—95-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, what is the percentage of demand from the agriculturists that it is meeting?

மாண்புமிகு திரு. செ மாதவன்: அதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. மணலி தொழிற்சாலை தொடங்குகிறது. அதற்குப் பின்னால் இது வரும்போது நம் தேவையை இது பெரும்பாலும் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களது வேண்டுகோளுக் கிணங்க வினா எண். 204 ஒத்திவைக்கப்படுகிறது.

*Licensed contractors of Electricity Board*

*205. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state :—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Electricity Board had asked all the licensed contractors to surrender their licences by February 1970.

(*b*) whether fresh licences have been issued to all those who had surrendered their licences; and

(*c*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) உரிமம் வழங்கு வாரியத்தின் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகள் 1969 ஜூலைத் திங்களில் அரசினால் ஏற்பளிக்கப்பட்டன. இந்த உரிமங்களை, திருத்தியமைக்கப்பட்ட விதிமுறை களின்கீழ் 28—2—1970-க்கு முன்னர் மாற்றிக்கொள்வதற்காக தங்கள் உரிமங்களைத் திருப்பிக் கொடுக்குமாறு முன்னர் சொல்லப்பட்ட விதிமுறைகளை பொட்டி உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் அனைவரையும் உரிமம் வழங்கும் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

(இ) & (உ) தற்போது வைத்திருக்கும் உரிமங்களைக் கொண்டு வந்து கொடுத்தவர்களும் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளை நிறைவு செய்தவர் களுமான ஒப்பந்தக்காரர்கள் அனைவருக்கும் புதிய உரிமங்கள் வழங்கப்பட் டுள்ளன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, have the Government proposed to nationalise all the private contracts and also if a private contractor had renewed his licence in 1970, how long his licence would be renewed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இது தேசியமயமாக்கும் முறை இல்லை. ஏற்கனவே 1965-ல் ஏ அண்ட் பி என்று இரு பிரிவுகள் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்பட்டன. பின்னர் அதில் சில சிக்கல்கள் இருப்பதாகக் கருதி மூன்றாகப் பிரித்தார்கள். பின்னர் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் கன்ட்ராக்டர்களும் விண்ணப்பித்ததன்படி அதுபற்றி ஆராய்ந்து இப்போது இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் தகுதி அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. எக்விப்மென்ட்ஸ் என்னென்ன வைத்திருக்கவேண்டும்,

கன்ட்ராக்டர்கள் எந்த அளவிற்கு டெக்னிக்கல் நாலட்ஜ் உள்ளவர்களை வைத்திருக்கவேண்டும், பாங்க் காரன்டி எவ்வளவு வைத்திருக்கவேண்டும் என்றெல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களின் கருவிகள் சோதிக்கப்பட வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: இந்த உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்கள் நம் மாநிலத்தில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள்? நம் அரசாங்கமே எல்லா வற்றையும் எடுத்துக்கொண்டு இந்த உரிமம் பெற்ற ஒப்பந்தக்காரர்களை நீக்கி விட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருந்ததே; அது என்னவாயிற்று?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அரசாங்கம் எடுத்துக் கொள்வதற் கில்லை. தனிப்பட்ட காண்ட்ராக்டர்கள் இருந்தால் அவர்கள் டெக்னிக்கல் நாலட்ஜ் உள்ளவர்களை வைத்திருக்கவேண்டும், சிக்வயர்ட் க்வாலிஃபிக்கேஷன்ஸ் உள்ளவர்களை வைத்திருக்கவேண்டும், என்றெல்லாம் இருக்கின்றன. அத்தகுதிகளை நிறைவேற்றுகிறவர்களை அனுமதிக்கிறோம். நாஷனலைஸ் செய்வது என்பது இப்போது இல்லை.

திரு. நா. வீராசாமி: இந்த லைசென்ஸ் வழங்குவதில் 'வோயர் மென் லைசென்ஸ்' வழங்குகிறார்கள். 'மெகர்' வைத்திருப்பவர்களுக்கு எலக்ட்ரிக்கல் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். அப்படி லைசென்ஸ் வழங்கும்போது எலக்ட்ரிக்கல் லைசென்ஸ் பாலிடெக்னிக்கில் படித்து விட்டு வந்தவர்களுக்குத்தான் லைசென்ஸ் வழங்கவேண்டுமென்று இருக்கிறது. அதில்லாமல் தனியாக ஒரு தேர்வுக் கமிட்டி போட்டு அதில் அப்பியர் செய்தால் போதும் லைசென்ஸ் கொடுக்கலாம் என்றிருக்கிறது. பாலிடெக்னிக்கில் படித்துவிட்டு வருகிறவர்களுக்குத்தான் லைசென்ஸ் வழங்கவேண்டும் என்றிருப்பதை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா? 'மெகர்' போன்ற கருவிகள் வைத்திருப்பவர்களுக்குத்தான் எலக்ட்ரிக்கல் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். அவர்கள் டெப்பாஸிட் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி பல விதிமுறைகள் இருப்பதன் காரணமாக ஏழைகளுக்கு லைசென்ஸ் பெற முடிவதில்லை. ஆகவே இந்த டெப்பாஸிட் முறையைத் தவிர்த்து அதைத் திருத்தியமைக்க நடவடிக்கைகள், எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: டெப்பாஸிட் முறையை இப்போது பாங்க் காரன்ட்டி என்று குறைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பகுதியில் படித்து வந்ததற்காக சான்றிதழ் வைத்திருக்கவேண்டும் என்றிருக்கிறது அப்படியில்லாவிடில் நடைமுறைச் சிக்கல்கள் வரும். ஆகவே கமிட்டியில் தேர்வு பெற்றால் போதும் என்றிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: இந்த உரிமம் பெற்றவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கேள்வி கேட்டேன். அதற்குப் பதில் சொல்வார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன். இந்த உரிமம் பெறுவதற்கு என்னென்ன மாதிரி யான தகுதிகள் வேண்டுமென்று அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கிட்டத்தட்ட ஆயிரம் பேர்கள். பத்து பேர்கள் கூடுதல் அல்லது குறைவாக இருக்கலாம். உரிமம் வழங்குவது பற்றி [illegible]லே குறிப்பிட்டுள்ளேன். 'ஏ' லைசென்ஸ் வாங்கி ரூ. 5,000 பாங்க் காரன்டி. கொடுக்கவேண்டும் சூப்பர்வைசர்ஸ் வைத்திருக்கவேண்டும். உயர் அழுத்தக் கம்பி சக்தி உள்ளதில் வேலை செய்யவேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் இருக்கின்றன. எக்விப்மென்ட்ஸ் வைத்திருக்கவேண்டும். ஒரு லிஸ்ட் ஆஃப் எக்விப்மென்ட்ஸ் உள்ளன. அந்த ஐட்டங்களை வேண்டுமானால் வாசிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரியான லைசென்ஸ் கொடுக்கப் படும் கண்ட்ராக்டர்கள் இருக்கிறார்களே, அதில் புதிதாக பி.இ. (எலெக்ட்ரிக்கல்) பட்டம் பெற்றவர்களுக்கு முதல் இடம் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பி.இ. பட்டம் தேவையில்லை. சூப்பர் வைஸர்ஸ் இருந்தாலும்போதும் என்றிருக்கிறது. பி.இ. பட்டம் உள்ளவர்களுக்கு தானாக வந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பி.இ. பட்டம் பெற்றவர்களுக்கு ப்ராயாரிட்டி கொடுக்கப்படுமா என்பது கேள்வி. கொடுக்கப்படும் அல்லது கொடுக்கப்படாது என்று சொல்லுங்கள்.

THE HON. THIRU O. P. RAMAN: Sir, there are some fixed rules. The point raised by the hon. Member has to be examined.

### *Bus plying from Indira Nagar*

* 206. *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state:—

(*a*) whether it is a fact that the bus routes 21-A, 21-F, 21-K, 23-A, 23-C, 12-G and 47-A which were plying between Indira Nagar and Seethakathi Nagar, Pari Munai, Egmore, Thacker Choultry and I.C.F. were cancelled; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) வழித்தடங்கள் எண்
12-G, 21-F, 21-K ரத்து செய்யப்பட்டன. வழித்தடங்கள் எண்.
21-A, 23-A, 23-C, 47-A மாற்றியமைக்கப்பட்டன.

(இ) இவ்வழித்தடங்களில் போதிய போக்குவரத்து இல்லையென்பது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தெரியவந்தது. அதனால் மேற்கூறப்பட்ட சில வழித்தடங்கள் ரத்து செய்யப்பட்டன. மற்றவை மாற்றியமைக்கப்பட்டன.

DR. H. V. HANDE: Is it a fact that the public there wanted a reconsideration and restoration of 19-S and 19-M route buses also which were connecting that area, whether after these routes were abolished a number of letters to the editors and representations were received by this Government to restore these routes? If so, what further action has been taken by this Government to see that their demands are satisfied and that the public are not put to any extraordinary inconvenience?

திரு. ஜே. ஜேம்ஸ் : நெரிசல் வேளைகளில் பஸ்களில் சாதாரணமாக பிரயாணிகள் ஏறும்போது ஏறி நிற்கிறவர்கள் அசைவதற்குக்கூட வழி இல்லாமல் ஏற்றப்படுகிறார்கள். இதனால் பிரயாணிகளுக்கு டிக்கட் வழங்குவதற்குக் கூட சவுகரியம் இல்லாமல் இருப்பதால் அரசாங்கத்திற்கு நஷ்டம் வருகிறது. ஆகவே இந்த நிலையைப் போக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏறி நிற்பதற்குக் கூடச் சவுகரியம் இல்லாமல் இருப்பதால்தான் அதை நெரிசல் நேரம் என்று சொல்லுகிறோம். அவர்களுக்கு வசதி செய்வதற்காகத்தான் ஸ்டாண்ட் கண்டக்டர்கள், ஒரு பஸ்ஸில் இரண்டு கண்டக்டர்கள் போடுவது, க்யூ சிஸ்டத்தைக் கொண்டு வருவது போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: மீண்டும் இப்போது இந்திரா நகர், சாஸ்திரி நகருக்கு பஸ் வசதிகள் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அங்கு அதிகமான பஸ்களை விட அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் கூறியுள்ளார்கள். அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை எதுவும் வந்ததாகத் தெரியவில்லை.

### கோயில்களில் தமிழில் அர்ச்சனை முறை

* 207 வினா.—திரு. மா. பா. சாரதி :

திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்சமயம் எத்தனை கோயில்களில் தமிழில் அர்ச்சனை முறை பின்பற்றப்படுகிறது?

(இ) இம்முறையை எல்லா கோயில்களுக்கும் நீட்டிக்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 112 கோயில்களில் தமிழ் அர்ச்சனை பின்பற்றப்படுகிறது.

(இ) சுமார் 15—8—1971 தேதிக்குள் எல்லா ஆலயங்களிலும் திருமுறைத் தமிழில் அர்ச்சனை துவங்கப்பட வேண்டுமென்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. ஆணையாளர் அறிவுரை வழங்கியுள்ளார் மேலும் குறிப்பாக இதன் முன்னேற்றத்தை கவனிக்குமாறு துணை ஆணையர்களையும் உதவி ஆணையர்களையும் பணித்துள்ளார்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை கோயில்கள் இருக்கின்றன ? மற்றக் கோயில்களில் தமிழில் அர்ச்சனை எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுப்படையான கேள்வி. திரு. மாணிக்கவாசகம். . . .

திரு. இரா. மாணிக்கவாசகம்: தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதற்குத் தமிழர்களிடத்தில் இருந்து எதிர்ப்பு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தமிழில் அர்ச்சனை செய்வதைத் தமிழ்ச் சமுதாயம் வரவேற்கிறது. ஆனால் தமிழர் மத்தியில் சிலபேர் தமிழ் அர்ச்சனையை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இறைவன்தான் நல்லறிவு வழங்க வேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம்: தமிழில் அர்ச்சனை செய்வதற்கு எந்த மதத்தினராக இருந்தாலும் தமிழ் அர்ச்சனை தெரிந்தவர்களாக இருந்து முன்னுக்கு வந்தால் அவர்களை நியமிக்க அரசாங்கம் முன் வருமா? குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று விதி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அர்ச்சனைகள் இந்து மதத்தைச் சார்ந்த கோயில்களில்தான் நடக்கின்றன. ஆகவே, இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்தான் அர்ச்சனை செய்வதற்கு நியமிக்கப்படுவார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தமிழில் கோயில்களில் அர்ச்சனை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். தமிழில் அர்ச்சனை செய்யும்போது ஏற்கனவே இருந்த சமஸ்கிருதத்தைத் தமிழ் மொழி பெயர்த்துச் செய்கிறார்களா அல்லது தமிழில் அர்ச்சனை செய்ய தனிப்பட்ட சுலோகங்கள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தமிழில் அர்ச்சனை செய்வதற்குப் புதிதாகத் தமிழ்த் திருமுறைகள் இயற்றப்பட்டுள்ளன. தமிழ் மேதைகள் புதிய திருமுறைகளை கோயில்களுக்கு அறநிலையத் துறையின் மூலம் வழங்கியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கோயிலுக்குச் செல்லுகின்ற பக்தர்கள் விருப்பம் போல் எந்த மொழியில் வேண்டுமானாலும் அர்ச்சனை செய்ய அனுமதிக்கப்படுமா? அல்லது தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: கட்டாயம் எதுவும் கிடையாது. சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யப்பட்டபோது தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற நிலை இருந்தது; இப்போது தமிழில் அர்ச்சனை செய்யப்படுகின்ற நிலையில் சமஸ்கிருதத்திலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. யாரையும் கட்டாயப்படுத்தவில்லை. தமிழ் உணர்ச்சி உள்ளவர்கள் தமிழில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று ஆலயங்களில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன்படி இன்றைய தினம் செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'அறிவுரை கூறப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்களே தவிர, 'ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது' என்று கூறவில்லை.

திரு. மா. சுப்பிரமணியம்: சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஆண்டவன் ஆணை ஏதும் பிறப்பித்திருக்கிறாரா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை செய்யவேண்டுமென்று ஆண்டவன் கேட்கவில்லை. ஆனால் தமிழ் உணர்ச்சியுள்ள ஆண்டவன் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு இன்றைய தினம் கொடுத்திருக்கிறான்.



திரு. மு. பழனிவேலன்: தமிழில் அர்ச்சனை செய்ய வேறு ஜாதியினர் முன்வந்தால் அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இதிலே ஜாதிபேதம் எதுவும் கிடையாது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அர்ச்சகர்களாக நியமிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, [illegible] these questions have been asked here, will you protect us, credulous people like me, from all solts of ironies spoken about God in this Assembly? We are all credulous people and not as radical as anybody else. The question is asked whether God has asked for Sanskrit Archanas. It is obvious that God will never ask for Sanskrit Archanas. During the last few days we have submitted ourselves to all sorts of questions in this House and such passive people like me should be protected only by the Speaker.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆண்டவன் மனித உருவிலும் [illegible] கிறான். ஆண்டவனுக்கு அவமானம் ஏற்பட்டு விட்டதாகவோ, [illegible] செய்யப்பட்டு விட்டதாகவோ கருத வேண்டாம். அப்படிப்பட்ட [illegible] உச்சரிக்கப்படுவதாகத் தாங்கள் கருதிக்கொள்ளத் தேவையில்லை.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: மனிதனை அவமானப்படுத்தினால் ஆண்டவனை அவமானப்படுத்தியதாக அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆண்டவனுக்கு எந்த விதமான அவமானமும் ஏற்பட்டு விடவில்லை. அப்படி அவமானம் ஏற்படவந்த இந்த அவை அனுமதிக்காது. கேட்ட கேள்விகள் எல்லாம் ஆண்டவன் கேட்டு இருக்கிறாரா என்பதுதான். ஆண்டவன் எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம், உங்களைவிட பக்தியாக அவர்கள் இருக்கலாம்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: தாங்க் யூ சார்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, இந்த மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் திரு. மா. பொ. சி. அவர்கள் தேர்தல் காலத்தில் ஒரு கோவிலில் அர்ச்சனை செய்யச் சென்றார். அங்கே சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்த போது தேர்தலில் தோற்று விடுவார்கள் என்று ஒரு அர்ச்சகர் சொன்னாராம். அந்த அர்ச்சகர் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

## வெளியிக்குறியிடாத வினாக்கள்.

### மதுவிலக்கு வழக்குகள்.

1 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் மதுவிலக்கு சம்பந்தமாக போலீஸார் எத்தனை கேஸ்கள் போட்டிருக்கிறார்கள்?

(இ) அவைகளில் தண்டனை கிடைத்த கேஸ்கள் எத்தனை?

விடை—

(அ) 3,32,539.

(இ) 2,81,297.

(a) Twenty.

(b) Number of permits granted to Co-operative Societies : Nil.

Number of permits granted to private operators: Twenty

### மீனவர்களுக்கு வழங்கப்பட்ட படகுகள்.

10 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

1969–70-ல் அரசினர் தமிழ்நாட்டு மீனவர்களுக்காக வழங்கிய மீன்பிடி தோணிகள், ஸ்டீம் லாஞ்சுகள் எத்தனை ? மாவட்ட வாரியாக.

விடை.—

| | | |
|---|---|---|
| 1 | சென்னை | 25 படகுகள். |
| 2 | செங்கல்பட்டு | 1 படகு. |
| 3 | தென்னாற்காடு | 3 படகுகள். |
| 4 | இராமநாதபுரம் | 12 படகுகள். |
| 5 | தஞ்சாவூர் | 4 படகுகள். |
| 6 | திருநெல்வேலி | 2 படகுகள். |
| 7 | கன்னியாகுமரி | 6 படகுகள். |

| | | |
|---|---|---|
| 1 | Madras | 25 boats. |
| 2 | Chingleput | 1 boat. |
| 3 | South Arcot | 3 boats. |
| 4 | Ramanathapuram | 12 boats. |
| 5 | Thanjavur | 4 boats. |
| 6 | Tirunelveli | 2 boats. |
| 7 | Kanyakumari | 6 boats. |

### விதைப் பண்ணைகள்.

11 வினா.—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

1969–70-ம் ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள விதைப் பண்ணைகளின் மொத்தப் பரப்பளவு என்ன ? மாவட்ட வாரியாக.

விடை.—

| | ஏ. செ. |
|---|---|
| செங்கற்பட்டு | 401·47 |
| வட ஆற்காடு | 422·29 |
| தென் ஆற்காடு | 516·00 |
| தஞ்சாவூர் | 830·07 |
| திருச்சிராப்பள்ளி | 538·45 |
| ராமநாதபுரம் | 329·64 |
| மதுரை | 352·83 |
| திருநெல்வேலி | 455·32 |
| சேலம் | 427·37 |
| தர்மபுரி | 55·20 |
| கோவை | 315·84 |
| கன்னியாகுமரி | 77·45 |
| | 4,721·93 |



மற்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடுமியாமலையில் " அண்ணா பண்ணை " எனப்படும் ஒரு பெரிய பண்ணை தற்போது 806·45 ஏக்கர் நிலப் பரப்பில் இயங்கி வருகின்றது.

| | A.C. |
|---|---|
| Chingleput | 401·47 |
| North Arcot | 422·29 |
| South Arcot | 516·00 |
| Thanjavur | 830·07 |
| Tiruchirappalli | 538·45 |
| Ramanathapuram | 329·64 |
| Madurai | 352·83 |
| Tirunelveli | 455·32 |
| Salem | 427·37 |
| Dharmapuri | 55·20 |
| Coimbatore | 315·84 |
| Kanyakumari | 77·45 |
| Total | 4,721·93 |

Besides, there is a large-sized farm at Kudumiamali in Tiruchirappalli district named as " Anna Pannai " run at present on an extent of 806·45 acres.

### மாநிலத்திற்குள் நக்சல்பாரிகள் புகாமல் தடுக்கப்படல்.

12 வினா.—திரு. என். இட்டப்பா & திரு. எஸ். சங்கழுத்து தேவர் : மாண்பு மிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வெளி மாநிலங்களிலுள்ள நக்சல்பாரிகள் நமது மாநிலத்தில் புகாமல் தடுக்க அரசு ஏதேனும் முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—

(அ) பிற மாநிலங்களிலிருந்து நக்சல்பாரிகள் தமிழ்நாட்டில் ஊடுருவி வராமல் தடுப்பதற்கு அரசு இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது, மேலும் மேற்கொண்டும் வருகிறது.

(இ) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்களை வெளியிடுவது பொது நலனிற்கு ஏற்புடைத்தல்ல.

(a) The Government have taken and are taking, all possible measures to prevent the infiltration of Naxalites of other States into Tamil Nadu.

(b) It is not desirable in the public interest to disclose the details of these measures.

### சவரத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட சவரக் கருவிகள்.

13 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-ம் வருடம் மார்ச் முதல் 1970-ம் வருடம் மார்ச் முடிய சவரத் தொழிலாளர்களுக்கு எந்தெந்த மாவட்டங்களில் அரசு கடன் உதவி அளித்தது?

விடை—

சவரத் தொழிலாளர்களுக்குக் கடன் உதவி எதுவும் அளிக்கப் பெறவில்லை. ஆனால், 1966–67-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நீங்கலாக) ஆண்டிற்கு அறுபது தொழிலாளர்களுக்கு ஆளுக்கு ரூ. 75 பெறுமானமுள்ள சவரக் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

### கிராம சேவக்குகள் பயிற்சி நிலையங்கள்.

14 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் கிராம சேவக்குகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையங்கள் எத்தனை இருந்தன?

(இ) 1969, 1970 ஆகிய இரு ஆண்டுகளிலும் எத்தனை கிராம சேவக்குகள், கிராம சேவிகைகள் பயிற்சி பெற்றுள்ளனர்?

விடை—

(அ) 1970-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் கிராம சேவக்குகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையங்கள் கீழே கண்ட ஐந்து இடங்களில் இருந்தன:—

1. சத்தியவிஜயநகரம் (வட ஆற்காடு மாவட்டம்).
2. கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்).
3. பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்).
4. பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).
5. டி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்).

(இ) 1969, 1970 ஆகிய இரு ஆண்டுகளில் பயிற்சி பெற்ற கிராம சேவக்குகள் (ஊர் நலப் பணியாளர்கள்) விபரம் பின்வருமாறு:—

| ஆண்டு. | பயிற்சி நிலையத்தின் பெயர். | ஊர்நலப் பணியாளர்களுக்கான முன் பயிற்சி. | தீவிர வேளாண்மை பயிற்சி. |
|---|---|---|---|
| 1969 .. | பவானிசாகர் .. | .. | 45 |
| | டி. கல்லுப்பட்டி .. | .. | .. |
| | சத்தியவிஜயநகரம் .. | .. | .. |
| | கிருஷ்ணகிரி .. | .. | .. |
| | பட்டுக்கோட்டை .. | .. | 45 |
| | மொத்தம் .. | | 90 |



| ஆண்டு. | பயிற்சி நிலையத்தின் பெயர். | ஊர்நலப் பணியாளர்களுக்கான முன் பயிற்சி. | தீவிர வேளாண்மை பயிற்சி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1970 .. | பவானிசாகர் .. | .. | 50 |
| | டி. கல்லுப்பட்டி .. | 38 | 48 |
| | சத்தியவிஜயநகரம் .. | 42 | 49 |
| | கிருஷ்ணகிரி .. | .. | 44 |
| | பட்டுக்கோட்டை .. | 41 | 46 |
| | | 121 | 237 |
| | 1969, 1970-ம் ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்கள். | 121 | 327 |

1969, 1970-ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற கிராம சேவிகைகள் (ஊர்நலப் பணியாளர்கள்—பெண்கள்) விபரம்—

கிராம சேவிகைகள் வேலைக்கு யாரையும் அமர்த்தல் கூடாது என்ற தடை இருந்ததால், கிராம சேவிகைகளாக யாரும் 1969, 1970-ஆம் ஆண்டுகளில் பணியில் அமர்த்தப்படவில்லை. ஆகவே யாருக்கும் பயிற்சியும் அளிக்கப்படவில்லை.

### முதுமலை சரணாலயத்தில் பாதுகாக்கப்படும் வன விலங்குகள்.

15 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

நீலகிரி மாவட்டம் முதுமலைக் காட்டில் வன விலங்குகளின் சரணாலயத்தில் தற்போது எந்தெந்த மிருகங்கள் பாதுகாக்கப்படுகின்றன?

விடை—

நீலகிரி மாவட்டத்தில், முதுமலை வன விலங்கு உய்விடத்தில் உள்ள வன விலங்குகள் எல்லாவற்றிற்கும் முழுப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

இந்தியக் காட்டு எருமை (Bison), யானை, சிறுத்தை, நரி, கழுதைப் புலி, கீரி, காட்டுப் பூனை, புனுகுப் பூனை, மஞ்சள் வெண்ணைப் புள்ளிகள் கொண்ட பூனை, மலபார் மலை அணில், சிறுத்தைப் பூனை ஆகியவை பொதுவாக உய்விடத்தில் காணப்படும் விலங்குகளாகும்.

எறும்புண்ணும் விலங்கு, தேனுண்ணும் கரடி, காட்டுப் பன்றி, முள்ளம்பன்றி, காட்டு நாய், புலி ஆகியவை உய்விடத்தில் அபூர்வமாகக் காணப்படும் விலங்குகளாகும்.

மறிமான், புள்ளிமான், நான்கு கொம்புகளைக் கொண்ட கடமான், எலிமான், பறக்கும் அணில், காட்டு ஆடு, நீண்ட வாலுடைய குரங்கு வகை, நாட்டுக் குரங்கு ஆகிய பிற விலங்குகளும் உய்விடத்தில் காணப்படுகின்றன.

### மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம்

16 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்ட அரசு சார்பில் வழங்கியுள்ள கடன் தொகை, மானியத் தொகை முறையே எவ்வளவு?

விடை—

1956-57 முதல் 1970-71 வரையில் உள்ள கால அளவில் பேருந்து நிலையத்திற்கு மேம்பாடுகள் செய்யவும், கடைகள் கட்டவும் தடுப்புச் சுவர் கட்டவும் மாயூரம் நகராட்சி மன்றத்திற்கு ஏழு முறை கடன்கள் வழங்கப் பட்டன. ஒப்பளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூபாய் 1,47,000 ஆகும். மானியம் எதுவும் வழங்கப்படவில்லை.

### நகரப்பகுதிகளில் அமைக்கப்பட்ட சலவைக்கூடங்கள்.

17 வினா—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

1969-70-ம் ஆண்டில் எந்தெந்த நகராட்சி நகரங்களில் சலவைத் தொழிலாளர்களுக்கு "டோபிகானா" கட்டித் தர அரசு முன்வந்துள்ளது?

விடை—

1969-70ஆம் ஆண்டில் சலவைக்கூடம் கட்ட அரசு நிதியுதவி அளிக்கவில்லை. சலவைக் கூடங்கள் கட்ட முன்வரும் நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் (Town Panchayats) நிதியுதவி அளிப்ப தற்கான திட்டமொன்றினை செயற்படுத்த அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. நடப்பு ஆண்டாகிய 1971-72-ல் இத் திட்டத்திற்காக நகராட்சிகளுக்கு ரூ. 3 லட்சமும், பேரூராட்சிகளுக்கு ரூ. 2 லட்சமும், ஒதுக்கப்பட்டுள்ளது. திருப்பூர், சிதம்பரம், தஞ்சாவூர், சேலம், தர்ம புரி நகராட்சிகளின் விண்ணப்பங்கள் தற்போது அரசின் ஆய்வில் உள்ளன.

### நிலவள வங்கிகள்.

18 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாடு முழுவதும் தற்போதுள்ள நிலவள வங்கிகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

தமிழ்நாடு முழுவதும் நாளது வரையில் 223 நிலவள வங்கிகள் உள்ளன.

There are 223 Primary Land Development Banks in Tamil Nadu as on date.

### உடலைப்பட்டு கிராமத்திலுள்ள அரசு புறம்போக்கு நிலங்கள்.

19 வினா—திரு. என். ராஜாங்கம்: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம், கீழ்க்குமார மங்கலம் பஞ்சாயத்தைச் சேர்ந்த உடலைப்பட்டு கிராமத்தில் எத்தனை ஏக்கர் சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன?

(இ) கடந்த 15 ஆண்டுகளாக (1955 ஆண்டு முதல்) யார் யாருக்கு எத்தனை ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது? ஆண்டுவாரியாக.

(உ) ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் போக மீதி உள்ள நிலங்கள் எவ்வளவு? எத்தனை ஏக்கர்?

விடை—

(அ) 1955-ம் வருடக் கணக்குப்படி 72·72 ஏக்கர் சர்க்கார் புறம் போக்கு நிலங்கள் உள்ளன.

(இ) ரி. ச. 131/2—0·75 ஏரி புறம்போக்கில் நஞ்சையாகவும், ரி.ச. 15·1 ஏ.8/113—0·67 மந்தவெளி புறம்போக்கில் புஞ்சையாகவும் முறையே திரு கோபாலகிருஷ்ணன் நாயுடுவுக்கும், கோபால்சாமி நாயுடு வுக்கும் 1957-ல் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

(உ) 71·30 ஏக்கர்.



### மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டுள்ள முஸ்லீம் மாணவர்கள்.

20 வினா—திரு. கே. ஏ. வஹாப்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:—

1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் முறையே மருத்துவக் கல்லூரி களில் சேர்க்கப்பட்ட முஸ்லீம் மாணவர்கள் எத்தனை பேர்?

விடை—

1969-70—58.

1970-71—39.

### புதிய அரிசன நல மாணவ விடுதிகள்.

21 வினா—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1971-72-ம் ஆண்டில் புதிதாகத் துவங்கப்படவிருக்கும் அரிசன நல மாணவர் தங்கும் விடுதிகள் எத்தனை?

(இ) அவைகள் எங்கெங்கு துவங்கப்படவிருக்கின்றன?

விடை—

(அ) & (இ) இந்த விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு ஆணை கூடிய சீக்கிரத்தில் விடுக்கப்படும்.

(a) and (b): The matter is under the consideration of the Government and orders will be issued shortly.

### காந்தி வித்யாலய ஆசிரியர் பயிற்சிப்பள்ளி.

22 வினா—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா:—

மாயூரம் தொகுதி திருச்சிற்றம்பலத்திலுள்ள காந்தி வித்யாலய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு 1970-71-ம் ஆண்டுக்கு அரசு வழங்கிய மான்யத் தொகை எவ்வளவு?

விடை—

1969-70-க்கான மானியம் ரூ. 5,269 (ரூபாய் ஐயாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்பது மட்டும்) 1970-71-ல் கொடுக்கப்பட்டது. 1970-71-க்கான மான்யம், 1971-72-ல் தான் கணக்கிடப்பட்டு தரப்படும்.

### இராஜபாளையம் சண்முகர் ஆலை.

23 வினா—திரு க. சுப்பு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராஜபாளையம் சண்முகர் மில்லைத் திறப்பது சம்பந்தமாக நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியில் அங்கம் வகிப்போர் யார் யார்?

(இ) அக்கமிட்டியின் அறிக்கை விரைவாகக் கிடைக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

(அ) இராஜபாளையம் சண்முகர் மில்லைத் திறப்பது சம்பந்தமாக நிய மிக்கப்பட்டுள்ள கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் பின்வருமாறு:—

(1) டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, நூல் தலைமையாளர், நெசவுத் துறைத் தலைவர், அழகப்பா தொழி லியற் கல்லூரி, கிண்டி, சென்னை.

| | |
|---|---|
| (2) திரு எம். ஜி. மீர்சன்தானி, இயக்குநர் (நுண் தொழில்) தேசிய நெசவாலைக் கார்ப்பொரேஷன், புதுடில்லி. | உறுப்பினர். |
| (3) திரு.வி. வி. எஸ். சாஸ்திரி, கூட்டு இயக்குநர் (நிதி), தேசிய நெசவாலைக் கார்ப்பொரேஷன், புதுடில்லி. | உறுப்பினர். |
| (4) திரு ஜி. வி. எஸ். தேசிகன், நுண் தொழில் இயக்குநர், தமிழ்நாடு நெசவாலைக் கார்ப் பொரேஷன், 46, தியாகராயசாலை, சென்னை-17. | உறுப்பினர். |
| (5) திரு. எல். டி. வெங்கடராமன், துணை சோதனை இயக்குநர், பிரதேச இயக்குநர் அலுவலகம், கம்பெனி சட்ட வாரியம், சென்னை. | உறுப்பினர். |
| (6) திரு எம். பத்மநாபன், துணை இயக்குநர், நூல் நெச. ஆணையாளர் அலுவலகம், பம்பாய்-20. | உறுப்பினர்-செயலாளர். |

(இ) மாநில அரசு, மத்திய அரசிடம் கமிட்டியின் அறிக்கையை விரைவாக அனுப்புமாறு கேட்டுள்ளது. தற்போது மத்திய அரசு, ஆலையை அளவீடு செய்து வருகிறது. இதன் பிறகு, சட்டப்படி அதன்மீது ஆய்வு விசாரணை நடத்தப்படும்.

(*a*) The following are the members of the investigation committee constituted by the Government of India, under Industries (Development and Regulation) Act, 1951, to investigate into the affairs of Shunmuga Mills, Rajapalayam:—

| | |
|---|---|
| 1 Dr. S. Krishnamurthy, Head of Textile Department, Alagappa College of Technology, Guindy, Madras. | Chairman. |
| 2. Shri M. G. Mirchandani, Director (Technical), National Textile Corporation. | Member. |
| 3. Shri V. V. S. Sastry, Joint Director (Finance), National Textile Corporation Limited. | Member. |
| 4. Shri G. V. S. Desikan, Technical Director, Tamil Nadu Textile Corporation Limited, 46, Theagaraja Road, Madras-17. | Member. |
| 5 Shri L. D. Venkataraman, Deputy Director of Inspection, Office of the Regional Director, Company Law Board, Madras. | Member. |
| 6. Shri M. Padmanabhan, Deputy Director, Office of the Textile Commissioner, Bombay-20. | Member-Secretary. |

(*b*) This Government have requested the Government of India to expedite the Committee's report. At present the Government of India are conducting a survey of the mills. After completion of this survey investigation under Industries (Development and Regulation) Act, 1951 will be taken up.

24 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராஜபாளையம் சண்முகர் மில்லைத் திறப்பது சம்பந்தமாக நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியின் அறிக்கை விரைவாகக் கிடைக்க அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை ?



(இ) மேற்கண்ட மில் மூடப்பட்டதால் வேலையின்றித் தவிக்கும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு உதவ அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

விடை—

(அ) இவ்வாலை விவகாரம் குறித்து விசாரணை நடத்த தொழில் (மேம்பாடு முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் அமர்த்தப்பட்டுள்ள குழுவின் அறிக்கையை விரைந்தளிக்குமாறு மத்திய அரசை, இவ்வரசு வற்புறுத்தியுள்ளது.

(இ) அக்குழுவின் அறிக்கை கிடைப்பதற்கு முன் இவ்விஷயத்தில் எந்த முடிவும் எடுப்பதற்கில்லை.

(*a*) The State Government have pressed the Centre to expedite the report of the Committee constituted for enquiry into the affair of this mill under the Industries (Development and Regulation )Act, 1951

(*b*) Pending receipt of the Committee's report, no decision can be taken in this matter.

25 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்ற ஆண்டு, வட ஆர்க்காடு மாவட்டத்தில் பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் தாயகம் திரும்பியவர்கள் எத்தனை பேர்களுக்கு எவ்வளவு கடன் வழங்கப்பட்டது?

விடை—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1970–71-ல் பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்த அகதி குடும்பங்களின் எண்ணிக்கையையும், அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கடனுதவியையும் காட்டும் விவர அறிக்கை.

| | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொழில் கடன். குடும்பங்களின் எண்ணிக்கை. | தொகை. ரூ. | வழங்கப்பட்ட தொழில் கடன். குடும்பங்களின் எண்ணிக்கை. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| பர்மா அகதிகள் .. | 16 | 5,660 | 16 | 47,456 |
| சிலோன் அகதிகள் .. | 23 | 4,000 | 23 | 40,000 |

| | ஒப்புதல் அளிக்கப்பட்ட வீட்டுக் கடன். குடும்பங்களின் எண்ணிக்கை. | தொகை. ரூ. | வழங்கப்பட்ட வீட்டுக் கடன். குடும்பங்களின் எண்ணிக்கை. | தொகை. ரூ. |
|---|---|---|---|---|
| | (5) | (6) | (7) | (8) |
| பர்மா அகதிகள் .. | 2 | 3,100 | 2 | 3,100 |
| சிலோன் அகதிகள் | 7 | 10,900 | 7 | 10,900 |

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

சேர்ந்தபூமங்கலம் விவசாயிகளிடமிருந்து உரக் கடன்கள் கெடுபிடி செய்து வசூலிக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட்: தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்திலுள்ள சேர்ந்தபூமங்கலம் விவசாயிகளிடமிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விவசாய உரக் கடன்களை (ஐ.எம்.எஸ். லோன்) அரசு அதிகாரிகள் கெடுபிடி செய்து வசூலிப்பதைப் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு, வருவாய் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Speaker, Sir, in January 1971 the Collector of Tirunelveli reported to Government among other things that Tiruchendur Taluk containing 46 villages was one of the worst affected Taluks and that in order to ease the strained economic conditions in the area, a 'go-slow policy' may be adopted in the collection of loan dues. The Collector also suggested that works might be udertaken to relieve the distress of the people in the area. The Board of Revenue recommended the Collector's proposals. Accordingly the Government informed the Collector of Tirunelveli that he could use his discretion and adopt a 'go-slow policy' in regard to collection of Government loan dues (both arrears and current) in the villages in Tiruchendur taluk. The above concession will be available till the end of the current fasli, i.e., 30—6—1971.

In the light of the above orders of the Government, the Collector of Tirunelveli would have issued instructions to his subordinates to adopt a 'go-slow policy' and not to resort to coercive process in genuine cases. Government also have sanctioned totally a sum of Rs. 8.08 lakhs for Tirunelveli District for deepening and sinking of drinking water wells.

திரு. ஜி. ஆர். எட்மண்ட்: தலைவரவர்களே, கடந்த வாரம் அங்கே உள்ள விவசாயிகளிடமிருந்து அதிகாரிகள் அந்த கடனுக்கான பாக்கியைக் கெடுபிடி செய்து வசூலிக்கிறார்கள் என்று எனக்குத் தந்தி வந்திருக்கிறது. அங்கே கடன் வசூலிக்கும்போது, கடன்களைச் செலுத்த முடியாத மக்களிடமிருந்து பாத்திரங்களை எடுத்துச் சென்றதாகவும் தந்தி வந்திருக்கிறது. இனி மேலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி வசூலிப்பதை சற்று தாமதப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்திரவிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் அளித்த பதிலில், சென்ற பசலியோடு அரசாங்கத்தின் ஆணை முடிந்து விட்டது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இந்தப் பசலிக்காக வசூல் செய்திருப்பார்கள். நிலைமையை மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து, முடிவு எடுக்கப்படும்.



3. அறிவிப்பு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு, ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனைவரி (மேல்வரி) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு 1971-ம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்ட முன்வடிவை இம்மன்றத்தின் முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) 1971-ம் ஆண்டு சென்னைமாநகர சிவில் நீதி மன்ற (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1971)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1971-ம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதி மன்ற (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1971) மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருவார்கள்.

THE HON. THIRU S. MADHAVAN: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras City Civil Court (Amendment) Bill,@ 1971 (L.A. Bill No. 13 of 1971) be taken into consideration'.

In moving this Bill, I wish to say that this is a simple measure seeking to enhance the monetary limit of the appellate jurisdiction of the City Civil Court from Rs. 5,000 to Rs. 10,000. Originally, the limit of pecuniary jurisdiction of the City Civil Court, Madras, was Rs. 10,000. It was enhanced to Rs. 50,000 in 1955 by an amendment to the Madras City Civil Court Act, 1892. Pursuant to the Law Commission's recommendation, this limit was reluced to 20,000 from the 1st May 1964. From then onwards the work on the original side of the High Court is on the increase resulting in arrears. Therefore, on the recommendations of the High Court, the original jurisdiction of the City Civil Court was

---

@ Published in the Tamil Nadu Gazette Extraordinary, dated 29th June 1971.

enhanced to Rs. 50,000 from the 1st July 1967. Under Section 15 (2) of the Madras City Civil Court Act, 1892, the Appellate jurisdiction of the City Civil Court is Rs. 5,000 only.

Though the original jurisdiction of the City Civil Court has been enhanced from Rs. 10,000 to Rs. 50,000, the appellate jurisdiction of the City Civil Court continues to be Rs. 5,000 even though the Appellate Jurisdiction of the District Court is Rs. 10,000. It has therefore been proposed to increase the appellate jurisdiction of the City Civil Court to Rs. 10,000 as in the case of District Court with a view to reduce the volume of work in the High Court.

The Bill seeks to achieve the above object.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார் இந்த மசோதாவை வரவேற்று, சில விஷயங்களை நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். ஜில்லா கோட்டிலே எந்த அளவுக்கு அப்பீல் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறதோ அந்த அளவுக்கு சிடி சிவில் கோர்ட் ஆக வேண்டுமென்பதற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். இந்த நேரத்தில், ஒன்றிரண்டு விஷயங்களைத் தங்கள் கவனத்திற்குக் [illegible] வருவது நல்லது என்று கருதுகிறேன்.

ரூபாய் 5,000 என்று இருப்பதை ரூ. 10,000 என்று உயர்த்துவதால் ஹைக்கோர்ட்டுக்கு வரும் அப்பீல்களின் எண்ணிக்கை குறையும் என்பதில் சந்தேகம் இல்லை. சென்னை நகரத்திற்கும் மாவட்ட அடிப்படையில் இருக்கும் ஜில்லா கோர்ட்டுக்கும் இருக்கும் வித்தியாசங்கள் படிப்படியாகக் குறைக்கப்படவேண்டுமென்பது தான் என்னுடைய நோக்கம். அப்படி வருகிறபோது இந்த மசோதாவை நாம் நிறைவேற்றினாலும் கூட, எப்படி டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் மாவட்டங்களில் எல்லாம் இருக்கின்றனவோ அதே மாதிரியான முறையில் இங்கே கொண்டுவருவது பொருத்தம் என்று நினைக்கிறேன். இப்போது சிடி சிவில் கோர்ட்டில் இருக்கும் ஜட்ஜ்கள் என்ன வேலை செய்கிறார்களோ, அதே வேலையைத்தான் மாவட்டத்திலுள்ள டிஸ்ட்ரிக்ட் முன்சீப்களும் செய்கிறார்கள். ஆனால் இந்த சிடி சிவில் கோர்ட்டில் இருக்கும் ஜட்ஜ்களுக்கு மட்டும் சப்ஜட்ஜ் ராங்க் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பாகுபாடு சென்ற காலத்தில் ஏதோ ஒரு காரணத்தால் கொடுக்கப்பட்டது. அதை இப்போதாவது மாற்றித் தீரவேண்டும்.

ஒரே வேலை செய்யும் ஜட்ஜ்களின் ஊதியத்தில் மாறுதல் ஏற்பட்டு இருப்பதால், அவர்களுக்குப் பதவி உயர்வு ஏற்படுகிற காலத்தில் ஓரளவு மனக்கசப்பு ஏற்படுகிறது. எப்படி இன்றைக்கு பிரின்சிபல் தொகையை ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 க்கு உயர்த்தியிருக்கிறோமோ அதேபோல், அதே மாதிரியாக டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பாக வேலை செய்யக் கூடியவர்களையும், சிடி சிவில் கோர்ட்டில் இருக்கும் ஜட்ஜ்களையும் ஒரே மாதிரியான நிலையில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரே மாதிரியான வேலை செய்யக்கூடியவர்களுக்கு ஒரே மாதிரியான ஊதியமும், ஒரே மாதிரியான நிலையும் இருப்பது நல்லது என்று சொல்லிக்கொண்டு, மீண்டும் ஒரு முறை இந்த ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தியதை வரவேற்கிறேன் என்று கூறி முடிக்கிறேன்.





MR. SPEAKER: The question is—

'That the Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

'That the Madras City Civil Court (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 13 of 1971) be passed.'

The motion was put and carried and the Bill was passed into law.

### (இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய திருவிழா விடுமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1971)

*மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய-திருவிழா விடுமுறை நாட்கள்) திருத்த சட்டமுன்வடிவு *(சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1971) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்னுரைக்க அனுமதி வேண்டுகிறேன்.

1958-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய-திருவிழா விடு
முறை நாட்கள்) சட்டத்தின் (தமிழ்நாட்டுச் சட்டம் 33/1958) 3-வது பிரிவின்
படி ஒரு தொழில் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தொழிலா
ளிக்கும் ஒவ்வோர் ஆண்டும், அதாவது ஜனவரி 26-ம் நாள், மே 1-ம் நாள்,
ஆகஸ்டு 15-ம் நாள், அக்டோபர் 2-ம் நாள் ஆகிய 4 தேசிய விடுமுறை நாட்
களும், தொழிலதிபரையும் தொழிலாளர்களையும் வைத்து ஆய்வாளரால் குறிப்
பிடப்படும் ஐந்து திருவிழா விடுமுறை நாட்களும் அனுமதிக்கப்பட வேண்டும்.
மேற் சொன்ன சட்டத்துன் 11-வது பிரிவின்படி தொழிலாளருக்கு வேறு எந்த
சட்டம், ஒப்பந்தம் பழக்க வழக்கங்கள் மூலமாக உரித்தான உரிமைகள்,
மற்றும் சலுகைகள் (அப்படிப்பட்ட உரிமைகள் அல்லது சலுகைகள்) மேற்
சொன்ன சட்டத்தின் கீழ் உள்ள உரிமைகள் அல்லது சலுகைகளைவிட சாதக
மாக இருப்பின், இந்தச் சட்டத்தில் உள்ள எதும், இச்சட்டம் அமுலுக்கு வந்த
நாள் முதற்கொண்டு மேற்படி தொழிலாளரை பாதிக்காது. எந்த ஒரு தொழில்
நிறுவனத்திலாவது, இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த நாளில் தொழிலாருக்கு
அளிக்கப்பட்ட திருவிழா விடுமுறை நாட்கள் ஐந்தினைவிட அதிகமாக
இருப்பின், தொழிலதிபர் 3-வது பிரிவின் வரம்புகளுக்குட்பட்டு, ஒரு திருவிழா
விடுமுறை நாளுக்கு ஈடாக தொழிலதிபரையும் தொழிலாளர்களையும் கலந்து
ஆய்வாளர் குறிப்பிடும் ஒரு விடுமுறை நாளை அந்த நிறுவனத்தைப் பொறுத்த
வரையில் குறைக்கலாம் என்று மேற்சொன்ன பிரிவின் வரம்பு நிபந்தனை வகை
செய்கிறது.

* 3—7—1971 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. என். வி. நடராசன்] [1971 ஜூலை 12

இந்த வரம்பு நிபந்தனை அக்டோபர் 2-ம் நாள் தேசிய விடுமுறையாக அறிவிக்கப்பட்டபொழுது தொழிலதிபர்கள் ஒரு திருவிழா விடுமுறை நாளைக் குறைக்க வகை செய்யுமாறு அமலாக்கப்பட்டது. ஆனால் தொழிலதிபர்கள் இந்த வரம்பு நிபந்தனையின் துணைகொண்டு மே 1-ம் நாளுக்கு ஈடாக மேலும் ஒரு விடுமுறை நாளைக் குறைப்பதாகத் தெரியவருகிறது. இது மே 1-ம் நாள் தேசிய விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டதின் அடிப்படை லட்சியத்திற்கு முரணானது.

ஆகவே மேற்சொன்ன சட்டத்தின் 11-வது பிரிவின் வரம்பு நிபந்தனையை நீக்கிவிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவைச் செயற்படுத்த வகை செய்வதே இம்மசோதாவின் நோக்கமாகும்.

1970-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் நாள் அல்லது அதற்குப்பின், எந்த ஒரு தொழிலதிபராவது மே 1-ம் நாளுக்கு ஈடாக ஒரு விடுமுறை நாளைக் குறைப்பது, செய்திறன் அறறுபோகும் என்று மசோதாவின் 3-வது பகுதி விசேட வழி வகை செய்கிறது. ஆனால் 1891-ம் ஆண்டு தமிழ்நாடு பொதுப்பகுதிகள் சட்டம் (தமிழ்நாட்டுச் சட்டம் 1/1891) 8-வது பிரிவு நடப்பில் இருப்பதால், சட்டத்தின் 11-வது பிரிவின் வரம்பு நிபந்தனையின் மூலம் அக்டோபர் 2-ம் நாளுக்கு ஈடாகக் குறைக்கப்பட்ட விடுமுறை நாள் மீண்டும் கொண்டு வரப்படமாட்டாது.

இந்தப் பிரேரணையை ஏற்குமாறு அவையினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, some time ago, when Thiru Vezahavendan was Minister, this May Day was declared as holiday. After that a number of representations were brought to our attention. Especially Parry & Company at Ranipet refused one day and then they allowed this May Day. I think they had brought down the number of holidays to 8 and this representation was passed on to the Government also. But subsequently the Government were not able to take any action, in spite of the fact that the Company was instructed to set right the anamoly.

Now I would like to know during the reply by the Minister whether this particular Act gives any powers. What exact rights or powers, if at all it gives to take action on any particular industrialist who will not stick to the statutory requirement? Supposing an industrialist does not stick to the provisions of the Act or if the provision is violated by any industrialist, what type of punishment he will be able to give, what exactly will be the power of the Government in this regard, in what manner he can punish erring industrialists and how exactly he can force the industrialist to give this one day extra? What are the exact powers? I will be very happy if the Hon. Minister gives an assurance that these are the exact powers, if he properly explains to us what exact rule or sub-rule that he is going to create under this Act to see that the particular provisions of the Act is fully enforced by all the companies and industrialists.



1971 ஜூலை 12]

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர், சார், இந்த ஃபெஸ்டிவல் ஹாலிடேஸ் அமெண்ட்மெண்ட் மசோதாவை எங்கள் கட்சியும், நான் சார்ந்திருக்கும் தொழில் சங்க ஸ்தாபனங்களும் வரவேற்கின்றன.

நான் ஏற்கனவே இம்மாதிரியான ஒரு தனியார் மசோதாவை சமர்ப்பித்திருக்கிறேன். அந்த மசோதாவின் அடிப்படையில்தான் இந்தத் திருத்தம் வந்திருக்கிறது என்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியான ஒன்று. பொதுவாக மே தினத்தை கட்டாய விடுமுறை தினமாக்க வேண்டும் என்ற கோரிக்கை, இந்தியா பூராவிலும் இருக்கும் தொழில் சங்கங்கள் எல்லாம் கோரிவந்திருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கங்கள் உட்பட கோரி வந்திருக்கின்றன. ஆனால், மத்திய சர்க்கார் இதுவரையிலும் மே தினத்தை கட்டாய விடுமுறையாக ஆக்க நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக, சில மாநிலங்கள் மட்டும் மே தினத்தை கட்டாய விடுமுறையாக்க நடவடிக்கை எடுத்து, அதற்கான சட்டம் இயற்றியிருக்கின்றன. அம்மாதிரியாக கேரளம், மேற்கு வங்கம், தமிழகம் போன்ற மாநிலங்களில் செய்திருக்கிறார்கள்.

1958-ம் வருஷத்தில், தமிழகத்தில் தொழிலாளிகளுக்குக் கட்டாயமாக விடுமுறை கொடுக்க வேண்டும், வருஷத்தில் லீவ் கொடுக்க வேண்டும், என்ற முறையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதுதான் சட்டம் எண் 33/1958. அதன் அடிப்படையில் மூன்று கட்டாய விடுமுறைகளும், அதாவது, ஜனவரி 26-ம் தேதி, ஆகஸ்ட் 15-ம் தேதி, அக்டோபர் 2-ம் தேதி, அதற்கு மேலாக, ஐந்து நாட்கள் தொழிலாளர்களும், நிர்வாகமும் சேர்ந்து நிச்சயிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அப்படி முடிவு செய்யப்பட்டதற்குப் பின்னும், ஐந்து தினங்கள் இம்மாதிரி இருக்க வேண்டும் என்று அந்தந்தத் தொழிற் சங்கங்களும் நிர்வாகமும் பேசிக்கொண்டு வந்தார்கள். பிறகு அரசு இந்த மூன்றாவது பிரிவில் சில மாறுதல்களை ஏற்படுத்தி, அதை மே தினமாக ஆக்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். மே தினம் ஆக்கலாம் என்று சொன்ன பிறகு, அதிகமாக விடுமுறை பெற்றிருக்கும் தொழிற்சாலை நிர்வாகஸ்தர்கள் மேற்கொண்டு கொடுத்த அரசு விடுமுறையை ஒரு தினத்தை, மே தினம் ஆக்கலாம் என்று செய்தார்கள்.

ஏதாவது ஒரு தொழிற் சங்கம் நடவடிக்கை எடுத்து அதன் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது, சட்டம் இயற்ற உதவியாக இருந்தது என்று சொன்னால், அந்தப் பெருமை இராணிப்பேட்டையில் இருக்கும் பாரி சிப்பந்திகள் சங்கத்திற்குச் சாரும். அந்த முறையில் திருத்தம் கொண்டு வரவேண்டும், உதவியாக இருக்க வேண்டும் என்று அரசை வேண்டிக் கொண்டு இருந்தார்கள். அரசு ஒருசமயம் இந்த கூட்டத் தொடரில் கொண்டு வருவார்களோ இல்லையோ, தனியார் மசோதா இருக்கிறது என்றாலும், தனியார் மசோதா வருவது, நிறைவேறுவது என்றால் அதற்கு அரசு சம்மதிக்க வேண்டும், அதுவும் இந்தத் தொடரில் முடியாது என்பதால், இதை அரசே இப்பொழுது முன்கூட்டியே கொண்டு வந்திருப்பது மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய ஒன்று.

இதில் இருக்கும் ஒரு சிறு ஊனத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே இருக்கக் கூடிய மூன்றாவது பிரிவில்,

" Every employee shall be allowed in each calendar year a holiday of one full day on the 26th of January, 15th of August, 2nd of October and 5 other holidays each of one whole day for such festivals as the Inspector may, in consultation with the employer and employees specify in respect of any industrial establishment ". என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால், மே தினம் இருக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது பிரிவிலே மூன்று கட்டாய விடு முறை தினங்களோடு, மே தினத்தையும் சேர்த்ததால்தான் நாளைக்கு தகராறு பண்ணாமல் இருக்க இடம் இருக்கும். அதைச் செய்து இருந்தால் நலமாக இருந்திருக்கும். இப்பொழுது திருத்தம் கொண்டு வராவிட்டாலும், இனி மேலாவது ஏற்கனவே இருக்கக் கூடிய விடுமுறைகளுக்கு உட்பட்டு, மே தினம் என்று இல்லாமல், அது நாலாவது விடு முறையாக கட்டாயம் நான்கு நாளாக அதில் ஒன்று என்று அறிவிக்க வேண்டும். உடனடியாகத் திருத்தம் கொண்டு வராவிட்டாலும் அதையும் செய்ய வேண்டும்.

கொண்டு வந்திருக்கும் 11-வது பிரிவு என்ன சொல்லுகிறது என்றால்:

Section 11, the Existing Section reads thus:

11. Rights and privileges under other laws, etc., not affected—Nothing contained in this Act shall affect any rights or privileges which any employee is entitled to, on the date on which this Act comes into force under any other law, contract, custom or usage, if such rights or privileges are more favourable to him than those to which he would be entitled under this Act:

Provided that if in any industrial establishment the number of holidays for festivals which any employee is entitled to, on the date on which this Act comes into force exceeds five the employer may subject to the provisions of section 3, curtail a holiday of one whole day for one such festival as the Inspector may, in consultation with the employer and the employees, specify in respect of the industrial establishment.

இந்த இரண்டாவது பகுதி இருக்கிறதே, இதைப் பார்க்கும்போது, முதலாளிகள், 'நாங்கள் ஏற்கனவே ஐந்து நாட்கள் விடுமுறை அனுமதித்துக் கொண்டிருக்கிறோம், இந்த ஐந்து நாட்கள் என்பதே அதிகமாக இருக்கின்றன, எனவே, அதில் ஒன்றாக மே தினத்தை வைத்துக்கொள்ளுங்கள், தனியாகக் கேட்பது நியாயமல்ல' என்று, இவர்கள், சட்ட நிபுணர்களை வைத்து ஆலோசனை செய்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அந்தச் சட்ட நிபுணர்கள் எல்லாம் மிகப் பெரிய சட்ட நிபுணர்கள். ஆனால் தொழிற் சங்கங்களுக்கு வரக்கூடிய சட்ட நிபுணர்கள் அவ்வளவு சிறந்தவர்கள் அல்லர். அந்தப் பெரிய நிறுவனங்களிலுள்ள சட்ட நிபுணர்கள், இது இப்படித்தான் என்று சொன்னால், இன்ஸ்பெக்டர்கள் ஒன்றும் செய்வதற்கில்லை. சாதாரணமாக நேர்மையாக நடக்கக்கூடிய எந்த முதலாளியும் கூட ஏற்கனவே கொடுத்து வருகின்ற விடுமுறையை குறைத்துக்கொள்ள முன்வர மாட்டார்கள். எந்த



தினத்தை விடுமுறையாக ஏற்றுக்கொள்ள முடியும் என்று பலவிடங்களில் அவர்கள் வாதித்தார்கள். பல இடங்களில் பேச்சுவார்த்தைகள் நடை பெற்றன. பலமான தொழிற் சங்கங்கள் இருக்கின்ற இடங்களிலெல்லாம் விடுமுறைகளோடும், தொழிற் சங்கங்கள் பலமில்லாத இடங்களிலெல்லாம் வெற்றிபெற வாய்ப்பில்லாமல் இருக்கின்ற நிலையும் இருக்கின்றன. ஆகவே, இந்தத் தீர்மானத்தின் மூலம் மே தினம் சட்டபூர்வமாக, சட்டரீதியாக, சம்பளத்துடன் அளிக்கப்பட வேண்டிய லீவாகிவிட்டது. ஏற்கனவே, மே தினம் விடுமுறை நாளாக அனுஷ்டிக்காமல் சம்பளம் அளிக்காமலேயே இருந்த நிறுவனங்களில் வேலை செய்தவர்களும், அவர்களுக்கு அந்த ஊதியம் கிடைக்கும்படிச் செய்வதும், இந்த நேரத்தில் நினைவில் வைக்க வேண்டிய ஒன்று என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மேதின உத்தரவை சர்ச்சைக்குரியதாக ஆக்காமல் தொழிலாளர்களுடைய உறுதியை நிலைநாட்டக்கூடியது என்பதால் மற்ற நண்பர்களும் பாராட்டுவார்கள் என்று கூறி, இதை வரவேற்று அமர்கின்றேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய ஆதரவைத் தெரிவித்ததற்கு, நான் அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, மே தினத் தத்துவத்தைத் தமிழ்நாட்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தாய்க் கழகமான சுயமரியாதை இயக்கம்தான் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நாளிலே மே தினம் கொண்டாடுவது என்பது இந்த நாட்டின் அரசினரால் அனுமதிக்கப்படாத ஒன்றாகயிருந்தது. மே நாளைக் கொண்டாடியவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டதைப் பலரும் அறிவர். அன்றையதினம் சுயமரியாதை இயக்கத் தந்தை பெரியார், சிந்தனைச்சிற்பி சிங்காரவேலு, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. போன்றவர்கள் எல்லாம் இந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்று போராடியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட இதற்கு உற்ற துணையாக இருந்து வந்தார். அப்படிப் பட்ட இந்த மே தினத்தைக் கொண்டாடுவதற்கு விடுமுறை அளிக்கின்ற சட்டம் இந்தப் பேரவையில் நிறைவேற்றப்படுகிறது என்றால், அது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்போது இருக்கின்ற விடுமுறைகளன்றி இதோடு கூட மே தினத்திற்கும் கூடுதலாக ஒரு நாள் விடுமுறையாகத் தொழிலாளர்களுக்கு விடப்படவிருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள், முதலாளிகளெல்லாம் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் என்ன செய்வது, என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கப் போகிறது என்று. நல்ல கேள்விதான். இந்தச் சட்டத் திருத்தம்படி எம்ப்ளாயில் பெடரேஷன் ஆப் சவுத் இண்டியா சேர்மன் திரு. எல். எல். லால் அவர்களும், ரெப்ரசெண்டேடிவ் ஆப் சேம்பர் ஆப் காமர்ஸ் திரு முத்தையா அவர்களும், முதலாளிகள் சார்பில் என்னை வந்து சந்தித்தார்கள். "இந்த விடுமுறையை விட்டிருக்கிறீர்களே, அதனால் தொழில் நிறுவனங்களிலெல்லாம் உற்பத்தி பாதிக்கப்படும்" என்று விவாதித்தார்கள். அவர்களுக்கு இந்த விடுமுறையின் தத்துவத்தையும், அரசினுடைய

புத்திசாலித்தனமான முதலாளியும் அப்படிப் பணிந்து ஏற்றுக்கொள்ள முன்வர மாட்டார்கள். இந்தப் புரோவிசோவை வைத்துக்கொண்டு துர்விபாக்யானம் பண்ணுவார்கள். எனவே, அப்படிப்பட்ட இந்த புரோவிசோவை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Deleting the proviso is a salutary provision in this Bill. அந்த முறையில் செய்யப்பட்டு, ஏற்கடவே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்காமலிருந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு, மூன்று தினங்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் கிடைக்குமாறு செய்தால், அவர்களுக்கு அது உண்மையிலேயே உற்சாகத்தைக் கொடுக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இந்த முக்கியத்வத்தை உணர்ந்து, தொழிலாளர்கள் அனுபவிக்க வேண்டிய வசதிகள், சலுகைகள் ஆகியவற்றைப் பெற்றுத் தர வேண்டும். அப்படிப்பட்ட உத்தரவை இந்த அரசு இட்டால் தொழிலாளர்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்று மீண்டுமொரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

The Bill further to amend the Tamil Nadu Industrial Establishment (National and Festival Holidays) Act, 1958 is a welcome measure and I fully snpport it.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களுடைய நீண்ட நெடுங்கால அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் இது அமைந்திருக்கிறது. மே தினத்தை விடுமுறையாகப் பிரகடனம் செய்ய, இதிலே எத்தனை சங்கடங்கள் இருந்தன என்பதை இந்த மன்றம் அறியும். உலகத் தொழிலாளர்கள் மத்தியில் மே தினம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதை இந்த மன்றம் நல்ல முறையில் அறியும். மே தினத்தை சட்டமாக்குவதற்கு அமெண்ட்மெண்ட் கொண்டுவரும்போது எத்தனையோ சங்கடங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நீக்குவது என்பது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். தொழிலாளர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய வேண்டுமென்ற முறையில் அந்த சங்கடங்களையெல்லாம் நிவர்த்தி செய்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். தொழிலாளர் பிரதிநிதிகளையெல்லாம் கூட்டி, எத்தெந்த முறையில் விடுமுறைகளையெல்லாம் அமைக்க வேண்டுமென்று இணக்கமான முடிவுகளைச் செய்தார்களானால், அது பல தகராறுகளையும் சிக்கல்களையும் தீர்க்கின்ற வகையில் இருக்கும் என்று நினைக்கிறேன். இந்தக் கொள்கைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கூறி, இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கின்றேன்.

* **திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற திருத்த மசோதாவை, என்னுடைய கட்சியும், என்னுடைய கட்சியைச் சார்ந்த தொழிற் சங்கங்களும் மிகவும் பாராட்டி ஆதரிக்கின்றன.

மே தினத்தை விடுமுறையாக விடவேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து அறிவித்தவுடனேயே, மாநிலத்திலுள்ள முதலாளிகளெல்லாம் அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று முழுமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஏற்கனவே உள்ள விடுமுறை நாட்களில் ஒரு நாளைக் குறைத்துக் கொண்டால்தான் மே



எண்ணத்தையும், பாட்டாளி மக்களுடைய எழுச்சி நாளான மே தினத்தின் முக்கியத்துவத்தையும் நான் எடுத்துச் சொல்லி, இந்த ஒரு நாள் விடுமுறை விடுவதால் உற்பத்தி குறைந்துவிடுமானால் மே தினம் விடுமுறை விடாத காரணத்தால் தொழிலாளர்கள் எழுச்சியடைந்து வேலை நிறுத்தங்கள் போன்றவற்றில் ஈடுபட்டால், அது சமுதாயத்திற்குப் பன்மடங்கு நட்டத்தை உண்டாக்காதா ? என்று கேட்டேன்.

அவர்கள் கடைசியாக ஒன்று கேட்டார்கள், "நம்முடைய இந்த விடுமுறைச் சட்டத்தை ஸ்டேட் லேபர் அட்வைசரி போர்டுக்கு அனுப்பி, அவர்களுடைய கருத்தைப் பெற்றிருக்கிறார்களா" என்று. ஏற்கெனவே ஒரு முறை அரசு அப்படித் தெரிவித்திருப்பதால் மீண்டும் இப்போது தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சுட்டிக்காட்டினேன். ஆனாலும், இந்த விவாதத்திற்குப் பிறகு, அவர்களும் திரு. முத்தையா அவர்களும், மேனேஜ்மெண்ட் சார்பிலே அரசின் எண்ணத்தை—சட்டத் திருத்தை—ஏற்றுக்கொள்வதாகக் கூறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதையும் மீறி, முதலாளிகள் இந்தச் சட்டத்தை மீறுவார்கள் என்று அரசு கருதவில்லை. தொழில் நிறுவன நிர்வாகிகள், தாங்கள் கொடுத்த வாக்குறுதியைக் கண்டிப்பாகக் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையில்தான் இருக்கிறோம். அதையும் யாராவது முதலாளிகள் மீறினால், முதன் முறையாக அவர்களுக்கு ரூ. 25 அபராதம் விதிப்பது என்றும், இரண்டாவது முறையும் மீறினால் ரூ. 250 அபராதம் விதிப்பது என்றும் இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

ஆதலால், இந்தச் சட்டத்தின் எந்த விதியையும் 'எந்த முதலாளியாக இருந்தாலும் மீற மாட்டார்கள் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. மீறுபவர்கள் மீது இந்தச் சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற உறுதியை நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கும், இந்த அவைக்கும் அறிவித்து, மே தின சட்டத் திருத்தத்தை ஆதரித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி, இதை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1971-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய-திருவிழா விடுமுறை நாட்கள்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை முன்வடிவு எண் 14/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2,. 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** "தமிழ்நாடு 1971-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய-திருவிழா விடுமுறை நாட்கள்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட முன்வடிவு எண் 14/1971) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஈ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு**
**(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1971)**

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே,* "தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

மதுவிலக்கை தேசியக் கொள்கையாக ஏற்றுக்கொண்டு அதை நாடு முழுவதும் செயற்படுத்த மத்திய அரசு முன்வரும் வரை, இம்மாநிலத்தில் மது விலக்குச் சட்டம் செயற்படுவதை 1971-ஆகஸ்டு 30-ஆம் நாள் தொடங்கி, நிறுத்தி வைக்க, அரசு முடிவு செய்துள்ளதை இம்மன்றம் அறியும். மது விலக்குச் சட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு 1896-ஆம் ஆண்டு அப்காரி சட்டம் இம்மாநிலத்தில் மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்படும். இச்சட்டம் ஏறத்தாழ நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், மைசூர், கேரளம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் நிலவி வரும் நிலைமையை அறிந்துகொண்ட பிறகு, இது குறித்து அடங்கல் சட்டம் ஒன்றை நாளடைவில் கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கிடையில் தமிழ்நாடு 1896 ஆம் ஆண்டு அப்காரி சட்டத்தை மேலும் செவ்வையான முறையில் செயற்படுத்துவதற்காக, அச்சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது.

கருப்பஞ் சாற்றுக் கசண்டு தயாரிப்பு முதலியவற்றைக் கட்டுப்படுத்துவதற்காகவும், முறைப்படுத்துவதற்காகவும், மேற்படி சட்டத்தின் 16 (ஏ) என்ற புதிய பிரிவைச் சேர்த்துக்கொள்ள இம்மசோதாவின் 5-வது பகுதி வகை செய்கிறது.

அன்னியநாட்டு மதுவகைகளின் மீது விற்பனை வரி விதிப்பதற்கு தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் 21-எ பிரிவு வகை செய்கிறது. தமிழ்நாடு 1896-ஆம் ஆண்டு அப்காரி சட்டத்தில் இத்தகைய வரி விதிப்பிற்கு எந்த விதமான விதித்துறையும் இல்லை. அத்தகைய மதுவகைகளின் விலையில் அரசு அவ்வப்போது அறிவிக்கும் வகையில் ரூபாய்க்கு 75 காசுக்கு மேற்படாத வீதத்தில் அன்னிய மதுவகை விற்பனை விலை மீது விற்பனைவரி விதிக்க இம் மசோதவின் 7-வது பகுதி வகை செய்கிறது.

மதுவகைகளை அருந்துவதற்கான நேரங்கள், இடங்கள் ஆகியவற்றை முறைப்படுத்தவும் குறிப்பிட்ட வரையறைகளை நிறைவு செய்யும் கட்டடங்களில் மட்டும் மதுவகைகள் விற்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கவும் அத்தகைய கட்டடங்களில் ஏற்படுத்தப்படவேண்டிய வசதிகளைக் குறிப்பிட்டும் விதிகள் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்க மேற்படி சட்டத்தின் 29-வது பிரிவில் திட்ட வட்டமான விதிதுறை இயற்றக் கருதியுள்ளது.

---

* 1971-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



விற்பனை செய்யப்படும் மதுவகைகள் அல்லது வெறியூட்டும் மருந்து வகைகள் தரம், அவற்றில் உள்ள சாராயத்தின் சதவீதம் ஆகியவற்றைப் பரிசிலனை செய்யவும் அவ்விதிகள் வகை செய்யலாம். உரிமம் பெற்றவர் சாராயம் அல்லது வெறியூட்டும் மருந்தை இருபத்தோரு வயதுக்குட்பட்டவராகத் தெரிகிற எவருக்கேனும் விற்றால் அல்லது கொடுத்தால் அதனைக் குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுக்க மேற்படி சட்டத்தின் 55-வது பிரிவைத் திருத்த கருதப் பட்டுள்ளது.

தமிழ்நாடு அப்காரி சட்டத்தின் விதித்துறைகளை 1971 ஆகஸ்ட் 30-ம் நாள் முதற்கொண்டு செயற்படுத்த அரசு செய்துள்ள முடிவைச் செயலுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், 1971 ஆகஸ்ட் 30-ம் நாளுக்கு முன்னர் செய்யப் பட்ட செயல்கள் அனைத்தையும் செல்திறனுள்ளவையாக்க 12-வது பகுதி வகை செய்கிறது.

இம்மசோதாவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இப்பேரவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU J. JAMES: Sir, I move the following amendment:—

"That the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971) be circulated to elicit public opinion thereof."

THIRU N. DENNIS: Sir, I second it.

DR. H. V. HANDE: Sir, at the very outset I propose to oppose this Bill with all the emphasis at my command on two distinct grounds, firstly on the ground of morality and secondly on the ground of constitutionality. As regards morality, even during the general discussion on the Budget, I had put forth several points. The Hon. Chief Minister in his reply tried to meet a few of my points, but most of the points which I had then raised were not properly met by him.

Sir, it is a well-known fact that the prohibition policy has been going on in a fairly good manner in our State. Even after 1967 during the period of revered Anna it was going on very well. When several incidents like deaths due to the drinking of varnish had been brought to the notice of the revered Anna and a suggestion was made that the prohibition policy should be reviewed, the revered Anna said: "I am not going to revoke the Prohibition Act and I am not going to bring the Abkari Act and that I would try to plug the loopholes and not completely do away with the Act". He had made that point very clear.

But the present Hon. Chief Minister in his Budget speech said that he is going to suspend the Prohibition Act till such time as the Central Government are going to make good the loss sustained by it. This aspect of the matter was gone into by the revered Anna also and when a suggestion was made that the Prohibition

Act should be suspended for two months, he said that he would not do it for the reason that even within those two months, havoc might take place. Now we are suspending for a longer period.

We are reviving the Abkari Act. My submission is that the Government are not clear in their minds. If the Government say that the Central Government must make good the loss, I can understand that there is some force in their argument. But they not only say that the Central Government must make good the loss immediately but they are also going to suspend the Prohibition Act.

In this connection, when the Hon. Chief Minister quoted Tek Chand's Report in support of his policy, I was painfully amused. Day before yesterday I met Mr. Tek Chand and asked his views about the suspension of the Prohibition Act. He said that in his report he had mentioned certain difficulties in the working of the Prohibition Act and that he was not quoted fully in the proper context. Sir, I will just read a small passage in the report of Mr. Tek Chand.

"It is not deniable that there is going to be more thrift and more deposit in the banks with lessening expenditure on drink, apart from other advantages". Shri Bharthan Kumarappa, who has had an occasion to study the problem at close quarters in U.S.A. during the days of prohibition and also of Repeal, has made certain observations.

Mr. Tek Chand again goes on to observe :

"The State is also an ultimate gainer because the industrial effect of prohibition will be highly advantageous to production. The foreseeable advantages are that the disciplinary problem of dealing with inebriates among the workers, will disappear and discharges for drunkenness of drink involved crime, will be less. There will be a full force at work ever disappear. Efficiency is bound to increase when the workers are removed from temptations with its moralising influence . . . .".

Thiru Tek Chand sums up thus :

"We are, therefore, commending for consideration among others, the following seven suggestions.

(i) The legal solution—he has explained in a particular chapter;

(ii) The containment of medicinal and toilet preparations;

(iii) The control of molasses and other raw materials;

(iv) Mass education and systematic publicity;

(v) Effective enforcement through improved administration;



(vi) The economic containment of illicit distillation; and

(vii) The use of modern scientific appliances for detection of inebriety."

These are the recommendations he gave. Therefore, I do not fully appreciate why the Hon. Chief Minister should have quoted Tek Chand for his convenience.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்திற்கு நான் தேக் சந்த் கமிட்டி பரிந்துரைகளைப் பயன் படுத்திக்கொண்டதாக திரு. ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். தேக் சந்த் கமிட்டி போடப்பட்டதே மதுவிலக்குத் திட்டத்தை இந்தியா முழுவதிலும் எவ்வாறு அமுல்படுத்துவது என்பதைப் பரிசீலனை செய்வதற்கே. அந்தக் கமிட்டியின் கடைசி முடிவு மதுவிலக்கை எடுத்துவிடவேண்டும் என்பது அல்ல என்பதை நான் அன்றைக்கே குறிப்பிட்டிருக்கிறேன். அகில இந்தியாவுக்கும் மதுவிலக்கை எப்படி அமல்படுத்தலாம் என்பதற்கு தேக் சந்த் கமிட்டி போடப்பட்ட நேரத்திலேயேதான் ஏற்கனவே மதுவிலக்கு அமுலில் இருந்த மாட்டியம் போன்ற மாநிலங்களில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று அன்றைக்கு நான் சொன்னேனே தவிர அந்த ஆலோசனைக் கமிட்டி எந்தப் புனித நோக்கத்திற்காகப் போடப்பட்டதோ அதை மறுக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* இதுபற்றி நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் ஏற்கனவே விவாதித்திருக்கிறோம். இன்றைக்கு இந்த மசோதாவைத் தவிர வேறு இரண்டு மசோதாக்களும் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் தங்கள் கருத்தை இந்த மசோதாவையொட்டி சுருக்கமாக 5 நிமிடங்களுக்குள் சொல்லவேண்டும். தலைவர்கள் வேண்டுமானால் பத்து நிமிடங்கள் எடுத்துக்கொள்ளட்டும்.

DR. H. V. HANDE : There are certain new aspects. This is an important Bill and this is a Bill on a major policy. The usual convention is—Hon. Mr. Speaker knows—during the discussion of such important Bills some sort of freedom of time is allowed. I am not going to waste a single minute of the time of the House. I will be brief. I would not repeat the points which I have made during the Budget speech.

My only submission is this. I do not want to go into details. The Hon. Chief Minister quoted that aspect of Tek Chand's Report which was mentioning about the lapses of prohibition policy. Only in connection with that I want to make a mention. Then again I want to remind the Chief Minister that even Anna had read Tek Chand's Report and he was aware of Tek Chand's Report. He had gone through it and read it. That is the most important point.

The Hon. Food Minister while intervening said that when he made the statement it was 1968 and during 1970 things have changed, which means that deviation from the policy was going on even at that stage. What things have changed between 1968 and

1970, during that short period, is one more point that I want the Chief Minister to answer. As far as that particular aspect is concerned, my only request is, has he come to the stage of saying that such a golden policy, such an important fine policy of Anna which was very categorically mentioned in this House on several occasions it was something like a sacred testament and will and the D.M.K. party has come to that stage of asking the General Council to review such a policy? I want the Chief Minister to answer. Because of paucity of time I do not want to go into details. That is one of the points which the Hon. Chief Minister will have to consider. Why was it that the party came to that level when they had to refer such a golden view of Anna to the General Council? Why was it that they lost faith on that particular policy at that particular stage? That is one of the points I want him to answer.

Therefore, I would definitely appreciate if this Bill is brought here after a categorical statement of the Hon. Chief Minister as to why he has decided to go astray or to go away from the path of Anna. If he is able to say that and then if he is able to bring this Bill, I can understand.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம். மாண்புமிகு திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழுவின் கருத்து என்ன என்று கேட்கிறார்களா? அல்லது இந்த அரசாங்கத்தின் கருத்து இதுபற்றி என்ன என்று கேட்கிறார்களா? திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழுவின் கருத்து என்ன என்றால் அதுபற்றி விவாதிப்பதற்கு இது தகுந்த இடம் இல்லை. அரசாங்கத்தின் கருத்து என்ன என்றால் அதைப்பற்றி வேண்டுமானால் இங்கே தெரிவித்துக்கொள்ள ஆட்சேபனை இல்லை.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இது தகுதியுள்ள சபை இல்லை என்று சொல்வது சரியல்ல. வேண்டுமானால் உரிமையில்லை என்று சொல்லலாம்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : This is not the fit House for discussion on that subject.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It cannot be said that this is not the fit House. You can say, it is not right to say in this House . . .

THE HON. THIRU P. U. SHANMUGAM : Both are equally the same.

DR. H. V. HANDE : The Hon. Chief Minister has brought this Bill to this House and he has said that he is pursuing the path of Anna in the manner of adopting democratic method because he has left it to the General Council. The Chief Minister here is the official Chief Minister and I am not referring to the





Chief Minister as a party head. Officially the Hon. Chief Minister, distinguished Chief Minister made a categorical policy statement. I am only answering to that statement. After that explanation my distinguished friend, the Food Minister, will have no further difficulties.

I am now coming to the Constitutional propriety. There has been a very serious Constitutional impropriety in bringing this Bill. This is a very serious matter to which I would request the Hon. Law Minister to give careful consideration. There is not a single instance in any part of the world where a repealed Act was revived without any statutory authority. There are some distinguished lawyers. I am not a lawyer. There are several Acts which have been on the Statute Book, but they have been defunct. The Madras Prohibition Act clearly mentions that this Act has been repealed. I shall read :

Section 2 clearly says :

"From the date on which the provisions of this Act other than sections 1, 3 and 6 come into force in any local area, the enactments mentioned in the Schedule I shall cease to be in force in such area to the extent specified in the fourth column thereof :

Provided that the State Government may, by notification, declare that the provisions of this Act other than sections 1, 3 and 6 shall cease to be in force in any local area on such dates as may be specified in the notification and thereupon the enactments mentioned in the Schedule I with any subsequent statutory modifications thereof shall revive and come into force in such area with effect on and from such date."

The provision is very clear. This old Abkari Act has been totally repealed. Then again, I shall read :

| Year. | Number | Short title or subject. Acts of the Governor of Fort St. George in Council. | Extent of repeal |
|---|---|---|---|
| 1886 | I | The Madras Abkari Act, 1886. | The whole. |
| 1905 | I | The Madras Abkari (Amendment) Act, 1905. | The whole. |
| 1913 | I | The Madras Abkari (Amendment) Act. 1913. | The whole. |
| 1915 | I | The Madras Abkari (Amendment) Act, 1915. | The whole. |

[Mr. Deputy Speaker in the Chair]

So, the extent of repeal is total. It has been totally repealed from the Statute Book. It is a defunct dead Act. That is very clear.

Section 2 of the Prohibition Act of 1937 repealed certain provisions of the original Abkari Act and therefore the Abkari Act is dead and defunct. So, the Government should either repeal those sections of the Prohibition Act or revive the Abkari Act by a new Act.

The Statement of Objects and Reasons given by the Hon. Chief Minister says that the Abkari Act was enacted a century ago and that the Government propose to bring forward comprehensive legislation in due course after ascertaining the position in the

[Dr. H. V. Hande] [1971 ஜூலை 12

States of Andhra Pradesh, Mysore, Kerala and Pondicherry. The Abkari Act is not a Central Act and it is a State Act and the Abkari Act as enacted in the year 1886 was not in force in the States referred to by the Hon. Chief Minister and therefore there is no meaning in ascertaining the position. The Pondicherry State never had an Act on the model of the Abkari Act.

If the Government felt that the Abkari Act enacted in the year 1886 was not suited to the present century and a comprehensive legislation was essential, there is no need to revive the Abkari Act in haste at present. A comprehensive legislation might have been brought in by the Government after a careful study of the modern conditions prevailing in Tamil Nadu.

Finally I must say that the urgeny for revival of the old Abkari Act also needs explanation.

Also under Section 2 of the Bill, amendment is sought for, for inserting a new sub-section 10-A to section 3 of the old Act. By this amendment, 'Arrack' has been sought to be defined. A close reading of the definition indicates that all liquor other than foreign liquor and Indian-made foreign spirits is to be produced and supplied by the State Government. What exactly the Government propose to do and what is the purpose for this new type of definition?

Then under the old Abkari Act, there is provision for appointing a separate Commissioner for administering the Act and that he need not be under the control of the Board of Revenue. There is already a proposal to abolish the Board of Revenue. Therefore, there must be a specific amendment to the old Act appointing a separate Commissioner to administer the Act. I once again say that the Abkari Act is dead and that a comprehensive legislation should be brought forward by the Government.

*திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்காரி (திருத்த) சட்ட முன்வடிவு பேரவையின்முன் அரசின் சார்பாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நாங்கள் மதுவிலக்கை ரத்து செய்யவில்லை, ஒத்தித்தான் வைத்திருக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல, மதுவிலக்கை ரத்து செய்தமாதிரிதான் இப்போது திருத்தம் வந்திருக்கிறது. 'அப்காரி ஆக்ட் ஈஸ் எ டெட் ஆக்ட்'. அது ஏற்கெனவே புதைக்கப்பட்டு விட்டது. புதைக்கப்பட்ட சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருவது ஏன்? அதற்கு உயிர் கொடுத்த பின் திருத்தம் கொண்டு வந்தால் நல்லது. சட்டமே ரத்து செய்ததற்குப் பின்னர் இதைத் தி ுத்தப் போகிறேன், This is an Amendment of the Abkari Act என்கிறார்கள். இது சட்ட ரீதியாக, நியாயமாக இருக்குமா என்ற கேள்விக்கு உரியதாக இருக்கிறது. தமிழகம் வேதனைப்படக்கூடிய நாள். தமிழ்நாட்டுக்கென்று ஒரு பண்பாடு உள்ளது. அந்தப் பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும். அந்தப் பண்பாட்டைக் காப்பாற்றப் போகிறோம் என்று சொல்லிக்கொள்ள காம்ப் ரஹென்சிவ் ஆக்ட் கொண்டு வரலாமா? ஒரு நூற்றாண்டு கழிந்துவிட்டது. அதைப்



1971 ஜூலை 12] [திருமதி த. ந. அனந்தநாயகி]

பாதுகாக்கப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு திருத்தச் சட்டம் கொண்டுவருவது ஏன்? அப்படி என்ன அவசரம்? அப்படி ஏன் அவசரம் அவசரமாக துரிதமாக சட்டத்தைக் கொண்டு வந்துவிட வேண்டும். ஆர அமர ஆலோசித்துப் பார்த்து, ஷரத்துக்களையெல்லாம் போட்டு கொண்டு வந்தால் என்ன?

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'வெந்து வேதனையோடு செய்கிறேன்' என்று சொன்னாரே, அதை இப்படி ஏன் அவசரம் அவசரமாகச் செய்ய வேண்டும்? 1886-ம் ஆண்டு இருந்த நிலைமையை மாற்றி 1971-ல் அரசாங்கம் இதைக் கொண்டுவருகிறது. இதை இன்னும் இரண்டு மாதம் தள்ளி வைத்தால் என்ன? கெட்ட நாள் தள்ளிப் போகட்டுமே. கள்ளுக்கடைகளைத் திறந்து, அரசாங்கத்தினுடைய பொருள் வருவாயை உயர்த்திவிடலாம் என்ற நோக்கத்திலேதான் அரசாங்கம் இருப்பதுபோல் தெரிகிறது. பொருள் சேர்க்க வேண்டுமென்ற நோக்கத்திலேதான் இது கொண்டு வரப்படுகிறது. பக்கத்தில் உள்ள மாநிலங்களையெல்லாம் பார்த்து, பின்னர் மெதுவாகக் கொண்டு வந்திருக்கலாம். ஷரத்துக்களிலே எல்லாம் சிலவற்றைப் பார்க்கும்போது ஒன்றுமே புரியவில்லை.

The expression 'arrack' is defined thus—'Arrack' includes all liquor produced or manufactured in India and supplied by the State Government . . .'

ஆகஸ்டு மாத இறுதியில் அரசாங்கமே மொத்த வியாபாரியாக மாறப் போகிறதா? அல்லது அரசாங்கமே உற்பத்தியைச் செய்யப் போகிறார்களா? சாராய உற்பத்தியில் அரசாங்கம் போய் இறங்க வேண்டுமா? இது அவசியமா? அரசாங்கத்திற்கு எவ்வளவோ நல்ல பணிகள் இருக்கும்போது சாராயத் தொழிலில் அவசரம் ஏன் காட்ட வேண்டும்? அதையும் ஏலத்திற்கு விட்டுப் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள்.

அடுத்தபடியாக ஃபாரின் லிக்கர் எதற்கு? வெளிநாட்டு மதுவைத்தான் குடிக்க வேண்டுமா? குடிப்பதே தவறு. அப்படிக் குடிப்பது என்றாலும் உள்நாட்டு மதுவைக் குடிக்கலாம் அல்லவா? ஃபாரின் மதுவை அனுமதித்து விட்டு, அதிலே 75 பைசா வரி வேறு போடப்படுகிறது. ஆகவே வெளிநாட்டு மதுவை அனுமதிக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே பழைய காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பெர்மிட் கொடுத்தவர்களுக்கெல்லாம் வெளிநாட்டு மதுவுக்குத்தான் பெர்மிட் கொடுக்கப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படியிருந்தால் தயவுசெய்து நீங்கள் திருத்திக்கொள்ளுங்கள். குடிப்பதே தவறு. அப்படிக் குடிப்பது என்றாலும், இந்த நாட்டில் உற்பத்தியாவதைக் குடிப்பதை விட்டுவிட்டு, வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாவதையா குடிக்க வேண்டும்? அதற்கு வரி போடுகிறோம் என்று சொல்வது எல்லாம் மாரல் பாயின்ட் ஆஃப் வ்யூவிலே சரியாக இருக்காது.

அடுத்தபடியாக மொலாஸஸ் டிஸ்ட்ரிபியூஷன் பற்றியது. இப்போது பல வகையிலே இதைப் பிரயோகம் செய்கிறார்கள். விவசாயத்திற்கு, மாட்டுத் தீவனத்திற்கு என்று பல வகைகளில் இது பயன்படுகிறது.

Then it is stated that the status and the previous experience and the financial status should be taken into account. There may be an agriculturist with a little of finance.

இது யாருடைய பிரயோசனத்திற்குப் பயன்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். விவசாயிகளுக்கு மாட்டுத் தீவனத்திற்காக மொலாஸஸ் பயன்படும். பின்னர்தான் மற்றவற்றைப் பற்றி யோசிக்க வேண்டும். கிளாஸ் 8-ல்

'After clause (b), the following clauses shall be inserted, namely :—

"(bb) Regulating the hours and places of Consumption of liquor . . . .'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ரொம்பவும் முக்கியமானது. அதற்குமுன் நடக்கும் வேறு செயல்களைத் தடுக்க வேண்டும். நீங்கள் எப்படியோ கடைகளைத் திறக்கப் போகிறீர்கள். நீங்கள் 184 பேர்கள் இருக்கிறீர்கள். மாலை 6 மணிக்குமேல் எந்தக் கடையிலும் விற்கக்கூடாது என்று சொல்லிவிட வேண்டும். அப்படியில்லாவிட்டால் 6 மணிக்குமேல் பெண்கள் தெருவிலே நடக்க முடியாதபடி போய்விடும். இப்பொழுது பெண்கள் வேலைசெய்து வீடு திரும்ப 7 அல்லது 8 மணிகூட ஆகிறது. விற்பனை முறைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். இது மிகமிக முக்கியமானது.

இன்னும் சில மாநிலங்களிலே கடையிலே குடிக்கக்கூடாது, வீட்டுக்குக் கொண்டுபோய்க் குடிக்கலாம் என்று வைத்திருக்கிறார்கள். அப்படியாவது கட்டுத்திட்டம் செய்யுங்கள். கடையிலே குடித்துவிட்டு பிரயாணிகளையும் பெண்களையும் துன்புறுத்தாமல் வீட்டிலாவது (மணியடிக்கப்பட்டது)

I am just explaining the Act. We are passing a legislation affecting crores of people. The law-makers must give thought to it. வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போய் குடித்துக்கொள்ளலாம் என்றாவது செய்யுங்கள். அப்படிச் செய்யவில்லையென்றால் வெளியிலே குடித்துவிட்டு வெறிச் செயல்கள் புரிவார்கள். அப்படிச் செய்கிறவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும். அவர்களுக்கு இந்தத் தண்டனை அந்தத் தண்டனை அல்ல, கடுமையான தண்டனையாகக் கொடுக்கவேண்டும். ஒரு தரம் போடுகிற தண்டனையில் அடுத்த தரம் அவர்கள் குடித்துவிட்டு வெளியே வரக்கூடாத நிலைமையில் இருக்கவேண்டும்.

வீட்டிலே குடிக்கலாம் என்று வைத்தாலும் வீட்டிலேயுள்ள பெண்களையும் குழந்தைகளையும் அடிக்கின்ற நிலைமை ஏற்படும். இதற்கும் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும். ஏனென்றால் இது சமுதாயத்தினுடைய அடித்தளத்தையே வெட்டிவிடக்கூடிய பிரச்னை. இதை வெறும் பணப் பிரச்னையாகக் கருதாமல் சமுதாயப் பிரச்னையாகக் கருதி ரெகுலேஷன்ஸ், தண்டனை இவையெல்லாம் போடுகின்றபொழுது அருவருப்பான ஆர்ப்பாட்டங்கள், வெறிச் செயல்கள், பெண்கள் தாக்கப்படுதல் இவற்றையெல்லாம் நிச்சயமாக கட்டுப்படுத்தக்கூடிய வகையில் இந்த அரசாங்கம் செயல்படவேண்டும்.





வருகின்ற பணத்தை மட்டும் குறிக்கோளாக கொண்டுவிடாமல் ஒரு சமுதாயத்தின் பிரச்னையாகக் கருதி இதிலே அக்கறை காட்டவேண்டும். எந்த அளவுக்கு இதைச் சமுதாயத்தின் பிரச்னையாகக் கருதுகின்றோமோ அந்த அளவுக்குத்தான் பலன் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் இதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கைவிட்டால் மகிழ்ச்சி படைவேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்,

* திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் ஹாண்டே அவர்கள் பேசுகின்ற நேரத்திலே இந்தச் சட்டத்தைப்பற்றி அண்ணா அவர்கள் சொல்லிய வார்த்தைகளை மீறி இன்றைய முதல்வர் மாண்புமிகு திரு. கருணாநிதி அவர்கள் செல்கிறார்கள், செல்கிறார்கள் என்பதை வலியுறுத்திப் பேசினார்கள். ஒரு கட்சி எடுக்கின்ற முடிவுகளைத் தனித்தனியாக விமர்சனம் செய்கின்ற நேரத்தில் உங்கள் கட்சி எடுத்த முடிவை இப்படி விமர்சனம் செய்கிறீர்களே என்றால் எங்களுடைய கட்சி சுதந்திரக் கட்சி, எங்களுடைய கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் சுதந்திரமாகப் பேசிக்கொண்டிருக்கலாம் என்று நினைக்கின்ற அளவிலே உருவாக்கப்பட்டதல்ல முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணா அவர்கள் பாதையை மீறி நம்முடைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் செல்கிறார்கள் என்று சொல்வதன்மூலம் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களுக்கும் ஏதோ வித்தியாசம் கற்பிப்பதுபோன்று அவர்கள் பேசுவது சரியல்ல.

முதல்வர் கருணாநிதி அவர்கள் செய்கிறார்கள் என்றால் அது எங்களுடைய கட்சி செய்த முடிவையொட்டித்தான் செய்கிறார்கள். உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர். மற்றைய கட்சிகளைப் போன்று ஏக தலைவர் அல்ல. கழகத்தைப் பொறுத்தவரையிலும் சட்ட மன்ற கட்சியைப் பொறுத்த வரையிலும் இந்த மதுவிலக்கை ரத்துச் செய்யவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்ட வேளையிலே நாங்கள் அத்தனை பேர்களும் புனராலோசனை செய்வதைத் தவிர வேறுவழியில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். அந்த முடிவைத்தான் முதல்வர் அவர்கள் சட்டமாகக் கொண்டுவருகிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இப்பொழுது மட்டும்தான் மதுவிலக்கைப் பற்றிப் பேசுகிறோம் என்பதல்ல. எங்களுடைய கட்சி விவகாரம் என்று சொன்னாலும்கூட நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்திலே நாங்கள் பேசினோம். பேசியது மட்டுமல்ல. உதாரணத்திற்குச் சொல்கிறேன், டாக்டர் சுசீலா நய்யார் அவர்கள் இங்கே வந்த நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களோடு நானும் இருந்தேன். மதுவிலக்குப் பற்றி அவர்களிடத்திலே பேசிய நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். நாங்கள் மட்டும்தான் தனியாக நின்று கொண்டு இருக்கிறோம். மற்ற மாநிலங்கள் ரத்து செய்துகொண்டே இருக்கின்றன. எல்லா மாநிலங்களும் மதுவிலக்கை ரத்து செய்துகொண்டே இருக்கின்ற நேரத்திலே நாங்கள் மட்டும் தனியாக நின்று கொண்டிருக்கிறோம். இதனால் எவ்வளவோ சங்கடங்கள் ஏற்படுகின்றன. இங்கேயிருக்கின்றவர்கள் பக்கத்து மாநிலங்களுக்குச் செல்கிறார்கள். மதுவிலக்கை அமல்படுத்துவது

போலீசாருக்குப் பெரிய வேலையாகப் போய்விட்டது. மத்திய சர்க்கார் இதற்காக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும். மதுவிலக்குப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அதைத்தான் நம்முடைய முதல்வர் அவர்கள் "கேள்விக் குறி", "கேள்விக் குறி" என்று சொன்னார்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் அவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதைத்தான் நாங்கள் நினைக்கிறோம். நாங்கள் என்ன நினைக்கிறோமோ அதைத்தான் அவர்கள் நினைக்கிறார்கள். மற்ற கட்சிகளைப்போல் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக நினைப்பதல்ல எங்கள் கழகம். . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது அந்த விவாதத்திற்கு எல்லாம் போகவேண்டாம், பில்லைப்பற்றிப் பேசுங்கள் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள் என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** அவர்கள் பேசியதற்குப் பதில் சொல்ல வேண்டாமா? நம்முடைய சகோதரிகூட வெட்கப்படவேண்டிய நாள், வேதனைப்பட வேண்டிய நாள் என்றெல்லாம் சொன்னார்கள். இந்த வெட்கமும், வேதனையும் எப்பொழுதோ வந்திருக்கவேண்டும். மதுவிலக்குச் சட்டம் ஓட்டையோடு கொண்டுவந்த நேரத்திலே பணக்காரர்கள் லைசென்ஸ் வாங்கிக் குடிக்கலாம், பெர்மிட் வாங்கிக் குடிக்கலாம், ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலேயே லைசென்ஸ் பெற்றுக் குடிக்கலாம் என்று கொண்டு வந்த நேரத்திலேயே வெட்கம் மட்டுமல்ல, வேதனை மட்டுமல்ல, முட்டிமோதி அழுதிருக்கவேண்டும். சட்டத்தை மீறி ஃபாரின் விஸ்கி சாப்பிடலாம், சட்டத்தை மீறி ஃபாரின் ஒயின் சாப்பிடலாம், சட்டத்தை மீறி பிராந்தி சாப்பிடலாம் என்ற அளவுக்குச் சலுகைகள் கொடுத்து அப்படி ஓட்டையோடு கொண்டு வரப்பட்ட மதுவிலக்குச் சட்டம் இன்றைக்கு அந்த ஓட்டை பெரிதாகி இருபது ஆண்டுக் காலத்திலே மதுவிலக்கு அமல் நடத்தப்பட முடியாத அளவுக்கு தமிழ்நாட்டிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் மதுவிலக்கை உள்ள சுத்தியோடு கொண்டுவரவில்லை என்பதுதான். முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே எல்லோரும் குடிக்கவேண்டும். குடித்துவிட்டு கூத்தாடவேண்டுமென்பதல்ல. அத்தனை பேர்களும் எதிர்க்கிறோம் ஆனாலும் நிலைமை அப்படிப் போய் விட்டது.

சட்டத்திலே நாங்கள் போட்டு இருக்கிற விதிமுறைகளைப் பார்த்தாலே தெரியும். ஷரத்து 8-ல் சப்-செக்ஷன் இரண்டிலே
" regulating the hours and places of consumption of liquor "
என்று போடப்பட்டிருக்கிறது. இதனுடைய நோக்கம் என்ன? நேரம் குடிக்கின்ற அளவு இவற்றிற்காகக்கூட விதிமுறைகள் இருக்கவேண்டுமென்பது தான். இப்படியெல்லாம் நாங்கள் விதிமுறைகள் கொண்டுவருவதிலிருந்து எங்களுடைய நோக்கத்தை நீங்கள் புரிந்துகொள்ளலாம். அப்படி நாங்கள் இதைக் கொண்டுவருவதிலேயே நோக்கமுடையவர்களாக இருந்தால் எந்த நேரத்திலே குடிக்கலாம் என்று போடாமல் எப்பொழுதும் குடிக்கலாம் என்று போட்டிருக்கலாம், எனவே அந்த எண்ணம் எங்களுக்கு இல்லை என்று புரிந்து கொள்ளலாம், அதனால்தான் சில விதிமுறைகளோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இதிலே யாரும் எங்களைச் சந்தேகப்பட்டால்



அந்தச் சந்தேகம் அவர்களோடு இருக்கவேண்டும். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் மதுவிலக்கை ரத்துசெய்வதை மிக மிக வருத்தத்தோடுதான் கொண்டுவருகிறோம்.

அது மட்டுமல்லாமல் இருபத்தோரு வயதிற்குக் கீழே உள்ளவர்கள் செக்ஷன் 9-லே போட்டிருப்பதன்படி இதிலே வரக்கூடாது என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். (dd) sells or gives any liquor or intoxicating drug to anyperson apparently under twenty-one yeras of age; or என்று இவ்வளவு தெளிவாக விதிகள் எல்லாம் இதிலே சேர்க்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

மதுவிலக்கை ரத்து செய்தால் அதனால் தீமைகள் ஏற்படும் என்பதையும் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தீமைகள் இன்றையதினம் இருக்கிறதா இல்லையா என்பதுதான் கேள்வி. சகோதரி அவர்கள் சொன்னார்கள், இப்படிச் செய்தால் குடித்துவிட்டு வீட்டிலே பெண்டுபிள்ளைகளை அடிப்பார்கள் என்று. இன்றையதினம் அது நடைபெறவில்லையா என்று கேட்கிறேன். இதே சூழ்நிலை குடிசைவாழ். பகுதிகளிலே—போலீஸாரும் அங்கேதான் செல்கிறார்கள், பங்களாக்கள் பக்கம் செல்வதில்லை, காரணம் அவர்கள் லைசென்ஸ் வைத்துக் கொண்டு குடிக்கிறார்கள், அதோடு கட்சியின் பெயரால் அவரை எனக்குத் தெரியும், இவரை எனக்குத் தெரியும் என்று சொல்லிவிடுகிறார்கள்—எனவே இளிச்சவாயன் குடிசையிலே வாழ்கின்றவன்தான், அவன்தான் அவதிப்படுகிறான். எனவே புகையாக ஒரு எண்ணம் வைத்துக்கொண்டு செயல்படுவதை விட தீர ஆலோசித்துச் செயல்படுகின்ற முறையிலேதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்றது.

இப்படிக் கொண்டுவருவதற்கு அரசியல் சட்ட உரிமைகள் உண்டா என்பதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

." Consequent on the suspension of prohibition laws, the Tamil Nadu Abkari Act, 1886, will he revived from that date. " என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அந்த அளவிலேதான் இந்தத் திருத்தங்கள் வந்திருக்கின்றன. அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாகவோ முரணாகவோ இது கொண்டுவரப்படவில்லை.

எனவே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் வேறுவிதமாகத் திசை திருப்பாமல்—நம்முடைய பணம் மற்ற மாநிலங்களுக்குப் போகிறது—பணத்திற்குப் பணமும் போகிறது; மானமும் போகிறது, மரியாதையும் போகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்க்கவேண்டுமென்ற முறையிலேதான் செய்கிறோம்.

ஆனாலும் கூட அந்தத் தீமைகள் பரவாமல் இருக்க என்ன காரியங்களைச் செய்யலாமோ, பிரசாரங்களைச் செய்யலாமோ அவற்றை எல்லாம் செய்யலாம். அதிலே எங்களுடைய நேசக் கட்சியான முஸ்லீம் லீக் கட்சி கலந்து கொள்ளலாம். சுதந்திரக் கட்சி கூட வரலாம், காங்கிரஸ் கட்சி கூட சேர்ந்து கொள்ளலாம். குடியின் தீமைகளைப் பற்றிப் பிரசாரம் செய்யலாமோ தவிர,

இதைக் கட்சிப் பிரச்சினையாகப் போட்டு அரசியல் கட்சிகள் குழப்பிக் கொண்டிருப்பதால் எந்தவிதமான பயனும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : It has been put only in the statement of objects and reasons. It has not been brought into the Act.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : போன்புள்ள அவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி முன்பே என்னால் பேசப்பட்டு விட்டது. நான் அதை அதிகம் மீண்டும் வலியுறுத்த விரும்பவில்லை. நான் அன்று பேசிய கருத்திலிருந்து மாறவும் இல்லை. இருந்தாலும் இரண்டொரு விஷயத்தைக் கடைசியாக நான் குறிப்பிட விரும்புகிறேன்.

எனது மரியாதைக்குரிய சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது பழையதை மறந்து பேசுகிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். இந்தத் திட்டம் அமலாவதற்கு முன்பே வெள்ளைக்காரன் ஆட்சி செய்த காலத்திலேயே அவர்களுடைய காங்கிரஸ், எதிர்ப்பு காங்கிரஸ் இரண்டும் ஒன்றாக இருந்த காலத்திலேயே போராட்டங்கள் நடந்திருக்கின்றன. அந்தப் போராட்டம் கள்ளுக்கடை மறியல் போராட்டம் என்ற பெயரால் நடந்திருக்கிறது. அம்மையார் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது நான் அதிலே போய்ப் பங்கு பெற்றிருக்கிறேன். எங்கள் கட்சிக்கு இவர்கள் திருத்தம் கொடுக்கிறார்கள். இதைப்பற்றிப் பேசும்போது ராஜகோபாலாச்சாரியார் பற்றி ஏன் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிடமாட்டேன் என்கிறார் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. மது வேண்டாமென்று அண்ணா சொன்னார் என்றுதான் பேசுகிறாரே தவிர துணிந்து அவர்கள் எங்கள் தலைவர் ராஜகோபாலாச்சாரியார் இன்ன காலத்தில் இதனை இப்படி எதிர்த்திருக்கிறார் என்று கூறலாமே. அவருடைய தலைமையில் நடந்த போராட்டத்தில் நான் பங்கு பெற்றிருக்கிறேன். இது நல்லது என்று யாரும் பேசவில்லை. இங்கு பேசியவர்களுக்கும் அந்தத் துணிவு வரவில்லை. அந்தத் துணிவு யாருக்கும் பிறக்காது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு நியதியை வகுத்துச் சென்ற வள்ளுவப் பெருமகன் ஒரு அத்தியாயத்தையே இதைப் பற்றிக் கூற எடுத்துக் கொண்டிருக்கிறான். அந்தக் காலத்திலிருந்து இன்று வரை எந்த மனிதனும் மது வேண்டுமென்று சொன்னதில்லை என்ற உண்மையை அவை ஏற்றுக் கொள்ளுமென்று கருதுகிறேன். மகாத்மா காந்தி அவர்களால் தொடங்கப் பட்ட போராட்டம் ராஜகோபாலாச்சாரியாரால் அமல் நடத்தப்பட்டு, அண்ணாவால் பாதுகாக்கப்பட்டு மதிப்பிற்குரிய மு. கருணாநிதி அவர்களால் அது தோல்வியடைந்து விட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நமது மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் அண்ணாவைக் குறிப்பிட்டு அதோடு நமது முதல்வர் கலைஞர் அவர்களையும் தொடர்புபடுத்தி அண்ணா அவர்களால் வெற்றிபெறச் செய்ததை இவர் தோல்வியடையச் செய்து விட்டார் என்று சொல்வது முரண்



பாட்டின் முரணாக உள்ளது. மதுவிலக்குத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள், எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : நான் இவர் தோல்வியடையச் செய்து விட்டார் என்று கூறவில்லை; தோல்வியடைந்து விட்டது என்பதை ஒப்புக் கொண்டார் என்றுதான் கூறினேன்.

கடைகள் எத்தனை, யாருக்கு லைசென்ஸ் கொடுப்பது என்றெல்லாம் வந்ததற்குப் பிறகும் நான் மதுவிலக்குத் திட்டத்தை எடுக்க வேண்டாமென்று சொல்லுகிறேன் என்றால் மனித உணர்ச்சியோடு சொல்கிறேன். மதுவிலக்குத் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று முதல்வர் அவர்கள் சொன்னதை இன்றும் ஒத்தி வைக்கலாம்; ஒத்தி வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மதுவை மறந்திருக்கும் சமுதாயத்திற்கு மறுபடியும் நினைவு படுத்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது. 21 வயதுக்கு மேல் உள்ள இளைஞர்களுக்குத் தான் மது கொடுக்கப்படும் என்றால் அந்த அளவுகோலை வைத்துக் கொண்டா பிராந்தியும், சாராயமும் கொடுக்கப் போகிறார்கள்? போனவுடன் ஊற்றிக் கொடுப்பான். இது சட்டத்திலுள்ள கண்துடைப்பு என்று சொல்லலாமே தவிர உண்மையிலேயே விதிவிலக்குச் செய்யப்பட்டதாகாது என்பது எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும்.

மதிப்பிற்குரிய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒன்று சொன்னார்கள். உள்நாட்டுச் சரக்கை குடிக்கலாம்; உள்நாட்டுச் சரக்காக இருந்தாலும் திருட்டுச் சரக்காக இருந்தாலும் . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் உள்நாட்டுச் சரக்கைக் குடிக்கலாம் என்று சொல்லவில்லை. எதையுமே குடிக்கக்கூடாது என்றுதான் சொன்னேன். பாரின் லிக்கரை வன்மையாகக் கண்டித்தேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : தயவு செய்து எங்கள் கோரிக்கையை நீங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் கட்சி நீங்கள் கொண்டுவந்திருக்கும் திருத்த மசோதாவை எதிர்க்கிறது என்பதை மனப்பூர்வமாகத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது நான் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பற்றி மக்கள் கருத்தை அறிந்து கொள்வதற்கு விடவேண்டுமென்பதுதான் நான் கொடுத்திருக்கும் திருத்தமாகும்.

நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் சமர்ப்பித்தபோது மதுவிலக்குத் திட்டம் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார்கள். அவ்வாறு அறிவித்ததை ஒட்டி இந்த நாட்டில் ஒரு எழுச்சியும், புரட்சியும் எழுந்து கொண்டிருக்கிறது என்பதை அரசாங்கம் நன்கு அறியும். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் இதற்கு எதிர்ப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். பொதுமக்கள் இதை எதிர்த்து கிளர்ச்சி செய்து கொண்டிருக்

திருர்கள். 'ஆல் பார்ட்டி மீட்டிங்' நடந்து இம்மாதம் 15-ம் தேதி சர்வ கட்சியினரும் கலெக்டர் அலுவலகத்தின்முன் உண்ணாவிரதம் இருக்க முடிவு எடுத்திருப்பதாக அறிகிறோம். இந்த அளவு பொதுமக்களிடையில் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் பொதுமக்கள் கருத்தை அறிவது . .

திரு. துரைமுருகன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசுகிறபோது இதை எதிர்த்து சர்வ கட்சிப் போராட்டம் கலெக்டர் அலுவலகத்தின் முன்னால் நடத்தப் போவதாக அறிவித்தார்கள். எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகம் அதிலே பங்கு பெறவில்லை. சர்வ கட்சி என்று சொல்லும்போது பெரும்பான்மை பெற்று சட்டசபையில் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சேர்த்துச் சொல்லுவதாகும். ஆகவே, அங்கத்தினர் அவர்கள் அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு கட்சிக்கு மேல் போனால் அது சர்வ கட்சிதான். நீங்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்திருந்தாலும் அங்கத்தினர் அவர்கள் வேதனைப்படுவதாக இருந்தால் திருத்திக் கொள்கிறேன். சட்டமன்றத்தில் இந்த மசோதா வந்திருக்கிறது. சட்டமன்றத்தில் இருக்கும் அங்கத்தினர்கள் தவிர பொதுமக்கள், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், சுதந்திராக் கட்சித் தலைவர்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், முஸ்லிம் லீக் கட்சித் தலைவர்கள் ஆகியோர் வெளியில் இருந்து எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். நம்முடைய தேசப்பிதா காந்தியடிகளின் வாரிசுகள் இருக்கும் பல்வேறு மாநிலங்களில் மதுவிலக்குத் திட்டம் நடைமுறையில் இல்லையென்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

ஆனால், நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள அத்தனை தலைவர்களும்—அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் கூறியது போல் இன்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை அதில் இல்லை என்று சொன்னாலும் கூட—திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பற்ற தலைவராக இருந்த மறைந்த முதல்வர் திரு. அண்ணாதுரை அவர்கள் கூட இந்தக் கொள்கையில் மிகவும் திடமாக இருந்தார்கள். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் எல்லா அரசியல் கட்சிகளும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை மதுவிலக்கிற்கு ஆதரவாக இல்லை என்று சொல்கிறார்கள். இந்தியாவிலுள்ள பல மாநிலங்களில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டபோது, எங்கு பார்த்தாலும் மதுபானங்கள் தாராளமாக வரலாம் என்ற நிலைமை ஏற்பட்டபோது அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார்களே பெருந் தலைவர் காமராஜ் அவர்கள், அவர்களின் தலைமையும் அதை ஆதரிக்கவில்லையா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : அதைத்தான் விளக்கிக் கொண்டு வருகிறேன். தேசப்பிதா காந்தி அடிகள் இந்தக் கொள்கையை, மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் அண்ணலின் வாரிசாக



இருக்கிறவர்கள் பல மாநிலங்களில் அதை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை, அதற்கு அந்த மாநிலங்களில் உள்ள தலைவர்கள் காரணமாக இருக்கலாம். ஆனால் நமது தமிழகத்தைப் பொறுத்தமட்டில் நாங்கள் மகாத்மா காந்தி அடிகளின் வாரிசாகவே இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் திரு. அண்ணாதுரை அவர்களை அவர்களது பெரும் தலைவராக ஒத்துக் கொள்கிறார்கள். அவர்களது கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கையாக ஒத்துக்கொண்டிருக்கிறது. அதேபோல் சுதந்திராக் கட்சியின் பெரும் தலைவராக ராஜாஜி அவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் தலைமையை, அவர்களது கொள்கைகளை சுதந்திராக் கட்சியினர் ஒத்துக்கொள்கிறார்கள். அனைவரும் அதை ஆதரிக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காங்கிரஸ் இரண்டாகப் பிரிவதற்கு முன்பு ஒன்றாக இருந்த நேரத்தில் இந்தியாவில் பல மாநிலங்களில் மதுவிலக்கு தளர்த்தப்பட்டபோது அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் யாராவது அந்தக் கொள்கையைக் கண்டித்ததுண்டா ? அந்த அந்த மாநிலத்திலுள்ள காந்தி வழி வந்த காங்கிரஸ் கட்சிகள் கண்டனம் தெரிவித்ததுண்டா?

திரு. ஜே. ஜேம்ஸ் : அதைத்தான் நான் சொல்கிறேன். மற்ற மாநிலங்களைத் தனியாக எடுக்கவேண்டும், தமிழகத்தைத் தனியாக எடுக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக காந்தி அடிகள் இந்தக் கொள்கையில் வெகு திடமாக இருந்தார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழகத்தைத் தனியாக எடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அது இந்திய ஒருமைப்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டது (ஆரவாரம்).

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்திய ஒருமைப்பாட்டிற்கு இந்த மதுவிலக்குக் கொள்கை மட்டும்தானா அல்லது வேறு ஏதாவது காரியங்கள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவைகள் எல்லாம் ராஜமன்னார் அறிக்கை விவாதத்தின்போது விரிவாக ஆராயப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தமிழகத்திற்கு என்று சிறந்த தனிப் பண்பாடு உண்டு என்பதை முதல் அமைச்சர் அவர்கள் மறந்து விடுகிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உண்டு. சிலபேர்களைப் பார்க்கும்போது சந்தேகம் ஏற்படுகிறது (ஆரவாரம்).

திரு. ஜே. ஜேம்ஸ் : தமிழகத்தைப் பொறுத்தவரையில் முதல் அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை இங்கு சமர்ப்பித்தபோது வேதனையோடு நான் கூறுகிறேன் என்று கூறினார்கள். இந்த மதுவிலக்குத் திட்டத்தில் எல்லாக் கட்சிகளும் நம்பிக்கை வைத்திருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் ஏதோ சில காரணங்களைக் கூறி இந்த மசோதாவை இங்கு கொண்டு வந்திருக்

கிறார்கள். இந்த மாநில மக்கள் இதற்கு ஆதரவு கொடுக்கிறார்களா இல்லையா என்பதுபற்றி பொது மக்கள் கருத்தை அறிய வேண்டிய அத்தியாவசியம் இருக்கிறது எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் நாம் தனியாக இருக்கிறோம், மற்ற மாநிலங்களில் எல்லாம் இத்திட்டத்தை கைவிட்டு விட்டார்கள், நாம் மட்டும் தனியாக இருப்பதா என்று கூறினார்கள். நாம் பல்வேறு நேரங்களில் தனியாக நிற்கிறோம். மொழிப் பிரச்னையில் தனியாக இருக்கிறோம். பக்கத்து மாநிலங்கள் ஒரு முறையில் இருக்க நம் மாநிலம் சில கொள்கைகளில் தனியாக இருக்கிறது. அதேபோல் இந்த மதுவிலக்குக் கொள்கை நல்லதா இல்லையா என்று சிந்திக்கவேண்டும்.

நம் மாநிலத்திலுள்ள மாதர் குலம் இதை எதிர்க்கிறது. பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்க்கின்றன. நம் முதல் அமைச்சர் அவர்களும் மனவேதனையோடுதான் இத்திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்நிலையில் நாம் இது பற்றிப் பொது மக்களின் கருத்தை அறிவதற்கான அத்தியாவசியம் இருக்கிறது.

கடைசியாக, ஒன்றை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். இந்த மதுவிலக்குத் திட்டம் நம் மாநிலத்தில் அமுலுக்கு வந்தபோது தலைவர் ராஜாஜி அவர்கள் ஒரு ஜில்லாவிற்குத்தான் இதைக் கொண்டு வந்ததாக நான் அறிகிறேன். அதேபோல் இந்தத் திட்டத்தை மாற்றவேண்டுமென்று சொன்னாலும் முதன் முதலாக ஒரு ஜில்லாவில் மட்டும் கொண்டு வந்து அந்த ஜில்லாவில் எந்தமுறையில் இது செயல்படுகிறது, அதனால் மக்களுக்கு நன்மை ஏற்படுகிறதா என்று ஆராய்ந்து பார்த்து மற்ற மாவட்டங்களுக்கு அதை விஸ்தரிப்பதற்கான என் ஆலோசனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி நான் சொல்வதாலும் இத்திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதாலும் இதற்கு நான் ஆதரவாக இருக்கிறேன் என்று அர்த்தம் இல்லை. இந்த மசோதாவிற்கு எங்கள் கட்சியோ அல்லது நானோ ஆதரவாக இல்லை என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. நா. வீராசாமி:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது என் கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மன்றத்தில் பலவிதமான கருத்துக்கள் சொல்லப்பட்டன. உள்ளபடியே நாட்டில் ஒரு சட்டம் இருந்தால் அது மதிக்கப்பட வேண்டும். மதுவிலக்குச் சட்டம் என்ற பெயரால் நாட்டில் அது தோல்வி கண்டு ஏழைகள் துன்புறுத்தப்பட்டு வந்ததை நாம் பார்த்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல. பொய் வழக்குகள் போடப்பட்டதைப் பார்த்திருக்கிறோம். குடிசைகளில் இரவு நேரத்தில் சென்று போலீஸ்காரர்கள் பெண்களை மிரட்டியிருப்பதையும் பார்த்திருக்கிறோம். ஆகவே இதற்கெல்லாம் ஒரு முற்றுக் கட்டை போடுவதைப்போல் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது நல்லது என்ற என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்தச் சட்டம் வந்ததன் மூலம், மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் திட்டத்தட்ட தமிழ்நாட்டில் ஒரு 10 லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று எண்ணுகிற நேரத்தில், இந்தச் சட்டத்தின் மூலம் ஏழைகள் வாழவைக்கப்படுவார்களானால் இதை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் பல நன்மைகள் இருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய திருமதி ஆனந்த நாயகி அவர்கள் சொன்னார்கள், வெளிநாட்டுச் சாக்குகள் எல்லாம் இங்கே வரக்கூடாது என்று. குடிப்பது தவறு என்று சொல்லிவிட்டபின்னர் அது உள்நாட்டுச் சரக்காக இருந்தால் என்ன, வெளிநாட்டுச் சரக்காக இருந்தால் என்ன? வெளிநாட்டுப் பொருள்கள் எதை எதையோ நாம் வாங்குகிறோம். வெளிநாட்டிலிருந்து ஒரு வைர நெக்லஸ் வந்தால் அம்மையார் அவர்கள் அதை வேண்டாம் என்று சொல்வார்களா? வெளிநாட்டுப் பொருள்கள்.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI:** It is a personal insinuation against a member to say whether she will refuse to buy a foreign necklace. I said 'shall not drink' and much more the foreign liquor. To say it does not matter whether it is indigenous liquor or foreign liquor, is twisting the Member's speech. It is not correct.

**திரு. நா. வீராசாமி:** எவர்சில்வர் இருக்கிறது. அதுகூட வெளிநாட்டில் இருந்துதான் கொட்டர வருகிறது. பொதுவாக வெளிநாட்டுப் பொருள்கள் என்றால் அதை எல்லோருமே விரும்பி வாங்குகிறார்கள். பொதுவாக வெளிநாட்டுப் பொருள் என்றால் அதற்குக் கொஞ்சம் அதிகக் கிராக்கி இருக்கிறது. அதை விரும்பி வாங்குகிறார்கள் என்று சொல்லத்தான் அதைச் சொன்னேன். அப்படி வெளிநாட்டுப் பொருள்களை விரும்பி வாங்கும்போது இதற்கு மட்டும் ஏன் தடை போடவேண்டும் என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும்.

அரசாங்கம் கள்ளுக்கடை நடத்தப்போகிறார்களா என்று கேட்டார்கள். நம் தமிழக அரசு செய்தால் தவறு என்பதுபோல் சொல்கிறார்கள். தனியார் நடத்தி கொள்ளை லாபம் அடிப்பதைவிட அரசாங்கமே நடத்தலாம், அதில் தவறு இல்லை. ஆந்திராவில் நடத்துகிறார்கள். ஆந்திராவில் இரண்டு மாவட்டங்களில் இரண்டு தொழிற்சாலைகள் ஆந்திரா அரசாங்கமே நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். அப்படியிருக்க நம் அரசு அப்படி நடத்தினால் தவறு இல்லை.

ஆறு மணிக்கு மேல் மூடிவிடவேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நம் விதிமுறைகளில் இதைப் பற்றி, எப்போது குடிக்கலாம் என்பதைப்பற்றியெல்லாம் தெளிவாகச் சொல்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"Regulating the hours and places of consumption of liquor"

என்று ஒரு விதிகூட போட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. குடிப்பது தப்பு என்றதொரு அபிப்பிராயத்தை நாம் இன்றையதினம் நாட்டில் உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம். மொரப்பின் அவர்கள்கூட கேட்டார்கள். குடிப்பது தப்பு என்பதை ஒத்துக்கொள்கிறோமா

இல்லை, யாராவது இது நியாயம் என்று ஒத்துக்கொள்கிறார்களா, அப்படி ஒப்புக்கொள்வதற்கு யாரும் முன்வருவதில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நேற்றைய தினம் இந்து பத்திரிகையில் ஒரு ஆர்டிகிள் வந்திருக்கிறது.

" Alcohol a good servant, but very bad master ".

என்ற ஆர்டிகிள் இந்து பத்திரிகையில் வந்திருக்கிறது. அதை எழுதியவர் [illegible] பற்றி விவரம் தெரியாதவர் என்றால் பரவாயில்லை. அதை எழுதியவர் [illegible] டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன்.

Dr. S. Ramakrishnan : The author is Reader in Bio-chemistry, Jawaharlal Nehru's Institute of Post Graduate Medical Education and Research, Pondicherry.

படித்தவர். அதுவும் ஜவஹர்லால் அவர்களின் பேரிலுள்ள கல்லூரியில் பணியாற்றக்கூடியவர். பாண்டிச்சேரியில் இருக்கக் கூடியவர். அவர் சொல்கிறார்.

" When blood alcohol is about .05 per cent he is dashing and debonair. "

* * * * * *

அதை இத்தோடு விட்டு விடுகிறேன்.

வள்ளுவர் புலால் புசிக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். பொய் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். ஒரு நாளைக்கு எத்தனை பொய்கள் சொல்கிறோம்? வள்ளுவர் சொன்னார், காந்தி சொன்னார், அண்ணா சொன்னார் என்று சுட்டிக் காட்டுகிறபோது, வள்ளுவர் சொன்னதை முழுக்க முழுக்க நாம் கடைப்பிடிக்கிறோமா என்றால் இல்லை. காந்தி சொல்லியதைக் கடைபிடிக்க முடியவில்லை. அப்படி இருக்கும்போது, இந்த அரசாங்கம் ஏதோ ஒன்றைச் செய்வதற்கு இப்படிச் சொல்லவேண்டுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மொத்தத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம் இது ஏழைகளை நிச்சயமாகப் பாதிக்காது. ஏழைகள் மகிழ்ச்சியாக இருப்பார்கள், அவர்கள் இனி தொல்லை அனுபவிக்க மாட்டார்கள், அவர்களுக்கு அந்தத் தொல்லைகளிலிருந்து விடுதலை பெற இந்த மசோதா உதவி புரியும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நா. வீராசாமி அவர்கள் ஆங்கிலத்தில் சொன்ன கருத்தின் பின்பகுதியை சபையின் நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். பத்திரிகைகள் அதைப் பிரசுரிக்க வேண்டாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், மதுவிலக்கு சம்பந்தமாக என்னுடைய கட்சியின் கருத்தைப் பற்றி பொது விவாதத்தின் போதே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



இந்த மதுவிலக்கு ரத்து செய்யப்படாமல் இருந்தாலும், ஏறத்தாழ ரத்து செய்யப்பட்டமாதிரி நிலைமை ஆகிவிட்டது. எது நடைமுறையில் இருக்கிறதோ அதைச் சட்டபூர்வமாக அமுலுக்குக் கொண்டு வருவது நல்லது என்று கருதுகிறேன். இதனால் செலவும் குறைகிறது. வருமானமும் பெருகுகிறது. இது ஏழைகளுக்கு உதவி செய்ய முன்வரும் ஒரு நற்பணி என்றே கருதுகிறேன்.

இந்த மதுவிலக்கு அமுலாகக்கூடிய நேரத்தில் எந்த அளவுக்கு லஞ்சம், ஊழல், கொடுமை நிலவி வந்தது என்பதைப் பற்றி எல்லாம் நான் விவரமாகச் சொன்னேன். மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சாதாரண தொழிலாளர்கள் தான், குறிப்பாக, நகர சுத்தித் தொழிலாளர்கள். நகரத்திலுள்ள, கிராமத்திலுள்ள நகர சுத்தித் தொழிலாளர்களைத்தான் இரவு நேரத்தில் போலீஸ்காரர்கள் தொந்தரவு செய்வார்கள், கைது செய்வார்கள். இந்த பீனல் சட்டம் சம்பந்தமாக மான்யம் வரும்போது சொல்லலாம் என்று இருந்தேன். இப்போது அதிகமாக கேஸ்கள் வருவது, மதுவிலக்கு கேஸ்கள்தான். ஆகவே, இந்த சப்-மேஜிஸ்டிரேட்டுகளுக்கு வேறு விதமாக வேலை கொடுத்து, அவர்களை நேரடியாக டிஸ்டிரிக்ட் முன்சிப்பாக வேலை கொடுத்து, இந்த சப் மேஜிஸ்டிரேட்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று ஆலோசனை கொடுக்க விரும்புகிறேன்.

இந்த நிலையைப் பொறுத்தவரையில், இதைக் கொள்கை ரீதியாகப் பேசுகிற போது சில பேர் கூறியதைக் கேட்டு எனக்கு ஒன்று தோன்றியது. பொதுவாக நாட்டிலே எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல தலைவர்கள் இருக்கிறார்கள். இதைவிட தனிப்பட்ட முறையில் பெயர் பெற்று மறைந்த பெரிய மகான்கள் இருக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் சொல்லிய கருத்துக்களை, அந்த மகான்கள் கூறிய காரியங்களை எல்லாம் உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அரசாங்கத்தை நடத்துவது என்று வருகிறபோது, பலவிதமான நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் காரியங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. அதிலே ஒன்று தான் மதுவிலக்கு ரத்து செய்யப்படுகிற விஷயம் ஆகும்.

இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு காந்தி மகான் சொன்னார்கள், கதர் உடுத்தாதவர்கள் இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபடுபவர்கள் அல்ல என்று சொன்னார்கள். ஹிந்தி படித்தால்தான், இந்தியா விடுதலை அடைய முடியும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட எண்ணங்கள் எல்லாம் இன்று எந்த அளவுக்கு மாறி இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம்.

இப்படிப் பொதுவாக தலைவர்கள் சொன்னார்கள் என்று கூறும்போது, நான் அவர்களுக்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். அந்தந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் அந்தக் கட்சியின் தலைவர்கள் என்ன சொன்னார்களோ, அதை ஏற்றுக்கொண்டு அதன்படி செயல்படவேண்டும். மற்றக் கட்சித் தலைவர்கள் என்ன சொன்னார்கள், என்ன காரியம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள், செய்யவேண்டாம் என்று சொன்னார்கள் என்பதெல்லாம் அவரவர் கட்சிக்காரர்கள் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். அதை மற்றவர்கள் எடுத்துக் கொண்டு சொல்வது, மற்ற கட்சிகளிடையே பாகுபாட்டை ஏற்படுத்தும். ஆகவே, இந்தச் சட்டமன்றத்தில் அந்தந்த நேரத்தில் கருத்து

தெரிவிக்கிறபோது அவரவர்களுடைய கட்சியின் நிலை என்ன [illegible] செய்வதோடு நிறுத்திக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால் [illegible] என்று எனக்குத் தெரிந்தவரையில் இந்த ஆலோசனையை வைக்கிறேன்.

இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் ஒரு வளர்ச்சியான முறையில் புதிதாக ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறோம் என்று இந்த மசோதாவைச் சமர்ப்பிக்கும்போது நமது சட்ட அமைச்சர் கூறினார்கள். எனக்குத் தெரிந்தவரையில் இரு முக்கியமான விஷயங்களைக் கூற விரும்புகிறேன். சில திருத்தங்கள்கூட இதற்காகக் கொடுத்து இருக்கிறேன்.

இப்போது இந்த மொலாசஸ் எந்த முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது? அந்த மொலாசஸ் பெரும் பணக்காரர்கள், ஏற்கெனவே தொழில் நடத்தி அனுபவப்பட்டவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை அவர்கள் குறைந்த விலைக்கு வாங்கி, அதாவது ரூ. 100—200-க்கு வாங்கி, அதை அதிகலாபம் வைத்து விற்கிறார்கள். அந்த முறை மாற்றப்பட வேண்டும். திருச்சியில் எனக்கு ஒரு பணக்காரரைத் தெரியும். ஒரு ரூபாய்க்கு வாங்கி ரூ. 100-க்கு விற்கிறார். அந்த அளவிற்கு விலக்கு தந்து இருக்கிறோம். அந்த வசதியைக் குறைக்க நாம் இங்கே போட்டு இருக்கும் அமைப்பு

'the status and the previous experience of the applicant and the interests of the public generally'

என்ற அடிப்படை, மீண்டும் தகுதி படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள், சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் வசதி கொடுப்பதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இந்த மொலாசஸ் பொறுத்தவரையில் இந்த சர்க்கரை அல்லது கருப்பட்டி உற்பத்தி செய்வதில் ஏற்படக்கூடிய கழிவு நீரைப் பலமுறை உபயோகத்திற்குக் கொடுக்கிற அளவுக்கு லைசென்ஸ் முறை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வசதிக்காரர்கள் என்ற முறையில் கொடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விதிகள் நிர்ணயிக்கப்படும்போது, எந்தெந்த நேரத்தில் கடைகள் திறந்து வைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மேல் நாட்டில்கூட சில கடைகள் இருக்கின்றன. அதாவது, சில கடைகள் இரவு 10 மணி வரையில் கூடத் திறந்து இருக்கும். சில கடைகள் இரவு 8 மணி வரைதான் திறந்திருக்கும். சில கடைகள் மாலை 6 மணி வரைதான் திறந்திருக்கும். கோளாவைப் பார்த்தால் இங்கே டீக் கடை இருப்பது மாதிரி அங்கே சாராயக் கடைகள் இருக்கின்றன. இன்றைக்கு கள் குடிக்கக் கூடாது என்று சொல்பவர்கள், காப்பி, டீ குடிக்கக்கூடாது என்று வந்தால் அதை நான் வரவேற்கிறேன். உண்மையிலேயே பால் சாப்பிடவேண்டும், வேறு சாப்பிடக்கூடாது. ஏனென்றால் மற்ற எல்லாவற்றிலும் போதை தரும் சக்தி சிறிதாவது இருக்கிறது.

கள் சாப்பிடுவது அளவோடு சாப்பிடவேண்டுமென்று சொல்கிறார்கள். அதிகமாகக் குடிக்கக்கூடாது என்று மேல் நாடுகளில்கூட பிரசாரம் செய்கிறார்கள். சாப்பிடுகிறவர்கள் குடித்து விட்டு ஆடுவது இல்லை. மேல் நாடுகளில், சாராயத்தை பாட்டில்களில் போட்டு விற்க வேண்டுமென்று சொல்லலாம். ஒரு பாட்டில் 8 அணா 9 அணா என்று விற்கிறார்கள். அதைப்போல் இங்கே செய்யவேண்டும். நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள்



எங்காவது பார்ட்டிக்கு சென்றால், அங்கே மது தரப்பட்டால் அதை வேண்டாம் என்று சொல்கிறார்கள். அப்போது அவர்கள் ஏதோ ஒரு புதிய வம்சத்தைச் சார்ந்தவர்களைப் பார்ப்பதுபோல் பார்க்கிறார்கள். தண்ணீர் வேண்டுமென்று கேட்டால்கூட மதுபானம் வேண்டுமென்று சொல்வதைப் போல் நினைக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், எப்படி டீக்கடை வைப்பதற்கு லைசென்சு வழங்குகின்றோமோ அந்த மாதிரி இந்தச் சாராயக் கடைகள் வைப்பதற்கும் லைசென்சு முறை இருக்க வேண்டும். எந்த நேரத்திலிருந்து எந்த நேரம் வரை குடிக்கலாம் என்று நிர்ணயம் செய்யவேண்டும். மிக அதிகமாகக் குடித்து விட்டு வெளியே போகிறவர்களைத் தண்டிக்காமல், அவர்களை காலை வரை போலீஸ் ஸ்டேஷனில் வைத்து இருந்து விட்டு வெளியே வீட்டிற்கு அனுப்பி விடலாம். இந்த முறைதான் மற்ற நாடுகளில் கையாளுகிறார்கள். உடனே தண்டனை கொடுக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை.

மதுவிலக்கு அமுலில் இருக்கிற இந்த நேரத்தில் எத்தனை பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் குடித்தார்கள் என்ற காரணத்திற்காகச் சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்? லைசென்சு இல்லாதவர்கள்கூட, வசதி படைத்தவர்கள் குடிக்கிறார்கள். ஆனால் அவர்களை எல்லாம் சிறைக்கு அனுப்புவது இல்லை. ஏழைகள்தான் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். இந்த மோசமான நிலை மாறவேண்டும்.

இன்னொரு ஆலோசனையையும் கொடுக்க விரும்புகிறேன். இந்த மசோதாவில் அதைக் காணோம். ஆனால் பத்திரிகைகளில் ஒரு செய்தி பார்த்தேன். பனை மரங்களுக்கும், தென்னை மரங்களுக்கும் வரி போடப் போவதாக, 'ட்ரீ டாக்ஸ்' போடப்போவதாக ஒரு செய்தி வந்திருந்தது. அது ஏற்கனவே இருந்தால்கூட ரத்து செய்யவேண்டும். ஒரு காலத்தில் பனை மரத்திற்கும், தென்னை மரத்திற்கும் வரி கூடாது என்று இயக்கம் நடந்து பலரும் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த மாதிரி கள்ளுக் கடை வருகிறது என்றதும், தென்னை, பனை மரங்களுக்கு வரி போடக்கூடாது. இதனால் மராமேறிகளுக்கும், தோப்புக்கள் வைத்திருப்பவர்களுக்கும் பாதகம் ஏற்படும்.

இன்னும் பல ஊனங்கள், குறைபாடுகள் இந்த மசோதாவில் இருக்கின்றன. அவற்றையும் நீக்கி சரியான மசோதாவைக் கொண்டு வரவேண்டும். இப்பொழுது எடுத்த கொள்கையை அமுல் நடத்த இந்த மசோதாவை நிறைவேற்றவேண்டும் என்ற வகையில் இதை நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: துணைச் சபாநாயகர் அவர்களே, மிகுந்த சர்ச்சைக்குரிய, ஒவ்வொருவருடைய நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் தொட்டுப் பார்க்கின்ற ஒரு மசோதாவாக இந்த மசோதா இருக்கிறது என்பதை முதலிலேயே கூறவிரும்புகிறேன்.

இந்த மசோதாவைப் பற்றிச் சொல்லுகின்றபோது, சுதந்திராக் கட்சிக்காரர்களும், காங்கிரஸ் கட்சிக்காரர்களும், மகாத்மா காந்தியவர்கள் மிகுந்த உணர்வோடு இதை அமுலாக்க அக்கறை காட்டினார்கள் என்று சொன்னார்கள். நாட்டில் சுதந்திரப் போராட்டத்தை வலுப்படுத்த, நாட்டில் மகாத்மா காந்தி இருக்கும் மக்களுக்குப் பல்வேறுவிதமான நிர்மாண வேலைகளைக் கொடுத்தார்

கள். வெளி நாட்டுத் துணிகளை விலக்குதல், மதுக்கடைகளை மறியல் செய்தல், அரிசன சேவை, நூல் நூற்பது போன்ற பல்வேறு காரியங்களைக் கூறி, அந்தந்தத் துறையில் அக்கறை உள்ளவர்களை சுதந்தரப் போராட்டத்திற்கு தயாரிக்கும் பணியில் செய்தார்கள்.

அதே நேரத்தில் ஏகாதிபத்தியத்தை ஒழிக்கும்போது, ஒழுக்கத்தை உண்டாக்க, அப்படி அவர்கள் போனதற்குப் பின்னால் நாட்டில் கிராமங்களில் சிறு தொழில்கள் வளர்ந்து, கிராம மக்கள் இம்மாதிரியான வகையில் வளர்ந்து நல்வாழ்வு வாழ்வதற்காக ஒரு அடிப்படையை அமைக்க அந்தக் காரியத்தில் ஈடுபட்டார்கள்.

அப்படி ஈடுபட்டபோது, சுதந்தரப் போராட்டம் முடிந்து, சுதந்தரம் கிடைத்த பிறகு, மதுவிலக்கு சம்பந்தமான கருத்துக்களை வெவ்வேறு அறைகளில் மாற்றப்பட்டு, அபிப்பிராயங்கள் வெளிப்பட்டன என்பதையும் மறந்து விட முடியாது. சுதந்தரப் போராட்டத்திற்கு ஊக்கம் அளிக்க மகாத்மா காந்திஜி அவர்கள் அதற்கு அஸ்திவாரமாக வாலிபர்கள் பங்கு கொள்ள வேண்டும் என்று அதற்கு ஒரு கருவியாக, ஆதாரமாக இருந்தது அந்தக் கொள்கை. அவர்களுடைய கொள்கையைச் சரியானதாக ஒப்புக் கொண்டிருந்தால், சுதந்தரம் பெற்ற பிறகு உடனடியாக அரசுகள் செய்திருக்க வேண்டியது மதுவிலக்கை அமுல் நடத்தியிருக்க வேண்டும். ஆனால் இந்த மாநிலத்தில் மட்டும், ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு ஜில்லாவில் கொண்டு வந்து அதற்குப் பின்னால் இது பரவலாகச் செய்யப்பட்டது. மற்ற சில மாநிலங்களிலும் கொண்டு வரப்பட்டது. ஆனால் இதில் மற்றவர்களுக்கு முழு நம்பிக்கை இருக்கவில்லை என்பதைத்தான் நம்முடைய அனுபவங்கள் காட்டுகின்றன.

நாளாக நாளாக நம்முடைய நாட்டில் நம் பண்பாட்டில் நம்பிக்கை குறைந்து, வெளிநாட்டுப் பண்பாட்டில் ஊக்கம் ஏற்பட்டு, அவையே மேலோங்கி வந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நாட்டில் மக்களுடைய நடை உடை பாவனைகள் மாறுகின்றன. சாதாரணமாக ஆங்கிலம் படித்தவர்கள் தமிழில் பேசவே வெட்கப்படும் நிலைகளைப் பார்க்கிறோம். அந்நிய நாகரிகத்தை, அந்நிய நடை, உடை பாவனைகளை நாம் ஏற்றுக் கொண்டு வருகிறோம். அதற்கு என்ன பரிகாரம்? அதெல்லாம் இருக்கும்போது மது அருந்துவது தவறானதா? மறைமுகமாக வெளிநாட்டு மதுக்களைக் குடிப்பது பெருமை என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதை அனுபவ ரீதியில் காண்கிறோம். முன்பு இருந்ததைவிட இப்பொழுது வாய்ப்புக்கள் அதிகமாகியிருக்கின்றன.

ஆகவே, மதுவிலக்கில் முதலிலே நம்பிக்கை வேண்டும். இதை நடத்துவதற்கு இயந்திரங்கள் சரியாக இருக்க வேண்டும். மக்கள் இதற்கு அனுசரணையாக இருக்க வேண்டும். அப்படி எல்லாம் இருந்தால்தான், இதை நடத்த முடியும். இல்லாமல் வெறும் சித்தாந்தத்தை மட்டும் கடைப்பிடிப்பது என்பது சாத்தியமல்ல. இதற்கெல்லாம் சரித்திர கால சான்றுகள் இருக்கின்றன. காங்கிரஸ் நண்பர்கள் உண்மையாக இதை நம்புகிறார்களா என்றால், எனக்குத் தெரியும், பல பேர்கள் வெளிப்படையாக நம்பிக்கை தெரிவித்தாலும், உள்ளத்துள்ளே நம்பிக்கை இல்லாதிருப்பதையும் பார்க்கிறோம். ஆனால், இப்படிப் பேசுவது நாங்கள் இந்த சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்கும் பரம்பரையில் சேர்ந்



தவர்கள் என்ற முறையில், அப்படிப் பேசவிட்டால் அந்த அணியில் சேர்ந்திருக்க முடியாது என்ற காரணத்திற்காகப் பேசுகிறார்கள். ஆனால் அந்த சித்தாந்தம் நடைமுறைக்கு ஒத்து வரக்கூடியதா என்பதையும் பார்க்க வேண்டும்.

அப்படிப் பார்க்கும்போது, நம்முடைய அரசாங்கம் 1967-ல் வந்த பிறகு புள்ளிவிவரங்களைப் பார்த்தால், மதுவிலக்குச் சட்டம் தளர்ந்து கொண்டே வந்திருக்கிறது என்பது தெரிகிறது. அதை வலுப்படுத்த வாய்ப்பு வசதியில்லை என்பதை நிச்சயமாகச் சொல்லமுடியும். அப்படி வாய்ப்பு வசதியற்ற ஒன்றை இந்த அரசு நடத்தியே ஆகவேண்டும் என்று சொல்வதன் மூலம், அதை அப்படி நடத்துவது லாபமா, அல்லது அதை நீக்கிவிடுவது லாபமா என்று லாப நஷ்டக் கணக்கைப் பார்த்தால், அதை விலக்குவதால் லாபம்தான் அதிகம் வரும்.

ஒரு சட்டம் இருக்கிறது என்றால், அங்காங்கு மக்களுடைய தேவைக்கு ஏற்ப சட்டம் வருகிறது. நடைமுறைக்கு ஒத்துவராத சட்டம் அப்படியே இருக்கட்டும் என்று சொன்னால், அது மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்காது. மக்கள் ஒத்து நடக்காத சட்டத்தை வைத்துக் கொண்டு நாம் செய்வது ஒன்றும் இல்லை. சட்ட விரோதமான காரியங்களில்தான் மக்கள் ஈடுபடுவார்கள். நாட்டில் ஒரு போக்கு மாறுகிறது என்றால், சட்டத்திற்கு மக்கள் உட்பட்டு நடக்கவில்லை என்றால், அந்த நிலைமையை உடனே மாற்றி அமைப்பது மிகத் தேவையான ஒன்று. அந்த நிலையில் பார்க்கும் போது மதுவிலக்கை நீக்கிவிடுவது சரியானது என்றே சொல்ல வேண்டும். தவறானது என்று சொல்ல முடியாது.

சித்தாந்தத்தை எடுத்துச் சொன்னோம். பிரசாரம் செய்தோம், எவ்வளவோ பிரசாரம் செய்தும், மது குடித்தால் மயக்கம் வரும், உடல் நலம் கெடும், பணம் போய்விடுகிறது என்றெல்லாம் செய்த பிரசாரம் மட்டுமல்ல, சட்டமே கூட பலனளிக்கவில்லை. எனவே, இனி இயற்றக்கூடிய சட்டமானது, அனுபவ சாத்தியமானதாக, நடைமுறைக்குகந்ததாக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதில் அரசு தனி அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: சபாநாயகர் அவர்களே, முன்பு பேசிய நண்பர் இதை சட்டத்தால் அமுல் நடத்த முடியவில்லை. பிரசாரத்தால் இதை அமுல் நடத்த முடியவில்லை என்று சொன்னார்கள். சட்டத்தால், போலீசால், சர்க்காரால் நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்லக் கூடியதை பிரசாரத்தால் வெற்றியடையச் செய்ய முடியும் என்று நம்பமுடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கை தட்டல்)

THIRU R. PONNAPPA NADAR : Mr. Deputy Speaker, Sir, I rise to oppose this Bill. Before stating a few facts, I would say that the Bill suffers from many legal infirmities. The Abkari Act was repealed by the Madras Prohibition Act. Now I will take this House to the relevant portions of the Madras Prohibition Act. First I would refer to Section 2 of the Madras Prohibition Act of 1937. It reads as follows :—

'From the date on which the provisions of this Act other than sections 1, 3 and 6 come into force in any local area, the

enactments mentioned in the Schedule I shall cease to be in force in such area to the extent specified in the fourth column thereof:

'Provided that the (State) Government may, by notification, declare that the provisions of this Act other than sections 1, 5 and 6 shall cease to be in force in any local area on such dates as may be specified in the notification and thereupon the enactments mentioned in the Schedule I with any subsequent statutory modifications thereof shall revive and come into force in such area with effect on and from such date.

*Explanation.*—For the removal of doubts, it is hereby declared that if a notification is issued in pursuance of the foregoing proviso, in respect of any area which formerly formed part of Pudukkottai, the enactments mentioned in the Schedule I with any subsequent statutory modifications thereof come into force into such area with effect on and from such date as may be specified in the notification'

Sir, this section postulates that the Abkari Act has been mentioned in Schedule I and that has been repealed. Schedule I reads as follows :—

| | |
|---|---|
| *Acts of the [illegible] Council—* | |
| The Madras Abkari Act, 188[illegible] | The whole |
| The Madras Ab[illegible] 1905 | Do |
| The Madras [illegible] Act, [illegible]913. | Do. |
| The Madras Abkari Amendment Act, 1915. | Do |
| *Acts of the Madras Legislature—* | |
| The Madras Abkari (Amendment) Act, 1929. | Do |
| The Dangerous Drugs Act, 1930 .. | So [illegible] Schedule II as relates [illegible] Abkari Act [illegible] |

So, by reading this Schedule and the section, it has to be taken that by the passing of the Madras Prohibition Act of 1937, the parent Act, that is the 1886 Act has been repealed and it is not now law. So, there will be no meaning in saying that they are going to amend this Act. In this connection, I will incidentally refer to the meaning of the expression 'repeal' as stated in the Law Lexicon of British India compiled by Thiru P. Ramanatha Aiyar. He says—

'Repeal.—A revocation; as, the repealing of a statute is the revoking or disannulling it.

A repeal signifies the abrogation of one statute by another.

The primary meaning of the word "repealed", as used in speaking of the repeal of a statute, is as its etymology imports, that the statute has been recalled or revoked . . .





So we will have to take it that this statute has been recalled or revoked. Then he says—

"The general rule is when an Act of Parliament is 'repealed' it must be considered (except as to transactions past and closed) as if it had never existed'

So, this is a dead letter. Then he says—

"Repealed" is not to be taken in an absolute, if it appear upon the whole Act to be used in a limited sense (per Ellenborough C.J., R. v. Rogers).

This is with reference to an English case. Then he says—

'Repeal and Suspension distinguished. There is a material difference between the repeal and the suspension of a statute. A repeal removes the law entirely; but, when suspended, it will exists, and has operation in every respect, except wherein it has been suspended.'

So by reference to this, we have to take it that this has entirely been taken out of the statute book. Then he says—

'The difference between a repealed and a suspended law is this: A repeal puts an end to the law. A suspension holds it in abeyance.'

So, the Abkari Act of 1886 has been put an end to and it cannot be revived as has been stated. Then he says—

'Repeal by implication. To constitute a repeal by implication there must be such repugnance or conflict between the positive and material provisions of the different acts that they cannot stand together.

A repeal by implication must be by necessary implication. It is not sufficient to establish that the subsequent law or laws cover some, or even all, of the cases provided for by it; for they may be merely affirmative, or cumulative or auxilliary. "But there must be a positive repugnance between the provisions of the new law and those of the old, and even then the old law is repealed by implication only *pro tanto*, to the extent of the repugnance."

So, by referring to the Law Lexicon, we are more or less sure that the old Act has been repealed in its entirety and it is not in the statute book and that it cannot be pressed into service once again.

Therefore, the next question is, is it possible to amend the Abkari Act of 1886 through this Bill? I am sure that the learned Minister for Law will agree with me when I say that this Bill has not been properly drafted and the whole Bill will have to be recast and all the aspects will have to be considered.

Now, I take the meaning of the expression 'amend'. The meaning of 'amend' as stated in the Concise Oxford Dictionary is as follows—

. . . correct an error in (legal document), make professed improvements in (measures before Parliament). .

Now the question is, is it possible to amend the dead Act which has no life and which cannot be revived by any process of amendment and it is beyond the competence of our Legislature to pass this Bill in its present form and they will have to do certain other [illegible].

I would also just refer to the other legal implications that have been stated regarding this amendment. I want once again to refer to Ramanatha Iyer's Law Lexicon regarding this amendment. Amendment is described thus:

"The correction of an error: In practice the correction of any error in any process, pleading, or proceeding at law, either by consent of the parties, or upon motion to the court in which the proceeding is pending . ."

That is not very material. What about legislation?

"In legislation: A modification or alteration to be made in a bill on its passage or in an enacted law; modification or change in an existing Act or statute."

Here my submission is that this is not an existing Act or a statute and no modification or change can be made so far as Abkari Act of 1886 is concerned because it has been repealed in tis entirely.

I would also like to add one more point. The Act will have to be revived As per Section 2 of Madras Prohibition Act to which I have already referred if it is a case of reviving, the Act will have to be re-enacted and the entire Act will have to be brought forward and a piecemeal amendment of a portion cannot be made. That is another point which I want to submit.

If the learned Co-operation Minister wants to make certain remarks and if he has got anything to say, he can say or put a question.

I would once again reiterate that this Act will have to be re-enacted. Then only it can become valid. Otherwise, there would be several legal infirmities and those legal infirmities cannot be cured by this simple process of amendment. My submission is that this Bill will have to be withdrawn and a separate Bill will have to be introduced and passed in this House.

Once again, I would refer to some other aspects. It has been stated that prohibition is the avowed policy of the Government. But they want to suspend it. In case they want to suspend it, can they do it without repealing the Prohibiton Act, is another point which I want to pose. I would refer to Section 1 of the Madras Prohibition Act, Act X of 1937. Section 1 (2) says:

"It extends to the whole of the State of Madras."

Section 1 (3) (a) states:

"This section and Sections 3 and 6 shall come into force in the whole of the State of Madras at once."



Section 1 (3) (b) states:

The rest of this Act shall come into force—

(i) in the district of Salem, at once; and

(ii) in any other local area in the State of Madras on such date as the State Government, may, by notification, appoint".

It is seen that the Act would come into force at once in the district of Salem. Will it be possible to suspend the operation of the Prohibition Act in Salem, is the next point for consideration. I am sure that the Madras Prohibition Act as enacted regarding the Salem district will have to be repealed and for that a separate piece of legislation is needed and that too is very material and necessary.

So, my submission is that the Madras Prohibition Act in its operation to the district of Salem will have to be repealed and a separate enactment will have to be brought in. These are all the points which I want to make so far as the legal objections are concerned.

Now it has been stated that the prohibition policy has been whittled down in the Congress States and so, there is no justification for the opposition saying that prohibition should be scrapped. I would only say that prohibition so far as Madras State is concerned, has been the avowed policy of all the leaders of all the political parties. To say that the prohibition policy is violated by the Congress Government and is violated by the successor Government and it has failed, is only a hoax.

Sir, there may be an increase in the prohibition offences. That does not mean that the policy or the law has failed. We have got our penal law. In the penal law there are so many offences. If certain offences are on the increase, that does not mean that we should scrap the penal law. And I may incidentally say trespass is on the increase, theft is on the increase. There are many offences which are on the increase. It is no logic or reason and there is no rhyme in saying that simply because there is an increase in the crimes, the prohibition law should be scrapped.

I am sure that the learned Law Minister and the Hon. Chief Minister would agree with me when I say that prohibition will have to be enforced. They would say that we are only suspending and what is the provision for suspension is the point which I have already raised.

So far as suspension is concerned, it is only a colourable expression and we cannot take shelter under that expression and say that the other States have whittled down prohibition and so we are helpless and camphor remains unburnt and all that. That argument would be out of place and inopportune, so far as prohibition is concerned.

Another point which I would stress before the House is this. It may be stated that a drunkard may be dealt with if he is addicted to drink and if he behaves in any indecent manner or

that if he is a riotous character, Section 75 of the City Police Act is there and the Indian Penal Code is there. But are they sufficient to meet the ends of justice? That is a matter which will have to be considered. Supposing a drunkard behaves so riotously and indecently, will the arms of law be long enough to book him? We will have to consider that certain provisions will have to be incorporated in the proposed legislation that is contemplated. I am sure that this is only a sketchy legislation and it is only a piecemeal legislation. That piecemeal legislation should not be hustled through. We have got plenty of time. We are going to scrap the Prohibition Act only from a month after this date. So, it would be better and prudent that we just take into view all the objections because I say once again and reiterate that a dead Act cannot be revived by this process of amendment and that the drafting of the Bill is not very happy.

I would once again request that this Bill may be withdrawn and we oppose the introduction of this Bill, and the consideration of this Bill. We are opposed to the scrapping of prohibition and with all the emphasis at our command I say that our party is against this scrapping of prohibition. I would once again urge it in the name of Thiruvalluvar who has devoted a Chapter regarding the drink evils. So far as Thirukural is concerned, we take it as the religion of Tamil 'thirumarai'.

So, I am sure we will not depart from the path that has been shown for us by eminent seers and we would be fortified in saying that this prohibition policy has been the cherished dream of Mahatma Gandhi and the cherished dream of Sri Rajagopalachari and so many other eminent leaders. In that we should not call our leaders names. We should respect the views and sentiments expressed by them and there is no use of calling names. It is something like a pot calling the kettle black. We should accept their policies in the interest of the nation and in the interest of the country. This Bill should be withdrawn and I am sure that the Law Minister will surely agree with me that this Bill is not in proper form. With these words, I resume my seat.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, மதுவிலக்கு சட்டம் இடைக்காலமாக நிறுத்திவைக்கப்பட்டு இந்தியா முழுமையும் மதுவிலக்குச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு மத்திய அரசு சட்டம் கொண்டு வரவேண்டும். பொறுப்பேற்கவேண்டும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் கொள்கையை அமல் நடத்த அவர்கள் முன்வரவேண்டுமென்ற அடிப்படையில் நம்முடைய அரசாங்கம் மதுவிலக்கு சட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறது என்று ஏற்கனவே கொள்கை இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மதுவிலக்குக் கொள்கை பற்றி நீண்ட நேரம் இந்த மன்றத்தில் விவாதம் நடந்தது. இன்றைக்குப் பேசப்பட்ட கருத்துக்கள் எல்லாம் அன்றைக்கும் பேசப்பட்டன. அதற்குரிய பதில்களும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே மதுவிலக்குக் கொள்கை பற்றி நான் இங்கே அதிகம் பேச விரும்பவில்லை. மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி





யாரும் ஆட்சேபிக்கவில்லை. குடிக்கத்தான் வேண்டும், குடித்தால் நலமது என்று எந்த அரசியல் கட்சியும் தமிழ் நாட்டில் சொல்வதாகத் தெரியவில்லை. அப்படி யாரோ கருதுவதாக வைத்துக்கொண்டு அதைப்பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

ஒரு கட்சியின் கொள்கை நிறைவேற்றப்பட வேண்டும், சட்டபூர்வமாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை யாகும்.

திரு. ஹாண்டே அவர்கள் உணர்ச்சியோடு பேசினார்கள். 'ரெவியர்ட் அண்ணா—ரெவியர்ட் அண்ணா' என்று அவர்கள் சொல்லும்போது எங்களுக்கு எல்லாம் ரொம்ப மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர் தம்முடைய கொள்கைக்காக வாதாடினார்கள் என்று நாங்கள் எடுத்துக்கொண்டோமே தவிர அண்ணா அவர்கள் வார்த்தையை நாங்கள் மீறுவதாகக் குற்றஞ்சாட்டுவதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவரும் அந்தக் கருத்தில் சொல்லியிருப்பார் என்று நினைக்கவில்லை. பொதுவாக அண்ணா அவர்களின் கொள்கையை எந்த அளவுக்கு நிறைவேற்றி வருகிறோம் என்பதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அன்றே விளக்கம் தந்துவிட்டார்கள்.

இப்போதிருக்கிற பிரச்சினை—மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைக்கிற போது இடையே ஏற்படுகிற நிலை என்ன, இந்த நிலைக்கு ஏற்றபடி எந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவது என்பதைப்பற்றி மட்டும் இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் விவாதிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த மசோதாவைப்பற்றி பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. முதலில் சட்டபூர்வமான பிரச்சினையைப்பற்றி திரு. ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். கடைசியாகப் பேசிய வழக்கறிஞருக்கும் அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்பட்டிருப்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. சட்டத்தை முழுக்கப் பார்த்திருந்தால் தெரியும். சட்டத்தில் எந்தப் பகுதியிலும் ரிப்பீல் என்ற வார்த்தையே இல்லை.

முதல் சட்டத்தை எடுத்துப் பார்த்தாலும் 'ஷல் ஸீஸ்' என்றுதான் இருக்கும். திரு. பொன்னப்ப நாடார் வாதிட்டதைப்போல 'ஹியர் பை ரிப்பீல்டு' என்பது இல்லை.

அதுமட்டுமல்ல. இதே செக்ஷனில் 'ஷல் ஸீஸ்-ஸீஸ்' என்றே ப்ரொவைசோவில் போட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டம் இடைக் காலமாக நிறுத்தி வைக்கப்பட்டால் அப்காரி ஆக்ட் தானாக வந்துவிடும். அப்படி தானாக வந்துவிடக்கூடிய நிலையில்தான் சட்டத்தில் வார்த்தைகளைப் போட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டமும் காங்கிரஸ்காரர்களால்தான் கொண்டுவரப் பட்டது.

ஆகவே, செக்ஷனை திரும்பத் திரும்பப் படித்தால் இதில் எந்தவிதமான தவறும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். இருக்கிற சட்டமே அதிகாரத்தை நடைமுறைக்குக் கொண்டுவருகிறது. எந்த எந்தப் பிரிவுகளை, எந்த எந்த இடங்களில் நிறுத்திவைக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையைத்தான் நாம் பின்பற்றியிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பக்கம் 36, 35-இல் இப்படிச் சொல்லியிருக்கிறது.

"...........The extent of repeal is whole.............."
I would just draw the attention of the Hon. Minister to this aspect also.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புத்தகத்தில் மட்டுமல்ல, சட்டத்தில் அப்படி இருக்கிறது. ஷெட்யூலில் எந்த எந்தச் சட்டங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்காகவே அந்த ஷெட்யூல் போடப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் எப்படி ஜோஸ்யம் சொல்கிறார் என்று தெரியவில்லை. ரிப்பீல்டு என்கிற போது எடுக்கப்பட்டது என்பதுதான் பொருள். திரும்ப வரும் என்பது ஊகமா?

It has been repealed and it is whole.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அம்மையார் அவர்களுக்கு ஜோஸ்யம் தெரியுமோ என்னவோ—எனக்குத் தெரியாது. சட்டத்தில் இருப்பதை வியாக்கியானம் செய்யும்போது சந்தேகத்தில் சொல்வது ஒருவகை. சட்டமே தவறு என்று சொல்லும்போதுதான் நானும் வாதாட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. வழக்கறிஞராகிய உறுப்பினர்கள் பல சட்டங்களைப் பார்த்திருப்பார்கள். அவற்றையும், இதையும் படித்துப்பார்த்தால் தெரியும். அநேகமாக இட் ஈஸ் ஹியர் பை ரிப்பீல்டு என்றே போடுவார்கள். எக்ஸ்டென்ட் ஆப் ரிப்பீல் என்பதும் பொருத்தமாக இருக்கும். செக்ஷன் 2, ஷெட்யூலைச் சேர்த்துப் பார்த்தால் புரியும் என்று நம்புகிறேன். இது சரியா, தவறு என்பது வேறு விஷயம். இதுபோல நடப்பதற்கு பல உதாரணங்களைச் சொல்ல முடியும். ஒரு உதாரணம் 1955-ல் க்ரிமினல் ப்ரொசிஜர் ஆக்டுக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது. சட்டம் வந்ததே தவிர அது உடனடியாக அமுலுக்கு வரவில்லை. 1956-ல் தான் அமுலுக்கு வந்தது. அப்படி மத்திய அரசாங்கத்தில் சட்டம் கொண்டுவரப்படுவதற்கு முன்பே அதற்கான திருத்தம் இங்கே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்படி பல உதாரணங்கள் இருக்கின்றன. சட்டப் புத்தகத்தில் இருந்தே எடுத்துவிடுவது வேறு—சட்டப் புத்தகத்தில் இருந்தாலும் அதை அமல்படுத்தாமல் வைத்திருப்பது வேறு.

DR. H. V. HANDE : The Hon. Minister has stated that the word 'cease' only has been used but in the Act the words 'the extent of repeal' have been used. Secondly, if the Prohibition Act is suspended, the Abkari Act also goes. Will the Hon. Minister clarify the position?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் ஏற்கனவே சொன்னதைத்தான் திருப்பிச் சொல்கிறார்கள். நானும் சொன்னதையேதான் திருப்பிச் சொல்ல வேண்டும்.

ஷெட்யூலில் போட்டிருக்கிற எக்ஸ்டென்ட் ஆப் ரிப்பீல், ஆக்டில் இட் ஈஸ் ஹியர் பை ரிப்பீல்டு என்று போட்டிருந்தால் அந்தப் பிரச்னை வருகிறது. அது மட்டுமல்ல, ப்ரொவைஸோவில்



'May by notification declare that the provisions of this Act..' என்றும் போட்டிருக்கிறார்கள். என்ன பொருள்? அந்தச் சட்டம் நிறுத்தி வைக்கப்படுகிறபோது மற்றவைகளுக்கு உயிர் கொடுக்கப்படும் என்பதுதானே அர்த்தம். அதுதான் நான் சொன்னது—சட்டத்தையே எடுத்துவிடுவது வேறு—சட்டத்தில் வைத்துக்கொண்டு அமல்படுத்தாமல் இருப்பது வேறு.

DR. H. V. HANDE : Revival also requires notification. It is only after notification, the Act could come into force.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆகஸ்டு 30-ம் தேதிக்குப் பிறகு என்று சொன்னேன். இப்போதே வேண்டுமென்று கேட்டால் கொண்டுவரத் தயார். மதுவிலக்குச் சட்டம் ஆகஸ்டு 30-க்குப் பிறகு நிறுத்தி வைக்கப்படுகிறபோது இவைபற்றியும் நோட்டிபிகேஷன் வரும். நோட்டிபிகேஷன் போடாமல், சட்டம் வராமல் எப்படிக் கொண்டு வந்தார்கள் என்கிற பிரச்னையே இதில் இல்லை. அந்தச் சட்டம் ஆகஸ்டு 30-க்குப் பிறகு நிறுத்தப்படுகிறபோது இவை தானே வருகிறது.

DR. H. V. HANDE : My point is that this cannot precede the other. Till the notification comes, the Government have no statutory authority to amend the Act.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தால் நன்றாகப் புரியும். சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றப்படலாம் என்பதற்கு உதாரணமாகத்தான் 1955-ல் க்ரிமினல் ப்ரொசிஜர் ஆக்ட் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்பதைச் சொன்னேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, am I to take it that this is an enactment for revival of the Madras Abkari Act which has been repealed, according to my legal knowledge, by the earlier law?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் டாக்டர் அவர்கள் கேட்டார்கள், நோட்டிபிகேஷன் போடுவதற்கு முன்னாலே இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறீர்களே என்று. நோட்டிபிகேஷன் வருவதற்கு முன்னாலே இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். முன் எச்சரிக்கையோடு இருந்தால் ஏற்படக்கூடிய தவறுகளை திருத்திவிடலாம் என்பதற்காகக் கொண்டு வருகிறோம். சட்டப் புத்தகத்தில் சட்டம் இருக்கிறது. அது இப்பொழுது அமுலுக்கு வர இருக்கிறது. வரும் ஆகஸ்ட் 30-ம் தேதியன்று திருத்தச் சட்டமும், நோட்டிபிகேஷனும் வரும். நோட்டிபிகேஷன் வந்த பிறகு திருத்தம் வருகிறதென்றால் இடைக்காலத்தில் என்ன ஏற்படும் என்று தெரியாது. ஆகவே, முன்னெச்சரிக்கையோடு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம்.

அடுத்தபடியாக, சேலம் மாவட்டம் என்று குறிப்பிட்டிருப்பதை நாங்கள் நன்றாக பரிசீலித்தோம். சேலம் என்று முதல் வரி இருக்கிறது, அடுத்து 'ஏனி ஏரியா' என்றும் இருக்கிறது. அந்த இரண்டையும் சேர்த்துத்தான் 'லோகல் ஏரியா' என்று வருகிறது. அது சேலத்தையும் குறிக்கும், 'ஏனி

[திரு. செ. மாதவன்]

லோகல் ஏரியா' என்பதையும் குறிக்கும். சட்டப்படி அதில் [illegible] அப்படி ஏதாவது ஏற்படுமானல் அதைப் பரிசீலிப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்ற உறுதி கூறுகிறேன்.'

ஆகவே, நம் முன்னலே இருக்கிற மசோதா, ஆகஸ்ட் மாதம் 30-ம் தேதி நோட்டிபிகேஷன் போட்டு, மதுவிலக்கு ரத்து சட்டம் நிறைவேற்றம் செய்யப் பட்டால், நாம் எச்சரிக்கையோடு இந்தச் சட்டத்தை அமல்படுத்தவேண்டும். பழைய சட்டத்திலே சில மாறுதல்கள் செய்வதற்குத்தான் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டம் வேண்டாமென்று சொன்னவர்கள்கூட, சட்டத்தை நல்லபடியாக அமல்நடத்த வேண்டும், அரசாங்கம் உன்னிப்பாக செயல்பட வேண்டுமென்று ஆலோசனைகளைச் சொன்னர்கள்.

கள்ளுக் கடைகள், மதுக்கடைகள் ஏற்பட்டால் சமுதாயத்திலே உள்ள மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கும் எந்தவகையிலும் கெடுதல்கள் ஏற்படக் கூடாது என்ற வகையிலே ஆலோசனைகளையெல்லாம் எடுத்துச் சொன்னர்கள். மது வேண்டாமென்று சொல்லிவிட்டு, சில ஆலோசனைகளையும் சொன்னர்கள். அது எங்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. சட்டம் வேண்டாமென்று சொல்லிவிட்டு, சில ஆலோசனைகளைச் சொன்னர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, சட்டம் எங்களுக்கு வேண்டாமென்று சொல்லவில்லை. அதை எங்களால் தடுத்து நிறுத்த முடியாது. அதற்காகத்தான் சில ஆலோசனைகளைச் சொன்னேன். நீங்கள் 184 பேர்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள். எப்படி நாங்கள் சட்டத்தை தடுத்து நிறுத்த முடியும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் உங்களை பாராட்டித்தான் சொன்னேன். குறைகள் இருக்கக்கூடாது, ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம்.

சர்க்காரே கள்ளுக்கடை வைக்கப் போகிறதா, சாராயக் கடை வைக்கப் போகிறதா என்றெல்லாம் கேட்டார்கள். அப்காரி (திருத்த) மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ரொம்பத் தவறு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்குத்தான் இந்தத் திருத்தம். இருக்கின்ற சட்டத்தைச் செம்மைப்படுத்துகிற வகையிலேதான் கொண்டுவரப்படுகிறது. இந்த மசோதாவின் நோக்கம். நல்ல நோக்கம். குடிப்பது தவறு என்ற எண்ணம் ஏற்படும் வகையில்தான் 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் தர வேண்டும் என்று இதிலே போட்டிருக்கிறோம்., உருவத்தைப் பார்த்தவுடனே வயது தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்வது சட்டத்திலே ஒரு முறையாகும். இப்படிச் சொல்வதன் காரணமே, சந்தேகம் இருந்தால்கூட இத்தனை வயதுக்குக் குறைவாக இருக்கிறார்கள் என்று மேம்போக்காக தெரிந்தால்கூட கொடுக்கக்கூடாது என்று போட்டு இருக்கிறோம்.

முன்னலே இருந்த கடைகள் எப்படி இருந்தன என்பதை நாம் சொல்லக் கேட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நிலை தொடர்ந்து இருக்கக்கூடாது என்ற நிலையிலேதான், எப்படி எப்படி வினியோகிக்கப்பட வேண்டுமென்று, விதிகளை வரையறுத்துச் செய்திருக்கிறோம். குடிப்பவர்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்



படுத்தாமல் இந்தச் சட்டத்திலே சில திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறோம். மற்ற சட்டங்கள் வரும்போது உதவியாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். இச் சட்டம் கொண்டு வரும்போது, மதுவிலக்கு வேண்டாமென்றோ, குடிக்கக்கூடாது என்றோ யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்களைப் பார்த்துவிட்டு கொண்டு வரலாமே என்று சொல்லியிருக்கிறார்கள். ஆந்திராவில் இதுபோன்ற சட்டம் இருந்தது. எக்ஸைஸ் ஆக்ட் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். முழு மாறுதல் செய்கிறபோது மற்ற மாநிலங்களில் எப்படி எப்படி பாதிக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வேகம், வேகமாக வந்தது என்று சொன்னர்கள். இன்றைக்குக் கொண்டுவராவிட்டால் ஆகஸ்ட் 30-ம் தேதி என்ன ஆகும் என்ற நோக்கத்தில்தான் இப்போது கொண்டு வந்திருக்கிறோம். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்களே மதுவை உற்பத்தி செய்வதாக இருப்பதோ, மதுக் கடைகளை நாங்களே வைக்கப் போகிறோம் என்று இருப்பதோ இடையாது. ஆகவே, கொஞ்சம் தாழ்ந்து எங்களைப்பற்றி கணக்குப் போடாமல் நல்ல நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிரசாரம் வேண்டுமா, வேண்டாமா என்று சொன்னர்கள். இது அரசியல் கருத்துக்கள். நாங்கள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கிறோம். குடிக்கக்கூடாது என்பதிலே நாங்கள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கிறோம். குடிப்பவர்களைத் தடுப்பதிலே பிரசாரம் செய்தும் வர இருக்கிறோம். இப்படிப் பட்ட சூழ்நிலை நாட்டிலே இருக்கும்போது வெறும் சட்டத்தாலே மட்டும் ஒழுக்கத்தை வளர்த்துவிட முடியாது. தீவிர பிரசாரம் செய்யலாம். இந்தியா பூராவுக்கும் மதுவிலக்கு என்று வரும்போது நாமும் அத்தகைய பிரசாரத்தைச் செய்யலாம். அகில இந்திய கட்சிக்காரர்கள் நாடாளுமன்றத்தில் மதிர்த்து, இந்தியா முழுவதற்கும் மதுவிலக்குச் சட்டம் அமலுக்கு வருவதற்கு பாடு பட்டால், எங்கள் ஆதரவு நிச்சயமாக இருக்கும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது இந்தச் சட்டமும் தேவை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister whether this Government would take steps to prevent the sale of Arishtam and Aruva on a commercial scale and will they take up this matter with the Central Government. so that proper steps may be taken under the Drugs Control Act?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அரிஷ்டம், அருவா போன்ற பிரச்சினையெல்லாம் மதுவிலக்கு சட்டம் இருக்கும்போது கூட இருந்தது. மதுவே கிடைக்கும்போது அரிஷ்டத்தின் பெருமை குறைந்து போய்விடும். இதை நாம் அறிவோம். மத்திய அரசாங்கத்திற்கு டிரக்ஸ் ஆக்ட் இருக்கிற காரணத்தாலே இந்தச் சூழ்நிலை ஏற்பட்டது. அரிஷ்டம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இந்த நாட்டிலே இருக்கிறது.

DR. H. V. HANDE : The Hon. Minister [illegible] Prohibition Act is in force and the Prohibi[illegible] removed out of the Statute Book only by anoth[illegible]. Now that the Prohibition Act is in force these things are also in force, namely, "From the date on which the provisions of this Act other than sections 1, 3 and 6 come into force in any local area, the enactments mentioned in the Schedule I shall cease to be in force in such area to the extent specified in the fourth column thereof".

As long as the Prohibition Act is in force, this particular Section 2 is also in force. Unless by a legislation in this House you repeal the Prohibition Act, how is it possible? On that particular aspect I have been trying to get an answer from the Hon. Minister.

HON. THIRU S. MADHAVAN : There is no anomaly in these things. The Section reads thus :

"Section 1 (3) (b) - The rest of this Act shall come into force-

(i) in the district of Salem, at once; and

(ii) in any other local area in the State of Madras on such date as the State Government may, by notification, appoint. "

Then under Section 2, it has been provided that the Government have got powers to suspend some of the Sections in the Prohibition Act. What will happen when those Sections are suspended? There is a proviso. If a Notification is published under the Proviso to Section 2, the Acts mentioned in the Schedule shall be revived. That is the intention of this proviso and so, I interpret it... Now the Prohibition Act still stands. The provision also is there. When we notify under that proviso reviving the Acts mentioned in the Schedule, then the Acts will come into force. When those Acts come into force, we want to amend those Acts. That is the intention of the present Amendment. The Abkari Act is not in force today. But when we promulgate the Notification under this proviso, it will come into effect. When it comes into effect, it must be in the proper form. That is why we bring this amendment. There was a Criminal Procedure Act of the Government of India in 1955. But it came into force only in 1956. Even though that was not in force then, it was in the Statute Book. We brought an amendment in this House and passed that amendment. If there is a Statute in the Statute Book, we can amend it, whether it is in force or not. Now the Abkari Act is not in force. Then we promulgate this notification under the proviso. Then it will come into force. When it comes into force, this Amended Act will be in force.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : From the explanation of the Hon. Minister we are unable to understand how this amendment will come into force when it is notified which may be on the 30th August or some such date. But the question is, should we not repeal the Prohibition Act? Both the Acts, the Abkari Act and the Prohibition Act cannot be on the Statute Book.

[Mr. Speaker in the Chair]



You must first repeal the Prohibition Act and then bring this amendment. I would like to have a clarification from the Minister on this point.

THE HON. THIRU S. MADHAVAN : The same argument is put forth. That is why I explained. If you look into any legislation, there is a specific provision repealing the Act. We have got several Bills and you can go through these Bills. The Act is hereby repealed—there is no such provision in the Prohibition Act. Section 2 says 'shall cease to be in force'. It has not been stated in the Prohibition Act that the Abkari Act is hereby repealed. It only ceases to be in force temporarily. If we promulgate a Notification under the proviso, then the Acts mentioned in the Schedule shall be revived.

DR. H. V. HANDE : My point is, is there any other Act by which the Prohibition Act can be suspended or ceased to exist.........

THE HON. THIRU S. MADHAVAN : We need not go to that extent. They have got powers to suspend certain provisions of the Prohibition Act and we need not repeal the Prohibition Act.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபொழுது அரசாங்கமே தயாரிக்கப்போகிறதா என்று கேட்கப்பட்டதற்கு இப்பொழுது அந்த எண்ணம் இல்லை என்று சொன்னார்கள். அப்படித் தயாரிப்பது ஏன்? ஆந்திரப் பிரதேசத்திலே இரண்டு இடங்களில் தயார் செய்கிறார்கள். அப்படிச் செய்தால் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கிறது, அதோடு பணமும் வருகிறது. எனவே இப்பொழுது இல்லாவிட்டாலும் கூட பின்னாலேயாவது அதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு யோசனை. இதைப்பற்றி பின்னாலே ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

The question is--

'That the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971) be circulated to elicit public opinion thereon.'

The amendment was put and declared lost.

Thiru J. James pressed for a division and the House divided thus—

எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பில், உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர் :—

ஆதரிப்போர்

1. திரு. ஆர். பொன்னப்ப நாடார்
2. டாக்டர் எச். வி. ஹாண்டே
3. திருமதி த. ந. அனந்தநாயகி
4. திரு. கே. பி. கோபால்
5. திரு. ஏ. சங்குமுத்து தேவர்

## ஆதரிப்போர்—தொடர்ச்சி

6. திரு. எம். சத்தியமூர்த்தி
7. திரு. கே. எம். சுப்பிரமணியம்.
8. திரு. என். டென்னில்
9. திரு. கு. ஆ. பொம்மன்
10. திரு. ஜே. ஜேம்ஸ்

## எதிர்ப்போர்

1. திரு. பெ. சீனிவாசன்
2. திரு. கு. ஆண்டி என்ற குருசாமி
3. திரு. அ. ஆறுமுகம்
4. திரு. எஸ். ஆறுமுகம்
5. திரு. ஆலடி அருணா
6. திரு. அ. இராசமாணிக்கம்
7. திரு. வி. கே. இராஜா பிள்ளை
8. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி
9. மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்
10. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்
11. திரு. இராம. அரங்கண்ணல்
12. திரு. எஸ். முருகையன்
13. திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி
14. திரு. செ. கந்தப்பன்
15. திரு. டி. கணபதி
16. திரு. சி. கணேசன்
17. திரு. எம். ஆர். கண்ணன்
18. திரு. கா. மு. கதிரவன்
19. திரு. எம். கந்தசாமி
20. திரு. சோ. கருணாநாதன்
21. திரு. ஆ. கருப்பையா
22. திரு. கே. ஆர். கிருஷ்ணன்
23. திரு. அ. சே. குமாரசாமி
24. திரு. எம். கோபால்
25. திரு. ஆர். கோவிந்தராசன்
26. திரு. கோவை செழியன்
27. மாண்புமிகு திரு. செ. மாதவன்
28. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்



## எதிர்ப்போர்—தொடர்ச்சி

29. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்
30. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்
31. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
32. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்
33. திரு. தோப்பூர் திருவேங்கடம்
34. திரு. முனு ஆதி
35. திரு. தொ. ப. சீனிவாசன்
36. திரு. மு. சின்னசாமி
37. திரு. வ. சின்னசாமி
38. திரு. எஸ். கே. சுப்பிரமணியம்
39. திரு. கோ. செபமாலை
40. திரு. ஜெயராமன்
41. திரு. வீ. செல்லதுரை
42. திரு. சி. சேதுராமன்
43. திரு. பெ. சௌந்தரபாண்டியன்
44. திரு. என். தர்மலிங்கம்
45. திரு. அ. தியாகராசன்
46. திரு. க. உரோ. எட்மண்ட்
47. திரு. கா. வேழவேந்தன்
48. திரு. க. துரைசாமி
49. திரு. துரைமுருகன்
50. திரு. எஸ். நடராசன்
51. திரு. எஸ். நல்லசாமி
52. திரு. க. நாகராசன்
53. திரு. பா. நாகலிங்கம்
54. திரு. எ. எம். டி. நாச்சியப்பன்
55. திரு. த. நாச்சியப்பன்
56. திரு. மா. வெ. நாராயணசாமி
57. திரு. என். எஸ். பலராமன்
58. திரு. க. பழனிவேலன்
59. திரு. மு. பழனிவேலன்
60. திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி
61. திரு. கே. எஸ். கோதண்டராமய்யா
62. திரு. கு. பாலகிருஷ்ணன்
63. திரு. கே. டி. கே. தங்கமணி

எதிர்ப்போர்—தொடர்ச்சி

64. திரு. ஏ. ஆர். பெருமாள்
65. திரு. என். மருதாசலம்
66. திரு. பெ. மலைச்சாமி
67. திரு. சி. மன்னியப்பன்
68. திரு. மூ. மாரிமுத்து
69. திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன்
70. திரு. வி. முத்து
71. திரு. என். இராஜாங்கம்
72. திரு. ப. முத்துசாமி
73. திரு. ரா. ரா. முனுசாமி
74. திரு. சி. ரங்கநாதன்
75. திரு. இ. ராமசாமி
76. திரு. ஜி. ராமசாமி
77. திரு. ஏ. எம். ராஜா
78. திரு. நா. வீராசாமி
79. திரு. அ. வெள்ளைத்துரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாப் பகுதிகளிலும் நடுநிலையாளர் எழுந்துநிற்க வேண்டுகிறேன்.

(ஒருவரும் எழுந்திருக்கவில்லை).

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the Members of the Muslim League Party have not participated in the voting.

MR. SPEAKER: They should decide about it.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் இதை எதிர்க்கிறேன் என்று முதலிலேயே சொல்லிவிட்டேன். இதை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்ப்பதாக இருந்தால் வாக்கு அளிக்கும் நேரத்தில் எழுந்திருந்திருக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஃபார், அகென்ஸ்ட், நியூட்ரல் என்று மூன்று பிரிவுகள்தான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்காவது ஒன்றும் இருக்கிறது. அது தான் வோட்டுப் போடாமல் இருப்பது. அதைத்தான் மாண்புமிகு முஸ்லீம் லீக் கட்சி உறுப்பினர்கள் கடைப்பிடித்திருக்கிறார்கள். வோட்டுப் போடும் நேரத்தில் எதிர்த்துப் போடலாம் அல்லது ஆதரித்துப் போடலாம். நடுநிலைமை யாளர் வாய்ப்பும் இப்போது முடிந்து விட்டது. நான்காவது நிலை நடுநிலை யிலும் கலந்து கொள்ளாத நிலை என்றுதான் பொருளே தவிர, எதிர்த்து வாக் களித்ததாகப் பொருளாகாது.

(வாக்குகள் எண்ணிய பிறகு)



மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தத்தை ஆதரிப்போர் 10 பேர்; திருத்தத்தை எதிர்ப்போர் 79 பேர். நடுநிலையாளர் யாரும் இல்லை. திருத்தம் தோல்வியுற்றது. (ஆரவாரம்)

பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1971-ம் ஆண்டு அப்காரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு, பிரிவுவாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

Clauses 2 to 4 were put and carried.

*Clause 5.*

MR. SPEAKER: The question is—

'That clause 5 do stand part of the Bill.'

THIRU K. T. K. THANGAMANI: I move the following amendment:—

'In the proposed new Chapter IV-A in clause 16-A, delete items (c) and (d) of sub-clause 4'.

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI: Sir, in support of my amendment, I have to state that the expression 'Molasses' has been defined as follows:—

"'Molasses' means the heavy dark coloured residual syrup drained away in the final stage of the manufacture of gur or sugar containing, in solution or suspension, sugars which can be fermented and includes any product formed by the addition to such syrup of any ingredient which does not substantially alter the character of such syrup; but does not include any article which the State Government may, by notification, declare not to be molasses, for the purposes of this Act."

My point is that in the matter of control and regulation of molasses, the State Government have got powers to authorise any officer to grant licences for the import, export, sale or possession of molasses. The officer authorised shall, in deciding whether to grant or refuse a licence or permit, have regard to the following matters, namely:—

(b) the status and the previous experience of the applicant.

. . . .

(c) the financial status of the applicant. . . .

My point is that these are extraneous considerations. The only consideration should be the interest of the public. Therefore, my amendment seeks to delete these two items which gives extra discretion to the officers.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, in support of the amendment moved by the hon. Member, Thiru K. T. K. Thangamani, I would like to state a few facts. The persons who are now dealing with molasses sell their quota to others at exorbitant rates. But in the Bill it is stated that 'the status and the previous experience of the applicant' should be taken into consideration. In such a case, only the persons who have indulged in such corrupt practices would be given licence. Then it is stated that the financial status of the applicant should be taken into consideration. The small traders and genuine agriculturists require the molasses and if they are not given licences, they have to pay a heavy amount in the black market and get it. So, I would say that the persons who use molasses and small traders should be preferred.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தப் பிரிவிலே மொலாஸஸ் [illegible] போர்டிலோ அல்லது வாங்கி விற்பதிலோ தவறு நடக்கக் கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்த (வி), (டி) என்ற சப்-கிளாஸ் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்ல நோக்கத்தோடுதான் அவர்கள் சொன்னதாக நம்புகிறேன். இதில் சம்பந்தமில்லாதவர்கள் விலையை ஏற்றவோ அல்லது இதை ஒரு வியாபார நோக்கோடு பயன்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் இதில் நாட்டம் உள்ளவர்கள், இதை வாங்கி விற்க சக்தியுள்ளவர்கள் என்று அப்படிப்பட்டவர்கள் இருக்கவேண்டுமென்று போட்டிருக்கிறோம். நல்ல நோக்கத்தோடுதான் அது போடப்பட்டிருக்கிறது. அனுமதி வாங்குகிறவர்கள் பொது மக்களின் நன்மைக்காகச் செயல்பட வேண்டுமென்றுதான் அப்படி போடப்பட்டிருக்கிறது. குறைந்த விலைக்கு வாங்கி அதிகப்படி விலைக்கு விற்கக் கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. பொது மக்களின் நன்மையைக் கருதித்தான் செய்திருக்கிறோம். ஆகவே, இந்தத் திருத்தம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : I am not pressing my amendment in view of the assurance given by the Hon. Minister.

The amendment of Thiru K. T. K. Thangamani was, by leave, withdrawn.

Clause 5 was put and carried.

Clauses 6 to 13 were put and carried.

Clause 1, the Enacting Formula, and the Long Title were put and carried.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

" That the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971) be passed. "

The motion was put and carried and the Bill was passed into law.



(ஒ) 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1971).

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I beg to move—

" That the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill *, 1971 (L.A. Bill No. 21 of 1971) be taken into consideration. "

Sir, this Bill has been brought forward to replace the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Ordinance, 1971 (Tamil Nadu Ordinance 6 of 1971). It was promulgated by the Governor on the 18th June 1971. This Ordinance amended the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939). The purpose of the Bill has been clearly explained in the Statement of Objects and Reasons annexed to the Bill. So, I commend this Bill for consideration of the House.

DR. H. V. HANDE : I oppose this Bill for reasons which are entirely different from our normal convectional reasons for opposing a Bill.

This Bill has been brought forward with the avowed purpose of bringing in reduction of wealth or accumulation of wealth with a particular individual. I can understand it if a reasonable or rational approach is made. But what I cannot understand is, after this ceiling is brought into force the remaining bus route permits —there will be a large amount of bus routes which will be remaining and which will be taken away—will be in the hands of the Government. Those bus routes according to this particular enactment can again be distributed to private agencies. I would rather prefer nationalisation—I would go even to the extent of saying ' nationalise '. Socialisation or trying to reduce the economic concentration of power, whatever it is, is there on the one side. On the other side, the danger of production or efficiency being disturbed is there and the danger of permit, licence, quota or the danger of the Government having with themselves a vast area of patronage is there. If these are taken into consideration and if these two are to be weighed and measured, I would consider that the dangers in the Government themselves having under their control a large amount of distribution of patronage are much more serious than whatever laws of economics are affected by this particular law.

Therefore, I would go even to the extent of saying—people will be surprise when they hear from me—' nationalise these routes apart from 10 '. Take the whole thing, nationalise it, bring your own transport buses and do it. I would prefer it. Because the malpractices are so many at every district level, and at the R.T.O. level. So many malpractices are going on. That is why I am making this unusual plea in this House. We are tired of this for several years. We have been watching this distribution of

* Published in the Tamil Nadu Gazette Extraordinary, dated 10th July 1971.

favouritism. It is going on in such a bad manner. Let us put an end to it. Let us say that the Government will take it over and run the bus routes. It would be preferable.

I have also seen for the last 4 or 5 years a number of mushroom transport services springing up here and there. That is shocking. On the 19th the Chief Minister announced that the Government would take over the permits of the operators who are having more than 10 permits. But the legislation has not yet been brought forward. I do not know at what stage that legislation is.

The present amendment seeks to fix the ceiling of bus routes at 10. The amending Act does not say that the excess over and above 10 bus route permits with the operators is to be taken over by the Government. That I want the Government to enact. The idea, according to me, seems to be to patronise the small operators who have already entered the field subsequent to 1963. My only fear, very serious fear, is that this particular measure is not brought with the avowed policy of any socialistic pattern or anything else. But this is an insidious method by which the Government are arming themselves with sufficient powers of areas of patronage by which they can help several of their party men. That is my concern......

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்* : கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும் போது பஸ் ரூட்கள், பத்துக்கு மேல் உள்ளவற்றை எடுத்து பார்டிமென், கட்சிக் காரர்களுக்கும் வேண்டியவர்களுக்கும் சலுகை காட்டுவதற்காக இந்த அதிகாரத்தை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது, இப்படி கட்சிக்காரர்களுக்கு சலுகை காட்டுவதை விட பஸ்களை தேசிய மயமாக்கி விடுவது நல்லது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். பலவிடங்களில் தவறுகள் நடந்திருக்கின்றன, ஊழல் நடந்திருக்கிறது என்றெல்லாம் பேசினார்கள். நான் கேட்டுக்கொள்வது, பொதுவாக இப்படிக் குற்றஞ் சாட்டுவதை விட அவரைப் போன்ற அனுபவம் உள்ளவர்கள் பொதுக் குற்றச் சாட்டு சாட்டக் கூடாது. ஸ்பெஸிபிக் கேஸஸ், எந்த பஸ் ரூட்டைக் கொடுத்ததில் ஊழல் நடந்தது என்று சொல்லி இப்படிப்பட்ட ஊழல் நடந்திருக்கிறது, உங்கள் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால் கூட அதைப் பற்றி பரிசிலிக்கலாம்.

இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் பஸ் வாங்கக் கூடாது என்று சொல்வார்களானால் அந்த வாதத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகயில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எங்கேயாவது தவறு நடந்து நியாயமாகக் கிடைக்கவேண்டியவர்களுக்கு கிடைக்காது கட்சிக்காரர் ஒருவரை ஆதரிக்க வேண்டுமென்பதற்காக கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் விசாரிக்கலாம் அவர்களுக்கு சட்டம் தெரியும். அரசாங்கம் அதிகாரத்தை எடுக்கக்கொள்ளவில்லை தவறு நடந்திருக்கிறது என்றால் தெளிவாக சொல்லவேண்டும். பத்திரிகைகளில் பெயர் வந்தால் போதும் என்று பர்ஸனைலிட்டி கல்ட்டை வளர்த்துக்கொள்ள வேண்டாமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



DR. H. V. HANDE : There are several charges which the Hon. Minister for Food has made. I will start with the last charge—personality cult. Now he has levelled a charge against me attributing a motive to my speech. I would say that the motive of the Hon. Minister for Food for making this statement is personality cult because he wants to appear as though he is defending my charges against the Chief Minister. He is rising unnecessarily to defend others attributing motive to me.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்* : No. just a minute. The charges which the hon. Member is making is unnecessary. குற்றம் சாட்டும்போது அரசாங்கத்திற்கு வேண்டியவர்களுக்கு சலுகை கொடுத்து இருக்கிறார்கள் என்று பொதுப்படையாக குற்றம் சாட்டாமல், யாருக்கு கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும். முதலமைச்சரைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக நான் வரவேண்டும் என்பதில்லை. முதலமைச்சர் எழுந்தால் அவர்களே பதில் சொல்லிவிடுவார்கள். நான் எழுந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. யாருக்கு கொடுத்து இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கத் தயார்.

MR. SPEAKER : Be specific.

DR. H. V. HANDE : The Hon. Minister has made the charge that I am trying to develop 'personality cult'. Then he has stated that I am interested in headlines in newspapers. The only answer that I can give is that I am in the lease bothered about it and no paper is run by me.

Now I would like to read some excerpts from the Statement of Objects and Reasons appended to the Bill. It is stated—

'The Government have noticed that many persons are holding stage carriage permits as benamidars and they have decided that this practice should be put an end to. . .'

It is not as though I am making a charge.

MR. SPEAKER : You have not answered the question raised by the Hon. Minister.

DR. H. V. HANDE : Sir. I have not completed my point.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : The point is. . . கட்சிக்காரர்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நீங்கள் தெளிவுபடுத்தவேண்டும். அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அதை விட்டு விட்டு. மசோதாவிலுள்ள மொத்தமான நோக்கங்களைப் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

*(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)*

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்* : தயவுசெய்து கொஞ்சம் உட்காருங்கள். தலைவரவர்களே, இந்த பெருந்து வழித்தடங்கள் கொடுக்கும் உரிமையை அரசாங்கம் வைத்துக்கொண்டு அவ்வப்போது மனுக்களைக் கேட்டு,

நாடப்படுவது அல்ல. நான் ஒரு இன்ஜினீர், டாக்டர் ஹாண்டே அவர்கள் டாக்டர். ஆகவே இரண்டுபேருமே சட்டத்தின் துணை கொண்டுதான் இந்த விவகாரத்தைப் பார்க்கவேண்டும்.

யார் பேருந்து வழித்தடங்களுக்காக உரிமங்கள் கேட்கிறார்களோ அவர்கள் ஆர்.டி.ஏ. வுக்கு விண்ணப்பம் போடவேண்டும். மோட்டார் வெஹிகில்ஸ் சட்டத்தின் செக்ஷன் 48, 47 பிரிவில் குறிப்பிட்டுள்ள படி அந்த மனுதாரர்களின் தகுதி, அனுபவம், அவர்கள் வைத்துக்கொண்டு இருக்கும் பணிமனை இவை போன்றவற்றை வைத்துதான் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. ஆர்.டி.ஏ. ஒரு குவாசி-ஜுடிஷியல் பாடி. ஏதோ 10 பஸ்களுக்கு மேல் உள்ளவர்களிடமிருந்து பெர்மிட்டை சர்க்கார் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு இஷ்டப்பட்டவர்களுக்கு கொடுப்பது முடியாத காரியம். மாண்புமிகு உறுப்பினர் பேசியது சட்டத்தைப் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டுகிறது.

DR. H. V. HANDE : Sir, I am coming to the charges levelled by the Hon. Minister. .

MR. SPEAKER : You are levelling charges. Let the hon Member be specific. . . .

DR. H. V. HANDE : I am coming to the point. Why should everybody be impatient?

As I have already pointed out, in the Statement of Objects and Reasons it is stated—

'The Government have noticed that many persons are holding stage carriage permits as benamidars and they have decided that this practice should be put an end to. . . .

I have got a list of benamidars and the Government themselves are seized of the fact that there are a number of irregularities as far as the bus permits are concerned. I shall point out a few irregularities. . . . .

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆதாரம் இல்லாமல் மன்றத்தில் பேசியது பெரிய விளைவுகளை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருப்பதால் அவைகளையும் இது சம்பந்தமான மற்ற குறுக்கீடுகளையும் மன்றத்தின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று நான் கட்டளையிடுகிறேன்.

இத்துடன் பேரவையின் இன்றைய அலுவல்கள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



## 5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

152. Notification issued with G.O. Ms. No. 1974, Public (Services-A), dated 27th August 1970, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

153. Notification issued with G.O. Ms. No. 563, Public (Services-A), dated 2nd March 1971, in regard to certain amendments to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]

154. Notification issued with G.O. Ms. No. 575. Home. dated 29th February 1968, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the Table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

### B. Reports, Notifications and other papers.

*119. Annexure to the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971 (L.A. Bill No. 15/71).

120. List of unstarred questions and answers from 1 to 25.

* Despatched to Members on 9th July 1971.

## இணைப்பு 1

[18-ம் பக்கத்திலுள்ள 201-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

(1) 22—1—71 அன்று நடந்த கூட்டத்தின்படி வர்த்தகக் குழு எடுத்துரைத்த பரிந்துரைகளுக்கு ஏற்ப, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நிறுவனங்களின் வேலைகளை ஆராயும் பொருட்டு, இந்திய அரசு கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது.

1. திரு. பகவன் சிங், இணைச் செயலாளர், வெளிநாட்டு வர்த்தக அமைச்சகம். .. தலைவர்.
2. திரு. ஜி. எல். பன்சால், பொதுச் செயலாளர், எப். ஐ. சி. சி. ஐ., புதுடெல்லி. .. உறுப்பினர்.
3. திரு. ஏ. சி. பானர்ஜி, செயல் துறை இயக்குநர், வர்த்தக வளர்ச்சி அலுவலகம். .. உறுப்பினர்.
4. திரு. எச். டி. சௌரி, பொது இயக்குநர், இந்திய வெளிநாட்டு வர்த்தகப் பள்ளி. .. உறுப்பினர்.
5. திரு. கே. ஈசுவரன், ஈசன் என்ஜினியரிங் கம்பெனி, லிமிடெட், சென்னை. .. உறுப்பினர்.
6. திரு. பி. நேரு, டாட்டா ஏற்றுமதி பிரிவின் பொறுப்பாளர், பம்பாய். .. உறுப்பினர்.
7. திரு. சுபாஷ் மேத்தா, நிர்வாகம் மற்றும் விற்பனை பிரிவின் துணை அறிவுரையாளர், புதுடில்லி. .. உறுப்பினர்.
8. திரு. எஸ். கே. மோடுவல், துணைச் செயலாளர், வெளிநாட்டு வர்த்தக அமைச்சகம். .. உறுப்பினர், செயலாளர்.

2. புதுடில்லியில் மார்ச்சுத் திங்கள் முதல்நாள் இந்தக் குழு கூடியது என அறியப்படுகிறது. பின்பு அது பம்பாயிலும், கல்கத்தாவிலுமுள்ள வெவ்வேறு ஏற்றுமதி ஊக்குவிக்கும் நிறுவனத்தாரை சந்தித்தது.

3. சென்னையில் இக்குழு தோல் ஏற்றுமதி ஊக்குவிக்கும் நிறுவனம் புகையிலை ஏற்றுமதி ஊக்குவிக்கும் நிறுவனம், கைத்தறித்துணி ஏற்றுமதி ஊக்குவிக்கும் நிறுவனம், மாநில என்ஜினியரிங் பொருட்கள் ஏற்றுமதி ஊக்குவிக்கும் நிறுவனம், பிளாஸ்டிக். லினோலியம் ஆகியவற்றின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நிறுவனம் ஆகியவற்றைச் சந்தித்தது.

இதற்குமேல் விவரங்கள் கிடைக்கவில்லை.

The Government of India had set up a Committee with the following members for reviewing the work of the Export Promotion Councils, following the recommendations made by the Board of Trade at its meeting held on 22nd January 1971—

(1) Shri Bhagwan Singh, Additional Secretary, Ministry of Foreign Trade—*Chairman*.

(2) Shri G. E. Bansal, Secretary-General, FICCI, New Delhi—*Member*.



(3) Shri A. C. Banerjee, Executive Director, Trade Development Authority—*Member*.

(4) Shri H. D. Shourie, Director-General of Indian Institute of Foreign Trade—*Member*.

(5) Shri K. Eswaran, Easun Engineering Co., Ltd., Madras—*Member*.

(6) Shri B. Nehru, Director-in-charge, Tata Exports, Bombay—*Member*.

(7) Shri Subhash Mehta, Deputy Management & Marketing Consultant, New Delhi—*Member*.

(8) Shri S. K. Modwel, Deputy Secretary, Ministry of Foreign Trade—*Member-Secretary*.

2. It is understood that the Committee had its meeting on 1st March in New Delhi. Subsequently it met different Export Promotion Councils in Bombay and Calcutta also.

3. In Madras, the Committee met the Leather Export Promotion Council, Tobacco Export Promotion Council, Handloom Export Promotion Council and the Regional Exporters of Engineering Export Promotion Council and Plastic and Linoleum Export Promotion Council.

No further details on this are available.

## இணைப்பு 2.

[26-ம் பக்கத்தில் 2-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிடாத வினாவிற்குரிய விடையைக் காண்க].

| *Serial number and name of the Society.* (1) | *For the year 1969-70* Profit. (2) | Loss. (3) | *For the year (30-11-70)* Profit. (4) | Loss. (5) |
|---|---|---|---|---|
| | RS. | RS. | RS. | RS. |
| *South Arcot district.* | | | | |
| 1 Ramarajapuram Mat Weaver's Industrial Co-operative Society. | .. | 139 | .. | 755 |
| 2 Krishnakuppam Mat Weavers' Industrial Co-operative Society. | 584 | .. | .. | 654 |
| *Salem district.* | | | | |
| 3 Uthamasolapuram Mat Weavers' Society. | 2,793 | .. | 1,092 | .. |
| 4 Irupali Mat Weavers' Society .. | .. | 558 | 3,192 | .. |
| 5 Idapadi Date Mat Weavers' Society. | .. | 133 | .. | 682 |

| Serial number and name of the Society. (1) | For the year 1969-70. Profit. (2) | Loss. (3) | For the year (30-11-70). Profit. (4) | Loss. (5) |
|---|---|---|---|---|
| | RS. | RS. | RS. | RS. |
| *Coimbatore.* | | | | |
| 6 Dharapuram Mat Weavers' Industrial Co-operative Society. | 598 | .. | 1,965 | .. |
| 7 Kolathupalayam Mat Weavers' Industrial Co-operative Society. | 2,955 | .. | 268 | .. |
| 8 Lurdupuram Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 132 | 324 | .. |
| *North Arcot district.* | | | | |
| 9 Wandiwash Central Mat and Korai Growers Industrial Co-operative Society. | 2,068 | .. | 7,365 | .. |
| *Thanjavur.* | | | | |
| 10 Vilandrasamundram Mat Weavers' Society. | .. | 316 | .. | 2,134 |
| 11 Vandiyaruppu Mat Weavers' Society. | .. | 1,428 | .. | 1,429 |
| 12 Vilangudi Mat Weavers' Society . | .. | 389 | .. | 1,297 |
| *Tiruchirappalli district.* | | | | |
| 13 Karur Central Korai & Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 782 | .. | 2,941 |
| 14 Theethanviduthi Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 9,203 | 2,022 | .. |
| *Madurai district.* | | | | |
| 15 Thenoor Mat Weavers' Industrial Co-operative Society. | 840 | .. | 47 | .. |
| 16 Kodanginaickenpatti Mat Weavers' Industrial Co-operative Society. | 1,279 | .. | 645 | .. |
| 17 Vadapatti Harijan Mat Weavers' Industrial Co-operative Society. | 326 | .. | 160 | .. |
| *Tirunelveli district.* | | | | |
| 18 Eruvadi Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 1,582 | .. | 1,162 |
| 19 Giriammalpuram Mat Weavers' Industrial Co-operative Society. | 266 | .. | .. | 876 |
| 20 Kurichikulam Mat Weavers' Industrial Co-operative Society. | 977 | .. | 5,607 | .. |



| Serial number and name of the Society. (1) | For the year 1969-70 Profit. (2) | Loss. (3) | For the year (30-11-70) Profit. (4) | Loss. (5) |
|---|---|---|---|---|
| | | (RUPEES) | | |
| *Tirunelveli district*—cont. | | | | |
| 21 Keelaveeranam Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 2,806 | 138 | .. |
| 22 Pothukudi Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 262 | 1,438 | .. |
| 23 Pathamadai Mat Weavers' Industrial Co-operative Society. | 5,933 | .. | 7,610 | .. |
| 24 Raghumaniapuram Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 774 | .. | 606 |
| 25 Veeravanallur Mat Weavers' Industrial Co-operative Society. | 10,506 | ... | 9,530 | .. |
| 26 Thulukkarpatti Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 698 | .. | 389 |
| 27 Lakshmi Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 99 | 123 | .. |
| 28 Mudaliarpatti Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 1,058 | .. | 395 |
| 29 Pettai Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 191 | 141 | .. |
| *Kanyakumari district.* | | | | |
| 30 Soorangudi Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 1,559 | 431 | .. |
| 31 Madhavalayam Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 913 | 461 | .. |
| 32 Thuckalay Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 1,847 | .. | 289 |
| *Dharmapuri district.* | | | | |
| 33 Erulapatti Mat Weavers' Industrial Co-operative Society. | .. | 22 | .. | 297 |
| 34 Paparapatti Mat Weavers' Industrial Co-operative Society. | 37 | .. | .. | 402 |

இணைப்பு 3.

[28-ம் பக்கத்தில் 5 ஆம் எண்ணுள்ள [illegible] குறிய விடையைக் காண்க].

**LIST OF INSURANCE DISPENSARIES, UTILISATION DISPENSARIES AND PART-TIME CLINICS.**

**1. *Madras and Suburbs.***

1 Kondithope.
2 Saidapet-I.
3 Saidapet-II.
4 Triplicane.
5 Choolai.
6 Perambur-I.
7 Perambur-II.
8 Perambur-III.
9 Pallavaram.
10 Tondiarpet-I.
11 Tondiarpet-II.
12 Red Hills.
13 Avadi.
14 Mobile.
15 Harbour.
16 Sembiam.
17 Ambathur.
18 Egmore-I.
19 Egmore-II.
20 Kilpauk-I.
21 Kilpauk-II.
22 Tiruvottiyur-I.
23 Tiruvottiyur-II.
24 Tiruvottiyur-III
25 Mount Road.
26 Mylapore.
27 Tambaram.
28 Kodambakkam.
29 Meenjur.

**2. *Coimbatore.***

1 Mobile (Coimbatore).
2 Mobile - II (Coimbatore).
3 Singanallur.
4 Uppilipalayam.
5 Ondiputhur.
6 Vellalur.
7 Sowripalayam.
8 Irugur.
9 Podsnur-Kurichi-Sundraputam
10 Kuniamuthur.
11 Pappanaickenpalayam.
12 Ramanathapuram.
13 Ganapathy (Gandipuram).
14 Tudialur.
15 Perianaickenpalayam.
16 Peelamedu.
17 Kattoor.
18 R.S. Puram.
19 Raja Street (Selvapuram).
20 Sulur.
21 Mettupalayam-I.
22 Mettupalayam-II.
23 Erode.
24 Pollachi.
25 Tiruppur-I.
26 Tiruppur-II.
27 Udumalpet.
28 Udumalpet (Mobile).
29 Palladam.

**3. *Madurai.***

1 Tallakulam.
2 Munichalai Road.
3 Tirunagar.
4 Ponnagaram.
5 Palanganatham.
6 Dindigul.
7 Paravai.
8 Maninagaram.
9 Mobile (Madurai).



**4. *Salem.***

1 Salem.
2 Mobile Salem.
3 Mettur Dam (Lower).
4 Mettur Dam (Upper).
5 Pallipalayam.

**5. *Ramanathapuram.***

1 Sivakasi.
2 Rajapalayam.
3 Virudhunagar.

**6. *Tiruchirappalli.***

1 Tiruchirappalli-I.
2 Tiruchirappalli-II.
3 Cauverynagar.
4 Pudukottai.
5 Tiruchirappalli (Mobile).

**7. *North Arcot.***

1 Gudiyatham.
2 Vaniyambadi.
3 Vellore.
4 Arni.

**8. *Tirunelveli.***

1 Tirunelveli.
2 Vickramasingapuram.
3 Tuticorin.
4 Thalayuthu.
5 Shencottah.
6 Koilpatti.
7 Tirunelveli (Mobile).

**9. *Thanjavur.***

1 Nagapattinam.
2. Kumbakonam.

**10. *Kanyakumari.***

1 Nagercoil.

**11. *South Arcot.***

1 Vadalur.
2 Nellikuppam.

**12. *North Arcot (Utilisation Dispensaries).***

1 E.I.D. Parry, Ltd., Ranipet.
2 Scudder Memorial Hospital, Ranipet.

**13. *Trichy (Utilisation dispensary).***

1. Dalmia Utilisation dispensary, Dalmiapuram.

**14. *Tirunelveli (Part-time dispensaries).***

1 Government Hospital, Ambasamudram.
2 Lower Dam camp Dispensary Papanasam.

***Hospitals.***

1 E.S.I. Hospital, Ayanavaram, Madras.
2 E.S.I. Hospital, Coimbatore.
3 E.S.I. Hospital, Madurai Start functioning with effect from 13th April 1971.)

---

செவ்வாய்க்கிழமை, 1971 ஜூலை 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மன்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. அ. மதியழகன் அவர்கள் தலைமையில் கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Visit of Italian Trade Team to Madras.*

* 214 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Italian Trade Team vtsited Madras about the 15th February, 1971;

(*b*) whether the State Government representatives met them; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) & (உ) இந்த தூதுக்குழு சில தொழிற்சாலைகளை பார்வையிட்டது.

மேலும் மாதவரத்தில் உள்ள இந்திய இத்தாலிய கால் அலி நிறுவன ஆரம்ப விழாவிலும் கலந்து கொண்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்த இத்தாலிய தூதுக்குழு இந்தியாவிற்கு வந்தபோது அதனுடைய சிபார்சுகளை அறிந்து கொண்ட அமைச்சரவர்கள் வெளிநாடு செல்லும்போது அந்த தூதுக் குழுவைச் சந்திப்பாரா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்தத் தூதுக்குழு நம்முடைய நாட்டில் என்னென்ன தொழிற்சாலைகளை உருவாக்கலாம் என்று பார்ப்பதற்காக வந்திருந்தார்கள். ஒரு தனியார் துறையோடு ஒரு கூட்டுத் தொழிற்சாலையை மாதவரத்தில் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். தொடக்க விழாவில் பங்குபெற வந்த அவர்கள் சென்னையிலுள்ள சில தொழிற்சாலைகளையும் பார்த்துச் சென்றிருக்கிறார்கள்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இத்தாலிய தூதுக்குழு வந்த நேரத்தில், இந்திய நாட்டில் போர்ட்டபிள் டைப் ரைட்டர்கள் செய்யக்கூடிய தொழிற்சாலை இல்லை என்பதையும், அவர்களோடு சேர்ந்து ஒரு தொழிற்சாலை அமைத்தால் இந்தியாவில் நல்ல முறையில் செயல்படும் என்றும் அறிவித்தார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றி யாரிடம் அறிவித்தார்கள் என்கிற தகவல் என்னிடம் இல்லை. அதுபற்றி அவர்கள் பேசியதைப்பற்றி கனம் உறுப்பினர் அவர்களிடம் தகவல் இருந்தால் அளிக்கலாம்.

* 215 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether footwear production is to be undertaken in this State under Indo-Italian auspices; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இந்திய அரசின் ஒப்புதல் பெற்று இத்தாலிய நாட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டுடன், தனியார் துறையில் இந்தோ-இத்தாலிய [illegible] உற்பத்தி நிறுவனம் ஒன்று சென்னையில் பாத அணிகள் செய்வதை மேற்கொண்டுள்ள இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 லட்சம்; செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5.7 லட்சம்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலைக்கு வின்னமங்கலத்திலுள்ள தொழிற்சாலையினுடைய தோல் பொருட்கள் பயன்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாட்டில் ஏராளமாக இதற்குரிய மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. நம்முடைய யூனிட்டிலிருந்துதான் கொடுக்கவேண்டும் என்று இல்லை. நம்முடைய யூனிட்டிலிருந்து வெளி நாட்டுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: செருப்பு, பூட்ஸ், போன்ற (ஃபுட்-வேர்) காலணிகள் செய்ய இந்தியாவிலேயே தனியார் துறையிலும் குடிசைத் தொழில்களிலும் பெரிய தொழிற்சாலைகளெல்லாம் இருக்கும்போது இம் மாதிரியாக இத்தாலியக் கம்பெனியோடு சேர்ந்து செய்ய வேண்டிய அவசியம் எப்படி வந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைப்பற்றி நாம் பரிசீலித்தோம். நம்முடைய தமிழ்நாட்டில் ஏராளமான மூலப் பொருட்கள் இதற்காக இருக்கின்றன. ஆனால், வெளிநாட்டுக்கு நாம் ஏற்றுமதி செய்யும்போது அவர்களுக்குத் தேவையான டிசைன்கள், நாம் (க்வாலிடி) முதலியவை அமைய வேண்டும் என்ற காரணத்தால் அவர்களோடு இப்படிப்பட்ட கூட்டு முயற்சி எடுத்தால் நம்முடைய பொருட்கள் வெளிநாடுகளில் விற்பனை ஆவதற்கு ஏதுவாக இருக்கும். அவர்களுடைய நாம் (க்வாலிடி) எந்த அளவுக்குத் தேவை என்பதையும் முடிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் தொழிற்சாலை வெறும் பத்து லட்ச ரூபாய் மூலதனத்தோடு துவக்கப்படுவதால் சிறிய தொழிற்சாலையாகத்தான் இருக்கக்கூடும். வெளிநாட்டு ஏற்றுமதி நிலையையும் ஆராய்ந்து பெரிய தொழிற்சாலையாக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேறுசில நாடுகளிலும் இதுபோன்ற தொழிற்சாலைகளை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். அந்த நாடுகளில் அந்தத்



3/N71·7

தொழிற்சாலைகளை அமைக்கும்போது அதிக அளவில் அமைக்கலாம் என்று நாம் இருக்கிறோம். நம்முடைய அரசுத் துறையில்கூட, வின்னமங்கலத்திலேயே கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு இதுபோன்று லெதர் குட்ஸ் செய்யலாமா, அதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெறலாமா என்ற முயற்சிகளையும் நாம் எடுத்து வருகிறோம்.

*Leather Factory at Wallajapet*

* 216 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Inustries be pleased to state—

(a) whether there is any proposal to set up a leather factory at Wallajapet in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

61517

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இம் மாநிலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்பதை அரசு உணருகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லெதர் பாக்டரி [illegible] பதனிடும் தொழிற்சாலைகள் ஏராளமாகத் தமிழ்நாட்டில் இருக்கின்றன. நாமும் வின்னமங்கலத்தில் வைத்திருக்கிறோம். லெதர் பாக்டரியை வாலாஜாவில் வைப்பதைப்பற்றித்தான் நான் சொன்னேன்.

திரு. கே. ஏ. வகாப்: வாலாஜாபேட்டையிலும் அதன் அருகில் இராணிப் பேட்டையிலும் ஏராளமான தோல் பதனிடும் தொழிற்சாலைகள் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றன. அவை சில நேரங்களில் நவீன முறையில் இல்லாமையினால் அங்கே சுகாதாரக் கேடான முறையில் இருக்கின்றன. ஆகவே, நவீன முறையில் தொழில் கூட்டுறவுத் துறையில் ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை அமைக்க இந்த அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவாளர்கள் முயற்சித்தால் உதவி செய்யலாம்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய நீதிமன்றங்கள்

* 217 வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டும், ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு சப்-கோர்ட்டும் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) இம்மாவட்டத்தில், நடப்பு ஆண்டில் வேறு எந்தெந்த இடங்களில் நீதி மன்றங்களை நிறுவ அரசாங்கம் திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இராஜபாளையத்தில் ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு நிறுவுவதற்கான பிரேரணை இம்மாநிலத்திலுள்ள சிவில், கிரிமினல் நீதி மன்றங்களின் அதிகார வரம்பை நிர்ணயிப்பதற்காக

அமைக்கப்பட்ட குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு சப்-கோர்ட்டு திறவுவதற்கான பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இல்லை.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் செஷன்ஸ் கோர்ட் மதுரையில் இருக்கிறது. அதை இராமநாதபுரத்திற்கே மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : புதிய சப்-கோர்ட்டுகள், புதிய ஜில்லா முன்சிப் கோர்ட்டுகள் அமைக்க வரதராஜன்—டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறதே, அது தன்னுடைய இடைக்கால அறிக்கையைக் கொடுத்திருக்கிறதா? இல்லையென்றால் அதன் அறிக்கை எப்போது கிடைக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதி மன்றம் அமைப்பதற்காக அந்தக் குழு அமையவில்லை. இருக்கின்ற நீதிமன்றங்களின் அதிகார வரம்பை நிர்ணயிப்பதற்காகவும், எந்த இடத்தில் நீதி மன்றம் மேலும் தேவைப்படலாம் என்பதைக் கண்டறிவதற்காகவும் தான் அது அமைக்கப்பட்டது. அது எந்த விதமான இடைக்கால அறிக்கையையும் தரவில்லை.

### *Cases of Thali snatching in Thanjavur District*

* 208 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of cases of gangs of men snatching "Thali" from the necks of married women have been reported from Thanjavur district around September 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) குற்ற பாரம்பரையைச் சேர்ந்த இரு குறவர் கூட்டத்தினர் ஒரு கூட்டத்தில் மூன்று பேரும் மற்றொன்றில் நான்கு பேரும் இருந்தனர். 1970-ல் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலும், அதைச் சுற்றியும் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்ட தாலிகள் பறிக்கப்பட்ட குற்றங்களுக்குப் பொறுப்பாளியாவர். தாலிகள் அனைத்தும் மீட்கப்பட்டு, ஏழு குற்றவாளிகளும் தண்டிக்கப்பட்டனர்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரி குற்றவாளிகள் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, மார்ச் மாதத்தில் மதுரை மாவட்டத்திலேயே இம்மாதிரியான சம்பவம் நடந்து, அதுவும் குற்ற பாரம்பரையினர் செயல்கள் என்று தெரிகிறது. ஆகவே இதுபோன்ற வேலைகளைச் செய்கிறவர்கள் யார், யார் என்பதை எல்லா மாவட்டங்களிலும் விவரங்களைச் சேகரிக்க போலீஸ்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?



மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அல்ல பல்வேறு மாவட்டங்களில் இப்படிப்பட்ட குறவர் கூட்டத்தினர், 'கேப்மாரி' என்று சொல்லக்கூடிய கூட்டத்தினர் ஆகியவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்து வருகிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இளையான்குடியைச் சேர்ந்த 35 பேர்கள் தஞ்சை, திருச்சி, கோவை, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களில் 1964-ஆம் ஆண்டில் இருந்து பெண்களின் நகைகளை பறிப்பதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு பத்துப்பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 13 ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகள், சொத்துக்கள் மீட்கப்பட்டன. இதைப்போல பம்பு செட்டுகளைத் திருடுகிற கூட்டத்தினர் 9 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினர் இதுபற்றி மிகுந்த கண்காணிப்போடுதான் முயற்சிகளைச் செய்கின்றனர்.

திரு. பெ. மலைச்சாமி : பெண்கள் அணியக்கூடிய தாலியைப் போல. சில ஆண்கள் புலிப்பல் கட்டி அணிவதைத் தடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை எந்தக் குறவர்களும் பறித்ததாக செய்தி வரவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சில ஆண்டுகளுக்கு முன்பு குற்றப் பாரம்பரையினருக்கு 'அவுட் ஆப் பவுண்ட்ஸ்' என்று வைத்திருந்தார்கள். மீண்டும் அம்மாதிரி செய்ய ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கையினை ஆராய்ந்து மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்டவர்கள் தாலியைத் திருடக்கூடிய நிலையில் ஒரு புதிய முயற்சியில் பிங்கர் டிப்ஸ்—கைரேகைகள் பதிவு கூடக் கிடைக்காத நிலையில் செயல்படுகிறார்களே, எந்த இடத்தில் இவர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவ்வளவு விவரங்கள் தெரிந்திருக்கும் உறுப்பினர் அதையும் தெரிந்துகொண்டிருந்தால் நல்லது.

திரு. எம். தேவராசன் : தாலி பறிக்கும் கூட்டத்தினரின் செயல் முறையை விளக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தச் செயல் முறையை விளக்கத் தேவையில்லை. அது விளக்கப்படுவதும் நல்லதல்ல.

### பல்லடத்தில் துணைக்கருவூலம்

*209 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடத்தில் சப்டிரஷரி ஆபீஸ் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் ஒன்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) 1971-72 நிதி ஆண்டின் திருத்திய வரவு-செலவு திட்டத்தில் பல்லடத்தில் துணைக் கருவூலம் ஒன்றை திறப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: அந்தப் பகுதி ஒரு வியாபார ஸ்தலமாக இருப்பதனாலும், அந்தப் பகுதியில் பஞ்சாயத்துயூனியன் சுல்தான்பேட்டை, பங்களூர் போன்ற இடங்களில் உள்ளவர்கள் அது மிகவும் தேவை என்று கருது வதனாலும் அதை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதனால்தான் 1971-72-ஆம் நிதி ஆண்டிலேயே பல்லடத்தில் ஒரு துணைக் கருவூலம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன்.

*Demonstration by students of Annamalai University*

* 210 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there was a students' demonstration in the Annamalai University about the 3rd February, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இது பொறையூரில் நடைபெற்ற குடியுரிமை பயிற்சிக் கூடத்தில் ஒரு மாணவியிடம் ஒரு விரிவுரையாளர் தகாத முறையில் நடந்தார் என்ற குற்றத்திற்காக அவரை வேலை நீக்கம் செய்வது பற்றி போராட்டம் நடந்தது. பல்கலைக்கழக அதிகாரிகள் விரிவுரையாளரை பணியிலிருந்து நீக்கினர். பின்பு இந்த ஆணை ரத்து செய்யப்பட்டது.

*Sandwich courses of study in Engineering*

* 211 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to introduce Sandwich courses of study in the Engineering colleges in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இப்பயிற்சிப் பிரிவுகளை எந்த எந்த பாடங்களில், எந்த எந்த தொழில் நுட்ப நிறுவனங் களில் ஆரம்பிக்கலாம் என பரிசீலிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

**நகராட்சி, மாநகராட்சித் தலைவர்கள் தேர்தல்**

* 212 வினா—திரு. கே. ஏ. வகாப்:
திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முனிசிபாலிடி, கார்பரேஷன் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்படும் திட்டம் ஏதும் அரசிடம் உண்டா?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நகராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. மாநகராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலுக்கு பின்பற்றப்படுகிற ஜனநாயக முறையே மாநகராட்சி மன்றத் தலைவர் தேர்தலுக்கும் பயன்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நகராட்சி மன்ற சங்கத் தலைவர்கள் இத்தகையத் தீர்மானத்தைப் போட்டு, ஏகமனதாக நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினார்கள். அந்தத் தீர்மானம் தான் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. மாநகராட்சி மன்றத் தலைவர்கள் சங்கத்திடம் இருந்து அப்படிப் பட்ட தீர்மானம் எதுவும் வரவில்லை. வருகிற சூழ்நிலை ஏற்பட்டால் அதைப் பற்றியும் யோசிக்கலாம்.

திரு. என். ஆறுமுகம்: ஊராட்சி மன்றங்களுக்குத் தலைவரை பொது மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும் முறை வந்த காரணத்தினால் ஒவ்வொரு வாக்காளருக்கும் பணம் கொடுத்தால்தான் வோட்டுபெற முடியும் என்ற நிலை இருக்கிறது. இதனால் பல சங்கடங்கள் இருக்கின்ற காரணத்தினால் நகராட்சி மன்றங்களுக்கு நேரிடையாகத் தேர்ந்தெடுக்கிற முறையைக் கைவிட்டு பழைய முறைப்படியே இருக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: முதலிலே இருந்த முறை மாற்றப் பட்டது, மறுபடியும் முதல் நிலைக்கே போயிற்று. இப்போது வாக்காளர் பெருமக்களே ஊராட்சி மன்றத் தலைவரை நேரிடையாகத் தேர்ந்தெடுக்கிற முறையை வைத்திருக்கிறோம். இந்த முறையின் தன்மையைப் பார்த்து ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொண்டுவரலாமா என்பது பரிசீலிக்கப்படும். நகராட்சி மன்றத் தலைவர்கள் சங்கத்தில் நகராட்சி மன்றத் தலைவர் மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யவேண்டும் என்று கோரி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வந்திருப்பதால் அரசு அதைப் பரிசீலனை செய்து வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற நிலை என்கிற போது மக்களது ஒத்துழைப்பையும், அன்பையும் பெற்று சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதைப்போல அவர்களும் வருகிற போது அவரது செல்வாக்கு மிகுதியாக இருக்கும். செலவாகிறது என்றால் 25, 30 உறுப்பினர்கள் கொண்ட அவையில் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிறபோதும் பெரும்பொருள் செலவழித்தாக வேண்டிய நிலைதான் வருகிறது. ஆகவே இன்றைக்கு அரசு இந்த இரண்டு பக்க வாதங்களையும் ஆராய்ந்து பார்த்து, அவர்கள் தீர்மானத்தைப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும்.

திரு. சொ. காவேரிமணியம்: தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றம், பேரூராட்சி மன்றம் ஆகியவற்றின் தேர்தல் நேரங்களில் ஜாதிவெறி அதிக மாகக் கிளப்பிவிடப்படுகின்றது. மேலும், கொலை, கொள்ளை, தீயிடுதல் போன்ற வெறிச்செயல்கள் சுமார் 200 வாக்காளர்கள் இருக்கின்ற இடத்திலேயும் நிகழ்கின்றன. இவற்றையெல்லாம் தடுப்பதற்கும், அமைதியை நிலைநாட்டு வதற்கும் அரசு ஓர் அட்வைசரி கமிட்டியை சிறிய ஊராட்சி மன்றங்களில் ஏற்படுத்தும் யோசனையை பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதற்கென்று ஒரு அட்வைசரி கமிட்டி வைத்து அதனுடைய யோசனையை எல்லோரும் கேட்டு நடப்பார்கள் என்று சொல்ல முடியாது. எல்லா அரசியல் வாதிகளும், அரசியல் கட்சித் தலைவர்களும் அவ்வப்போது நடை பெறுகின்ற தேர்தல்களின்போது ஜாதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்தால் நல்லது.

தவிர, ஜாதியின் முக்கியத்துவம் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும், ஜாதியின் அடிப்படையில் வென்றார்கள் என்று இல்லாமல், அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டதன் காரணமாகத்தான் வெற்றிபெற முடிந்தது. அரசியல் விழிப்புணர்ச்சி தற்பொழுது பெருகி வருகிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. பொது மக்களிடத்தில் ஜாதிப் பிரச்னைக்கு முக்கியத்துவம் தராத வகையில் அரசியல் வாதிகளும், அரசியல் கட்சித் தலைவர்களும் இதுபற்றி கருத்துக்களை எடுத்து வழங்குவதன் மூலமாக ஜாதி வெறியை அகற்றலாம். அரசியல்வாதிகளாலும், அரசியல் தலைவர்களாலும்தான் பொதுமக்களுடைய உளப்பாங்கைத் தெரிந்து கொண்டு நல்ல முறையில் நல்ல சூழ்நிலைக்கு அவர்களைக் கொண்டு வர முடியும்.

**திரு. கோவை. செழியன் :** தலைவர் அவர்களே, முனிசிபாலிடிகளைப் போன்று கார்ப்பொரேஷன் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், சில நேரங்களில் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும்போது ஆயிரக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை ஒருசில நான்கைந்து பேர்கள் தீர்மானம் கொண்டுவந்து நீக்குவது முறையாகுமா? அதற்குப் பதிலாக மக்களாலேயே மீண்டும் தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக மீண்டும் தேர்தலை நடத்துகின்ற உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது ஊராட்சி மன்றத் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்போது, அவர்கள் தவறு செய்கின்றபோது சிலபல விதிமுறைகளைச் சேர்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுமானால், ஐந்தாண்டுக் காலத்திற்கு அல்லது மூன்றாண்டுக் காலத்திற்கு எந்தத் தவறு செய்தாலும் தலைவர் பதவியில் நீடித்துக்கொண்டிருக்கலாம் என்று சொல்ல இயலாது. அந்த முறையைத் தான் ஊராட்சி மன்றங்களிலும் ஏற்படுத்த வேண்டி வரும். எந்த முறையைக் கையாள வேண்டுமென்று திட்டவட்டமாக இன்னும் முடிவு எடுக்கவில்லை. தக்க முடிவு எடுத்த பின்னர் அமல்படுத்தப்படும்.

**திரு. ஏ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தேர்தலிலே நிறைய செலவாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேட்பாளர் செலவு செய்வதைக் குறைத்து, அரசாங்கமே சில செலவுகளை ஏற்றுக்கொண்டு, வேட்பாளர் அதிகம் செலவு செய்வதைத் தடுத்து நிறுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தேர்தல் நடத்துகின்ற முழுப் பொறுப்பையும் அரசாங்கம்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறது. உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்ற செலவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதும் சரியல்ல. தேர்தலுக்கு நிற்பவர்கள் பொதுமக்களை, எப்படி, எந்தெந்த முறையில், யார்யாரை இன்னின்ன விதமாக கவர முடியுமோ அப்படி கவருவதற்கு முயல்கிறார்கள், பொதுமக்களை தங்கள்பால் ஈர்க்கிறார்கள். அப்படி மக்களை ஈர்த்துக்கொண்டால் முறைப்படி செலவு செய்ய வேண்டுமென்ற அவசியமே இல்லை. உறுப்பினர்கள் பார்த்து தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நிலையிருந்தால் நல்லது. அவர்கள் தேர்தலை நடத்துகின்ற அளவுக்கு செலவுகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்வது இயலாத காரியம். அரசாங்கமே தேர்தல் செலவுகளை ஏற்றுக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் உறுப்பினர்களின் செலவை அவரவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.





**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கும், பேரூராட்சி மன்றங்களுக்கும் தலைவர் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவதனால், தலைவருக்கும் பொதுமக்களுக்கும் நல்ல தொடர்பு இருக்கிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்திற்கும் தலைவர் தேர்தலை நேரடியாக நடத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அது அடுத்த கட்டமாக யோசிக்கப்படும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஊராட்சி மன்றத்திற்கு நேரடியாக தேர்தலை நடத்திப் பார்த்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதிலிருந்து நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்பது தகவல்களிலிருந்து தெரிகிறது. அந்த மாதிரி நல்ல நிலை இருக்கிறதென்ற கருத்துக்களை மற்றவர்களும் கொடுத்தால் ஊராட்சி ஒன்றியத் தலைவரையும் தேர்ந்தெடுப்பதுபற்றி அடுத்த கட்டத்தில் யோசித்துப் பார்க்கலாம்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திற்கும், சட்ட மன்றத்திற்கும் தேர்தல் ஐந்தாண்டுக்கு ஒரு முறை என்றும், மாநகராட்சிக்கு மூன்று ஆண்டுக்கு ஒரு முறை என்று இருக்கிறது. ஆகவே, மாநகராட்சிக்கும் ஐந்தாண்டுக்கு ஒரு முறை தேர்தல் என்று மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சி மன்றத் தலைவராக இருப்பதை அறிவோம். ஐந்தாண்டுகளாக நீடிக்க வேண்டுமென்று கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. இதுபற்றிய முடிவினை அரசாங்கம் விரைவிலே எடுக்கும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் சுயேச்சையாக சின்னங்களை ஒதுக்கி வாக்களிக்கச் செய்கிறார்கள். இப்படிச் செய்வதால் யார் யார் எந்தெந்த கட்சி சார்பில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியின் சின்னத்தை அவர்களுக்கு ஒதுக்கித் தர அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கட்சிகளுக்கென்று சின்னங்கள் இருந்தாலும், கட்சி சார்பற்ற முறையில் இந்தத் தேர்தல்களில் கலந்துகொள்வதால், சுயேச்சை சின்னங்கள் வேட்பாளருக்கு

ஒதுக்கப்படுகின்றன. வேட்பாளர்கள் கட்சிக்காரர்களாயிருந்தாலும் தேர்தலில் கட்சியின் சார்பில் நிறுத்தப்படுவதில்லை. ஆகவே, அவர்களுக்கு தனிச் சின்னம் ஒதுக்கப்படுகிறது, கட்சி சின்னம் ஒதுக்கப்படுவதில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Education and Local Administration whether there is a proposal before the Government to recommend to the Union Government to fix some minimum educational qualifications for the contesting candidates for the various elections?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாடாளு மன்றத் தேர்தலுக்கும், சட்டமன்றத் தேர்தலுக்கும் விதிமுறைகள் வைக்கப்பட வில்லை. வயது பற்றிய தகுதியும் வேறுபல தகுதிகளும் வைக்கப்பட்டிருக் கின்றன. அதற்கான சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது ஊராட்சி மன்றத் திற்கும், ஒன்றியத்திற்கும் ஏற்படுத்த வேண்டியிருக்கும். இப்போதைக்கு ஏற்படுத்த முடியாது.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றத் தேர்தலில், உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் முறையில் முறைகேடுகள் நடைபெறுகின்றன. சில ஊர்களில் அங்கத்தினர்களைக் கடத்திக்கொண்டு போகிறார்கள், ஆகவே, அரசு தீவிரமாக ஆலோசித்து மக்களே நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே அது பரிசீலனையில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, எந்தத் தேர்தல் வந்தாலும் எல்லா அரசியல் கட்சிகளும் பொதுக்கூட்டங்கள் போடுகின்றன, சுவரொட்டி கள் மூலம் விளம்பரம் செய்கின்றன, இதனால் செலவு அதிகமாகிறது. வேட் பாளர் பெயரை மட்டும் அறிவித்துவிட்டு, இம்மாதிரி விளம்பரங்கள் செய்யக் கூடாது என்று அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த ஜனநாயகத்திலும் அது நடைபெறாது. ஜனநாயகத்தின் பிறப்பிடமாகிய கிரேட் பிரிட்டனிலும் சரி, அமெரிக்காவிலும் சரி, மிகத் தீவிரமான முறையில் தேர்தலுக்கு விளம்பரங்கள் செய்து செலவு செய்கிறார்கள். அந்த நாடுகளோடு ஒப்பிட்டால் நம் நாட்டில் தேர்தல் விளம்பரங்களுக்கான செலவு மிகமிகக் குறைவுதான். ஜனநாயகத்தில் தேர்தலுக்கு கட்சிகள் போட்டியிட முன்வரும் போது, தங்களுடைய கொள்கைகளை, தங்களுடைய கருத்துக்களை வெளியிடு வதற்கு இப்படிப்பட்ட விளம்பரங்களுக்கு அவசியம் ஏற்படுகிறது.

திரு. என். ராஜாங்கம் : தலைவர் அவர்கள், சென்னைபோன்ற மாநகராட்சி மன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரதிநிதித்துவம் ஆண்டுக்கு ஒருவர் வருகிறமாதிரி வழக்கம் இருக்கிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள், யூனியன் களில் தமிழ்நாட்டில் பெரும்பகுதியான இடங்களில் வர முடியாது. ஆகவே, யூனியன்களிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரதிநிதித்துவம் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட யோசனை எதுவும் அரசாங்கத்ினுடைய பரிசீலனையில் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் கட்சி அடிப்படையில் நடைபெறுவதில்லை. வேட்பாளருக்கு கட்சி சின்னம் ஒதுக்கப்படுவதில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் வேட்பாளருக்கு ஒதுக்கப்படுகின்ற சின்னங்கள் கிராம மக்கள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவாறு இல்லை. உதாரணமாக 'ரோடு ரோலர்' சின்னம் தருகிறார்கள் என்றால், கிராம மக்கள் ரோடு ரோலரைப் பார்த்துக்கூட இருக்க மாட்டார்கள். குறிப்பாக கிராமத்திலுள்ள பெண்கள் பார்த்திருக்க மாட்டார்கள். கிராம மக்கள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வேட்பாளருக்கு சின்னங்கள் ஒதுக்கினால் நன்றாக இருக்கும். ஆகவே, கிராமங்களில் எல்லோருக்கும் புரியும்படியாக அதாவது பூசணிக்காய், அவரைக் காய், கத்தரிக்காய், முருங்கைக்காய் போன்ற காய்கறி வகைகளையும், பழங்களையும் சின்னமாக ஒதுக்கித்தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற யோசனையை வேண்டுமென்றால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம். பெரும்பான்மையான வகையில் சின்னங்கள் ஒதுக்க வேண்டு மென்று தேர்தல் கமிஷன் கூறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையை ஆராய்ந்து பார்க்கலாம், பின்னர் அவர்களுக்கு தெரிவிக்க செய்யலாம்.

*Utilisation of Railway Cess Fund*

* 213 Q.—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether instructions have been issued by the Government to the District Collectors to distribute railway cess fund to Panchayat Unions; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இரயில்வே செஸ் தீர்வை நிதியை பயன்படுத்தும் முறை குறித்து அரசு மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு சில அறிவுரைகள் பிறப்பித்துள்ளது.

(இ) அறிக்கை @ சபையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த செஸ் நிதியிலிருந்து 1970-71-ஆம் ஆண்டுக்கு எவ்வளவு கிடைத்தது என்றும் மாவட்ட வாரியாக எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் செஸ் நிதியிலிருக்கின்ற பணம் 1—6—1968 கணக்குப்படி.

| | |
|---|---|
| திருநெல்வேலி | 7,73,713 |
| திருச்சி | 1,60,000 |

@ 851-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இராமநாதபுரம் | 1,60,546 |
| தென் ஆற்காடு | 8,44,000 |
| மதுரை | 7,08,607 |
| சேலம் | 31,70,254 |
| தஞ்சாவூர் | 1,30,38,780 |
| கோயம்புத்தூர் | 37,80,544 |

ரூபாய் என்று இருக்கிறது. இதிலேயிருந்து ஓரளவுக்கு எடுத்துக்கொண்டு பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரக் குறிப்பு இல்லை.

THIRUMATHI T. N. ANANTHANAYAKI : For what purposes the cess fund is being utilised for Panchayat Unions,

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே அதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தூய நீர் வழங்கல், தெரு விளக்குகள் போடுதல், தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், தாய்-சேய்நல விடுதிகள், மருந்தகக் கட்டடங்கள் கட்டுதல், இணைப்புச் சாலைகள் போடுதல் ஆகியவற்றிற்காக இந்த செஸ் நிதியிலிருந்து பயன்படுத்தலாம் என்று இருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த ரயில்வே செஸ் நிதியைப் பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்குச் செயற்குறிப்புகள்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மருத்துவக் கல்லூரிக்காக அந்த நிதியைப் பயன்படுத்தலாம் என்ற முறையிலே அந்த மாவட்ட வளர்ச்சிக் குழு முடிவெடுத்திருக்கிறது. அதை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அங்கே மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படுகின்ற உத்தேசம் உண்டா இல்லையா? இல்லையென்றால் மற்ற காரியங்களுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்தலாம் என்று முடிவு எடுத்து அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மருத்துவக் கல்லூரி சேலத்திலே ஆரம்பிக்கத் திட்டம் இல்லை. மாவட்ட வளர்ச்சிக் குழு அப்படிப்பட்ட தீர்மானத்தைப் போட்டிருக்கிறது. மருத்துவக் கல்லூரியில் பயில்கின்றவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டியதன் அவசியத்தைப்பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே விளக்கியிருக்கிறார்கள். ஆகவே, அங்கே மருத்துவக் கல்லூரி துவங்கப்படுமா இல்லையா என்பதைப்பற்றிய திட்டவட்டமான முடிவு எடுத்ததற்குப் பிறகு அந்த நிதியை எந்த வகையிலே செலவழிக்கலாம் என்பதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. என். எஸ். பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்திலே செஸ் நிதி வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிறதா என்பதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. அங்கே ரயில் போக்குவரத்து நடக்கிறது. எனவே பதில் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே செஸ் நிதி இல்லை, இருந்திருந்தால் அதைக் குறிப்பிட்டிருப்பார்கள்.



திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, மாவட்டங்களுக்குக் கிடைக்கின்ற செஸ் நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு எந்த விகிதத்திலே பிரித்து கொடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செஸ் நிதியிலிருந்து ஒதுக்கப்படுகின்ற பணம் நான் ஏற்கனவே குறிப்பிட்ட வரிசையிலேதான் பயன்படுத்தப்படுகிறது. தூய நீர் வழங்கல் என்பதற்கு 50 சதவீதம் ஒதுக்கப்படுகின்றது. மற்றவைகளுக்கு வரிசைப்படி தெரு விளக்குகள், தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், தாய்சேய் நல விடுதிகள், மருந்தகக் கட்டடங்கள், அதற்குப் பிறகு இணைப்புச் சாலைகள் என்ற வகையிலேதான் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எவ்வளவு என்ற விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் புள்ளிவிவரங்கள் தனியாகத் திரட்டித் தரலாம்.

திரு. மு. சண்முகம் : தலைவர் அவர்களே, ரயில்வே செஸ் நிதி விதிப்பு பாதைகளைச் சீர்திருத்தம் செய்வதற்கு மட்டுந்தான் விதிக்கப்படுகிறது என்பது உண்மையா? அப்படி இருந்தால் பாதைகளைச் சீர்திருத்தி அமைக்கமட்டும் பயன்படுத்த அரசாங்கம் முயலுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே சொன்னேன் இது பாதைகளுக்கு மட்டுமல்ல. வேறு பல காரியங்களுக்கும் பயன்படுத்தப் படுகிறது. முதல் சலுகை தூய நீர் வழங்கலுக்கும், அதற்குப் பிறகு வரிசைப்படி தெருவிளக்குகள், பள்ளிக்கூடங்கள், மகப்பேறு நிலையக் கட்டடங்கள், மருந்தகங்கள், இணைப்புச் சாலைகள் இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. உரோ. எட்மண்ட் : ரயில்வே செஸ் நிதியை மாவட்ட ஆட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பகிர்ந்து அளிக்கின்றார்கள். அப்படி அளிக்கப்படுகின்ற தொகை குறைந்த தொகையாக இருக்கின்ற காரணத்தினால் பல காரியங்களுக்கு பயன்படுத்த முடியாமல் போகிறது. எனவே மாவட்டத் தலைவரே ஒரு முக்கியமான வேலையை எடுத்துக்கொண்டு அதை நிறைவேற்றுகின்ற அளவிலே இந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முன்னமேயே குறிப்பிட்டபடி எல்லா வகைகளிலும்தான் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வேலைக்குத்தான் பயன்படுத்தவேண்டுமென்று வைத்துவிட்டால் ஒரு ஊரோ அல்லது ஒரு பகுதியோதான் அந்தப் பலனை அடையும். எனவே பரவலாக அப்படிப் பல காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று ஒன்றியத் தலைவர்களே கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படித்தான் செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஆர். சின்னசாமி : அமைச்சர் அவர்கள் மாவட்டவாரியாக செஸ் நிதியைப்பற்றி அறிவித்தார்கள். அதிலே தர்மபுரி மாவட்டத்தைப் பற்றி எந்த விதமான குறிப்பும் வரவில்லை. சேலம் தர்மபுரி இரண்டும் ஒன்றாக இருந்தது. அதனால் ஒன்றாக இருக்கலாம். தர்மபுரி மாவட்டத்திற்கு என்று தனியாகப் பிரித்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சேலம் மாவட்டத்திற்கு என்றுதான் செஸ் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திற்குப் பங்கு உண்டா இல்லையா என்பது தெரியவில்லை. ஏற்கனவே தர்மபுரியிலே ரயில்

போக்குவரத்து உண்டா இல்லையா என்பது ஆராயப்படவேண்டும். எனவே தனியாகக் கொடுக்கப்படவேண்டுமா என்பதும் ஆராயப்படவேண்டியதாகும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிற நேரத்திலே சேலத்திற்கு மருத்துவக் கல்லூரி இல்லை என்று குறிப்பிட்டார்கள். மாவட்ட வளர்ச்சிக் குழு செஸ் நிதியை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று சிபாரிசு செய்தால் அதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அங்கே ஏற்படுத்துகின்ற திட்டம் இல்லை என்றுதான் கூறினேன். அப்படிப்பட்ட முயற்சியே வராது என்று நான் குறிப்பிடவில்லை. இதைப்பற்றி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முடிவெடுக்கவேண்டும். அகில இந்தியாவிலும் எடுக்கப்படுகின்ற முடிவின் அளவிலே நாமும் முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். திட்டவட்டமாக இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்தபிறகு நாம் அந்த நிதியை என்ன செய்வது என்பதைப் பரிசீலிக்கலாம். அந்த நிதியிலே 31,70,254 ரூபாய் இருக்கிறது. அதோடு வட்டியும் சேர்ந்துகொண்டு வருகிறது. திட்டவட்டமாக அதைப்பற்றி முடிவு எடுத்ததற்குப் பிறகு சேலம் மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு எந்த அளவிலே செய்யலாம் என்பதைப்பற்றி முடிவெடுக்கலாம்.

திரு. செ. ராமலிங்கம் : தலைவர் அவர்களே, அந்த நிதியை செலவழிக்கின்ற அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது அவ்வப்பொழுது அரசாங்கத்திடம் அனுமதிபெற்று செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே செய்கின்ற அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பார்த்து எந்த எந்த வகையிலே செலவழிக்க வேண்டுமென்று முடிவு எடுக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister it seems that the amount will be spent for construction of Government buildings and on water supply schemes may I know from the Hon. Minister when such schemes will be implemented? So many Panchayat Unions are not having even 2 or 3 Government buildings. Will this Government come forward to implement this scheme urgently?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1970-ஆம் ஆண்டு ஜூன் மாதமே அரசு முடிவு எடுத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஆணையிட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து செயற்குறிப்புகள் இன்னும் வர வேண்டும். அதை அரசு அங்கீகரிக்கவேண்டும். எந்த எந்த திட்டத்திற்கு எவ்வளவு செலவழிக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். இராமநாதபுரம், தென் ஆற்காடு ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. இன்னும் மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது. வந்த பிறகு அவை பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படும்.



THIRUMATHI T. N. ANANDANAYAKI : From the answer placed on the Table of the House, we find that a medical college is to be started in Salem disrict out of the cess fund and orders have been issued to the respective Collector by June 1970 and they are awaiting the proposal. At what stage is it now?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை மக்களிடமிருந்து வந்ததுண்டு. அது பரிசீலனையில் இருந்ததும் உண்டு. மாவட்ட வளர்ச்சிக் குழுவினர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்பொழுது மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தும் சூழ்நிலை இல்லை. ஆகவே, அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை நிறுத்திவிடுவதா அல்லது தொடங்குவதா என்பதுபற்றித் திட்டவட்டமான முடிவை எடுத்தபிறகுதான் அறிவிக்க வேண்டும். பிறகு தான் இல்லை என்றால் வேறு வழியில் செலவழிப்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். மாவட்ட வளர்ச்சிக் குழு மருத்துவக் கல்லூரிக்குப் பயன்படுத்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

திரு. எ. எம். இராஜா : தலைவரவர்களே, செஸ் நிதியைப்பற்றி அமைச்சரவர்கள் அறிவித்தபொழுது ஒரு மாவட்டத்திற்கு 1 கோடி ரூபாய் என்ற அளவிலும் ஒரு மாவட்டத்திற்கு ஒன்றுமே இல்லாமலும் இருக்கிறது. எந்த அடிப்படையில் செஸ் நிதி பிரித்துக் கொடுக்கப்படுகிறது? செஸ் நிதியை பின்தங்கிய மாவட்டங்களுக்கு ஏன் அதிகமாகப் பிரித்துக் கொடுக்கக்கூடாது என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ரயில் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்பு மாவட்ட டிஸ்ட்ரிக்ட் போர்டுகளே எந்தெந்தப் பகுதிகளிலே அது இரயில் பாதைகளை இயக்கினவோ, அதற்கு நஷ்ட ஈடு தரும் வகையில் இந்த செஸ் நிதி என்று வந்திருக்கிறது. அது சில மாவட்டங்களுக்கு அதிகமாகவும், வேறு சில மாவட்டங்களுக்குக் குறைவாகவும் இருக்கிறது என்றால் சில மாவட்டங்களில் டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் அந்த இரயில்வே தொடர் நிலையத்தை நடத்தவில்லை. ஆகவே அவர்களுக்குச் செஸ் நிதி கிடைக்கவில்லை. இழப்புத் தொகையாகத்தான் செஸ் நிதி வைக்கப்பட்டு அதன்மூலம் வரும் வட்டியும் சேர்த்துக் கணக்கிடப்பட்டு வருகிறது. அண்மையில் ஊராட்சி ஒன்றியங்கள் பணத்தைச் செலவழிக்கலாம் என்று 1970-லே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஜமீன் எஸ்டேட்களுக்கான இழப்பீட்டுத் தொகை.

* 185. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஜமீன்தார்களுக்கு தமிழ் நாடு அரசினால் இழப்புத் தொகை தற்போது தரப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு 1948-ஆம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1948) கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட ஜமீன் எஸ்டேட்டுகளுக்கான இழப்பீட்டுத் தொகைகள் முன்னரே முடிவு செய்யப்பட்டு விட்டன. ஆந்திர மாநிலத்திலிருந்து மாற்றப்பட்ட பதினொன்று பகுதி ஜமீன் எஸ்டேட்டுகள் தவிர பிற எஸ்டேட்டுகள் அனைத்திற்கும் இழப்பீட்டுத்தொகை எஸ்டேட்டு, ஒழிப்பு நடுவர் மன்றத்திடம் கையடை செய்யப்பட்டுள்ளது. சில நேர்வு

களில், "நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இனங்கள்" குறித்து முடிவு செய்யப்பட்டதன் விளைவாக, இழப்பீட்டுத் தொகை, திருத்தியமைக்கப்படுவதன், கூடுதலாக இழப்பீட்டுத் தொகை ஏதேனும் கொடுக்க வேண்டியிருப்பின் அக்கூடுதல் தொகை எஸ்டேட்டுகள் ஒழிப்பு நடுவர் மன்றத்திடம் கையடை செய்யப்படுகிறது.

1959-ஆம் ஆண்டு எல்லைகள் மாற்றச் சட்டத்தினையொட்டி (மத்தியச் சட்டம் 56/59) ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு மாற்றப்பட்ட 14 பகுதி ஜமீன் எஸ்டேட்டுகளைப் பொறுத்தவரையில், ஆந்திர மாநில அரசிடமிருந்து சில தகவல் வரவேண்டியிருப்பதனால் மேற்படி எஸ்டேட்டுகளுக்குக் கொடுக்கப்படும் இறுதி இழப்பீட்டுத் தொகை இன்னும் முடிவு செய்யப்படாமல் உள்ளது. எனினும், இப்பகுதிகளுக்கும் தனிப்பட்ட அடிப்படையில் இடைக்காலத் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர்களே, இந்த அடிப்படையில் ஜமீன்தார்களுக்கு அளிக்கப்படும் தொகை மட்டும் எவ்வளவாக இருக்கிறது. மத்திய அரசு ராஜமான்யத்தை ஒழிக்க முயற்சித்ததைப்போல் நம்முடையமாநில அரசும் ஜமீன்தார்களுக்குக் கொடுக்கப்படும் இழப்புத்தொகையை நிறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர்களே, ஜமீன் எஸ்டேட்டுகளுக்கு இதுவரை கையடை செய்த தொகையின் மொத்த அளவு 3 கோடியே 62 இலட்சத்து 69,388 ரூபாய் 60 பைசாவாகும். மேற்கொண்டு ராஜமான்யம் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு பணம் கொடுக்கப்பட்டது. இன்னும் கொஞ்சம் செலுத்த வேண்டும், அவ்வளவுதான்.

## *Madras Airport*

* 218 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be p'eased to state the details of the assistance given by the State Government for the improvements and modifications of the Madras Airport?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: சென்னை விமான தளத்தை மேம்படுத்துவதற்காக, மீனம்பாக்கத்திலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் சில நிலங்களை மாற்றுவதற்கும் கையகப்படுத்துவதற்கும் மாநில அரசை மத்திய அரசு வேண்டியுள்ளது. தேவைப்படுகிற நிலங்களை நாளடைவில் மாநில அரசு மத்திய அரசின் வசம் ஒப்படைக்கும். இப் பணிக்காக வேறு எந்த உதவியும் மாநில அரசிடம் மத்திய அரசால் கேட்கப்படவில்லை.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர்களே, மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்க இந்த அரசு நடுவர் அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மீனம்பாக்கம் ஏர் போர்ட்டானது சர்வதேச ஏர்போர்ட்டில் ஒன்றாக மாறிவரும் நேரத்தில் அதை விரிவுபடுத்த எவ்வளவு ஏக்கரா நிலம் வேண்டுமென்று மத்திய சர்க்கார் கேட்டிருக்கிறது? அப்படியானால் எந்த அளவிற்குக் கொடுக்க தமிழக அரசு தயாராக இருக்கிறது?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மத்திய அரசு மேற்படி விமான நிலையத்தை மேம்படுத்துவதற்காக சுமார் 150 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தனியார் இடமும் இருக்கிறது, அரசாங்க இடமும் இருக்கிறது. அரசாங்க இடத்தை மாற்றிக் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்றாலும் தனியார் இடத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசிடமிருந்து கோரிக்கை வரும்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. சில நாட்களுக்கு முன்பு விமான நிலையத்தைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சரவர்களைச் சந்தித்தார்கள். சுமார் 4 கோடி ரூபாயில் ஃபேஸ்ட் புரோகிராமாக இந்த விமான நிலையத்தை விரிவு படுத்துவதற்குக் குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், வெளிநாடுகளில் இண்டர் நேஷனல் ஏர்போர்ட்டுகளைப்போல் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை உயர்த்தத் திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படித் திட்டம் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர்களே, இப்பொழுது ஏர்போர்ட்டாக இருக்கின்ற இடம் சௌகரியமில்லாமல் குறைந்த இடத்தில் இருக்கிறது. இதை மற்ற இடத்தில் மாற்றுவதற்கு அரசாங்கத்திற்கு ஏதேனும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதே இடத்திலே மேலும் விரிவுபடுத்தச் செயற்குறிப்பு இருக்கிறதே தவிர விமான நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு இல்லை. மத்திய சர்க்கார்
introduction of large sub-sonic and super-sonic air crafts'
ஆக விரிவுபடுத்த அந்தச் செயற்குறிப்பின் அடிப்படையில் இடத்தை வாங்கித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறது.

திரு. கோவை செழியன்: தலைவர்களே, சோழபுரத்தில் விமான நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது இப்போது பயன்படுகிறதா? அதை விரிவுபடுத்தும் திட்டம் ஏதாவது மத்திய அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அது பற்றிய விவரக்குறிப்பு தற்பொழுது என்னிடத்தில் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வெளிநாடுகளிலிருந்து வருகின்ற போகின்ற பிரயாணிகள் நம்முடைய கைத்திறமை படைத்த பொருட்களை வாங்கக்கூடிய அளவில் சிறந்த கடைகள், இப்பொழுது இருப்பது அவ்வளவு அட்ராக்டிவ்வாக இல்லை, எனவே இன்னும் சிறப்பான முறையில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சிறப்பு அங்காடி அமைக்க, மத்திய அரசைச் சேர்ந்த அதிகாரி அவர்களும் முதலமைச்சரவர்களும் மினிஸ்டர் ஃபார் டூரிசத்திடம் தமிழ்நாட்டுச் கலாச்சாரத்தை விளக்கும் வகையில் அந்தக் கடை அங்கே இருக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, சென்னை விமான நிலையத்திற்கு மீனம்பாக்கம் என்ற பெயர் ஏன் வந்தது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: குட்டையிலே மீன் பிடிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, சென்னை விமான நிலையத்தில் சூப்பர்சானிக் போன்ற பெரிய விமானங்கள் வந்திறங்க வசதி இப்பொழுது உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இப்பொழுது வசதி இல்லை. அந்த வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசு முயற்சி செய்து வருகிறது.

### பாலத்துறை கிராமத்தருகில் அணைக்கட்டு

■ 219. வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை தாலுக்கா, மதுக்கரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பாலத்துறை கிராமத்தில் அணை கட்டும் வேலை தற்சமயம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாலத்துறை கிராமத்திற்கு அருகே அணைக்கட்டும் திட்டம் எதும் இல்லை. ஆனால் அக் கிராமத்தில் ரூ. 57,000 செலவில் குட்டை (Pond) ஒன்று அமைக்கும் திட்டத்துக்கு அண்மையில் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, மதுக்கரை பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பாலத்துறை கிராமத்தில் அணைக்கட்டு கட்ட 6 இலட்சத்திற்கு மேற்கொண்ட தொகையை ஒதுக்கி அங்கே 1967-ஆம் ஆண்டில் சர்வேயும் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அந்தக் குட்டையைக் கட்டுவதற்காக முடிவு எடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அங்கே குட்டை கட்டக் கூடாது. எங்களுக்கு அணைக்கட்டு கட்ட வேண்டுமென்று அந்தப் பகுதி விவசாய மக்கள் விண்ணப்பித்துள்ளார்கள். எனவே அங்கே அணை கட்ட அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அங்கேயிருக்கிற மக்கள் மாத்திரமல்ல, நம்முடைய எம்.எல்.ஏ. அவர்களும் வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். ஆனால் பரிசீலிக்கப்பட்டபொழுது குளத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்காததால் கைவிடப்பட்டது. தண்ணீர் இல்லாத இடத்திற்குச் செலவு செய்வது சரி இல்லை என்பதால் சுமார் 140 ஏக்கர் அளவில் 57,000 ரூபாயில் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

### *Madurai Sourashtra Co-operative Bank*

* 220 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Deputy Registrar of Co-operative Societies Madnrai has issued in 1966 any order to the Sub-Registrar (Consumer Co-operation) to conduct an enquiry under section 65 of the



Tamil Nadu Co-operative Societies Act 53 of 1961 into the working and financial condition of the Madras Sourashtra Co-operative Bank Madurai;

(b) if so, the malpractices for which the above enquiry was ordered; and

(c) the finding of the Sub-Registrar who instituted the enquiry and the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மதுரை சௌராஷ்ட்ரா கூட்டுறவு வங்கியின் நிர்வாகக் குழுவைக் கலைத்ததை எதிர்த்து வழக்கு ஒன்று உயர்நீதி மன்றத்தில் நடைபெற்று வருகிறது.

Dr. H. V. HANDE: Sir, may I ask a question? As the matter is *sub judice* and is in the High Court, we cannot elicit any information...

Mr. SPEAKER: The hon. Member should not go into the merits of the matter.

Dr. H. V. HANDE: Sir, may I know from the Hon. Minister whether the Directors of the Saurashtra Co-operative Society used to have the habit of going frequently to these banks and having lunch regularly at the expense of the SauashtEra Society through some bogus bills in some other names or something like that and whether the Registrar has made any enquiry to find out the irregularities? May I know the details of it?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: 1965-66-ல் பல தவறுகள் நடந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு 12—6—1970-ல் இந்த வங்கியின் செயற்குழுவைக் கலைத்து தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். வழக்கு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வங்கியின் நிர்வாகக் குழுவைச் சேர்ந்தவர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருப்பதோடு மட்டுமல்லாமல் தடையுத்தரவும் பெற்றார்கள். இப்போது தடை உத்தரவு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மூல வழக்கு நடந்து வருகிறது. அந்த வழக்கிலுள்ள காரியங்களைப் பற்றி தாரதரத்தை இங்கே ஆராய்வது முறையாகாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரை சௌராஷ்டிரா கூட்டுறவு வங்கியானது கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீசர் போட்டு இப்போது நடந்து வருகிறது. ஸ்பெஷல் ஆபீசர் பழைய பாக்கிகளை எல்லாம் வசூலித்திருக்கிறாரா? மேலும் ஸ்பெஷல் ஆபீசர் சில தொழிலாளர்களைப் பழி வாங்கி விட்டார் என்று ரிஜிஸ்ட்ராருக்கு மனுச் செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது சம்பந்தமாக விசாரித்து வேறு நல்ல ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு அது நல்ல முறையில் நடக்க அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தனி அதிகாரி நியமித்தபின் முழு வரவு செலவுக் கணக்கைக் கேட்டிருக்கிறேன். தகவல் கிடைக்கவில்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சொல்ல முடியும். தனி அதிகாரியைப் பற்றிய குற்றச்சாட்டை இப்போதுதான் கேள்விப்படுகிறேன். அதைப் பற்றியும் உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால் கவனிக்க முடியும்.

குப்பல் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் : இந்தக் கூட்டுறவு வங்கி கலைக்கப்பட்டு தனி நிர்வாக அதிகாரி போட்டு ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. அது ஜனநாயக ரீதியில் செயல்பட மறுபடியும் தேர்தல் நடத்தி நிர்வாகக் குழுவை ஏற்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனி அதிகாரி நியமிக்கப்பட்டது 22—6—1970 என்று சொன்னேன். வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தனி அதிகாரியை நீக்கிவிட்டு மறுபடியும் தேர்தல் நடத்துவது என்பது வழக்கு முடிந்த பிறகுதான் முடிவு செய்யமுடியும்.

DR. H. V. HANDE : Sir, may I know from the Hon. Minister whether the Hon. Minister is pursuing the matter and whether he is making any furter investigation to find out any irregularity during the last two years in this co-operative society?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, further investigation is not necessary because there are irregularities as stated earlier, on the basis of which the order of supersession was passed whether the order of uupersession passed was correct or whether the irregularities stated by the Deputy Registrar are correct, is *sub judice* and is in the High Court.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, may I know from the Hon. Minister for Co-operation the number of banks superseded by this Department last year?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I do not have the statistics at my fingers' ends. But I can say that whenever a bank is doing badly or whenever its ocerdues are more than 50 per cent or thereabout, action is taken by the Reiistrar.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தவறுகள் 1966-ம் ஆண்டு நடந்தன என்று சொல்லப்பட்டது. போர்டு கலைக்கப்பட்டது 1970-ம் ஆண்டு. 1966-ம் ஆண்டில் இருந்த போர்டுதான் 1970-ம் ஆண்டிலும் இருந்ததா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தத் தவறுகள் நடந்தது 1965-66-ல் என்று சொன்னேன். நிர்வாகக் குழுவைக் கலைக்கும் முன்னால் விசாரணை நடத்தியாக வேண்டும். நான்கு ஆண்டு காலம் கால தாமதமாகி இருக்கிறது என்பது உண்மை. முன்னால் இருந்த தவறுகளைத் தேடிக் கண்டுபிடிக்க, ஊடுருவிப் பார்க்கும் அளவில் இருந்தது. அதனால் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஸ்பெஷல் ஆபீசர் அப்பாயின்ட் செய்தால் அவர்கள் எவ்வளவு நாட்களுக்கு இருக்கிறார்கள்? உடனடியாகத் தேர்தல் நடத்துகிறார்களா? அல்லது ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்ட பிறகு கோர்ட்டுக்கு போவதால் தாமதம் ஏற்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கோர்ட்டுக்குப் போனதால் எந்தக் காலதாமதமும் ஏற்படவில்லை. நிர்வாகக் குழு கோர்ட்டுக்குப் போய் பெற்று வந்த தடை உத்தரவு அரசு மீண்டும் மனுச் செய்து, ரத்து செய்யப்பட்டிருக்கிறது. எத்தனை ஆண்டுகளுக்குத் தனி அதிகாரி இருக்கிறார் என்று கேட்டார்கள். அது question of law 72-வது செக்ஷன்படி நான்கு ஆண்டுகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



திரு. எம். சுரேந்திரன் : கூட்டுறவு வங்கியில் போடப்பட்டிருக்கும் மூலதனம் எவ்வளவு? எவ்வளவு பங்குதாரர்கள் இருக்கிறார்கள்? என்ன மாதிரி ஊழல்கள் காரணமாக அந்தக் கூட்டுறவு வங்கி நிர்வாகக் குழு கலைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவு வங்கி என்று சொல்லும்போது ஐந்தாறு வகை கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அர்பன் பாங்கில் அரசு முதலீடு செய்வது இல்லை, கடன் கொடுப்பதும் இல்லை. சௌராஷ்டிரா பாங்கு அர்பன் பாங்கு வகையைச் சேர்ந்தது. சென்ட்ரல் பாங்கு, ஸ்டேட் பாங்கு, பிரைமரி லாண்ட் டெவலப்மென்ட் பாங்கு, ஸ்டேட் லாண்ட் டெவலப்மென்ட் பாங்கு ஆகியவற்றுக்கு அரசு பங்கு முதல் கொடுக்கிறது, கடனும் கொடுக்கிறது, மானியமும் கொடுக்கிறது.

## பல்லடம் வட்டத்தில் பருத்திப்பயிர் முனைப்புத் திட்டம்

■ 321. வினா—திரு. க. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவை மாவட்டம், பல்லடம் வட்டத்தில் எவ்வளவு ஏக்கர் பூமியில் பருத்திப்பயிர் முனைப்புத் திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலூக்கா பகுதி முழுவதிலும் 29,219 ஏக்கர் இறவை நிலப்பரப்பில் பருத்திப் பயிர் முனைப்பு திட்டம் செயல்பட்டுவருகிறது. இதில் பல்லடம் வட்டத்தில் மட்டும் சுமார் 4,130 ஏக்கர் நிலத்தில் பருத்திப்பயிர் முனைப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

திரு. க. துரைசாமி : நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கும் பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சு தேவையான அளவு உற்பத்தியாகாததின் காரணமாக வெளி மாநிலங்களில் இருந்தும், வெளி நாட்டில் இருந்தும் வாங்கப்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவாகத் தமிழ்நாடு முழுவதும் கொண்டு வர அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பருத்தி தமிழ்நாட்டில் முக்கிய வணிகப் பயிர் என்பது எல்லோருக்கும் நன்றாகத்தெரியும்., பத்து லட்சம் ஏக்கர்களில் இந்தப் பருத்தி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பருவ மழை பாதிப்பு காரணமாக 1968-69-ல் 6.96 லட்சம் ஏக்கரிலும், 1969-70-ல் 8.63 லட்சம் ஏக்கரிலும்தான், குறைவாக பருத்தி சாகுபடி ஆகியிருக்கிறது. 1969—70-ல் பருத்தி உற்பத்தியின் அளவு 3.97 லட்சம் பேல்களாகும். 1970—71-ல் 4.90 லட்சம் பேல்களாகும். 1971—72-ல் இலக்கு 5.10 லட்சம் பேல்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it a fact that last year there was heavy accumulation of very high grade cotton SUJATHA produced by the people of Tamil Nadu and people have been finding it difficult to dispose it and if so, what is the proposal the Government have got to see that that high grade cotton is disposed of?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : M.C.U. 5, சுஜாதா, பாரி போன்ற பருத்தி வகைகள் அதிக கண்டுமுதல் தரும் பருத்தி வகைகள். இவை

தேக்கம் இல்லாமல் எல்லா இடங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய பயிர் பாதுகாப்பு முறைகளும் ஆங்காங்கு செயல்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வந்திருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த முனைப்புத் திட்டத்தின் மூலம் எந்தெந்தப் பிரதேசத்தில் பருத்தியைப் பயிரிட அரசாங்கம் விரும்புகிறது? ஜைதா போன்ற பருத்தி ரகம் விவசாயிகளிடத்தில் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது, குறிப்பாக பல்லடம் வட்டத்தில் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பல்லடம் தாலுக்காவில் திருப்பூர் வட்டத்தில் 5,935 ஏக்கரிலும், சுல்தான் பேட்டையில் 5,229 ஏக்கரிலும், பல்லடம் வட்டத்தில் 4,130 ஏக்கரிலும், பொங்களூர் வட்டத்தில் 4,925 ஏக்கரிலும், சூளூர் வட்டத்தில் 9,000 ஏக்கரிலும் பயிரிடப்பட வேண்டுமென்ற திட்டத்தை மத்திய முனைப்புத் திட்டத்தின்கீழ் சுல்தான்பேட்டை, பல்லடம், பொங்களூரிலும், மாநிலத் திட்டத்தின்கீழ் திருப்பூர் பகுதியிலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கு யாரும் இப்போது நஷ்டம் வந்ததாகச் சொல்லவில்லை. மேலும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு இப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மதுரை பாலமேடு பஸ் போக்குவரத்து.

* 122. வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுரை மாவட்டத்தில் மதுரையிலிருந்து பாலமேடு வரை நகரப் பேருந்து ( City Bus ) விடும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மதுரையிலிருந்து டி. மேட்டுப் பட்டி வரை உள்ளதற்போதைய வெளியூர் பேருந்து வழித்தடத்தை மதுரையிலிருந்து பாலமேடு என்ற நகர்ப் புற பேருந்து வழித்தடமாக மாற்றுவதற்கான ஒரு செயற்குறிப்பு மதுரை மாவட்ட போக்குவரத்து ஆணையரின் பரிசீலனையில் உள்ளது .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை பற்றிய தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும்.

(2) கவன ஈர்ப்பு.

பல்லடம் தொகுதியில் மழையின்மையால் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறை குறித்து.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பருவத்திலும் கோடையிலும் மழை தவறியதின் காரணமாகப் பல்லடம் தொகுதியில் சுமார் 250 கிராமங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் துன்பத்திற்



குள்ளாகியுள்ளார்கள் என்பதைப் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தைத் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஊர்ப்பணிகள் மானியத்தில் கிடைக்கும் நிதிகளைக் கொண்டு, ஊர்களின் அடிப்படை வசதியான குடிநீர் வழங்கும் திட்டம் பொதுவாக மேற்கொள்ளப்படுகிறது. ஊர்ப் பணிகள் மானியத்திலிருந்து ஊர்ப்புற குடிநீர் வசதிக்கென ஒதுக்கப்படும் நிதிகளைக் கொண்டு, சாதாரணக் கிணறுகள் தோண்டுதல், மேல் நிலை நீர்த் தொட்டிகளை அமைத்தல், ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குழாய் மூலம் குடிநீர் வழங்கல், குழாய் துளைக் கிணறுகள் அமைத்தல், ஊருணிகளை ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊர்ப்புறக் குடிநீர் வழங்கல் பணிகளுக்கென பொதுமக்களிடமிருந்தாவது, ஊராட்சிகளிடமிருந்தாவது 25 சதவீத நன்கொடைத் தொகை திரட்டப்படுகிறது. அரிசனப் பகுதிகளில் இப்பணிக்கென மக்கள் நன்கொடைத் தொகை விலக்களிக்கப்பட்டு, மாறாக 15 சதவீத நன்கொடைத் தொகை அரிசன நலத் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகிறது.

சாதாரண கிணறுகளுக்கென ரூ. 10,667-ம் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கென ரூ. 17,887-ம் நடப்பாண்டில் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. குடிநீருக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள நிதியானது கிணறுகளைத் தோண்டுவதற்கும், தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதற்குமே பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குதற்கென ஒதுக்கப்பட்ட தொகையானது, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, மேல்நிலை நீர்த்தொட்டிகளை அமைக்கப் பயன்படுத்தப்படுகிறது. ஊர்ப் பணிகள் திட்டத்திற்கென ஒவ்வோராண்டும் ஒதுக்கப்படும் குறைந்த நிதியைக் கொண்டு மேல் நிலை நீர்த் தொட்டி அமைத்து, குழாய் வழியாகப் பெருமளவிற்கு குடிநீர் வசதி செய்ய நிச்சயமாக இயலாது. இதுபோன்ற பணிகள் பல ஆண்டுகளில் படிப் படியாக நிறைவேற்றப்படுகின்றன. இவ் வேலைகள் எல்லாம் ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்டு, உள்ளூர் நிலைமைக்கேற்ப ஒன்றியப் பொறியாளர்களால் நிறைவேற்றப்படுகின்றன.

உட்கடை ஊர்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டுமென்பதற்காகவே "யுனிசெஃப்" உதவியுடன் மாநிலத்திலுள்ள பாறைப் பகுதிகளில் குழாய்க் கிணறுகளைத் தோண்டும் ஒரு சிறப்புத் திட்டத்திற்கு அரசு அண்மையில் ஒப்பளித்துள்ளது. இத் திட்டத்தின் படி துளையிடும் கருவிகள், ஊர்திகள் போன்றவற்றை "யுனிசெஃப்" அளித்து உதவும். 1971—72-ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்தாண்டுகளுக்குள்ளாக இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) இடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இத் திட்டம் முழுவதும் அரசால் ஏற்கப்பட்டு, செயல்முறைத் திட்டங்கள் இந்திய அரசிற்கும் "யுனிசெஃப்" பிற்கும் இறுதியான ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு இந்திய அரசு வெகு விரைவிலேயே அனுமதியளிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்து சில திங்களிலேயே இத்திட்டம் மேற்கொள்ளப்படும். ஆண்டிற்கு 1,770 வீதம் ஐந்தாண்டுகளில் 8,850 குழாய்க் கிணறுகள் இத்திட்டத்தின்படி, மாநிலத்தில் நிறுவப்படும். பல்லடம், சூலூர் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய

பல்லடம் தொகுதியை பொறுத்த வரையில் ஐந்தாண்டுகளுக்குள் 148 கிராமங்களில் 381 குழாய்க் கிணறுகளைத் தோண்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிலவியுள்ள வறட்சி நிலைக்காக, சிறப்பு மானியம் கோரி அரசின் வருவாய்த் துறைக்கு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கோரிக்கைகளை அனுப்பியுள்ளார், மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கைகளைக் கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தவும், தோண்டுதற்குமென ரூ. 5 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து, பல்லடம், சூலூர் ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளுக்குரிய பங்கு கிடைக்குமென்று எண்ணப்படுகிறது.

ஊர்ப்புறங்களில் குடிநீர்வழங்கல் தட்டுப்பாட்டைக் களைவதற்கென அரசு மேற்கண்ட முறையில் போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் தவிர, நகர், ஊர்ப்புறங்களில் குடிநீர் வழங்குவதற்குரிய திட்டங்கள் விரிவான முறையில் உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பானது 'தமிழ்நாடு குடிநீர் வழங்கல், கழிவுநீர் வாரியத்திடம்' ஒப்படைக்கப் பட்டுள்ளது. சட்டப்படியான அடிப்படையில் இவ்வாரியம் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. விரிவான முறையில் குடிநீர் பற்றாக்குறைச் சிக்கலைத் தீர்க்க இவ்வாரியம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

### 3. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

**(அ) 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1971)— (தொடர்ச்சி).**

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலுள்ள ஒருசில அம்சங்களை வரவேற்றுப் பேசினாலும் பல கருத்துக்களை இந்த அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற ஆசையால் ஒருசில கருத்துக்களை இந்த மசோதாவின் மீது கூறிக்கொள்ள நான் விருப்பப்படுகிறேன்.

இது பஸ்களுக்கு உச்சவரம்பு கொண்டுவருவதற்காகக் கொண்டுவரப் பட்டுள்ள மசோதா. உச்சவரம்பு வைக்கவேண்டுமென்பதை எல்லோரும் வரவேற்கிறோம். அந்த வகையில்தான் இன்றைக்கு மோனாப்பலியை, ஏகபோகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் உச்சவரம்பு நிர்ணயிக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் பத்து பஸ்கள்தான் ஒரு நபருக்கு இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பஸ்காரர்கள் நிலையை ஓரளவிற்குத் தெரிந்து கொண்டிருக்கிறேன் என்ற காரணத்தினால் நான் ஒரு சில கருத்துக்களை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன். பத்து பஸ்கள் வைத்திருக்கும்போது யார் வைத்துக்கொள்ளலாம் என்றால்

For the purpose of this Section, a person means the holder of a permit.

என்று சொல்லியிருக்கிறார்கள். யார் மீது பெர்மிட் இருக்கிறதோ அவர்தான் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. இதை லாண்ட் சீலிங் மாதிரி நோக்கக் கூடாது. இது ஒரு தனித் தொழில். தனி நபருக்கு ஒரு மரியாதை உண்டு. நாட்டு மக்களுக்குச் சிறப்பான முறையில் நன்மை செய்யவேண்டிய





ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் அந்த அடிப்படையில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதை ஏதோ சமதர்மத்திற்குப் புறம்பாகவோ அல்லது உங்கள் உச்சவரம்பிற்கு ஏதாவது கேடு விளைவிக்கக் கூடிய அளவிலோ சொல்கிறேன் என்ற எண்ணத்தில் இதை நோக்கக் கூடாது. நல்லநோக்கத்தோடு இதைப் பார்க்க வேண்டும்.

ஏனென்றால் பஸ் கம்பனி என்றால் முதலாளிகள் வைத்திருக்கிற பஸ் கம்பனிகளும் இருக்கின்றன.

"Private Limited Company, Public Limited Company, Co-operative society for ex-servtcemen, Partnership family concerns" என்றெல்லாம் இருக்கின்றன. ஒரு பஸ் கம்பெனியில் நான்கு பார்ட்னர்ஸ் இருந்தால் அவர் நான்கு பேர்களில் அனுபவத்தையும் எடுத்துக் கொள்ளலாம். இதற்கு சட்ட ரீதியாக பல முடிவுகள் ஏற்பட்டிருக் ஏற்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க இன்று மானேஜிங் பார்ட்னருக்கு மட்டும்தான் பர்மிட்ட் இருந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்க மற்ற டயரக்டர்களின் நிலைமை என்ன? அவர்களுக்கு பஸ்கள் வேண்டுமா இல்லையா? அவர்களது அனுபவும் வீணாகப் போகக் கூடாது அல்லவா? ஒரு கம்பனியை நான்கு பேர்கள் இருந்து நடத்தி அதில் மானேஜிங் பார்ட்னருக்கு மட்டும் பர்மிட் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்கு கொடுக்கவில்லையென்றால் எப்படி? அனுபவம் உள்ளவர்களின் அனுபவம் என்னாவது? நீங்கள் சலுகை ஒன்றும் காட்டவில்லை. அவர்கள் அவர்களது அனுபவத்தை வைத்து, பஸ்கள் வாங்கி வொர்க்ஷாப்ஸ் போட்டு, 155 (எ) ரூல் படி மார்க்கெல்லாம் வாங்கி ஆர். டி. ஏ. யிடம் பெர்மிட் வாங்கி, எஸ். டி ஏ-யிடம் சென்று பின் ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் என்றெல்லாம் போனால்தான் ஆப்பரேட்டராக லாம். இந்தத் துறையில் உள்ள அனுபவஸ்தர்களின் அனுபவத்தை நாம் பெற வேண்டாமா? புதிதாக ஒரு ஆளை பஸ் ஆப்பரேட்டராகக் கொண்டுவருவதைக் காட்டிலும் ஏற்கனவே இந்தத் துறையில் இருந்தவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுப்பதில் என்ன தவறு என்று இந்த அரசாங்கத்தை நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ப்ரைவேட் லிமிடெட் கம்பனி, பப்ளிக் லிமிடெட் கம்பனி இவைகளில் நிறைய டயரக்டர்கள் இருக்கிறார்கள். பஸ் மானேஜிங் டயரக்டர் பேரில் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மற்ற டயரக்டர்களுக்கு பத்து பஸ்கள் என்று பிரித்துக் கொண்டு போக வசதியிருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல், 'கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி ஃபார் எக்ஸ்-சர்வீஸ்மென்' என்றிருக்கிறது. இந்தப் பழைய ராணுவ வீரர்களின் மறுவாழ்விற்காக அது அமைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு சொஸைட்டியாக இருந்தால் அவர்களுக்குத் தனியாக ஒரு பர்க் கொடுத்துக் கொண்டிருந்தோம். பழைய ராணுவ வீரர்களுக்கு கூட்டுறவு முறையில் ஒரு சொஸைட்டி இருப்பதன் காரணமாக நூற்றுக்கணக்கான பழைய ராணுவ வீரர்களின் குடும்பங்கள் நன்மை அடைய முடிகிறது. அவர்களே ட்ரைவர்களாகவும், ஃபிட்டர்களாகவும், மெக்கானிக்களாகவும் நடத்தி வருகிறார்கள். இருபது, முப்பது, ஐம்பது என்று கூட இருக்கிறார்கள் ஒரு சொஸைட்டியில். அப்படியிருக்க திடீரென்று

பத்து பஸ்களுக்கு மேல் உள்ளதை சரண்டர் செய் என்று சொன்னால் அந்தக் கூட்டுறவு சொஸைட்டியில் பழைய ராணுவ வீரர்களின் பல குடும்பங்கள் தெருவில் நிற்க வேண்டிவரும். அவர்களுக்கு வேறு வேலை இருக்காது, வசதி இருக்காது, எவருக்கு மறுவாழ்வு தரவேண்டு மென்று ஆசைப்பட்டுச் செய்தோமோ அவரது வாழ்வை குலைக்கப் போகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆகையால் எக்சம்ஷன் ஊாசிலே 'ஸ்டேட் கவர்ன்மெண்ட்' 'சென்ட்ரல் கவர்ன்மெண்ட்' என்று சொல்லியிருக்கிறீர்களே, அதிலே 'கோவாபரேடிவ் சொஸைடி பார் எக்ஸ்-சர்வீஸ்மென்' என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பழைய ராணுவ வீரர்களுக்கு நல் வாழ்வு கொடுக்கும் வகையில் நாமே அவர்களுக்குக் கடன் கொடுத்து, பஸ்களைக் கொடுத்து அவர்களுக்கு வாழ்வு கொடுத்து இருக்கிறோம். அந்த சொசைடி களிலே 50 பேர் 60 பேர் கூட இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் இந்த 10 பஸ் என்று வைத்து இருப்பது நியாயமானதல்ல. மனிதத் தன்மைக்கு புறம்பானது. நம்முடைய கொள்கைக்கு ஏற்றதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதை இந்த அரசு சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களுக்கு உச்சவரம்பு கொண்டு வருவது புரட்சிகரமான திட்டம்தான். அதை நம் மக்களை பாதிக்காத அளவில் கொண்டுவந்தால் அந்தத் திட்டம் நல்ல திட்டமாக இருக்கும். அப்படி இல்லாமல் செய்தால் அதிலே அடிக்கடி ஓட்டைகள் விழுந்து கொண்டே இருக்கும். லாண்ட் சீலிங் ஆக்ட்டுக்கு இன்றைக்குக் கூட ஒரு அமெண்ட்மெண்ட் வருகிறது. இத்தோடு அது நின்று விடப்போவது இல்லை. இப்படி அடிக்கடி வந்து கொண்டே இருக்கும். நம்முடைய இந்த அவசரச் சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள் யாராவது இருக் கிறார்கள் என்றால் அதிலே முக்கியமானவர்கள் இந்த எக்ஸ்-சர்வீஸ்மென்கள் தான். ஆகவே, இந்த 'எக்ஸ்-சர்வீஸ்மென் கோவாபரேடிவ் சொஸைடிக்கு நாம் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐம்பது பஸ்களுக்கு மேல் வைத்திருக்கும் பஸ் கம்பெனிகளை தேசிய மய மாக்கப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறோம். அது இந்த மசோதவிலே வரவில்லை. ஆனால் அதைச் சொல்லியிருக்கிறோம். நாம் 50 பஸ்களுக்கு மேல் உள்ளவர்களிடமிருந்து எடுக்கப் போகிறோம் என்று சொல்லும்போது, அதிலே அனுபவசாலிகள் நிறையபேர் இருக்கிறார்கள். ஒரு இடத்தில் அதிக வண்டிகள் தேங்கக் கூடாது என்று சொல்லும்போது, அவர்களுக்கும் இந்த 10 பஸ் வைத்துக்கொள்ளும் உரிமை வழங்க வேண்டும். அது நியாயமானது. 10 பஸ் வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நிலத்திற்கு 15 ஏக்கர் என்று உச்சவரம்பு வைத்து இருக்கிறீர்கள். பஸ் ஆபரேடர்கள் எங் களுக்கு 10 பஸ் என்று வைத்து விட்டார்களே என்று குறைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சிறந்த ஒர்க் ஷாப் வைத்து இருந்தால் தான் எபிஷியண்ட் சர்வீஸ் நடத்த முடியும். இதை ஆற அமர யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படி நல்ல ஒர்க்ஷாப் வைத்து, எபிஷியண்ட் சர்வீஸ் நடத்த வேண்டுமென்று சொன்னால், அவர்கள் சிறப்பாக சர்வீஸ் நடத்த வேண்டுமென்று சொன்னால்,



இந்த 10 பஸ் 'ஆப்டிமம் லெவல் ஆபரேஷன்' என்ற முறையில் அண்டர்-டேக்கிங் நடத்துவதற்கு முடியுமா என்பதை ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டு இருக்கிறேன்.

இந்த பஸ் உரிமம் வழங்குவதிலே ஆ.டி.ஏ.க்கு அதிகாரம் கொடுத்து இருக் கிறோம். ஆர்.டி.ஏ. வுக்கு கலெக்டர் தான் அதிகாரி. கலெக்டர் அதிகாரியாக இருப்பதால் சிறப்பான முறையில் நியாயமான முறையில் பர்மிட்டுகள் வழங்கப் படுகிறதா என்று மக்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. அந்தச் சந்தேகத்தை களைந்து விடவேண்டுமென்று சொன்னால், ஆர்.டி.ஏ. வை டிஸ்ரிக்ட் ஜட்ஜ், சப்-ஜட்ஜ் என்று போட்டு விடுங்கள். நீதிபதி என்று சொன்னால் அவர் சரி யானபடி டாகுமெண்ட் இருக்கிறதா என்பதை எல்லாம் மிகத் தெளிவாகவும் நிதானமாகவும் பார்ப்பார். கலெக்டர் அப்படிப் பார்க்க முடியாது. அவ ருக்கு அத்தகைய பொறுமை இருப்பது கஷ்டம் தான். நீதிபதியை ஆர்.டி.ஏ. வாகப் போட்டு விட்டால் நாம் கேட்பது என்ன என்பதை யோசித்துப் பார்த்து முடிவு சொல்வார்.

"There will be a judicial disposal of the entire matter". Quasi-Judicial- என்று இருப்பதாலே அரசாங்கத்திற்கு அங்கே ஒரு செல்வாக்கு இருக்குமோ என்ற சந்தேகம் இல்லாமல் இருக்கும். ஆகவே, நீதித்துறைக்கு விட்டு விடுவது மிகமிகச் சிறந்தது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு, ஆர்.டி.ஏ. கலெக்டராக இல்லாமல், நீதித்துறையைச் சார்ந்த வராக இருந்தால், சரியான முறையில் ஆற அமர வரும் 10-15 அப்ளிகேஷன் களையும் கவனித்து நல்ல முடிவு எடுக்க முடியும். இதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஸ்.டி.ஏ.டி.-க்கு இப்போது டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் போட்டு இருக்கிறார்கள். இந்தப் புதிய மாற்றம் எதற்காகக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று புரியவில்லை. இது வரையில் எஸ்.டி.ஏ.டி.-க்கு மேலே ரிட் பெடிஷன், ரிட் அப்பீல். அதற்கும் மேலே சுப்ரீம் கோர்ட் என்று இருந்தது. இப்போது ஹைக்கோர்ட்டுக்கு ரிவிஷனுக்கு அனுப்புகிறார்கள். ஒரு வேளை பஸ் ஆபோடர்கள் ரிட் அப்பீலுக்குப் போகக் கூடாது என்பதற்காக இப்படிச் செய்தார்களோ எனக்குப் புரியவில்லை. இந்தப் புதிதான முறை அவசியம்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். எதற்காக இடையிலே ஒரு நிலை குறைய வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. நமக்கு இருக்கும் அனுபவமான முறை நல்ல முறையில் இருக்கும்போது எதற்காக இந்த மாற்றம் என்று தெரியவில்லை. இதை மாற்றுவதற்கு பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பினாமி என்பதற்காக நேற்று ஒரு காரசாரமான விவாதம் நடந்தது. இந்த 48-ஏ விதியிலே

"48-A. Benami applications for stage carrige permits to be rejected—Notwithstanding anything contained in this Act, a Regional Transport Authority shall refuse to wrant or renew a stage carriage permit if it appears to such authority, after making such enquiry as it deems fit, that the application for such permit is benami.

இதுமுன்னாலேயே மோட்டார் வெஹிகில்ஸ் சட்டத்தின் 155-ஏ செக்ஷனிலே இருக்கிறது. யாருக்கும் பினாமி கொடுக்க முடியாது. என்னதான் சட்டத்தில் இருந்தாலும், யார் பணம் கொடுத்தார்கள், யார் சொந்தம் கொண்டாடுகிறார்கள் என்று பார்த்துச் சொல்ல முடியாது. இது முன்னால் உள்ள சட்டத்திலேயே இருக்கிறது. இருந்தாலும் அதை நிரூபிக்க முடியாது. நாங்கள் வக்கீல்கள் எப்படியும் எது யாருக்கு சொந்தம் என்பதை சொல்லிவிட முடியும்.

The wife is not a benami for the husband மனைவி புருஷனுக்கு பினாமி இல்லை. மனைவி சொந்த சொத்தில் பஸ் ஓட்டுகிறார்கள் என்று சொன்னால் அது பினாமி இல்லை. அப்படி ஒரு தீர்ப்பு இருக்கிறது. பினாமி என்று நாம் போட்டு இருப்பது நில உச்சவரம்புச் சட்டத்தை மனதில் வைத்துக் கொண்டு செய்து இருக்கிறோம். பஸ்ஸில் இப்படி வைத்துக் கொள்ளக் கூடாது. இப்போது இருக்கும் 155-ஏ விதிகளின் படியே பினாமி அனுமதிக்க முடியாது. மீண்டும் இதைச் செம்மையாகச் செய்யவேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். எத்தனை தரம் சொன்னாலும் சட்டம் சட்டம்தான். பினாமி என்றால் ஒருவர் பணத்தைப் போட்டு விட்டு, மற்றவர் பெயரில் நடத்துவது. இதில் பணம் போட்டவர் யார், நடத்துபவர் யார் என்று கண்டுபிடிக்க முடியாது.

To pierce the veil of incorporation.
ஒருவலையைக் கிழித்து உள்ளே இருப்பவர் யார் என்று பார்க்க முடியாது. திரையைக் கிழித்து உள்ளே இருப்பவர்கள் யார் என்று பார்த்தாலும் அதற்குள் மறைந்து இருப்பவர்கள் யார் என்று பார்க்க முடியாது. இந்த 48-ஏ செக்ஷன் போட்டு இருப்பது அவசியம் இல்லாத செக்ஷன் என்று சொல்லிக் கொள்கிறேன். மோட்டார் வெஹிகில்ஸ் ஆக்டிலேயே இந்த பினாமிகளைக் கட்டுப்படுத்த வசதி இருப்பதால் இது தேவை இல்லை என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது இரண்டு சலுகைகளை பஸ் ஆபரேடர்களுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அதாவது, ஒன்று அவர்களே பர்மிட்டுகளை 'சரண்டர்' செய்யலாம், அல்லது பர்மிட் காலம் முடிந்த பிறகு புதுப்பிக்காமல் விட்டு விடலாம். இந்த பர்மிட்டுகளை சரண்டர் செய்து 18—6—1971-ம் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் செய்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காலம் 18—7—1971 அன்றோடு முடிந்து விடுகிறது. நாம் சட்டத்தையே இப்போது தான் செய்து கொண்டு இருக்கிறோம். இதற்குமேல் விதிமுறைகள் வகுக்கப் பட்டு, நாம் எவ்வளவு உச்சவரம்பு வைக்கப்போகிறோம், 50 பஸ் வைத்து இருந்தவர்களுக்கும் 10 பஸ் கொடுப்பதா, இது எல்லாம் அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். ஆகவே, இந்த ஒரு மாத கெடு போதாது. ஆகவே, அந்த பஸ்களுக்காக கொடுக்கப்பட்ட பர்மிட்களின் காலம் முடிந்த பிறகு புதுப்பிக்காமல் விட்டுவிடுவது நல்லது என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு வேறு யாருக்காவது ரூட்களைக் கொடுக்கலாம்.

அதற்குப் பிறகு 75 மைல்களுக்கு மேல் இருக்கும் தடங்களை தேசியமயமாக்குவது என்று இப்போது அரசாங்கம் வைத்து இருக்கிறது. இப்போது கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டத்தின் காரணமாக அந்த உச்சவரம்பு தேவை





யில்லை என்று கருதுகிறேன். இப்போது தனி நபர் கையில் 10 பஸ்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று கொண்டுவந்து இருப்பதால், 75 மைல்களுக்கு மேல் உள்ள தடங்களை அரசாங்கம் தேசிய மயம் செய்ய வேண்டுமா என்பதை மீண்டும் சிந்தித்துப் பார்ப்பது நல்லது என்று கருதுகிறேன். காரணம், இன்னும் பல சிறு பஸ் உடமைக்காரர்கள் ஏற்படுத்தப் பட்டால், அதனால் அந்தத் துறை செம்மையாக நடத்தப் பெறும். வரியும் சர்க்காருக்குவரும். அது மக்களுக்கும் நல்லதா அமையும். அதே போன்று 50 பஸ்ஸுக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு காம்பென்சேஷன் கொடுத்து, பஸ்களையும் எடுக்கப் போகிறார்கள்.

அதே நேரத்தில், 49 பஸ் வைத்திருப்பவன் கதி என்ன? 10-க்கு மேல் இருக்கும் 39 பஸ்களை அவன் என்ன செய்வது, முதலாளிகள் என்றால், அவர்கள் என்ன பெரும் பணக்காரர்களா? இல்லை. காரணம், அவர்கள் மார்வாரிகளிடம் கடன் வாங்கியிருப்பதால், அவர்களைக் கழுத்தை நெரிக்கும் இடைஞ்சல்தான் ஏற்படப் போகிறது. அவர்கள் கதி என்ன? அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுக்க வேண்டாமா? திடும் என்று 10 பஸ் என்றால், பாக்கியிருக்கும் 39 பஸ்களை அவர்கள் என்ன செய்வார்கள்? எங்கே கொண்டு விற்பார்கள்? காயலான் கடையில் போடுவதா? அவர்களுக்கும் நீங்கள் உதவி நிதி கொடுக்க வேண்டும். ஃபைனான்ஸ் கார்ப்பொரேஷனிலிருந்து உதவி அளிக்க வேண்டும். பெரும் வட்டிக்கு வாங்கியிருப்பவர்களை திடுமென்று நடுத் தெருவில் விடுவதா? பார்த்தால் ஏதோ பிரமாதமாக பெரிய துறை என்று நினைக்கிறோம். அதில் என்ன என்ன சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தால், சொல்லுகிறேன். அவர்களால் திடீரென்று மீதியிருக்கும் பஸ்களை விற்க முடியாது. நீங்களும் எடுக்கப் போவதில்லை. 50 பஸ்ஸுக்குமேல் இருப்பவர்களிடம்தான் எடுக்கப் போகிறீர்கள். அவன் பாடு என்ன ஆவது? இது எப்படி இருக்கிறது என்றால், நீங்கள் பெரும் பணக்காரர்களுக்கு உதவி கொடுக்கிறீர்கள். சிறு முதலாளிகளை விட்டு விடுகிறீர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பெரிய முதலாளிகளுடைய பஸ்களையெல்லாம் எடுக்கப் போகிறோம். பத்து பஸ்கள் உள்ளவர்கள் பெரிய முதலாளிகள் அல்ல. என்ன உதவி செய்ய வேண்டும் என்று தாங்கள் சொல்லுகிறீர்கள்?

திருமதி. த. ந. அனந்தநாயகி: நான் சொல்லுகிற உதவி, நீங்கள் செய்கிறது சரியில்லை, 10-க்கு-மேல் இருக்கும் 39 பஸ்கள் என்றால் அவர் திணறுவாரே, அவருக்கும் உதவி செய்ய வேண்டும் என்பதுதான். அவர் தன்னிடம் உள்ள 29, 39, பஸ்சை வைத்துக் கொண்டு என்னடா செய்கிறது என்று தவிப்பார். அவர்களுடையதை யார் வாங்குவார்கள்? அவர்கள் தாங்கமாட்டார்கள் பெரிய முதலாளிகள் என்றால் தாங்குவார்கள். அதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பஸ் முதலாளிகளுக்காகப் பேசுபவர்கள், தொழிலாளிகளுக்காகவும் வாதாடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எங்களுக்கு பஸ் முதலாளியும் இந்த நாட்டின் குடிமகன் தான், தொழிலாளியும் குடிமகன் தான். இருவருக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. ஆகவே, அதில் சங்கடப்பட வேண்டாம். பஸ் முதலாளி என்றால் என்ன டாடாவா, பிர்லாவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 50 பஸ்ஸுக்கு மேல் வைத்திருக்கும் நிறுவனங்களை அரசு உடமை பார்க்கும்போது, தொழிலாளர்களுடைய நலனுக்காகத்தான் செய்யப் படுகிறது. டாடா, பிர்லாவைப் பார்த்து அல்ல. தொழிலாளிகள் பாதிக்கப் படக் கூடாது என்றுதான் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதைத்தான் நானும் சொல்லுகிறேன். 50 பஸ் வைத்திருப்பவரின் தொழிலாளியைப் பற்றிச் சொன்னால், 30 பஸ் வைத்திருப்பவனிடம் இருக்கும் தொழிலாளி கணக்கில்லையா? பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொண்டால், சரியாக இருக்கும். பஸ்கள் வைத்திருப்பவர்களில், 10, 20 பஸ்கள் வைத்திருப்பவர்களிடமும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். எக்ஸ்சர்வீஸ்மென் கூட்டுறவு சொசைடி இருக்கிறது. அவர்கள் தொழிலாளிகள் இல்லையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆகவே என்ன செய்யலாம் என்று யோசனை சொல்லுகிறீர்கள்?

திருமதி த. ந. அனந்தநாயகி: அதற்காகத்தான் என்ன சொல்லுகிறேன் என்றால், தேசியம் ஆக்கும் போது, ஒரு கிளாசுக்குப் பரிகாரம் தந்து விட்டு, இன்னொரு கிளாசுக்குப் பரிகாரம் இல்லாவிட்டால் அது சரியாகாது. இன்றைக்கு எக்ஸ்-சர்வீஸ்மென் கூட்டுறவு சொசைடி இருக்கிறது. அதற்கு எக்ஸம்ஷன் கொடுக்கலாம். மனிதாபிமானத்தோடு செய்ய வேண்டிய காரியம். மறு வாழ்வு கொடுக்க வேண்டிய காரியம். இந்தப் பிரச்சினையை முதலாளி-தொழிலாளி என்ற போர்வையில் போடக் கூடாது. உள்ளே உள்ள பிரச்சினையை அலசி முடிவு செய்ய வேண்டும். 15, 20 பஸ்களை வைத்திருந்தாலும், அவரிடமுள்ள தொழிலாளிகளும் பாதிக்கப் படுவார்கள். பெரிய முதலாளி என்றால் ஒன்றுமில்லை யென்றாலும் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு விடலாம். ஆனால், 15 தொழிலாளிகள் உள்ள பஸ் முதலாளி என்ன செய்வார்? இப்படியெல்லாம் பிரச்சினையைப் பார்க்கும்போது, அவசரச் சட்டம் போடும்போது, சிறப்பான பஸ் தொழில் நடக்க உதவியாகச் செய்ய வேண்டும். நாட்டிலேயே தமிழ் நாட்டில் சிறப்பான பஸ் தொழில் நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தது. "efficient operation is in our state" ஆகையினால், தனி முதலாளியாக இருந்தாலும், வரி போட்டு வாங்குங்கள், சமதர்ம உணர்ச்சியினால். ஆனால் அவர்கள் சாகாமல் இருக்க வேண்டும். அவர்களிடமும் உள்ள தொழிலாளிகள் பயன் பெறும் வகையில் செய்ய வேண்டும். ஆத்திரப்பட்டு செய்துவிட்டு, சிக்கல்களை உண்டாக்காமல் இருக்க வேண்டும். முதலாளிக்காகப் பேசுவதாகவோ, தொழிலாளிக்காகப் பேசவில்லையென்றோ நினைக்க வேண்டாம். பஸ்களில் உள்ள கஷ்டங்களை அநுபவ பூர்வமாகத் தெரிந்துக் கொண்டிருக்கிற காரணத்தால். வக்கீல் தொழிலில் அவர்களுடைய



கஷ்டநஷ்டங்கள் புரிந்திருக்கிற காரணத்தால் இதை எடுத்துச் சொன்னேன். அதில் முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் இருக்கிறது. இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: இந்த உச்ச வரம்பு முறையை அம்மையார் ஒரு வகையில் ஏற்கிறார்கள், இன்னொரு வகையில் மறுக்கிறார்கள்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறீர்களா? விளக்கம் பிறகு கேட்கலாம்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் விளக்கம்தான் கேட்கிறேன், ஒரு முறை பேசும்போது, ஒத்துவரவில்லை என்கிறார்கள். மற்றொரு முறை சரி என்கிறார்கள். 10 பஸ் வைத்திருப்பவர்களிடமும் தொழிலாளர்கள், முதலாளி உண்டு. 50 பஸ் வைத்திருப்பவர்களிடமும், தொழிலாளர்கள், முதலாளிகள் உண்டு. அரசாங்கத்தினுடைய திட்டம் வைத்திருக்கும் பஸ்களுக்கு வரம்பு கட்டி அவர்களுக்கு உரிமை கொடுக்கப்படும் என்பதுதான். அதிகமாக வைத்திருப்பவர்களிடமிருந்து பிரித்து இந்த அளவுக்குத்தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்று செய்கிறார்கள். அவர்கள் வக்கீல் பாஷையில் பேசுவது சாதாரண அரசியல் அநுபவம் உள்ள எனக்கு விளங்கவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'வக்கீல்கள்' என்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடாது. சட்ட மன்றத்திலே ஒரு தொழிலைப் பற்றி, 'டாக்டர்', 'வக்கீல்' என்று சொல்லக் கூடாது. (குறுக்கீடு) அம்மையார் சொல்லலாம், அவர்களே வக்கீல், தன் அநுபவத்தைச் சொல்லும்போது சொல்லலாம். ஆனால் மற்றவர்கள் சொன்னால், அது நோக்கம் கற்பிக்கும் முறையில் அமைகிறது. வக்கீல் குலத்தைப் பாதிக்கும். அதைத் தவிர்ப்பது நல்லது.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் கேட்டது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கத்தை மட்டும் கேளுங்கள். அம்மையாரிடம் தங்களுக்கு என்ன விளக்கம் வேண்டும் என்று கேளுங்கள்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் கேட்கிறேன், எந்த வகையில் இது பாதிக்கிறது என்பதை விளக்க வேண்டும். எந்த அடிப்படையில் அவர்கள் சிறு முதலாளிகளைப் பாதிக்கிறது என்கிறார்கள்? 50 பஸ்கள் வைத்திருப்பவர்களுடைய தொழிலாளிகளை எப்படிப் பாதிக்கிறது, 10 பஸ் வைத்திருபவருடைய தொழிலாளிகளை எப்படிப் பாதிக்கிறது என்பதை அவர்கள் விளக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, இப்பொழுது உச்ச வரம்பு பத்து பஸ்கள். 19, 20 என்று வைத்திருந்தால், 10-க்குத்தான் பர்மிட் கொடுப்பார்கள். ஆகையினால் பத்துக்கு மேற்பட்டதை விற்றே ஆகவேண்டும். அவரிடம் ஏற்கனவே வேலை செய்த தொழிலாளிகள் விலக்கப் படவேண்டும், நோட்டீஸ் கொடுக்க வேண்டும். பாக்கியை வேறொருவருக்குக் கொடுக்கும் போது, அவர் தனக்கு இஷ்டமான தொழிலாளிகளை வைத்துக் கொள்வார்கள். ஆனால் 50 பஸ்க்கு மேல் வைத்திருப்பவர்களிடமிருந்து எடுத்து தேசியம் செய்யும்போது, அப்படியே பஸ்கள் ஒர்க்ஷாப் எல்லாவற்றையும் எடுக்கிறோம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. சுரேந்தரன்.

■ **திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த பஸ்களை தேசியம் ஆக்குவதில், ஏற்கனவே என்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறேன். எல்லாவற்றையும் எல்லாத் துறைகளையும் தேசியமாக்க வேண்டும் என்று கூறி இருக்கிறேன். மதிப்பிற்குரிய அம்மையார் திருமதி அவந்தநாயகி அவர்கள், என்னுடைய கருத்தை ஏற்றுக் கொண்டது போல் பேசியிருப்பதைக் கண்டு நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இப்பொழுது பஸ்களை எடுப்பதன் மூலம் ஏற்படுகின்ற ஒரு பெரிய சிக்கல், அதிலே பணி செய்யும் தொழிலாளிகளுக்கு என்ன நிலை ஏற்படும் என்பது. அந்தத் தொழிலாளிகளுக்கு உரிமைகளும், சம்பளமும் அப்படியே கொடுக்கப் படுமா? அரசாங்கம் எடுக்கும்போது, அரசாங்கத்தில் இருக்கும் விதி முறைகளுக்கு ஏற்றபடி இல்லாவிட்டால், அவர்களுடைய நிலை என்னவாகும்? இது போன்ற பிரச்சினைகள் எல்லாம் அமைச்சரமர்களால் விளக்கப்படும் என்று கருதுகிறேன். அதோடு பஸ்களை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறபோது, அப்படி எடுத்துக்கொள்கிற நோக்கம், அதனுல் பஸ்ஸை ஓட்டுகிறவர்களுக்கும், அதிலே செல்கிறவர்களுக்கும் நல்லவிதமாக பயனுள்ள வகையில் உள்ளதாக இருக்க வேண்டும் என்று தான் நான் கருதுகிறேன். அப்படியாளுல், இந்தக் கூட்டுறவுத் துறையிலே....

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்தச் சட்டம், அரசு பஸ்களை நாட்டுடைமையாக்குகின்ற சட்டமல்ல. இது உச்சவரம்புச் சட்டம். இதிலே தொழிலாளர்களைப் பற்றியும், தொழிலாளர் சம்பள விகிதங்களைப் பற்றியும், சர்வீஸ் கண்டிஷன் பற்றியும் குறிப்பிட்டார்கள். ஆகவே தான் இந்த விளக்கத்தைத் தருகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** உச்சவரம்பைத் தொடர்ந்து சில காரியங்கள் செய்யப் படவிருக்கின்றன என்ற காரணத்தால், அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உச்சவரம்பு என்று சொல்லும்போது அது ஒரு சேவா உணர்ச்சியுடன் தான் செய்யப் படுகிறது என்று கருதுகிறேன். பெரும் மூலதனம், பெரும் செல்வம் ஒரே இடத்தில் தங்காமல் அதைத் தடுத்து எல்லோரிடமும் பாவலாகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இந்தச் சட்டம் செய்யப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சேவாவுணர்ச்சி என்று சொல்லும்போது, இப்போது புது முறையாக கூட்டாகச் சேர்ந்து கம்பெனிகளை நடத்துகிருர்கள். எக்ஸ்சர்வீஸ் மென் கூட்டுறவுச் சொசைட்டிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிறுவனங்களுடைய பஸ்களுக் கெல்லாம் கூட உச்சவரம்பு என்று சொன்னுல் அது சரியல்ல. யோசித்துச் செய்ய வேண்டியிருக்கிறது.

எனக்கு ஒரு தகவல் கோவையிலிருந்து வந்திருக்கிறது. அங்கே உள்ள கூட்டுறவுச் சொசைட்டி நல்ல முறையில் லாபகரமாக, பிரயாணிகளுக்கு நல்ல முறையில் வசதிகளைத் தந்து காரியங்களைச் செய்கிருர்கள் என்று அந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 75 மைல்களுக்கு மேல் உள்ள பஸ்களை எடுத்துக் கொள்வது என்று வந்தபோது அந்த நேரத்திலேயே இன்றைய மாண்புமிகு முதலமைச்சரிடம் நான் வாதாடி இருக்கிறேன். மறைந்த முதலமைச்சர் அண்ணுவிடமும் இது சம்பந்தமாக வாதாடியிருக்



கின்றேன். அத்தகைய கூட்டுறவுத் தடங்களை எடுக்கக் கூடாது என்று கூறியிருக்கின்றேன். ஆனுல் என்னுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இன்றைக்கும், இந்த நிலைமையில் கூட சீராக, நல்ல முறையில் ஒழுங்காக நடைபெறுகின்ற கூட்டுறவுச் சொசைடிகளுக்கு உச்சவரம்பு கொண்டுவாராமல் விட்டு விடுவது நல்லது என்று இந்த நேரத்திலேயும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நோக்கம் நல்ல நோக்கம். அது நிறைவேற்றப்பட வேண்டும். ஒருவரிடம் உள்ளதைப் பிரித்து, அதிலே உள்ளவர்களுக்கு கஷ்டங்கள் உண்டாக்குவது என்று குறிப்பிட்டார்கள். அது சரியானதல்ல என்று கூற விரும்புகிறேன். உச்ச வரம்பு செய்கிற போது, மிச்சம் வருகின்ற தொழிலாளர்கள், பஸ்கள் இவர்களுக்காக கூட்டுறவுத் துறையிலே செயல்படுகின்ற பழக்கத்தைத் தந்தால் கூட்டுறவு முறையை விரிவு படுத்துவதற்கும் மக்களே பொறுப்பு எடுத்துக் கொண்டு கூட்டுறவு முறையில் செயலாற்ற முன்வருவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பத்து பஸ்ஸுக்கு மேலே உள்ள பஸ்களையெல்லாம் எடுத்து யாரோ ஒரு சிலரிடம் கொடுப்பதன் மூலம் என்ன எதிர்பார்க்கிருேமோ, அதற்குப் பதிலாக வேறு நிலைமை உருவாக்கக் கூடாது. அதற்குப் பதிலாக, கூட்டுறவுத் துறையில் பஸ்களை நடத்த ஊக்கம் கொடுப்போமேயானுல், காரியங்களை நல்ல முறையில் நிறைவேற்றவும் இந்த மாநிலத்தில் கூட்டுறவு என்ற பக்குவத்தை உண்டாக்கவும் அத்தோடு மற்ற மாநிலங்களுக்கெல்லாம் கூட நமது மாநிலம் ஒரு வழி காட்டியாக அமைந்துவிடும் என்று கூறி, இந்த மசோதாவை வரவேற்று அமர்கின்றேன்.

■ **திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

தி.மு.க. அரசு சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நல்ல காரியங்களைச் செய்கிருர்கள். 75 பஸ்களுக்கு மேலேயுள்ள தனியார் பஸ்களுக்கெல்லாம் உச்சவரம்பு, நிலங்களுக்கெல்லாம் உச்சவரம்பு என்ற நிலையில் நமது தி.மு.க. அரசு செயல்படுகின்ற நேரத்தில் பல தடைகள் பல பள்ளங்கள் குறுக்கிடுகின்றன, இன்னும் வெளிப்படையாகச் சொல்லப் போனுல், சொல்லித் தீரவேண்டுமானுல், பணம் வருகின்ற துறைகளிலே பணத்தைப் போட்டு மிகுதியான செல்வத்தைத் திரட்டுகின்ற வாய்ப்பிருக்கின்ற காரணத்தால், ஒரு பக்கத்தில் செல்வம் குவிந்துகொண்டே போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட வாய்ப்பினைத் தடுக்க வேண்டும் என்ற காரணத்திற்காக இப்படிப்பட்ட திட்டத்தைச் சர்க்கார் கொண்டுவந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

அதுமட்டுமல்ல. இதிலே உள்ள பல்வேறு ஓட்டை உடைச்சல்களையெல்லாம் அடைத்து சிறந்த சட்டமாக உருவாக்கியிருக்கிருர்கள். நமது அம்மையார் அவர்கள் கூடச் சொன்னுர்கள். ஆர்.டி.ஏ. க்களின் அதிகாரிகளாக மாவட்டக் கலெக்டர்கள் இருக்கிருர்கள். அந்தக் கலெக்டர்களெல்லாம் சர்க்காரின் பிரதிநிதியாக மாவட்டங்களில் வேலை செய்கிருர்கள். எனவே, இங்கேயுள்ள மந்திரிமார்கள் யாருக்கு, சிபாரிசு செய்கிருர்களோ, அவர்களுக்கு பஸ்ரூட் கொடுக்கக்கூடிய நிலைக்குப் போய்விடுமோ என்று ஐயப்பாட்டினை

**திரு. செ. கந்தப்பன் :** நான் இரண்டு அர்த்தத்தை நினைக்கவில்லை, பொதுவாகப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. ஆனால் இது பெயரளவில் இருக்கிற குழப்பமல்ல. அந்த இயக்கத்தைச் சார்ந்திருக்கிறவர்கள் கொண்டிருக்கிற கொள்கையிலும் குழப்பம் இருக்கிறதென்பதை நான் இன்றையதினம் அம்மையார் பேசுகின்றபொழுது புரிந்து கொள்ள முடிகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த மசோதா மீது பேசுகிறார்களா அல்லது பல்வேறு அரசியல் கட்சிகளைப் பற்றி பேசுகிறார்களா? இப்போது அவையின் முன் இருக்கிற விவாதம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மசோதாவைப் பற்றித் தான் பேசுகிறார்கள். இதில் கட்சிக்கு இருக்கிற கொள்கை குழப்பத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள். இதில் ஒன்றும் பாய்ன்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. செ. கந்தப்பன் :** உச்ச வரம்பைப்பற்றி, நம்முடைய ராஜமான்ய பிரச்சினை தேர்தலுக்கு முன்பு எந்த நேரத்தில் ராஜாக்களுக்காக மிகப் பரிந்து அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எப்படிப் பேசினார்களோ, அதே போல் தான் பஸ் ரூட் சொந்தக்காரர்களுக்கு, பஸ் முதலாளிகளுக்காக அம்மையார் பரிந்து பேசுகிறார்களோ என்று அவருடைய பேச்சு தோரணி இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, this is completely twisting my speech. I am not here to file a vakkalath on behalf of private motor operators, I want the Government to consider the pros and cons of the matter.

**திரு. செ. கந்தப்பன் :** தேர்தலுக்கு முன்பு ராஜ மானியத்தை ஒழிக்கக் கூடாது என்று சொல்லி விட்டு, பிறகு தேர்தல் முடிந்த பின் போட்ட ஒரு மாநாட்டில். . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** Sir, this is not an isssue . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உதாரணத்திற்கு சொல்லிவிட்டு முக்கியமான விஷயத்துக்கு வாருங்கள்.

**திரு. செ. கந்தப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மிக முக்கியமான உச்ச வரம்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். நிச்சயமாக அந்த உச்ச வரம்புக்கு அப்பால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சீக்கிரமாகப் பேசவேண்டும். சுருக்கமாகவும் நன்றாகவும் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

**திரு. செ. கந்தப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வாக்கியத்திற்கிடையிலும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குறுக்கிடுவதென்றால் தொடர்ந்து பேசுவதென்பது கடினமாக இருக்கும். இந்த மன்றத்தில் கடந்த சில நாட்களாக மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் என்ன வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள், பெருமதிப்புக்குரிய எங்கள் தலைவரைப் பற்றிக் கூட என்பதை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** I very strongly object to it. நீங்கள் விஷயத்தைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. செ. கந்தப்பன் :** அம்மையார் பேசியிருக்கிற பேச்சுக்கள் ரிக்கார்டில் இருக்கின்ற காரணத்தால் படித்து எடுத்துக் காட்டிப் பேசவில்லை. ஆகவே, குறுக்கிட மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது இருக்கிற விவாதம், வாகனங்களைப் பற்றியது. அம்மையாரைப் பற்றிய விவாதமல்ல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உச்சவரம்பு போக்குவரத்துக்கு மட்டுமல்ல. மசோதாக்கள் நிறைவேற வேண்டும். பேசுபவர்களுக்கும் உச்சவரம்பு விதித்து விரைவில் மசோதாக்கள் நிறைவேற வழிவகுக்க விரும்புகிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** எனவே, இந்த நிலத்துக்கு உச்சவரம்பு வந்த நேரத்தில், உச்ச வரம்பா, மிச்ச வரம்பா, என்ற கேள்விகள் கேட்கப்பட்டு, பிறகு தவறுகள் நீக்கப்பட்டன. இந்த மசோதாவில் அம்மாதிரி தவறுகள் இடம் பெறுவண்ணம் அதற்கேற்றவாறு விதிமுறைகளும் அமைக்கப்பட்டு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதனை வரவேற்பதற்குப் பதிலாக இதனால் பஸ் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று எழுப்பப் படுகிற வாதம் பொதுவாக இதுபோல உச்சவரம்பு, சமதர்ம சமுதாயம் அமைப்பதற்கான ஒரு கட்டுப்பாடு, அதற்கான சட்டவிதிகள் கொண்டு வருகிற நேரத்தில் பழமை விரும்பிகள் பழமைக்கு ஆதரவு தருகிறவர்கள் எழுப்புகிற வாதமாகப்படுகிறது.

பொதுவாக ஒரு பஸ் முதலாளி அல்லது தனிப்பட்ட பெரும் தொழில் நடத்துபவர், இதில் உச்ச வரம்பு கொண்டு வந்தால் அவருக்குப் புனர்வாழ்வு தருகிற அளவுக்கு ஏழையாக மாறிவிடுவதில்லை. 100, 150 பஸ்களை வைத்திருப்பவர்கள் அந்த வண்டிகளை வைத்துக் கொண்டு வேறு வகையில் முதலீடு செய்யாமல் அந்த அளவுக்கு வாய்ப்பு வசதியற்றவர்கள் அல்ல. எனவே ஏழைகள் நிலம் எடுக்கப்பட்டு அவர்களுக்குப் புனர்வாழ்வு தரவேண்டுமென்று எழுப்புகிற வாதத்திற்கும் அதேபோல் பஸ் முதலாளிகளுக்கு புனர்வாழ்வு தரவேண்டும் என்று பேசப்படுகிற வாதத்திற்கும் இருக்கிற தாரதம்மியத்தைப் பார்க்க வேண்டும்.

இந்த உச்ச வரம்பால் 10 வண்டிகள் வைத்திருப்பவர்கள் எப்படி வாழ்வு நடத்த முடியும்? அவர்களுக்குப் பொருளாதாரம் போதாது என்று இங்கு பேசப்பட்டது. ஆனால் உண்மையிலேயே எல்லோருக்கும் தெரியும். என்னுடைய சேலம் மாவட்டத்தில் சராசரி ஒரு வண்டிக்கு ரூ. 300-லிருந்து 500 வரை வருமானம் வருகிறது. எவ்வளவு செலவழித்தாலும் ரூ. 100, அல்லது ரூ. 150 மிச்சமாகிறது. 10 வண்டிகள் வைத்திருக்கும் ஒருவர் ஒழுங்கான நிறுவனமாக இருந்தால் ஒரு நாளைக்குச் சுமார் ரூ. 1,000 வருமானம் வரும் வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருக்கும்போது நில உச்சவரம்புக்கு 15 ஏக்கர் நிலம் என்று இருக்கிறது. பஸ்களை பொருத்தமட்டில் 10 பஸ் என்று இருக்கிறது என்று அம்மையார் எழுப்பும் வாதம் ஆச்சரியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட வாதத்தை நான் விளக்க முற்பட்டபோது நான் நினைத்துக்

கூறுவதாகச் சொன்னது சரியல்ல. அவர்கள் தொடர்ந்து சமுதாய சமதர்மம் அமைக்கப் பாடுபட வேண்டும் என்று இந்த நேரத்தில் நினைவுபடுத்தி இந்த மசோதாவை மீண்டும் வரவேற்கிறேன்.

இன்னொரு கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 50 பஸ்களுக்குக் கீழே உள்ளவர்களுக்குப் பரிந்து சொன்னீர்களே, இதற்கு நீங்கள் சொல்லுகிற யோசனை, பரிகாரம் என்ன என்று கேட்டதற்கு எந்தப் பதிலையும் அம்மையார் சொல்லவில்லை என்பதை இந்த மன்றம் பார்த்தது. உண்மையில் நினைப்பது ஒன்று; சொல்வது ஒன்றாகவும் இருந்தால் இது போன்ற குழப்பம் எல்லாம் ஏற்படத் தான் செய்யும். எனவே. . .

திருமதி த. ந. அனந்தநாயகி: Sir, this is again casting aspersion.

நினைவு, சொல் எல்லாம் ஒன்றுதான். டைம் கொடுத்தால் அதையும் சொல்லுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, should he not be fair? Why should he insinuate the Members on this side of the House? Of course, he has got the right to speak.

திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இந்த மசோதாவுக்கு இரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன். முதல் திருத்தம் இந்த மசோதாவானது எந்தத் தேதியில் அவசரச் சட்டமாகக் கொண்டுவரப்பட்டதோ, அந்தத் தேதியில் இருந்து அமுலுக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஜூன் 18-ஆம் தேதியில் இருந்து, இந்த அவசரச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னாலே நடந்த கூட்டத் தொடரில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இம்மாதிரியான உச்சவரம்பு மசோதா கொண்டுவரப்படும், 15 பஸ்கள் உச்சவரம்பாக அமையலாம் என்று சொன்னார்கள். அப்படி அவர் தெரிவித்ததற்குப் பின்னால் இந்த அவசரச் சட்டம் வருவதற்குள்ளாக அநேக இடங்களில் பல மாறுதல்கள்—முறையற்ற தன்மையில் நடந்திருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவேதான் இந்த மசோதா 18—6—1971-இல் இருந்து அமுலுக்கு வரும் என்பதற்குப் பதிலாக 1—4—1971-இல் இருந்தே அமுலுக்கு வரும் என்பதாக அமைவதற்கு நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இப்படிச் செய்துவிட்டால் இந்தச் சட்டத்தை மீறுவதற்கு எடுக்கக்கூடிய சட்டவிரோதமான நடவடிக்கைக்கு [illegible]ாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது திருத்தம் என்னவென்றால் இந்தச் சட்டத்தில் எல்லோருக்கும் தனியாராக இருந்தாலும் அல்லது கூட்டுறவாக இருந்தாலும், அல்லது பார்ட்னர்சிப்பாக இருந்தாலும், ப்ரைவேட் கம்பெனியாக இருந்தாலும், பப்ளிக் கம்பெனியாக இருந்தாலும் 10 பஸ்கள் உச்சவரம்பு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குமாறாக ஒரு கூட்டுறவோ அல்லது ஒரு பார்ட்னர்ஷிப்போ உள்ளதற்கு 10 பஸ்கள் என்றும், தனியாளாக வைத்திருப்பவர்களுக்கு 3 பஸ்கள் தான் உச்சவரம்பு என்றும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன்.



இதற்குமாறாக சில உறுப்பினர்கள் சில விவரங்களைத் தெரிவித்தார்கள். பார்ட்னர்ஷிப்பாக நடத்தக்கூடியவர்களுக்கு 10 பஸ்களுக்கு மேல் வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்றார்கள், அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை.

பொதுவாக பஸ்கள் பூராவும் பொதுத்துறைக்கு வந்தாக வேண்டுமென்ற கருத்து இந்த மசோதாவில் பிரதிபலிப்பதாகவே நினைக்கிறேன். அண்மையில் ஒரு சோஷலிஸ்ட் நாட்டுக்கு நான் சென்றிருந்தபோது ஒரு பெண், உங்கள் நாட்டில் தனியாரிடத்தில் போக்குவரத்தைக் கொடுத்து பஸ் கட்டணம் மூலமாக வசூலாகும் பணம் எல்லாம் ஒரு ஆளிடத்தில் போய்ச் சேரும்படியாக இருக்கிறதே, இத்தகைய பிற்போக்கான நாடாக அல்லவா உங்கள் நாடு இருக்கிறது, என்றார்கள். ரயில்போக்குவரத்து இந்த நாட்டில் ஒரு தனி யாருக்குச் சொந்தம் என்றால் ஏற்றுக்கொள்ள முடியுமா? போக்குவரத்து பூராவும் பொதுத்துறைக்கு வந்தாக வேண்டும் என்ற நிலைமைதான் இருக்க வேண்டும். பொதுத்துறையில் தவறு இருக்கிறது என்றால் அதை எப்படிக் கண்காணிப்பது என்கிற முறையில் சட்டமன்றம் யோசித்து கொள்கை ரீதியாக குறைகளை அகற்றி, எல்லாவற்றையும் பொதுத் துறையின் கீழ்தான் கொண்டுவந்தாக வேண்டும்.

அடுத்து, இந்த மசோதாவில் இருக்கக்கூடிய சில பகுதிகளைப் பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

டிரான்ஸ்போர்ட் அப்பலேட் ட்ரிப்யூனலை எடுத்துக் கொண்டால் அது செம்மையாகத்தான் செயல்பட்டு வருகிறது. ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஹைக் கோர்ட்டில் ஒரு விஜிலன்ஸ் செல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றார்கள். அந்த விஜிலன்ஸ் செல் டிரான்ஸ்போர்ட் அப்பலேட் ட்ரிப்யூனல் சம்பந்தமாகவும் கொஞ்சம் விசாரணை நடத்தி அதன்பேரில் ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கவேண்டும் என்று செய்தால் பல உண்மைகள் தெரியவரும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த அப்பலேட் ட்ரிப்யூனலுக்கு வரும் வழக்குகளை ஒருவருக்கு மேல் இரண்டு மூன்றுபேர் இருந்து கவனிப்பது நன்றாக இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மசோதாவில் உள்ள இன்னொரு நல்ல அம்சம் இதுவரையிலும் ஒருவருக்குப் பர்மிட் கொடுப்பது என்றால் பொதுமக்களுடைய நலன் முக்கியமானதாகக் கருதப்படவில்லை. அந்த ரூட்டில் இருக்கும் பஸ் ஓனர்களுடைய நலனே கவனிக்கப்பட்டது. அவர்களுடைய ஆட்சேப சமாதானம் கேட்கப்பட்டது. எனக்குத் தெரியும் 15 மைல் வரையில் சிடி பஸ் விடலாம் என்றிருப்பினும், திருமங்கலத்திற்கு சிடி பஸ் போட முயற்சித்தபோது தனியார் ஒருவர் வழக்குப் போட்டு அதைத் தடை செய்தார். பிறகு மக்களே கிளர்ந்து எழுந்து, அந்த தனியாருடைய பஸ்கள் வரும்போது வழியில் மறித்துக் கொளுத்திவிடுவோம் என்கிற கிளர்ச்சி தொடங்கியபின்தான் அந்த சிடி பஸ் வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. மக்களுக்கு இதனால் ஏற்படும் சாதக பாதகம் என்ன என்பதை இதுவரை கவனிக்கவில்லை. இதற்கு மாறாக இன்றைக்கு இந்த மசோதாவில் மக்களுடைய நலனையே பிரதானமாகக் கருதி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1971 ஜூலை 13

'A Regional Transport Authority may after taking into consideration the interests of the generai puplic and the adesuacy of other passenger transport services operating......'
என்று சொல்லியிருப்பதாவது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். ஆக மக்களுடைய வசதியையே பிரதானமாகக் கருதியிருப்பது சாலச் சிறந்தது என்ற கருத்தை இந்த இடத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, பினாமி சம்பந்தமாக பல விவாதம் வந்தது. இதில் குறிப்பிட்டிருக்கிற கருத்து எல்லாம் இந்தமாதிரி பத்து பஸ்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்று வந்தவுடன் இந்த இடைக்காலத்தில் வேறு ஒருவர் பெயரில் மாற்றி யிருப்பது அல்லது 50 அல்லது 60-க்கு மேல் உள்ளவர்கள் கூட பத்துப் பத்தாக பல பேர்கள் மீது பிரித்து வைத்திருப்பது என்றால் அவற்றை எல்லாம் பரிசீலனை செய்வதற்காக பினாமி என்று போடப்பட்டிருக்கிறது. இது எல்லோருக்கும் புரிந்த விஷயம். நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தபோது பினாமியாக பலபேர்கள் நிலத்தைப் பல பெயர்களின் பேரில் மாற்றி வைத்திருந்ததால் நிலம் கிடைக்காது போனதுபோல ஆகாதிருக்க இந்த ஏற்பாட்டை இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் செய்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். இதைச் சரியான முறையில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆர்.டி.ஏ. பற்றி ஒன்றும் குறை சொல்வதற்கில்லை. பொதுவாக தனியார் துறையில் பஸ் பர்மிட் கொடுத்து, ஆர். டி. ஏ. மார்க்குகள் வைத்திருந்தாலும் அப்பீல் ப்ரொவிஷன் இருந்தாலும், இந்த இலாக்கா பற்றி ஜனங்கள் மத்தியில் பலவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லப் போனால் ஒவ்வொரு டிரான்ஸ்போர்ட் அதிபருக்கும் இந்த இலாக்காவில் ஒரு அதிகாரி இருக்கிறார். அதிகாரி என்று சொல்வதைவிட அந்த இலாக்காவில் உள்ளவர்கள் என்று சொல்லலாம். வரக்கூடிய விஷயங்களை அவரவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அந்தமாதிரியான குறை வருவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது.

இந்த அப்பீல் சம்பந்தமாக உண்மையிலேயே அப்பலேட் ட்ரிப்யூனலுக்கு மேல் அப்பீல் இல்லை என்று சட்டப்படி செய்துவிட்டால் அவர்கள் ரிட் போட்டு விடுவார்கள். ஆகவே, ஒரு ரிவிஷனல் ஜூரிஸ்டிக்ஷன் வைத்திருப்பது நல்லது. அந்தத் தீர்ப்பில் இருக்கக்கூடிய உள்விவகாரங்களுக்குள் போகாமல் சட்டரீதியாக அந்தத் தீர்ப்பில் ஏதாவது குறைபாடு இருக்கிறதா என்கிற நிலைமை பரிசீலிக்கப்படுவதற்கு வசதி ஏற்படும். இப்போது ரிட் என்றால் எப்படியாவது அட்மிஷன் ஆகிவிடுகிறது. அதற்குமேல் 2 வருட காலம் அந்த ரிட் முடிவாக—மீண்டும் வேறு ஒரு ரிட், இதனால் எல்லாம் மிகுந்த காலதாமதம் ஆகிறது. தனியார் பணத்தை வேண்டும் அளவு அதற்குள் சேர்த்துக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுகிறது, நான் சேர்ந்திருக்கிற ப்ரொபஷனில் உள்ளவர்களுக்கு, அது அதற்கு இடமில்லை என்றால் வேலை குறையலாம் என்றாலும், அதைவிட சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடிய விஷயமாக இது மசோதாவில் அமைந்திருப்பதை ஆதரிக்கின்றேன்.



1971 ஜூலை 13]

மீண்டும் ஒரு முறையில் தனியார் வசதி, வாய்ப்பு மட்டும் கவனிக்கப்படக் கூடாது என்பதாக ஹைக்கோர்ட்டும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதையும் இந்த மசோதாவைத் தயாரிக்கும்போது கவனத்தில் எடுத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

ஆக, இந்த மசோதாவில் நான் முன்பு சொன்னதுபோல 18—6—1971 இல் இருந்து இது அமுலுக்கு வரும் என்பதற்குப் பதிலாக 1—1—1971 இல் இருந்தே அமுலுக்கு வரும் என்று திருத்தப்பட வேண்டியது ஒன்று முக்கியமாகும்.

அதுபோல கூட்டுறவுத்துறையிலோ, பார்ட்னர் ஷிப்பிலோ நடப்பதற்கு உச்சவரம்பு 10 பஸ்கள் என்பதாகவும், தனியாளாக நடத்துபவர்களுக்கு உச்சவரம்பு 3 பஸ்கள் தான் என்பதாகவும் திருத்த வேண்டியது அவசியமாகும். சில இடத்தில் எனக்குத் தெரியும். நான்கைந்து பேர்கள் கூட பார்ட்னர் ஷிப்பாக நடத்துகிறார்கள். இவர்கள் லாபத்தைப் பிரித்துக்கொள்வதற்கும் தனியார் பத்து பஸ்களை வைத்துக் கொண்டு லாபம் அடைவதற்கும் நியாயம் இருக்க முடியாது. ஆகவேதான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தங்களை செகண்டு ரீடிங் வருகிறபோது வற்புறுத்துவேன் என்று சொல்லிக் கொண்டு பொதுவாக இந்த மசோதாவை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

■ திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்களுக்கெல்லாம் உச்ச வரம்பு கொண்டுவர வேண்டுமென்பதை எங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறோம். அதற்கு எதிராக, 'எங்கள் கட்சி பிற்போக்கு வாதத்திலே முனைந்திருக்கிறோம்' என்று குற்றம் சாட்டாமல் இருப்பது நல்லது. பொதுவாக இந்தச் சட்டத்திலே பல குறைபாடுகள் காணுகிறார்கள். அதை 'வக்கீல்' என்ற முறையில் எங்கள் கட்சி அங்கத்தினர் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதற்கு உள்நோக்கம் கற்பிப்பது நியாயம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

பத்து பஸ்கள் இருக்க வேண்டுமென்பதைப்பற்றி பிளானிங் கமிஷனிலே என்னென்ன ஆலோசனைகளை நமது அரசாங்கத்திற்கு தந்திருக்கிறார்கள் என்பதை இந்த ஜி.ஓ. சொல்வதிலிருந்தே தெரிகிறது.

'G. O. Ms. No. 3353. Home Department, dated 15th November 1954.
அதிலே,
'Order: The Planning Commission has made the following recommendation in respect of Road Transport Services'
என்று முதலிலே கூறியிருக்கிறார்கள்

'It is desirable for the existing private operators' Units to amalgamate, wherever possible, into big viable units to enable them to achieve better returns and maintain better standards of operation'
என்று அதன் தலைப்பிலே சொல்லிக் கொண்டு, 10 என்பது நியாயமான வயபிள் யூனிட் என்று அந்த ஜி.ஓ. விலே எடுத்துக் கூறப்படுகிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்னொரு பகுதியிலே

The Governor of Madras hereby directs that each viable stage carriage unit in this State shall consist of not less than 10 buses and that in the matter of grant of stage carriage permits, other things being equal, and with a view to build up such viable units, the following shall be the order of preference.'

என்று சொல்லி, 'order of preferense' என்று சுட்டி காட்டி விட்டு

'The Governor also directs that in order to facilitate the amalgamation of existing small units into viable units, transters of permits shall be allowed liberally.'

என்று கூடச் சொல்லியிருக்கிறது. 10-க்கு குறைவாக இருக்கிறவர்கள் 'transfer application' போட்டால் நல்ல முறையில் பரிசீலனை செய்ய உத்தரவிட வேண்டுமென்று அந்த ஜி.ஓ.விலே கூறியிருக்கிறது. பொதுவாக, 10-ஆனது பொருத்தமாக இருந்தாலும், பத்துக்கு மேற்பட்ட இடங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு என்ன என்ன பாதுகாப்பு கொடுக்கப் போகிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். பொதுவாக பஸ்கள் தேசியமயமாக்கப்பட்ட பின்பு பல கம்பெனிகளிலுள்ள தொழிலாளர்களை இதுகாறும் அரசாங்கம் வேலையில் அமர்த்தவில்லை. குறிப்பாக பல கட்டங்களிலும் அவர்கள் போராடக்கூடிய தன்மையை நாம் பார்க்கிறோம். புதிதாக சட்டத்தைக் கொண்டு வருகிற நேரத்தில் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில் பொருத்தமாகச் சட்டம் செய்வது சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 64-வது பிரிவைப் பற்றி ஒரு கருத்து. 64-வது பிரிவிலே ரிவிஷனல் பவர்ஸ் பற்றியது. சிவில் ப்ரொஜர் கோடில் 115-வது பிரிவை அனுசரித்து அவர்களுக்கு ரிவிஷனல் பவர்ஸ் இருக்கிறது. ஆனால் ஒன்று கூற விரும்புகிறேன். அதைக் கொஞ்சம் தெளிவுபடுத்தினால் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சாதாரணமாக ரிவிஷன் அனுமதிக்கப்படுவது சங்கடமான விஷயம். மூன்று காரியங்களுக்குத்தான் அனுமதிக்கப்படுகிறது. அதாவது,

'legality, regularity and propriety'

ஒரு உத்தரவு பிறப்பித்தால் அது லீகலாக இருக்கிறதா, ரெகுலராக இருக்கிறதா, பொருத்தமாக இருக்கிறதா என்று சட்ட வரம்புக்குட்பட்டுத்தான் அது அனுமதிக்கப்படுகிறது. ஹைகோர்ட்டில் இந்தக் கேஸ்களில் ரிவிஷன் முழுமையாகப் பெற்றுக்கொள்வதில்லை. ரிவிஷனிலே ஒருசில ரிகார்டுகளைப் பெற்றுக்கொள்வது வழக்கமாக இருக்கிறது. இந்தமாதிரி காரியங்களில் அப்பில் அதிகாரத்தை எடுத்துக் காட்டுகிறோம்.

'Restricted right is given'

எல்லா ரிகார்டுகளையும் 'கால்ஃபார்' செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும். ரிகார்டுகள் எல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்பதைப் பார்க்கவும், ஆராயவும் வழிவகை செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப்பெற்றவும் பற்றி ஆலோசிக்க வேண்டும்.



இந்தமாதிரி சட்டங்கள் வருகின்றபோது தப்பித்துக் கொள்வதற்கு வழி இல்லாதபடி திருத்தியமைக்க வேண்டும். இன்னொரு விஷயம். இங்கு அப்பீல் களைப்பற்றிக் கூறுகிறபோது 47(1)-லே ஒரு 'ப்ரொவிஸோ' இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்: அதில் அல்ல, செக்ஷன் 47 (3) (3)-ல்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அதற்கு விதிமுறைகளிலே அப்பீல் கொடுப்பதற்கு வசதி இருக்கிறது. தம்முடைய விதிமுறைகளிலே
'Order passed under sub-section (3) of section 47 of the Act'.
என்று இருக்கிறது. இந்த விதிமுறைகளை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சற்று முரண்பாடாக ஏற்பட்டு விடும். ஆகவே, அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்டத்திலே வரவேற்கக்கூடிய அம்சங்கள் இருக்கின்றன. எந்தக் காரணத்தினாலும் தொழிலாளர்களைப் பாதிக்காத அளவிலே சட்டத்தின் விதிமுறைகள் அமைய வேண்டுமென்று சுருக்கமாகக் கேட்டுக் கொண்டு, என்னுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை சட்டமாக்குவதில் உண்மையிலே இந்த மன்றத்திலுள்ள ஒவ்வொருவரும் பெருமைப்படலாம். தமிழக அரசு முதன்முதலாக இன்றைய தினம் இத்தகைய ஒரு உச்ச வரம்புச் சட்டத்தைத் தொழில் துறையிலே, இதர துறைகளிலே கொண்டுவருவது, இந்தியத்துணைக் கண்டத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்று சொன்னால் அதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. ஆகையால் இந்த மசோதாவை இந்த மன்றத்திலே எல்லாக் கட்சியினரும் வரவேற்பார்கள் என்று எதிர்பார்த்தோம். பல காரண காரியங்களை எடுத்துச் சொன்னாலும்கூட, இந்த மசோதாவை எல்லோரும் ஓரளவுக்கு வரவேற்றிருக்கிறார்கள் என்பதைக் கண்டு உண்மையிலே இந்த அரசு பெருமைப்படுகிறது.

ஒன்றை முக்கியமாகக் கவனத்தில்கொண்டால் பல உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட ஐயங்கள் ஏற்பட்டிருக்காது. போக்குவரத்துத் துறையைப் பொறுத்த வரையில், பயணம் செய்யும் பயணிகளுக்கு, பொதுமக்களுக்கு, பயணிகளின் நலனை வளர்ப்பதற்காக, பயணிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் பயணிகளுக்குப் பயன்படும் என்கிறபோதுதான் இந்தச் சட்டத்தின் அருமை பெருமை தெரியும். அனைவருக்கும் அதேநேரத்தில் நீதி கிடைக்கும் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இந்தச் சட்டம் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை இந்த மன்றத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னவர்கள்கூட எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள்தாம். மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய சர்க்கார் எவ்வளவு ஜனநாயகப் பண்போடு இயங்குகிறது என்பதற்கு, சொல்லுகிறவர் எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களுக்கு

நன்மையை விளைவிக்கிறது, மக்களுடைய நல்வாழ்விற்கு வழி செய்கிறது என்றால் அந்தக் கருத்தை இந்த அரசு ஏற்று எடுத்து நடத்துகிறது என்பதே நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

இந்த மசோதா பற்றிப் பேசுகிறபோது சுதந்திரா கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நாட்டுடைமையாக்கும் திட்டம் தேவையில்லை என்ற கருத்தினைக் கொண்டவர்கள். ஆனால் அதிகப்படியாக இருக்கப்பட்ட பேருந்துகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நாட்டுடைமையாக்கும் திட்டத்திலே அவர்களுக்கும் பற்று ஏற்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது, 'நடைமுறையில் இருக்கும் நாட்டுடைமையாக்கும் திட்டத்தை ஒத்திப்போடுங்கள்' என்கிறார்கள். சுதந்திராக் கட்சியினர், 'நாட்டுடைமையாக்கும் திட்டம் வேண்டும்' என்கிறார்கள். ஆனால், ஸ்தாபன காங்கிரஸ் கட்சினர், 'கூடவே கூடாது' என்கின்றனர். ஸ்தாபன காங்கிரஸுக்கும் சுதந்திராவுக்கும் இதிலே என்ன குழப்பம் வந்துவிட்டது என்று எனக்குப் புரியவில்லை. அவர்களைக் குழப்புகின்ற வகையிலேதான் இந்தச் சட்டம் இந்த மன்றத்தில் வந்திருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் சமுதாயத்திற்கு, சமுதாயத்திலே இருக்கின்ற மக்களுக்கு நன்மைகள் செய்யக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கின்றது. எனவே இதையும் நாட்டுடமையாக்கும் திட்டத்தையும் போட்டு குழப்பிக்கொள்வதில் பொருள் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எந்தவிதமான கொள்கைக் குழப்பமும் கிடையாது. ஆனால் தேசியமயமாக்கப்பட்ட பஸ் ரூட்டுகள் லாபகரமாக நடத்திக் காட்டப்பட்டபிறகு மேலும் மேலும் இதிலே அக்கறை எடுத்துக்கொள்ளலாம். இப்பொழுதே உள்ள கஷ்டத்தோடு எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மிகவும் கஷ்டப்படக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். உச்சவரம்புக் கொள்கையிலே நாங்கள் மிகவும் அழுத்தந்திருத்தமாக இருக்கிறோம். தேசியமயமாக்கப்பட்டவை லாபகரமாக நடத்தப்படவேண்டும் என்று எங்களுடைய கட்சியிலேகூட நாங்கள் தீர்மானம் போட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** குழப்பமோ, இல்லையோ அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. உச்சவரம்பு கொண்டுவருகிறீர்களா என்று கேட்டார்கள். அப்படிக் கேட்ட அம்மையார் அவர்களுக்கு இது நல்ல பிராயச்சித்தம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பிராயச் சித்தம் அல்ல. நாங்கள் அந்தக் கொள்கையிலே அழுத்தந்திருத்தமாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாங்களும் அதற்காக வருத்த கொள்கையிலே அழுத்தந்திருத்தமாக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மக்களுக்கு எந்த வகையிலே நன்மை பயக்கும் என்பதை அறிந்துகொள்ளலாம். சமதர்மம் என்றாலே சமுதாயத்திலே உள்ள





மக்களுக்குச் சம வருமானம் இருக்கவேண்டும். சோஷலிசத்தின் முதல் படி சம வருமானம் ( Equal income ) என்று சொல்வார்கள். சம சொத்துக்கள் இருந்தால் சம வருமானம் இருக்கும் என்பது பொருளாதார மேதைகள் கடைப்பிடிக்கின்ற கொள்கையாக இருக்கிறது. அவர்கள் எல்லாருக்கும் சம பங்கு (Fair shares for all) என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டம் சமுதாயத்திலுள்ள மக்களுக்கு உதவி செய்கிறது. பயணிகளுக்கு அந்த வகையிலே பயன்படும் என்பவையெல்லாம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (Monopoly) ஏகபோக முதலாளித்துவம் வந்துவிடுமானால் அக்கறையற்ற ஒரு போக்கு, தன்மை வந்துவிடும். அதனால மக்களுக்குக் கிடைக்கவேண்டிய வசதிகள் கிடைக்காது.

ஒரு பேருந்து ரிப்பேர் ஆகிவிடுமானால் அடுத்து நம்முடைய பேருந்துதானே இருக்கிறது, மக்கள் எப்படியும் ஏறித்தானே ஆகவேண்டுமென்ற தன்மை வந்துவிடும். இதைத்தவிர அன்ரெம்யூனரேடிவ் ரூட்ஸ்களாக இருந்தால் அவற்றிலே பஸ்கள் விடுவதற்கு அவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டார்கள். இதனால் பயணிகள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாக நேரிடும். முன்னேறி வருகின்ற பகுதிகளிலே புதிய ரூட்கள் போடவேண்டுமென்றால் அன்எக்கனமிக் ஆக இருக்கும் என்று கருதி அதற்கும் அவர்கள் முன்வரமாட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அவர்கள் வைத்ததுதான் சட்டம், அவர்கள் வைத்தது தான் நீதி என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். மக்களுக்காக பஸ்கள் என்ற நிலைமை மாறி பஸ் சொந்தக்காரர்களுக்காக மக்கள் என்ற நிலைமை ஏற்படுமானால் எந்தவிதமான தன்மையும் மக்கள் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். ஏகபோகத்தைத் தடுக்கவேண்டும், தடுப்பதும் முறையாக இருந்தால் சிறு பஸ் சொந்தக்காரர்களிடம் பரவலாக இருக்குமானால் அவர்கள் பெர்சனல் அட்டேன்ஷன்பேரில், அந்தத் தொழிலிலே அவர்கள் கொஞ்சம் தோல்வியடைந்துவிட்டாலும் போட்டியிலே உள்ள மற்றவர்கள் அதை ஆக்கிரமித்துக் கொள்வார்கள் என்ற பயத்தினால், நல்லமுறையிலே நடத்துகொள்வார்கள். அதனால் பயணிகள் பயணம் செய்வதற்குப் பயன்படும் என்ற முறையிலேதான் இதைக் கொண்டுவந்து இருக்கிறோம்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுகின்றபொழுது பார்ட்னர்ஷிப் பேர்ம்ஸ்பற்றிச் சொன்னார்கள். பல பார்ட்னர்கள் இருக்கக்கூடிய கம்பெனிகளுக்கு ஒவ்வொருவருக்கும் 10 பஸ்கள் தரவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுடைய அனுபவத்தையும் திறமையையும் பற்றி நன்றாக அறிந்தவர்களோ என்னவோ அவர்களுடைய திறமையை வீணாக்கக்கூடாது என்று சொன்னார்கள். கூட்டுறவு சொசைடிகளுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டார்கள். எக்ஸ்-சர்வீஸ்மென் பஸ்களுக்கும் விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே நில உச்சவரம்புச் சட்டம் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது அந்தச் சட்டம் உச்சவரம்புச் சட்டமல்ல, மிச்சவரம்புச் சட்டம் என்று சொன்னார்கள். ஒருவேளை இந்தச் சட்டத்தையும் மிச்சவரம்புச் சட்டமாக்க வேண்டுமென்று அவர்கள் அப்படி பேசியிருக்கிறார்களோ என்று கருதுகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் இது உச்சவரம்புச் சட்டமாகவே இருக்கும், மிச்சவரம்புச்

சட்டமாகி விடக்கூடாது என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருப்பதால்தான் இப்படி நல்ல முறையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் 3 பஸ்கள் போதும், கூட்டுறவு சொஸைடியாக இருந்தால் 10 பஸ்கள் போதும் என்று குறிப்பிட்டார்கள் ஒருவர் 3 பஸ்லே போதும் என்றும் சொல்கிறார்கள். இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் ஒவ்வொருவருக்கும் 10 பஸ்கள் தரவேண்டும் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பார்க்கும்பொழுது 10 என்று குறிப்பிட்டது எவ்வளவு நல்ல முறையிலே எடுக்கப்பட்டிருக்கின்ற முடிவு என்பதைப் பார்க்கவேண்டும்.

கூட்டுறவுத் துறையைப்பற்றி எடுத்துப் பேசினார்கள். 10 பஸ்கள் என்று நாம் உச்சவரம்பு கொண்டுவரும்பொழுது அதனால் பாதிக்கப்படுபவை 3 கம்பெனிகள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிட்டத்தட்ட மொத்தம் 49 நிறுவனங்கள் இந்தச் சட்டத்தின்மூலம் உபரியாக இருக்கின்ற உரிமங்களைக் கொடுக்கின்ற நிலையில் 3 நிறுவனங்கள்தான் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் பாதிக்கப்படுகின்றன. அதே நேரத்திலே திரு. தங்கமணி அவர்கள் 3 வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். மூன்று போதும் என்று சொன்னால் அதிலே என்ன சங்கடம் வருகிறது என்று சொன்னால், மக்களுக்கு நல்ல முறையிலே வசதிகளைச் செய்து தரமுடியாது. . .

திரு. கே. டி. கே. தங்கமணி: வேண்டுமென்றால் அதை 5 ஆக்கிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்: ஆப்பரேஷனல் எஃபிஷியன்சி என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரு பேருந்து பிரேக்டவுன் ஆகிவிட்டால் உடனே மற்ற பஸ்களை அனுப்புகின்ற முறையிலே சிறு முதலாளிகள் வழிவகைகள் செய்யவேண்டும். அவர்கள் அந்த நிலைமையிலே செய்ய முடியாது என்ற காரணத்தினால்தான் 10 பஸ்கள் என்று கொண்டு வந்திருக்கிறோம். திரு. தங்கமணி அவர்கள் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சென்ற கூட்டத்தொடரிலே வெளியிட்டார்கள், ஆகையினால் அதற்குப் பிறகு பஸ் உரிமைகளை மாற்றி யிருக்கலாம், ஆகவே அதிலிருந்து கொண்டுவரவேண்டுமென்று சொன்னார்கள். ஏப்ரல் மாதம் முதல் தேதி என்பது ' ஆல்ஃபூல்ஸ் டே ' என்று சொல்வார்கள், ஆகவே, பஸ் முதலாளிகள் அப்படி நினைத்துக்கொண்டு விளையாட்டாகக்கூட இருந்திருக்கலாம்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் பஸ் ஆப்பரேட்டர்களுக்கு உச்சவரம்பு வேண்டுமா இப்பொழுது என்று கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்த மன்றத்திலே பேசி யிருக்கிறார்கள், " ஒரு தனி நபர் 100, 150 பஸ்கள் ஓட்டுகிறார்கள். அவர்களை விட்டுவிட்டு, ஒரு பஸ், இரண்டு பஸ் இருப்பவர்களைப் பிடித்து தேசியமயமாக்குகிறோம் என்கிறார்கள். தனி நபர் ஒருவருக்கு 15 பஸ்களுக்குமேல் இருக்கக்கூடாது என்று சீலிங் ஆன் பொஸஷன் ஆப் பஸ்ஸஸ் கொண்டுவருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அதுபற்றிக் கவர்னர்



உரையில் எதையும் பார்க்கவில்லை என்று பேசியிருக்கிறார்கள்". ஆனால் அப்பொழுது பேசிய முதலமைச்சர் அவர்கள் எத்தனை பஸ்கள் என்றும் குறிப்பிடவில்லை, எப்பொழுது கொண்டுவரப்படும் என்றும் சொல்லவில்லை, எனவே திரு. தங்கமணி அவர்கள் கூறியதைப்போன்று நினைக்க இடமில்லை என்று கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, " பஸ்களுக்கு உச்சவரம்பு கட்டவேண்டுமென்று மிகவும் வலியுறுத்திப் பேசியதற்கு நன்றி, கட்டாயம் அரசாங்கம் பரிசீலிக்கும் " என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே எத்தனை பஸ்களுக்கு வரும், எப்பொழுது வரும் என்று அவர்கள் குறிப்பிடவில்லை.

திரு. என். காசிராமன் அவர்கள் இப்பொழுது இடத்தில் இல்லை. அவர்கள் 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான்காம் தேதி நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபொழுது நிலங்களுக்கு உச்சவரம்பு என்பது போதாது, எல்லாத் தொழில்களுக்கும் உச்சவரம்பு கட்டவேண்டும், பஸ்களுக்கும் உச்சவரம்பு கட்டவேண்டுமென்று சொன்னார்கள். முதல்வர் அவர்கள் அதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த யோசனையை வைத்துக்கொண்டு பஸ் அதிபர்கள் மாற்றிக்கொள்வது என்றால் 1970-ம் ஆண்டு முதலிலிருந்தே மாற்றியிருக்கலாம். ஆகையால் அந்த ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கருத்துத் தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி அவர்களுக்கு ஏதேனும் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள இன்னின்னார் மாற்றிக்கொண்டார்கள் என்ற தகவல் இருந்தால் அதையும் எங்களிடத்திலே தரலாம். ஏனென்றால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அப்படி ஒன்றும் இல்லை என்ற தகவல் எங்களிடத்திலே இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே இன்னொன்றைச் சொன்னார்கள். பினாமி என்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதாவது வேறு பெயரிலே வாங்கி வைத்துக் கொள்வதைத் தடுக்க வேண்டுமென்பதற்காகச் சட்டத்திலே இது ஒரு பிரிவாகப் போடப்பட்டிருக்கிறது. ருல் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை விடச் சட்டத்திலே இருப்பது நல்லது என்பதை அறிவார்கள். தொழிலாளர்கள் பெயரில் போட்டுக்கொண்டு, அவர்கள் பத்து பஸ், இவர்கள் பத்து பஸ் என்று வைத்துக்கொண்டு மறுபடியும் 50, 60 பஸ்களுக்குச் சொந்தக்காரர்களாகி, நாம் எந்தக் காரணத்திற்காக ஏகபோகம் கூடாது என்பதற்காகச் சட்டம் கொண்டு வருகிறோமோ அந்த அடிப்படை நோக்கமே போய்விடும். பினாமி என்பதிலேயே 'பெ' என்றால் 'நோ', 'நாம்' என்றால் 'நேம்', 'நேம்லெஸ்', 'பிக்டீஷியஸ்'. யார் பெயரிலேயாவது போட்டு விடுவார்கள். பினாமி என்பதை வழக்குரைஞர்கள் நன்றாக அறிவார்கள். தங்களுடைய எல்லாப் பொருள்களையும், மற்றக் காரணங்களையும் போட்டு எல்லாத் தொழில்களையும், செய்து யார் பெயரையாவது பயன்படுத்துவார்கள். ஆகவே, அது நல்ல நோக்கத்திலே நடைபெறுகிறதா, பஸ்களை வைத்துக்கொள்ள வசதியிருக்கிறதா, வருவாய்க் கணக்குகளைச் சமர்ப்பிக்கிறார்களா, கணக்குப் புத்தகம் இருக்கிறதா, வருவாயைக் கொண்டு வசதியாக இருக்கிறார்களா என்பன போன்றவற்றையெல்லாம் பார்த்து பினாமியா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பார்கள். அதைக் கண்டுபிடிக்க வழி இந்தச் சட்டத்திலே செய்யப்படுகிறதே தவிர வேறில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1971 ஜூலை 13

அடுத்தபடியாக, ரிவிஷன் பவர்சைப்பற்றிச் சொன்னார்கள். எஸ்.டி.ஏ.டி. கோர்ட்டிலே போன பிறகு, தீர்ப்பிற்குப் பிறகு மேற்கொண்டு உயர் நீதிமன்றத்திற்குப் போக வழிவகை செய்திருக்கிறோம். இது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. ஏனென்றால் இப்பொழுது அந்தப் பிரிவு இல்லை. மேலும் அவர்கள் நீதியைப் பெறுவதற்கு, நியாயத்தைப் பெறுவதற்கு உயர் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு இன்னொரு படியாக அமைத்திருக்கிறோம் என்பதைத் தவிர வேறில்லை.

ஆர்.டீ.ஏ. யைப்பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்பொழுது ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள், மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கக்கூடாது, அங்கே ஒரு நீதிபதியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எஸ்.டி.ஏ.டி. யைப் பற்றிச் சொன்னார்கள். ஆகவே, அவரவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கேற்ப இந்தக் கருத்துக்கள் சொல்லப்படுகிறதே தவிர, நடைபெறுகிற சர்க்கார் நியாயத்தின் அடிப்படையில்தான் நடக்கிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பார்த்தால் இவையெல்லாம் பொருளற்றதாகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஆர்.டீ.ஏ.யை ஒரு கமிட்டியாக அமைக்க உத்தேசமுண்டா? கேரளா போன்ற மாநிலங்களில் 3 பேர்கள் கமிட்டி உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அம்மாதிரி அமைக்க இந்த அரசுக்கு உத்தேசமுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்த மாதிரியான உத்தேசம் எதுவுமில்லை. இப்பொழுது இருக்கும் முறை எங்களுக்கு முன்னாலேயிருந்து முன்னோர்கள் கையாண்டுவந்த முறை. அது சரியாக நடைபெறுகிறது என்று இந்தச் சர்க்கார் கருதுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்திலே ஹைகோர்ட்டைப் பொறுத்தவரையில் ஒரு விஜிலன்ஸ் செல் போட்டிருப்பதாகவும் சிப்பந்திகள் மற்றவற்றைக் கண்காணிப்பதாகக் கருத்தைத் தெரிவித்தார்கள். நான் அறிய விரும்புவது விஜிலென்ஸ் செல் இந்த எஸ்.டி.ஏ.டி. சம்பந்தமாக விசாரணை செய்கிறதா என்ற தகவல் உண்டா என்பதைத்தான்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் இத்தகைய காரியங்களிலே நாம் நம்பிக்கையையும், நாணயத்தையும் கண்கொண்டு பார்த்தால்தான் இவைகளிலே நம்பிக்கை வைக்க முடியுமே தவிர சந்தேகக் கண்ணோடு பார்ப்பதில் பயனில்லை.

அதற்கு அடுத்தபடியாக இன்னொரு கருத்து சொல்லப்பட்டது. இந்தச் சட்டத்தில் ஒரு மாதத்திற்குள் உரிமங்களை பத்துக்குள் வைத்துக்கொண்டு மற்றவற்றை அவர்கள் திருப்பி அரசாங்கத்திற்குத் தந்துவிடலாம், சரண்டர் பண்ணிவிடலாம் என்ற பிரிவே தேவை இல்லை என்று சொல்லப்பட்டது. அவரவர்களுக்கு வேண்டிய ரூட்களை வைத்துக்கொண்டு மற்றவற்றைக் கொடுப்பதற்கான வாய்ப்புதானே தவிர வேறல்ல.



1971 ஜூலை 13] [திரு. ச. இராமச்சந்திரன்]

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுது தொழிலாளர்களுடைய நிலையைப்பற்றியும் இதிலே பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப் போல இதிலே நாம் பார்க்க வேண்டியது, பத்து பத்தாக நாம் எல்லோரிடத்திலும் இதைக் கொடுப்பதன் மூலம் சோஷலிச அப்ரோச் வருகிறது, மோனபலி தடுக்கப்படுகிறது. மோனபலி தடுக்கப்பட வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். ஒரே ரூட்டில் எஸ்.ஆர்.வி. எஸ்க்கும் "கவர்மெண்ட் ஆஃப்மெட்ராஸு"க்கும் நடந்த வழக்கிலே சுப்ரீம் கோர்ட் சொல்லியுள்ளது. ஒரே ரூட்டில் மோனபலி ஆப்பரேட்டர் இருந்தால் மக்களின் நலன்கள் பாதிக்கப்படும், ஆகவே, இதற்குத் தக்க நடவடிக்கைகளைக் கவனத்திற்கொள்ள வேண்டும், மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்க ஆர்.டீ.ஏ. உரிமை வழங்குவதில் தவறு இல்லை என்று தீர்ப்பு அளித்திருக்கிறது. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் ஏராளமாகப் பணியாற்றும் தொழிலாளர்கள் இருந்தால் அவர்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் மூலம் பாதுகாக்க ஏற்கனவே திட்டம் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில், ஒரு சமுதாய நலனைப்பொட்டி உரிமங்களைப் பரவலாக்குகின்ற முயற்சியில் ஈடுபடும்பொழுது அந்தத் தொழிலில் உள்ள தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகலாம், ஆனால் இதே பஸ்களை எடுத்துப் பயன்படுத்தும்பொழுது அவர்களுக்கு வேலை கொடுக்க வாய்ப்பிருக்கிறது. ஒட்டுமொத்தத்திலே பார்த்தால், இங்கே இருப்பதைப்போல் அங்கே தருகின்ற முறையில் இருக்கும். மொத்தத்திலே தொழிலாளர்கள் கணக்கைப் பார்த்தால் கூடவும் செய்யாது, குறையவும் செய்யாது.

தனியார் துறையில் நல்லமுறையில் இருக்கிறார்கள் என்று கவனத்தில் கொள்ளக்கூடாது. நாட்டுடைமைத்திட்டம் ஏற்கனவே அமுலுக்கு வந்தபொழுது 75 மைல்களுக்குமேல் நாட்டுடைமை ஆக்கிய திட்டத்தின்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தைத் தொட்டுச் செல்லும் பஸ்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தில், சென்னையைத் தொட்டுச் செல்லும் பஸ்களை நாட்டுடைமையாக்கும் திட்டத்தில், கன்னியாகுமரியைச் சேர்ந்த அவர்களுக்கு நன்றாகத் தெரியும்—பயனீர் மோட்டார் சர்வீஸ் அங்கே 75 மைல்களுக்குமேல் தொட்டுச் செல்லும் பஸ்களையும் நாட்டுடைமையாக்கினோம். உடனே நோட்டீஸ் கொடுத்தார்கள். நிறுத்திவிட்டார்கள். ஆனால் பஸ் முதலாளி கோர்ட்டிலே ஸ்டே வாங்கி வந்துவிட்டு இன்றைக்கு பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பஸ்கள் ஓடும்பொழுது அந்தத் தொழிலாளர்கள் மறுபடியும் எங்களை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டார்கள். இல்லையென்றவுடன் உண்ணாவிரதம் போன்ற காரியங்களிலே ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். ஆகவே, தனியார் துறையிலே உள்ள தொழிலாளர்களின் நிலை எந்த நிலையிலே இருக்கிறது என்பதை என்னைவிட எதிர்க்கட்சித் தலைவர்கள் நன்கறிவார்கள். இதை நிரந்தரமாகப் போக்க நாட்டுடைமையாக்குவதுதான் சிறந்தது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் நாட்டுடைமைச் சட்டம் வரும்பொழுது முழு ஒத்துழைப்பு தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

DR. H. V. HANDE: Will the Hon. Minister give us some assurance in this House that those conductors and drivers who are likely to go out of employment on account of this particular policy which is going to be put as a legislative measure, will be

given some security of service or first preference. Will the Government give us some indication or assurance to assuage the feelings of those conductors and drivers? Will the Hon. Minister give us such an assurance?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்* : தலைவரவர்களே, அரசு இதைப் பற்றி யோசிக்கும். டி.எம்.பி.எஸ்., என்று திருநெல்வேலியிலே ஒரு பஸ் சர்வீஸைத் திடீரென்று மூடிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராகயிருந்தபொழுது நல்லமுறையிலே வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இன்று கிட்டத்தட்ட அத்தனைபேரையும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டிலே வேலைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் .....

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி* : தலைவரவர்களே, அஷ்யூரன்ஸைக் கூட இதுமாதிரி கூட உருவாக்கலாம். இப்பொழுது பத்து பஸ்களுக்கு மேல் உள்ளவர்கள் ஒரு ரூட்டுக்கு ரென்யூவலுக்கு வரும்பொழுது அதை இழந்து விடுகிறார்கள் இப்பொழுதுள்ள உச்சவரம்புச் சட்டத்தின்படி. இவ்வொருவருக்குப் பிரகடனப்படுத்தப்படுகிறது. நான்கு பேர் அந்த ரூட்டை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்றால் மார்க்குகளின் அடிப்படையில் ரூட்டுகள் தரப்படுகிறது. அப்படி வரும்பொழுது ஏற்கனவே அந்த ரூட்டிலே வேலை செய்து கொண்டிருந்த டிரைவர்கள், கண்டக்டர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு மார்க் போடலாமா என்பதைக்கூட யோசிக்கலாம், முடிவாகச் சொல்லவில்லை, யோசிக்கலாம்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்* : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஜி.ஓ. எம்.எஸ். 3353 பற்றி எடுத்துச் சொல்லி இங்கே வாதிட்டார்கள். அந்த ஜி.ஓ. வைப் பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அது ஆறு மாத காலம் கூட நடைமுறையில் இல்லை. அதற்குக் காரணம் என்ன என்று அவர்கள் உணருவார்களோ இல்லையோ, நான் அறியேன். ஜி.ஓ. 1689 ஹோம், தேதி 15-6-1955-ல் அந்த ஜி.ஓ. ரத்து செய்யப்பட்டு விட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன வகை செய்யப்பட்டிருக்கிறது, புதி ஆப்பரேட்டர்கள் உள்ளே வரக்கூடாது, பத்து பஸ்களுக்குப் பக்கத்தில் உள்ளவர்கள்தான் வரவேண்டும், பத்து பஸ்களுக்கு மேல் வைத்திருப்பவர்கள்தான் வரவேண்டும் என்றார்கள். கடைசியாக வரக்கூடியவர்கள் யார்? புது ஆப்பரேட்டர்களாக வரவேண்டுமென்றுதான் வழி செய்யப்பட்டிருக்கிறது.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்* : பத்து பஸ்கள் வயபிள் யூனிட்டாக இருக்கிறது என்று பிளானிங் கமிஷன் கருதுகிறது என்ற காரணத்திற்காகச் சுட்டிக் காட்டினேனே தவிர, அது நிரந்தரமாக இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்* : மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் இது பற்றி ஆராய 65-ல் கமிட்டி நியமிக்கப்பட்டு 1968-ல் அறிக்கையினைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே, மாக்சிமம் அட்வான்டேஜ் கிடைக்க ஐந்து பஸ்கள் குறைந்த அளவு இருந்தால் போதும் என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் நடைமுறையில் ஐந்து பஸ்கள் குறைந்த அளவு



என்று வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஐந்து பஸ் என்று இருந்தது ஜி.ஓ. 3353 எப்படி வந்தது? பெரிய பஸ் அதிபர்களை வளர்க்க வேண்டும், பெரிய பஸ் அதிபர்கள்தான் திறமையாக நடத்துவார்கள், அவர்கள்தான் நமக்கு வேண்டியவர்கள் என்ற வகையில் வந்தது. ஆறு மாதத்தில் அந்த ஜி.ஓ. ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அது வந்தது முதலமைச்சர் மாறினார் என்ற காரணத்தால் அல்ல; பெரிய பஸ் அதிபர்களுக்குக் கொடுப்பது சரியல்ல, பெரிய பஸ் நிறுவனங்களை வளர்ப்பது சரியல்ல என்ற முறையில்தான் வந்தது.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். பஸ் உரிமங்கள் வழங்குவதில் நியாயம், நேர்மை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்க உத்தரவின் மூலம் வேண்டியவர்களுக்கு, பெரிய கம்பெனிகளுக்கு, மதுரையில் இருக்கும் டி.வி.எஸ்., கும்பகோணம் எல்.ஆர்.வி.எஸ்., ராமன் அண்டு ராமன் போன்ற கம்பெனிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவே ஒரு காலத்தில் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அது ஆறே மாதத்தில் மாற்றப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்டத்தை எல்லோரும் வரவேற்றிருக்கிற காரணத்தால் இந்தச் சட்டத்தில் எந்தவிதத் திருத்தமும் இல்லாமல் நிறைவேற்றித் தரும் பெருமையினைப் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டு உரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER : The question is :

"That the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER: Now, we shall take up the Bill, clause by clause.

Clauses 2 to 7 were put and carried.

Clause 8.

MR. SPEAKER : The question is :

"That clause 8 do stand part of the Bill".

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move the following amendment :—

For item (a) of the proposed Section 62-A of the Principal Act, substitute the following :—

"(a) In the interest of general public there shall be a ceiling of ten in respect of stage carriage permits held by a joint family or partnership or Private Limited Company or Public Limited Company and there shall be ceiling of three in respect of permits held by any person under this Chapter."

இது சம்பந்தமாக நான் முதலில் பேசுகின்றபோதே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதற்குமேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

The amendment was duly seconded.

THIRU J. JAMES : Sir, I move the following amendment :—
In item (c) of the proposed new Section-62A, add the following proviso after the first proviso :—

"Provided further that nothing in this Section shall apply to any Motor Transport Co-operative Society in Tamil Nadu."

The amendment was duly seconded.

DR. H. V. HANDE : In support of the amendment, I wish to bring to the attention of the Hon. Minister the particular case of ex-servicemen.........

THIRU J. JAMES : I should be first al'owed to speak on my amendment.

MR. SPEAKER : All right.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே பொதுவாக இந்த மசோதாவை வரவேற்றிருக்கிறோம். நான் கொடுத்திருக்கும் திருத்தமானது மிகவும் முக்கியமான திருத்தம் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவில் "ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்" என்று கொடுத்திருக்கும் பகுதியில் இதன் நோக்கத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தனியார் ஒருவருக்கு இருக்கின்ற பஸ்களுக்கு உச்சவரம்பு கட்ட வேண்டும். பொதுமக்களின் நன்மையைக் கருதி அவ்வாறு செய்யவேண்டுமென்று எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது. செக்ஷன் 62-ஏ-இல்தான் இந்த உச்சவரம்பைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு விதிவிலக்காக ஒரு ப்ரொவிசோ அமைக்கப்பட்டிருக்கிறது. முதல் ப்ரொவிசோவில்—

Provided that nothing in this Section shall apply to the Central Government or State Government or to any Corporation or Company owned by Central Government or one or more State Governments or Central Government and one or more State Governments.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதன் நோக்கம் தனியாருக்குத்தான் உச்சவரம்பு, பொதுவுடைமை நிறுவனங்களுக்கும், கம்பெனி சட்டத்தின்படி அமைக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் அரசாங்கம் நடத்தும் நிறுவனங்களுக்கும் இந்தச் சட்டத்தில் இருந்து விதிவிலக்கு இருக்கிறது என்ற கருத்தில் ப்ரொவிசோ இருக்கிறது. ஆகவே தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தின் நோக்கம், தனியார் துறையில் உள்ள பஸ்களுக்கு உச்சவரம்பு செய்து உச்சவரம்புக்கு மேல் உள்ள பஸ்கள் நாட்டுடைமையாக்கப்பட்டாலும், இன்று கூட்டுறவு அமைப்பில் கூட்டுறவுச் சட்டதிட்டத்தின்கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த சட்டத்தில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதுதான்.





ஒவ்வொரு ஜில்லாவிலும் டிரான்ஸ்போர்ட் கோவாப்பரேட்டிவ் இருக்கின்றன. கோவையில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் எக்ஸ்-சர்வீஸ்மென் கோவாப்பரேட்டிவ் நிறுவனமானது 21 பஸ் ரூட்டுகளை நடத்திக் கொண்டிருக்கிறது. நூற்றுக்கும் அதிகமான மாஜி ராணுவம் தொழிலாளர்களைக் கொண்ட அந்த நிறுவனம் ஒவ்வொரு கண்டக்டருக்கும் டிரைவருக்கும் அரசாங்கம் கொடுக்கின்ற சம்பளத்தை விட அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கமானது இன்று கண்டக்டருக்கு 308 ரூபாய் சம்பளமும் பல்வேறு நன்மைகளையும் செய்து கொடுக்கிறார்கள்.

அதேபோன்று டிரைவர்களுக்கும் மாதந்தோறும் 450 ரூபாய் சம்பளமும் மற்றச் சலுகைகளும் கொடுத்து வருகிறார்கள். இந்த அளவுக்குத் தேசிய மயமாக்கப்பட்ட அரசாங்க பஸ்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு நம்மால் கொடுக்க முடியவில்லை. அந்த நிறுவனம் நல்லமுறையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த நிறுவனத்தை நிர்வகிக்கும் மானேஜ்மென்ட் கமிட்டியானது----கலெக்டரின் பி.ஏ. வைத் தலைவராகவும், பட்டாளத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி, கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அவர்களால் நியமிக்கப்பட்ட அரசாங்க பிரதிநிதி என்ற வகையில் மற்ற உறுப்பினர்களையும் கொண்ட போர்டு தான் நடத்தி வருகிறார்கள். சிறந்த முறையில் நடந்து வரும் இந்த நிறுவனமானது இந்தச் சபையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மசோதாவின் காரணமாகப் பாதிக்கப்படுகிறது. உண்மையில் அங்கு வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள்.

அந்த நிறுவனத்திலே 21 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த மசோதாவின்படி உச்சவரம்பு 10 பஸ்கள்தான். அதனால் அங்கிருந்து 11 பஸ்கள் எடுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. 11 பஸ்கள் என்றால் ஒரு பஸ்ஸுக்கு ஐந்து தொழிலாளர்கள் என்று கணக்கெடுக்கும் போது ஏறத்தாழ 55 தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இன்று அவர்கள் நல்லமுறையில் சம்பளம் பெற்று தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதாவின்படி அரசாங்கம் 11 பஸ்களை எடுத்துக் கொண்டு தனியார் ஒருவருக்கு மாற்றிக் கொடுக்கப் போகின்றது.

கூட்டுறவுச் சங்கம் கொடுக்கிற சம்பளத்தை நிச்சயமாக தனியார் தொழிலாளர்களுக்குக் கொடுக்க முடியாது. ஆகவே இந்நிலையில் தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவு நிறுவனம் இன்று பி.டப்ளியூ.ஆர். பண்டிலிருந்து ஏறத்தாழ ஐந்து லட்சம் ரூபாய் அளவிற்கு கடன் வாங்கியிருக்கிறார்கள். அங்கு வேலை செய்கிற அத்தனை தொழிலாளர்களுக்கும் கடன் அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கடன் தொகையை அந்தப் பண்டுக்கு திரும்பிக் கட்டவேண்டியிருக்கிறது. இன்று அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படுமென்று சொன்னால் நிச்சயமாக அந்தப் பணத்தை அவர்களால் அரசாங்கத்திற்கு கட்டமுடியாததொரு நிலை ஏற்படும். அரசாங்கத்திற்குக் கூட நஷ்டம் ஏற்படும் நிலைதான் வர இருக்கிறது. ஆகவே எந்த நோக்கத்தோடு இந்த மசோதா இந்த அவைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிற டிரான்ஸ்போர்ட் கம்பெனிகளுக்கு

அரசாங்கம் நடத்துகிற கம்பெனிகள், கார்ப்பரேஷன்ஸ் இவைகளுக்கு விதி விலக்கு அளித்திருப்பதுபோல் விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள், இது முதலாளிகளுக்காகக் கொண்டுவரப்பட்டுள்ள மசோதா அல்ல தொழிலாளர்களின் நன்மைக்காகத்தான் கொண்டு வந்துள்ளோம் என்று சொன்னார்கள். பொதுமக்களின் நன்மைக்காகவும். கொண்டு வந்துள்ளோம் என்றும் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

இதற்கு முன்னால், 1968-ம் ஆண்டு என்று நினைக்கிறேன், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்த தனியார் பேருந்துகளை நாட்டுடைமையாக்கிய பிறகு அன்று கூட தொழிலாளர்களுக்கு ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டது. பாதிக்கப் பட்ட தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் மாற்றுவேலை கொடுப்போம், அரசாங்கத்தில் வேலை கொடுப்போம் என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் இன்னும் 200க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். ஆகவே இம்மசோதா சட்டமாக்கப்படும்போது அம்மாதிரிப் பட்டதொரு நிலை ஏற்படாத வகையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வேலை கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I will be very brief. In support of the amendment brought by my hon. Friend, I want to say a few words.

I request the Government not to come to any pre-conceived decisions, but to have an objective view of the whole thing because the workers involved here are ex-servicemen, those who had sacrified considerably for the sake of our national borders and had participated in the fight. Ex-servicemen have created a fund. Even from the All-India Fund they received a grant. We also raise funds now and then for their benefit. We have a Flag Day for ex-servicemen and people contribute for ex-servicemen.

Ex-servicemen have very serious problems. They wanted to rehabilitate themselves. With that idea they started an organisation. They collected funds and then they started this organisation. It is running very well and the administration was so perfect that they were able to develop a fairly big and sufficient transport service. They have got 21 buses and they are running very well. There is strict supervision by the Government. There is the P.A. to the Collector. The Government's direct participation is there for all practical purposes. It is like a quasi-Governmental institution practically. In view of that I am sure that it will be possible for the Hon. Minister even now, if necessary in consultation with the Hon. Chief Minister and the Hon. Law Minister to come to some sort of a decision





to give the '*vidhi vilakku*'. Even if it is not possible now, later on at least after a day or two, a provision can be created here for this exemption.

There is another problem also. Now by reducing the buses, the bus owners also can claim one particular exemption, namely it is possible for those companies where the number of buses is less than five, according to the Rules laid down by the Government of Tamil Nadu under the Motor Vehicles Act, to reduce the pay of workers from Rs. 135 to 125. It is possible because if it is above five buses, then they can demand Rs. 135 as pay and if it is less than five buses, they can be satisfied with a pay of Rs. 125. Even the emoluments of the workers, of the ex-servicemen who are working there, will be affected if the number of buses is reduced. Even if it is not possible, let this Government give some sort of an assurance in this House that subsequently in the Rules they will frame, they will provide to the effect that whether it is 5 buses, 10 buses of 25 buses, the workers will be getting the same rate of pay. At least the assurance that it will be taken into consideration must be there. As Thiru K. T. K. Thangamani said, it was got after fighting in the Wage Board. It should be possible to get those minimum facilities.

I do not know what kind of assurance is going to come. But the assurance I want is (*a*) the rate of pay of the workers will not be affected by the reduction of size of the transport (b) as far as possible at least the ex-servicemen to whom the country is definitely obliged for having heroically fought the battle will be given some special consideration. Simply because the suggestion comes from the opposition, it does not matter. Whoever says it, it does not matter. It is an objective point of view I am trying to present before the Government and Government must think that it has come from one of its own members and give us the assurance.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I have already spoken about it. Yet I would again request the Hon. Minister to reconsider his decision. Simply because we are in a small number, the Government need not think that they should not accept any amendment from this side. If they are interested, they can even bring an amendment from their side. The problem deserves serious consideration by the Minister because there are only four ex-servicemen co-operative societies who are exceeding the limit of number 10 and they are all for the benefit of ex-servicemen. We give them loan. We are even making the P.A. to the Collector as Chairman of the Committee. We give all the assistance from the co-operative department. There is no concentration of wealth also in anybody's hand. Because quite a number of people are the shareholders and mostly all the ex-servicemen who are technically qualified formed these co-operative societies and by exempting them we are not going to really flinch away from the policy of curbing the monopoly.

(4) அரசினர் தீர்மானங்கள்,

**(அ) தமிழ்நாடு 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் நான்காவது விவர அட்டவணையைத் திருத்துதல்.**

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 347 (3)-வது பிரிவின்கீழ், மேற்சொன்ன சட்டத்தின் நான்காவது விவர அட்டவணையைத் திருத்தும் வகையில் தமிழ்நாட்டு அரசு செய்யக் கருதும் கீழ்காணும் வரைவுத் திருத்தத்தை இப்பேரவை ஏற்கும்படி வேண்டுகிறேன்".

**வரைவுத் திருத்தம்**

"தமிழ்நாடு 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) நான்காவது விவர அட்டவணையில் 8-வது விதியில், இரண்டாவது வரம்பு நிபந்தனையின்கீழ் உள்ள அட்டவணையிலே கண்டுள்ள எட்டாவது, ஒன்பதாவது பகுதிகளும் அவற்றிற்குத் தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAN: Sir, I move the following amendment:

'In the proposed draft amendment to the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), after the word "classes" and before the figure "VIII" insert the figure "VII".'

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second the amendment.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, சென்னை மாநகராட்சியினுல் தொழில் வரி விதிக்கப்படுவதற்காக, 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) IV ஆம், விவர அட்டவணையில் 8-வது விதியிலும் மேற்படி சட்டத்தின் III வது பிரிவிலும் வரி விதங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்படி விதியை யொட்டி, ரூ. 1,200-க்கு மேற்பட்டும், ரூ. 1,800-க்கு உட்பட்டும் அரை ஆண்டு வருவாய் பெறுவோர் எட்டாவது வகை வரி விதிப்புத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ரூ. 6 என்ற பேரளவுத் தொகைக்குட்பட்டு அரை ஆண்டு தொழில் வரி விதிக்கப்படும். அதுபோல், ரூ. 600-க்கு மேற்பட்டும், ரூ. 1,200-க்குட்பட்டும் அரை ஆண்டு வருவாய் பெறுபவர் ஒன்பதாம் வகை வரி விதிப்புத் தொகுதியைச் சேர்ந்தவர். இவர்கள் ரூ. 3 என்ற பேரளவுத் தொகைக்குட்பட்டு அரை ஆண்டு தொழில் வரி விதிக்கப்படுவர்.

ஒன்பதாம் வகையைச் சேர்ந்த வரி செலுத்துவோர் பெரும்பாலும் பயிற்சி பெறாத ஏழைத் தொழிலாளர்கள், அரசு கடைநிலை ஊழியர்கள், தனியார் நிறுவனங்களில் வேலைக்கு அமர்ந்துள்ள பிறர் ஆகியோராக இருப்பதால், அவர்களுக்குத் தொழில் வரி விதிப்பது நீக்கப்படவேண்டுமென்று கேட்டு மாநகராட்சி



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

மன்றம் பல முறை அரசிடம் முறையிட்டுள்ளது. எட்டாவது வகையைச் சேர்ந்த வரி செலுத்துவோருக்குச் சிறிது பரிகாரம் அளிக்கும் நோக்கத்துடன் அவர்களுக்குத் தொழில் வரி விதிப்பதும் நீக்கப்படலாமென்றும் அம் மன்றம் கேட்டுக்கொண்டது.

இது குறித்து பரிசீலித்த பின்னர், 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் IV ஆம் விவர அட்டவணையில் 8-வது விதியில் எட்டாவது, ஒன்பதாவது வகைகளைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில் வரி விதிப்பிலிருந்து 1—4—1970 முதற்கொண்டு விலக்களிக்க அச் சட்டத்தின் 98-எ(3) பிரிவின்கீழ் அரசு அனுமதியளித்தது. மேற்படி ஆணைகளைத் தொடர்ந்து, அவர்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு ஏற்றவாறு 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் IV வது விவர அட்டவணையில் 8-வது விதியைத் திருத்த தற்போது கருதப்பட்டுள்ளது. இதற்கு சட்டமியற்ற வேண்டியது அவசியமில்லை. ஆனால், அதற்குப் பதிலாக 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 347(5) பிரிவின்கீழ், மேற்படிச் சட்டத்தின் I ஆம் விவர அட்டவணையில் திருத்தக் கருதியுள்ள ஒரு வரைவுத் திருத்தம் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதல் பெறப்படவேண்டும். அதற்கிணங்க நான் இதற்கு அவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAN: Mr. Speaker, Sir, while the City is very thankful to the Government for having brought forward this Resolution exempting classes VIII and IX from the imposition of the professional tax, I feel that class VII also should be included in the exemption list because Class VII includes those persons whose salary or income is less than Rs. 250 per month or Rs. 3,00 per year. Sir, when this recommendation was made by the Corporation of Madras, the rupee value was quite different from the rupee value that is existing to-day. In most of the factories, many of the labourers are now drawing about Rs. 250. After all: the profession tax is Rs. 9 per head for six months and I am sure this Government will agree to exempt Class VII also so that those who are getting Rs. 500 or below as monthly salary will also be exempted from the profession tax.

The second point which I would like to bring to the attention of the Hon. Minister is that it is the most difficult tax to be collected and there is no statutory obligation on the part of the factory owners or other employers to collect it and pay it to the Corporation. The tax collectors of the Corporation have to go and wait at the doors of the factory owners employing thousands of labourers to collect this money. My practical experience is that it is very difficult to collect it and sometimes it is not able to collect even 50 per cent of the tax and I am saying this subject to correction. Of course, I agree that the total amount of the tax should be collected. I think the Government will certainly agree to it because after all they are for helping the poorer classes. Also they should simplify the method of collection.

## (4) அரசினர் தீர்மானங்கள்,

### (அ) தமிழ்நாடு 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் நான்காவது விவர அட்டவணையைத் திருத்துதல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 347 (3)-வது பிரிவின்கீழ், மேற்சொன்ன சட்டத்தின் நான்காவது விவர அட்டவணையைத் திருத்தும் வகையில் தமிழ்நாட்டு ஆளுநர் செய்யக் கருதும் கீழ்காணும் வரைவுத் திருத்தத்தை இப்பேரவை ஏற்கும்படி வேண்டுகிறேன்".

### வரைவுத் திருத்தம்

"தமிழ்நாடு 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) நான்காவது விவர அட்டவணையில் 8-வது விதியில், 'இரண்டாவது வரம்பு நிபந்தனையின்கீழ் உள்ள அட்டவணையிலே கண்டுள்ள எட்டாவது, ஒன்பதாவது பகுதிகளும் அவற்றிற்குத் தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAN : Sir, I move the following amendment :

'In the proposed draft amendment to the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919), after the word "classes" and before the figure "VIII" insert the figure "VII".'

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I second the amendment.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, சென்னை மாநகராட்சியினால் தொழில் வரி விதிக்கப்படுவதற்காக, 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) IV ஆம், விவர அட்டவணையில் 8-வது விதியிலும் மேற்படி சட்டத்தின் III வது பிரிவிலும் வரி விதங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்படி விதியை பொட்டி, ரூ. 1,200-க்கு மேற்பட்டும், ரூ. 1,800-க்கு உட்பட்டும் அரை ஆண்டு வருவாய் பெறுவோர் எட்டாவது வகை வரி விதிப்புத் தொகுதியைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ரூ. 6 என்ற பேரளவுத் தொகைக்குட்பட்டு, அரை ஆண்டு தொழில் வரி விதிக்கப்படும். அதுபோல், ரூ. 600-க்கு மேற்பட்டும், ரூ. 1,200-க்குட்பட்டும் அரை ஆண்டு வருவாய் பெறுபவர் ஒன்பதாம் வகை வரி விதிப்புத் தொகுதியைச் சேர்ந்தவர். இவர்கள் ரூ. 3 என்ற பேரளவுத் தொகைக்குட்பட்டு அரை ஆண்டு தொழில் வரி விதிக்கப்படுவர்.

ஒன்பதாம் வகையைச் சேர்ந்த வரி செலுத்துவோர் பெரும்பாலும் பயிற்சி பெறாத ஏழைத் தொழிலாளர்கள், அரசு கடைநிலை ஊழியர்கள், தனியார் நிறுவனங்களில் வேலைக்கு அமர்ந்துள்ள பிறர் ஆகியோராக இருப்பதால், அவர்களுக்குத் தொழில் வரி விதிப்பது நீக்கப்படவேண்டுமென்று கேட்டு மாநகராட்சி



[திரு. இரா. நெடுஞ்செழியன்]

மன்றம் பல முறை அரசிடம் முறையிட்டுள்ளது. எட்டாவது வகையைச் சேர்ந்த வரி செலுத்துவோருக்குச் சிறிது பரிகாரம் அளிக்கும் நோக்கத்துடன் அவர்களுக்குத் தொழில் வரி விதிப்பதும் நீக்கப்படலாமென்றும் அம் மன்றம் கேட்டுக்கொண்டது.

இது குறித்து பரிசீலித்த பின்னர், 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் IV ஆம் விவர அட்டவணையில் 8-வது விதியில் எட்டாவது, ஒன்பதாவது வகைகளைச் சேர்ந்தவர்களுக்குத் தொழில் வரி விதிப்பிலிருந்து 1—4—1970 முதற்கொண்டு விலக்களிக்க அச் சட்டத்தின் 98-எ(3) பிரிவின்கீழ் அரசு அனுமதியளித்தது. மேற்படி ஆணைகளைத் தொடர்ந்து, அவர்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு ஏற்றவாறு 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் IVவது விவர அட்டவணையில் 8-வது விதியைத் திருத்த தற்போது கருதப்பட்டுள்ளது. இதற்கு சட்டமியற்ற வேண்டியது அவசியமில்லை. ஆனால், அதற்குப் பதிலாக 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 347(5) பிரிவின்கீழ், மேற்படிச் சட்டத்தின் I ஆம் விவர அட்டவணையில் திருத்தக் கருதியுள்ள ஒரு வரைவுத் திருத்தம் மாநிலச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதல் பெறப்படவேண்டும். அதற்கிணங்க நான் இதற்கு அவையின் ஒப்புதலை வேண்டுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAN : Mr. Speaker, Sir, while the City is very thankful to the Government for having brought forward this Resolution exempting classes VIII and IX from the imposition of the professional tax, I feel that class VII also should be included in the exemption list because Class VII includes those persons whose salary or income is less than Rs. 250 per month or Rs. 3,00 per year. Sir, when this recommendation was made by the Corporation of Madras, the rupee value was quite different from the rupee value that is existing to-day. In most of the factories, many of the labourers are now drawing about Rs. 250. After all: the profession tax is Rs. 9 per head for six months and I am sure this Government will agree to exempt Class VII also so that those who are getting Rs. 500 or below as monthly salary will also be exempted from the profession tax.

The second point which I would like to bring to the attention of the Hon. Minister is that it is the most difficult tax to be collected and there is no statutory obligation on the part of the factory owners or other employers to collect it and pay it to the Corporation. The tax collectors of the Corporation have to go and wait at the doors of the factory owners employing thousands of labourers to collect this money. My practical experience is that it is very difficult to collect it and sometimes it is not able to collect even 50 per cent of the tax and I am saying this subject to correction. Of course, I agree that the total amount of the tax should be collected. I think the Government will certainly agree to it because after all they are for helping the poorer classes. Also they should simplify the method of collection.

So, I am sure my amendment will be accepted, viz., that those getting Rs. 3,000 and below per half-year will be exempted from paying profession tax. There are two reasons for this. One is purchasing power of the people had gone down. Secondly, this is the most difficult tax to be collected because of the present legal troubles in collecting it.

திருமதி த. ந. அனந்தநாயகி: சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக கார்ப்பொரேஷனுக்கு சொத்து வரிதான் முக்கியமானது. அதை 35% வரை போடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும், கார்ப்பொரேஷன் நிர்வாகம் திறமையாக இருக்கிறதா என்றால், இல்லை என்பதைத்தான் பார்க்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன், நகராண்மை கழகத்தின் நிர்வாக நிலைமைகளை ஆராய ஒரு தனிக் கமிட்டியோ அல்லது ஒரு தனி ஆபீசரோ அப்பாயிண்ட் செய்தால் நன்றாக இருக்கும். காரணம், நீண்ட நாளாக மக்கள் நகராண்மைக் கழகம் நிதிகளை சரியான முறையில் நிர்வாகத்திற்குப் பயன்படுத்துவதில்லை என்பதை வருத்தத்தோடு கவனித்து வருகிறார்கள். நகராண்மைக் கழகத்தால், அடிப்படை வேலைகள் கூட, குப்பை எடுப்பதோ, வீதி விளக்குகள் எரிவதைப் பார்ப்பதோ இவையெல்லாம் சரியாகச் செய்யப் படுவதில்லை. அந்த நிலையில் வரியை மட்டும் அதிகம் செய்தால், மக்கள் அவதிக்குள்ளாவார்கள். ஆகவே, சிறு சிறு வரிகளில் அவர்களுக்கு விலக்குக் கொடுக்கலாம்.

ப்ரொபெஷன் டாக்ஸ், மாதம் 250 ரூபாய் சம்பளம் உள்ளவர்களுக்கு வேண்டாம் என்று செய்யலாம். கலெக்ஷன் ஒர்க்கே ஒழுங்காகச் செய்யப் படுவதில்லை. பாவம், மாதச் சம்பளம் வாங்குபவர்கள்தான் கொடுக்கிறார்கள், அவர்களிலும் அடித்தளத்தில் உள்ள மாதம் 250 ரூபாய் சம்பளம் பெறுபவர்கள் அந்த வருமானமும் இந்தக் காலத்தில் அதிகமில்லை. கலெக்ஷனும் தொல்லையானது, சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, வரும் வருமானத்தில் பாதி கலெக்ஷனுக்கே போய்விடும். ஆகவே, இதைச் செய்யும் போது நடுத்தர மக்களுக்கும் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இப்பொழுது 8, 9 பிரிவில் உள்ளவர்களுக்கு விலக்கு அளிக்கப்படுபவதை, 7-வது பிரிவில் உள்ளவர்களுக்கும் எக்ஸம்ஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கொஞ்சம் அதிகமாக சலுகை கொடுப்பதாக இருக்கும். ஆனாலும் கொஞ்சம் கருணை காட்டினால் மக்கள் வரவேற்பார்கள். சிறு சிறு தொல்லைகள் இல்லாமல் இருக்கும். கார்ப்பொரேஷன் ஃபைனான்ஸ் சரியானபடி கண்காணிக்கப் படவேண்டும் என்பதால், ஒரு தனிக் கமிட்டியையோ அல்லது ஒரு தனி ஆபீசரையோ அரசாங்கம் நியமித்து ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, திருத்தத்தை ஆதரித்து, வலியுறுத்தி முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகராட்சியின்கீழ் தொழில் வரி செலுத்துபவர்களை 9 பிரிவாகப் பிரித்து, அதற்கேற்றபடி தொழில் வரி வசூல் செய்யப் பட்டுவந்தது. ஆறு மாத காலத்திற்கு ரூ. 600 முதல் 1,200 வரையில் வருமானம் பெறுகிறவர்கள்,



ஆறு மாதத்திற்கு 6 ரூபாய் செலுத்த வேண்டும் என்றும், மாதம் ஒன்றுக்கு ரூ. 100 முதல் 200 வரையில் சம்பளம் பெறுகிறவர்கள் ஆறு மாதத்திற்கு ரூ. 3 கட்டவேண்டும் என்று இதுவரையில் இருந்தது. ஆறு மாதத்திற்கு ரூ. 1,200 முதல் 1,800 வரையில் சம்பளம் பெறுபவர்கள் எட்டாவது பிரிவில் வைக்கப் பட்டிருந்தார்கள். அவர்கள் ஆறு மாதத்திற்கு ரூ. 6 தொழில் வரி கட்ட வேண்டும் என்றிருந்தது. இந்த இரண்டு பிரிவையும் நீக்க வேண்டும் என்று நகராட்சி மன்றம் தீர்மானம் போட்டுக் கேட்டிருந்தது. மாதம் ஒன்றுக்கு ரூ. 100 முதல் 200 வரையில் சம்பளம் பெறுகிறவர்கள் ஆறு மாதத்திற்கு ரூ. 3 கட்டுவது கடினம் இல்லை. அதேபோல் ரூ. 1,200 முதல் 1,800 வரை ஆறு மாதத்தில் சம்பளம் பெறுகிறவர்கள் ஆறு மாதத்திற்கு ரூ. 6 கட்டுவதும் கடினம் இல்லை. ஆனால், என்ன கடினம் வந்தது என்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல், இந்த ரூ. 6, ரூ. 3 இவற்றை வசூல் செய்வதில் இருக்கும் சிரமங்கள் கடினமானவையாக இருந்தன. இந்த முயற்சியில் செலவழிக்கும் பணம், இடும் நோட்டீஸ், தபால் தலைகள் இவற்றையெல்லாம் கணக்குப் பார்த்தால், வசூலாகும் தொகையில் முக்கால் வாசிக்குமேல் இந்த வழியில் செலவழிந்து போகிறது. தொழிற்சாலைகளில் உள்ளே போய், தொழிலாளிகளைப் பார்த்து, நோட்டீஸ் சர்வ் செய்து, அவர்களிடத்தில் வரி வசூல் செய்வது கடினமானதாக இருந்தது. சட்டத்தைத் திருத்தி, அந்தந்த ஆலை முதலாளிகளே வசூலிக்கும் முறையைச் செய்யவேண்டும் என்றால், மத்திய சர்க்காரைக் கேட்டு அவர்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் எளிதாக இருக்கும். ஆனால் இப்பொழுது இருக்கும் முறையில் நாமே நோட்டீஸ் கொடுத்து வசூல் செய்வதில் அதிக சிரமங்கள் இருக்கின்றன. மிச்சமும் அதிகமாக இல்லை. பலரிடத்தில் வசூல் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட சிரமங்களால், 8, 9 ஆகிய இரண்டு பிரிவுகளை நீக்க வேண்டும் என்று நகராட்சி மன்றம் கேட்டது. இதில் கடைநிலை ஊழியர்களும், ஆலைத் தொழிலாளர்களும் வருவார்கள். ஆகவே, இந்த இரண்டு பிரிவுகளையும் எடுக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. 7-வது பிரிவையும் எடுக்கலாம் என்றால், அதில் ரூ. 300 முதல் ரூ. 500 வரையில் மாதச் சம்பளம் வாங்குகிறவர்கள் வருவார்கள். ஆறு மாதத்தில் ரூ. 1,800 முதல் 3,000 வரையில் வருமானம் உள்ளவர்கள் ஆறு மாதத்திற்கு ரூ. 9 கட்ட வேண்டும் என்பதில் அதிகக் கஷ்டம் இருக்காது. அப்படிக் கட்டவேண்டியவர்களுடைய எண்ணிக்கையும் குறைவு. அவர்களிடம் வசூல் செய்வதும் கடினம் இல்லை. 8, 9 பிரிவில் சங்கடம் இருப்பதால், அவற்றை நீக்க வேண்டும் என்று செய்யப் படுகிறது. ஆகவே, திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAN: A small clarification, Sir, I may submit to the Hon. Minister that the Corporation is not going to lose very much by eleting this class at all. Out of the total revenue of Rs. 11 crores for the Corporation, the income from profession tax is hardly Rs. 18 lakhs. Nothing is going to fall by exempting the categories in the income-group of Rs. 300 to Rs. 500 p.m. from paying profession tax. That income group cannot be said to have higher purchasing power. In the hope that this would

be accepted, and because of public opinion, I had moved this amendment. If Government are not going to accept it, I have to withdraw it. There is no other go.

DR. H. V. HANDE : Because of this new amendment, have the Government taken into consideration the number of people who would be affected ? At present a number of people are engaged in collecting this tax from the low-income group people. The number of persons in the high-income group is less. Those in the lower income group are large and the number of people going for collecting the tax is large. They would be affected by this measure. 2/3rd of the personnel employed in the Revenue Department of Corporation are engaged in collecting these taxes from lower income group. When we delete the two classes, the number of persons who would be rendered unemployed due to this will be large. Have Governmnt taken into consideration this aspect of the matter and whether they had brought of any alternative job for these people, I want to know.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்களுடைய ஐயப்பாட்டிற்கு இடமில்லை. அதுவும் பார்க்கப் பட்டது. வேறு பல வேலைகளோடு இதையும் செய்கிறார்கள். வேலை இழப்பு என்று ஏற்பட்டுவிடாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் குறிப்பிட்டுக் கூறினார்கள், இரண்டு பிரிவுகளை எடுக்கிறோம், மூன்றாவதாக 7-வது பிரிவையும் எடுக்கலாம் என்று. ஆறுமாதத்தில் ரூ. 9 கட்டுபவர்கள் அதிகம் இல்லை என்பதால், அதையும் எடுக்கலாம் என்றார்கள். இரண்டு பிரிவை எடுப்பதால், குறைந்தாலும், 12 லட்சம் மிச்சம் வருகிறது. மக்களும் வரி செலுத்துவது என்பதை விட்டு அகலக் கூடாது. சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல், இப்படி வருமானம் உள்ளவர்கள் கொடுத்துத்தான் மாநகராட்சிக்கு வருமானம் வரவேண்டும். உள்ளாட்சி மன்றங்கள் இப்படிப் பணம் தேட வேண்டிய நிலைமைகள் இருப்பதால், மாநகராட்சி மன்றமும் இந்த இரண்டு பிரிவுகளையும் நீக்க வேண்டும் என்று கேட்டிருப்பதால் அவற்றைமட்டும் நீக்குகிறோம். 7-வது பிரிவை நீக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கவில்லை. அதை நாமாக நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, மற்றவற்றை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பேரவையின் அனுமதியோடு திருத்தம் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 347 (3)-வது பிரிவின்கீழ் மேற்சொன்ன சட்டத்தின் IV விவர அட்டவணையைத் திருத்தும் வகையில் தமிழ்நாட்டு ஆளுநர் செய்யக் கருதும் கீழ்க்காணும் வரைவுத் திருத்தத்தை இப்பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.



வரைவுத் திருத்தம்

தமிழ் நாடு 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) IV-ம் விவர அட்டவணையில் 8-வது விதியில் இரண்டாவது வரம்பு நிபந்தனையின்கீழ் உள்ள அட்டவணையிலே கண்டுள்ள VIII, IX வது பகுதிகளும் அவற்றிற்குத் தொடர்பான பதிவுகளும் நீக்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது

(ஆ) தமிழ்நாடு 1950-ம் ஆண்டு பருத்தி போக்குவரத்து விதிகளுக்கு திருத்தம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1950-ஆம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து விதிகளின் 1, 3 (i) 10 (ii) விதிகளைத் திருத்த 1923-ம் ஆண்டு பருத்திப் போக்கு வரத்துச் சட்டத்தின் (மத்திய சட்டம் 3/1923) 7-வது பிரிவின்கீழ் மாநில அரசு பிறப்பிக்கவிருக்கும் கீழ்க்காணும் வரைவு விதிகள் மேற்படிச் சட்டத்தின் 8-வது பிரிவில் கண்டுள்ளவாறு ஏற்பளிக்கப்படுவதாக."

வரைவு அறிவிப்பு

1923-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்துச் சட்டத்தின் 7-வது பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாடு 1950-ம் ஆண்டு பருத்திப் போக்குவரத்து விதிகளில் பின்வரும் திருத்தங்களை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் செய்யவிழைகிறார். மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவில் கண்டுள்ளவாறு சட்டமன்ற இரு அவைகளின் தீர்மானம் மூலம் ஏற்பளிக்கப் பட்டுள்ளது.

திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில் :—

(1) 1-வது விதியில் இரண்டாவது வாக்கியத்தில் "மணங்குகள்" என்ற சொல்லுக்குப் பதிலாக "குவிண்டால்கள்" என்ற சொல் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) 3-வது விதியைச் சேர்ந்த (i) துணை விதியில் (b) பகுதிக்குப் பின்னர் பின்வரும் பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:—

(c) பருத்தி விதைகளைப் பிழிந்து எண்ணெய் எடுப்பதற்காக, அவற்றைப் பருத்தி விதை எண்ணெய் ஆலைகளுக்கு அனுப்புதல்".

(3) 10-வது விதியைச் சேர்ந்த (ii) துணை விதியில் (a) முதல் (d) வரையிலுள்ள இனங்களுக்கும் அவை தொடர்பான எல்லாப் பதிவுகளுக்கும் பதிலாகப் பின்வருவன அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:

(a) பருத்தி விதை (கப்பால்) குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 0.30.

(b) லிண்ட் பருத்தி (உதிரியாக அல்லது அழுத்தப்பட்ட வடிவில்) குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 0.65.

(c) பருத்தி விதை குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 0.30.

(d) பஞ்சுக் கழிவு குவிண்டால் ஒன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 0.65.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) 1971-ஆம் ஆண்டு நில உடமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 12/1971)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம், உணவு-வருவாய்த்துறை அமைச்சர், 1971-ம் ஆண்டு நில உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 12/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கோருவார்கள்.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Mr. Speaker Sir, I beg to move "That the Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, * 1971 (Legislative Assembly Bill No. 12 of 1971), be taken into consideration."

The Holding (Stay of Execution Proceedings) Act, 1950 (Travancore-Cochin Act VIII of 1950) was in force in the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district at the time of their transfer to this State from the former Travancore-Cochin State in 1956. Consesuent on the extension of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955) and the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956) to the Shencottah taluk by virtue of the Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Extension to Shencottah Taluk) Act, 1959 (Tamil Nadu Act 28 of 1959), with effect from the 2nd March 1960, the Holdings (Stay of Execution Proceedings) Act 150 ceased to be n force in that taluk. It is now in force in the Kanyakumari district alone.

The Act provides for the stay of proceedings in execution of a decree in a suit for the recovery of possession of a holding so far as such proceedings relate to the delivery of possession of the holding.

The Act is due to expire on the 24th September 1971. Already certain Acts have been passed for the abolition of certain special tenures prevalent in the Kanyakumari district and for the introduction of ryotwari settlement therein on the lines of the ryotwari settlement prevalent in the rest of the State. The implementation of the Acts relating to the abolition of special tenures is not yet complete. The question of abolition of the special tenure relating to Sreepadam lands is also under consideration. In the circumstances it is considered necessary to extend the life of the Travancore-Cochin Act VIII of 1950 for a further period of two years from the 25th September 1971.

* Published in the Tamil Nadu Gazette Extraordinary dated 29th June 1971.





Sir, I request the House to accept the motion.

(Mr. Deputy Speaker in the Chair.)

THIRU R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, I just rise to support the Bill, in that the Government are seeking to extend the life of the parent Act.

So far as this Act is concerned, it has come into force in the Kanyakumari District even before this district became part of Tamil Nadu. Sir, this Bill is intended for the protection of the lessees who hold the lands under a single transaction. Now I would say that this Act should be made permanent. Instead of extending it periodically, it would be better if the whole statute is made permanent. Now the life is extended from 21-1/2 years to 23-1/2 years. This periodical extension causes great hardship.

Another fact which I want to bring to the notice of the Hon. Minister is this. Many land-owners want to circumvent this Bill by creating certain records after the passing of this Act. They say that the leases are converted into licences. If it is a lease, the tenant can be evicted under the provisions of this Act. So, to circumvent the provisions of this Act, they do this. Then, any tenant who is holding the land is only a licensee and not a lessee. If he is a lessee he can be evicted only on two grounds. One ground is wilful waste and the second ground is wilful default in the payment of rent. Just to flout these provisions the landlords are carrying on their operations insidiously and against the statutory provisions. So, it would be better if the law is made permanent and this periodical extension of the life of the Act is put an end to.

I would also incidentally urge, so far as the settlement and other proceedings are concerned, that will have no relevancy so far as this Act is concerned because those deal only with the tenures over which the Government have got powers of abolishing the intermediary right. If this does not come under tenures, then the relationship between the landlord and the tenant is the only thing. That is the subject matter of this law. So, it would be better that this Act is made permanent. I am sure that the Government would take prompt steps to see that this Act is made permanent, so far as that area is concerned.

So far as the cultivating tenants are concerned, Cultivating Tenants Protection Act is the law that is applicable to the other parts of the State. So, if the Cultivating Tenants Protection Act

can be extended to Kanyakumari District, that is well and good. By repealing this the Government can do that, or the Government may be well advised to make this a permanent measure. That is all what I have to say regarding this Bill, Sir.

* திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த மசோதா மீது ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த மசோதா விவசாயிகளுக்குப் பயன் அளிக்கின்ற முறையில், வரவேற்கத்தக்க முறையில் அமைந்திருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஸ்ரீ பண்டாரவகா, திருப்புவாரம் ஆகிய நிலங்களும் சில கிராமங்களில் கண்டுகிருஷி நிலங்களும் இருக்கின்றன. கண்டுகிருஷி நிலம் என்றால், அவைகள் எல்லாம் முன்பு கன்னியாகுமரி ஜில்லா திரு-கொச்சி பகுதியாக இருந்தபோது திரு-கொச்சி மகாராஜாக்களுக்கு சொந்தமாக இருந்த நிலங்கள். கேரள மாநிலம் பிரிந்தபோது இந்த நிலங்களெல்லாம் சென்னை மாகாணத்திற்குள் வந்தன. மற்றவை கேரளாவிற்குப் போய் விட்டன. நமது மாகாண மக்கள் அந்த நிலங்களை சாகுபடி செய்து அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள்.

நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புவதென்னவென்றால், கேரள அரசு இதற்கென சட்டங்கள் நிறைவேற்றி எந்தெந்த நிலங்களை யார் யார் அனுபவித்துக்கொண்டு இருந்தார்களோ அந்தந்த நிலங்கள் அவரவர்களுக்கே சொந்தம் என்று சட்டமியற்றி பட்டா வழங்கியிருக்கிறது. அதுபோன்றே நமது மாநிலத்திலுள்ள பகுதியையும், எந்தெந்த விவசாயிகள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கே பட்டா செய்து தர வேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்றதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்பது போல் எதிர்க் கட்சி உறுப்பினர் குறிப்பிட்டார். இது ஏற்கனவே இருக்கின்ற சட்டம். எக்சிக்யூட் செய்யாமல் தடுப்பதற்காக ஒத்தி வைக்கப்படுகின்றது. நிரந்தர ஒத்தி வைப்பு அல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது இருக்கின்ற நிலங்களுக்கு நிலையான சட்டங்கள் இருக்க வேண்டும். இப்போது உள்ள சட்டப்படி 'டெனன்ட்' ஆக மட்டும் இருந்து வந்தால் போதும் என்ற அர்த்தத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர் பேசினார்கள் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டிலேயே எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு சட்டம், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாத்திரம் ஒரு சட்டம் என்று இருப்பது நல்லதல்ல. செட்டில்மெண்டுகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. இரண்டாண்டிற்குள் முடிந்து தீர வேண்டும். இது கடைசியாக வருவதாகும். அதற்குள்ளாக நிலச்சீர்திருத்தச் சட்டம் கூட வந்துவிடும். விரைவில் ஏற்பாடுகள் செய்யப்படும். வரவேற்றதற்கு நன்றி. இது நிரந்தரமாக ஆக்கப்படவில்லை. தற்காலிகமான ஒன்று. ஒத்தி வைப்பதற்கு பவர்ஸ் கேட்கிறோம். எனவே, செட்டில்மெண்ட்ல் முடிந்த பிறகு இம்பிளி



மெண்ட் செய்யும்போது, எக்சிக்யூஷன் செய்யும்போது செக்ண்டரி ப்ரோவிசோவை வாபஸ் பெற்று விடலாம். நிரந்தரமாக ஆக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Buildings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 12 of 1971) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration, clause by clause.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

'That the Buildings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 (L.A. Bill No. 12 of 1971) be passed into law.'

The motion was put and carried and the Bill was passed into law.

5. அறிவிப்பு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பை முடிவு செய்தல்) திருத்த சட்ட முன வடிவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பை முடிவு செய்தல்) திருந்த சட்ட முன் வடிவை (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 16/1971) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பை முடிவு செய்தல்) திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 16/1971).

THE HON THIRU P. U. SHANMUGAM: Mr. Deputy Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill* 1971 (L.A. Bill 16 of 1971), be taken into consideration.

Hon'ble Members are aware that as a further step towards agrarian reform and for the effective implementation of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, Government decided to review the exemptions contained in that

* Published in the Tamil Nadu Gazette Extraordinary, dated 7th July 1971.

Act. Accordingly a Joint Committee consisting of forty-six members of both the Houses of the Legislature was constituted to recommend on the contnuance or otherwise of the various exemptions contained in the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961. In its interim report, the Joint Committee has recommended, among other things, that the exemptions in respect of lands used exclusively for grazing and assessed to land revenue at Re. 1.25 and below per acre and lands used for cultivation of sugarcane and in respect of which the Sugar Factory Board has granted permission under Section 40 or 43 of the Act, may be withdrawn. Accordingly, the Government have decided to withdraw the exemption in regard to the above two items. I shall now refer to some of the special features of the Bill.

The expressions " date of commencement of this Act " and " notified date " will have different meanings in respect of the proposed Bill. The " notified date " for the purpose of the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970 has been fixed as the 2nd October 1970, but for the purposes of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1971, a separate date will have to be fixed by Government as " notified date ".

The Sugar Factory will have to file a return under Section 8 of the principal Act after the commencement of this Act. As regards persons who held grazing land in excess of the ceiling area by reason of the exemption given under section 74 of the principal Act, they also will have to file returns after the commencement of this Act. Even if they have filed a return under the Tamil Nadu Land Reforms (Reduction of Ceiling on Land) Act, 1970, they will have to submit another return if, after taking into account the grazing lands held by them, the total extent of lands held by them exceeds the ceiling area.

The new provision made in Section 94-A empowers the Government to make arrangement for the cultivation of the surplus lands required from the Sugar Factory with sugar-cane for supply to the sugar factory concerned. It also empowers the Government to make rules in respect of such surplus lands for the cultivation of sugar-cane through a corporation (including a company) owned or controlled by the State. Sub-section (4) of Section 94-A makes it clear that the surplus land acquired from the sugar factory may also be disposed of in accordance with the rules made under section 94. New section 94-B provides that the lands held on a tenancy basis which is within the ceiling area of the land owner should be deemed to be held on a tenancy basis by the corporation (including a company) to ensure continued supply of sugarcane to the factory. Such land will be held by the factory only till the expiry of the period of contract of



tenancy. Section 94-C exempts an extent of land not exceeding 100 Standard acres held by the Sugar factory solely for research and seed farm purposes from the operation of the Act.

Provision has also been made for the abolition of the Sugar Factory Board and the Sugar Factory Tribunal with the incidental provision that the members thereof shall cease to hold office.

Sir, I commend the motion for the acceptance of the House.

THIRU J. JAMES : Sir, I move the following amendment—

' That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971) be circulated for eliciting public opinion thereon. '

THIRU N. DENNIS : Sir, I second the amendment.

**திரு. மணலி சி. கந்தசாமி:** மாண்புமிகு மாமன்ற உப தலைவர் அவர்களே, இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற விதிவிலக்குகள் இரண்டு அயிட்டங்களை நீக்குவது பற்றிய மசோதாவை வரவேற்கும்பொழுது சில விஷயங்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக கரும்புக்கும் மேய்ச்சல் தரைக்கும் விதிவிலக்கை ரத்து செய்திருப்பது மிகவும் நல்லதொரு முன்னேற்றமான அம்சமாகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இதன் மூலமாக பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயிகளுக்கு உழுவதற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்த 'ஷுகர் பேக்டரி'க்கு 100 ஏக்கர் ஆராய்ச்சிக்கு வேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும். கரும்பு உற்பத்தி செய்வது ஒரு ஏக்கருக்கு 40, 50 டன் என்று வைத்துக் கொண்டால் 100 ஏக்கருக்கு ஐயாயிரம் டன்னாகும். இன்றைய விலைப்படி ரூ. 4 அல்லது 5 லட்சம் வருமானம் தரக்கூடிய ஒரு சொத்தை ஆராய்ச்சிக்காக ஒதுக்குவது என்பது அதிகப்படி என்பது என் அபிப்பிராயம். அதைக் குறைத்துக் கொள்வதன் மூலம் சாதாரணக் குடியானவர்கள் விவசாயிகள் கரும்பு உற்பத்தி செய்வோர்கள் அனுபவிக்க அதை 100 ஏக்கரிலிருந்து குறைக்க வேண்டுமென்ற என் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்னும் பலவிதமான விதிவிலக்குகள் எடுக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். பின்னால் தொடர்ச்சியாக வருமென்று எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் சீலிங் சம்பந்தப்பட்டவரை விதிவிலக்குகள் மிகப் பெரிய ஓட்டையாக இருக்கிறது. இந்த ஓட்டைகளை அடைக்காவிட்டால் சீலிங் என்பது கடுதாசியில் எழுதி வைத்துக் கொண்டு பலன் இல்லாமல் காலத்தை விரயம் செய்யக்கூடிய நிலைமையாகப் போகும் என்று தெரிவித்துக் கொண்டு 100 ஏக்கர் என்ற அளவை குறைக்க வேண்டுமென்று தெரிவித்து, இடைக்காலத்தில் இந்த நிலங்களை என்ன செய்யப் போகிறார்கள் என்பதற்கான விதிமுறைகளைத் தெளிவுபடுத்த வேண்டும், அவைகளை சபையின் மேஜை மீது வைக்க வேண்டும். அப்போது தான் நிலங்கள் விவசாயிகளுக்குப் போகப் போகிறதா அல்லது மில் சொந்தக்காரர்களே 100 ஏக்கர் 50 ஏக்கர் நாங்களே சாகுபடி செய்து கொள்ளுகிறோம் என்று சொல்லி அவர்கள் வைத்துக்

கொள்ளலாம் என்ற சந்தேகம் ஏற்படாத முறையில் விதிகளைச் சீக்கிரம் ஏற்படுத்தி நிலச் சீர்திருத்தங்களை நல்ல முறையில் மாண்புமிகு ரெவின்யு அமைச்சர் பூர்த்தி செய்வார் என்று எதிர்பார்த்து என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்சவரம்புச் சட்டத்தில் உள்ள குறைகளை எல்லாம் களைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இதற்காக அமைக்கப்பட்டிருந்த கமிட்டி கரும்புக்காக, மேய்ச்சல் காட்டுக்காக என்று கொடுக்கப்பட்டிருந்த விலக்கை ரத்து செய்ய சிபாரிசு செய்ததன் பேரில் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

உச்சவரம்புச் சட்டத்தில் செக்ஷன் 73-இல் ஏறக்குறைய 13 இனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கரும்புக்காக, மேய்ச்சல் காட்டுக்காக, பழத்தோட்டங்களுக்காக பாக்குத் தோப்புக்காக ப்ளாண்டேஷனுக்காக, என்று 13 இனங்களை ஒதுக்கியிருக்கிறார்கள். நாங்கள் ஆட்சியில் இருந்தபோதுதான் செய்தோம் என்பார்கள். நல்லெண்ணத்தோடுதான் சட்டம் செய்கிறோம், அங்கங்கே ஏதாவது ஓட்டை கண்டால் உடனே அதைத் திருத்திக் கொள்வதற்கும் எந்த அரசாக இருந்தாலும் தயாராக இருக்கவேண்டும். அந்தத் தன்மையிலே தான் இப்போது இந்தத் திருத்தச் சட்டம் 2 இனங்களுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கை ரத்து செய்ய கொண்டு வரப்பட்டிருக்கிறது. திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்த திருத்தத்தின் நோக்கம் என்ன என்றால் இப்படி பீஸ் மீலாக லெஜிஸ்லேஷன் கொண்டுவராது—இதையே ஒரு பொறுக்குக் கமிட்டிக்குவிட்டு, அவர்களுடைய பரிந்துரையின்மேல் விரிவான ஒரு சட்டத்தையே கொண்டுவர யோசிக்கலாம் என்பதுதான்.

இந்தச் சட்டத்தில் மேய்ச்சல் காட்டுக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கை ரத்து செய்வதை வரவேற்கிறேன். ஆனால் அந்த வாயில்லா ஜீவன்களையும் இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டும். பல இடங்களில் ஆடு மாடுகள் மேய்வதற்கே இடமில்லை. அவை புல்லை மறந்து காகிதத்தைத் தின்கிற நிலை வந்துவிட்டது. ஆகவே, மேய்ச்சல் காட்டுக்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கை ரத்துசெய்தாலும் இந்த வாயில்லா ஜீவன்களின் மேய்ச்சலுக்கு வழிசெய்வதிலும் இந்த அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும்.

அடுத்து, ஷுகர் போர்டு போடுவதுபற்றிச் சொன்னார்கள். இந்த அரசாங்கம் குடிசைவாரியம், வாட்டர்போர்டு, டிரான்ஸ்போர்ட் வாரியம் என்பதாக இப்படி தனித்தனி வாரியங்கள் அமைப்பதில் அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். உடனே தலைவர்களையும் நியமித்துவிடுகிறார்கள். உறுப்பினர்களையும் அவர்களது கட்சிக்காரர்களாகவே பார்த்துப் போடுகிறார்கள். இங்கேதான் சந்தேகம் ஏற்படுகிறது. அதற்கு இடமின்றி எதிர்க்கட்சியில் இருப்பவர்களையும் போடுவார்களேயானால் அவ்வப்போது மக்களின் நன்மையைப் புரிந்துகொண்டு உதவிசெய்ய வாய்ப்பாக இருக்கும். பார்டிசன் தன்மைக்கு இடமளிக்கக் கூடாது. ஆகவேதான் இது பற்றி எல்லாம் நன்கு பரிசீலிக்க இதைப் பொறுக்குக் கமிட்டிக்குவிடுவது பொருத்தமாகவும் இருக்கும் என்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.





***திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்கில் இரண்டினை அகற்றுவதற்காகக் கொண்டுவந்த இந்த மசோதாவினை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன்.

அதேநேரத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தில் ஏராளமான விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த உச்சவரம்புச் சட்டம் வந்தபோது இது உச்சவரம்புச் சட்டம் அல்ல, மிச்சவரம்புச் சட்டம் என்பதாகக் காலஞ்சென்ற அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை நினைவூட்ட விரும்புகிறேன். 1970-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் பலனாகக் கூட மிச்சம் அதிகம் கிடைக்கவில்லை என்பதாக அண்மையில் ரெவின்யூ போர்டு மெம்பர் கூறியதைப் பத்திரிகையில் பார்த்தேன். காரணம் அந்தச் சட்டத்தில் ஏராளமான ஐடெம்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டதுதான். திருமதி அனந்தநாயகி அம்மையார் குறிப்பிட்டதைப்போல 13 ஐடெம்களுக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். இப்போது மேய்ச்சல் நிலங்களுக்கும், கரும்பு சாகுபடி நிலங்களுக்கும் கொடுக்கப்பட்ட விலக்கு ரத்துசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கரும்பு ஆராய்ச்சிக்காக 100 ஏக்கர் என்று ஒதுக்கியிருப்பது அவசியம்தானா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அங்கே என்ன ஆராய்ச்சி செய்கிறார்கள்? கரும்புதான் பயிரிடுகிறார்களே தவிர எந்த ஆராய்ச்சியும் செய்யவில்லை. கரும்பு ஆராய்ச்சிக்குக் கோவையில் சிறந்த ஆராய்ச்சி நிலையம் உள்ளது. ஆகவே, இந்த விதிவிலக்கை எடுத்துவிடலாம் என்று கருதுகிறேன்.

பிறகு டிரஸ்டுகள் என்பதாக, கல்விக்காகச் செய்கிறார்கள், அதற்காக ஏராளமான நிலத்தை வைக்கிறார்கள். சர்க்காரே அவற்றை எடுத்து கல்விக்கூடங்களை நிர்வகித்து வரலாம். இதற்கு என்று தனியாக ஒதுக்கிவைக்கவேண்டியதில்லை. இன்னும் பழத்தோட்டங்கள், பாக்குத்தோப்புகள் என்று ஒதுக்கியிருப்பது எல்லாம் மறுபரிசீலனை செய்யப்படவேண்டும். நிலமற்ற ஏழை எளிய விவசாயிகளுக்காக நாம் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அவர்களுக்கு அந்தப் பயன்கிடைக்காதபடி செய்கிற இந்த விதிவிலக்குகளை எல்லாம் ரத்துசெய்ய ஒரு சட்டத்தினைக் கொண்டுவந்தால்தான் இந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் போற்றத்தக்கதாக இருக்கும் என்று தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இப்போது பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் விதிவிலக்கு ரத்து செய்யப்படுவதை ஆதரித்திருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோல மற்றவற்றுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கை நீக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இதற்குப் பொது மக்களுடைய அபிப்பிராயம் தேவையில்லை. இதன்மூலம் கரும்புக்காக, மேய்ச்சல் காட்டிற்காக கொடுக்கப்பட்டிருந்த விதிவிலக்கு ரத்துசெய்யப்படுகிறது. இதுவும் ஏற்கனவே போடப்பட்ட குழுவின் சிபார்சு பேரில்தான் செய்யப்படுகிறது.

இடையில் ஏற்பட்ட தேர்தல் காரணமாக அந்தக் குழு காலாவதி ஆகி விட்டது என்றாலும் ஒரு புதிய குழுவை மீட்டும் இதுபற்றியெல்லாம் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைக்க, அமைப்பது பற்றிய ஒரு தீர்மானம் இந்தக் கூட்ட முடிவிற்குள்ளாகவே வரும் என்பதையும் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேய்ச்சல் காடுகளுக்கு அளிக்கப்பட்ட விதிவிலக்கை ரத்துசெய்தாலும், வாயில்லா ஜீவன்களுக்குப் பாதுகாப்பு அளிக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று திருமதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இந்தச் சட்டத்திலேயே யாரேனும் உண்மையில் டைரிபார்ம் வைத்து இருந்தால் அதைத் தொடவில்லை. கால்நடை வைத்திருந்தால் லாண்டு போர்டுக்கு மனுச்செய்து அதற்கு அவர்களால் விலக்கு வாங்கிக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆக வாயில்லா ஜீவன்களை நாங்கள் பட்டினி போட்டுவிடமாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

The amendment of Thiru J. James was, by leave, withdrawn.

MR. DEPUTY SPEAKER: The question is :—

"That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L. A. Bill No. 16 of 1971) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. DEPUTY SPEAKER: Now, we shall take up the Bill clause, by clause.

Clause 2 was put and carried.

### Clause 3.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That Clause 3 do stand part of the Bill".

THIRU K. T. K. THANGAMANI: Sir, I move the following amendment :—

In Clause 3, the proposed insertion of new secion 94-C to the principal Act, namely.—

"94.C Exemption in respect of land held by sugar factory for research purposes (1) Except as otherwise provided in sub-sections (2) and (3) of Section 5 and in Section 6, nothing contained in this Act shall apply to any extent of land not exceeding 100 standard acres held by a sugar factory solely for research and seed farm purposes.

(2) The question whether any land is held solely for research and seed farm purposes shall be decided by Government",

shall be deleted.

The amendment was duly seconded.



திரு. கே. டி. கே. தங்கமணி: இந்தத் தீர்மானத்தை நான் கொடுத்ததன் நோக்கம் ஏற்கெனவே நில உச்சவரம்புச் சட்டத்தில் 13 விதிவிலக்குகள் இருக்கின்றன. அந்த விதிவிலக்குகளை எல்லாம் பரிசீலனை செய்து எந்த எந்த விதி விலக்குகளை எல்லாம் ரத்து செய்யவேண்டும் என்பதை ஆராய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அதன் சிபார்சு அடிப்படையில் இரண்டு விதிவிலக்கு அம்சங்கள் இப்போது இங்கு வந்திருக்கிறது.

இன்னும் பல முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன என்றாலும் இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் விஷயத்தை விவரமாக விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். 100 அல்லது 1,000 ஏக்கர் என்ற அளவில் சர்க்கரை ஆலைகளுக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த அளவிலே தங்கவரம் பண்ணையில் அதிகமான ஏக்கர் நிலம் கரும்பு சாகுபடிக்கென்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல ஆரூரான் சர்க்கரை ஆலைக்கும் அதிகமான நிலம் கரும்பு விவசாயத்திற்கு என்று இருப்பதை அறிவோம். குறிப்பாக தங்கவரம் பண்ணையைப்பற்றி ஒரு சரித்திரமே இருக்கிறது. 1957 என்று நினைக்கிறேன். இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த எங்கள் கட்சியின் உறுப்பினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும், இன்று முதலமைச்சராக இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களும் அந்த தங்கவரம் பண்ணையை எதிர்த்து நடத்திய போராட்டமே சான்றாகும். அதற்குப் பின்னால் நிலச்சீர்திருத்தத்தைப்பற்றி அன்று இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் எடுத்த நடவடிக்கைகளைப்பற்றியும் இந்தச் சட்டசபையில் இருப்பவர்கள் அறிவார்கள்.

கரும்புக்கு ஏதாவது ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று சொன்னால் அதற்கு கோவையிலே, குடுமியாமலை போன்ற பண்ணையிலே இடம் கொடுக்கலாம். இவ்வளவு அதிகமாக நிலம் ஆராய்ச்சிக்கு என்று நான் நினைக்கவில்லை. அதற்கு மாறாக ஆராய்ச்சிக்கு என்று சொல்லிக்கொண்டு வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஒரு சமயத்திலே 200 ஏக்கர், 250 ஏக்கர் என்ற அளவிலே போய்க்கொண்டிருக்கிறது. தங்கவரத்திற்கு 250 ஏக்கர், ஆரூரான் ஆலைக்கு 200 ஏக்கர் என்று ஒதுக்கக்கூடிய முறையில்தான் விதிவிலக்கு பற்றி பொது மக்களுக்கு ஐயம் ஏற்படுகிறது. கரும்பு உற்பத்திற்கும் மேய்ச்சலுக்கும் இருக்கும்படியான பகுதியை அப்படியே எடுத்து ஏற்றுக்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். விதிவிலக்கு என்று சொல்லி சில முறைகளிலே தப்பித்துக்கொள்ள காரணம் ஏற்படுகிறது. ஆகவே, மற்றத் திருத்தங்களைப் போல் அல்லாமல் கொஞ்சம் கவனத்தோடு இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எந்த அளவுக்குச் சொல்லி, திருத்தத்தை வற்புறுத்த முடியுமோ அந்த அளவிற்கு வற்புறுத்தி, இந்த அரசு திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிவிலக்கு என்று சொன்னாலே ஆபத்தானது. உச்சவரம்புச் சட்டம் கொண்டு வருகிற நேரத்தில் விதிவிலக்கினால் ஏற்படும் ஆபத்துக்களையெல்லாம் நாங்கள் சொல்லியிருக்கிறோம். எங்களுடைய யோசனைகள் எல்லாம் நிராகரிக்கப்பட்டு, இப்படி விதிவிலக்கு அளிப்பதன் காரணமாக நம்முடைய ராஜ்யத்திலே எவ்வளவு நிலம் உயர்ந்த பட்சமாக எடுக்கப்பட வேண்டுமோ அவ்வளவு நிலம் எடுக்கப்படவில்லை. பொதுவாகச் சொல்லப்போனால் சட்டத்தின் நோக்கம் எதுவாக இருந்ததோ அதையெல்லாம் விதிவிலக்கு என்ற பெயரால்

முடிபடித்துவிட்டார்கள். அதன்காரணமாக எதிர்பார்த்தபடி உபரி நிலம் கிடைக்காமல் போய்விட்டது. விதிவிலக்கு அளிப்பதன் மூலமாக கரும்பு விவசாயம் செய்யக்கூடியவர்கள் நிச்சயமாக இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டு விட்டார்கள். தங்களிடத்தில் நிலம் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இப்படிச் சொல்லி சட்டத்தைத் தகர்ப்பதில் மிகவும் கைதேர்ந்தவர்கள். 100 ஏக்கர் விதிவிலக்கு அளிப்பது என்பது நியாயம் அல்ல. நாங்கள் அதை ஆட்சேபிக்கிறோம்.

அடுத்து, மேய்ச்சல் நிலம் என்று சொல்வார்கள், கரும்புக்கு, மேய்ச்சலுக்கு என்று 100 ஏக்கர், 500 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி அரசாங்கத்தை ஏமாற்றி வந்தார்கள். மேலும் பழத்தோட்டம் என்று சொல்லிக்கொண்டு, போர்டு போட்டுக்கொண்டு, சில மாங்கன்றுகளை நட்டுவைத்து அதுதான் பழத்தோட்டம் என்று சொல்லிவருகிறார்கள். இப்படி நான்கைந்து மாங்கன்றுகளை நட்டு விட்டு, விவசாயம் செய்து வருகிறார்கள். கேட்டால், பழத்தோட்டத்திற்கு விதிவிலக்கு என்று கூறுகிறார்கள். அரசாங்கம் எந்தக் காரியத்திற்காக விதி விலக்கு அளித்ததோ அதற்கு நேர்விரோதமாகச் செயல்படுகிறார்கள். 100 ஏக்கர் என்று ஒதுக்குவது அவசியம் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட விதிவிலக்கு அவசியம் இல்லையென்று கூறி, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வகாப்: பேரவை உதவித் தலைவர் அவர்களே, இங்கே நில உச்ச வரம்புக்கு இருக்கின்ற ஓட்டைகளிலே இரண்டு பெரிய ஓட்டைகளை அடைக்கின்ற நோக்கத்தை வரவேற்கிறேன். முக்கியமாக கரும்புத் தோட்டத்துக்குத் தான் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் விதி.விலக்காக அளிக்கப்பட்டு சிலபல முதலாளிகள் பயனை அடைந்து வருகிறார்கள். கரும்புத் தோட்டத்தைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு ரத்து செய்யப்படுவது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கரும்பு பயரிடுகின்ற விவசாயி நாட்டிலே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் பயிர் செய்கின்ற கரும்பு ஆலைகளால் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதற்கு அதிகபட்டசமாக 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் விதிவிலக்கு அளித்திருப்பதை அரசு ஆலோசனை செய்ய வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சொன்னார்கள். அரசு அதை ஆலோசிக்கக் கூடிய கட்டம் இருக்கிறது. விவசாயிகள் அதிகமாகக் கரும்பை பயிர் செய்கிறார்கள். ஆலையில் இரண்டு ஷேர் இருந்தால் ஒரு ஏக்கர் கரும்புதான் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அரசு இதை யோசிக்கலாம். இப்படி ஒரு துரிதமான நடவடிக்கையில் சர்க்காரே வந்திருக்கிறது. ஆயிரம் ஏக்கர் கரும்புக்கு என்று கொடுத்ததை இப்போது 100 ஏக்கர் என்று வந்திருக்கிறதே அதற்காக நான் சர்க்காரை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். சர்க்காரின் கொள்கையை வரவேற்கிறேன்.

மேய்ச்சல் நிலத்தைப் பொறுத்தவரையில் சர்க்காரின் முடிவு வரவேற்கத் தக்கது. நில உச்சவரம்புக் குழு அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. வரவேற்கிறேன். அடுத்து, அம்மையார் அவர்கள் பேசும்போது இங்கே பலவிதமான போர்டுகள் அமைக்கப்பட்டன. அவைகளுக்கெல்லாம் ஆளும் கட்சிக்காரர்களையே போட்டுக்கொண்டார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். எங்களுக்கெல்லாம் அதில் பங்கு இல்லையா என்பதுபோலக் கேட்டார்கள். ஆகஸ்ட் 30-ம்



தேதிக்குமேல், 'அவன் கிடக்கிறான், எனக்கும் ஒரு நாமா போடுங்கள்' என்று சொல்வது மாதிரிதான் இருக்கிறது, அவர்கள் சொன்னது. அவர்களுக்கும் பங்கு வேண்டுமென்று கேட்டுக்கொள்வதிலே அர்த்தம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, நாங்கள் தவறாகச் சொல்லவில்லை. உள்ள வாரியத்தில் எல்லோரும் உட்கார்ந்து செம்மையாகக் காரியங்களைச் செய்வதற்கு வழி விடுங்கள் என்றுதான் கேட்டேன்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்திலே எத்தனையோ ஓட்டைகள் இருக்கின்றன. 11 ஓட்டைகள் என்று சொன்னார்கள். அந்த ஓட்டைகளையெல்லாம் அடைக்கும் சூழ்நிலையை அரசு உண்டாக்கும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தைக் குறித்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்கள். 100 ஏக்கர் கொடுப்பது அதிகம் என்றார்கள். மேலும் தங்கவரம் பண்ணையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 500 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று எந்தச் சட்டத்திலே பாதுகாப்பு வைத்துக்கொண்டு விதிவிலக்குக் கொடுத்தீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். ரெவின்யூ போர்டே அதற்கு மறுத்துவிட்டார்கள். எனவே, தங்கவரம் பிரச்சினை எழவில்லை. ஆரூரான் பண்ணைக்கு 7 ஆயிரம் ஏக்கருக்கு மேல் இருக்கிறது. அதில் 100 ஏக்கர் நிலத்தை மட்டும் ரிசர்ச்சுக்காகவும், தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கும், புதிய ரக வித்துக்களை ஆராய்ச்சி செய்வதற்காகவும் கொடுத்துவிடப் போகிறோம்.

பெரிய சர்க்கரை ஆலைக்கு ஆராய்ச்சிக்காக 100 ஏக்கர் நிலம் கொடுப்பது சரியென்றுதான் அரசு கருதுகிறது. இது பெரிய பிரம்மாண்டமான விதிவிலக்கு என்று சொல்வதற்கில்லை. எனவே, திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை. 100 ஏக்கர் இருக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அவர்கள் எல்லாம் 200 ஏக்கர் கேட்டார்கள். இல்லையென்று கடைசியிலே ஆலோசித்து ஆராய்ச்சி செய்வதற்காக நூறு ஏக்கர் அவசியம் என்று சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறோம். இ.ஐ.டி. பாரி கம்பெனிக்கு 197 ஏக்கர் சொந்தமாக இருக்கிறது, அதிலே 97 ஏக்கர் எடுத்துக்கொள்கிறோம். பாக்கியுள்ள 100 ஏக்கர் அவர்களுடைய ஆராய்ச்சிக்காகவும் விதை கொடுப்பதற்காகவும் என்று விட்டு விடுகிறோம். எனவே ஆராய்ச்சிக்காகவும் விதைக்காகவும் என்ற முறையிலே நியாயமாக நாம் 100 ஏக்கர் என்ற அளவை வைத்து இருக்கிறோம். இது நியாயமான அளவு என்று அரசாங்கம் கருதுகிறது. எனவே திரு. தங்கமணி அவர்கள் தங்களுடைய திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 100 ஏக்கர் என்பதை ஓரளவுக்கு 50 ஏக்கர் என்ற அளவுக்காகவது குறைப்பார்கள் என்று நினைத்தேன். என்னுடைய நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காக இந்தத் திருத்தத்தை வோட்டுக்கு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move : "That the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971) be passed"

The motion was put and carried and the Bill was passed into law.

(ஈ) தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1971.)

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I beg to move : "That the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill,* 1971 (L.A. Bill No. 18 of 1971) be taken into consideration".

The Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966) is in force at present in the City of Madras from 1-7-1963. All urban lands are liable to the levy of tax under the Act. The Government considered whether the revenue under the said Act could be increased and at the same time, give some relief to the small urban and holders. These twin objects are proposed to be achieved by exempting all urban lands not exceeding one ground from the levy of tax and by introducing a graded system of levy of tax on urban lands exceeding one ground and by extension of the said Act to the City of Madurai and the municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli. The extension of the said Act to the City of Madurai and the three municipal towns of Salem, Coimbatore and Tiruchirappalli is proposed to be done by issue of a notification under Section 1 (2) (b) of the Act for which the approval of the Assembly will be obtained separately under Section 1 (4) of the Act. The grant of exemption upto and inclusive of one ground and the graded system of levy of ax are embodied in the Bill now moved.

Sir, I request the House to accept the motion.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நகரத்தில் உள்ள சொத்தின் பேரில் வரிப்போட வேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பது வரவேற்கத் தக்கது. பொது விவாதத்திலே கலந்து பேசுகின்றபொழுதே நாங்கள் இதை வலியுறுத்திப் பேசியிருக்கிறோம்.

நகரத்திலேயுள்ள சில வசதிபடைத்தவர்கள் பல வீடுகளைக் கட்டிக்கொண்டு வருவாய் பெற்று நல்ல லாபத்தைச் சம்பாதித்துக்கொண்டு வருகின்ற போக்கு இருக்கிறது. படிப்படியாக ஒவ்வொருவருக்கும் வீடு கொடுக்க வேண்டுமென்ற கொள்கை இருந்தாலும்கூட ஒவ்வொருவரும் தாங்கள் அதிகமாக வீடுகளைக் கட்டிக்கொண்டு நிர்ணயித்திருக்கின்ற வாடகைக்கு மேலாக

* Published in the Tamil Nadu Gazette Extraordinary, dated 10th July 1971.



வாடகை வாங்கிக்கொண்டு தொழிலாளர், நடுத்தர வகுப்பினர் இவர்கள் கஷ்டத்தை அனுபவிக்கக்கூடிய முறையைத் தவிர்க்கக் கூடிய முறையிலே சென்னையிலே மட்டுமல்ல, வேறு சில நகரங்களிலும் இந்தச் சட்டம் அமலாக்கப் படக்கூடிய சூழ்நிலை வந்திருப்பது வரவேற்கக்கூடியது.

ஆனால், இந்த மசோதாவிலே ஏற்கனவே போட்டிருக்கிற வரி விகிதத்தைவிட அதிகப்படுத்த முடியாது என்பது எனக்குத் தெரியும். என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். வரியை அதிகப்படுத்துகின்ற முறையிலே திருத்தம் கொடுக்க முடியாது என்ற நிலைமையில்தான் என்னுடைய திருத்தம் வரவில்லை யென்று நினைக்கிறேன்.

ஒரு வீடு மட்டும் போதும் என்ற நிலைமை மட்டுமல்ல, தேவையானால் 5 கிரவுண்டுகள் வைத்துக் கொள்ளட்டும். அதற்கே மேலே கார்ப்பரேஷன் டாக்ஸ் மூலமும் தமிழக அரசு போடக்கூடிய டாக்ஸ் மூலமாகவும் அதிகமாக வரி போட்டால் இரண்டு மூன்று வருஷங்களிலே அவர்கள் வீட்டை விற்று விட்டுப் போய்விடவேண்டுமென்ற நிலைமையை உண்டாக்க வேண்டுமென்ற நிலைமையில்தான் நான் 5 கிரவுண்டுகள் வரையிலும் 1 சதவீதம் 'ஒன்பரசன்ட் ஆப் தி மார்க்கட் வேல்யூ ஆப் ஈச் அர்பன் லேண்ட்' என்ற முறையிலும், அதற்கு மேல் இருப்பவர்களுக்கு 3 சதவீதமாவது போட வேண்டுமென்ற எங்களுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தாலும்கூட, நகரத்திலுள்ள சொத்துக்களுக்கு உச்சவரம்பு கொண்டு வருவது கொள்கை ரீதியாக வரவேற்கத்தக்கதாகும். இது ஏற்கனவே நாம் நிறைவேற்றிய கொள்கையின் அடிப்படையிலே வந்திருக்கக்கூடியதால் இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த மசோதாவை ஏற்கனவே நாங்கள் வன்மையாகக் கண்டித்து இருக்கிறோம். வரி வேண்டாமென்று சொன்னவர்கள் இன்றைக்கு வரி போடுகிறார்கள். இதிலே ஒரு கிரவுண்ட் வரைக்கும் எக்ஸம்ப்ஷன் கொடுத்திருக்கிறார்கள். அமிஞ்சிக்கரையிலே ஒரு விலையாக இருக்கும், மவுண்ட் ரோடிலே ஒரு விலை இருக்கும். எனவே மொத்தமாக ஒரு கிரவுண்ட் என்று போட்டதினாலே—நான் ரெஸிடன்ஷியல்பர்ப்பஸஸ் அதாவது வியாபாரத்திற்காக வைத்திருக்கிறவர்களுக்கு—சலுகைகள் ஏற்படும், அது அவசியந்தானா என்பதை அரசாங்கம் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். ஒன்றரை கிரவுண்ட் ரெஸிடன்ஷியல் ஹவுஸ் ஆக இருந்தால் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற முறையிலே இது இருந்தால் நல்லது. இல்லாவிட்டால் மவுண்ட் ரோடிலே ஒன்றரை கிரவுண்ட் வைத்திருக் கிறவர்களுக்கு இது ஒரு பளுவாகத் தோன்றாது. ஆனால் நடுத்தர வகுப் பினர்கள், அரசாங்க ஊழியர்களாக இருக்கின்றவர்களுக்கு எக்ஸம்ப்ஷன் கிடையாது என்று சொன்னால், அது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அரசாங்கம் ஒரு கிரவுண்ட் என்று இருப்பதை ரெஸிடன்ஷியல் ஹவுஸ் என்ற முறையில் இருந்தால் ஒன்றரை கிரவுண்ட் வரை விதிவிலக்கு அளிக்கலாம். ஏனென்றால் டவுன் பிளானிங் ஆக்டிலே ஒன்றரை கிரவுண்ட்

இருந்தால்தான் வீடு கட்ட முடியும் என்று சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ஏன் வீடுகூட ஒன்றை கிரவுண்ட்தான் என்று சொன்னார்கள். போட்டால் எனக்காகப் போட்டுக் கொண்டார்கள் என்று சொல்வார்கள் என்று சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், நீங்கள் உங்களுக்காக அப்படிப் போடாவிட்டாலும் மற்றவர்களுக்காகப் போட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மசோதாவைப் பார்த்தால் கிளாஸ் 7-லே ரிட்டர்ன்ஸ் சப்மிட் பண்ண வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. யார் யார் என்ன என்ன சொத்து வைத்திருக்கிறார்கள் என்று அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. He can collect the information through his agents. அப்படி அவர்கள் கொடுக்க வில்லையென்றால் அதிகாரிகளே நேரிலே போய் ரிட்டர்ன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்கலாம். அப்படிச் செய்ய வழியில்லாமல் இதிலே பயங்கரமாகப் போட்டிருக்கிறார்கள். பெனல்டியைப் பொறுத்தவரையில் 40 (எ) கிளாசில் கடுமையாக போட்டிருக்கிறார்கள். ஏற்கனவே வரி போடுகிறார்கள், ஜனங்கள் கஷ்டப்பட்டு வரிக்கட்டத் தயாராகிறார்கள். ஆனால் அதற்கும் மேலாக பெனல்டி என்று போடுகிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த சட்டத்திலே அது கிடையாது. அதிகாரிகள் கேட்டால் கொடுக்காமல் இருக்கமாட்டார்கள். அதிகமாகக் கேட்டால்தான் கோர்ட்டுக்குப் போவார்கள். சாதாரணமாகக் கொடுத்துவிடுவார்கள், கொடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள். அப்படி இருக்கும்போழுது கொடுக்காவிட்டால் " not exceedng twice such amount of urban land tax" என்று பெனல்டி போடுவது சரியல்ல. (குறுக்கீடு) நாட் எக்ஸீடிங் என்று இருந்தாலும் கூட கட்டாயமாக அந்த அளவுக்குத்தான் போடுவார்கள். கார்ப்பரேஷன் ஆக்டிலே பெனல்டி கிடையாது. கேஸ் போட்டுதான் வாங்குகிறார்கள். எனவே, பெனல்டியை எடுத்து விடுவதுதான் நியாயமானது, தர்மமானது. சென்னையிலே உள்ள மக்கள் மட்டுமல்ல, மதுரை நகரத்து மக்களும் பாவம், இப்பொழுதுதான் கார்ப்பரேஷன் ஆக்கினார்கள் என்று அவர்கள் சந்தோஷத்திலே இருந்தார்கள். கார்ப்பரேஷன் ஆன சந்தோஷத்தை இந்த வரி கெடுத்துவிடும். இந்த நிலையிலே பெனல்டி இருப்பது அவசியமா என்பதைப் பார்க்க வேண்டும். அதைக்கூட 40-எக்கருக்குப் பிறகு போடுவது ஏன் என்று புரியவில்லை. போரண்ட் ஆக்டிலே

" Power to enter upon land—The Commissioner, the Assistant Commissioner, the Urban Land Tax Officer, or any other Officer empowered under this Act or any person acting under the orders of any such officer, may enter upon any urban land with such other officers and persons as he considers necessary and make a survey and take measurements thereof or do any other Act which he considers necessary for carrying out the purposes of this Act."

இதற்குப்பிறகு எப்படி பெனால்டி வருகிறது என்று புரியவில்லை. செக்ஷன் 7-க்குப் பிறகுதான் வர வேண்டும். செக்ஷன் 40-க்குப் பிறகு வருவது Failure to submit the return என்று நினைக்கிறேன். It sounds a little bit incognent தொடர்பிருக்கு சரியாக வரவில்லை, எனவே, சட்ட இலாக்காவையும், சம்பந்தப்பட்ட இலாக்காக்களையும் கேட்டு, முதலிலே 40-எ வேண்டாம், பெனல்டியையே எடுத்துவிடுவது வரவேற்கத் தக்கது. இல்லையென்றால் போட்ட இடம் சரியா என்பதையும், அங்கே போடுவதா, இங்கே போடுவதா என்பதையும் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



Exceeding twice the amount. என்பது ரொம்ப தவறு. அதை ரிகன்சிடர் செய்ய வேண்டும்.

29-ஏயில் எக்செம்ப்ஷனைப்பற்றி முதலிலேயே சொன்னேன், கனம் முதலமைச்சரவர்களிடம். ஒரு கிரவுண்டுக்குத் தவிர வேறு யாருக்கும் எக்செம்ப்ஷன் இல்லை என்று சொல்கிறார்கள். செரிடபிள் இன்ஸ்டிடியூஷன்ஸ் அண்ட் டெம்பிள்ஸ் என்பவர் வருகிறது. என்னுடைய தொகுதியிலே திரௌபதி அம்மன் கோயில் மைலாப்பூரிலே இருக்கிறது. குறைந்தது 10,000 ரூபாய் மார்க்கெட் வேல்யூ போடக்கூடிய அளவில் இருக்கும். சுற்றியிருக்கும் கிரவுண்ட் வேறு, அதற்கும் சேர்த்துப் போடுவார்கள். அங்கே தீ மிதிப்பு விழா என்று வைத்திருக்கிறார்கள். கற்பூரம் கொளுத்துவதற்கே கஷ்டமாக இருக்கிறது. கற்பூரத்திற்கே காசில்லாத நிலையில் நிலத்திற்கு வரி கொடுப்பது என்று வேறு செய்துவிட்டால் கோயிலை இழுத்து மூட வேண்டியிருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: விதிவிலக்குகளைப்பற்றி நான் நிதிநிலை உரையிலேயே சொன்னேன். அறநிலையத் துறைக் கோயில்கள் விடுபடும் என்று. பரிசீலித்த பிறகு, மிகக் குறைவாக, 13, 14 இடங்கள் சென்னையில் இருக்கிறது. விதிவிலக்குகளைப்பற்றி இப்பொழுது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 13-ஆக இருந்தாலும், எக்செம்ஷனிலே நீங்கள் விட முடியாது. எக்செம்ப்ஷன் கொடுத்திலே ஒரு கிரவுண்ட் வரைக்கும் தான் அதிகாரம் . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ரெயின் ஆக்டிலே என்ன இருக்கிறதோ அதைத் தொடவில்லை. எக்செம்ப்ஷன் கொடுக்க, பெற்றுக்கொண்டு கொடுக்க ரெயின் ஆக்டிலே இடம் இருக்கிறது. அதைத் தொடவில்லை. எனவே அந்த அதிகாரத்தை எடுக்கவில்லை, அது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதை எடுக்கவில்லை என்றால் நான் வரவேற்கிறேன். மீண்டும் கோயில்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அந்த விதிவிலக்குகளை வைத்திருக்கிறீர்கள் என்றால், நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதிலே பார்க்கும்போது Exemption for only one ground என்று இருக்கிறது. சட்டத்தைப் படிக்க நேரமே போதவில்லை, சட்டத்தை ஒழுங்காகப் படித்துத் திருத்தம் கொடுக்க நேரமே போதாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எப்படியிருந்தாலும் திரௌபதி அம்மன் கோயில் தீயைத் தாராளமாக மிதிக்கலாம்!

திருமதி த. ந. அனந்தநாயகி: இதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதே மாதிரி பல கோயில்கள் இருக்கின்றன. அதையும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் படித்துப் பார்த்து அமெண்மெண்ட் கொடுக்க டைமே இல்லை, படித்துப், பார்க்க டைமே இல்லை. ஆற அமர யோசித்துச் செய்தால் நல்லது. அவசரப்பட வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பொதுவாக இந்தச் சட்டத்தை அங்கத்தினர்கள் வரவேற்றார்கள், அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராட்டியிருக்கிறார்கள், அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு கிரவுண்டிற்கு விதிவிலக்கு அளித்திருப்பதை 1½ கிரவுண்டிற்கு ஆக்க வேண்டுமென்று மிகவும் உருக்கத்தோடு மீண்டும் கேட்டார்கள். ஒரு கிரவுண்டிற்குக் கொடுப்பதாக அரசு ஏற்கனவே முடிவு செய்தது. முதலமைச்சரவர்கள் முன்கூட்டியே பதில் சொன்னார்கள். இப்பொழுது நாங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதால் ஒரு கிரவுண்ட் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருப்பதால் 61,000 பேர்களுக்கு அனுகூலம் கிடைத்துள்ளது. இந்த விதிவிலக்கு இல்லாதபோது எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் ஒரு கிரவுண்டிற்கு என்று கொடுக்கும்பொழுது அதை ஒன்றரை கிரவுண்டாக ஆக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஒன்றரை கிரவுண்டிற்குக் கொடுத்தால் அதை ஏன் இரண்டாக ஆக்கக்கூடாது என்று கேட்பார்கள். எனவே கேட்பதில் தவறு இல்லை, ஆனால் ஒத்துக்கொள்வதிலேதான் நியாயத்தைப் பார்க்க வேண்டும். எனவே ஒரு கிரவுண்டிற்கு மேல் கொடுப்பது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றபடி மற்ற அங்கத்தினர்களின் யோசனைகளை கிளாஸ் வைஸாக திருத்தங்கள் வரும்பொழுது விரிவாகச் சொல்லலாம்.

விதிவிலக்குகளைப்பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். விதிவிலக்குகளைப்பற்றி ஏற்கனவே இருக்கும் சட்டத்தை நாங்கள் தொடவே இல்லை. விதிவிலக்குகளுக்கான அதிகாரம் அரசுக்கே இருக்கட்டும் என்று வைத்திருக்கிறோம். அதிலே எந்த பயமும் இல்லை. விதிவிலக்குகளுக்கு மேற்கொண்டு நியாயமாக இருந்தால் அரசாங்கம் பரிசீலித்து விதிவிலக்கு கொடுக்கும். மற்றப் பகுதிகளுக்கு விரிவாக்குவதைப் பற்றிச் சொன்னார்கள். மற்ற நகரங்களுக்கு விரிவாக்கி வருவாயைப் பெருக்குவதால் நகராட்சி மன்றங்களுக்கும் மற்றவைகளுக்கும் உதவி செய்யவே தவிர வேறொன்றுமில்லை. ஆகவே, இந்தச் சட்டம் நியாயமான சட்டம், இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is :—

"That The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clause 2 to 9 were put and carried.





CLAUSE 10

MR. DEPUTY SPEAKER : The question is :—

"That Clause 10 do stand part of the Bill".

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Now that the Hon. Minister has given an assurance that they are going to retain the exemption clause, I do not propose to move my amendment.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I move the amendment standing in my names.

"In the proposed new section 29-A of the Principal Act, for the words ' total extent of urban land held by him does not exceed one ground ' substitute the words ' the market value of urban land held by him does not exceed Rs. 15,000 '."

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, I welcome this exemption. I would also remind the Hon. Minister for Land Revenue that this agitation is not a new agitation at all even when the Urban Land Tax was thought of, there was a terrible agitation in the City of Madras. There had been instances of people going to Court and Court decisions were obtained. It is wrong to say that there were no representations before this Government. There was representation. But fortunately for us today I should thank the Government for thinking about an exemption limit.

First of all the exemption limit should be a practicable exemption limit. Sir, the Chief Minister also knows that in Esplanade the value of one ground is Rs. 50,000. In certain parts of Mount Road the value of one ground is about Rs. 70,000 or 80,000. In West Mambalam the value of one ground is Rs. 5,000 to 6,000. In T. Nagar the value of one ground ranges from Rs. 12,000 to 20,000. To exempt all classes of land, one ground in all areas is not equity. I think there is a lacuna. It is not right and proper. I am sure once the Government realise that it is not proper, they will realise it, they will accept my amendment. My amendment says, instead of giving exemption with reference to the extent of land, you please give exemption with reference to the value. Suppose if I hold 4 grounds and it is assessed at a valuation of Rs. 40,000, give me exemption for Rs. 15,000 and you tax for the rest Rs. 25,000. That is what I am refer. My amendment only seeks justice. The justice is this. Whenever the land value is high, the exemption should be low and wherever the land value is low, the exemption should be high. I am sure the Government will accept my amendment. Whether it is Rs. 12,000 or 15,000, it does not matter. But the exemption should be based on the market value of the land and not on the extent of land. Because in Madurai the value may be different. In Tiruchirappalli the

vaue may be different. In Madras the value may be different. Even in Madras the value in Mount Road, Saidapet and Tondiarpet will be different.

So, we are only requesting the Government to make it a practical proposition by accepting the market value and not the extent of the area. In this connection, I also wish to bring to the notice of the Government that various representations been published in the newspapers about this aspect of the matter. It is not my originality at all and I have not invented it. It has been published many times in the letters to the editor column of the newspapers in the City of Madras that the exemption should be on the value of the property and not on the extent of the land. I am sure the Government will accept it because it is the most reasoable amendment that has ever been moved in this House.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் நிலத்தின் மதிப்பீட்டை வைத்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமே தவிர, பரப்பளவை வைத்து விதிவிலக்கு அளிக்கக்கூடாது என்று விவாதித்தார்கள். அது பார்ப்பதற்கு நியாயமாகக் கூடப்படும். ஆனால் அது நிர்வாக வசதிக்குச் சரிப்பட்டு வராது. அதனால் நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கும், வரி கொடுப்பவர்களுக்கும் இடையே அடிக்கடி தொல்லைகள் ஏற்படும். ஒரு ஏக்கர் நிலம் மவுண்ட் ரோட்டில் இருந்தால் ஒரு விலை, மாம்பலத்தில் இருந்தால் வேறு விலையாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் அது நிர்வாகத்திற்கு உகந்ததாக இருக்காது என்பதால்தான் நாங்கள் முதலிலேயே இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். ஒரு கிரவுண்டுக்கு விதிவிலக்கு என்ற முறையில் நிலப்பரப்பை வைத்துத்தான் விதிவிலக்கு கொடுக்க முடியும். மார்க்கெட் வால்யூவை வைத்து 15,000 ரூபாய்க்கு மேல் மதிப்புள்ளதற்குத்தான் வரி போட வேண்மென்பதை ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை, அந்தத் திருத்தம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, in any case the administration has to evaluate the value and levy the urban land tax. Suppose there are four grounds. One ground will be exempted and in the case of the other three grounds, the administration has to evaluate the value of the land and what is the difficulty ? My limited brain does not allow me . . .

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் மவுண்ட் ரோட்டில் இருக்கும் ஒரு இடத்திற்கும் வேறு சைதாப்பேட்டை போன்ற இடத்தில் இருக்கும் இடத்திற்கும் இருக்கின்ற கிரவுண்ட் மதிப்பைப் பற்றிச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் நிர்வாக வசதிக்காக இப்படித்தான் செய்ய முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். மவுண்ட் ரோடிலுள்ள இடத்தைப் பொறுத்து நான் ஒன்று கூற விரும்புகிறேன் இப்போது மாநகராட்சி மன்றம் வரி வசூலிக்கும்போது மவுண்ட் ரோட்டிலுள்ள கட்டிடங்களுக்கு அதிகமான வரி நிச்சயமாக வசூலிக்கப்படும் என்று





தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே ஒரு கிரவுண்ட் இருந்தாலும் கட்டி இருக்கும் கட்டடங்கள், கடைகள் என்ற முறையில் பார்த்து அதிகமான வரிகள் விதிக்கப்பட இருக்கும் காரணத்தால் அந்த அளவில் இது சரிக்கட்டப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சைதாப்பேட்டையில் ஒரு கிரவுண்ட் விலை குறைவாக இருக்கும், மவுண்ட் ரோடில் அதிகமாக இருக்கும் என்று கூறினார்கள். அதே சைதாப்பேட்டையில் ஒரு பெரிய மாளிகை கட்டி வைத்திருக்கும் ஒருவர் நிலத்தின் மதிப்பு அதிகமாக இருக்கும், பக்கத்தில் இருக்கும் ஏழை ஒரு கிரவுண்ட் வைத்திருந் தால் அதற்கு அதே மதிப்பு இருக்காது. ஆகவே, அந்த ஏழையும் அதே அளவுக்கு வரி கட்ட வேண்டிய அவசியம் வந்துவிடும். இதை எல்லாம் மனத்தில் கொண்டுதான் ஒரு கிரவுண்ட் வைத்திருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளித்து விடலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு சிறிய அனுபவத்தை வைத்துக் கொண்டு பேசினாலும் சரி அல்லது வேறு எதைச் சொன்னாலும் சரி, மார்க்கட் வால்யூ என்று வைப்பது நிர்வாகத்திற்குச் சவுகரியமாக இருக்காது என்று கருதித்தான் ஒரு கிரவுண்டுக்கு விதிவிலக்கு என்று அரசு முடிவு செய்திருக்கிறது. உறுப்பினர் அவர்கள் திருத்தத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M SUBRAMANIAM : Sir, I am not arguing it as a matter of prestige and I am agreeable to withdraw my amendment. The Hon. Chief Minister has stated that in the case of the buildings in Mount Road, the Corporation tax is high. It is true and that is because the tax is levied on the rental value and so, the tax will be high. I think it is fair that the middle class people who live in small residential areas should not be imposed the same kind of urban land tax as is levied in the case of buildings situated in Mount Road. I will quote another instance. The value of a building on a three-ground area in Advar would be less than the value of a building in Mount Road. So, I once again request the Government to accept my amendment. If it is not acceptable, I am not pressing it at all. In view of the lot of representations made by the people of the Madras City through the Press, I have moved the amendment. If the Government are amenable to the public opinion, let them accept it and if not, I am not worried.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

Clause 10 was put and carried.

பிரிவு

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:* பேரவை முன்னுள்ள கேள்வி "பிரிவு 11 சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 11-வது ஷரத்திலே ஒரு திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன். அரசாங்கத் திருத்தமாக இந்த அவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெனல்டி க்ளாஸ் பற்றி கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுவதை ஏற்றுக் கொள்ளவில்லையே என்று சொன்னார்கள். அந்த வகையில் அவர்கள் கருத்தை ஒட்டி முதலமைச்சர் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வர ஒத்துக் கொண்டார்கள். அதை அரசாங்கத் திருத்தமாக பிரேரேபிக்கிறேன்.

'Penalty not exceeding twice such amount of urban land tax' என்று இருப்பதை 'Penalty not exceeding one-half of such amount of urban land tax' என்று மாற்றிக் கொள்ளவேண்டும். மொத்த வரியில் பாதியாகக் குறைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெனல்டி க்ளாஸ் போட்டிருப்பதற்கே காரணம் ரிட்டர்ன்ஸ் கொடுக்காவிட்டால் ஏற்கெனவே இருந்த சட்டத்தின்படி 500 ரூபாய் வரி கட்ட வேண்டியவர்கள் ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டியிருக்கும். இப்போது அரசாங்கம் பிரேரேபித்து இருக்கும் திருத்தத்தினால் 500 ரூபாய் வரி கட்ட வேண்டியவர்கள் பெனல்டியாக 250 ரூபாய் கட்டினால் போதும். இந்த அளவு மாக்சிமம் ஆயிரம் ரூபாய் வரை அபராதம் போடலாம் என்றால், ஆயிரம் ரூபாயையும் வரியாகப் போட்டுவிட மாட்டார்கள். நீதிமன்றத்திலே போடுவது அவர்களுக்குத் தெரியும். ஐந்து ரூபாய் கூடப் போடலாம். ஆகவே, மாக்சிமம் என்று அந்த அளவுக்கு நிர்ணயித்திருந்தாலும் போடும்போது அந்த அளவுக்குப் போட மாட்டார்கள் என்று கருதுகிறேன். இந்தத் திருத்தத்தை அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, we are thankful to the Government for their acceptance of the proposal to reduce the penalty. But I want to make one submission. In the case of sales tax merchants submit returns. In the case of income-tax, people with certain income submit returns. But so far as the urban land tax is concerned, lakhs of people have to submit returns and some of them may not know how to file returns. It is not an easy thing for the ignorant people to submit returns. In the case of the property tax, the corporation does not ask for return but they send only notices. That is very dangerous. It is a very serious matter. How can the house owners submit a return like this? There are tax gatherers who come and collect the tax. Don't put the onues to submit returns on the poor house owners. There are ever so many ignorant people and they will have to be going to the brokers, or going to the officer every now and then. So I request the Hon. Minister not to impose any obligation on the house owners to submit returns. It is a very difficult thing. The house owner cannot do this.



THIRUMATHI T. N. ANANDANAYAKI: I once again appeal to the Hon. Minister. In the present Act, there is no penalty. There are ever so many ignorant land ladies and landlords. They do not knew all the provisions of the Act. Even for income-tax return and sale-tax return they have to rush to an auditor. At present the department is working all right and collecting the tax correctly. There is no difficulty. When such is the case, why impose this penalty provision? Why impose this onus of submitting returns on the house owners? I request that thts provision many be deleted.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய ரிட்டர்ன்ஸ் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டுவிடும், அதற்காக இந்த அபராதம் விதிக்கக் கூடாது என்று சொன்னார்கள். மற்ற வரிகளில் இல்லையே, இதிலே போடுகிறீர்களே என்று சொன்னார்கள். ஒன்றும் தெரியாதவர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒன்றும் தெரியாத மக்கள் என்று நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. எல்லா விவரங்களும் தெரிந்தவர்கள்தான் நாட்டில் இருக்கிறார்கள். சென்னை நகரில் உள்ளவர்களுக்கே விவரம் தெரியவில்லை என்று சொன்னால் கிராமங்களில் உள்ளவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும்.

முப்பது நாட்கள் காலவரம்பு வைத்திருக்கிறோம். அதற்குள் ரிட்டர்ன்ஸ் கொடுக்க வேண்டும். இது பிரேரேபிக்கப்பட்டு முப்பது நாட்கள் என்று கால வரை வைத்திருக்கிறோம். அதற்குள் கொடுக்க வேண்டும், தவறினால் அவர்கள் அஸெஸ்மெண்ட் பாதி வரையில் பெனல்டி போடலாம் என்று புதிதாக சட்டம் கொண்டு வருகிறோம். இதை வைத்துக்கொண்டு மற்றவர்களைக் கொடுமைப் படுத்த வேண்டும் அல்லது இதை வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்கு வருவாய் தேட வேண்டும் என்பதல்ல, கொடுக்க வேண்டிய ரிட்டர்ன்சைக் கொடுக்க வேண்டும். ஒருவருக்கு சைதாப்பேட்டையில் நிலம் இருக்கும் மைலாப்பூரிலும் இருக்கலாம். மற்றப் பகுதிகளிலும் இருக்கலாம். ஆகவே எங்கெங்கு இருக்கின்றன என்பதை முதலிலேயே எழுதிக் கொடுத்துவிட வேண்டும். அப்படியில்லாவிடில் அதிகாரிகள் போய்ப் பார்த்து எங்கெங்கே இருக்கிறது என்று ஒவ்வொரு இடமாக தேடிப் பிடித்து இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திற்குப் பிறகு வரி போட்டு வசூலிக்க வேண்டியிருக்கும். அப்போது முன்பே ஏன் கேட்கவில்லை என்று கேட்கக்கூடிய நிலை வரும். ஆக, கொடுத்ததை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது நியாயம் அல்ல.

முதலில் நிலம் எங்கெங்கே இருக்கின்றன என அதையெல்லாம் சேர்த்து மொத்தமாகச் சொல்ல வேண்டும் இவ்வளவு இருக்கிறது என்று. அதைச் சொல்லத் தவறுகிறவர்களுக்குத்தான் இந்த அபராதம். ஆகவே அதில் ஒன்றும் தவறு இல்லை. அப்படி அபராதம் என்று இருந்தால்தான் ஒழுங்காக அனுப்புவார்கள். ஆகவே அதில் தவறு ஒன்றும் இல்லை.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

[1971 ஜூலை 13

**Clause 11, as amended, was put and carried.**

Clauses 12 and 13 were put and carried.

Clause 1 the Enacting Formula and the Long Title wert put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move—

"that the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971), as amended be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed into law.

THIRU R. PONNAPPA NADAR: Sir, the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Bill, 1971 may be taken up tomorrow. We have no time to read the Bill and to give amendments.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நாளைபதினம் விற்பனை வரி மானியத்தின் மீதான விவாதம் வருகிறது. அதைத் தொடர்ந்து இதையும் சேர்த்து வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 10-30 மணி அளவில் கூடும்.*

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

### (6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

155. Notification issued with G.O. Ms. 1547, Public (Service-A), dated the 4th May 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Superintendent Service Home at Cuddalore and Thanjavur in Women's Welfare Department within the Commission's purview [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.)

156. Notification issued with G.O. Ms. No. 421, Public (Services-A), dated the 16th February 1971 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulation, 1954, relating to exclusion of the Post of Assistant Secretary in the Governor's Secretariat from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.)



1971 ஜூலை 13]

### *B. Reports, Notifications and Other Papers.*

@ 121. The Tamil Nadu Urban Land Tax Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971).

@ 122. The Tamil Nadu Agricultural Income-Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971).

@ 123. The Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971).

@ 124. The Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 (L.A. Bill No. 21 of 1971).

@ 125. Annexure to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land), Amendment Bill, 1971 (L.A. Bill No. 16 of 1971).

£ 126. Annexure to the Tamil Nadu Abkari (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 20 of 1971).

£ 127. Annexure to the Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill 1971 (L.A. Bill No. 21 of 1971).

& 128. Annexure to the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 18 of 1971).

& 129. Annexure to the Tamil Nadu Agricultural Income-Tax (Amendment) Bill, 1971 (L.A. Bill No. 19 of 1971).

### இணைப்பு.

*[109-ம் பக்கத்தில் 213-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]*

*கிராம சமுதாயத்தினருக்கு தூ நீர் வழங்கல், தொடக்கப் பள்ளிக்கான கட்டிடங்கள், தெரு விளக்குகள், மருத்தகங்கள், இணைப்புச் சாலைகள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கும் வசதிகளுக்கும், வகை செய்வதற்காக இரயில்வே செல் தீர்வை நிதியில் உள்ள பணம் பயன்படுத்தப்பட வேண்டும். கிராமங்களுக்கு தூ நீர் வழங்கும் வேலைத் திட்டங்களுக்கு இந்நிதியில் ஐம்பது சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும். முதன்மை வரிசையில் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:*

1. தூ நீர் வழங்கல்.
2. தெரு விளக்கு.
3. தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள்.
4. சேய் நல-மகப்பேறு நிலையங்களுக்கான கட்டிடங்கள்.
5. மருத்தகங்களுக்கான கட்டிடங்கள்.
6. இணைப்புச் சாலைகள் போடுதல்.

---

@ Despatched to Members on 11th July 1971.
£ Latd on the Table of the House on 12th July 1971.

[1971 ஜூலை 13

மேற்சொன்ன வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நேரிடையாகவோ ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவோ பொது மக்களிடமிருந்து இணையான தொகை வசூலிக்காமலேயே ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இந்தப் பணத்தை அந்த மாவட்டத்திலேயே செலவு செய்யலாம்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், மாவட்ட வளர்ச்சிக் குழு முடிவெடுத்தபடி, மருத்துவக் கல்லூரி போன்ற ஏனைய காரியங்களுக்காக நிதி பயன்படுத்தப்படலாம்.

1970-வது ஆண்டு ஜூன் மாதம் அரசு மேற்கண்டவாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணைகளைப் பிறப்பித்து, அவர்களின் செயற் குறிப்புகள் அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இராமநாதபுரம், தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார்கள். அவைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

The money available under the Railway Cess Fund should be used for the provision of basic needs and amenities like protected water supply, buildings for Elementary Schools, street lighting, Dispensary and Link roads o the Rural Community. The provision of protected water supply to the village shoud constitute first priority on this money and 50 per cent of the funds should be earmarked for this purpose. The order of priority is as follows :

1. Protected water supply;
2. Street lighting;
3. Buildings for Elementary Schools;
4. Buildings for Child Welfare and Maternity Centres.
5. Buildings for Dispensaries; and
6. Laying of link roads.

The money available in each district may be spent for the provision of the above amenities in that district without insisting on matching contribution from the public either direct or through Panchayats or Panchayat Unions.

In the case of Salem district, the fund may be utilised for other purpose like Medical College, etc., as decided by the District Development Council.

Orders have been accordingly issued in June, 1970 to all Collectors and they have been requested to submit necessary proposals to Government for approval. The Collectors of Ramanathapuram, South Arcot have submitted proposals to Government and they are under examination.

---

£ Laid on the Table of the House on 12th July 1971.
& Despatched to Members on 12th July 1971.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

### புதன்கிழமை, 1971 ஜூலை 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12—7—1971 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து தள்ளிப்போடப்பட்ட வினா எண். 204 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது.

### நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகள்

*204 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆம்.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று விடையளித்தார்கள். நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும்போது, எந்த எந்த இடங்களில் உள்ள அணைகளைப் புதுப்பிக்க அரசுக்கு எண்ணம் இருக்கிறது? திருப்பூர் நகரத்திலிருக்கும், பெரியாண்டிப் பாளையத்தின் பக்கத்திலும், வெள்ளாளபாளையத்தின் பக்கத்திலும் இருக்கும் அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நொய்யலாற்றின் குறுக்கே உள்ள 23 அணைகள் சுமார் 15,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளித்துக் கொண்டுள்ளன. அவற்றில் 12 அணைகளுக்கு பராமத்து வேலைகள் செய்யப்பட்டன. மீதியுள்ள அணைகள் நல்ல நிலையில் உள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அணைக்கட்டுகளும் பராமத்து செய்யப்படும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நொய்யல் ஆற்றின் அணைக்கட்டுகளைப் புதுப்பிக்கும் திட்டம் இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நொய்யல் ஆற்றில் முழு அளவுக்கு நீர் வந்துகொண்டிருந்த நிலை இப்பொழுது மாறி, நீர் குறைந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம்? மேலே நீர் தடுக்கப்பட்டுத் திருப்பிவிடப்படுகிறதென்று சொல்லுகிறார்களே, அதுபற்றி அரசு ஏதேனும் ஆராய்ச்சி செய்திருக்கிறதா? நொய்யல் ஆற்றில் வழக்கம்போல் நீர் வரக்கூடிய ஏற்பாடு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 25 அணைகளில் மராமத்து பற்றி நான் முதலில் விடை அளித்தேன். நொய்யல் ஆற்றின் தண்ணீர் மேலே திருப்பிவிடப்படுகிறதா என்பதுபற்றிய விவரம் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** நொய்யல் ஆற்றில் பரமத்தி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உங்காம்பாளையம் என்கிற இடத்தில் ஒரு சிறு அணை கட்டி, அங்குள்ள பகுதியில் பாசன வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தினிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நொய்யல் ஆற்றில் இப்பொழுது போதுமான அளவு தண்ணீர் வரவில்லை என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களுடைய புகார் ஆகும். தண்ணீரின் அளவு போதுமானதாக இருந்தால் அணை கட்ட ஏற்பாடு செய்யப்படும். இப்பொழுதிருக்கும் குறிப்புகளின்படி, நொய்யல் ஆற்றில் வரும் தண்ணீர் போதாது என்று விவசாயிகள் இப்பொழுது சொல்லி வருகிறார்கள்.

**திரு. என். மருதாசலம் :** நொய்யல் ஆற்றில் பேரூருக்கருகாமையில் சோளந்தரம் மூலையில் ஒரு பாலம் இருக்கிறது. அது வெள்ளப் பெருக்கினால் இடிந்து சேதம் அடைந்திருக்கிறது. அதேபோன்று சுண்டைக்காமுத்தூர் வழியில் நொய்யல் ஆற்றின் குறுக்கே கட்டிய பாலமும் இடிந்து சேதமடைந்திருக்கிறது. அந்த இரண்டு பாலங்களையும் மராமத்து செய்து புதுப்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியின் மூலமாக இந்தப் பிரச்சினை இப்பொழுது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுவார்கள்.

**திரு. கே. என். குமாரசாமி :** நொய்யல் ஆற்றின் மேற்பகுதியில் சித்திரச்சாவடி அணையைத் தூக்கிக் கட்டியதன் காரணமாக, கீழ் மடைப் பகுதிகளில் தண்ணீர் வருவதே கிடையாது. 15 ஆண்டுகளாகத் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, கீழ்மடைப் பகுதிக்குத் தண்ணீர் வருவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற புகாரை எழுதி அனுப்பினால் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** லோயர் பவானிப் பிராஜெக்டின் கழிவு நீரும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பாசனத்தின் கழிவு நீரும் நொய்யல் ஆற்றில் வரும் என்று எதிர்பார்க்கப்படுவதால், உங்காம்பாளையம் அணைக்கட்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்வதுபற்றி அனுதாபத்துடன் கவனிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூலக் கேள்விக்கு தொடர்புடையதாக இல்லை. ஆகவே, பதில் சொல்ல இயலாமலிருக்கிறேன்.



## *Patients under Employees State Insurance Scheme.*

* 228. *Q.*—THIRU M. SURENDRAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether patients entitled for treatment in E.S.I. hospitals are at times sent to Government Hospitals; and

(b) if so, whether there is any proposal under the consideration of the Government to make provision for the purchase of medicines which are not available in the Government Hospitals by the patients and for their reimbursement later ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் நோயாளிகள் அரசு மத்துவமனைகளில் சிகிச்சை பெறும்போது, அம்மருத்துவ மனைகளில் இல்லாத மருந்துகளை தலைமை மருத்துவ அதிகாரிகளே வெளியிலிருந்து வாங்கி சிகிச்சை செய்வதற்கும், சிற்சில சமயங்களில் நோயாளிகள் அம்மருந்துகளை வெளியில் வாங்க நேரிடும்போது அச்செலவை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் தக்க ஏற்பாடுகள் முன்னரே செய்யப்பட்டுள்ளன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் உள்ள இடங்களில் அங்கே போதுமான வசதி இல்லையென்றால், நோயாளிகள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவார்களா? குறிப்பாக, மதுரை போன்ற இடங்களில் உள்ள ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியில் போதுமான வசதி இல்லாத போது நோயாளிகள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

### தீப்பெட்டித் தொழில்

* 229 வினா—**திரு. என். கே. பழனிசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீப்பெட்டிகள் தயார் செய்வதற்குப் பயன்படும் திக்குச்சி மெழுகு, நீலநிறத் தாள்கள் இவைகளின் பற்றாக்குறை காரணமாக தீப்பெட்டி தயாரிக்கும் கைத்தொழில் நெருக்கடி நிலையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், இந்த நெருக்கடியைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) தீப்பெட்டி செய்வதில் பயன்படும் மெல்லிய நீல நிறத்தாள், பொதுச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கிறது. "திக்குச்சி மெழுகு" வழங்குவதில்தான் சிறிது பற்றாக்குறை இருந்தது. மற்றபடி இத்தொழிலில் கஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

(இ) நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட விவரம்—

(1) "திக்குச்சி மெழுகு" கிடைப்பதிலுள்ள பற்றாக்குறையைப் போக்குவதற்கு வேண்டி, 500 மெட்ரிக் டன்கள் மெழுகை, இம்மாநிலத்திற்கு வழங்குமாறு இந்திய அரசை இவ்வரசு கேட்டுள்ளது.

[1971 ஜூலை 14

(2) சென்னையிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலையினர் 'சிலாக்' மெழுகை உடனடியாக வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதன்படி இந்திய எண்ணெய்க் கார்ப்பரேஷன், தீக்குச்சி செய்யும் தொழிற் பிரிவுகளுக்கு 200 மெட்ரிக் டன் 'சிலாக்' மெழுகை வழங்கியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு கொடுத்துள்ள அளவு மெழுகு இப்பொழுது போதுமா? நாம் ஏற்கனவே கேட்ட அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசு மீண்டும் வற்புறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய தேவை சுமார் 3,000 மெட்ரிக் டன். அதில் ஓரளவு தந்திருக்கிறார்கள். மேலும் தருவதற்கு வற்புறுத்தி வருகிறோம்.

திரு. கா. காளிமுத்து: தீக்குச்சி தயாரிப்பதற்குத் தேவையான மென் மரங்களை வளர்க்கும்படி வனத்துறை இயக்குநரை அரசு கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மெழுகுப் பற்றாக்குறை இருக்கிறது. மரத்திற்குப் பற்றாக்குறை இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, was there any proposal to float a chemical manufacturing company essential for the manufacture of matches in Tenkasi under the co-operative sector and whether it was given up?

THE HON. THIRU S. MADHAVAN: If the hon. Member refers to Pottasium chloride factory, it is being taken up under the Government Corporation.

MR. SPEAKER: The Hon. Minister has answered it.

THIRU K. M. SUBRAMANIAM: I am sorry. It is Sivakasi. The proposal was under the co-operative sector and I am told it was given up.

MR. SPEAKER: Tenkasi or Sivakasi?

திரு. பெ. மலைச்சாமி: தீப்பெட்டியின் விலை சற்று உயர்வாக இருப்பதாகச் சொல்லுகிறீர்களே, அதனால் தீப்பெட்டியின் தரத்தையும் பிரித்து அதற்கேற்ற வாறு அரசே விலையை நிர்ணயிக்க உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. கே. எ. வகாப்: இப்பொழுது தீக்குச்சி தயாரிப்பதற்காக வாங்கப் பட்டிருக்கிற இந்தப் பொருள்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படுகின்றனவா? அப்படியிருந்தும், தொழில் கூட்டுறவு சங்கங்கள் நல்ல லாபத்தில் நடைபெறாமல், 'பண்டு ரோல் லிஸ்ட'த்தினால் பலவிதமான கேடுகள் வருவது அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்க அரசு முனையுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பொழுது நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. அவர் களுக்கு இருக்கும் பிரச்சினையெல்லாம், விற்பனைச் சந்தையைத் தேடுவதுதான். நம்முடைய அரசாங்கம் அதில் தலையிட்டு, அரசு சார்பில் ஒரு அலுவலரை



1971 ஜூலை 14]

அமைத்து, அவர் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று தீப்பெட்டிக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் தீப்பெட்டிகளுக்கு நல்ல சந்தைகளைப் பார்த்து ஏற்பாடு செய்கிறார்கள்.

THIRU K.S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister for Industries whether the hand-made match manufacturing factory at Hosur is working properly and what amount of financial aid the Government are giving to it?

THE HON. THIRU S. MADHAVAN: The hon. Member may put a separate question.

*Co-operative Tea Factories*

* 230 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Co-operative Tea Factories in the State have earned profits during 1970–71;

(b) if so, the details thereof; and

(c) the steps taken to maintain the earning capacities of the factories?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) எட்டு தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், 1970-71-ல் ரூ. 6,35,437 லாபம் பெற்றுள்ளன.

(உ) நல்ல உரம் சேர்த்து தேயிலை நடுவதில் நவீன முறைகளைக் கையாளுவது, தேயிலைப் பொட்டலங்கள் செய்து அவைகளைச் சிறப்பு அங்காடிகள் மற்றும் இதர துறைகள் மூலமாக விற்பனை செய்வது, குன்னூரில் தேயிலையை இருப்பு வைக்க கிடங்கு ஒன்று கட்டுவது, இவற்றிற்குத் தேவை யான ஊழியர்களை நியமிப்பது ஆகிய நடவடிக்கைகள் மூலமாக தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் லாபத்தைக் கூட்டுவதற்கு முயற்சிகள் நடக்கின்றன

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, நீலகிரியில் பொதுவாக எத்தனை தேயிலைக் கோவாபரேடிவ் தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? எந்தெந்த இடங்களில் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இப்போது 8 தொழிற்சாலைகள் இருக்கின்றன. மேலும் 2 தொழிற் சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று முயற்சி செய்தோம். அதிலே மத்திய அரசு டீ போர்டு மூலமாகக் கொடுக்கும் கடனுக்கு வட்டி விகிதம் எப்படி என்ற பிரச்னை நீண்டகாலமாக இருந்து வருகிறது. அதற்கு ஓரளவுக்குப் பரிகாரம் காணப்பட்டு, புதிய தொழிற்சாலை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக் கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், இந்த கோவாபரேடிவ் துறையில் இருக்கும் தேயிலை உற்பத்தித் தொழிற்சாலையை இன்னும் அதிக லாபம் கிடைக்கும் அளவுக்கு, அதாவது தனியார் துறையில் இருப்பவர்கள் பெறும் லாபத்தைக் காட்டிலும் அதிகமாகப் பெறும் அளவுக்கு, விரிவு செய்ய அரசாங்கம் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது இல்லை. சிறிய சிறிய அளவில் தேயிலை உற்பத்தி செய்யும் தோட்டச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய தேயிலையை பாக்டரிக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்களே ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து லாபம் பெறவேண்டுமென்ற அடிப்படையில் துவங்கப்பட்டது. லாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கொள்ள முடியாது.

**திரு. சோ. கருணைநாதன் :** தலைவரவர்களே, நாம் தயாரிக்கும் தேயிலை, கேரள மாநிலத்தில்தான் சந்தை பிடித்துக்கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சந்தையை சென்னையில் ஆரம்பித்து, நல்லமுறையில் நடத்த முடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தேயிலை உற்பத்தியாளர்களிடத்தில் நாம் கலந்து பேசிப்பார்த்தோம். இப்போது கோச்சின் சந்தைக்குத்தான் பெரும்பாலான தேயிலை கொண்டு செல்லப்படுகிறது. ஓரளவுக்கு விற்பனை வரிச் சலுகை கொடுத்தால் அந்தச் சந்தையை சென்னையில் நடத்தலாம் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். உணவு-விற்பனை வரித் துறை அமைச்சர் அதற்காகக் கருணை காட்ட வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு இந்தத் தேயிலைத் தொழில் ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்குப் போதுமான இடம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இலங்கை அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு மத்திய அரசாங்கம் ஒரு குழு அமைத்து இருக்கிறது. அந்தக் குழுவினிடத்தில் அரசாங்கம் இந்தச் சிபார்சுகளைச் செய்து இருக்கிறது. எங்கெங்கே காட்டிலாக்கா நிலங்கள் இருக்கின்றனவோ அங்கே தேயிலைத் தோட்டங்கள் ஆரம்பிப்பதற்கு ஏராளமான பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, நமது தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தேயிலையின் தரம் வேறு கம்பெனிகளில் தயாரிக்கும் தரத்திற்குக் குறைவாக இருக்கிறது. அதனால் வெளி மார்க்கெட் கிடைப்பது இல்லை. அந்தத் தரத்திற்கு நம்முடைய தரம் உயர்த்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் அறிந்தவரை அவர்கள் நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். நான் அறிந்தது, மற்றவர்களோடு போட்டா போட்டி இருக்கவேண்டும். கடந்த வருஷம் 6 லட்சம் ரூபாய் அவர்கள் லாபம் சம்பாதித்து இருக்கிறார்கள்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே,, சமீப காலத்தில் பிரிட்டிஷ் ராயல் இன்ஸ்டிட்யூட் ஆப் ரிசர்ச் என்ற நிறுவனம், 'டீ ஹார்ட் அட்டாக்கைத் தடுத்து நிறுத்துகிறது' என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். இதை விளம்பரப்படுத்தி கோவாப்பரேடிவ் முறையில் அரசாங்கம் ஏராளமான டீ நிறுவனங்களை ஆரம்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் அதைக் கேட்டுப் பயப்படவேண்டாம்.





### *Chemical Industry.*

* 231. *Q.*—THIRU O. N. SUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start a chemical industry utilising coral stones available in this State; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) :** தமிழ்நாடு அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனம் நாள் ஒன்றுக்கு 50 டன் கால்ஷியம் கார்பைட் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான உரிமம் கோரி மத்திய அரசுக்கு மனுச் செய்துள்ளது.

### *Sodium Hydrosulphite Plant at Ramanathapuram*

* 232 *Q.*—THIRU N. DENNIS :

DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any Sodium Hydrosulphite Plant is to be set up at Ramanathapuram; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனம் இந்திய அரசிடமிருந்து ஆண்டொன்றுக்கு 3,500 டன் சோடியம் ஹைட்ரோசல்பைட் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலை ஒன்றை இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவ பூர்வாங்க அனுமதி பெற்றுள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையின் மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுமார் 100-லிருந்து 300 பேருக்கு வேலை கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

DR. H. V. HANDE : Sir, may I know the total amount of capital that is likely to be invested in this industry and the rough turnover and other details ? Also, may I know whether any headway has been made with regard to starting the industry and when it is likely to be started and completed ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுமார் 140 லட்சம் ரூபாய் இதற்கு ஆகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. முன்னாலேயே உற்பத்தி அளவு எவ்வளவு என்று குறிப்பிட்டேன். இப்போது தான் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறது. எந்த 'ப்ராசஸை' நாம் பின்பற்றலாம் என்று இப்போது முயற்சி எடுத்து வருகிறோம். அமெரிக்க நாட்டில் ஒரு பிராசசும், பெல்ஜியம் நாட்டில் ஒரு பிராசசும், ஸ்விட்சர்லாந்து நாட்டில் ஒரு பிராசசும் இருக்கிறது. எதைத் தேர்ந்தெடுப்பது என்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம்.

திரு. ஏ. சுவாமிநாஸ் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலைக் தேவையான மூலப்பொருள்கள் நம் மாநிலத்தில் எங்கே மிகுதியாகக் கிடைக்கின்றன? இராமநாதபுரம் மாவட்டத்தில் மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்கள் பெறுவதிலே சங்கடம் எதுவும் இருக்காது. காரணம், இது ஒரு ரசாயனத் தொழிற்சாலை. இதை முன்நின்று நடத்த, தனியார் ஒருவர் முன்வந்து இருக்கிறார். அவரிடத்தில் இது ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. பின்தங்கிய பகுதியில் ஆரம்பித்தால் மத்திய அரசாங்கம் உதவி கொடுக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம்.

### திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து முறையீடுகள்

* 233 வினா—திரு. க. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்கச் சார்பில், திருப்பூர் வழக்கறிஞர்கள் தங்குமிடத்தை ( Bar Assoction Room ) விரிவுபடுத்தித் தரவேண்டும் எனக்கேட்டு விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

திரு. க. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் திருப்பூர் வழக்கறிஞர்கள் தங்குமிடத்தைப் பார்த்து இருக்கிறார்கள். அது மோசமான நிலையில் இருக்கிறது. அதை விரிவுபடுத்திப் புதிதாக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் அப்போது என்னருகில் இருந்தார்கள். இப்படிப்பட்ட முயற்சிக்கு வழக்கறிஞர்களிடமிருந்து நிதி திரட்டலாம் என்று சொன்னதாக நினைவில் இருக்கிறது. அதைச் செய்து கொடுத்தால், இதையும் பரிசீலிக்கலாம்.

### நொய்யல் ஆற்றிலிருந்து பிரியும் வாய்க்கால்கள்

* 234 வினா—திரு. க. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நொய்யல் ஆற்றில் இருந்து (திருப்பூர் வட்டாரம்) ஆண்டிபாளையம் குளத்திற்கும், முதலிபாளையம் குளத்திற்கும் இடையே வாய்க்கால்களை தூர் எடுத்து, ஆழப்படுத்தும் வேலை அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலைகள் துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. க. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கும் முதலிபாளையம், ஆண்டிப்பாளையம் குளங்களுக்கு நொய்யல் ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிற முறையில் தூர் எடுக்கப்பட்டால், அது விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பயன்படும். அதைச் செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கும் விவரப்படி, அண்மையில்தான் மராமத்து வேலை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வேலை தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

### பவானி வட்டத்திலுள்ள வாய்க்கால்கள்

* 235 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

பவானி வட்டத்திலுள்ள தடப்பள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால் ஆகிய மூன்றையும் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த தடப்பள்ளி வாய்க்கால், அரக்கன்கோட்டை வாய்க்கால், காலிங்கராயன் வாய்க்கால் ஆகிய மூன்றையும் புதுப்பிக்கும் திட்டம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது செயல்படத் தொடங்கும்? அதனுடைய மொத்த மதிப்பீடு எவ்வளவு? அதனால் மீதமாகும் தண்ணீர் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அரக்கன் கோட்டை வாய்க்காலுக்கான மதிப்பு ரூ. 49.4 லட்சம் தடப்பள்ளி வாய்க்காலுக்கான மதிப்பு ரூ. 88 லட்சம் காலிங்கராயன் வாய்க்காலுக்கான மதிப்பு ரூ. 66.01 லட்சம் ஆய்வு முடிந்தபிறகு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வளவு ஆயக்கட்டு பயன்பெறும் என்று இப்போது சொல்வது அவ்வளவு சரியில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது இந்த வாய்க்கால் வெட்டி சுமார் 200 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வாய்க்கால்கள் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. இதனால் கடைநிலைப்பகுதிகளுக்குத் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, இதை விரைவாகச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைமைப் பொறியாளரை ஒரு விரிவான அறிக்கை கொடுக்கவேண்டுமென்று அரசு கேட்டு இருக்கிறது. தலைமைப்பொறியாளரின் ஆய்வில் அது இருக்கிறது. ஆய்வு முடிந்து அறிக்கை வந்தவுடன், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, நொய்யலாற்றுப் பாசனம் கரூர் தாலுக்காவில் இருக்கும் விவசாயிகள் பல நாட்களாக கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன பரிசீலனை செய்து இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பவானி ஆற்றைப் பற்றிய கேள்வி. நொய்யலாற்றைப் பற்றிய கேள்வி முடிந்து விட்டது. இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

## கோவையில் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை

* 236 வினா—திரு. க. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசாங்கப் போக்குவரத்துத் துறையின்கீழ் டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலை ஒன்றைக் கோவையில் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. க. துரைசாமி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் சொன்னார்கள். அரசாங்கப் போக்குவரத்துத் துறை கோவையில் பெரும் அளவுக்குப் பேருந்துகளை நிறுத்தி வைக்கிறது. மேலும் 50 மேற்பட்ட பஸ் நிறுவனங்களை தற்போது தேசியமயமாக்கியுள்ளது. ஆகவே, இப்போதாவது, ஒரு டயர் புதுப்பிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதுபற்றிப் பின்னர் பரிசீலிக்கலாம்.

THIRU K.M. SUBRAMANIAM : May I know where the tyres of the Transport department vehicles are being retreaded ? Is it being done departmentally ? Is it being given to any contractor ? Or, is there any factiry run by Government for that purpose ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ராணித்தோட்டத்திலும், சென்னையிலும் டயர் ரிட்ரெடிங் யூனிட் போக்குவரத்துத் துறையில் இருக்கிறது. இங்குதான் அது செய்யப்படுகிறது.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, டயர் புதிப்பிக்கும் தொழிற்சாலை கோவையில் இல்லை என்று சொன்னார்கள். அத்தகைய தொழிற்சாலை ஒன்று திருச்சியில் ஏற்படுத்தப் போவதாக செய்தி அடிபடுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருச்சி, சேலம் போன்ற பகுதியில் இருக்கிற வண்டிகளுக்காக திருச்சியில் என்ஜின் ரீ-கண்டிஷன் செய்கிற பணியையும், டயர் புதுப்பிக்கும் பணியையும் சேர்த்து ஒரு தொழிற்சாலை நிறுவ அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : தேசியமாக்கப்படும் கொள்கையினால் அரசாங்கப் போக்குவரத்து விரிவு அடைந்து வருகிறது. விரிவு அடைந்து வருகிற அரசாங்கப் போக்குவரத்து பஸ்களின் எண்ணிக்கைக்கேற்ப மோட்டார் உப பொருள்கள் கிடைக்கவும், டயர் புதுப்பிக்கும் பணி நடைபெறவும் இடையின்றி தொடர்ச்சியாக நடைபெற அரசாங்கம் விரும்புகிறதா? அப்படி விரும்பினால் இதுபோன்ற தொழிற்சாலைகள் எங்கெங்கே ஆரம்பிக்கப்படும் ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்த விருப்பத்தின் அடிப்படையில்தான் இப்போது அத்தகைய டயர் புதுப்பித்தல் போன்றவை செவ்வையாக நடைபெற தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று, உப பொருள்களை அரசாங்கம் நடத்துகிற ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ மூலம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகிற பதிலிலே, ராணித் தோட்டத்தில் இது சம்பந்தமான யூனிட் இருப்பதாகச் சொன்னார்கள். அது பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தினால் அதை விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இப்போது நமக்கு 21 ஆயிரம் டயர்கள் புதுப்பிக்க வேண்டியிருக்கின்றன. நம்முடைய பணிமனைகள் மூலம் கிட்டத்தட்ட 27 ஆயிரம் டயர்கள் புதுப்பிப்பதற்கான முழுத் திறன் இருக்கிறது. ஆகவே, இப்போது அதை விரிவுபடுத்தும் உத்தேசம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னையிலும், ராணித்தோட்டத்திலும் 27 ஆயிரம் டயர்கள் புதுப்பிக்கக்கூடிய திறன் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய டயர்கள் எல்லாம் இந்த இரண்டு பாக்டரியில் தான் புதுப்பிக்கப்படுகின்றனவா? அல்லது தனியார் யூனிட்டிலும் புதுப்பிக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கப் போக்குவரத்து துறை டயர்கள் எல்லாம் இந்த ஆண்டு இரண்டு யூனிட்டுகளில் தான் புதுப்பிக்கப்படுகின்றன. மோட்டார் வெகிள்ஸ் மெயின்டினன்ஸ் ஆர்கனிசேஷன் ஒன்று இருக்கிறது. அது அரசாங்கக் கார்கள், ஜீப்போர் முதலியவற்றைக் கவனிக்கின்றன. அவர்கள் தனியாரிடத்தில் கொடுக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ராணித்தோட்டத்தில் இருக்கிற டயர் புதுப்பிக்கும் நிறுவனத்தில் போதுமான சிப்பந்திகள் இல்லை என்று கூறப்படுகிறதே. ஆகவே அங்கே தேவையான சிப்பந்திகளை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புத் திட்டத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு இந்த வகையான குறையை வைத்துக்கொள்ளாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : கோவையில் இப்போதும் டயர் புதுப்பிக்கும் யூனிட் ஏற்படுத்தும் திட்டம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். கோவை, சேலம், தர்மபுரி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் மட்டும் 1,500-க்கு மேற்பட்ட பேருந்துகள் இருக்கின்றன. அரசாங்கம் உச்சவரம்பு 10 என்றும் தனியார் பஸ்களுக்குக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே இதை எல்லாம் உத்தேசித்து கோவையில் இந்த யூனிட் ஆரம்பித்தால் மிகவும் குறைந்த விலையில் எல்லோருக்கும் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே உடனடியாக இதை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, காலம் கனியும்வரை காத்திருக்க வேண்டுகிறேன்.

*Visit of Youth Goodwill Mission to Madras*

* 223 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Youth Goodwill Mission visited Madras in March, 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) மாணவர்கள் மருத்துவர்கள், பொறியாளர்கள், வணிகர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் ஆகிய 350 பேர் கொண்ட ஜப்பானிய இளைஞர் நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று "சகுரா மாரு" என்ற (ஜப்பானியக்) கப்பலில் சென்னை வந்தனர். 1971 மார்ச் 4-ஆம் நாள் முதல் 7-ஆம் நாள் வரை நகரைப் பார்வையிட்டனர். ஜப்பானிய நாட்டு இளம் தலைமுறையினரிடையே உறுப்பினர்களைத் தெரிந்தெடுத்து ஜப்பானின் அண்டை நாடுகளைப் பார்வையிட்டு அந்நாட்டு இளைஞர்களையும், தலைவர்களையும் சந்தித்து அவர்களுடன் பழகுவதற்கு ஒரு வாய்ப்பளிக்க வகை செய்வதே இந்த நல்லெண்ணக் குழுவின் நோக்கமாகும்.

திரு. என். டென்னிஸ் : இளைஞர் உள்ளத்தில் நல்லெண்ணத்தை வளர்க்க அரசுத் திட்டம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எல்லோர் உள்ளத்திலும் நல்லெண்ணத்தை வளர்ப்பது அரசின் திட்டம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 350 பேர்கள் ஜப்பானில் இருந்து நல்லெண்ணக்குழு இங்கு வந்திருக்கிறார்களே, அதுபோல இங்கிருந்து ஜப்பான் அனுப்ப உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : ஆசையிருக்கிறது அதிகமாக. ஆனால் வசதிகள் இல்லை.

திரு. எம். தேவராசன் : பல நல்லெண்ணக் குழுக்கள் இந்தியாவுக்கு வரும்போது தமிழகத்திற்கு மட்டும் வராமல் போகிறார்களே, என்ன காரணம்? இனிமேல் இங்கு வருவதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்வி இங்கு வந்தவர்களைப் பற்றியது, வராதவர்களைப் பற்றியது அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த யூத் குட்வில் மிஷனில் வருகிறவர்களில் ஹிப்பிகள் இருக்கிறார்கள் என்பது தெரியுமா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை வெளியிடுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வேறு நாடுகளில் பரவிய அளவு எதுவும் தமிழகத்தில் ஹிப்பிகள் பரவியதாகச் செய்தி இல்லை. இங்குள்ளவர்கள் ஆலவாயா என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். நிலைமை முற்றினால் தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்.



திரு. துரைமுருகன் : இங்கிருந்து வெளிநாடுகளுக்கு நல்லெண்ணத் தூதுக்குழுக்களை அனுப்ப வசதியில்லை என்றார்கள். வெளிநாடுகளுக்கு அனுப்பாவிட்டாலும் இந்தியாவிலேயே உள்ள மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தியாவிற்குள் இருக்கும் மற்ற மாநிலங்களுக்கு அனுப்பலாம். இப்போதே பல்வேறு சட்ட மன்றக் குழுக்கள் பல மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படியே அனுப்பப்படுவதாக இருந்தாலும் சட்டசபைக்குப் புறம்பாக உள்ள குழுவாகத்தான் இருக்க முடியும் என்பதை திரு. துரைமுருகனுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே என். குமாரசாமி : மாணவர்களுடைய நல்லெண்ணக் குழுவை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் பொது அறிவை அவர்கள் பெருக்கிக் கொள்ள வழியேற்படும். அதனால் பிற்காலத்தில் சமுதாயத்திற்குப் பயன் கிடைக்கும். ஆகவே கஷ்டத்தையோ, செலவையோ பார்க்காது வெளிநாடுகளுக்கு அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது வெளிநாட்டிற்கு நம் நாட்டில் இருந்து தூதுக்குழுவை அனுப்புகிற விஷயம். இந்திய அரசு அதற்குப் பெரு முயற்சி எடுத்து—எல்லா மாநிலங்களில் இருந்தும் திறமையானவர்களைப் பொறுக்கி தூதுக்குழுவில் அமைத்து அனுப்பவேண்டிய ஒன்றாகும். இங்கு இதுபற்றி கேட்கப்பட்ட கேள்விகள் எல்லாம் இந்திய அரசின் கவனத்தைக் கவரும் என்று கருதுகிறேன்.

திரு. சோ. கருணைநாதன் : அப்படிப்பட்ட நல்லெண்ணக் குழு இப்போது தான் வந்திருக்கிறதா? ஏற்கனவே பல குழுக்கள் வந்திருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்படிப் பல முறை வந்திருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன் : வெளிநாடுகளில் இருந்து இங்கு வருகிற ஹிப்பிகள் போன்றவர்கள் எல். எஸ். டி. மார்சோனா போன்ற போதை தரும் பொருள்களை இங்கே விற்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை எல்லாம் யாரும் விரும்பி வாங்காமல் இருக்க மதுவிலக்கை ஒத்திவைத்திருக்கிறோம்.

*Demonstration by Scheduled Caste Students at Madras*

* 224 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether there was any demonstration by the Scheduled Caste students in Madras City about the 9th February 1971; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) 9—2—1971 அன்று அரிசனங்கள், பழங்குடி மக்கள் வகுப்பினரைச் சேர்ந்த சில மாணவர்கள் தலைமைச் செயலகத்தை நோக்கி ஊர்வலம் சென்றனர். அவர்களுடைய பிரதிநிதி அரசுத் தலைமைச் செயலாளரைச்

சந்தித்து, ரூ. 120 பயிற்சி உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று கோரி கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். அரசு அவர்களது முறையீட்டைக் கவனிக்கும் என்று அரசு தலைமைச் செயலாளர் உறுதியளித்தார்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, அவர்களுடைய விண்ணப்பத்திற்கிணங்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஹரிஜன மாணவர்களுக்கு ஏற்கெனவே உண்டி, உறையுள் போன்றவற்றிற்காக மாதம் ஒன்றுக்கு சென்னையிலே உள்ளவர்களுக்கு 60 ரூபாயும், பிற இடங்களில் 50 ரூபாயும் கொடுக்கப்பட்டு வந்தது. உதவித் தொகை போதவில்லை என்று கோரியதின் பேரில், சென்னையில் உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 70 ரூபாயாகவும், பிற இடங்களில் 55 ரூபாயாகவும் உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, மாணவர்களின் போராட்டத்திற்கு சில அரசியல் கட்சிகள்தான் காரணம் என்று சொல்லப்படுகிறதே, அது பற்றிய விவரங்களை அரசு சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரங்களை அரசு சேகரிக்க விரும்பவில்லை. ஆனால் அந்த மாணவர்கள் வந்த ஊர்வலத்திலே எழுப்பிய கோஷங்கள் எல்லாம் அரசியல் வண்ணம் பூசியவைகளாகவே இருந்தன.

### *Study of Sanskrit.*

*225 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government for popularising the study of Sanskrit in this State?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இம்மாநிலத்தில் வடமொழி பயிலுவதற்காக பதிமூன்று ஓரியண்டல் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களுக்கான சம்பள மான்யமும், நிர்வாக மானியமும் வழங்கப்படுகின்றன. மேற் கூறிய பள்ளிகளில் படிக்கும் சிறந்த மாணவர்களுக்கு மத்திய அரசின் உதவிப் பணமும் (Scholarships) வழங்கப்படுகிறது.

Thiru K.M. SUBRAMANIAM: Is it a fact that many of the scholarships allotted to the State by the Central Government have lapsed and also whether there is any proposal to start a Sanskrit University, as is being organised in Kerala?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசினுடைய உதவித் தொகை திறமையின் அடிப்படையில் 60 பேர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அது நிறுத்தப்பட்டதாக செய்தி எதுவும் வரவில்லை. அப்படி ஏதாவது செய்திவிவரம் வந்தால் விவரம் தரப்படும். திருவையாற்றில் தவிர சமஸ்கிருத கல்லூரி ஒன்று இருந்து வருகிறது. ஆனால் பல்கலைக்கழகம் வைக்கின்ற யோசனைக் குறிப்பு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.



திரு. ஈ. எம். நடராசன்: தலைவர் அவர்களே, சமஸ்கிருதம் என்பதே இறந்துபோன மொழி என்று சொல்லலாம். அதைப் படிப்பதால் தமிழர்களுக்குப் பயன் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சமஸ்கிருதம் உயிர்நீத்த மொழி என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதை விரும்பிப் படிக்கிறவர்கள் இருக்கிறார்கள். அதற்காகத்தான் வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

Dr. H. V. HANDE: Is it a fact that there was a scholarship granted for electives for the 10th and 11th standards and then it was found that not enough students were forthcoming for electives? There is also provision in that scholarship regulation itself that the surplus can be given to the smaller classes which are there in the oriental schools. In case it is not possible to exhaust the amount for the electives, will this Government come forward to give an assurance that the balance amount will be, according to the stipulation in that rule itself, passed on to the schools where oriental languages are taught?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது 10, 11-வது வகுப்புகளில் 60 மாணவர்களுக்கு திறமையின் அடிப்படையில் உதவித்தொகை அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறமாதிரி போதுமான மாணவர்கள் இல்லாமல் இருந்தால் அந்தத் தொகையை இங்கேயே பயன்படுத்தலாம். அதற்குத் தடை ஒன்றும் இல்லை.

திரு. செ. கந்தப்பன்: தலைவர் அவர்களே, வடமொழி உயர் மொழியாக இருப்பதன் காரணத்தினால் 13 ஓரியண்டல் பள்ளிகளில் இருப்பதாக சொன்னார்கள். இந்தியாவின் முதல் கல்வி அமைச்சராக இருந்த திரு. மவுலானா அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் வட மொழியைப் போல் தமிழ் மொழியும் உயர் தனிச் செம்மொழி என்ற கருத்தை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழுக்கும் இவ்வித முதன்மை தரப்படுமா? இந்த உதவியை தமிழுக்கும் அளிக்குமா? அப்படி அளிக்கும்படி இந்திய அரசை இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழுக்கு இப்படிப்பட்ட வசதி ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், வேறு பல மாநிலங்களில் தமிழ் பயிற்சிக்கான ஏற்பாடுகளைச் செய்தால் தமிழக அரசு உதவி செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. சில பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிற்சித் திட்டம் இருந்து வருகிறது. பல இடங்களில் இல்லை. ஆனால் உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கு உதவி செய்ய வேண்டுமென்றும், அந்த வகையில் இந்திய அரசாங்கத்தின் ஆதரவு தரவேண்டுமென்றும் இந்திய அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. தமிழ் ஆராய்ச்சி நிலையம் இவ்வாண்டிலிருந்து செயல்படத் தொடங்கும். இந்திய அரசாங்கத்திடமிருந்து உதவியைப் பெறுவதிலே இந்த அரசு முயன்று கொண்டிருக்கிறது.

திரு. என். ராஜாங்கம்: தலைவர் அவர்களே, புலவர் வகுப்புகளில் படிப்பதற்கு கல்லூரியில் முதலில் 'என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன்' இருக்கிறது. அதேபோல் சமஸ்கிருத கல்லூரி வகுப்பில் சேருவதற்கு முன்னால் 'என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன்' சமஸ்கிருதத்தில் உண்டா? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன் இருக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, சமஸ்கிருதம் படிப்பதால் இந்துக்களிடையே ஒற்றுமையை வளர்க்கலாம். கன்னியாகுமரியில் எந்த ஒரு மந்திரத்தைச் சொல்கிறார்களோ அதே மந்திரத்தைத்தான் காசியிலும் சொல்கிறார்கள். ஆகவே, இந்தியா முழுவதிலும் உள்ள இந்துக்களிடையே ஒற்றுமையை வளர்க்க சமஸ்கிருத மொழி பயன்படும் என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி இந்த அரசாங்கம் என்ன கருதுகிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு இந்த அரசை சேர்ந்ததாக இருக்காது. அந்த மொழியை பல மாணவர்கள் விரும்பிப் படிக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கிற பல்கலைக் கழகங்கள் தேவைக்கேற்றபடி உதவி செய்து வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH: Kancheepuram was the great centre of Sanskrit learning in ancient days and even students from foreign countries used to come there. May I know from the Hon. Minister for Education whether the Government will take steps to introduce the study of Sanskrit there and thus revive the ancient cultural glory of that city?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, காஞ்சீபுரத்தில் யாராவது முயற்சி எடுத்து, இவைகளுக்கு இடங்கள், போதுமான மாணவர்கள் கிடைக்கின்ற சூழ்நிலை இருக்குமானால், இதைப்பற்றி ஆலோசனை செய்ய அரசுக்கு தடை ஒன்றும் இல்லை.

**திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, சமஸ்கிருதம் பேச்சு வழக்கு இல்லாத மொழி. அதைப் பிரபலப்படுத்துகின்ற முயற்சிகளை அரசு கைவிட்டு, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற திராவிட மொழிகளைப் பிரபலப்படுத்த தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அரசாங்கம் சமஸ்கிருதத்தைப் பரப்புகின்ற முயற்சி எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. எங்கெங்கு படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அங்கெல்லாம் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. யாரையும் கட்டாயப்படுத்துகின்ற நிலை இல்லை. பல்வேறு பள்ளிகளிலே பிற மொழிகளை படிப்பதற்கான வசதி முறைப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விரும்பிப் படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் போனால் தனி வகுப்புகள் அமைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவர் அவர்களே, வடமொழிக்கு இங்கு ஒரு கல்லூரி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேறு மாநிலங்களில் தமிழுக்காக என்று தனிக் கல்லூரி இருக்கிறதா? அப்படி தனிக் கல்லூரி அமைக்க, பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிற்சி அளிக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமா?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சில பல்கலைக் கழகங்களில் அதாவது, திருவனந்தபுரம், மைசூர், ஹைதராபாத், திருப்பதியிலுள்ள வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் ஆகியவற்றில் எல்லாம் தமிழ் பயிற்றுவிப்பதற்கான வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. வேறு பல இடங்களிலும் தமிழைச் சொல்லிக் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. வேறு மாநிலங்களில் இருக்கிற பல்கலைக் கழகங்களும் தமிழைப் பயிற்றுவிப்பதற்கு முயன்று வருகின்றன. முழு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவும். விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, தமிழகத்தில் 13 மொழிகளுக்கும் முக்கியத்துவம் தந்து, தமிழக அரசால் மானியம் வழங்கப்பட்டு, மத்திய சர்க்காரும் ஸ்காலர்ஷிப் தருவதாகச் சொன்னார்கள். பம்பாய் மாநிலத்தில் தமிழர்கள் பகுதிகளில் படிக்கின்ற மாணவர்களுக்குச் சலுகைகள் தரப்படுவதில்லை, தமிழர்களுக்குச் சலுகைகள் தரப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியென்றால், அதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, தமிழர்களின் பிள்ளைகளுக்கும் சலுகைகள் கொடுக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையீடு எதுவும் இந்த அரசுக்கு வரவில்லை. நாம் சிறுபான்மையினருக்கு எவ்வளவு சலுகைகள் அளித்து வருகிறோமோ அதைப்போலத்தான் பம்பாயிலும் தமிழ் படிப்புக்கு என்று உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அந்த மாநிலத்தின் சட்டவிதிகளுக்குட்பட்டு அவர்கள் அனுமதி அளித்து, மான்யம் ஒதுக்கிட்டுத் தருகிறார்கள். தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதாக முறையீடு எதுவும் இந்த அரசாங்கத்திற்குக் கொண்டுவரவில்லை.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆரியம் வழக்கிழந்து' என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் கூறியதைப்போல் இந்த நாட்டிலே வழக்கிழந்துவிட்ட இறந்த மொழிக்காக அவ்வளவு பணம் ஒதுக்குவது முறைதானா? இதனால் நாட்டு மக்களுக்கு ஏதாவது பயன் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி, கற்பதற்கு வாய்ப்புகள் தரப்படுகின்ற நிலை கிரேக்க மொழிக்கு, லத்தீன் மொழிக்கு, ஹிப்ரு மொழிக்கு இவை போன்ற மொழிகளுக்கு வழக்கிழந்துவிட்ட மொழிகளாக இருந்தாலும் அவற்றிலே உள்ள பல்வேறு இலக்கியங்களையும் மற்றவற்றையும் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதால் அந்த நிலையிலேதான் தரப்படுகின்றன. சமஸ்கிருதத்திலேயிருந்து கலையறிவு, இன்னும் பல்வேறு அறிவுகளையும் தெரிந்து கொள்வதற்காகப் பயிலுகின்றார்கள். தாங்கள் தாங்கள் பயில வேண்டுமென்று விரும்பப்படுகின்ற மொழிகளுக்கு வாய்ப்புகள் தரப்படுவதைப்போல் சமஸ்கிருத மொழிக்கும் தரப்படுகின்றது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நம்முடைய நாட்டின் தலைநகராக இருக்கின்ற டெல்லியிலே எண்ணற்ற தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ் படிப்பதற்கு வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வேறு மொழிகளைப் பயின்று

கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழை அவர்கள் பயில்வதற்கு ஏற்றமுறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தமிழார்வம் பாராட்டப்பட வேண்டியது. ஆனால் டெல்லியிலே அப்படிப்பட்ட சங்கடங்கள் இல்லை. சில பள்ளிகளை—தென்னிந்திய கல்விச் சங்கத்தினர் 6 உயர்நிலைப்பள்ளிகளை—வைத்து நடத்தி வருகிறார்கள், தமிழ் சொல்லித் தரப்படுகிறது. டெல்லியின் அரசமைப்பினுடைய கல்வி விதி முறைகளுக்குட்பட்டு அந்த அரசு ஆதரவு தந்து வருகிறது. இப்பவும் ஆறு உயர்நிலைப்பள்ளிகளைத் தென்னிந்திய கல்விச் சங்கத்தினர் நடத்தி வருகிறார்கள்.

திரு. என். ராஜாங்கம்: தலைவர் அவர்களே, சமஸ்கிருத மொழியிலே இருக்கிற நூல்கள் எல்லாம் வேதங்களைப் பற்றியும் உபநிஷதங்கள் பற்றியும் மதத்தைப்பற்றியும் சாஸ்திரங்கள்பற்றியும்தான் இருக்கின்றன. அரசியல், சமுதாயம், வரலாறு இவற்றைப்பற்றி நூல்கள் அதிலே இருக்கிறதா! அப்படியானால் அவை பயன்பட்டு வருகின்றனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் சமஸ்கிருத மொழியிலே விற்பன்னன் அல்லன். சமஸ்கிருத மொழிக் கல்வி வாய்ப்புக்கு என்ன என்ன செய்து தரப்படுகின்றன என்பதைத்தான் அறிவேன். என்ன சாஸ்திரங்கள் இருக்கின்றன அதிலே என்ன இருக்கிறது என்பதை யெல்லாம் ஆராயக்கூடிய நிலையில் இல்லை.

திரு. எம். தேவராசன்: வடமொழிக்கு ஆக்கம் கொடுக்கப்படுவதால் இந்தி மொழி கொல்லைப்புற வழியாக நுழைவதற்கு துணை புரிந்துவிடும் என்பதை அரசு உணர்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தி ஆதிக்கம் எந்த வகையிலும் வரவியலாது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, may I know whether it has been brought to the notice of the Government that Sanskrit is not a Manthra Basha and that it is a universal language spoken by many communities not belonging to the Brahmin community in Kerala, Andhra Pradesh, West Bengal and other States? So, the impression that it is a Manthra Basha as somebody has suggested, should be given up...

Mr. SPEAKER: What is the question?

THIRU K. M. SUBRAMANIAM: Are the Government aware that it is not a Manthra Basha?

Mr. SPEAKER: The Hon. Minister declines to answer.

திரு. கே. டி. கே. தங்கமணி: உப கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபொழுது தமிழ் வேறு சில பல்கலைக் கழகங்களிலே வைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தூரிலே தமிழ் படிப்பதற்காக வசதி செய்யும் பொருட்டு ஒரு தமிழாசிரியர் வேண்டுமென்று தமிழக அரசுக்குக் கேட்டு எழுதியிருக்கிறார்களா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட குறிப்பு வந்ததாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் கடிதப் போக்குவரத்து ஏதேனும் இருக்கிறதா என்று அறிந்து சொல்லலாம்.

## கோவை நகரில் விளையாட்டுத் திடல்

*226 வினா—திரு. க. துரைசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் "விளையாட்டுத் திடல்" அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இவ் வாண்டு மார்ச் மாதமே வேலை துவக்கப்பட்டுவிட்டது.

திரு. க. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு லட்சம் ரூபாயிலே விளையாட்டுத் திடல் கட்டப்பட இருக்கிறது? அதிலே அரசாங்கத்தினுடைய மானியம் 1 லட்சம் தொகையாக இருப்பதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதிலே அரசாங்கம் ஒரு விதியை வகுத்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு விளையாட்டு அரங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு அந்த வகையில் மாநில அரசு மானியமாக 1 லட்சம் ரூபாய் தரும். மற்றைய விளையாட்டுக் குழுவினரும், மாவட்ட நலக் குழுவினரும், மற்றைய தனித்தனிக் குழுக்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழு அமைத்து நிதி திரட்டிக் கொள்ளலாம். சில இடங்களிலே இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று திரட்டி அதிலே கட்டிக் கொள்கிறார்கள். சில இடங்களிலே 7 லட்சம் என்ற அளவிலே நிதி திரட்டி அரசு கொடுக்கின்ற தொகையான ஒரு லட்சத்தோடு கட்டுகிறார்கள்.

இதைத் தவிர வேறு பல நிதி திரட்டுகின்ற முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். கோவை நகரத்திலே 25 லட்சம் ரூபாயிலே கட்ட வேண்டுமென்று திட்ட மிட்டிருக்கிறார்கள். அரசு இவ்வளவு தொகையில் கட்டவேண்டுமா? குறைத்துக் கட்டிக்கொள்ள இயலுமா என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு எழுதியிருக்கிறது. அவரிடமிருந்து பதில் வந்ததற்குப் பிறகு அதற்கேற்ற அளவில் நிதி ஒதுக்கப்பட்டு கட்டப்படும்.

அரசு மானியத்தைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே அளவுதான்—ஒரு லட்சம் ரூபாய்தான் இருக்கும். அந்தவகையிலேதான் கோயம்புத்தூருக்கும் ஒரு லட்சம் ரூபாய் அளிக்கப்படுகிறது. சிதம்பரம் பூங்காவிலே ஆறே கால் ஏக்கர் நிலப் பரப்பளவிலே கட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு நகராட்சிக்குச் சொந்தமாக அந்த இடம் இருப்பதால் ஆண்டுக்கு 400 ரூபாய் என்ற அளவிலே பேசி 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ள அனுமதியளிக்க அந்த நகராட்சி ஒப்புதல் அளித்து அது அரசாங்கத்தினுடைய அனுமதிக்காக வரப் போகிறது. பல்வேறு வகைகளில் நிதி திரட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அங்கே பஞ்சாயத்து

ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிலிருந்து 5 லட்சம் ரூபாயும் ஆற்பு உரிமையாளர்களிடமிருந்து இரண்டரை லட்சம் ரூபாயும் வசூலாகி இருப்பதாகத் தெரிகிறது. மேலும் இரண்டரை லட்சம் நால் உரிமையாளர்களிடமிருந்து வசூலிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. கோவையில் உள்ள விளையாட்டுக் குழுவினரும் 1¼ லட்சம் தருவதற்கு ஒப்புதல் தந்து இருக்கின்றனர். அரசு மானியம் 1 லட்சத்தோடு மேற்கொண்டு ஏழே முக்கால் லட்சம் திரட்டுவதற்கு கலை நிகழ்ச்சிகளை நடத்தித் திரட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் 25 லட்ச ரூபாயிலே கட்டப்பட வேண்டுமா ? இன்னும் குறைத்துக் கட்டுவதற்கு இயலாதா என்று அரசாங்கம் கேட்டிருக்கிறது.

*திரு. எம். செல்வராஜ் :* தலைவர் அவர்களே, விளையாட்டு அரங்கங்களின் அன்றாடப் பராமரிப்புச் செலவிற்காக அரசாங்கத்திலிருந்து மானியம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கிற விளையாட்டு குழுவினர்கள்தான் நிர்வாகச் செலவுகளையும் மற்றவைகளையும் மேற்கொள்ள வேண்டிவரும். அரசாங்கம் பொதுவாக மாநில அளவிலே ஒரு குழு அமைத்திருக்கிறது. விளையாட்டை ஊக்குவிக்கவும், விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கவும் போட்டிப் பந்தயங்களை நடத்தவும் அந்தக் குழு நிதி ஒதுக்கீடு செய்கிறது. நிர்வாகச் செலவுகளை மாவட்ட விளையாட்டுக் குழுவினர்தான் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

*திரு. என். மருதாசலம் :* தலைவர் அவர்களே, கோவை விளையாட்டு அரங்கத்தில் அரசாங்கத்தினுடைய பங்கென்ன ? அந்த நகராட்சியின் பங்கென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி அரசின் பங்கு ஒரு லட்சம் ரூபாய். நகர மன்றம் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை தருவதாக வாக்களித்து இருக்கிறார்கள்.

*திரு. தோப்பூர் திருவேங்கடம் :* இந்தத் திட்டத்திற்கு 25 லட்ச ரூபாய் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதைச் சிரமதான மூலம் நிறைவேற்றினால் செலவு குறைவாகாதா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, விளையாட்டு அரங்கம் கட்டுகின்ற பெரிய பொறுப்புக்களை நிறைவேற்றுவது எளிதானதல்ல, சிரமதானத் தொண்டர்கள் மூலம் நிறைவேற்ற முடியும் என்பது ஐயப்பாட்டிற்குரியதுதான். கோவை மாவட்டத்திலே இதற்காக என்று தனிப்பட்ட பொறியியல் வல்லுநர்களும் அரசு பொறியியல் வல்லுநர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு தனி ஆணையர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் அமைக்கப்பட்டு இருக்கிறார்கள். சிரமதானத் தொண்டர்களுக்கு வேலைகள் இருக்கின்ற காரணத்தினாலே அவற்றைச் செம்மையாகவும் நிறைவேற்றக்கூடிய நிலைமை இருப்பதாலே இவற்றிலே ஈடுபட்டு அவர்களால் அதை நிறைவேற்ற முடியும் என்று அரசு கருதவில்லை.



## Sports Stadium at Kancheepuram

* 227 Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether any sports stadium is to be constructed at Kancheepuram; and

(b) if so, the details thereof ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* (அ) ஆம்.

(இ) செங்கை மாவட்ட நலக் குழுவும், மாவட்ட விளையாட்டுக் குழுவும் ரூபாய் ஏழு லட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டத் திட்டமிட்டுள்ளன.

*திரு. என். டென்னிஸ் :* தலைவரவர்களே, விளையாட்டுத் திடல் இல்லாத மாவட்டத் தலைநகரங்களிலேயும் இப்படிப்பட்ட விளையாட்டுத் திடல்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இப்படிப்பட்ட ஒரு விளையாட்டு அரங்கம் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் பல மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்று வருகிறது. முயற்சிகளை எடுக்கும்பொழுது அரசு ஒரு இலட்சம் ரூபாய் மானியமாகவும், மற்றக் காரியங்களை அங்கே குழுக்கள் அமைத்து, மாவட்ட விளையாட்டுக் குழுவும் திரட்ட வேண்டுமென்ற அடிப்படையில் நியதிகளை வைத்து இப்படிப்பட்ட பணிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

*திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :* தலைவரவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் விளையாட்டு அரங்கம் கட்டலாம் என்று தெரிவித்தார்கள். மாவட்டத் தலைநகரமே இல்லாத எங்கள் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் எங்கு அமைப்பது என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவாகக் கூறுவார்களா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒருமித்த கருத்தைத் தெரிவித்தால் மாவட்ட விளையாட்டுக் குழுவும், மாவட்ட நலக் குழுவும் சேர்ந்து ஒரு முடிவை எடுத்துக் கூறினால் அதற்கேற்றபடி அரசாங்கம் உதவி செய்ய முன்வரலாம்.

## தேவஸ்தானங்களால் பராமரிக்கப்படும் படிப்பகங்கள்

* 237 வினா—திரு. சி. கணேசன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவைசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அறநிலைய நிர்வாகத் துறையின் கீழுள்ள தேவஸ்தானங்களில் எத்தனை இடங்களில் (லைப்ரரிகள்) படிப்பகங்கள் உள்ளன ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* இந்து சமய—அறநிலைய (நிர்வாகத்) துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 203 சமய நிறுவனங்கள் நூலகங்கள் வைத்துப் பேணி வருகின்றன.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவரவர்களே, சோழர்காலக் கோயில்கள் அறச்சாலைகளாகவும், நூல் நிலையங்களாகவும், மருத்துவ நிலையங்களாகவும், கல்விக்கூடங்களாகவும் இருந்திருக்கின்றன என்று அறிகிறோம். அதைப் போலக் கோயில்களை விரிவுபடுத்தும் எண்ணம் நம்முடைய அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நிதி வசதி உள்ள கோயில்களிலே கல்விச் சாலைகளையும், அதேமாதிரி அனாதை விடுதிகளையும், மருத்துவ விடுதிகளையும் இன்றையதினம் நாம் நடத்தி வருகிறோம்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இப்படி ஏற்படுத்தும் நூலகங்களில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நம்முடைய முதலமைச்சர் ஆகியவர்கள் தீட்டிய கருத்தோவியங்களை, நூல்களை, நாடகங்களை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழர்தம் இல்லங்கள்தோறும், அவர்கள்தம் உள்ளங்கள்தோறும் இருக்கும் கொள்கை நூல்களை ஆலயங்களிலே வைக்க வேண்டியதில்லை என்று இந்த அரசாங்கம் கருதுகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Is it not desirable that when our morale is going down, library books should be confined to religious subjects, moral subjects and other subjects concerning way of good life ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சமய நூல்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதோடு தமிழ்நாட்டினுடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் வளர்க்கும் நூல்களும் வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத நூல்களிலேயும் பண்பாட்டைக் கெடுக்கும் பல விஷயங்கள் இருக்கின்றன என்பதை இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்படிக் கோயில்களிலே வரக்கூடிய லைப்ரரிகளில் ஏற்கனவே நாம் சித்த வைத்தியம் சம்பந்தமாகச் சில ஆராய்ச்சி நடத்துகிறோம் என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அப்படியானால் இந்த லைப்ரரிகளிலே சித்த வைத்தியம் சம்பந்தமாக வரக்கூடிய புத்தகங்கள் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சித்த வைத்திய மருத்துவமனைகள் நாம் நடத்திக் கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட புத்தகங்களையும் இனிமேல் வைக்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மத நூல்களை இப்படிப்பட்ட நூலகங்களிலே வைக்கும் நேரத்தில் கிருஷ்ண லீலை நூல்கள், பேதம் காட்டும் மனு தர்ம சாஸ்திரங்களை வைப்பதற்குப் பதிலாக தமிழிலக்கியங்களில் அறிவுரைகள், அறவுரைகள் ஆகியவற்றைக் கூறும் பதினெண் கீழ்க்கணக்கு பதினெண் மேல்கணக்கு போன்ற நூல்களை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்பாடுகள் செய்யும்.





திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்படிக் கோயில்களில் இருக்கின்ற நூல்களில், நவீன விஞ்ஞானக் கருத்துக்களுக்கு, உலகம் முழுவதும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கருத்துக்களுக்குப் புறம்பான கருத்துக்களை உடைய நூல்கள் இருந்தால் அவைகள் அகற்றப்பட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : புறம்பான கருத்துக்களை உடைய நூல்கள் இதுவரை ஏதும் படிப்பகங்களிலே வைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அவையுரிமைக் கேள்வி

### பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட நிகழ்ச்சிகள் சிலவற்றை "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ் வெளியிட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையுரிமை மீறல் பற்றிய ஒரு முன்னறிக்கையை திரு. தங்கமணி அவர்கள் நேற்றுக் கொடுத்திருந்தார்கள். அதை இன்று எடுத்துக்கொள்வதாக நான் நேற்று அறிவித்திருந்தேன். திரு. தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் பின்வருமாறு உள்ளது :—

" I raise a question of privilege against the English Daily, the Indian Express '.

On page 9 of the Madras edition, dated 13-7-1971 under the Heading ' Angry Exchanges over Bus permit Ceiling Bill ' the following words occur.

After powers of patronage etc.

' The Food Minister Mr. Shanmugham insisted on Member making specific charges. This led to a series of exchanges between Mr. Shanmugam and Dr. Hande followed by intervention by the Transport Minister, Law Minister S. Madavan and Chief Minister Mr. Karunanithi. Finally N. Veeraswamy (D.M.K.) on a point of order asked the Speaker either to direct Dr. Hande to withdraw his offending remark against the Food Minister or expunge it from the Proceedings '.

As the proceedings show, the speaker was pleased to expunge the entire proceedings lasting 25 minutes.

As such I submit it involves privilege inasmuch as what is not part of the recorded proceedings is given and commented upon."

நேற்று முன்தினம் இந்த அவையில் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேச்சையில் குறிப்பிட்ட சில பகுதிகளையும், அப்போது ஏற்பட்ட மற்ற குறுக்கீடுகளையும் அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றிவிட நான் ஆணையிட்டது அவையினருக்கு நினைவிருக்கலாம். நேற்று காலை சென்னையில்

வெளிவந்த 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் அவை நடவடிக்கையி லிருந்து நீக்கும்படி ஆணையிடப்பட்ட சில பகுதிகள் வெளியிடப்பட்டிருப்பதாக திரு. தங்கமணி அவர்கள் தம் அறிக்கையில் குறிப்பிட்டு, எனவே இது அவை யுரிமை மீறிய செயல் என்று கூறியுள்ளார்.

திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட பகுதியை நான் படித்துப் பார்த்தேன். அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி என்னால் ஆணையிடப்பட்ட பகுதிகள் அதில் வெளிப்படையாக இல்லையாயினும், அப்போது ஏற்பட்ட சில குறுக்கீடுகள் அதில் வெளிவந்துள்ளன. டாக்டர் ஹாண்டே அவர்கள் பேச்சை மட்டும் நான் நீக்கிவிடும்படி ஆணையிடவில்லை. அப்போது ஏற்பட்ட குறுக்கீடுகளையும் நீக்கிவிடும்படிதான் நான் ஆணை யிட்டேன். எனவே அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிட்டது இந்த அவையின் உரிமையை மீறிய செயல்தான். சர். எர்ஸ்கின் மே அவர்கள் எழுதியுள்ள பாராளுமன்ற செயல்முறைகளும் நடைமுறைகளும் என்ற புத்தகத்தில் 119-ம் பக்கத்தில்

Instances of misconduct in connection with the publication of debates which has been treated as breach of privilege

என்ற பகுதியிலே "Publishing a proceeding which the House of Lords had ordered to be expunged from the Journals (case of Macleod and Higginbottom, case of the Albion and Evening Advertiser)"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆயினும், இதே அவையில் 1966-ம் ஆண்டு இதே போன்ற ஒரு கேள்வி எழுந்தபோது, அப்போது இருந்த பேரவைத் தலைவர் பத்திரிகையை எச்சரித்துவிட்டு, நீக்கப்பட்ட பகுதிகளை வெளியிடுவது முறைகேடானலும், இது அறிந்து செய்யப்பட்ட குற்றமல்ல என்பதால் மேல் நடவடிக்கை எடுக்காமல் எச்சரிக்கையே போதுமானது என்று தீர்ப்பளித்துள்ளார்.

A Member raised a matter of privilege regarding the publication of certain words ordered to be expunged by the Chair, in 'Navasakthi', The Chair warned the press that they had no authority or right to publish the words which had been ordered to be expunged; however as it appeared that the mistake had been committed out of inadvertence, the matter might be dropped with a warning that such mistakes should not recur, என்று, எச்சரிக்கையே போதுமானது என்று தீர்ப்பளித்தார்.

எனவே, நீக்கப்படுகின்ற பகுதிகளை வெளியிடுவது அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்பதை மீண்டும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் பொதுவாகவும், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்குக் குறிப்பாகவும், நினைவுபடுத்த விரும்புகிறேன். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு இந்த எச்சரிக்கை போதுமானது என்று கூறி இதை இத்துடன் முடித்துவிட விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைத் தலைவர் தீர்ப்புக் கொடுத்த பிறகு அதைப்பற்றி விவாதம் தொடங்குவது கூடாது.



## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்

### காவிரி நீர்த் தகராறு குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது மத்திய அரசு எடுத்துள்ள நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 42-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு பிரச்சினையைப் பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி, டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எம். ஏ. லத்தீப் ஆகிய மூவரும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. தங்கமணி அவர்கள்

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்த அவசரத் தீர்மானத்தை உங்கள் அனுமதியின் பேரிலே வாசிக்கலாம் என்று கருதுகிறேன்:

"காவேரி ஆற்றின் நீர் பங்கீட்டைப் பற்றி மைசூர் அரசு எடுத்துக் கொண்டு இருக்கிற ஒருதலைப் பட்சமான சில அணைக்கட்டுகளுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதோடு நம்முடைய சட்டப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றிய, ட்ரிப்யூனலுக்கு விட வேண்டு மென்ற கோரிக்கையை நிராகரித்து இருப்பதும் தமிழ் நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய நிகழ்ச்சியாக உள்ளது. எனவே இதுபற்றி சட்டப் பேரவை இன்று விவாதிக்க வேண்டுமெனக் கோருகிறேன்."

காவேரி சம்பந்தமாக டில்லியில் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து அதன் பேரில் மத்திய அரசு அமைச்சர் அவர்கள் தம்முடைய அறிக்கையை வெளியிட்டார்கள். அதைத் தொடர்ந்து அவர் பேசிய விஷயங்களைப் பார்த்தால், 'ஷெட்யூல்டு', 'நான்-ஷெட்யூல்டு' என்று பிரித்துக் கொண்டு இந்தக் காவேரியில் இருந்து வரக்கூடிய தண்ணீரைப் பொறுத்து, ஏதாவது ஒரு ஆற்றில் அணைகட்டுவது தடுக்கப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று தோன்றக்கூடிய அளவில் பேசியிருக்கிறார்கள். அந்த மாதிரிப் பேசியிருப்பது இந்தச் சபை ஏகோபித்து நிறைவேற்றிய தீர்மானத்தைப் புறக்கணிப்பதாகவும், அந்த மாதிரி நிலையை மத்திய அரசு எடுக்குமானால் அது தமிழ்நாட்டுக்குப் பாதகமாக இருக்கும் என்பதாலும், அந்த நிலையை மத்திய அரசு எடுக்க இந்த அரசு அனுமதிப்பது சரியல்ல என்ற காரணத்தாலும், அதுபற்றி அரசு போதிய நடவடிக்கை எடுக்காததாலும், இது ரொம்ப முக்கியமான விஷயம், சமீபத்தில் நடந்த விஷயம் என்ற காரணத்தால் இது சம்பந்தமாகச் சபையை ஒத்தி வைத்து விவாதிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்ற முறையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

**Dr. H. V. HANDE:** Sir. I have given notice of the following adjournment motion:—

"I move that the business of this House stands adjourned to discuss the serious situation arising on account of the new stand taken by the Central Minister for irrigation as per the statement made by him in the Lok Sabha on 13-7-1971."

Sir, I request the Hon. Speaker to adjourn this House for another important reason, namely, though we had discussed this question on the 8th of this month a new situation has arisen because all these months we were under the impression that the Hon. Minister for Irrigation in the Central Government would refer our problem to a Tribunal. Even in our discussions on the 8th

instant, it looked as if we were all a little upset about the delay in referring the dispute to a Tribunal. Now it looks as though and we were given the impression that he is going to drop the very idea of referring it to the Tribunal. With that as the premises we were all discussing and even the Hon. Chief Minister was good enough to say that we will not precipitate anything for another fortnight. He wanted to give some time also to the Central Government, But suddenly during the course of the calling attention notice in the Parliament, the Central Minister had given certain answers—we do not go in to the merits or demerits of the discussion there but as far as it concerns our State we have to express our views and so, for that we want the adjournment of the House.

From the answers given on the floor of the Lok Sabha it looks as though there is no idea of referring this dispute to the tribunal and no assurance has been given that the limit flows will be guaranteed to Tamil Nadu. Even that assurance has not been given, that is another matter that we should be allowed to discuss.

Then again, Sir, when a question was raised by an hon. Member Mr. Muktir Singh Malik, the Hon. Minister for Irrigation in the Centre answered that no protection would be given even to the riparian rights of the ryots of Thanjavur and Tiruchirappalli. At least we were under the impression that the riparian right there will be looked after. According to the answer that he gave to the hon. Member from Haryana, it looks as though that even that we are not going to get.

Another problem that he has also posed is the problem of Kerala. That is coming into the picture in a big way. The position of Tamil Nadu has become precarious on account of the shifting of the stand by the Hon. Thiru K. L. Rao. The statement of Dr. K. L. Rao amounts to delaying tactics and a process by which he can gain time.

I am afraid we will be confronted with a *fait accompli*, an accomplished fact, if the dams across the Hemavathi and other tributaries are built. Because of a such a serious nature of the matter and because we cannot wait till one week or 10 days till the leaders of parties meet, I request the Hon. Speaker to give at least one hour or one and a half hours in this house so that again the dicussion can be taken up in the light of the new developments that have taken place. I request the Hon. Speaker to adjourn the business of the House to discuss this.

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, I have given notice of an Adjournment Motion to discuss the serious situation arising out of the reported new move by the Union Irrigation Minister. Thereby there is a clear attempt to delay the appointment of a Tribunal as unanimously recommended by this House. Even after such a recommendation, if the Union Minister feels that it should be discussed with the M.Ps., I submit, Sir, that it is a clear move to delay the appointment of a Tribunal and to establish



or at least to feel the necessity of asking the Government of Mysore to at least suspend temporarily the construction of the dams and reservoirs that are being constructed across the scheduled streams. Therefore, even after the recommendation made by this House, the stand taken by the Union Irrigation Minister creates a grave apprehension in the minds of the members of this House and also in the minds of the people of Tamil Nadu in their entirety. Therefore, this is a matter of urgent public importance and it is a problem involving the life and death of the people of Tamil Nadu. I, therefore, beg to move that the business of the House may be adjourned to discuss the same.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சுதந்திராக் கட்சியின் சார்பிலும், முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலும் தரப்பட்டுள்ள இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களை யொட்டி சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

அண்மையில் இந்த மாமன்றத்திலும், மேலவையிலும் தமிழ்நாட்டு மக்களுடைய குரலை எதிரொலிக்கின்ற வகையிலும் தமிழ்நாட்டுக்கு வர இருக்கின்ற ஆபத்தை உணர்த்துகின்ற வகையிலும் மைசூரின் தன்னிச்சையான போக்கினால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே உலை நேரிடக் கூடும் என்ற அச்சத்தைத் தெரிவித்தும், தீர்மானம் ஒன்றினை நம்முடைய பண்பாடும், நாம் கட்டிக் காத்து வருகின்ற நல்ல மரபும் எள்ளளவும் கெடாத அளவுக்கு நிறைவேற்றி அதனை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்து, மத்திய அரசினுடைய பதில் 15 நாட்களுக்குள்ளாக எதிர்பார்க்கப்படுகிறது என்று எதிர்பார்த்து அந்தப் பதிலுக்குப் பிறகு மீண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, மேலே என்ன நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பது குறித்து ஆராயலாம் என்று அறிவித்தும் காவேரி நீர்த் தகராறில் நம்முடைய உணர்வுகளை எடுத்துக் காட்டி இருக்கிறோம்.

ஆனால் அதற்கிடையில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது பதிலுரை பகர்ந்த மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் அளித்திருக்கிற பதில் நமக்கு அதிர்ச்சி தரக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு விடுகிற இந்தப் பிரச்னையில் காலதாமதம் செய்வது மாத்திரமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதுபோல், நடுவர் தீர்ப்புக்கே இவர்கள் விடாத ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள் என்பது போன்று பொருள் ஒலிக்கிற வகையில்தான் திரு. கே. எல். ராவ் அவர்களின் பதில் அமைந்திருக்கிறது.

அவர்களுடைய பதிலில் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளில் மத்திய அரசின் ஒப்புதலைப் பெருமலும் ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளதைப் போன்று மாநில அரசுகளின் முன் இசைவைப் பெருமலும் அந்த அணைகள் கட்டப்படுகிறதே என்பதைப் பற்றி எந்தப் பதிலும் அவர்களது உரையில் இருப்பதாகத் தெரியவில்லை. அது தெரியாதது மட்டுமல்ல. அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிற ஆறுகளில் கட்டப்படுகிற அணைகளுக்கு நாம் அனுமதி வழங்குவது என்பது சிரமமானது என்று கூறிவிட்டு ஆனால் அதே நேரத்தில் பட்டியலில் சேர்க்கப்படாத

ஆறுகளில் சேர்க்கப்படுகிற அணைத் திட்டங்களுக்கு மத்திய அரசு கன்காரன்டு ஒப்புதல் வழங்கும் என்று கூறியிருப்பது குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்த கதையாகத்தான் இருக்கிறது. வெந்த புண்ணில் வேலைச் சொருகுவதுபோல் திரு. கே. எல். ராவ் அவர்களின் பேச்சு அமைந்திருக்கிறது என்பதை நான் தமிழக மக்களின் சார்பாக மிகுந்த வருத்தத்தோடு சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பேச்சுக் குறிப்பில் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் :

So far as the clerance of projects in the non-scheduled rivers in the Cauvery basin is concerned, that will be done and there is no difficulty about it. '

என்று குறிப்பிட்டு விட்டார்கள். பிறகு,

' As regards the Clearance of projects in the scheduled rivers this is a matter on which the Government of India has got to be very careful. They have got to satisfy all the requirements of everybody. Unless there is general agreement between the three parties, it will not be possible to clear the projects on the Scheduled rivers. '

என்று ஷெடியூல்ட் ஆறுகளில் அந்த அணைகளைக் கட்டுவதற்கு மூன்று மாநில அரசுகளுடைய, இந்த மூன்று தொடர்புடைய கட்சிக்காரர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்தாக வேண்டும், அதில்லாமல் ஒப்புதல் அளிப்பதற்கு இயலாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இங்கு எழுப்புகிற கேள்வி எல்லாம் மூன்று பேர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளாமல் ஒப்புதல் அளிக்க முடியாது என்று கூறுகிறார்கள்; ஒப்புதல் பெறாமல் கட்டிக் கொண்டு போகிறார்கள் அவர்கள், அதற்கு இவர்கள் இதுவரையில் என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதுதான் நம் கேள்வி. தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பது என்று சொல்வார்கள். இப்போது மத்திய அரசாங்கம் விழித்துக் கொண்டிருப்பதுபோல் காட்டிக் கொள்கிறது. ஆனால் அவர்கள் தொடையில் கயிறு திரிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இந்த நிலையில், தமிழக அரசின் சார்பில் நாம் நிறை வேற்றியிருக்கிற தீர்மானம் நாடாளுமன்றத்தில் எள்ளி நகையாடப்பட்டிருக்கிறது என்பதை இம் மாமன்றத்தின் மூலம் தலைவர் அவர்களே, உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து அது இந்தப் பேரவையையே அவமானப்படுத்தியதாகக் கருதுகிறேன். அதற்கு தங்கள் கருத்தினையும், இந்தப் பேரவையின் உணர்ச்சிகளையும், பெருமைகளையும் காப்பாற்றுகிற அளவிற்கு தாங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கு மைசூர் மாநில நாடாளுமன்ற உறுப்பினர் பேசும்போது

' Why should the Tamil Nadu Government come forward and create *hulla gulla*, I do not understand. The Agreement is subsisting till 1974. So, why should they make this *gullatta* and *hulla gulla.*'

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் 'ஹல்லா ஹுல்லா' என்பது என்ன வென்று தெரியவில்லை. கலாட்டா என்பது புரிகிறது. இரண்டு வார்த்தைகளும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் தான், தமிழக அரசு இங்கே ஒரு



தீர்மானத்தை நிறைவேற்றுகிறது என்றால் அதை ஹல்லா ஹுல்லா, கலாட்டா என்று இரண்டு வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்த அரசின் சார்பில் இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை கலாட்டா தீர்மானம் என்பது போலவும் ஹல்லா ஹுல்லா என்றும் உபயோகிக்கத் தகாத வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்தி இங்கு ஒரு குழப்பமான வெறும் வாட்டுக் கூச்சல் எழுப்புகிற கலாட்டாத்தனமான ஒரு நிலைமையில் தமிழக அரசு தீர்மானம் செய்திருக்கிறது என்ற அளவில் நாடாளுமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது, அது இந்த பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றிய அத்தனை உறுப்பினர்களுடையவும் உரிமைகளையும் பாதிப்பதைப் போல்தான் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, இந்தப் பேரவையின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய இந்த மன்றத்தின் தலைவராக உள்ள தாங்கள் அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நான் கருதுகிறேன்.

திரு. கே. எல். ராவ் அவர்கள் பேசும்போது இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல் அமைச்சர்கள் மாநாட்டை பலமுறை கூட்டி இப்போது புதிதாக மூன்று மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் அழைத்துப் பேசப் போகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களோடு பேசுவதையும் நான் குறைவானது என்று கூறிட விரும்பவில்லை. முதல் அமைச்சர்கள் மட்டத்தில் பேசப்படுகிறபோது கிடைக்கும் புள்ளி விவரங்களை விட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் பேசப்படுகிற நேரத்தில் என்ன அதிகமான புள்ளி விவரங்கள் கிடைத்து விடும் என்று எனக்குத் தெரியவில்லை. முதல் அமைச்சர்கள் கூடுகிற நேரத்தில் அந்தந்த அரசிற்குரிய பொறியாளர்கள் அந்தந்த அரசுக்குரிய அதிகாரிகள் அனைவரும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளக்கூடிய நல்ல சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த நேரங்களை எல்லாம் தவற விட்டு விட்டு திரு. ராவ் அவர்கள் அவர்களே வெளிப்படையாக எனது முயற்சி தோற்றுவிட்டது. பேச்சுவார்த்தை முறிந்து விட்டது என்று அறிவித்த பிறகு மறுபடியும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் அழைத்துப் பேசப் போகிறேன் என்பது காலதாமதம் செய்வதற்காக ஒரு சாமாளிப்பான வார்த்தையாகத்தான் எனக்குத் தோன்றுகிறதே தவிர வேறு அல்ல.

ஆகவே, நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசப் போகிறேன் என்று குறிப்பிடுவது தஞ்சை, திருச்சியில் இருக்கிற, தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளுடைய பிரச்னையை அவர்கள் மறந்து விட்டு இதை ஒரு அரசியல் ரீதியில்தான் கவனிக்கிறார்கள் என்பதை எண்ண எண்ண வருந்தாமல் இருக்க முடியாது.

அங்கு நமது நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறுக்கிட்டு ஒன்றை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த நியாயமான வாதத்திற்கு நாடாளுமன்றத்தில் திரு. ராவ் அவர்கள் எந்த பதிலும் சொல்லவில்லை. 1956-ம் ஆண்டு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்டை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டி 1956-ம் ஆண்டு இன்டர் ஸ்டேட் வாட்டர் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் செக்ஷன் 4-ல்

' When any request is received from any State Government in support of any water dispute and the Central Government is of opinion that the water dispute cannot be settled by negotiation,

the Central Government shall by notification in this official Gazette constitute a Water Dispute Tribunal for the adjudication of the water dispute. '

என்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி அவர்கள் பேசிய நேரத்தில் அதற்கும் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் எந்த விடையும் பகர்ந்தாரில்லை.

திரு. கே. எல். ராவ் அவர்கள் பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வேளை தனக்கு மேல் மட்டத்தில் உள்ளவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை, ஆகவே இன்னும் பேச்சுவார்த்தைகளுக்கு இடம் இருக்கிறது என்று கருதுவார்களேயானால் இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் மைசூரில் நடைபெற்ற தேர்தலின் போது வெளிப்படையாகவே ஒரு கூட்டத்தில் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நடுவர் தீர்ப்பைத் தவிர இந்தக் காவிரிப் பிரச்சினைக்கு வேறு வழியில்லை என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவ்வளவிற்கும் பிறகு நாம் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மதிக்க வேண்டுமென்று கேட்பது நியாயத்திற்கு புறம்பானதா? நீங்கள் அணைகளைக் கட்டிக்கொள்ளுங்கள், எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் பாதிக்கப்படாமல் அதற்கு உத்தரவாதம் கொடுங்கள் என்று கேட்பது நியாயத்திற்குப் புறம்பானதா என்பது தெரியவில்லை. ஆகவே நியாயத்தைச் சந்திக்க மத்திய அரசு இன்று தவறியிருக்கிறது என்பதை நானும் எடுத்துக் காட்ட அந்த அளவிற்கு இங்கு தரப்பட்டிருக்கிற ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இந்த விளக்கங்களைத் தர வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதால் ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு மேலும் இதுபற்றிய விவாதத்தை விரைவில் நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைக் கூட்ட இருப்பதால் இந்தத் தீர்மானத்தை இதற்கு மேல் விவாதிப்பதற்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன் என தலைவர் அவர்களே, தங்களிடம் எடுத்துச் சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு தேவையில்லை என்று நான் கருதுகிறேன். எனவே இந்தத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## 4. அவையுரிமை மீறல்

### மக்களவையில் திரு. சிவப்பா அவர்கள் காவரி நீர்த் தகராறு பற்றி தமிழ்நாட்டின் நிலை குறித்து விமர்சித்து உபயோகித்த வார்த்தைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தைச் சொல்கிறபோது லோக் சபாவில் நடைபெற்ற விவாதத்தில் கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த லோக் சபா உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சில வார்த்தைகள் இந்த மன்றத்தினுடைய மதிப்பைக் குறைப்பதாக எடுத்துச் சொன்னார்கள்.

**(6) அறிவிப்பு**

**தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்கள், வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) சட்ட முன்வடிவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்கள், வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்வதற்கும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

**(7) அரசின் சட்ட முன் வடிவுகள்.**

**தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நீதி மன்றக் கட்டணங்கள், வழக்குகள் கட்டண மதிப்பீடுகள் (திருத்த) சட்ட முன் வடிவு.**

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

" That leave be granted for the introduction of the Tamil Nadu Court Fees and Suits Valuation (Amendment) Bill 1971."

The motion was put and carried and leave was granted."

THE HON. THIRU S. MADHAVAN, Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

**(8) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).**

**(அ) நிதிக் கோரிக்கை எண் 3—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 1½ மணி நேரம் தான் இருக்கிறது. இரண்டு மான்யங்களும் அவற்றின் மீது விவாதமும், நேற்று நிறைவேற்றப்படாத மசோதாவும் சேர்த்து, மொத்தம் மூன்று இருக்கின்றன. இருக்கிற 1½ மணி நேரத்தில் முடித்து விடலாமா, அல்லது மாலையும் வைத்துக் கொள்ளலாமா, அல்லது அவையின் நடவடிக்கைகளை 2 மணிவரை நீடிக்கலாமா? மாலையில் வைத்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சௌகர்யமாக இருக்குமா?

THIRU R. PONNAPPA NADAR: We can sit till 2 O' clock.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விற்பனை வரி மானியத்திற்கு 1 மணி நேரமும், எழுதுபொருள் அச்சுத்துறை மான்யத்திற்கு ½ மணி நேரமும் வைத்துக் கொண்டு நாளை மசோதாவை வைத்துக்கொள்ளலாமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மேலும் ½ மணி நேரம் அவை நடவடிக்கைகளை நீட்டலாம். அநேகமாக 2 மணிக்குள் முடித்து விடலாம். மசோதாவை முடித்துக் கொண்டு, மான்யக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Will half an hour be enough for Demand " Stationery and Printing " விற்பனை வரி மான்யத்தின் மீது விவாதம் 1 மணி நேரமும், எழுதுபொருள் அச்சுத்துறை மான்யத்தின் மீது விவாதம் ½ மணி நேரமும் என்றால் எப்படி விவாதம் முடியும்? மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மசோதாவை 29-ம் தேதி வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மசோதா 29-ம் தேதி மேல் சபையில் விவாதிக்கப்படவேண்டும். அப்படி இந்த மசோதாவை 29-ம் தேதி வைத்துக் கொண்டால் மீண்டும் 2 நாட்களுக்கு அந்த சபையை வைக்க வேண்டும். மசோதாவை இப்பொழுதே முடித்துவிட்டால் இப்போதே அனுப்பிவிடலாம். அப்போதுதான் அந்த அவையின் நிகழ்ச்சிகளுக்கு வசதியாக இருக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மானியக்கோரிக்கைமீது பேசுவதற்கு மிகக் குறைந்த நேரம்தான் இருக்கிறது. அதிலேயும் நேரத்தைக் குறைத்து விட்டால் எந்தக் கருத்தையும் சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற விவாதத்தில் கலந்து கொள்ளவேண்டுமென்ற ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். இந்த 15 நாள் நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, சில நேரங்களில் விவாதத்தின் போது அவை திண்டாடுகிறது. விற்பனை வரியைப் பொறுத்த வரையில் நாம் பொது விவாதத்தின்போது கூடபேசி இருக்கிறோம். இன்னும் பேசுவதற்குப் சந்தர்ப்பம் இருக்கிறது. அதோடு நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேச இருக்கிறோம். அந்த அளவிலே, இன்றைக்கு இந்த மானியக்கோரிக்கையையும் மசோதாவையும் எடுத்துக்கொள்கிற முறையில் அவை முன்னவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் கூறியது மாதிரி, விற்பனை வரி மானியத்தின் மீது விவாதம், அமைச்சரின் பதில், வாக்கெடுப்பு எல்லாம் சேர்த்து, 1 மணி நேரமும், எழுதுபொருள் அச்சுத்துறை மான்யத்தின் மீது விவாதம் ½ மணி நேரமும், மசோதாவுக்கு ½ மணி நேரமும், என்று வரையறுத்து இந்த அவை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, on the recommendation of the Governor I move:

That the Government be granted a sum not exceeding Rs. 2,64,42,200 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration "

THIRU K.T.K. THANGAMANI: Sir, To discuss the need to reduce Sales-tax and make them all single-point as far as possible I move the following cut motion:—

"That the allotment of Rs. 2,64,42,200 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration be reduced by Rs. 100 ".

THIRU J. JAMES: Sir, to discuss the hardships that will be caused to the public by the proposed enhancement of surcharge on sales-tax I move the following cut-motion :—

" That the allotment of Rs. 2,64,42,200 under Demand No. 3 —General Sales Tax and Other Taxes and Duties—Administration—be reduced by Rs. 100. "

DR. H. V. HANDE : Sir, to discuss the need to hold a conference of Commercial Tax Officers to review the working of the department, I move the following cut-motion :

" That the allotment of Rs. 2,64,42,200 under Demand No. 3 –General Sales Tax and Other Taxes and Duties—Administration —be reduced by Rs 100."

*திரு. கே. என். குமாரசாமி:* பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயங்களை ஒழிப்பதுபற்றி விவாதிக்க "மானியக் கோரிக்கை எண் 3—பொதுவிற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,64,42,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்கிற வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் கொள்கையை விளக்கும் பாலிசி நோட் * ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. அதைச் சட்ட மன்ற நடவடிக்கைகளில் ஒன்றாக ஏற்றுக்கொண்டு, அங்கத்தினர்கள் கருத்துக்களை வழங்கினால், என்னுடைய பதிலில் என் விளக்கங்களைச் சொல்லலாம் என்ற வகையில், அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I have to make only a few observations. Sales tax is the most vicious tax that has ever been invented in this country. It is, unlike other taxes, not a tax on profits but on living. But it is a tax on purchase. It came as a harmless thing. Two main things are affected by the position of sales tax, namely, prices and employment because at every stage there is a tax and that tax is passed on to the consumers, whether he is poor, rich or extremely rich whatever his status is, he has to pay the tax. That is why in many foreign countries there has been a purchase tax and that purchase tax is only a single point tax at the last stage which is the stage of consumer. And there it is a sort of preferential tax.

On luxury goods the consumer tax is high, on essential goods the consumer tax is low and on certain more essential goods, there is no consumer tax at all. But here in our State starting with a harmless one pie, it hos reached the stage of 3½ per cent to-day. The multi-point sales sax ultimately reaults in about 10 to 12 per cent because of 3 or 4 stages of a transaction and the prices are also going up. So, the first thing for this Government is to see whether the amiunt now realised by way of this tax can be collected in a better way, in a more discreet way, not affecting the ordinary consumers whose purchasing capacity is not very much and also because the prices of essential goods are going up.

* 24–260-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





Secondly, I have already spoken here that instead of having a flat rate increase, it would have been much better if luxury goods are taxed more and essential goods are omitted. I do not want to repeat it.

The most important point I wish to bring to the notice of this House is this. Sales-tax has a very injurious effect on cost of manufacture of any commodity. All the components that go into the manufacture of commodities in industries are also taxed at various stages. The smaller the industry is, the greater the tax it pays. The big wholesale industries pay less tax because they purchase direct from the manufacturers. The small industries purchase from the retail market and in such cases the small industries have to pay tax at every stage. So, it is affecting production and also prices of industrial articles. It is also stopping the export of goods to other countries because in the export prices sales tax at various stages is also included in the cost of manufacture. So, in our own interest we should seriously think about the policy of the present sales tax system, find out what its real effect is on the prices, what its real effect is on employment and industries and plan such a system by which our industries will not suffer.

Take, for example, even the handloom goods. There is no sales tax on handloom goods, but there is sales tax on dyes, chemicals and various articles used in the manufacture of handloom goods. What is happening to prices of handloom goods? Prices are inflated because of the sales tax system. Similarly due to the high cost of fuel many mills are closed in India. There may be many reasons for the closure of the mills. But one of the main reasons is, the cost of production has gone up because of the incidence of sales tax. The cost of production increases because of the high cost of fuel which is the most essential component in the manufacture of textiles.

In many mills during the last 4 or 5 years there have been steep increases in these duties. What I say is, the problem has reached the climax, the problem of prices, the problem of inflation and the problem of unemployment. A real crisis has been created. That is why I think the Government will do well to go into the policy of sales tax and see whether a new method cannot be devised by which the same quantum of sales tax can be collected, but without affecting the prices of essential commodities very much, without affecting the industries and in such a way as it will give encouragement to industries. I do not want that sales tax should be dropped, but I want a new policy to be evolved.

(Mr. Deputy Speaker in the Chair.)

Another small point, and I am finished. In the case of many articles, particularly certain cheap luxury articles, there is a difference between the taxes in Tamil Nadu State, Andhra State, Kerala State and Mysore State. What is happening is this.

Many of the buyers who go to Andhra buy cheap radios and many such items there where the tax is low. So, a Conference of the representatives of States may be held in the country's interest. Sales tax should be imposed in such a way, the policy should be altered in such a way that these lacunae are overcome and the Government do not suffer any loss of income, but at the same time the various difficulties I have mentioned in the matter of prices, inflation and employment are avoided.

Thank you, Sir.

* **திரு. ஏ. எம். இராஜா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்களால் அவைமுன் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

விற்பனை வரி 1966-67-ம் ஆண்டில் ரூ. 56 கோடியாக இருந்தது. இந்த நான்கு ஆண்டுகளில், ரூ. 37 கோடி அதிகமாக வசூல் ஆகி, ரூ. 93.27 கோடி என்ற அளவுக்கு உயர்ந்திருப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதன்மூலம் இந்த நாட்டில் வணிகத் துறை நல்ல முறையில் செயல்பட்டிருக்கிறது என்பது தெளிவு, அந்த வகையில் நம்முடைய அமைச்சரவையையும், அரசையும் நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த நாடும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இந்த ஆண்டு முதல் சிறிய வியாபாரிகளுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். ரூ. 15,000 ஆக இருந்தது சென்ற ஆண்டில், இப்பொழுது ரூ. 25,000 என்ற அளவில், அந்த அளவுவரையில் வரி செலுத்த வேண்டாம் என்று விலக்கு அளித்திருக்கிறார்கள். இதன் மூலம் சுமார் 41,000 பேர்கள் பலனடைகிறார்கள். அதேபோல், இந்த மொத்த விற்பனைவரி விலக்கின்கீழ் 75,000 என்றிருந்ததை 1 லட்சம் என்று உயர்த்துவதன் காரணமாக, பலர் பலன் அடைகிறார்கள். உண்மையிலேயே சிறிய வியாபாரிகள் இதற்காக நம் அரசை வாழ்த்துகிறார்கள். அந்த முறையில் இன்று நல்ல முறையில் இந்த வரிவிதிப்பு நடத்தப்படுகிறது.

மூன்று சதவிகிதத்திலிருந்து மூன்றரை சதவிகிதம் என்று உயர்த்தப் பட்டிருப்பதில் ½ சதவிகிதம் உயர்த்தியதால், சாதாரண மக்களுக்குத் தொல்லை வந்து விடாது. இந்த அரசுக்கு வருமானமும் கிடைக்கும். 3 சதவிகிதம் ஆக இருந்தபோது 93 கோடி என்றால், இப்பொழுது இந்த ½ சதவிகித உயர்வால் குறைந்தது 10 அல்லது 15 கோடியாவது கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். அந்த முறையில் இது ஒரு நல்ல அம்சமாக இருக்கிறது.

அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது மோட்டார் எண்ணெயின் மேல் வரி விதித்து இருப்பதை மத்திய சர்க்கார் எடுக்கவேண்டும் என்று சொல்லுவதாக செய்தித்தாள்களில் பார்த்தேன். பெட்ரோலியம் அண்ட் கெமிகல்ஸ் துறையைச் சேர்ந்த அமைச்சு நம்முடைய அரசு விதித்த விற்பனை வரியை எடுக்க வேண்டும் என்று, கோரிக்கை விட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இதைத் தள்ளாவிட்டால், பயன் படுத்துகிறவர்களிடம் கூடுதல் வரி விதிக்க எங்களுக்கு அனுமதி வேண்டும்





என்று கேட்கிறார்கள். நம்முடைய அமைச்சரை நான் வேண்டிக் கொள்வது எந்தக்காரணத்தைக் கொண்டும் மத்திய சர்க்காரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

மோட்டார் எண்ணெயின் மேல் போட்டிருக்கிற வரியைத் தள்ளக் கூடாது. மத்திய சர்க்காருடைய கடனைக் கொடுக்கும்போது, வட்டியை ஒத்திவையுங்கள் என்று நாம் கேட்டால், அவர்கள் மாட்டேன் என்கிறார்கள். நாம் ஏன் இந்த வரியைத் தள்ள வேண்டும்? அதேபோல் பயன் அடைகிறவர்கள் மேல் ஸர்சார்ஜ் போடக் கேட்கும் உரிமையையும் அனுமதிக்கக் கூடாது. அதைப் பற்றி விளக்கமாக அமைச்சர் தன்னுடைய பதிலில் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கடைசியாக, அமைச்சர் அவர்கள் அவர்களுடைய உரையிலே குதிரைப் பந்தயத்தின்மூலம் 182 லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டுமென்று மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் அவர்கள் வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படவேண்டியதில்லை. குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதால்மட்டும் சூதாட்ட மனப்பான்மை உள்ளவர்கள் சூதாடாமல் இருந்து விடுவதில்லை. ஆகவே, நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்தக் குதிரைப் பந்தயத்தை நாட்டுடைமையாக்கி விடவேண்டும். அப்படிச் செய்தால் 4 கோடி ரூபாய் நமது அரசாங்கத்திற்கு வருமானமாகக் கிடைக்கும்.

சென்ற ஆண்டு கணக்கைப் பார்த்தால், ரேஸ் கிளப்பில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. அங்கே குதிரைப் பந்தயம் நடத்துகிறவர்கள் யாரும் முதலீடு போடுவதில்லை. ரேஸ் கிளப்பிற்குக் குதிரையும் சொந்தமாகக் கிடையாது. ஒருசில பெரிய மனிதர்கள் அந்த ரேஸ் கிளப்பை வைத்துக் கொண்டு தங்களுடைய இஷ்டப்படி விளையாடுகிறார்கள். வருமான வரி என்று சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு ரூ. 30 லட்சம் காட்டியிருக்கின்றார்கள். இந்தக் குதிரைப் பந்தயத்தையே நாட்டுடைமையாக்கிவிட்டால் இந்த வருமான வரியும் அரசாங்கத்திற்கு மிச்சமாகும். குதிரைச் சொந்தக்காரர்களுக்கு மானியமாக ரூ. 11 லட்சம் கொடுத்திருக்கிறார்கள். குதிரைச் சொந்தக்காரர்கள் குதிரை வாங்குகிறார்கள். வெற்றி பெற்றால், அந்தக் குதிரையின் சொந்தக்காரருக்கு வெற்றிப் பணமாக ஒரு தொகை அவர்களுக்குக் கிடைக்கிறது. இதுபோக ரூ. 11 லட்சம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது பொது மக்களுடைய பணம்.

குதிரைச் சொந்தக்காரர்களே ஸ்டூவேர்ட்ஸ்களாக இருக்கிறார்கள். அவர்கள் வைத்ததுதான் சட்டமாக இருக்கிறது. அவர்களுக்கு வருகின்ற வருமானத்தைத் தணிக்கை செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. நம்முடைய அரசாங்க அதிகாரிகளே அதைத் தணிக்கை செய்தால் இப்படிப்பட்ட ஊழல்கள் தவிர்க்கப்படும். குதிரைப் புல் வாங்க மானியம் ரூ. 3 லட்சம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. வெற்றிபெற்ற குதிரைக்கு அதன் சொந்தக்காரருக்கு ரூ. 40 லட்சம் கொடுக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகை எந்த ரேஸ் கிளப்பிலும் கொடுப்பதில்லை. நமது சென்னை ரேஸ் கிளப்பில்தான் இவ்வளவு உயர்ந்த தொகை கொடுக்கப்படுகிறது.

அதேபோல அலுவலக நிர்வாகிகள் என்ற பேரால் 136 பேர்கள் இருக்கிறார்கள். அலுவலர்களையும் சேர்த்து மொத்தம் 136 பேர்கள். இதிலே அதிகாரிகள் மாத்திரம் 13 பேர்களேதான். இவர்களுக்கு மொத்தம் செலவு [illegible] லட்சம். இந்த 13 அதிகாரிகளுக்கு மாத்திரம் ரூ. 7 லட்சம். செயலாளர் என்ற அதிகாரிக்கு ரூ. 7 ஆயிரம் மாதச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. அவருக்கு ஏர் கண்டிஷன்ட் பங்களா. ஏர் கண்டிஷன்ட் கார். இவைகளெல்லாம் போதாது என்று ரூ. 7 ஆயிரம் மாதச் சம்பளம். இந்த மாநிலத்தின் கவர்னர் அவர்களே சம்பளத்தைக் குறைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லும் போது, இந்த அதிகாரிகளுக்கு இவ்வளவு பெரிய தொகை. சம்பளம் ஏன் கொடுக்கப்படுகிறது, இதன்மூலம் பொதுமக்களுடைய பணம் எப்படி வீணடிக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துக்கொள்ளலாம்.

அதே சமயத்தில், குதிரைகளுக்காக வெட்டினரி ஆஸ்பத்திரிகள் கட்டியிருக்கிறார்கள். முன்பெல்லாம் நமது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் குதிரைகளுக்குச் சிகிச்சை செய்யப்பட்டது. அதன்மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 20 ஆயிரம்தான் செலவு ஆயிற்று. ஆனால் இப்போது அவர்களே வெட்டினரி ஆஸ்பத்திரிகளைக் கட்டியிருக்கிறார்கள் ரூ. 10 லட்சம் செலவில். அதற்கு ஆண்டு ஒன்றிற்கு ஆகப்போகின்ற நிர்வாகச் செலவு ரூ. 2 லட்சம். இது தேவைதானா? யாருடைய வீட்டுப் பணம்? அரசாங்கமே எடுத்துக்கொண்டால் இந்த வருமானம் அரசாங்கத்திற்கு வருமல்லவா? இந்தத் தொகையைக் கொண்டு பொதுமக்களுக்கு நல்லது செய்ய முடியுமல்லவா? ஆகவேதான் சொல்கிறேன், இது நாட்டுடமையாக்கப்படவேண்டுமென்று.

இந்த ரேஸ் கிளப்களில், நமது அரசாங்கம், கமிட்டி மெம்பர்களை நியமிக்கின்றார்கள். 14 பேர்களுள்ள கமிட்டியில் நமது மெம்பர்கள் 2 பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்கள் சொன்னால் எதையும் கேட்பதில்லை. மற்ற மாநிலங்களில் எடுத்துக்கொண்டால், பெங்களூர், மகாராட்டிரா போன்ற மாநிலங்களில் அரசாங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதேபோல நமது அரசுத்துறையைச் சேர்ந்த மெம்பர்கள், 14 பேர்களில் 8 பேர்களாவது இருக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய கண்ட்ரோலில் ரேஸ் கிளப் வரும். பொதுமக்களுடைய பணம் அங்கே பயன்படுகிறது என்ற காரணத்தால் அரசு கவனத்துடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், நமது அரசாங்க ஆடிட்டர்களே தணிக்கை செய்ய வேண்டும். அப்போதுதான் அங்கே நடக்கின்ற ஊழல்கள் தவிர்க்கப்படும். புக்கிகள் என்று ஒரு கூட்டம் அங்கே இருக்கிறது. இந்தப் புக்கிகள் அரசாங்கத்திற்குச் சரியாகக் கணக்குக் காட்டுவதில்லை. பொதுமக்களைத் திசை திருப்பிவிட்டுவிடுகிறார்கள். தனக்கு வேண்டியவர்களுடைய குதிரைச் சொந்தக்காரர்களுடைய குதிரை வரும்படி செய்துவிடுகிறார்கள். இந்த புக் மேக்கர்களை உடனடியாக ஒழித்துவிட வேண்டும். ரூ. 1,000, 500, 100 என்ற கவுன்டர்களை நாம் திறந்து விட வேண்டும்.

மற்றொரு முக்கியமான விஷயம். கிளப் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது. 25 சதவிகிதம் கமிஷன் என்று எடுத்துக்கொள்கிறார்கள். அரசுக்கு 15 சதவிகிதம், அவர்களுக்கு 25 சதவிகிதம் என்று இருக்கிறது. இது குறைக்கப்பட வேண்டும். அரசுக்கு 25 சதவிகிதம், கிளப்புக்கு 15 சதவிகிதம் என்று ஆக்கவேண்டும்.





அதேபோல, குதிரைகள் வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் கொடுக்கிறார்கள். நமது நாட்டில் வீடு கட்டுவதற்காக மத்திய அரசிடமிருந்து செண்ட்ரல் கோவாப்ரேடிவ் பேங்குகளில் கடன் கேட்கிறார்கள். அதற்கு 6 சதவிகிதம் வட்டி கேட்கிறார்கள். ஆனால், இங்கே பொது மக்களுடைய பணம், சில பெரிய மனிதர்களால், குதிரை வாங்குவதற்கென்று 30 லட்சம் 40 லட்சம் என்று வட்டியில்லாக் கடனாக உபயோகப்படுத்தப்படுகிறது. பல கடன்கள் திருப்பி வருவதுகூட இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் மாற்ற குதிரைப் பந்தயத்தை நாட்டுடமையாக்க வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது எங்கள் கட்சித் தலைவர் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இப்போது பலமுனை வரி பல இடங்களில் இருக்கின்றன. இவைகளையெல்லாம் எடுத்துவிட்டு ஒருமுனை வரியை போட்டால் வியாபாரிகளுக்கெல்லாம் சௌகரியமாக இருக்கும். வசூல் பண்ணவும் இடைஞ்சலில்லாமல் இருக்கும். அதே நேரத்தில் 3 சத விகிதம் ஆக இருந்ததை 3½-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார்கூட 3 சதவிகிதத்திற்கு மேல் உயர்த்தக் கூடாது என்று சட்டமியற்றியுள்ளது. ராஜமன்னார் அறிக்கையிலும்கூட அது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இந்த 3½ சதவிகிதமாக உயர்த்தியது எப்படி சரியானது என்று அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்தில், இப்போது 10% சர்சார்ஜ் சென்னை நகரத்திற்கு மட்டுமிருந்ததை 5 சதவீதம் என்று குறைத்து, பல நகரங்களுக்கும் பரவலாக்கப்பட்டிருக்கிறது. கோவை, மதுரை, திருச்சி, சேலம் போன்ற நகரங்களுக்குப் பரவலாக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பரவலாக்கப்பட்டதை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, மக்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களின்மீது உள்ள வரிகளையெல்லாம் ரத்து செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்த வரிகளையெல்லாம் எடுத்துவிட்டு மக்களுக்கு நல்லது செய்வதுதான் இந்த அரசின் நல்லெண்ணமாக இருக்க முடியும் என்று கருதுகிறேன். உதாரணமாக, கோவை நகரத்திலிருந்து சிறு சிறு வியாபாரிகள் எல்லாம் பொருள்கள் வாங்கி சில்லரைக் கடை நடத்துகிறார்கள். அவர்களுக்கெல்லாம்கூட வரி என்று சொன்னால் அவர்கள் ஜீவனம் செய்யக்கூட கஷ்டமான நிலைமை ஏற்படும். ஆகவே, சிறு சிறு வியாபாரிகள் மீது இருக்கக்கூடிய வரிகளையெல்லாம் ரத்து செய்து, பெரிய வியாபாரிகள், மனோபலியாக இருக்கக்கூடிய முதலாளிகள்மீது வரியைப் போடவேண்டும் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது என் கட்சியின் சார்பாகத் தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லிமுடிக்க விரும்புகிறேன்.

முதலிலே இந்த பட்ஜெட்டில் விற்பனைவரி 3%-லிருந்து 3½%-ஆக உயர்த்தப்பட்டிருப்பது தேவையில்லை, சரியானதல்ல என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையில் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 37.17 கோடி உயர்வு ஏற்பட்டிருப்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இன்னும் உயர்வதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை கடந்த நான்கு ஆண்டுகளுடைய அந்த வருமான உயர்வினைப் பார்க்கும்பொழுது தெரிகிறது. ஆகவே, இப்படி உயருகிற அந்தப் போக்கு நிலவுகிற நேரத்தில் இந்த அரை சதவிகிதம் உயர்த்தி, சாதாரண மக்களின் வாழ்க்கைச் செலவு உயருவதற்கு துணை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்வேன்.

அதே போன்று விற்பனைவரிமீது சர்சார்ஜ் போட வேண்டாமென்ற கோரிக்கை வந்தபோது முதலமைச்சர் அவர்கள் மிகக் கெட்டிக்காரத்தனமாக அதற்கு ஒரு மாற்றத்தைச் சொன்னார்கள். ஏற்கனவே சென்னை நகரத்துக்கு மட்டும் 10% என்று இருந்தது. யாரோ ஒரு நண்பர் வாய் தவறிக்கூட சொல்லியிருக்கக்கூடும். இப்படி சென்னையில் மட்டும் போட்டால் சுற்றுப்புற வட்டாரத்தில் ஏமாற்றுவதற்கு வழி ஏற்படும். அதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டாம் என்று சொன்னதை முதலமைச்சர் அவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இங்கு மட்டுமல்ல, அங்கும் போட்டுவிடுகிறேன் என்று கோவை, சேலம், திருச்சி, போன்ற நகரங்களுக்கும் சுற்றுப்புற வட்டாரங்களுக்கும் போட்டுவிடுகிறேன் என்று கூறி, 5 சதவீதமாகக் குறைத்து அதிகமான வருவாய் வருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் கெட்டிக்காரத்தனத்தை நான் பாராட்டினாலும், இது வேண்டாம், இதைக் கைவிடுங்கள் என்று கேட்டுக் கொள்வேன். காரணம், விற்பனை வரியை உயர்த்தினாலும், அதன்மேல் சர்சார்ஜ் விதித்தாலும் நான் ஏற்கனவே சொன்னதுபோல் சாதாரணமக்கள் தலையில்தான் அது விடியும். அதனை கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, குதிரைப் பந்தயம் இருக்கிறது. நாட்டுடமையாக்க வேண்டுமென்று அருமை நண்பர் ராஜா அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வேன், நாட்டுடமையாக்க வேண்டாம் என்று. அந்தப் பந்தயத்தையே ஒழித்து விடுங்கள். அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, சூதாட்டப் பழக்கம் மக்களுக்கு ஏற்படுகிறது; பல குடும்பங்கள்—சாதாரணக் குடும்பங்கள் அதனால் கெட்டுப் போகின்றன என்பது. அடுத்தது, நாம் ஒரு சோசலிச வாழ்க்கை முறையினைக் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். சோசலிச வாழ்க்கை முறை என்று சொன்னால் உழைப்புதான் முக்கியம். உழைப்புக்கு உயர்விடம் கொடுப்பது. உழைக்கும் திறன் படைத்தவர்கள் உழைக்க வேண்டும். உழைத்துத்தான் வாழவேண்டுமென்கிற அந்த நியதியினை பண்பினை ஏற்றுக்கொள்வதுதான் சோசலிசக் கருத்து. ஆனால் இந்தக் குதிரைப் பந்தயம் என்ற சூதாட்டத்திற்கு இடம் கொடுப்பது மனிதன் உழைப்பின்மீது நம்பிக்கை வைக்காமல், உழைக்காமல் திடீர் பணக்காரனாக ஆக முடியும் என்ற நம்பிக்கை வளர இடமளிக்கும். இந்த நம்பிக்கை முதலாளித்துவ சமுதாயத்துக்குப் பொருத்தமானதாக இருக்கலாம். சோசலிசக் குறிக்கோளை வைத்திருப்பவர்களுக்குப் பொருத்தம் இல்லாத காரணத்தால். அந்த நம்பிக்கையினை மக்களிடத்தில் வளரவிடுகிறோம் என்ற காரணத்தால் அதனைக் கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.



இன்னொன்று இந்த விற்பனை வரி 'எக்லம்ஷன் லிமிட்' விதிவிலக்கு வரம்பை ரூ. 25,000-க்கு உயர்த்தியிருக்கிறதைப் பாராட்டுகிறேன். அதனை ரூ. 30,000-ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன். ரூ. 30,000 வரை விதிவிலக்குத் தருவதன்மூலமாகச் சாதாரணச் சிறுகடை வியாபாரிகள் பயன் அடைவார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு கோரிக்கை உண்டு. சிங்காநல்லூர் நகரம் அண்மையில் அமைக்கப்பட்டது. அதற்கு அருகே கோவை நகரம் இருக்கிறது. கோவை நகரத்தில் இருக்கிற சினிமாக் கொட்டகைகள் வரி 'என்டர்டெயின்மென்ட்டு டாக்ஸ்' பூராவுமே கோவை நகரசபைக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் கோவை நகருக்கு சினிமாவுக்குச் செல்லுபவர்கள் கணிசமான பகுதியினர் சிங்காநல்லூர் நகரத்திலிருந்து செல்லுகின்றனர். அதனால் கோவை நகரசபைக்குக் கொடுக்கப்படுகிற கேளிக்கை வரி, காட்சி வரி, சர்சார்ஜ் இவைகளிலிருந்து ஒரு பகுதியினை சிங்காநல்லூர் நகரசபைக்குக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். செல்வராஜ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய உணவுத் துறை அமைச்சர் விற்பனைவரியின்மூலம் இந்த மாநிலத்துக்கு ரூ. 102.34 கோடி வருமானம் வருகிறது என்று இங்கு குறிப்புத் தந்திருக்கிறார்கள். ஏறக்குறைய நம்முடைய மாநிலத்துக்கு வரக்கூடிய வருவாயில் ஒரு பெரும் பகுதியை இந்தத் துறை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் துறை சீரும் சிறப்புமாகப் பணியாற்றி வருஷாவருஷம் வருவாயைப் பெருக்கியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இங்கே அதிகாரிகள் திறம்படப் பணியாற்றியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதே நேரத்தில் நம்முடைய அரசு இந்தப் பொறுப்பை ஏற்ற பிறகு வருடாவருடம் ஏழை எளியவர்கள் சிறு வியாபாரிகளுக்கு வரிச் சலுகைகள் அளித்து இதன்மூலம் சிறு வியாபாரிகளுடைய மனதை ஓரளவுக்கு நிறைவுபடுத்தியிருக்கிறார்கள்.

கொஞ்சம் முதல்போட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு சலுகை தந்திருக்கிறார்கள். ஏறக்குறைய அந்தச் சலுகையின்மூலம் 25,000 சிறு வியாபாரிகள் இன்றையதினம் பயனடைந்திருக்கிறார்கள் என்று நமது அமைச்சர் குறிப்பில் தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல சிலாப் சிஸ்டம் வரி விதித்து வசூலிக்கிற முறையில் ஒரு லட்ச ரூபாய்க்கு விதிப்பு அளவை உயர்த்தியிருக்கிறார்கள். இதன்மூலம் பெரும் பகுதியினர் ஏறக்குறைய நூற்றுக்கு முக்கால்பாக வியாபாரிகள் இதில் பாதிக்கப்படாமல் ஓரளவுக்கு நன்மை பெறக்கூடிய அளவுக்கு இன்றையதினம் இந்த வரி விகிதம் அமைக்கப்பட்டதற்கு நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் வியாபாரிகளுக்கு இருக்கிற சிறு குறைகளை அப்போதைக்கப்போது அங்கே இருக்கிற அதிகாரிகள் ஒரு குழு அமைத்து அந்த வட்டார மட்டத்தில் தீர்த்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்தக் குழு சரியான முறையில் இயங்குவதற்கு நல்ல சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மாவட்ட அளவில் அங்கே இருக்கிற

விற்பனை வரி விதிக்கிற அதிகாரிகளும் மாவட்டத்தில் இருக்கிற வியாபாரிகள் சமூகமும் ஒன்றாக இணைந்து அவர்களுக்கு இருக்கிற குறைகளை அப்போதைக்கப்போது மாதம் ஒரு முறையாகிலும் ஒரு கருத்தரங்கு வைத்துக் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று நம் அரசு அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடுத்து சென்னையில் பாவலாக இருந்த பல அலுவலகங்களை ஒன்றாக இணைத்து ஒரே இடத்துக்குக் கொண்டுவந்து வியாபாரிகள் பல இடங்களுக்குச் சென்று சிதருமல் அவர்கள் வேலைகளைக் குறைப்பதற்கு நிலைமையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதுவும் பாராட்டுக்குரியது.

அடுத்து கேளிக்கை வரியின்மூலமாக வருமானம் உயர்ந்துகொண்டு வந்தாலும் இன்று சினிமா கொட்டகையில் அதாவது வெளியூர்களில் உள்ள டூரிங் சினிமா நடத்துபவர்கள் கேளிக்கை வரியிலிருந்து தப்பித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை மட்டுமல்ல சரியான முறையில் கண்காணிக்க வேண்டுமென்று இன்றையதினம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதன்மூலம் கோடிக்கணக்கான ரூபாய் நமக்கு வரவேண்டியது வெளியே போகிறது, அவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். அதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து இங்கு குதிரைப் பந்தயம்பற்றிப் பேசப்பட்டது. நாம் அதை நாட்டுடைமையாக்கினால் அண்டை மாநிலமான ஆந்திரா மாநிலம் தயாராகக் காத்திருக்கிறார்கள். அம் மாநில எல்லைக்கருகில் இருக்கிற கூடூர்ப் பகுதியில் 20 மைலுக்கு அப்பால் உள்ள இடத்தில் அதை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நிலம்கூட வாங்கியிருப்பதாக அறிகிறேன். எனவே எந்தக் காரணம்கொண்டும் குதிரைப் பந்தயத்தை எடுப்பதால் நம் அரசுக்கு வருகிற வருவாய் ரூ. 1.80 கோடி நஷ்டம் ஏற்படும். அது மட்டுமல்ல. இதன் காரணமாக இழப்பு ஏற்படுகிறது என்று சொல்லுகிற அந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது, அந்த எண்ணத்தில் இருப்பவர்கள் இங்கிருந்து 20 மைலுக்கு அப்பால் சென்று சூதாட்டம் ஆடத்தான் செய்வார்கள். நம் மாநிலத்தில் இன்றைய தினம் மதுவிலக்கு இருக்கும்பொழுது குடிக்கிறவர்கள் வேறு மாநிலத்துக்குச் சென்று குடிக்கிறார்கள். குதிரைப் பந்தயத்தை எடுத்தால் அதே நிலைமைதான் ஏற்படும். அங்கே இருக்கக் கூடிய குறைகளை மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் சொன்னார்கள். அந்த ரேஸ் கிளப்பில் உள்ள குறைகளை எல்லாம் உடனடியாக நம்முடைய அமைச்சர்கள் தலையிட்டு எந்த அளவுக்கு நிவர்த்திசெய்ய முடியுமோ நிவர்த்திசெய்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள் ஆடம்பரப்பொருள்மீது விதிப்படுகிற விற்பனை வரி வெகுவாக மக்களை பாதிக்கும் என்று. ஆடம்பரப் பொருள்களை விரும்பி வாங்குகிறவர்கள் வசதியுள்ளவர்கள்தான். அவர்களிடம் பண வசதி இருக்கிற காரணத்தினால்தான் ஆடம்பரப் பொருள்களில் நாட்டம்கொண்டு வாங்குகிறார்கள். இதனால் ஏழை மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். நடுத்தர வர்க்கத்ினரும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று சொல்லி இந்த மானியத்தை மொட்டுமொத்தமாக ஆதரிப்பதோடு, வணிகத்துறை அதிகாரிகளுக்கும், வியாபாரிகளுக்குமிடையே உறவு





வருடா வருடம் நெருங்கி நேச உணர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்றாலும் இன்னும் சீரான முறையில் இது அமைய எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, I thank you very much for having given me this opportunity of participation in connection with the Demand moved by the Hon. Minister for Revenue and also the Bill that would be brought forward in this House. I have to offer two or three observations only with regard to increase in the rate of sales tax by half a per cent and also the intended surcharge on the sales tax in the notified places like the City of Madras, Coimbatore, Tiruchirappalli and such other places which would be brought under the purview of the amending Bill

Sir, I submit that these measures are highly regressive in nature and ultimately only the common people are affected by any indirect tax. Particularly when even a small measure of increment is effected in sales tax, only the common people are affected because always it so happens that ultimately the burden is shifted to the common people. Moreover, this gives enough scope for tax evasion and enriches certain sections of businessmen. We are for a Socialist society and we want that the bridge between the poorer and richer sections of the society is narrowed down to the utmost possible extent. But the tax structure is so contrived consistenly it is rather unfortunate that instead of bridging the gap between these two sections, it gives scope only to some business to become richer and richer and also to evade tax.

Now, take the proposed surcharge on sales tax. It is highly regressive in character and also not in conformity with the socialistic ideal that this Government are wedded to.

Now I submit that any tax measure should be so contrived as to bring about the maximum social advantage whether it is an increase in sales tax or surcharge on sales tax. Now, the point is that even a small increment in the sales-tax and a surcharge on sales tax will inevitably result in an increment in the price of articles and ultimately the common people will suffer. We give increment in wages and we give increment in emoluments and salaries. Every increment is visited with the increase in price also and this increase in price results only due to the imposition of the indirect tax.

Therefore, I submit that this is not in conformity with the socialistic ideal. The Government must see that from those persons who indulged in luxurious expenditure, resources must be tapped. The Government must tap money from those persons and not from the poorer sections of the society. Now the middle class is affected in particular. Poorer sections of course carry on

[Thiru M. A. Latheef] [1971 ஜூலை 14

their life and the richer sections also are able to carry on their life and they are able to amass wealth. Those people who get fixed salaries and fixed income alone are affected.

Recently the Collector of a district told me that he is very much in need of money and he is not able to make both ends meet. If that is the case with the Collector of a district, what is the position of the person who is getting a fixed amount of Rs. 100 or Rs. 500. or Rs. 1,000. Therefore I submit that by levying such taxes, there is scope for tax evasion on a large scale and certain businessmen—I also belong to the business community—know how to cheat the Government. The businessmen are wiser than the Ministers and administrators. They have got experience about the tax collection and they know how to cheat the Government and they know how to amass wealth. Whatever the Government may levy, they evade the tax and they become richer and richer.

Sir, in the City of Madras or in such areas, the larger income that they earn is not utilised for capital formation and production purposes. I can understand if these businessmen come forward and use this capital—even though i tis black money—to increase the industrial base of the State and bring about more and more industries and also create employment opportunities. If they do that, the rigour of such taxation will not be there. But what happens is that these persons go only after immovable properties.

Sir, in the City of Madras the middle class people who get a fixed amount are not able to get a decent house because the value of the property has gone up because of the unusual profit of these businessmen earned not out of business but out of tax evasion and the Hon. Minister also knows it very well. Therefore, I submit that the surcharge on sales tax and the increase of half a per cent in the sales tax will inevitably push up the price line. Take the price indices and they have gone up month after month and this will create difficulties to the middle class people with fixed income. So, I submit that these taxes will have regressive effect upon employment opportunities, upon industrial activities and upon the general economic conditions of the State.

As regards surcharge, it was originally intended for the City of Madras alone, but it has been extended to other cities like Tiruchirappalli and Coimbatore. Of course, the rate of tax has been reduced from 10 per cent to 5 per cent but it may not be confined to four cities alone and it may be extended to the whole State.

It will be equitable and in conformity with principles of natural justice if you reduce it from 5 per cent to 1 per cent. As such I submit it is opposed to sound ecnoomic principles and it will not bring about maximum social advantage to the people. Any social measure under a socialist Government should be so contrived as to bring maximum social advantage to the people and there should be quid pro quo to the tax-payer.



1971 ஜூலை 14]

***திரு. எம். ஆர். கண்ணன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய உரையை துவக்குகின்றேன்.

இந்தச் சர்க்கார் கொடுத்துள்ள சலுகைகளை வியாபாரப் பெருமக்கள் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. இப்பொழுது 25 ஆயிரம் ரூபாய் வரைக்கும் விற்பனை வரி கட்ட வேண்டியதில்லை. விற்பனையானது 25 ஆயிரம் ரூபாய்க்கு மேலே அதாவது 28 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய் என்று போனாலும் அவர்கள் மொத்த விற்பனைக்கும் வரி கட்ட வேண்டியிருக்கிறது. 25 ஆயிரம் ரூபாய் வரைக்கும் நாம் சலுகைகள் கொடுத்திருந்தாலும், அதற்கு மேலே வியாபாரம் நடந்தாலும், வியாபாரிகள் 25 ஆயிரம் ரூபாய்க்குத்தான் கணக்குக் காட்டுவார்கள். இதுகுறித்து அரசாங்கம் அருள்கூர்ந்து ஆலோசிக்க வேண்டும். இப்படி வியாபாரிகள் செய்ய ஆரம்பித்தால் நாம் எதிர்பார்த்த அளவில் வரி கிடைக்காத நிலைமை ஏற்படும்.

ஆகவே, 25 ஆயிரம் ரூபாய் வரைக்கும் உள்ள கடைகளுக்கு மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் என்ற அளவில் 'ப்ளாட் ரேட்டில் வரி போட்டால் எல்லோரும் செலுத்தி விடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமக்குக் கிடைக்க வேண்டிய பணமும் வந்து சேரும். யாரும் ஏமாற்றாமல் பணத்தைக் கொடுத்து விடுவார்கள். மேலும், அதற்குக் கணக்குக் காட்ட வேண்டியதில்லை, கணக்கு எழுத வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டால், வியாபாரிகள் சிரமமின்றி இந்த வரியைச் செலுத்தி விடுவார்கள். 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட விதத்தில் வியாபாரம் செய்பவர்களுக்கு அதிகப்படியாக உள்ள விற்பனைக்கு வரி போட்டால் எல்லோருக்கும் நியாயமான சலுகை கிடைத்ததுபோல் இருக்கும். அதாவது மொத்த வியாபாரத் தொகையில் ரூ. 25,000-ஐக் கழித்து வரி வசூலிப்பது.

அடுத்தபடியாக, விற்பனைவரி வாங்க முடியாத நாணயமான ஓர் வியாபாரி ஒழுங்காகக் கணக்கைக் காண்பித்து வரி கட்ட முடியவில்லையென்றால், அந்த வியாபாரியை அதிகாரிகள் வற்புறுத்தி, வரி கட்ட வைக்கிறார்கள். இப்படி அதிகாரிகள் கெடுபிடி செய்வதன் காரணமாக அவன் வியாபாரத்தையே நிறுத்திவிட வேண்டியிருக்கிறது. வியாபாரத்தை மூடிவிடுகிறான். இதன் காரணமாக அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகிறது, அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக பலவித சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, வியாபாரி முறையிட்டால் இந்த விஷயத்தில் அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விற்பனை வரி ஆபீஸ்களையெல்லாம் ஒரே இடத்தில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பது வரவேற்கக் கூடியது. ஒவ்வொரு இடத்தில் இருப்பதால் அந்த இடங்களுக்கெல்லாம் சென்றுவர சங்கடம் ஏற்படுகிறது. எல்லா ஆபீஸ்களையும் ஒரே இடத்தில் கொண்டுவந்தால் நலமாக இருக்கும்.

25 ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து வியாபாரம் செய்கின்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு பத்து ரூபாய் என்ற அளவில் வரி செலுத்த வேண்டும் என்று போட்டால், எல்லோரும் செலுத்தி விடுவார்கள். 25 ஆயிரத்திற்குக் குறைந்து வியாபாரம் செய்கிறவர்கள் கணக்கு வைக்க வேண்டியதில்லை

யென்று அறிவித்துவிட வேண்டும். கணக்கு வைக்க வேண்டுமென்றால், அதற்காக ஒரு கிளார்க், அவருக்கென்று மாதச் சம்பளம் எல்லாம் செலவாகிறது. ஆகவே, அவர்கள் கணக்கு வைக்க வேண்டாம். இப்படி மாதம் பத்து ரூபாய் வரி என்று சொல்கிறபோது, வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர்கள்கூட சிரமம் இல்லாமல் கொடுத்துவிடுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதைப் பற்றி அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, in support of the cut motion of my party I wish to stress a few facts.

It is a known fact that during the discussion on Sales Tax Demand in this House even last year we stressed that a Committee should be appointed to go into the taxation measures that are going to be adopted in the State. I have been stressing this for the last three or four years. The purpose is this. Whenever the Finance Minister or whenever the Finance Secretary finds that there is shortage of funds, as soon as he discovers that some money is required for some purpose, he immediately sends a s.o.s. and the one person who is called upon to provide the funds is the Sales Tax Minister. He or his department is asked to provide the amount to increase some more funds. So what do we find? The sales tax is increased. This is the only elastic source and it is increased.

There is immediately a half per cent increase in multi point tax or there is surcharge. It has been going on for the last 20 years. Now we are in a situation when we have to pay 3½ per cent on general items on multi-point and in some cities there is 5 per cent surcharge. I have been complaining that this is unscientific method. Whenever we have a taxation measure, it should be based on scientific basis. This is not so. It is not the amount that is raised. We must find out what is the optimum level of taxation.

I agree with the observation of my friend Mr. M. A. Latheef that social justice is not done by this measure. We must know what is the amount of taxation that a particular industry can withstand. By increasing the taxation indiscriminately we would be only killing the goose that lays the golden egg. This is what I want to bring home to the Hon. Minister. That is why I say let us have a Committee which will conduct market surveys which will find out the pattern of sales tax in other States, which will find out what would be the effect of this taxation in neighbouring States and in the Centre, etc. It will study the whole problem in a scientific manner and suggest suitable remedies. This is what I have been pleading for all these years. I have been advocating this with all the amphasis that I can command. But my words were simply cast to the winds.





I find recently the Hon. Minister in the Centre, Mr. Sethi had made a statement complaining about the unhelpful attitude of our Government. It had been published in the papers. We do not know exactly what he said. What he is purported to have said is that our taxation in recent times had been unhelpful as far as they are concerned because petroleum products are being taken out from Madras and so he felt that our method of taxation will hit petroleum industry.

There is no proper co-ordination between the Hon. Minister Mr. Sethi and his department at the Centre and our department here. That is what I find. Let us have proper co-ordination between the Centre and State, with regard to taxation measures. Since it is not there, this comment from Mr. Sethi has come. We must have proper assessment of the problem, before embarking on taxation measures. That is why I once again, repeat with the little emphasis at my command, let us have a Committee to go into the entire working of this department.

Whenever the Finance Department wants money, this is the only elastic department they pitch upon and immediately we have in increase in taxation. Other taxation measures like Urban Tax, etc., are not elastic as sales tax. This is one point I want to stress.

Secondly we have an impression that whenever we have a sales tax increase, it will hit the businessman. It is not the actual businessman who will be hit. Businessmen have got modes of communicating their feelings and they get wide publicity in the papers. So it is not businessman who is affected. It is the consumer, to whom the burden is passed on, who is affected. As Mr. Latheef has pointed out this has a direct bearing on cost of living indices. This the Hon. Minister should take into consideration.

We have now this half per cent increase. If the Committee is appointed, as I had requested, it will go into the cost of living index, the effect of this tax on the price of essential commodities etc. It will examine the question in its entires perspective and report to Government. Now unfortunately the Government do not have the advantage of this Committee to examine the spiralling of the prices. That is another point which the Hon. Minister will have to take into consideration.

There is another important aspect. I have also given a cut motion No. 807. Even though I have not stressed it, it is there on record. "To discuss the raids conducted by the Commercial Tax Officers during 1966-67, 1967-68, 1968-69 in the City of Madras". It is a well known fact and it has also gained some publicity that some time ago the Commercial Tax Officer in Zone 6 had conducted about 1,500 raids during 1967, 1967-68 and 1968-69 and no records or shop inspection register were

available for the same with the Commercial Tax Officer. The C.T.O. did not maintain any of these things. The Government discovered it. The Government found it. The C.T.O. was then asked to explain, but unfortunately what happened was, he was only transferred and he was not suspended at that time. I do not know the details. But I request the Hon. Minister in his reply to give us some facts and figures. I am interested to know exactly what happened, whether the matter was referred to the Vigilance Commissioner, whether the Vigilance Commission was seized of this matter. Because the particular thing happened in my Constituency, I am particularly interested whether the enquiry will be a fair one, because the C.T.O. was in service and there was every possibility for the C.T.O. to tamper with the records. Normally the Vigilance Officer takes into consideration all these things and makes an investigation only after the concerned C.T.O. is kept under suspension. The usual procedure is, the Officer is not kept in service. Whether the enquiry went on, whether the Officer was kept under suspension or not, whether the Government are willing to make an enquiry once again after keeping him under suspension, these things I would request the Hon. Minister to let us know. I would request the Hon. Minister to tell us what happened about the revenue due by the C.T.O. I am told some lakhs of rupees are due to the Government by the C.T.O. I do not know whatever it is, I am subject to correction by what the Hon. Minister says. I would request the Hon. Minister in his reply to give facts and figures as to how much money is due from this Officer to the Government and what action has been taken in the matter.

Finally to sum up, I would request the Government to seriously think about the necessity of appointing an Expert Committee to go into the positive fact, to go into all aspects of sales tax and also to examine the amount of spiralling of prices by arbitrary taxation of half per cent and 5 per cent surcharge and the effect of the same on the public.

Thank you, Sir.

* **திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி மானியக் கோரிக்கையிலே ஓரிரு கருத்துக்களைக் கூறுவதற்கு நான் விரும்புகிறேன்.

விற்பனை வரி என்று சொன்னாலே அது காமதேனுவாக இருக்கிறது நம்முடைய அரசைப் பொறுத்த அளவிலே. நாளாவட்டத்திலே வளர்ந்து வருகிற வரியாக இது இருக்கிறது. வரிச் சுமையும் பாரமும் பொதுமக்களின் தலையிலே அதிகமாக விழுகிறது என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன். பொதுவாக விற்பனை வரி எந்தப் பண்டங்களின்மீது விழப்போகிறது என்று வியாபாரிகள் மட்டு மல்ல, பொதுமக்களும் பீதியோடு இருப்பார்கள். பட்ஜெட் வருவதற்கு முன் சில பண்டங்கள் வெளிச் சந்தையிலே கிடைக்காமல் எங்கெங்கோ சென்று விடுகின்றன.



மத்திய பட்ஜெட்டானாலும் சரி, ராஜ்ய பட்ஜெட்டானாலும் சரி, சில பண்டங்கள் வாங்குவதற்கு கஷ்டமான பகுதி இருக்கிறதென்றால் அது மார்ச் பகுதியாகத்தான் இருக்கும். வரிகள் இவ்வளவு அதிகரிக்கவேண்டுமா என்பதைப் பற்றி நாம் அதிகமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த மன்றத்திலே சர்சார்ஜ் 10 சதவீதமாக இருக்கவேண்டுமென்று அறிவித்து விட்டு, அது இன்றைக்கு 5 சதவீதமாக பல நகரங்களுக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்ற அளவிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஆங்கிலத்திலே சொல்வார்கள் 'from the frying paninto fire' என்று சொன்னமாதிரி கஷ்டப்படக்கூடிய தன்மையிலே அதன் எல்லைக் கோடுகள் அதிகமாக விரிவுபடுத்தப்படுகின்ற காரணத்தினால், பொது மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். வியாபாரிகள் தப்பித்துக்கொள்வார்கள் என்பதைக் கூறவேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய நிர்வாகச் செலவுகளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு விற்பனைவரிச் சுமையை மாற்றி விடுவது சாதாரணமான நிகழ்ச்சியாக இருக்கிறது.

ஆதலால் இந்த வரி ஏழை எளிய மக்களை அதிகமாகப் பாதிக்கும் சென்னையிலே மட்டுமல்ல கோவையானாலும் சரி, திருச்சயானாலும் சரி, மதுரையானாலும் சரி, வேறு எந்த நகரமாக இருந்தாலும் சரி எடுத்துவிட வேண்டும். மக்களை அதிகமாகப் பாதிக்கக்கூடிய வரி, நசுக்கக்கூடிய வரியாக இருப்பதால் அறவே எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய விற்பனை வரியைப்பற்றி ஒரு சில ஐயப்பாடுகள் இருந்து கொண்டேயிருக்கின்றன. டெக்ளேர்டு குட்ஸ் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்ற பொருட்களின்மீது விற்பனை வரி விதிப்பதற்கு மத்தியச் சட்டத்திலே இடம் இருக்கிறது. அதிலே 15-வது ஷரத்திலே 2 சதவிகிதம் வரி விதிப்பதற்கும் வழிவகை செய்திருக்கிறார்கள். டெக்ளேர்டு குட்ஸ் என்ன என்ன என்பதை நாம் அறிவோம். இரண்டு சதவிகிதம் என்று சாதாரணமாக இருக்கிறது. நாம் சில காம்போனன்ட் பொருட்களுக்கு வரியை 2½ சதவிகிதம் ஆகக் கூட்டியிருக்கிறோம். அது இந்தச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்காதா என்று இலாகா மூலமாக ஆராயவேண்டிய அவசியமிருக்கிறது. என்ன என்ன குட்ஸ் டெக்ளேர்டு குட்ஸ் என்று 14-வது வகுப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பொருட்களிலே சில பொருள்களாவது காம்போனன்ட் பார்ட்ஸிலே இடம் பெறுவதற்கு வழிவகை இருக்குமானால் எப்படி இந்தச் சட்டம் பொருத்தமாக இருக்கும் என்பதையும் ஆராயவேண்டும். அதற்கேற்றவாறு நாம் இதிலே கவனம் செலுத்தவேண்டும்.

இப்பொழுது 3 சதவிகிதம் ஆக இருந்ததை 3½ சதவிகிதம் ஆக ஆக்கியிருக்கிறோம். இரண்டு சதவிகிதம் ஆக இருந்ததை 2½ சதவிகிதம் ஆக ஆக்கியிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் சட்டத்திலே சங்கடம் ஏற்படாதா? மத்தியச் சட்டத்திற்கும் மாநிலச் சட்டத்திற்கும் ஏதாவது ரெபக்னன்ஸி ஏற்பட்டால் மத்திய அரசுச் சட்டம்தான் நிலைத்து நிற்கும் என்று அரசியலமைப்புச் சட்டம் 254 பிரிவின்மூலம் தெரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட கஷ்டமான நிலைமை ஏற்படுமா என்பதையெல்லாம் நாம் ஆராயவேண்டும். நாம் வரிப் போட்டோம், ஹைகோர்டிலே ஸ்ட்ரைக் டவுன் செய்வார்கள் என்றால் அது இந்த மன்றத்திற்கே இழுக்காக இருக்கும் என்று கருதுகிறேன். ஆதலால் இதைப்பற்றி ஆர அமர சிந்திக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

குதிரைப் பந்தயங்களைப்பற்றிக் கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே குதிரைப் பந்தயத்தை எடுத்துவிடுவோம் என்று பறைசாட்டினார்கள். ஆனால் இன்றைக்கு ஆந்திராவுக்குப் பக்கத்திலே நிலம் வாங்கிவிட்டார்கள். ஆதலால் குதிரைப் பந்தயத்தை வைத்துக்கொள்வோம், அதன்மூலம் வருவாய் பெற்றுக் கொள்வோம் என்று சொல்வது பொருத்தமல்ல, நியாயமல்ல, தர்மமும் அல்ல. இது சூதாட்டம். சூதாட்டத்தை அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் ஊக்குவிக்கக் கூடாது. சூதாட்டத்தில் பெரிய மனிதர்கள் ஈடுபட்டாலும் அதைத் தடுப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும்.

குதிரைப் பந்தயம் ஊட்டியிலும், கிண்டியிலும் நடக்கிறது என்று சொன்னாலும் அதை அடியோடு நிறுத்தவேண்டுமென்று நான் அழுத்தந் திருத்தமாக அரசாங்கத்திற்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். இதனால் ஏழை எளிய மக்கள் பலர் பாதிக்கப்படுகிறார்கள். நடுத்தர மக்களும் இதிலே சிக்கிக் கொள்கிறார்கள். குதிரைப் பந்தயத்திற்குச் செல்கிறவர்கள் யார் யார் எல்லாம் என்பதை நான் எடுத்துக் கூறவேண்டியதில்லை. ஆதலால் அதையும் அரசாங்கம் ஆழ கவனிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆடம்பரப் பொருட்களுக்கு இருக்கின்ற வரியைப் பற்றியும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிறு ரேடியோக்கள் 200 ரூபாய்க்கு விற்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே இருக்கிற வரி அதிகமாக இருக்கிற காரணத்தினாலே வெளி மாநிலங்களிலிருந்து பலரும் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆந்திராவிலே 5 சதவிகிதம் தான் வரி என்று வைத்திருக்கிறார்கள். அதைப்போன்று நாமும் 5 சதவிகிதம் என்று குறைத்தால் இந்தப் பகுதியிலே வாழ்கிறவர்களுக்கு, குறிப்பாக வாங்குகிறவர்களுக்கு லாபமாக இருக்கும். தொழில் துறையிலே ஈடுபடுபவர்களுக்கும் எந்தவிதமானக் கஷ்டமும் இருக்காது. தொழிலும் அபிவிருத்தி அடையும். ஆகவே, இதை நல்லமுறையிலே ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏதோ 200 ரூபாய்க்கு வாங்குபவர்கள் செல்வந்தர்கள் என்று நினைத்துவிட முடியாது. இப்பொழுது யார் யாரெல்லாம் இம்மாதிரியான ரேடியோ செட்டுகளையும், டிரான்சிஸ்டர்களையும் வாங்கியிருக்கின்றார்கள் என்று நான் எடுத்துக் கூற வேண்டிய தேவையில்லை. நடைபாதைகளிலேயுள்ள வியாபாரிகளும், சிறுசிறு வியாபாரிகளும்கூட இம்மாதிரியான டிரான்சிஸ்டர்களை ஆங்காங்கே வைத்துக்கொண்டு அவர்கள் தொழிலைச் செய்வதை நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே ஆந்திர மாநிலம், மற்ற மாநிலங்கள் நம்மைவிட அதிகமாகத் தொழிலிலே அபிவிருத்தி அடைவதை ஆட்சேபிக்கவில்லை. ஆனாலும் நம்முடைய தொழில்கள் பாதிக்காத அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த டிமாண்டைப் பொறுத்தவரையிலே பல காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். செக் போஸ்ட்கள் புதிதாக ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறு விதமான வரி ஏய்ப்பவர்களைக் கண்டு பிடிப்பதற்காக வேண்டிய செல்களை வைத்திருக்கிறார்கள், காரியங்களைச் செய்கிறார்கள் என்று அறிகிறேன். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட செக் போஸ்ட்டுகளும், இப்படிப்பட்ட





செல்களும் மக்களைத் துன்புறுத்தாத முறையில், குறிப்பாக வியாபார சமூகத்திலேயிருப்பவர்கள் எல்லோரும் நாணயமற்றவர்கள் என்று நினைக்காமல், நாணயமுள்ளவர்களும் துன்புறுத்தப்படுகிறார்கள், எனவே அதற்கு அதிகாரிகளுக்கு வேண்டிய தாக்கீதுகளை இலாக்காவின் மூலம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்திலே பல அம்சங்கள் இருக்கின்றன. கேளிக்கை வரியிலே பகிர்ந்து கொடுக்கும் முறை சொல்லப்பட்டிருக்கிறது. ஷோ டாக்ஸை இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது என்றெல்லாம் இந்த அறிக்கையில் இருக்கிறது. ஷோ டாக்ஸ் போன்றவைகளிலெல்லாம் இன்னும் அதிகமான பங்கு இந்த முனிசிபாலிட்டிகள் போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கொடுக்க வேண்டும். இப்பொழுது 90 சதவிகிதம் கொடுக்க வழிவகைகள் செய்திருக்கிறது. இது போதாது. முழுமையாக இந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கவும். கலக்ஷன் சார்ஜையும் வேண்டுமானால் நிர்வாகச் செலவிற்காக 5 சதவிகிதம் அல்லது 3 சதவிகிதம் வைத்துக்கொண்டு எஞ்சிய பகுதி முழுவதையுமே ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்க வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்களிலே நிர்வாகச் செலவுகளுக்கு அதிகப்பணம் தேவைப்படுகின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். ஆதலால் நல்லமுறையில் ஆராய்ந்து இந்த இலாக்கா வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, குதிரைப் பந்தயத்தை ஒழிக்க, க்ஷேம நல ராஜ்யத்தை அமைக்க விரும்புகின்றது என்று சொல்லும் இந்த அரசு குதிரைப் பந்தயத்தை ஒழிக்கும் என்ற நம்பிக்கையில் நான் என்னுடைய பேச்சைச் சுருக்குகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவரவர்களே, விற்பனை வரி மானியத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற அங்கத்தினர்கள் அத்தனை பேருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக விவாதத்தில் கலந்துகொண்ட அனைவருடைய பேச்சும் இந்த விற்பனை வரி ஏழைகளுக்குப் பாரமாகயிருந்தது என்று கூறியதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், நான் பெருமையோடு உட்கார்ந்திருந்தேன். ஏனென்றால் இந்த மானியத்தின் மீது பேசியவர்களில் யாரும் விற்பனை வரி அதிகாரிகளின்மீது எந்தப் பழியையும் போட்டுப் பேசவில்லை. எனவே, அதிகாரிகள் திறமையுடன் காரியமாற்றியிருக்கிறார்கள் என்பது எல்லாக் கட்சித்தாபினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இலாக்காவில் பணியாற்றும் ஊழியர்கள் அத்தனைபேருக்கும் நான் என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த நான்காண்டுக் காலத்தில் விற்பனை வரியால் அரசாங்கத்திற்கு வருமானம் பெருகியிருக்கிறது என்று சொன்னார்கள். பெருகியிருக்கிறது என்பதற்குப் புள்ளிவிவரத்தைக் காட்டியிருக்கிறோம். இந்தப் புள்ளிவிவரங்கள் பெருகியிருப்பதற்குக் காரணம், சில புதிய வியாபாரிகள் பெருகியிருக்கலாம் அல்லது கள்ள வியாபாரம் செய்து விற்பனை வரியை ஏய்த்துக்கொண்டிருந்தவர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்று இப்படிப் பலவழிகளில் இந்த வருமானம் பெருக்கப்பட்டிருக்கலாம்.

இந்தத் துறை காமதேனு என்று ஒருவர் சொன்னார். இன்னொருவர் சொன்னார், டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது இது பொன் முட்டையிடும் வாத்து என்று சொன்னார்கள். எப்படியெடுத்துக்கொண்டாலும் சரி, பொன் முட்டையிடும் வாத்தாகயிருந்தால் ஒழுங்காகப் பொன் முட்டையை எடுத்து, ஒழுங்காகப் பொன்னை உருக்கி மக்களுக்குப் பயன்படும் வகையில் செய்யவும், அல்லது காமதேனுவாகயிருந்தால் ஒழுங்காகக் கறந்து, ஒழுங்காகப் பாலைக் காய்ச்சி மக்களுக்குப் பயன்படும் வகையில் செய்யவும் வேண்டும். இதைச் செய்ய இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கு பேசிய நண்பர்கள் சிலரால் இரண்டுவித கருத்து மாறுபாடுகள் சொல்லப்பட்டன. மதிப்பிற்குரிய நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசும்பொழுது, பெரிய பெரிய தனவந்தர்கள் உபயோகிக்கும் லக்சுரி குட்ஸுக்கு அதிக வரி போட்டிருக்கலாம், போடலாம் என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் அவர்களுடைய கட்சித் தலைவரவர்கள், லக்சுரிகளுக்குப் போடும்பொழுது யோசித்துப் போட வேண்டுமென்று சொன்னார்கள். லக்சுரி குட்ஸ்க்கு வரி போடக்கூடாது என்பது அரசாங்கத்தின் நோக்கம் அல்ல. அண்டை மாநிலங்களில் எவ்வளவு இருக்கிறதோ அதற்குச் சமமாக அல்லது 1 சதவிகிதம் கூடுதலாக லக்சுரிகளுக்குப் போட்டுவிட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேற்கொண்டு லக்சுரி குட்ஸ்க்கு வரி போட்டால் இங்கேயிருக்கும் வியாபாரம் அண்டை மாநிலத்திற்குப் போகுமே தவிர தமிழ் நாட்டிற்கு வியாபாரம் குறைந்துவிடும், வருமானமும் குறையும். போட வேண்டிய அளவிற்குப் போட்டிருக்கிறோம். அண்டை மாநிலங்கள் உயர்த்திப்போட்டால் நாமும் அப்பொழுது உயர்த்துவதைப் பற்றி யோசிக்கலாம்.

எக்ஸ்போர்ட் குட்ஸ்க்கு டாக்ஸ் போடுவதைப்பற்றிச் சொன்னார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு விற்பனை வரி கிடையாது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I would like to clarify the point. It is not on the export goods but it is on the components used for the manufacture of export goods.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, உபயோகப்படும் பொருள்களுக்கு வரி விதித்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வரி எந்த வகையிலும் பாதிக்காத அளவில் போடப்பட்டிருக்கிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்குப் போட முடியாது, போடுவது கிடையாது. டெக்ஸ்டைல் மில்களுக்கு வரி போடுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள் என்று நினைக்கிறேன். அதன்மேல் சேல்ஸ் டாக்ஸ் கிடையாது. (குறுக்கீடு) ஃபூயெல் எண்ணெய்மீது வரிபோட்டுள்ளது என்றால், இல்லையென்றால் ஆலையே ஓட முடியாது. டெக்ஸ்டைல் துணிகளுக்கு வரி கிடையாது. எனவே அந்தப் பயம் தேவையில்லை.

மற்ற மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் உள்ள வரி வித்தியாசத்தைப் பற்றிச் சொன்னார்கள். வரி வித்தியாசம் ஏற்படுவது குறைவாகத்தான் இருக்கிறது. சென்ற ஆண்டு 15 சதவிகிதம் கார்களின் உபபொருள்களுக்கு,





பஸ்களின் உபபொருள்களுக்கு, ஸ்பேர் பார்ட்ஸ்க்கு அண்டை மாநிலங்களிலே குறைவாக இருக்கிறது என்று மானியக் கோரிக்கை விவாதத்திலே குறைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அண்டை மாநிலங்களிலே என்ன வரி இருக்கிறதோ அதற்கேற்றாற்போல கொஞ்சம் மாற்றி அமைத்திருக்கிறோம் என்று அங்கத்தினர்களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

திரு. எ. எம். இராஜா அவர்கள் பேசும்பொழுது பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுதுகூட, மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் பேச்சைக் குறிப்பிட்டு, இப்படிச் சொல்லியிருக்கிறார்களே, இதற்குப் பதில் என்ன, முரணான கருத்தாக இருக்கிறதே என்றெல்லாம் கூறினார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது முரண்பட்ட கருத்தாகயிருக்கிறதே, எனவே எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி இருந்தால் இப்படி வந்திருக்காது என்று சொன்னார்கள். தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசோடு ஒத்துழைக்கவில்லை என்று மத்திய அமைச்சர் திரு. சேத்தி அவர்கள் பேசியதாகப் பத்திரிகையில் வந்த செய்தியை அமைச்சர் நானும் படித்துப் பார்த்தேன். படித்த பிறகு அதற்கான தகவலை விசாரித்தேன். இப்பொழுது இருக்கிறதே, பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ், மணலியிலே உள்ள பெட்ரோலியம் இரசாயனப் பொருள்கள் மீது 3 சதவிகிதம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் போடுகிறோம். அதை விதிக்கக் கூடாது என்று இப்பொழுது மத்திய சர்க்கார் நம்மைச் சொல்லுகிறார்கள். ஆனால் ஆந்திரப் பிரதேஷ், மகாராஷ்டிரம், கேரளா, அஸ்ஸாம் ஆகிய இந்த மாநிலங்கள் அதிலிருந்து விதிவிலக்கு அளித்துள்ளது. இதை வைத்துக் கொண்டு, ஆந்திரப்பிரதேஷ், கேரளா, மகாராஷ்டிரம், அஸ்ஸாமிலே அளித்திருப்பதைப் போன்று உங்கள் மாநிலத்திலேயும் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். குஜராத், உத்தரப் பிரதேஷ், வெஸ்ட் பெங்கால், பீஹார் இவைகளில் விதிவிலக்கு அளிக்கவில்லை. அதேபோல் தமிழ்நாட்டிலும் அளிக்கவில்லை. ஆந்திரம், மகாராஷ்டிரத்தில் விதிவிலக்கு இருப்பதற்குக் காரணம், கேரளம், அஸ்ஸாமிலே அப்படி இருப்பதற்குக் காரணம், பெட்ரோலியம் இரசாயனத் தொழிற்சாலை ஏற்படுவதற்கு முன்பே அந்த மாநில அரசாங்கம் மத்திய சர்க்கார் இதற்கு விதிவிலக்கு அளித்தால்தான் நடத்துவோம் என்று நிபந்தனை போட்டு வைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நிபந்தனை அப்பொழுது போடப்படவில்லை. இப்பொழுது மத்திய சர்க்காரின் நிதி அமைச்சர் திரு. சவான் அவர்கள் தமிழ்நாட்டு முதலமைச்சரவர்களுக்கு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள் வந்து சந்திக்குமாறு. இப்பொழுது கடைசியாக வந்திருக்கும் கடிதத்திலே அதைப்பற்றி விவாதிக்கத் தான் வருகிற மாதம் 12-ஆம் தேதி டெல்லிக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு முதலமைச்சரவர்களுக்கு மத்திய அரசின் நிதியமைச்சர் திரு. சவான் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். முதலமைச்சரவர்களும் அநேகமாகச் செல்வதாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே நமது அரசாங்கத்தின் சார்பில் வரியை நாம் வலியுறுத்துவதாக இருக்கிறோம். சர்சார்ஜை உயர்த்தக் கூடாது என்று சொல்கிறோம். எப்படியிருந்தாலும் 12-ஆம் தேதி டெல்லியில் நடக்கும் அந்த மாநாட்டிற்குப் பிறகுதான் ஒரு முடிவு ஏற்படும். அது நல்லபடியாக முடியும் என்று நான் நம்புகிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 14

குதிரைப் பந்தயத்தைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். தேசியமயமாக்குவது இப்பொழுது சாத்தியம் இல்லை. தனிப்பட்ட ஒரு கம்பெனியின் ஆக்டின்படி பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலே இந்தியாவிலே மற்ற மாநிலங்களிலே தேசியமயமாக்கப்பட்டிருக்கிறதா என்ற தகவலை விசாரித்தேன். நான் அறிந்தவரையில் எங்கும் அப்படிச் செய்யப்பட வில்லை என்றுதான் தெரிந்தது. உலகத்திலேயே எங்கும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் குதிரைப்பந்தயம் தேவையில்லை என்று ஒரு சாராரும், குதிரைப் பந்தயம் இருக்க வேண்டுமென்று ஒரு சாராரும் சொன்னார்கள்.

குதிரைப் பந்தயத்தை இன்று அரசாங்கம் மகிழ்ச்சியோடு வைத்திருக்க வில்லை. எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும் போது 1967-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது குதிரைப் பந்தயத்தை ஒழிப்போம்' என்று சொல்லி இருந்தார்கள் என்று சொன்னார்கள். 1967-ல் சொன்னோம்; 1971-ம் ஆண்டு அறிக்கையில் இல்லை. இல்லை என்பதைச் சமாதானமாகச் சொல்ல விரும்பவில்லை. குதிரைப் பந்தயம் இருப்பது நியாயம் என்று சொல்லவில்லை. குதிரைப் பந்தயம் ஆடுகின்றவர்கள் நாம் எடுத்துவிட்டால் அண்டை மாநிலத்திற்குச் சென்று ஆடத் தயாராக இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இதை எடுத்துவிடுவார்களோ என்று சந்தேகப் பட்டு ஆந்திர முதல்வர் அவர்கள் கூட அன்று பேரறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்துப் பேசுகிறபோது 'எப்போது குதிரைப் பந்தயத்தை எடுக்கப் போகிறீர்கள்?' என்று கேட்டார்கள். அண்ணா அவர்கள் 'ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்?' என்று கேட்டதற்கு 'தமிழக எல்லையில் 20-வது மைலில் குதிரைப் பந்தயத்தை நடத்துவதற்கான மைதானத்தைப் பார்த்து வந்தேன், நீங்கள் எடுத்து விட்டால் நாங்கள் ஆரம்பிக்க இருக்கிறோம்' என்ற முறையிலே பதில் சொன்னார்கள். அப்படி அங்கே அமைக்கப்பட்டால் தமிழ் நாட்டின் பணம் அங்கே போய்விடும். அது கூடாது என்றுதான் அதை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறோம். எப்படி மதுவிலக்கை இந்தியா பூராவும் அமல்படுத்த வேண்டுமென்று கூறுகிறோமோ அதே போன்று இதையும் இந்தியா பூராவும் அமல்படுத்துவதாக இருந்தால் நாமும் எடுத்துவிடலாம். ஆகவே, இன்றைய நிலையில் குதிரைப் பந்தய ஒழிப்பு இயலாத காரியம்.

பல முனை வரிகளை எல்லாம் ஒரு முனை வரியாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ செய்து கொண்டு வருகிறோம். எல்லாவற்றையும் ஒருமுனை வரியாகக் கொண்டு வரவேண்டு மென்று சொன்னார்கள். பல முனை வரி இருந்தால் வரி ஏய்ப்பு இருக்கும் நிலையில் ஏதாவது ஒருமுனையில் கண்டுபிடிக்க முடியும். ஒருமுனை வரி இருந்து ஏமாற்றுகின்ற இடத்தில் ஏமாற்றிவிட்டால் கடைசிவரை வரி இல்லாமலே போய்விடும். ஆகவே, எது எதை ஒருமுனை வரியாக மாற்ற வேண்டுமென்பதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மூன்று சதவிகித வரியை 3½ சதவிகித வரி என்று உயர்த்தியிருப்பது இந்திய அரசு சட்டத்திற்கு முரண்பட்டது என்று மாண்புமிகு மருதாசலம் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். இதிலே



1971 ஜூலை 14] [திரு. ப. உ. சண்முகம்]

எந்தவித முரண்பாடும் இல்லை. செகண்ட் ஷெட்யூலில் சொல்லப்பட்ட 14 பொருள்களுக்கு மூன்று சதவிகிதத்திற்கு மேல் வரி விதிப்பதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பதினான்கு பொருள்களுக்கும் 3½ சதவிகிதம் பொருந்தாது. அன்டிக்ளேர்டு கூட்சுக்குத்தான் உண்டு; டிக்ளேர்டு கூட்சுக்கு இல்லை.

திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது சர்சார்ஜ் பற்றிச் சொன்னார் கள். தனியாக பில் வருகிறது; அப்போது அதுபற்றிப் பேசலாம்.

**திரு. ஆர் பொன்னப்ப நாடார்:** காம்பொனென்ட்சுக்கு 2 பர்சன்டை 2½ பர்சன்டாக ஆக்கியிருப்பது பற்றி விளக்கம் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பில் வந்தபோதே சொன்னேன். முரண்பட்ட சட்டம் அல்ல. இலாகாவைக் கலந்து ஆலோசித்த பிறகுதான் உயர்த்தப்பட்டிருக்கிறது. சட்ட முரண்பாடு இல்லை.

உழைத்துத்தான் உயர வேண்டும் என்று குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று பேசும்போது சோஷலிசக் கருத்தைக் கூறினார்கள். உழைக்கின்றவர்கள் குதிரைப் பந்தயத்திற்குப் போகமாட்டார்கள். உழைக்காதவர்கள் எப்படிப் போனால் என்ன? உழைக்கின்றவர்கள் பணத்தைக் கொண்டு போய்க் கொட்டிவிடமாட்டார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** போகின்றவர்கள் எல்லாம் உழைக்காதவர்கள் என்ற முறையில் நான் சொல்லவில்லை. உழைக்கின்றவர்களுக்கும் உழைக்காமலே பணம் வந்து விடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விடலாம் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படித் தவறான நம்பிக்கை ஏற்படாமல் இருக்க பிரசாரம் செய்யலாம். அதற்கு நான்கூட அவருக்குத் துணையாக இருக்கிறேன்.

கோவை நகர தமாஷா வரியைச் சிங்காநல்லூருக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. அதைப் பற்றி முடிவு எடுக்கப்பட்ட பிறகு தெரிவிக்கிறேன். இரண்டு நகராட்சிகளையும் கேட்டு அதன் பிறகு அரசு நடவடிக்கை எடுக்கும். உறுப் பினர் அவர்களுடைய யோசனை கவனத்தில் வைத்துக் கொள்ளப்படும்.

திரு. செல்வராஜ் அவர்கள் பேசும்போது மாவட்ட அதிகாரிகளும், வியாபாரிகளும் ஒருவரோடொருவர் கலந்து பேசவேண்டுமென்று சொன்னார் கள். இப்போதே டிஸ்ட்ரிக்ட் அட்வைசரி கமிட்டி என்று இருக்கிறது. அதிலே கலந்து பேசலாம்.

திரு. லத்தீப் பேசும்போது ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தைக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்; வரி ஏய்ப்பின் மூலம் சிலபேர் பணக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள்; வரி

[திரு. ப. உ. சண்முகம்] [1971 ஜூலை 14

அதிகமாக ஆக வரி ஏய்ப்பு அதிகமாகிவிடுகிறது என்றார்கள். பொதுவாக தமிழ்நாட்டில் வரி ஏய்ப்பு அதிகமாக இல்லை. ஆனால் வரி ஏய்ப்பு இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். எங்கெங்கு அதிகாரிகள் சோதனை போடுகிறார்களோ அங்கெல்லாம் புதையல் கிடைப்பது போல் இரண்டு கணக்குகள் வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஒரு ஊரில், திண்டுக்கல்லில் அதிகாரிகள் சோதனை போட்டார்கள். ஏறக்குறைய 1½ கோடி ரூபாய்க்குக் கட்ட வேண்டிய வரி கொடுக்காமலே இருந்தார்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஏழைகளை ஏமாற்றி வியாபாரிகள் வரியை ஏய்த்துப் பணக்காரர்களாகி விடுகிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. நீங்களே ஒரு வியாபாரியாக இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அதனால் தான் ரகசியம் முழுவதும் தெரிந்து இலாக்கா அதிகாரிகளை அனுப்பி கண்டு பிடிக்கும்படி கூறுகிறேன். இந்த இலாகாவில் பணியாற்றக்கூடிய விற்பனை வரி அதிகாரிகள் தொன்றுதொட்டு வியாபாரிகளோடு பழகி வருகிறார்கள். எப்படி வியாபாரிகள் நடந்து கொள்ளுவார்கள், எந்தெந்த வியாபாரியிடத்தில் எப்படி எப்படி வரி வாங்க வேண்டுமென்பதில் பழக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். லோன் 6 என்று நினைக்கிறேன்—அந்த சி.டி.ஓ. பற்றிக் குறிப்பிட்டார்கள். விஜிலென்ஸ் கமிஷனில் இருந்து ரிப்போர்ட் செய்யப்பட்டு ஏற்கனவே வேலை நீக்கம் வைத்திருந்தோம். விஜிலென்ஸ் கமிஷன் அவருக்கு மீண்டும் வேலை கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அவரை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது விஜிலென்ஸ் கமிஷன் ரிப்போர்ட்டை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இதிலே தக்க நடவடிக்கை எடுக்கப்படும். புதிய தகவல்கள் ஏதேனும் மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் வைத்திருந்தால் அதைக் கொடுப்பார்களானால் அரசாங்கத்திற்கு உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர் கண்ணன் அவர்கள் பேசும்போது 25,000 ரூபாய் வரை வரியே கூடாது என்று சொன்னார்கள். 25,000 ரூபாய் வரை வரி இல்லை. ஒரு லட்சம் ரூபாய் வியாபாரம் செய்கிறவர்களாக இருந்தால் கம்பவுண்டிங் என்று ஒரு நிச்சயமான தொகை போட்டு வைத்திருக்கிறார்கள். அவர்கள் கம்பவுண்டிங் ஏற்பாட்டுக்குள் வந்துவிடுவார்கள். பதினைந்தாயிரத்தை இருபத்தி ஐயாயிரம் என்றும், எழுபத்தி ஐயாயிரத்தை ஒரு லட்சம் என்றும் ஆக்கியிருப்பதால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டு இருக்கும் நஷ்டத்தைப் பார்க்க வேண்டும். இப்படி மாற்றியமைத்திருப்பதால் புதிதாக வரக்கூடிய வருமானத்திலே ஏறத்தாழ 40 லட்சம் ரூபாயை அரசாங்கம் இழக்க வேண்டியிருக்கிறது. இதற்கு மேலும் உயர்த்த வேண்டுமென்று சொல்லுவது பொருந்தாது; நியாயத்திற்கு ஒத்து வராது; நிதிநிலைக்குச் சரியாக இருக்காது.

விற்பனை வரிச் சட்டத்தைப் பரிசீலிக்க ஒரு குழு அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அரசாங்கமே அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் முடிவு எடுக்கப்படும். இதுபற்றி ஏற்கனவே ஒத்துக் கொண்டிருக்கிறேன்.



1971 ஜூலை 14] [திரு. ப. உ. சண்முகம்]

செக் போஸ்டுகளில் துன்புறுத்தல்கள் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அப்படி ஏதேனும் துன்புறுத்தப்பட்டதாகத் தகவல் இருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

கேளிக்கை வரியில் 90 சதவிகிதம் இப்போது ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் ஆகியவற்றுக்குக் கொடுத்து விடுகிறோம். அதை 95, 97 சதவிகிதம் வரை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பத்து சதவிகிதம் அரசாங்கம் எடுத்துக் கொள்வது நிர்வாகச் செலவுக்காகத்தான்; வேறு அல்ல.

இதிலே வரி ஏய்ப்பு நிறைய இருக்கிறது. ஒத்துக் கொள்கிறேன். இந்த ஏய்ப்பைக் கண்டுபிடிப்பதற்கு ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் ஒத்துழைக்க வேண்டும். இருக்கின்ற சட்டத்திலேயே நகராட்சிக்கு அதிகாரம் தந்திருக்கிறோம். சினிமா கொட்டகையில் டிக்கட் இல்லாமல் பணம் வசூலித்தாலும், போகஸ் டிக்கட் கொடுத்தாலும், சீரியல் நம்பர் இல்லாமல் டிக்கட் கொடுத்தாலும் கண்டுபிடிக்க அவர்களுக்கே அதிகாரம் தந்திருக்கிறோம். கேளிக்கை வரி சம்பந்தப்பட்ட வரை விற்பனை வரி இலாகா மட்டும் சம்பந்தப்பட்டது என்று கருதக் கூடாது. நகராட்சி ஆணையாளராக இருந்தாலும் சரி, ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தாலும் சரி, சென்று சோதனை செய்யலாம். இதிலே எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்து இந்த வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும். விற்பனை வரி இலாக்கா ஒன்றினால் மட்டும் இந்தக் காரியம் முடிந்து விடாது.

இந்த இலாக்காவால் இயன்ற அளவிற்கு பெருமுயற்சி எடுத்து பெரிய பெரிய சினிமாக் கொட்டகைகளில் செய்கிற பெரும் தவறுகளைக் கண்டு பிடித்திருக்கிறோம். தக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு இவைகளைத் தடுக்கவும் உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

3½ சதவிகிதம் என்று ஏற்றுவதைப் பற்றிச் சொன்னார்கள். அதை அந்த மசோதா வரும்போது விவாதித்து விட்டோம். சர்ச்சார்ஜ் பற்றிச் சொன்னார்கள். புது மசோதா வர இருக்கிறது, அப்போது அதைப் பற்றி விவாதிக்கலாம். ஆகவே, கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு இயற்றியிருக்கிற 1956-ம் ஆண்டு சேல்ஸ் டாக்ஸ் சட்டத்தில் இன்டிஜினஸ் ஆர்டிகில்ஸ் வெளி மாநிலங்களுக்கு அனுப்ப 2 சதவிகிதம் என்று சொல்லி இருக்கிறார்கள். இங்கு அப்போர்பட்ட சரக்குகளுக்கு 2 சதவிகிதம் போடப்படுமா அல்லது 2½ சதவிகிதம் போடப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 2 சதவிகிதம் என்பதை 3 சதவிகிதம் ஆகப் போடலாம் என்று திருத்திவிட்டார்கள்.

திரு. ஏ. எம். இராஜா: ரேஸ் கிளப்பை நாஷனலைஸ் செய்ய கம்பெனி ஆக்ட் இடம் கொடுக்காது என்று சொன்னார்கள். அட்லீஸ்ட் சோஷியல் கண்ட்ரோல், மானேஜ்மெண்ட் கமிட்டியில் 16 பேர்கள் இருக்கிறார்கள். அதில் அரசாங்கச் சார்பில் எட்டு பேர்களையாவது நியமிக்க முயற்சி எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கனவே இரண்டு பேர்களை அரசாங்கச் சார்பில் நியமிக்கிறோம். மேற்கொண்டு இரண்டு பேர்களை நியமிக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். சட்டத்தை சமீபத்தில் திருத்தி அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் எனக் கருது கிறேன்.

* **திரு. எ. சுவாமிதாஸ் :** அண்டை மாநிலங்களிலுள்ள விற்பனை வரியை அனுசரித்து இங்கேயேயும் பல பொருள்களுக்கு ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். ரேடியாவைப் பொறுத்தவரையில் மலிவான ரேடியோக்களை ஆடம்பரப் பொருள் இனத்தில் நாம் சேர்த்துக்கொள்ள முடியாது. அவற் றிற்கும் விற்பனை வரியைக் குறைக்க அரசு முற்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு சில சந்தேகங்களை மட்டும் தான் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுபற்றிய முழுத் தகவலையும் சேகரிக்கும்படி இலாகாவைக் கேட்டிருக்கிறோம். சென்ற ஆண்டுக்கு முந்தின ஆண்டு எவ்வளவு வியாபாரமாகியிருக்கிறது, இந்த ஆண்டு எந்தளவிற்கு வியாபாரமாகியிருக்கிறது, கடந்த ஆண்டு எவ்வளவு வருமானம் வந்திருக் கிறது என்றெல்லாம் கணக்கு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைப் பார்த்த பிறகு அரசு பரிசீலிக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of clarification. . .

MR. DEPUTY SPEAKER : It is not Question Hour, now.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, one small clarification. When the Government think of nominating representatives to the Race Club—at present there are two officers-representatives.will they think of non-official representatives also?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உத்தியோகப் பற்றற்றவர்களை நியமிக்கலாம் என்று சொன்னார்கள். நியமிக்க அதிகாரம் இருக்கிறது. சென்ற முறை இரண்டு அதிகாரிகளை இருக்கலாம் என்று போலீஸ் கமிஷனரையும், ஹோம் செக்ரட்டரியையும் முதல் அமைச்சர் அவர்கள் நியமித் தார்கள். மேற்கொண்டு வரும்போது அதைப் பற்றி யோசிக்கப்படும்.

வெட்டுத் தீர்மானங்கள், அனைத்தும் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,64,42,200 under Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration."

**The Demand was put and carried and the Grant was made.**



(ஆ) நிதிக் கோரிக்கை எண் 34—எழுதுபொருள்-அச்சுத்துறை.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர் களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண். 34—எழுதுபொருள்-அச்சுத்துறை* என்ற தலைப் பின் கீழ் ரூ. 4,45,27,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த பிறகு பதில் அளிக்கும் போது அரசின் சார்பில் எனது கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss the need to introduce the third shift in the Government Press to increase its capacity and to improve its efficiency, I move—

"That the allotment of Rs. 4,45,27,100 under Demand No. 34—Stationery and Printing—be reduced by Rs. 100."

தலைவர் அவர்களே, நான் இந்தத் துறையில் மூன்றாவது ஷிப்டை அரசாங்க அச்சகத்தில் புகுத்த வேண்டுமென்ற காரணத்திற்காக ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை ஆதரித்துப் பேசும் போது அரசாங்க அச்சுத் துறை பற்றிய ஒரு சில கருத்துக்களை வழங்கு வதற்கு அனுமதி கேட்கிறேன்.

குறிப்பாக, நமது அரசாங்க அச்சகம் எவ்வளவு விரிவாக இருந்தபோதி லும் கூட இன்னும் பல வெளியார்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அச்சடிக்க. குறிப்பாக புதிதாக அச்சடிக்கப்பட வேண்டிய பல பொறுப்புக் களை யெல்லாம் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். லாட்டரி சீட்டு அடிப்பது. லாட்டரி சீட்டு அச்சடிப்பது அரசாங்க அச்சகத்தில்தான் நடந்து கொண் டிருக்கிறது. லாட்டரி சீட்டு அச்சடிப்பது முதல் மாணவர்களுக்கான புத்தகங்கள் அச்சடிப்பது வரையில் இந்தப் பணியை அங்கு செய்து கொண்டிருக்கிறோம். சிலவற்றை வெளியார் கம்பெனிகளுக்குக் கொடுக் கிறோம் அச்சடிப்பதற்கு. நமது அச்சகம் விரிவாக இருந்தபோதிலும் ஏன் சிலவற்றை அப்படி வெளியார்களுக்கு. தனி நபர்களிடம் காண்ட்ராக்டுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார் கள் என நினைக்கிறேன். அப்படி ஏறத்தாழ ஏழு லட்சம் ரூபாய் அளவிற்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று செய்தி வந்திருக்கிறது . என்னென்ன முறைகளைக் கையாள்கிறோம். டெண்டர் கால்பார் செய்து கொடுக்கிறார்களா? குறைந்த டெண்டர் கொடுக்கிறவர்களுக்குத்தான் கொடுப்பது என்ற முறை யைக் கையாள்கிறார்களா? அல்லது அவர்கள் விருப்பப்படி தனியாருக்கு கொடுக்கிறார்களா? என்பதையெல்லாம் விளக்க வேண்டும். இதையெல்லாம் விட்டு தனியாரிடம் கொடுக்காமல் நமக்குத் தேவைப்படுகிற அத்தனையும் நம் அரசாங்க அச்சகத்திலேயே அச்சடித்துக் கொள்ளும் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ளுவது மிகவும் நல்லது.

---

* 261-268-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு இரண்டாம் இணைப் பாக அச்சிடப்பட்டுள்ளது.

ஆகவே, அதிகப்படியான தொழிலாளர்களைச் சேர்த்து மூன்றாவது ஷிப்டை வைப்பது வசதியாக இருக்கும். சென்னை நகரிலே வேலையில்லாத கொடுமை அதிகமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக பெண்களுக்கு இந்த அச்சகம் மிகவும் உதவியாக இருக்கிறது. பைண்டிங் செய்வது, காகிதத்தை அப்புறப் படுத்துவது போன்ற வேலைகளுக்கு பெண்கள் அமர்த்தப்படுகிறார்கள். எனவே மூன்றாவது ஷிப்டை கொண்டு வந்தால் வேலையில்லாத பெண்களுக்கு அது ஒரு பெரிய உதவியாக இருக்கும்.

பலயிடங்களில் நம் அச்சகப் பிரிவுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சேலத்தில் இருக்கிறது, விருத்தாசலத்தில் இருக்கிறது. அங்கு தனியார் கட்டடங்களில்தான் இந்த அச்சகங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு கோடி ரூபாய் வருமானம் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் அந்த அச்சகங்களைக் கொண்டு வர முடியவில்லை என்பதைக் கண்டு உண்மையில் வருத்தப்படுகிறேன். இந்த இரண்டு இடங்களிலும் அவற்றிற்கு கட்டடங்கள் கட்டுவதற்கு அப்படி என்ன செலவாகிவிடும்? பப்ளிக் டிபார்ட்மெண்ட் இலாகா இருக்கிறது. ஆகவே மனமில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. நல்ல வசதிகளோடு உள்ள கட்டடங்களாக அமைக்கப்பட வேண்டும்.

தொழிலாளர்களுக்கு பாதுகாப்புள்ளதாக இருக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதைப் பார்க்கும்போது மௌண்ட் ரோட்டில் உள்ள அச்சகத்தில் தக்க வசதிகள் இல்லை. குடிநீர் வசதியை இப்போதுதான் செய்யப் போகிறார்கள். ஆயிரக் கணக்கில் தொழிலாளர்கள் அங்கு வேலை செய்கிறார்கள். ஆனால் பல்லாண்டு களாக அங்கு இவர்களுக்கு வேண்டிய குடிநீர் வசதி இல்லை. இனிமேல்தான் சைக்கிள் ஸ்டாண்ட் கட்டப் போகிறார்கள். தொழிலாளர் அரசு, தொழிலாளர் அரசு என்று சொல்லிக்கொள்ளும் அரசு அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இல்லாமல் தொழிலாளர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் கூட கவர்ன் மெண்ட் ப்ரெஸ்ஸில் இல்லை. இனிமேலாவது அவற்றைச் சீக்கிரமாகவும் சிறப் பாகவும் செய்யுங்கள்.

அடுத்தப்படியாகச் சிற்றுண்டி வசதியின்றி பாவம் படாத பாடு படுகிறார் கள். இப்போது யாரிடமோ கொடுத்திருக்கிறார்கள். அங்கு யாரும் அதிக நாட் கள் நீடிப்பதில்லை. ஏதோ ஒரு முறை இருக்கிறது. ஆக, அங்குள்ள தொழி லாளர்களுக்கு நல்லமுறையில் பண்டங்களை, குறைந்த விலையில் அங்கு கான் டீன் வசதி செய்து கொடுக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். என்னதான் தொழிலாளிகளுக்கு நாம் ரொட்டியும், காப்பியும், பாலும் கொடுக்கிறோம் என்றுசொன்னாலும், பசி எடுக்கும்போது புசிக்கப் போக வேண்டுமானால் நல்ல சிறந்த ஒரு கேண்டீன் கூட இல்லை யென்றால், அவர்களுக்கு இருக்கும் தொழில் திறமை குறைந்துவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, இந்தக் கழிவுத்தாள் விற்பனையில் 1969-ல் கிடைத்த வருமானம் ரூ. 18,186 என்று இருக்கிறது. 1970-71-ல் இந்த வருமானம் ரூ. 1,77,236 என்று இருக்கிறது. திடீரென்று இவ்வளவு அதிகமான தொகை வருவதற்கான காரணம் என்ன? இதிலே ஏதேனும் ஊழல் நடந்து இருக்கிறதா? இது எதற்காகச் சொல்கிறேன் என்றால், சமீபகாலத்தில் அரசாங்க அச்சகத்தில் காகிதம் வாங்குவதில் சரியா கணக்குக்காட்டாமல் விட்ட ஒருவர் வண்ணாரப்பேட்டையில் கைது செய்யப்பட்டார் என்று பத்திரி கைகளில் வந்தது. இப்படிப்பட்ட புகார்கள் அந்த அச்சகத்தில் இருக்கும்





போது எப்படி அந்த அச்சகத்தை திறமையாக நடத்த முடியும்? நாம் இதை ஆராய்வதற்கு என்று ஒரு குழு போட்டோம். அதில், 'தி சூபர்வைசரி கன்ட்ரோல் ஈஸ் வெரி ஸ்லாக்' என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே திறமையை அதிகப்படுத்தி இந்த மாதிரி தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதே மாதிரி, நம்முடைய அச்சகத்தின் தரம் மிகவும் மோசமாக இருக் கிறது. சட்டசபை அங்கத்தினர்களுக்கு தரப்படும் நடவடிக்கை குறிப்பு புத்தகம் கூட அச்சு சரியாகத் தெரியாமல் இருக்கிறது. பாடப் புத்தகத்திலும் அச்சு சரியாக இல்லை. தரம் எப்படிக் குறைவாக இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து உடனடியாக நிவாரணம் தேட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

பியூன்களை மெசன்ஜர்களாக பயன்படுத்துகிறார்கள் என்று புகார் என்னிடத்தில் சொல்லப்பட்டது. தனியாக மெசன்ஜர்களைப் போடலாம். ஒரு வேலைக்கு என்று ஒருவரை நியமித்து விட்டு, வேறு வேலை வாங்குவது சரியல்ல ஆகவே, தனியாக மெசன்ஜர்களைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா இயந்திரங்களும் நல்ல முறையில் பயன்படக்கூடிய வகையில் அரசாங்க அச்சகத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். அரசாங்க அச்சகம் அம்பத்தூரில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். அந்த அச்சகமாவது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக, தொழிலாளர்கள் திறமையாக வேலை செய்வ தற்கு ஏற்ற வகையில், பார்ப்பதற்கு அழகான வகையில் அமைக்க வேண்டு மென்று கேட்டு, மூன்றாவது ஷிப்ட் முறையும் புகுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். ஆர். கண்ணன்:** பேரவைத் தலைவரவர்களே, கவர்ண்மெண்ட் பிரஸ் பல ஆண்டுகாலமாக ஊழலுக்கே பெயர்பெற்ற இடமாக இருந்து, இன்று நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. சென்ற 4 ஆண்டுகாலமாக படிப்படி யாக முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. இதற்கு முன்பெல்லாம் இந்த பிரஸ்ஸை எடுத்துக் கொண்டால் ஒரே ஊழல் மயம் தான். அம்மையார் வேஸ்ட் பேப்பரைப் பற்றிச் சொன்னார்கள். இதற்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சி இருந்த போது டெண்டர் முறையில் கொடுத்தார்கள். 1 டன் எடுக் கிறேன் என்று சொல்லிவிட்டு 9 டன் எடுத்துச் செல்வார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** காங்கிரஸ் ஆட்சி என்று சொல்கிறபோது 1 டன் என்று சொல்லி விட்டு 9 டன் எடுத்துச் செல்வார்கள் என்பதற்கு ஆதாரம் காட்டிப் பேச வேண்டும். அரசியல் காரணத்திற்காக இப்படிச் சொல்வது நியாயம் அல்ல.

**திரு. எம். ஆர். கண்ணன்:** 1968-லே 28 ஆயிரம் ரூபாய்க்கு வேஸ்ட் பேப்பர் போனது, 1970-லே 1 லட்சத்திற்கு மேல் போயிற்று என்றால், இப்போது ஊழல் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது என்று தான் பொருள். அதற்கு முன்பு ஊழல் இருந்தது. இப்போதுள்ள அரசு மிக கண்காணிப்பாக இருக்கிறது. அங்கே உள்ள டைரக்டர், டெபுடி டைரக்டர் மிகவும் விழிப்பாக இருக்கிறார்கள். இந்த நான்காண்டுகளில் இந்த மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது.

இப்போது திடீர் செக்கிங் என்று எல்லாம் நடத்தப்படுகிறது. முன்பெல்லாம் நைட் ஷிப்ட் என்றால் 200-300 பேர் தான் இருப்பார்கள். மற்றவர்கள் கையெழுத்துப் போட்டுவிட்டு வீட்டிற்கு போய்விடுவார்கள் இப்போது அப்படி எல்லாம் இல்லை. வேலைகள் மிகவும் ஒழுங்காக நடைபெறுகிறது.

குடி தண்ணீரை பற்றி அமையார் சொன்னார்கள். இந்த அரசாங்க அச்சகம் என்ன இப்போதா திறக்கப்பட்டது? 20 ஆண்டு காலம் ஆட்சி நடத்தினார்கள். அப்போது இது எல்லாம் செய்யவில்லை. இப்போது குடிக்கக்கூட தண்ணீர் இல்லையே என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். நாங்கள் வந்து 4 ஆண்டு காலம் தான் ஆயிற்று. இதன் மீது இப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. பல லட்சக்கணக்காக ரூபாய் மதிப்புள்ள மெஷின்களை வேலை செய்யாமல் வைத்து இருந்தார்கள். அவை எல்லாம் இன்றைக்கு பழுது பார்க்கப்பட்டு, அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது தவறான அட்மினிஸ்டிரேஷன் இல்லை, முன்பு எப்படி இருந்தது என்பதை எல்லோரும் அறிவார்கள்.

இந்த அரசாங்க அச்சகத்தில் சில ஆயிரம் மக்கள் பணி புரிந்தும் அந்த அச்சகத்தின் டர்ன்-ஓவர், தனியார் அச்சகத்தில் இருக்கும் டர்ன் ஓவரை விடக் குறைவாக இருக்கிறது. தனியார் அச்சங்களில் இவ்வளவு வசதிகள் இருந்தால் பல கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளை செய்து விடுவார்கள். ஆகவே, சர்க்கார் இதை இன்னும் கவனமாகக் கண்காணித்து, இந்த அச்சகத்தின் வேலைகள் மிகவும் துரிதமாக நடக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்மையார் சொல்லியதுபோல் தனியார் அச்சகங்களுக்கு வேலைகள் தரக் கூடாது. தனியார் அச்சகத்திற்கு வேலை கொடுக்காமல் இருந்தால் நல்லது, இந்த அச்சகத்தில் 3-வது ஷிப்ட் முறை ஏற்படுத்த வேண்டும். இதனால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது நமக்கு வருகிற இன்விடேஷன் எல்லாம் மிகவும் விலையுயர்ந்தவைகளாக இருக்கிறது. ஒவ்வொரு இன்விடேஷனும் 1 ரூபாய் 1½ ரூபாய் கூட பெறும். இத்தகைய உயர்ந்த ரக இன்விடேஷன் தேவைதானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலே சிக்கனம் கையாளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, தலைவர் மூலமாக, அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விட ஆசைப்படுகிறேன். இந்த அரசு அச்சகம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கே உள்ள மக்கள் எங்களுக்கு இந்த அச்சகத்தில் வேலை கிடைக்கவில்லையே, மற்ற இடத்திலிருந்து வருபவர்கள் இதில் வேலைக்கு சேர்ந்து விடுகிறார்கள் என்று குறைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொகுதியில் இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் 100-க்கு 10 சதவிகிதம் வேலையை இந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு என்று ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அச்சகம் நல்ல முறையில் எந்த விதமான ஊழலும் இல்லாமல் இப்போது நடத்தப்படுகிறது. முன்பு யூனியன் ஆபீஸ் என்றும், ரிக்கிரியேஷன் கிளப் என்றும் இருந்தன. அதனால் பல ஊழல்கள் நடந்து வந்தன. இப்போது



அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டு, நல்ல முறையில் அந்த நிர்வாகம் செயல்பட்டு வருகிறது என்று அந்த நிர்வாகத்தைப் பாராட்டி, இந்த மான்யத்தை வரவேற்று என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, அரசாங்க அச்சகத்தில் இன்று பல தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஆண்களும் பெண்களும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு வேலைப் பளு அதிமாக இருக்கிறது. சம்பளம் குறைவாக இருக்கிறது. மானோ செக்ஷன், அச்சுக்கோர்க்கும் செக்ஷன் ஆகியவற்றில் ஹரிஜன் தொழிலாளிகள் இல்லை. காரணம் என்னவென்றால் அவர்கள் அந்த தொழிலில் பழகவில்லை என்று சொல்கிறார்கள். பழகுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு தருவது இல்லை. அந்த முக்கியமான செக்ஷனில் ஹரிஜன் தொழிலாளர்களை அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே செய்யப்படுகிற வேலைகள் மிகவும் காலதாமதம் ஆகிறது. இப்படி காலதாமதம் ஆவதற்குக் காரணம் அங்கே குறைந்த ஆட்களை வைத்து வேலைசெய்வதால் தான். ஆகையால் அதிகப்படியான தொழிலாளர்களை வைத்து, அவர்களுக்கு விலைவாசிக்கு ஏற்றவாறு ஊதியம் கொடுத்து, வேலை பளுவை குறைத்து அவர்களிடமிருந்து வேலை வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அச்சகம் அமைக்க வேண்டும். இன்றைக்கு ஒவ்வொரு நகரசபைக்கும் ஒரு அச்சகம் கிடையாது. அதனால், அஜெண்டா முதலிய பேப்பர்கள் சரியாக வருவதில்லை. அவர்கள் ப்ரைவேட் அச்சகத்தில் தான் அடிக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசாங்க அச்சகம் துவங்கினால் நலமாக இருக்கும். அதன் மூலம் நகர சபையின் காரியங்களும், பஞ்சாயத்து யூனியன் காரியங்களும் நல்ல முறையில் நடக்க வாய்ப்பாக இருக்கும். அஜெண்டாக்கள், மற்ற டிமாண்ட் நோட்டீஸ் போன்றவற்றை நல்ல முறையில் அச்சடிக்க உதவியாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரசு அச்சகம் அமைக்க வேண்டும் என்றும் தொழிலாளர்களுக்கு அதிகமான ஊதியத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் அதிகமான ஆட்களை வேலைக்கு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

* மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய கனம் உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய கருத்துக்களை விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள்.

நான் நமது மதிப்பிற்குரிய அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, காங்கிரஸ் இயக்கம் சரிந்து போனதற்குக் காரணமே, எதிர்க்கட்சி என்பதற்காக, அவர்கள் நல்லதைச் செய்தாலும் குறை கூறும் போக்கும் எண்ணமும் மலிந்து போன காரணத்தால்தான். இன்றைய நிலையில் கூட காங்கிரஸ் கட்சியினருக்கு இது புரியாமல் இருப்பது வருந்தத்தக்கதாகும். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது ஆளும் கட்சியினர் நல்லதைச் செய்தால் பாராட்டி, தவறுகளைச் செய்தால் கண்டிக்கும் ஜனநாயக முறையில்தான் செயல்பட்டு வந்திருக்கிறோம். அம்மையார் அவர்கள் அரசைக் குறை கூறவேண்டும் என்ற எண்ணத்தின் பேரில் பேசுகிறார்கள். அவர்கள் கட்சி ஆட்சியிலிருந்த காலத்திய நிலைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தையும் உண்டாக்கி விட்டார்கள்.

எப்படி 28,000 ரூபாய்க்கு விற்ற வேஸ்ட் பேப்பர் இப்பொழுது விற்கும் போது ஒரு லட்சம் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்றார்கள். அதைத் தான் சொல்லுகிறேன். நாம் எவ்வளவு அக்கறை செலுத்துகிறோமோ அந்த அளவுக்கு ஊழல்கள் குறைந்து வெற்றிகரமாக நிர்வாகம் நடக்க உதவியாக இருக்கிறது. சட்டமன்ற மேல் அவையில் நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோது, அன்றைய அச்சுத்துறை அமைச்சர், தோழர் பூவராகன் அவர்களைப் பலமுறை கேட்டேன். நீங்கள் வேறொன்றும் செய்ய வேண்டாம். 'ஸர்ப்ரைஸ் விஸிட்' என்ற அடிப்படையில் திடீரென அரசு அச்சகத்திற்குச் சென்று பாருங்கள், அப்பொழுது தெரியும் எவ்வளவு ஊழல்கள் இருக்கின்றன என்று நான் கேட்டபோது, அவர்கள் கேலி செய்தார்களே தவிர, என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இப்பொழுது அரசு அச்சுத் துறையில் குறைகள் குறைந்து வருவதற்குக் காரணம், அடிக்கடி 'ஸர்ப்ரைஸ் விஸிட்' என்ற முறையில் சென்று பார்த்து, பல தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் காரணமாக, செயலாளர், டைரக்டர், டெபுடி டைரக்டர், பணியாளர், முதலியவர்களும் தங்கள் தங்கள் பொறுப்பை இப்பொழுது குறைகள் இல்லாமல், நிறைவேற்றுகிறார்கள். அதனால்தான் 28,000 ரூபாய் அளவில் விற்றுவந்த கழிவுத்தாள் என்றிருந்தது. 1 லட்சம் ரூபாய் என்று கூடுதலாகியிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இது நடந்தது 1968-69-ல் அப்பொழுது யார் ஆட்சியில் இருந்தது? காங்கிரஸ் ஆட்சியில்லை. நாங்கள் அப்பொழுது ஆட்சியில் இல்லை. நாங்கள்தான் இப்பொழுது எதிர்க் கட்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோமே. அதைப்பற்றி இப்பொழுது என்ன பேச்சு? 1968-69-ல் 28,000 ஆக இருந்தது. இப்பொழுது 1,07,000 என்று ஆகியிருக்கிறதே. அது ஏன் என்று தான் கேட்டேனே தவிர, குற்றம் கற்பிக்க வேண்டும் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: 1968-ல் 1967-ன் வாடை அடித்தது. பிறகு அது போக்கப்பட்டது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: காங்கிரஸ் ஆட்சியில் குப்பை அவ்வளவு இருந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்கு மேல் ஆயிற்று அதைச் சரி செய்ய.

திருமதி த. ந. அனந்தநாயகி: குப்பை அதிகரித்தது என்றால், குப்பை அதிகமானதால் தானே ஒரு லட்சத்திற்கு விற்றது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஊழல்கள் மலிந்துபோன நிலையில் காங்கிரஸ் ஆட்சி இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம்

திருமதி த. ந. அனந்தநாயகி: I take strong objection to those remarks. ஊழல்கள் என்ற குப்பையில் காங்கிரஸ் இருந்தது என்கிறார்கள். அதற்கு என்ன ஆதாரம்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தவறுகளைக் கண்டுபிடித்திருப்பது தான் ஆதாரம்; வேறு என்ன வேண்டும்? ஜனநாயகப் பண்பில் இருப்பவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அரசு அச்சகத்தில் குடிநீர் வசதியில்லை என்று சொன்னார்கள். மறுபடியும் காங்கிரஸ் ஆட்சியைத்தான் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அந்தக் காலத்திலிருந்தே குடிநீர் வசதி இல்லை. கழக அரசு அமைந்த பிறகுதான்





குடிநீர் வசதி செய்துகொடுத்திருக்கிறோம். அதைப் பாராட்டுவதற்குப் பதிலாக குடிநீர் கூட இல்லையே என்று குற்றம் சொல்வது சரியானது அல்ல. அது மட்டுமல்ல. ஒரு சைகிள் ஸ்டாண்ட் வேண்டும் என்று காங்கிரஸ் ஆட்சியிடம் நீண்ட நாளாகக் கேட்டு வந்தார்கள். செய்துகொடுக்கவில்லை. ஆனால், கழக அரசு மாண்புமிகு முதல்வர் அவர்களின் யோசனையின் பேரில், குடிநீர் வசதியை உடனடியாக அமைத்துத் தந்திருக்கிறது. காண்டீன் பற்றிக் கூடக் குறை சொன்னார்கள். அது காங்கிரஸ் ஆட்சியில் இருந்த நிலைமை. இப்பொழுது அதை மாற்றி நல்ல முறையில், சாப்பிடச் சாப்பிட இன்னும் சாப்பிடவேண்டும் என்கிற அவாவைத் தூண்டும் அளவுக்கு காண்டீன் நடந்து வருகிறது. குறைகள் இருந்தால் சொல்லுங்கள், திருத்திக் கொள்கிறோம். ஆனால அரசு செய்யும் நல்லவைகளையும் குறைகளாகவே சித்தரித்துக் காட்டினால், மக்கள் ஏமாறமாட்டார்கள்.

மூன்றாவது ஷிஃப்டு பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையாரும் திரு. எம். ஆர். கண்ணன் அவர்களும் குறிப்பிட்டார்கள். அது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களில் பெரும்பாலும் நடைமுறைக்கு வரும்.

சர்க்கார் அச்சகங்களுக்கு சொந்தக் கட்டடம் வேண்டும் என்று கனம் உறுப்பினர்கள் சொன்னார்கள். எனக்கும் கூட அந்த ஆசை இருக்கிறது. அரசின் எண்ணமே வெளியார் அச்சகத்திற்கு அரசு அச்சுத்துறை ஆர்டர்களைத் தரக்கூடாது என்பதுதான். கொள்கையும் அதுதான். ஆனால், நிதிவசதி ஏற்பட்டதும் அரசு அச்சகத்திலேயே அரசுப்பணிகளை முழுதும் செய்திடும் அந்த நிலையை—அந்த எல்லையைச் சிறிது சிறிதாக எட்டிப் பிடிக்கும்.

அது மட்டுமல்லாமல், மாவட்டங்கள்தோறும் அரசு அச்சகம் வேண்டும் என்று திரு. மருதாசலம் குறிப்பிட்டார்கள். இப்பொழுது திருச்சி, புதுக்கோட்டை, சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் கிளை அச்சகங்கள் இருக்கின்றன. விருத்தாசலத்துக் கட்டடத்தின் நிலையைப் பார்த்தால் இதற்கா 1,000 ரூபாய் வாடகை? என்றுதான் கேட்கத் தோன்றும். அதுவும் யார் காலத்திலிருந்து நடைபெற்று வந்தது? காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தான். விரைவில் விருத்தாசலம் அச்சகத்திற்கு சொந்தக் கட்டடம் அமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும், தலைநகரில் ஒரு அச்சகம் அமைக்கவேண்டும் என்ற திட்டமும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மதுரையில் ஒரு அச்சகம் ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தீர்களே, அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினர் மதுரை அச்சகம் பற்றிக் கேட்கிறார்கள். அது கொள்கையளவில் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் நடைமுறைக்கு வரும். அதைத்தான் சொன்னேன். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு அச்சகம் அமைய வேண்டும் என்பதை

[மாண்புமிகு என். வி. நடராசன்] [1971 ஜூலை 14

அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு, மதுரையில் ஆரம்பிக்க, தொடர்ந்து ஏற்பாடுகள் நடக்கின்றன. இடமும் பார்த்தாகிவிட்டது. மதுரையில் சொந்தக் கட்டடத்தில் அந்த அச்சகம் அமையும்.

சேலத்தில் இப்பொழுது பணியாற்றுகிறவர்கள் 119; இன்னும் 631 பேருக்கு வேலைதரும் வகையில் விரிவாக்கத் திட்டம் இருக்கிறது. திருச்சி அச்சகத்தில் இப்பொழுது வேலை செய்பவர்கள் 119; இன்னும் அங்கே 631 பேர்களை வேலையில் அமர்த்த வேண்டும் என்கிற திட்டத்தை ஆராய்ந்து வருகிறோம். விருத்தாசலத்தில் 171 பேர்கள் பணியாற்றுகிறார்கள். இன்னும் 579 பேர்களுக்கு வேலை தர ஆவன செய்யப்படும். புதுக்கோட்டையில் இப்பொழுது இருப்பது 187 பேர்கள்; இன்னும் 563 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, திட்டம் இருக்கிறது. மதுரையில் 750 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தர இயலும். இந்த அடிப்படையில் ஏறத்தாழ 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் திட்டம் சிறிது சிறிதாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நமது மாண்புமிகு திரு. எம். ஆர். கண்ணன் பேசிய பிரிட்ஜ் பகுதியில் இருக்கும்படியான தொழிலாளர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும், கன்வென்ஷன் போல, என்று சொன்னார்கள். அதற்கு எந்த வகையில் விதிமுறைகள் இடம் அளிக்கின்றன என்று தெரியவில்லை. சலுகை கொடுக்கக் கூடிய நிலைமை இருக்குமானால் அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

மற்றபடி, விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் சொன்ன யோசனைகளெல்லாம் அரசு நினைவில் வைத்து ஆவன செய்யும் என்று சொல்லி, வெட்டுப் பிரேரணையை கொடுத்த அம்மையார், இந்த உறுதிகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு வெட்டுப் பிரேரணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI**: In view of the assurance given by the Hon. Minister that he is going to have third shift shortly in Government Press, I am not pressing my cut motion.

The cut motion of Thirumathi T. N. Anandanayaki was, by leave, withdrawn.

**MR. DEPUTY SPEAKER**: The question is—

"That Government be granted a sum not exceeding Rs. 4,45,27,100 under Demand No. 34—Stationery and Printing".

The Demand was put and carried and the Grant was made.

ப. 52 மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



1971 ஜூலை 14]

9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

*A. Statutory Rules and Orders*

**'Nil'**

*B. Reports, Notifications and other Papers*

@ 130. Note on Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration (English).

131. Second Report of the Committee on Subordinate Legislation (Fifth Assembly).

132. First Report of the Committee on Government Assurances (Fifth Assembly).

---

@ Despatched to Members on 12—7—1971.

## இணைப்பு

[220-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### கோரிக்கை எண் 3.

**பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.**

தமிழ்நாட்டு வரி வருவாயில கணிசமான பகுதி பொது விற்பனை வரியின் வாயிலாகவும், அதைப்போன்ற வணிக வரிகளிலிருந்தும் கிடைக்கிறது. இந்த வரிகளின் மூலம் கிட்டிய வருவாய் 1966-67-ல் ரூ. 56.10 கோடியாக இருந்து 1970-71-ல் ரூ. 93.27 கோடியாக அதிகரித்தது. இதனால் நான்கு ஆண்டுகளில் ரூ. 37.17 கோடி அதிக வரி வருவாய் கிட்டியுள்ளது. இது இம்மாநிலத்தின் வியாபாரம்—தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியை மட்டுமல்லாது வணிக வரித் துறையின் திறமையையும் மெய்ப்பிக்கிறது. கீழ்க்கண்ட சட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது :—

(1) தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(4) தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935-ம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

2. நமது மாநிலத்தின் வணிக வரிச் சட்டம் சிறிய வணிகர்கள் மீதுள்ள வரிச்சுமையை அதிகரிக்காதிருக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. 1967-க்கு முன்பு ஆண்டுக்கு ரூ. 10,000 வரை மொத்த வணிகத் தொகையுள்ள வணிகர்கள் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் விற்பனை வரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட்டனர். இந்த அரசு 1967-ல் ஆட்சிக்கு வந்த பிறகு, சிறு வியாபாரிகளுக்குள்ள இடர்ப்பாடுகளைக் களையும் நோக்கத்துடன், இந்த வரம்பு அளவு ரூ. 15,000-க்கு உயர்த்தப்பட்டது. வரி செலுத்துவதினின்றும் விலக்களித்தலுக்கான வரம்பு அளவை உயர்த்தியதால் சுமார் 10,000 வியாபாரிகள் பயனடைந்தனர். மேலும், வரி செலுத்துவதினின்றும் விலக்களித்தலுக்கான வரம்பு அளவை ரூ. 25,000-க்கு அதிகரிக்க அரசு தற்போது முடிவு செய்துள்ளது. விலக்களிப்பு வரம்பை இவ்வாறு மேலும் அதிகரிப்பதால் கூடுதலாகச் சுமார் 25,000 வியாபாரிகள் பயனடைவர்.

3. இந்த விலக்களிப்பு வரம்புக்குள் வராத சிறு வியாபாரிகளுக்குச் சலுகையாக இணங்க விதங்களில் வரி செலுத்த அனுமதிக்கப்படுகிறது. இது சிறு வியாபாரிகளின் இடர்ப்பாடுகளைக் களைவதுடன், வரி விதிப்புக்குத் தேவைப்படுகிற விரிவான கணக்குகளையும், அதற்கான செலவையும் குறைக்கும். 1967-க்கு முன்பு, ஆண்டுக்கு ரூ. 50,000 வரை மொத்த வணிகத் தொகையுள்ள வணிகர்களுக்கு இந்தச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்தன. இந்த அரசு 1967-ல் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த வரம்பு அளவு ரூ 75,000க்கு உயர்த்தப்பட்டது. இந்த அளவை மேலும் ரூ. 1,00,000-க்கு உயர்த்த இப்போது அரசு முடிவு செய்துள்ளது.





மேற்படி முடிவுகளுக்குச் செயல்வடிவம் தருவதற்காகத் தேவையான சட்டம் நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரில் முகவுரைக்கப்படும்.

4. கடந்த ஐந்தாண்டுகளில் வணிக வரித் துறையால் வசூலிக்கப்பட்ட வரி வருவாயும், துறைக்கான செலவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | | | வருவாய். | செலவு. |
|---|---|---|---|---|
| | | | (ரூ. இலட்சத்தில்.) | |
| 1966—67 | .. | .. | 5,610·70 | 118·38 |
| 1967—68 | .. | .. | 6,495·21 | 133·32 |
| 1968—69 | .. | .. | 7,146·76 | 155·79 |
| 1969—70 | .. | .. | 8,258·38 | 170·78 |
| 1970—71 | .. | .. | 9,327·43 | 188·95 |

1971-72-ஆம் ஆண்டிற்காக, மதிப்பிட்டுச் செலவு ரூ. 2.35 கோடியாகும். வருவாய் ரூ. 102.34 கோடியாகும். இந்தச் செலவு, எதிர்பார்க்கப்படும் வருவாயில் 2.28 சதவீதம் மட்டுமே எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

5. வணிக வரித் துறையின் நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்காகவும், வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு விரைவான, செவ்விய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ஆண்டுக்கு ரூ. 2 லட்சத்திற்கு மேற்படாத செலவில் பணியாளர்களை நியமிப்பதற்கான அதிகாரங்களை, 5 ஆண்டுக் கால அளவிற்கு வணிக வரி ஆணையாளருக்கு 1970-ல் அரசு அளித்துள்ளது.

6. வரி ஏய்ப்பு நடக்கக்கூடிய இடங்களில் சோதனைச் சாவடிகள் கணிசமான அளவிற்கு உதவுவதால், கோயம்புத்தூர் கோட்டத்தில் ஆசனூர், ஜெர்மளம், தாளவாடி, பள்ளிப்பாளையம், அரியனூர், அயோத்தியாபட்டினம், மல்லூர் ஆகிய இடங்களிலும் கன்னியாகுமரி மாவட்டம், சுங்கான்கடை, துட்டுவிளை, சாருங்கமங்கலம் ஆகிய இடங்களிலும், மதுரை கோட்டத்தில் மதுரைக்கு அருகிலும் அரசு கூடுதல் சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளது.

7. வணிகர்கள் பல்வேறு வணிக வரி அலுவலகங்களுக்குச் செல்லும்போது, தேவையான எல்லா வசதிகளையும் அளிப்பதில் எப்பொழுதும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. 1970 அக்டோபரில், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் சிதறிக் கிடந்த 17 அலுவலகங்களை ஜார்ஜ் டவுனில் உள்ள பொதுக் கட்டிடம் ஒன்றிற்கு மாற்ற அரசு ஆணையிட்டது. 1971 பிப்ரவரியில், இதே போல் சிதறிக் கிடந்த மேலும் 11 அலுவலகங்களை எஸ்பிளனேட்டிலுள்ள குறளகத்திற்கு மாற்ற அரசு ஆணையிட்டது. மாநகரில் உள்ள விற்பனைவரி அலுவலகங்கள் அனைத்தையும் அரசால் கட்டப்படவிருக்கிற மத்தியக் கட்டிடம் ஒன்றுக்கு மாற்றுவது குறித்து அரசு தற்போது முழுமையாகப் பரிசீலித்து வருகிறது.

8. வணிகவரி அலுவலகங்களுக்கு வருகிற வணிகர்களின் வசதிக்காக அந்த அலுவலகங்களில் போதுமான மேசை, நாற்காலி போன்ற வசதிகள் இல்லை யென்று தொடர்ந்து புகார்கள் வந்துள்ளதால், 1970-71-ல் அதற்கென ரூ. 75,000 வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

9. மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழுவின் பரிவுரைகளின்மேல் சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அதிகாரியைத் தலைவராகக் கொண்டு இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திற்கும் ஆலோசனைக் குழு ஒன்றை 1971 மே திங்களில் அரசு அமைத்துள்ளது.

10. 1970-ம் மாநில விற்பனை வரிச்சட்டம் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் இரண்டு முக்கிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. முதல் வழக்கு ஆண்டுக்கு ரூ. 10 லட்சத்திற்கு மேற்பட்ட மொத்த வணிகத் தொகையுள்ள வணிகர்களைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரி மீதும் தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின்கீழ்ச் செலுத்தத்தக்க வரி மீதும் 5 சதவீத கூடுதல் விற்பனை வரி விதிப்பதற்கு வகை செய்கிற தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1970) சம்பந்தப்பட்டதாகும். இந்தச் சட்டத்தின் செல்திறனை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் சில வணிகர்களால் ரிட் மனுக்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்கு குறித்த விசாரணை முடிவடைந்தது. தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த வழக்கு தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 7-எ வது பிரிவின்கீழ் கொள்முதல் வரி விதிப்பு ( Purchase Tax ) குறித்ததாகும். சென்னை, உயர்நீதி மன்றம் 23-4-1971 நாளிட்ட தன்னுடைய தீர்ப்பில் இப்பிரிவின் நோக்கத்தையும், செயல்வரம்புப் பரப்பையும் குறிப்பிட்டுள்ளது. தீர்ப்பின் நகல் வந்துள்ளது. அந்தத் தீர்ப்பின் முழு விளைவுகள் குறித்து ஆய்வு செய்யப்படும். இதன் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான நடைமுறைகள் முடிவு செய்யப்படும்.

சென்னை, உயர்நீதி மன்றத்தால் 1970-ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டுள்ள மற்றொரு முக்கியமான வழக்கு, தோல் மேல் விதிக்கப்படும் விற்பனை வரியைக் குறித்ததாகும். இந்த வழக்கில் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் 2-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 7 (எ), 7 (பி) இனங்களின் செல்திறன் ஆட்சேபிக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றம் இந்த இனங்கள் செல்திறனுள்ளவை என்று தீர்ப்பளித்துள்ளது. தோல் மீது வரி விதிப்பு பற்றி நீண்ட காலமாக நடந்து வந்த பல்வேறு வழக்குகளுக்கு இத்தீர்ப்பு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

11. 1970-71-ஆம் ஆண்டில், மோட்டார் கார் டயர்கள், பாட்டரிகள் (Dry Cells தவிர) மோட்டார் கார் உதிரி பாகங்கள், டியூப் ப்ளாப்புகள் ( Flaps ) இவற்றின் விற்பனை மீது விதிக்கப்படத் தக்க வரி விதம் 15 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

7-5-1970 முதற்கொண்டு உதிரியாகவுள்ள அல்லது நகைகளில் பதிக்கப்பெற்ற செயற்கைக் கற்கள் மாநிலத்தில் முதன் முறையாக விற்பனை செய்யப்படுகையில் அவைகளுக்கு 9 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்பட்டது. வணிகர்களிடமிருந்து மேற்கொண்டும் முறையிடு வந்ததன் மேல், இந்த ஒரு முனை வரி விதிப்பு ரத்து செய்யப்பட்டது. அதன் விளைவாக 27-6-1971 முதற்கொண்டு இவை பல முனை வரி விதிப்புக்கு உட்பட்டவையாகும். மெருகிடப்பட்ட செயற்கைக் கற்கள் மீது விதிக்கப்படும் வரிக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் விலக்களிக்கப்பட்டது. இதன் விளைவாக, இவை மத்திய விற்பனை வரியினின்றும் விலக்குப் பெறுகின்றன. சாணைப் பிடிக்காத செயற்கை கற்களைப் பொறுத்த மட்டில், உள்ளூர் விற்பனை வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மத்திய விற்பனை வரி அவற்றிற்குச் செலுத்தப்பட வேண்டும்.





1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 21-வது இனத்தில் உரங்கள் குறித்து கண்டுள்ள கருத்துக்கள், வணிகர்களுக்குச் சில இடர்ப்பாடுகளை விளைவித்தது. 1957-ஆம் ஆண்டு உரங்கள் (கட்டுப்பாடு) ஆணையில் கண்டுள்ள சில உரங்கள் இனம் 21-ல் காணப்படவில்லை. அதுபோலவே, உரக்கலவையிலுள்ள மற்ற உரப்பொருள்கள் மீது 21-வது இனத்தின் கீழ் வரிவிதிக்கப்பட்டிருந்த போதிலும், உரக்கலவை மீது மேலும் 3½ சதவீதம் வரி விதிக்கப்பட்டது. இந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக 1970-ல் ஆண்டின் 26-வது சட்டத்தினால் தேவையான திருத்தம் செய்யப்பட்டது.

இரசாயன முறைகள் அல்லது பிற பரிசோதனைகளின் மூலம் அடையாளம் கண்டுகொள்ளக் கூடியதாயிருந்தாலுங்கூட, உதிரிப் பாகங்களுக்குத் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 (3)-வது பிரிவின் கீழ் வரிவீதச் சலுகை அளிக்கப்படத் தகுதியுள்ளது என தலைமை நீதி மன்றம் வரி வழக்கு ஒன்றில் தீர்ப்பு அளித்தது. எனினும், கண்ணால் அடையாளங் கண்டு கொள்ளக் கூடியவையும் இரசாயன முறையின் மூலமாக அல்லாமல், இயந்திர முறைப்படி பிரிக்கக் கூடியவையுமான உதிரிப் பாகங்களுக்கு மட்டுமே வரிவீதச் சலுகைவரையறுக்கப்பட வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும். இந்த நோக்கத்திற்கிணங்க 27/1970-வது சட்டத்தினால் 3 (3)-வது பிரிவு திருத்தப்பட்டது.

10-3-1971 முதற்கொண்டு ஆஸ்பால்ட் (தார்) கந்தகம் ஆகியவை இம்மாநிலத்தின் முதல் விற்பனை நிலையில் 7 சத விகிதம் ஒரு முனை வரியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

12. 1971-72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட அறிக்கையைச் சட்ட மன்றத்தில் வைத்தபோது, முதலமைச்சர் அறிவித்த செயற்குறிப்புகளில் ஒன்று, பொது பலமுனை வரி வீதத்தை 3 சதவீதத்திலிருந்து 3½ சதவீதமாக உயர்த்தலாம் என்பதாகும். சட்டமன்ற நடப்புக் கூட்டத் தொடரில் இது குறித்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

13. வரவு-செலவுத் திட்ட வரையில் அறிவிக்கப்பட்ட மற்றொரு செயற்குறிப்பு சென்னை மாநகரத்தில் வசூலிக்கப்படும் விற்பனை வரியில் மேல் விதிக்கப்படும் 10 சதவீத மேல் வரியைக் குறித்ததாகும். பின்னர் இந்த வீதம் 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வரி விதிப்பை சென்னை மாநகர புறநகரப்பகுதிக்கும், மதுரை மாநகரத்திற்கும், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களுக்கும் நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சட்டமன்ற நடப்புக் கூட்டத் தொடரில் இது குறித்த தேவையான சட்டம் கொண்டுவரப்படும்.

14. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 17-வது பிரிவின்கீழ் வரிவிலக்களிக்க அல்லது வரி வீதத்தைக் குறைக்க அரசுக்கு அதிகாரங்களுண்டு. கீழ்க்கண்டவை 1970-71-ம் ஆண்டில் செய்யப்பட்ட முக்கியமான வரி விலக்குகளும் வரி குறைப்புகளுமாகும்:

(1) ராணுவ அங்காடிகளின் (Canteen Stores) விற்பனை.

(2) தஞ்சாவூர் பூவேலைப்பாடமைந்த தட்டுக்களின் விற்பனை.

(3) இந்திய ரயில் பொருட்காட்சியில் பங்கு கொண்டவர்களால் செய்யப்பட்ட விற்பனை.

(4) பரிசுச் சீட்டுக்கள் விற்பனை.

(5) மீனம்பாக்கம் விமானதளத்தில் தீர்வை விதிக்கப்படாத கடைகளி லுள்ள பொருட்களின் விற்பனை.

(6) கல்வி நிறுவனங்களால் தயாரிக்கப்படும் சீருடை, புத்தகங்கள், எழுதுபொருள்கள் ஆகியவற்றின் விற்பனை.

(7) தண்ணீர் விற்பனை.

(8) எண்ணெய் உற்பத்திச் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களால் வாங்கப் படும் வேர்க்கடலை.

(9) நிரோத் விளம்பரம், விளம்பரப் பொருட்கள் விற்பனை.

(10) தமிழ்நாடு கதர்—கிராம தொழில்வாரியத்தின் செயல் வரம்புக்குள் வருகிற எல்லாப் பொருட்களின் விற்பனை.

(11) நிலாவரை இலைகள், நிலாவரை விதைகள் ஆகியவற்றின் விற்பனை.

(12) தோல் பதனிடும் பணிகள் கூட்டுறவு குடிசைத் தொழில்கள் சங்கங்களினால் பதப்படுத்தப்படாத உரிவை, தோல், சில குறிப்பிட்ட பதனிடும் பொருட்கள் வாங்குதல்.

(13) கச்சா படச் சுருள்களின் மேல் விதிக்கப்பட்டுள்ள வரி வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகக் குறைத்தல்.

(14) என்பீல்டு இந்திய லிமிடெட்டினால் இந்திய அரசு பாதுகாப்பு அமைச்சகத்துக்கு விற்பனை செய்யப்படும் மோட்டார் சைக்கிள் துணைப் பொருட்கள், உதிரிப் பாகங்கள் மேல் விதித்துள்ள வரிவீதத்தை 15 சதவீதத் திலிருந்து 3 சதவீதத்திற்குக் குறைத்தல்.

(15) லேலாண்ட், காமெட், ஹிப்போ ஆகிய வண்டிகளின் அடிச் சட்டங்களை இந்திய அரசு பாதுகாப்பு அமைச்சகத்துக்கு விற்பனை செய்த வகையில் விதிக்கப்பட்டுள்ள வரி வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 3 சத வீதத்திற்கு குறைத்தல்.

15. 1966-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையுள்ள கால அளவில் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்க் கிடைத்த வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | | | மொத்த வருவாய (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1966—67 | .. | .. | 3,569 |
| 1967—68 | .. | .. | 4,202 |
| 1968—69 | .. | .. | 4,620 |
| 1969—70 | .. | .. | 5,394 |
| 1970—71 | .. | .. | 6,178 |



16. 1966-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ்க் கிடைத்த வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | | | மொத்த வருவாய். (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1966—67 | .. | .. | 917 |
| 1967—68 | .. | .. | 1,027 |
| 1968—69 | .. | .. | 1,062 |
| 1969—70 | .. | .. | 1,256 |
| 1970—71 | .. | .. | 1.400 |

நடப்பாண்டில், மத்திய விற்பனை வரி வீதத்தில் மாற்றம் ஏதுமில்லை. Declared goods குறித்து, தமிழ் நாடு பொது விற்பனை வரி வசூலிக்கப் பட்டிருந்தால், அப்பொருட்களுக்கு, 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 8 (5) பிரிவின்கீழ் வசூலிக்கப்படும் வரிக்கு இந்த அரசு 1963-ஆம் ஆண்டு விலக்களித்தது. திரும்பப்பெறத் தக்க தொகைகளைப் பெறுவதில் வியாபாரிகளுக்கு ஏற்படும் தொல்லைகளைப் போக்க வேண்டி இது செய்யப் பட்டது. இருப்பினும், சென்னை உயர்நீதி மன்றத்தில் நடந்த வழக்கொன்றில், மாநிலங்களுக்கிடையான வியாபாரம் அல்லது வணிகத்தில் மாநில அரசுக்கு வரி செலுத்திய நபருக்கு (இறுதி வியாபாரிக்கு அல்ல) அத்தொகை திரும்பக் கொடுக்கப்படவேண்டும் என்று தீர்ப்பு கூறியுள்ளது. 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 15 (பி)-யைத் திருத்துமாறு இந்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. அப்போதுதான் உள்ளூர் விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் Declared goods மீது வரி செலுத்தப்படும் பொழுது, மத்திய விற்பனை வரி ஏதும் செலுத்தப்பட வேண்டியதில்லை.

17. 1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின்கீழ், 1966-ஆம் ஆண்டிலிருந்து 1971-ம் ஆண்டு வரையிலான கால அளவில் கிடைத்த வருவாயில் ஒப்பு நோக்குப் புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | | | மொத்த அளவு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1966—67 | .. | .. | 479 |
| 1967—68 | .. | .. | 514 |
| 1968—69 | .. | .. | 564 |
| 1969—70 | .. | .. | 685 |
| 1970—71 | .. | .. | 716 |

எண்ணெய்க் கம்பெனிகளால் முதன் முதலில் விற்கப்படும் மோட்டார் எரி எண்ணெய் மீது விதிக்கப்படும் ஒருமுனை வரியே இவ்வரியாகும். பெருவாரி யான எண்ணெய் வழங்கு கம்பெனிகள், சென்னை எண்ணெய்த் தூய்மைப் படுத்தும் நிறுவனம் ஆகியவற்றின் தலைமை அலுவலகங்கள் உள்ள சென்னை மாநகரில் இவ்வரியின் பெருவாரியான தொகை கிடைக்கப் பெறுகிறது. வரி விதிப்பிலிருந்து தப்பிய வணிக நடவடிக்கைகள் குறித்து வரி விதிப்பதற்கும், குறைந்த வீதத்தில் எந்த நேர்வுகளில் வரி மதிப்பிடப்பட்டிருக்கிறதோ அவற்றை மறுமதிப்பிடவும், தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின் 26-வது விதி வகை செய்தது.

அதுபோன்று விதி ஏற்படுத்த அரசுக்கு தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டம் அதிகாரம் அளிக்க வில்லையாதலால், இந்த விதி செல்லாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது. தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புத் திருத்தச் சட்டத்தில் (சட்டம் 3/1970) இது சரி செய்யப்பட்டது.

18 1966-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டத்தின் கீழ்க் கிட்டிய வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | | | மொத்த வருவாய். (ரூ. லட்சத்தில்,) |
|---|---|---|---|
| 1966—67 | .. | .. | 287 |
| 1967—68 | .. | .. | 332 |
| 1968—69 | .. | .. | 374 |
| 1969—70 | .. | .. | 384 |
| 1970—71 | .. | .. | 428 |

கேளிக்கை வரி மூலம் கிடைக்கும் வருவாயில் தொண்ணூறு சதவீதம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. திரைப்படக் கொட்டகை உரிமையாளரிடமிருந்து ஒவ்வொரு காட்சிக்கும் காட்சி வரி வசூலிக்கப்பட்டு, மாநில நிதிக்கு வரவு வைக்கப்படுகிறது. 1—4—1970-ஆம் நாளிலிருந்து காட்சி வரி விதம் இரு மடங்காகியுள்ளது. நன்கொடைக்கென நிதி திரட்டுவதற்கு நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் திரைப்படங்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு கேளிக்கை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க 1970-ஆம் ஆண்டு மே திங்களில் அரசு முடிவு செய்துள்ளது.

19. தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் 1966-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையுள்ள கால அளவில் வசூலான வரி வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | | | மொத்த வருவாய். (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1966—67 | .. | .. | 289 |
| 1967—68 | .. | .. | 337 |
| 1968—69 | .. | .. | 382 |
| 1969—70 | .. | .. | 390 |
| 1970—71 | .. | .. | 428 |

கேளிக்கை வரி, காட்சி வரி ஆகியவற்றின்மீது இவ்வரி மேல்வரியாக விதிக்கப்படுகிறது. இந்த வரி விதிப்பு மூலம் கிடைக்கக்கூடிய தொகை முழுதும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

20. கிண்டி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் நடத்தப்படும் குதிரைப் பந்தயங்கள் மூலம் தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தின் கீழ் வரி வருவாய் கிடைக்கிறது. 1966-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் கிடைத்த வருவாய் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| கால அளவு. | | | மொத்த வருவாய். (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1966—67 | .. | .. | 69 |
| 1967—68 | .. | .. | 84 |
| 1968—69 | .. | .. | 145 |
| 1969—70 | .. | .. | 148 |
| 1970—71 | .. | .. | 182 |



21. மாநிலப் பொது நிர்வாகத்தில் வணிக வரித் துறை நிர்வாகம் எப்போதுமே போற்றத்தக்க வகையில் நடந்து வந்துள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் அரசு எதிர்பார்த்த அளவிற்கு இத்துறையின் சாதனை இருந்தது. இந்த வரிச் சட்டங்களை மாநில நலனுக்குப் பயன்படுத்துவதற்கும், அதே நேரத்தில் வணிகச் சமூகத்தினருக்கு அதிக இடர்ப்பாட்டை ஏற்படுத்தாமலிருப்பதற்கும் அரசு பெருமுயற்சி செய்து வந்துள்ளது. வணிக சமூகத்தினர் தங்களுடைய ஒத்துழைப்பை அரசுக்கு வழங்கி வணிகவரிச் சட்டங்களின் நிர்வாகத்தை எளிதாக்குவர் என்று அரசு நம்புகிறது.

## இணைப்பு 2.

[245-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### -1970-71-ஆம் ஆண்டில் எழுதுபொருள்-அச்சுத் துறையின் பணி குறித்த ஆய்வுரை.

எழுதுபொருள்-அச்சுத் துறை, எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநரின் கீழ் செயல்படுகிறது. இவர் ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாவார். அச்சுப் பிரிவில் அச்சகத் துணை இயக்குநரும் தொழில் நுட்பப் பிரிவில் பணி மேலாளரும் இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். எழுதுபொருள் பிரிவில், எழுதுபொருள் உதவி இயக்குநர் இயக்குநரின் உதவியாளராகச் செயல்படுகிறார். அரசு வெளியீடுகள் நிலையத்தில் பணியைப் பொறுத்த வரையில், விற்பனை அதிகாரி ஒருவர் இயக்குநரின் உதவியாளராகச் செயல்படுகிறார்.

அச்சகத்துறையில் கீழ்க்காணும் பிரிவுகள் அடங்கியுள்ளன :—

(1) மைய அச்சகம், தங்கசாலைக் கட்டிடம், சென்னை-1.

(2) பாடப்புத்தகக் கிளை அச்சகம், சென்னை-2.

(3) உயர்நீதி மன்ற வழக்குப் பட்டியல் கிளை அச்சகம், சென்னை-1.

(4) மத்திய சிறைச்சாலையிலுள்ள கிளை அச்சகம், சென்னை-3.

(5) கிளை அச்சகம், புதுக்கோட்டை.

(6) அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

(7) அரசு வட்டார அச்சகம், சேலம்.

(8) அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

2. 1970-71-ஆம் ஆண்டில், இடைக்கால பொதுத் தேர்தல்களுக்குத் தேவைப்பட்ட வாக்குச் சீட்டுகள், சட்ட முறையிலான படிவங்கள் பிற படிவங்கள் முதலியவற்றை அச்சிடுவது குறித்த இன்றியமையா பணியை மைய அச்சகம் கவனிக்கவேண்டி வந்தது. 10 நாட்கால அளவுக்குள் 500 லட்சம் வாக்குச் சீட்டுகளை அச்சிட்டு அனுப்பிவைக்கும் பெரும் பொறுப்பு அரசு அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து அரசு அச்சகத்துக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் பணிப்பொறுப்பை உணரலாம்.

மைய அச்சகம் தன்னிடம் ஒப்படைத்துள்ள பணியை குறிப்பிட்ட கால அளவில் நிறைவேற்றிக் கொடுத்தது. தேர்தல் தொடர்பான பணியைத் தவிர, கீழ்க்காணும் சிறப்புப் பணிகளையும் வாலாயமான பணிகளையும் செவ்விய முறையில் அரசு அச்சகம் நிறைவேற்றியது :—

(1) தமிழ் நாடு இரண்டாவது சம்பள ஆலோசனைக்குழு அறிக்கை.

(2) காவல் துறை ஆணைக்குழு அறிக்கை.

(3) தமிழ் நாடு அரசிதழ்.

(4) துறையின் செய்தி வெளியீடுகள்.

(5) அலுவலகக் காலண்டர்கள், நாட்குறிப்புகள்.

(6) பரிசுச் சீட்டுகள்.

(7) அரசுப் போக்குவரத்துப் பேருந்து பயணச் சீட்டுகள்.

இந்த ஆய்வாண்டில், தமிழ் நாடு அரசிதழ்கள் உரிய நாட்களில் கொண்டு வரப்பட்டதுடன், அரசிதழில் அறிவிப்புகளை அச்சிடுவதில் உள்ள காலதாமதம் குறைக்கப்பட்டதையும் பெருமிதத்துடன் ஈண்டுக் குறிப்பிடலாம்.

பின்தங்கிய வகுப்பினர் நல ஆணைக்குழுவின் அறிக்கையும் அரசு அச்சகத்தினால் அச்சிடப்பட்டுள்ளது.

3. அரசு அச்சகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் எழுதுபொருள்-அச்சுத் துறையினால் நிறைவேற்றப்பட்ட பணியின் மதிப்பு பின்வருமாறு :—

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| 1967—68 | .. | .. | 1,39,54,199·72 |
| 1968—69 | .. | .. | 1,74,89,279·87 |
| 1969—70 | .. | .. | 1,96,15,230·00 |

1970 நவம்பர் திங்களில், அரசு தொடர்பான அச்சிடுதல்--கட்டுதல் பணிகளைத் தனியார் அச்சகங்களிடம் ஒப்படைப்பது தொடர்பானவற்றைக் கவனிக்கும் பொருட்டு அரசு அச்சகத்தில் "வெளி அச்சகப் பிரிவு" ஒன்றை அரசு தொடங்கி அப் பிரிவை நடத்துவதற்குத் தேவையான தொழில் நுட்பப் பணியாளர், நிர்வாக பணியாளர் பதவிகளை ஏற்படுத்தியது. அரசு அச்சகத்தில் தேக்கமடைந்துள்ள அச்சுப் பணியை விரைவில் முடிக்கும் நோக்கத்துடன் இப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டுகளில் தனியார் அச்சகங்களிடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பணியின் மதிப்பு பின்வருமாறு :—

| | | | ரூபாய். |
|---|---|---|---|
| 1967—68 | .. | .. | 4,58,509 |
| 1968—69 | .. | .. | 2,62,251 |
| 1969—70 | .. | .. | 9,74,489 |
| 1970—71 | .. | .. | 7,05,096 |



4. மைய அச்சகத்தில் மூன்றுவது முறை மாற்றுப் பணியைக் கொண்டு வருவது குறித்து அரசு கடந்த சில காலமாக நாட்டம் செலுத்தி வந்துள்ளது. 1969-70 மதிப்பீடுகள் குறித்த குழுவும் இது பற்றி விரிவாக விவாதித்துள்ளது. மூன்று முறை மாற்றுப் பணி முறையைக் கொண்டுவருவதனால் வேலையற்றிருப்பவர்கள் ஏராளமான பேர் வேலை வாய்ப்புப் பெறுவதோடு தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு உற்பத்தியை அதிக அளவுக்குப் பெருக்க இயலும். எனவே, அரசு அச்சகத்தில் மூன்றுவது முறை மாற்றுப் பணியைக் கொண்டு வர குழு பரிந்துரைத்தது. இக் குழுவின் பரிவுரையை அரசு ஏற்றுக் கொண்டு, அரசு மைய அச்சகத்திலும், அதன் கிளை அச்சகங்களிலும் மூன்றுவது முறை மாற்றுப் பணியைக் கொண்டுவர வேண்டுமென்று கட்டளையிட்டு 1970 அக்டோபரில் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. மத்திய அச்சகத்தில் மூன்றுவது முறை மாற்றுப் பணியைக் கொண்டுவருவது பற்றி விரிவான செயற்குறிப்புகளை அனுப்புமாறு எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதன்படி, அவர் செயற்குறிப்புகளை அனுப்பினார். அவற்றை அரசு பரிசீலித்து வருகிறது. சென்னை, மத்திய சிறைசாலையிலுள்ள அச்சகத்தில் இரண்டாவது முறை மாற்றுப் பணியைக் கொண்டுவர அரசு இசைவளித்துள்ளது. இதன்படி ஒவ்வொரு முறை மாற்றுப் பணியிலும் 150 சிறைக் கைதிகள் பணியாற்றுவர்.

5. அரசு அச்சகமும் எழுதுபொருள் துறையும் செயல்பட்டு வருவது குறித்து ஆய்வு செய்ய "ஓர் அதிகாரிக் குழுவை" 1967 செப்டம்பர் திங்களில் அரசு அமைத்தது. அரசு அச்சகம் செயல்படுவதில் ஏற்படக்கூடிய தொழில் நுட்பப் பிரச்சினைகள் அனைத்தையும் பற்றி முழு நாட்டத்தையும் செலுத்தத் தம்மால் இயலாது என்றும், அரசு அச்சகத்திற்கே உரிய தனிப்பட்ட பிரச்சினைகள் குறித்துச் சிறப்பாக ஆய்வு செய்ய தகுதி வாய்ந்த தொழில் நுட்பப் பணியாளர் அடங்கிய வல்லுநர் குழு ஒன்றை நியமிப்பது அவசியம் என்றும் அக் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. ஓர் அதிகாரிக் குழுவின் அறிக்கை அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, அரசு அச்சகம் செயல்படுவதில் உள்ள திட்டவட்டமான முறைகேடுகளும், அரசு அச்சகத்தின் தரம் குறைந்து விட்டதும் அரசு நாட்டத்திற்கு கொண்டுவரப்பட்டன. எனவே, அரசு அச்சகம், எழுதுபொருள் துறை ஆகியவை செயல்படுவது குறித்து வல்லுநர் குழு அடங்கல் ஆய்வு ஒன்றை மேற்கொள்வது இன்றியமையாததும் அவசரமானதுமாகும் என்று அரசு முடிவு செய்தது. ஆகவே, கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட அதிகாரபூர்வமான குழு ஒன்றை 1969 டிசம்பரில் அரசு அமைத்தது :—

| | | |
|---|---|---|
| 1. | திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., சிறப்புச் செயலாளர், தொழில் துறை. | .. தலைவர். |
| 2. | தொழில் வாணிபத் துறை (இயக்குநர்). | உறுப்பினர்கள். |
| 3. | தொழில் நுட்பக் கல்வி இயக்குநர். | |
| 4. | பொதுப்பணித் துறை பணிக்களறிக்குப் பொறுப்பு வகிக்கும் தலைமைப் பொறியாளர் (பாசனம்). | |
| 5. | எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர். | .. உறுப்பினர்—செயலாளர். |

எல்லா நிலைகளிலும் அரசு அச்சகமும் எழுதுபொருள் பண்டகசாலையும் செயல்படுவது குறித்து விரிவாக ஆய்வு செய்து அது பற்றிய அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அக் குழு இதுவரை இரண்டு இடைக்கால அறிக்கைகளை அனுப்பியுள்ளது. முதலாவது அறிக்கையில் தமிழ் நாடு அரசிதழ் வெளியிடுதல், முறையான வடிவிலான படிவங்கள், முறையான வடிவில் இல்லாத படிவங்கள் ஆகியவற்றை அச்சிடுதல், பழைய இயந்திரங்கள் சாதனங்களை மாற்றுதல், அந்தந்த அலுவலுக்குரிய அச்சகப் பிரிவுகளைத் தொடங்குதல், இரவு நேர முறை மாற்றுப் பணிக்காக தொழில் நுட்ப மேற்பார்வைப் பணியாளர்களை நியமித்தல் முதலியவை பற்றிய பரிவுரைகள் அடங்கியுள்ளன. பண்டங்கள் (எழுதுபொருள் உட்பட) வாங்குதல், நிதி குறித்த அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்தல் பற்றிய பரிவுரைகள் இரண்டாம் இடைக்கால அறிக்கையில் அடங்கியுள்ளன. உற்பத்தி குறைந்துள்ளதற்கு இயந்திரங்கள் இருக்கும் களத்தில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளது மேற்பார்வையின்மையும், தொழிற்சாலையில் ஒழுங்கின்மையும் முக்கிய காரணங்களாகும் என்று குழு கூறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இக் குழுவின் அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டது. அரசு அச்சகங்கள் அனைத்திலும் முறை மாற்றுப் பணி அதிகாரிகளாக வேலைக்கமர்த்த பணி முழுநிலை துணை மேலாளர் பதவிகள் மூன்றுக்கும், பணி உதவி மேலாளர் பதவிகள் பதினொன்றுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த அதிகாரிகள் வேலைக்கமர்த்துவதனால் துறையின் திறமை குறிப்பிடத்தக்க அளவுக்கு மேம்பாட்டடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. அச்சகம் திறம்படச் செயல்பட வேண்டுமாயின், அங்குள்ள பழைய இயந்திரங்களை மாற்றுவதற்கு முதலிடம் அளிக்கப்படவேண்டும் என்றும், பழைய இயந்திரங்களைப் படிப்படியாக மாற்றியமைப்பதற்கான ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு பரிவுரை செய்துள்ளது. இப் பரிவுரையையொட்டி கீழ்க்காணும் பழைய இயந்திரங்கள் பயனில்லாத இயந்திரங்களாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன :—

1. அச்சிடு இயந்திரம் எண். 12, ரெலயன்ஸ் வார்பெடல் (ராயல் அளவிலானது).

2. அச்சிடு இயந்திரம் எண். 13, ரெலயன்ஸ் வார்பெடல் (ராயல் அளவிலானது).

3. அச்சிடு இயந்திரம் எண். 15, ரெலயன்ஸ் வார்பெடல் (ராயல் அளவிலானது).

4. அச்சிடு இயந்திரம் எண். 17, பிரேமர் (5335) ஹரில்டு அண்டு சன்ஸ் (டபுள் கிரவுன் அளவு).

5. அச்சிடு இயந்திரம் எண். 21, ரெலயன்ஸ் வார்பெடல் (டபுள் கிரவுன் அளவு).

6. அச்சிடு இயந்திரம் எண். 42, ரெலயன்ஸ் வார்பெடல் (டெமி போலியோ அளவு).

7. அச்சிடு இயந்திரம் எண். 109, பிரேமர் வார்பெடல், ஹரில்டு அண்டு சன்ஸ் (டபுள் கிரவுன் அளவு).

8. அச்சிடு இயந்திரம் எண். 108, ஹரில்டு அண்டு சன்ஸ் (டபுள் கிரவுன் அளவு).



9. அச்சிடு இயந்திரம் எண். 37, ஃபார்ன்வெல் வார்பெடல் (டபுள் புல்ஸ்கேப் அளவு).

10. அச்சிடு இயந்திரம் எண். 105, ஃபால்கன் ஆர்ட் சேப்டி பிளாட்டன் 3 (டெமி ஃபோலியோ அளவு).

11. அச்சிடு இயந்திரம் எண். 47, ஃபால்கன் சேப்டி பிளாட்டன் (புல்ஸ்கேப் அளவு).

மதிப்பீட்டுக் குழுவின் பரிவுரையையொட்டி, ரூ. 20,53,400 செலவில் 21 இயந்திரங்களை வாங்குவதற்கான செயற்குறிப்புகளை எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் அனுப்பினர். இச் செயற்குறிப்புகளை அரசு ஏற்றுக் கொண்டு கீழ்க்காணும் இயந்திரங்களை வாங்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது :—

| தொடர் எண்ணும், இயந்திரத்தின் விவரமும். | | மொத்த மதிப்பு. ரூ. |
|---|---|---|
| (i) ரஷ்ய நாட்டு 47 அங்குல தானியங்கி கிளாம்ப் உள்ள காகிதம் வெட்டும் இயந்திரங்கள் இரண்டு. | .. | 76,800 |
| (ii) இரண்டு சுழல் தானியங்கி அச்சுப்பொறி P. D. 5 மாதிரி—12 பொறிகள். | .. | 10,20,000 |
| (iii) தனி அச்சு நிலைப்படுத்திய அச்சுப் பலகையுள்ள இரண்டு யந்திரங்களும் தனி அச்சு கூட்டு வார்ப்பு இயந்திரங்கள் ஐந்தும். | .. | 9,56,600 |

1971-72-ஆம் ஆண்டில் ரூ. 20 லட்சம் செலவில் தனியச்சு இயந்திரத்தைக் கூடுதலாக வாங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. புதுக்கோட்டையில் உள்ள அரசு கிளை அச்சகத்திற்குக் கூடுதலாகக் கட்டிடங்கள் கட்ட ரூ. 1.2 லட்சம் செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சேலத்திலுள்ள அரசு வட்டார அச்சகம் தற்போது ஒரு தனியார் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இவ் வட்டார அச்சகத்திற்குக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு உள்ளது. இதற்கான திட்டங்களும், மதிப்பீடுகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. விருத்தாசலத்திலுள்ள அரசு வட்டார அச்சகம் தனியார் கட்டிடத்தில் அமைந்துள்ளது. விருத்தாசலம் வட்டத்திலுள்ள கண்டியாகுப்பம் கிராமத்தில் கையகப்படுத்தவிருக்கும் 3.65 ஏக்கர் தனியார் நிலத்தில் கட்டப்படும் புதிய கட்டிடத்திற்கு இவ்வச்சகத்தை மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசு வட்டார அச்சகம் தற்போது திருச்சிராப்பள்ளி தொழிற்பேட்டையில் அமைந்துள்ளது. இவ்வட்டார அச்சகத்திற்குத் தனிக் கட்டிடம் ஒன்று கட்டவேண்டி தாவக்குடி கிராமத்திலுள்ள தொழில் வாணிபத் துறையின் மேம்படுத்தப்பட்ட மனைகளிடையே குறிப்பிட்ட மனைகளைக் கையகப்படுத்தும் செயற்குறிப்பு உள்ளது.

7. மைய அச்சகத்தில் உள்ள பணிச் சுமையைக் குறைக்கவும், தொடர்புள்ள தொழில் பகுதிகளை மேலும் தொழில் மயமாக்கத் தூண்டவும் கருதி ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் வட்டார அச்சகம் ஒன்று தொடங்கப்படுவதற்கு அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. முதற்கண் முறையான வடிவிலான படிவங்களை அச்சிடுவதற்காக மதுரையில் வட்டார அச்சகம் ஒன்றை அமைக்க 1970 நவம்பரில் அரசு ஆணையிட்டுள்ளது. அரசின்

ஒப்பளிப்பு பெறும் பொருட்டு கூடுதல் இயந்திரம் வாங்குதல், பணியாளர்களை வேலைக்கமர்த்தல் ஆகியவை குறித்த விரிவான செயற்குறிப்புகளை அனுப்புமாறு எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் கேட்கப்பட்டுள்ளார். இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருவதாக இயக்குநர் தெரிவித்துள்ளார். வட்டார அச்சகத்தைத் தொடங்குவதற்காக செங்குளம் ஏரியில் நீதிமன்றக் கட்டிடங்களின் அருகில் தகுந்ததொரு மனையை ஒதுக்க மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புக்கொண்டுள்ளார். அமைக்கக் கருதியுள்ள புதிய அச்சகத்தில் மூன்று முறை மாற்றங்களில் பணி நடைபெறும்; 750 தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும் 100 நிர்வாகப் பணியாளர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும்.

8. மைய அச்சகத்தில் இருமுறை மாற்றுப்பணியில் சுமார் 2,900 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர் என்றும் இம் முறையைச் சீரமைப்பதனால் மிகப் பெரிய அளவினதாக ஆகி கட்டுக்கு அடங்காததாகிவிடும் என்று அரசு அச்சக சீரமைப்புக் குழு தனது முதல் இடைக்கால அறிக்கையில் கூறியுள்ளது. எனவே, உரிய அளவிலான அச்சகங்களை அமைப்பதன்மூலம் எல்லா நேரங்களிலும் ஒழுங்கும் திறமையும் செறிந்த மேற்பார்வையும் இருந்து வரலாம் என்று குழு கருத்துத் தெரிவித்துள்ளது. தங்கசாலையிலுள்ள மைய அச்சகம், இன்ன பணிக்கென்று அமைந்த அடிப்படையில் மூன்று அல்லது நான்கு பிற பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம் என்றும் குழு கருத்துத் தெரிவித்தது. இது குறித்துத் திட்டவட்டமான செயற் குறிப்புகளை அனுப்புமாறு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநரை அரசு கேட்டுள்ளது. சென்னை மாநகரில் அரசு அச்சகத்திலுள்ள பணிச்சுமையைக் குறைக்கும் நோக்கத்துடன் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அச்சிடும் பிரிவு ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். இதற்காக அம்பத்தூரில் மனை வாங்க ரூ. 60,000-க்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

9. உத்தேச அச்சகங்கள் அமைக்கப்படும் கட்டிடத்திற்கான வடிவமைப்பு உருவாகி வருகிறது. இது இறுதி செய்யப்பட்டதும், உத்தேச அச்சகங்களுக்குச் சிறந்த கட்டிடங்கள் அமையும். மேலும் இக் கட்டிடங்கள் தொழில் நன்கு நடைபெறுவதற்கும் தொழிலில் இணக்கமான நிலை ஏற்படுவதற்கும் வாய்ப்பாக இருக்கும். தளவாட அமைப்பு முறையில் நவீன உத்திகளைக்கொண்டு வருவதன்மூலம் உத்தேச அச்சகங்களில் அமைக்கவிருக்கும் இயந்திரம், சாதனத்திற்கான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

10. அரசு அச்சகத்திலுள்ள தொழிலாளர்களுக்குப் பல்வேறு வசதிகளை அளிக்க அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அரசு அச்சகத் தொழிலாளர்களுக்குப் போதிய நீர் வழங்குவதற்கு ரூ. 26,000-க்கு அரசு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அரசு அச்சக வளாகத்தில் இரண்டு குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு விட்டன. விசை ஏற்ற நிலையம் நிறைவேறும் நிலையில் உள்ளது. குழாய்கள் போடப்பட்டு வருகின்றன. பணி முழுவதும் விரைவில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்னை-2, அண்ணா சாலையில் உள்ள அரசு பாடப் புத்தக கிளை அச்சகத்தில் கிணறு ஒன்றை வெட்டுவதற்கும், சைக்கிள் நிறுத்தும் கொட்டகை ஒன்றைக் கட்டுவதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னை-1ல் உள்ள அரசு மைய அச்சகத்திலும் சைக்கிள் நிறுத்தும் கொட்டகை ஒன்றைக் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மைய அச்சகத்தில் உள்ள துறை சிற்றுண்டி விடுதி நல்ல முறையில் இயங்கவில்லை எனப் புகார்கள் வந்ததன் காரணமாக, அச்சிற்றுண்டி விடுதி தனியார் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அச்சிற்றுண்டி விடுதி தற்போது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அண்ணா சாலையிலுள்ள கிளை அச்சகத்தில் சிற்றுண்டி விடுதி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இது தனியார் ஒப்பந்தக்காரரால் நடத்தப்படுகிறது. ஊழியர்களின் தேவையைக் கவனிக்கும் பொருட்டு 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ஆம் நாளன்று எழுதுபொருள் அலுவலகத்தில் மருந்தகப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு அல்முடம் ரொட்டியும் தேநீரும் வழங்கப்படுவதில் மாடர்ன் ரொட்டி தயாரிப்பு நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் ரொட்டி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். இதைத் தொழிலாளர்கள் ஆர்வத்துடன் வரவேற்றுள்ளனர். பணியாற்றுகையில் ஈய நச்சு அபாயத்திற்குள்ளாகும் தொழிலாளர்களுக்குப் பாலும், வைட்டமின் செறிந்த மாத்திரைகளும் தொடர்ந்து வழங்கப்பட்டன.



11. மைய அச்சகத்திலும், கிளை அச்சகங்களிலும் கழிவுத்தாள்கள் ஏராளமாகத் தேங்கிக் கிடந்தன. இங்கு தொழிலாளர் நல அமைச்சர் திடீர் சோதனையிட்டதன் விளைவாக அத் தாள்கள் முறையாக அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. கழிவுத்தாள்கள் காகிதத் துண்டுகள் விற்பனையின்மூலம் வருவாய் 1968-69-இல் ரூ. 28,186,17 ஆக இருக்க, 1970-71-இல் இந்த வருவாய் ரூ. 1,77,236.29 ஆக உயர்ந்தது. பொருள்களுக்குரிய தொகையைச் செலுத்தாமலிருக்கும் துறைகளிடமிருந்து வருவாய் நிலுவைகளை வசூலிக்க ஆய்வாண்டில் கணிசமான அளவுக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இத்துறை மேற்கொண்ட விரைவான முயற்சிகளினால் வசூல் 1968-69-இல் ரூ. 9,52,418.79 ஆக இருக்க 1970-71-இல் ரூ. 32,99,605.74-ஆக உயர்ந்தது.

12. அரசு அச்சகத்தின் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் இவ்வாண்டில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அச்சகத்தில் ஒழுங்கை வளர்க்கும் பொருட்டு இரவு நேர முறை மாற்றுப் பணிகளில் திடீர் சோதனையிடப்படுவதுடன் அவ்வப்போது மேற்பார்வையும் செய்யப்பட்டு வந்துள்ளது. அச்சக வளவுகள் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைக்கப்பட்டுள்ளது. அச்சக வளவுகள் பொதுவாகத் தூய்மையாயிருப்பதற்கேற்றவாறு பகல் நேரங்களில் அதிகாரிகள் மேற்பார்வையிடும் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த அதிகாரிகள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நாட்களில் அச்சகம் முழுவதையும் பார்வையிட்டு இது பற்றிய அறிக்கையை இயக்குநருக்கு அனுப்புகிறார்கள். இயக்குநர் அவசியமான நேர்வுகளில் நடவடிக்கை எடுக்கிறார்.

13. எழுதுபொருள் பிரிவு மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்களுக்கான எழுதுபொருள்கள், தட்டச்சு இயந்திரங்கள், தாலிகள் முதலியவற்றைக் கொள்முதல் செய்வதற்காகவும் வழங்குவதற்காகவும் செயல்படும் மத்தியப் பிரிவாகும். இம் மாநிலத்தில் ஏறத்தாழ 2,562 அலுவலகங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை இப் பிரிவு வழங்குகிறது. 1971, மார்ச் திங்களில் மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கும், மக்கள் பெருமன்றத்திற்கும் நடந்த தேர்தல்களுக்காகத் தேர்தல் நடத்தும் அதிகாரிகளுக்குத் தேவைப்பட்ட பல்வேறு பொருள்களையும் வாக்குச் சீட்டுகள் அச்சடிப்பதற்குத் தேவையான

தாள்களையும் எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர் கொள்முதல் செய்ய முடிந்தது. தேர்தல் புகார் எதுவுமின்றி உரிய காலத்திற்குள் நடத்தும் அதிகாரிகளுக்குத் தேவைப்பட்ட எழுதுபொருள்கள் அனைத்தையும் எழுது பொருள் அலுவலகம் வழங்கியது. பொதுத் தேர்தல்களுக்கான எழுது பொருள்கள் வழங்கியது தவிர, எழுதுபொருள் பண்டகசாலை வழக்கமாக வரக்கூடிய தேவைக் குறிப்புகளையும் நல்ல முறையில் நிறைவேற்றியது.

14. நிர்வாகத்தினருக்கும் அரசு அச்சக ஊழியர்களுக்கும் எழுதுபொருள் பிரிவிற்குமிடையே என்றுமே நட்புணர்ச்சியும் நல்லுறவும் நிலவி வந்துள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் எழுதுபொருள்-அச்சுத் துறை முற்றிலும் மனநிறை வளிக்கும் வகையில் செயல்பட்டது. இத் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

### வியாழக்கிழமை, 1971 ஜூலை 15.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. அ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### அரசுத் தொடர்புடைய அச்சு வேலைகள்.

*243 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுத் தொடர்புடைய அச்சு வேலைகள் தனியார் அச்சகங்களில் அச்சிடப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஆம், அரசுத் தொடர்புடைய அச்சு வேலைகள் தேவையான அளவிற்குத் தனியார் அச்சகங்களில் அச்சிடப் படுகின்றன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இப்படி வெளியில் அச்சடிக்கப் படும்போது, அண்மையில் எந்த எந்த ஆண்டுகளில் எவ்வளவு ரூபாய் ஒவ்வொரு ஆண்டுக்கும் அதற்காகச் செலவிடப்பட்டது என்பதையும், இந்த நிலையினைத் தவிர்க்க அரசாங்கமே மேலும் அச்சகங்களை உருவாக்க முன்வருமா என்பதனையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, 1963-64-ம் ஆண்டில் 5,00,668 ரூபாய்க்கும், 1964-65-ம் ஆண்டில் 4,55,661 ரூபாய்க்கும், 1965-66-ம் ஆண்டில் 7,26,402 ரூபாய்க்கும், 1966-67-ம் ஆண்டில் 20,16,096 ரூபாய்க்கும், 1967-68-ம் ஆண்டில் 4,58,509 ரூபாய்க்கும், 1968-69-ம் ஆண்டில் 2,62,251 ரூபாய்க்கும், 1969-70-ம் ஆண்டில் 9,74,481 ரூபாய்க்கும், 1970-71-ம் ஆண்டில் 7,05,906 ரூபாய்க்கும் வெளியார் அச்சகங்களில் வேலைகள் தரப்பட்டிருக்கின்றன. 1966-67-ம் ஆண்டில் 20 லட்சம் ரூபாய்க்கு வேலைகள் வெளியார்களுக்குத் தரப்பட்டதற்குக் காரணம், அப்பொழுது பொதுத் தேர்தலைக் குறித்து வாக்காளர் பட்டியலை அச்சடிக்கவேண்டியிருந்ததாகும். 1969-70-ம் ஆண்டிலும், 1970-71-ம் ஆண்டிலும் முனிசிபல் இடைத் தேர்தலையொட்டியும், பஞ்சாயத்துத் தேர்தலையொட்டியும் 400 items of standard forms were were given for printing in private pressess. இத்தகைய காரணங்களால் வெளியார்களுக்கு அச்சு வேலை இந்த அளவுக்குக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

திரு. சொ. காவேரிமணியம்: வெளியார் நடத்தும் அச்சகங்களில் இவ்வாறு அரசு வேலைகள் அச்சிடக் கொடுத்து செலவிடும்போது, என்னென்ன முறைகள் கையாளப்படுகின்றன? மதுரை நகரத்தைப் பொறுத்தவரையில் இது யாரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தனியார் அச்சகங்களில் அரசு வேலைகளை அச்சிடக் கொடுக்கும்போது அதற்கென்று சில விதிமுறைகளை வகுத்து வைத்திருக்கிறார்கள். ஸ்டாண்டர்டு பாரங்களை, அதற்கென்று விதிக்கப்பட்டுள்ள ரேட்டுக்குத்தான் அச்சிட வேண்டும் என்று ஒரு முறை இருக்கிறது. மற்றவற்றுக்கு டெண்டர் கேட்டு அதன் மூலமாக ஆர்டர் தந்து வருகிறார்கள். மதுரையில் தனியார்த் துறைக்குத் தருவதாக குறிப்பு இங்கே இல்லை. பொதுவாக, டைரக்டர் ஆப் ஸ்டேஷனரி அண்டு பிரிண்டிங் மூலமாகத்தான் வெளியார் அச்சகங்களுக்கு அரசுக்கான அச்சுத் துறை ஆர்டர் தரப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: நேற்று அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுக்குச் சொந்தமான ஒரு அச்சகம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படியானால், இந்த ஆண்டு எந்த அளவுக்கு தனியார் அச்சகத்திற்கு வேலை கொடுக்கப்படும் என்றும், அடுத்த ஆண்டு முதற்கொண்டு அரசு அச்சு வேலைகள் பரிபூரணமாக அரசு அச்சகத்திலேயே அச்சடிக்கப்படுமா என்றும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இந்த ஆண்டிலிருந்து வெளியார் அச்சகங்களுக்குத் தருகின்ற ஆர்டரைக் குறைக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கக் கிளை அச்சகங்களையெல்லாம் விரிவு படுத்த வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அம்பத்தூரில் ஒரு அச்சகம் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: வெளி அச்சகங்களில் அச்சடிக்கக் கொடுக்கும் போது அதற்குத் தேவையான காகிதங்களும் நம்மாலே கொடுக்கப்படுகின்றனவா? அப்படிக் காகிதங்கள் வழங்கியதில் சில ஊழல் நடந்திருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அது சம்பந்தமான விவரம் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன்: ஆர்டர் கொடுக்கும்போது அதற்கான காகிதமும் அரசு அச்சகத்திலிருந்து டைரக்டர் மூலமாக சப்ளை செய்யப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. கனம் உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அந்த ஊழல் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. 1966-ம் ஆண்டில் ஒரு அச்சகத்திற்கு அச்சடிப்பதற்காகத் தந்த காகிதங்களில் பெரும்பாலானவற்றை அச்சடிக்காமலேயே அச்சடித்ததாக அந்த அச்சக உரிமையாளர் சொன்னார். அந்த ஊழலை இப்பொழுது கண்டுபிடித்து, அது போலீஸ் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விசாரணை நடந்து கொண்டு வருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன்: சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் அரசுப் பாடப் புத்தகங்கள் வெளியார் அச்சகங்களில் அச்சடிக்கப்பட்டனவா? அப்படியானால், அதன் மதிப்பு எவ்வளவு என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: அந்த விவரங்கள் இப்பொழுது இல்லை. கனம் உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

திரு. என். முருகையன்: அரசாங்கப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காகத் தனியாக ஒரு அச்சகம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?



மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இப்பொழுது அரசாங்கப் பாடப் புத்தகங்களில் 50 சத விதம் அரசு அச்சகத்துறையில்தான் தயாரிக்கப்படுகின்றன. மற்றவை வெளியார் அச்சகத்திற்குத் தரப்பட்டு வருகிறது. அது கல்வித் துறை மூலமாக ஆர்டர் தரப்பட்டு, டைரக்டர் மூலமாக இந்தப் பணிகளெல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு சட்ட மன்ற உறுப்பினர்கள் உபயோகப்படுத்தக் கூடிய கவர், லெட்டர் பேடு ஆகியவைகளின்மேல் உள்ள 'எம்ப்ளெம்'-இல் இந்தி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு இந்தியைப் பொறுத்த வரையில் என்ன கொள்கை வைத்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அப்படி இருக்கையில், இந்தியில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துக்களை எடுத்துவிட்டு, தமிழிலேயே "வாய்மையே வெல்லும்" என்று அச்சிட்ட இலச்சினையை அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தமிழில்தான் அச்சடிக்கப்பட்டு வருகிறது. கனம் உறுப்பினர் கையில் கிடைத்தது, ஏதாவது பழைய 'பாரம்' ஆக இருக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி: ஆண்டுக்கு ஐந்து லட்சம் முதல் ஏழு லட்சம் ரூபாய் வரையில்கூட தனியார் அச்சகங்களுக்கு சர்க்கார் பணம் செல்லுவதைத் தவிர்க்கும்பொருட்டு, இருக்கிற சர்க்கார் அச்சகங்களிலேயே மூன்று ஷிப்ட் முறையை அமலாக்கி இந்தச் செலவைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் கனம் உறுப்பினர் குறிப்பிட்ட நோக்கமும் கொள்கையும்தான் அரசாங்கத்தின் நோக்கமும் கொள்கையும் ஆகும். இதை நேற்றுகூட நான் மானியத்தின் மீதான விவாதத்தில் பேசும் போது சொன்னேன். அரசு அச்சகங்களையெல்லாம் விரிவுபடுத்த தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இனி வருகிற ஆண்டுகளில் எந்த அளவுக்கு வெளியார் அச்சகங்களுக்குத் தருவதைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைக்கும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, அரசாங்க பாடப் புத்தகங்களை விரைவாக அச்சிட்டு வழங்க மேல்நாட்டில் இருந்து ஏதாவது இயந்திரம் வரவழைக்கப்பட்டிருக்கிறதா? இல்லையானால் வரவழைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: வரவழைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் அந்த இயந்திரங்கள் வந்து சேரும்.

திரு. கா. காளிமுத்து: அரசு அச்சுக்கூடங்களில் ஏற்படும் பிழையைத் தவிர்க்க அங்கே எடுக்கப்படும் தொழிலாளர்களுக்கு அச்சுப் பயிற்சி அளிக்க ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பலர் அதுபோல அப்ரெண்டிசாகச் சேர்ந்து பயிற்சி பெறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லாவிட்டாலும் அவர்களிலும் சிலருக்கு வாய்ப்பு ஏற்படும்போது வேலை கிடைக்கிறது.

### ரெவின்யூ போர்டினை எடுத்து விடுதல்

* 244 வினா—திரு. என். கிட்டப்பா
திரு. கே. டி. கே. தங்கமணி மாண்புமிகு உணவு-வருவாய்த்
திரு. மா. பா. சாரதி
துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு ரெவின்யூ போர்டினை எத்துவிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இதுபோல இந்தியாவின் மற்ற மாநிலங்களில் அமைந்துள்ள ரெவின்யூ போர்டுகளை வேறு எந்த மாநிலத்திலாவது எடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுபற்றிய முழு விவரங்களையும் சேகரிக்கும்படியாகக் கோரப்பட்டிருக்கிறது. விவரங்கள் வந்தபிறகு அரசு யோசித்து முடிவு எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ரெவின்யூ போர்டு மெம்பர்களாக 4 பேர்கள் இருந்ததை அரசு 6 பேர்களாக உயர்த்தியிருக்கிறதே. ஏற்கனவே ரெவின்யூ போர்டைக் கலைத்துவிடுவதாக அறிவிக்கப்பட்டிருப்பதனால் இதுபற்றி இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக இறுதியான ஒரு முடிவுக்கு அரசு வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எண்ணிக்கை அதிகப்பட்டிருப்பதன் காரணத்தினால் ரெவின்யூ போர்டு இருப்பது உறுதியாக்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம் அல்ல. மற்ற மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய விவரங்களை சேகரிக்கச் சொல்லியிருக்கிறோம். அவை எல்லாம் வந்தவுடன் இந்த ரெவின்யூ போர்டை எடுத்த பிறகு சட்டச் சிக்கல் இல்லாமல் எப்படி இதை நடைமுறைப்படுத்தலாம் என்று பார்த்து முடிவு எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, is it a fact that the Government are having second thoughts now because if the Board of Revenue is completely removed, the insulating force between the Government and the lower-down officers will also be removed? Also, may I know whether the Government after careful re-consideration have come to the view that it is better to be cautious in regard to this matter?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். மாற்றி அமைப்பது என்பதில் எவ்வித கருத்து மாறுபாடும் இல்லை. எவ்வாறு மாற்றி அமைப்பது என்பதுதான் இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன்: ரெவின்யூ போர்டை மாற்றி அமைப்பது சம்பந்தமாக அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது என்று கூறினார்கள். அது ஏற்கனவே இந்த மன்றத்தில் திட்டவட்டமாக எடுக்கப்படும் என்பதாக



முன் அமைச்சர் ஒருவரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அது பரிசீலிக்கப்படும் என்கிறபோது எங்கே அதை எடுக்கப்போவதில்லையோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இதுபற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாக்க உதவுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதுபற்றிய அரசாங்கத்தின் முடிவை இப்போது சபாநாயகராக உள்ளவர் முன்பு அமைச்சராக இருந்தபோது அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை. சட்டச் சிக்கல் எதுவும் இல்லாமல் எந்தவகையில் மாற்றி அமைப்பது என்பதுதான் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. போர்டைக் கலைப்பதுபற்றி அல்ல, அது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்ட விஷயம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ரெவின்யூ போர்டு முதல் மெம்பராக இங்கே அனுபவம் உள்ளவர் நியமிக்கப்படுகிறாரா? அல்லது மத்திய சர்க்காரில் இருந்து வருகிற சீனியர் என்ற முறையில் அமைக்கப்படுகிறாரா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இரண்டு முறையும் உண்டு. சீனியாரிட்டியைப் பார்த்துப் போடுவதும் உண்டு. அனுபவத்தைப் பார்த்துப் போடுவதும் உண்டு.

திரு. கே. என். குமாரசாமி: ரெவின்யூ போர்டு என்பது அந்நியர் ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி செய்துகொண்டிருக்கும் இந்தக் காலத்தில் அதனால் என்ன லாபம் என்று அரசு கருதுகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதனால் எந்தவித லாபமும் இல்லை என்பதன் காரணத்தினால்தான் கலைத்துவிடுவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி: மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திப்போடுவதன் காரணமாக அதற்கென்று தனி அதிகாரிகள் போடவேண்டியதாக இருக்கிறது. வருவாய்க் கழகத்தின் கீழே இருக்கிற அதிகாரிகளை அதற்குப் போடுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வருவாய்த்துறை கழகத்திற்கும் மதுவிலக்குக்கும் சம்பந்தம் இல்லை. இதை எக்சைஸ் இலாக்கா கவனிக்கப் போகிறார்கள். ரெவின்யூ இலாக்கா மேற்பார்வை செய்துகொள்வார்கள்.

### சென்னை ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகள்

* 245 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரிலுள்ள ஓட்டல்களை ஏ, பி, சி, என்று மூன்று வகைப்படுத்தி அவைகளுக்கு ஏற்ற விலைவாசியினை நிர்ணயிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த அடிப்படைகளின்மீது ஓட்டல் முதலாளிகள் விலைவாசிபற்றிக் கருதிப் பார்க்குமாறு ஆலோசனை கூறப்பட் [illegible]

[1971 ஜூலை 15

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, ஓட்டல் முதலாளிகள் ஓட்டல் பண்டங்களின் விலையினைக் குறைப்பதாக ஒப்புக்கொண்டு சென்றும் இதுவரை குறைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அதுபற்றி இனி மேலாவது நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அன்று என்னிடத்தில் அவர்கள் பேசியபோது குறைப்பதாக ஒப்புக்கொண்டுதான் சொன்னார்கள். குறைத்தார்களா இல்லையா என்கிற விவரம் என்னிடம் இல்லை. இல்லை என்றால் அவர்களை மீண்டும் அழைத்துவைத்துப்பேச நான் தயங்கமாட்டேன். குறைக்கவில்லை என்றால் அரசு மேல் நடவடிக்கை எடுக்கத் தயங்காது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைப்பதாகச் சொல்லிவிட்டு, இட்டிலி இளைத்துப்போகிற நிலையை, வடை சுருங்குகிற நிலையை உண்டாக்காது தடுக்கவும் கவனம் செலுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்காகத்தான் ஓட்டல்களை ஏ, பி, சி, என்று தரம்பிரித்து அந்த அந்தத் தரத்திற்கு ஏற்றாற்போல அந்த அந்த ஓட்டல்களின் பண்டங்கள் விலையும், எடையும் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளலாம் என்று யோசிக்கப்பட்டது. அதுப்பற்றி ஓட்டல் முதலாளிகள் பேசிச் சென்றிருக்கிறார்கள். இன்னும் வரவில்லை.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, சென்னை நகரில்மட்டும் இல்லாமல் மாவட்டங்கள்தோறும் உள்ள ஓட்டல்களிலும் விலைகளைக் குறைக்க மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எந்த எந்த மாவட்டங்களில் விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை அந்த அந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அவர்கள் முதலாளிகளைக் கூப்பிட்டுப் பேசி நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. நா. வீராசாமி: சர்க்கரை கிடைக்காத நேரத்தில் காப்பியின் விலையை ஏற்றிக்கொண்டு போனார்கள். இப்போது சர்க்கரை மலிவாகக் கிடைக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. ஆக பண்டங்கள் கிடைக்காதபோது அரசின் அனுமதியைப் பெற்று விலையை ஏற்றியதுபோல, பண்டங்கள் குறைந்தவிலையில் கிடைக்கிறபோது, அரசு அவற்றின் விலையைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்க வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அத்தகைய நிபந்தனையை நம்மால் விதிக்கமுடியாது. சர்க்கரை விலை முன்னே ஏறியிருந்தது. அப்போது விலையேற்றினார்கள். சர்க்கரை விலை குறைந்து, கிடைக்க ஆரம்பித்தவுடன் காப்பிக்கொட்டை விலை ஏறிவிட்டதாகச் சொன்னார்கள். அதுவும் இப்போது குறைந்துவிட்டதே என்றபோது பால் சரியாகக் கிடைக்கவில்லை என்கிறார்கள். எந்தவகையில் ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைப்பது என்பது சீக்கிரத்தில் பரிசீலனைசெய்து முடிவு செய்யப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: இப்போது நகர ஓட்டல்களைத் தரம் பிரித்து வைக்க முற்படுகிறபோது சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளில் அமைந்துள்ள ஓட்டலை எந்தத் தரத்தின்கீழ் கொண்டுவரப்போகிறார்கள். அங்கே



1971 ஜூலை 15]

சரியான முறையில் உணவு வழங்கப்படாதிருக்கிறதே, அது கடைசித் தரத்தில் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது ஒரு யோசனைதான் என்று சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓட்டலை கடைசித்தரத்தில் வைக்கவேண்டியதில்லை. அங்கே உள்ள குறைகள்பற்றிப் பேரவைத் தலைவருக்கு எழுதினால் அதுபற்றி அவரே கவனித்துத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹவுசிங் கமிட்டிக்கு எழுதி அனுப்புங்கள்.

திரு. கி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சட்ட மன்ற விடுதியிலே ரப்பர் கிளாஸ் வைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சப்ளை செய்கிறார்கள். அது எங்களுடைய கௌரவத்தைக்கூடப் பாதிப்பதாக இருக்கிறது. ஆகவே, எவர் சில்வர் டம்ளர் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினருடைய யோசனை பரிசீலிக்கப்படும். இவை எல்லாம் கவனத்தில் கொள்ளப்படும். இவை எல்லாம் ஹவுசிங் கமிட்டியில் எடுத்துச் சொன்னால், அவர்கள் நல்ல முடிவு எடுத்து நல்ல யோசனை சொல்வார்கள்.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, ஓட்டல்களை எல்லாம் தனிப்பட்ட முதலாளிகளே நடத்துகிற காரணத்தினால் நினைத்த நேரத்தில் விலைகளை ஏற்றிக்கொள்கிறார்கள். ஆகவே, விலை உயர்வைத் தடுக்க அரசாங்கமே முக்கியமான நகரங்களில் எல்லாம் ஓட்டல்களை நடத்தி, குறைந்த விலையில் பலகாரங்களைத் தர முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்போதைக்கு அந்த யோசனை கிடையாது.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற விடுதியிலே உள்ள 'கேன்டீன்களை' யெல்லாம் அரசு எடுத்து நடத்த முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை. மூலக்கேள்வி சென்னை நகரத்திலே இருக்கும் ஓட்டல்களைப்பற்றியது.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலும், அதன் சுற்றுப்புறங்களிலும் ஜாதியின் பெயரால் நடத்தப்படுகிற ஓட்டல்களுக்கெல்லாம் அரசு தடை விதிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை எதுவும் இப்போது இல்லை.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஓட்டல் முதலாளிகளிடத்தில் பேசுகிறபோது, 'யோசனை செய்வதாகக் கூறிச் சென்றார்கள்' என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எத்தனை மாதங்களுக்கு முன் ஓட்டல் முதலாளிகளைக் கூட்டிப் பேசினார்கள்? இதுவரையில், சென்றவர்கள் ஏன் வரவில்லை? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏ, பி, சி, என்று தரம் பிரிப்பதுபற்றி ஓட்டல் முதலாளிகளைச் சந்தித்துப் பேசுகிறபோது சொன்னோம். சென்ற மாதம்தான் சந்தித்துப் பேசினேன். மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு, இந்த மாதம் சட்டமன்றம் நடக்கிற காரணத்தினால் நேரம் கிடைக்கவில்லை. ஆகவே, மீண்டும் அவர்களைச் சந்தித்து அதுபற்றி விவாதித்துச் சீக்கிரத்தில் சிறந்த முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, ஓட்டல்களைத் தரம் பிரிப்பது பற்றி ஆலோசித்துச் செய்வதாகச் சொன்னார்கள். அப்படித் தரம் பிரிக்கப்படுகிறபோது, ஏ, பி என்று இரண்டு பிரிவு ஓட்டல்களிலும் புகார்ப் புத்தகம் வைப்பதற்கும், அந்தப் புகார்ப் புத்தகங்களை அடிக்கொரு தடவை அதிகாரிகள் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் சட்ட ரீதியாக வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது நல்ல யோசனை. அப்படி ஓட்டல்கள் தரம் பிரிக்கப்படும்போது இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

### *House Rent Allowance for non-teaching staff*

* 240 Q.—DR. H. V. HANDE : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

Whether there is any proposal by this Government to extend the benefits of House Rent Allowance to the non-teaching staff of the schools also?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தச் சலுகை மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத அலுவலர்களுக்கும் கொடுப்பதற்காக உத்தரவுகள் வெளியிடப்பட்டு விட்டன.

DR. H. V. HANDE : While we are thankful to the Government for having issued this order recently during the budget debate may I know from the Hon. Minister whether the other grievances, which had been put forth by them regarding continuity of service, etc. (If one non-teaching member of staff is transferred from one institution to another, he loses continuity of service) would be considered by Government, They had put forth several other demands before Government. Have Government considered those things. It will not cost the exchequer also much if these demands are complied with. Will the Government come forward to consider those demands also sympathetically ? If so, may I know the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கோரிக்கைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதில் என்னென்ன சங்கடங்கள் இருக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து, சங்கடங்கள் இல்லாத நிலைமை ஏற்படுமானால் தக்க முடிவு எடுக்கலாம். சில இடங்களில் அவர்களை மாணவர்கள் விரும்புகிறார்கள். சங்கடம் ஏற்படாத சூழ்நிலை ஏற்படுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படும்.



திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுப்பதாகக் கூறப்பட்டது. எந்த மாதம் முதற்கொண்டு அது அமலுக்கு வந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆசிரியரல்லாத மற்ற அலுவலர்களுக்கும் வீட்டு வாடகைப்படி 1—8—1970-ம் தேதி ஆணையிடப்பட்டு, 20—10—1970-லே அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

### *House Rent Allowance for Aided School Teachers*

* 241 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned House Rent Allowance to all the Aided School Teachers in the State ;

(*b*) whether the Government Order in question has been communicated to the Heads of Anglo-Indian Schools by the Director of School Education ; and

(*c*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம், 1—4—1970-ல் இருந்து.

(இ) இல்லை.

(உ) ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள் பெறும் ஊதியம் மற்றும் படிகள், ஏனைய அரசு உதவி பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் பெறுவன போலல்லாமல் மாறுபட்டவையாக இருந்தன. 10—2—1971-ல் பிறப்பித்த அரசு ஆணைப்படி 2—10—71-ல் இருந்து, சம்பள ஊதியம், வீட்டு வாடகைப்படி, முதலிய படிகள் மற்ற அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று, ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Is it a fact that though this order was passed in 1st April 1970, in para 3 of the order referred to, the Director of School Education has been requested to bring this order to the notice of all aided schools but it was submitted that in this connection a copy of this order had not been communicated to the heads of Anglo-Indian schools in the State, though they are aided schools under the Director of School Education? May I know whether complaints have been received that the order had not been communicated to them and is it a fact that as a result of this Anglo-Indian teachers are really getting less than what they were getting before in spite of the recommendations of the Second Pay Commission?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதற்கு 'இல்லை' என்று பதிலளிக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது சங்கடங்கள் இருக்குமானால் அவை தனியாக ஆராயப்பட்டுத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## Mettur Township Committee

* 242 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) Whether a Township Committee has been constituted at Mettur Dam;

(b) if so, whether the members are elected or nominated by Government and their term of membership ; and

(c) the total number of members on the Committee with their names at present?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ), (இ) & (உ) மேட்டூர், மேட்டூர் நகரிய சட்டத்தின்கீழ் 1940-ல் ஓர் நகரியமாக அமைக்கப்பட்டது. அக்குழுவின் உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் 4—8—1969-லிருந்து மூன்று ஆண்டுக்காலம் அங்கத்தினர்களாக இருப்பார்கள் :—

அலுவலர்கள்.

1. சேலம் மாவட்ட ஆட்சியாளர் (தலைவர்).
2. செயல் பொறியாளர், கட்டடத்துறை, சேலம் டிவிஷன். மேட்டூர் அணை.
3. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை, கிராம வேலைகள்), சேலம்.
4. மாவட்ட சுகாதார அதிகாரி.
5. அணை ஆட்சித் தலைவர், மேட்டூர் அணை.

அலுவல் சார்பற்றவர்கள்.

1. திரு. ஆர். கருப்பண்ண பிள்ளை, திரு. ராமசாமி பிள்ளை அவர்களின் குமாரர், ஒப்பந்தக்காரர், மேட்டூர் அணை.
2. திரு. ஏ. பாலு, திரு. அம்ப்ரோஸ் அவர்கள் குமாரர், செயலர், மேட்டூர் தாலுகா திராவிட முன்னேற்றக் கழகம், ஜே 2, சேலம் முகாம் மேட்டூ அணை.
3. திரு. புருஷோத்தம், பணி மேலாளர், மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி, மேட்டூர் அணை.
4. திரு. எஸ். கந்தப்பன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

Dr. H. V. HANDE : May I know whether complaints were received by this Government that some irregularity has taken place in the appointment of these members and if so may I know the details thereof and the action taken by Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதுபற்றிய முறையீடு எதுவும் வந்ததாக எனக்குத் தகவல் இல்லை. அப்படி முறையீடு வந்திருக்குமானால் தக்க முடிவுகள் எடுக்கப்படும். மேட்டூர் நகரியமாக இருப்பதை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்களும் அதுபற்றித் தெரிவித்திருக்கிறார்கள்.





**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, மேட்டூர் நகரியக்குழு 1940ல் ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். முன்பு போதுமான வருமானம் வராத காரணத்தினாலே இது நகராட்சியாக மாற்ற இயலாது என்று கூறிவிட்டார்கள். இப்போது போதுமான வருமானமும் இதர வசதிகளும் இருக்கிற காரணத்தால் இதை நகராட்சியாக அமைக்க அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். நகரியமாக இருக்குமானால் அதிகாரிகளுடைய நல்ல தொடர்பு இருக்கிறது. சிறிய அளவிலே குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் பல ஏற்படுவதற்கு வசதிகள் ஏற்பட்டு, தொழிலாளர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். வேலைகள் விரைவாகவும் செம்மையாகவும் நிறைவேற்றப்படலாம் என்பதற்காகத்தான் நகரியமாக அமைக்கப்பட்டது. உடனடியாகப் பலன் தரும் என்ற வகையிலே தான் மேட்டூர் நகரியமாக அமைக்கப்பட்டது. அந்த வகையிலேதான் பத்து நகரங்கள் அதாவது ஆவடி, கத்திவாக்கம், மாதவரம் போன்ற நகரங்கள் நகரியமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. நகரியமாக இருப்பதால் பணிகள் விரைவாகவும், செம்மையாகவும் நடக்கும். நகராட்சியைவிட நகரியமாக இருப்பதால் பணிகள் செம்மையாகவும் விரைவாகவும் செய்ய முடியும் என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சொ. காவேரிமணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையில் ஆலை நடத்துகிறவர்கள் தங்கள் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அவை வாரியங்களாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட நகரியங்களுக்கு அரசு எந்த வகையில் மானியம் அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், அமைச்சர் அவர்கள் பதில்சொல்லுகின்ற பொழுது அந்த நகரியக் குழுவினால் ஏற்படுகின்ற நலன்களைப் பற்றிச் சொன்னார்கள். அது புதிதாக அமைக்கப்பட்டவைகளுக்குத்தான் பொருந்துமே தவிர, அணை கட்டுகின்ற காலத்திலே அங்கு இருக்கிறவர்கள் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டது அது, இப்பொழுது வளர்ந்து வருகின்ற ஜனத்தொகை, வருமானம், ஜனநாயகக் கோட்பாடு இவற்றின் காரணமாக அதை நகரசபையாக மாற்றவேண்டுமென்று, ஜனங்களுடைய பிரதிநிதிகள் பொறுப்பேற்கவேண்டுமென்றும் கோரி அந்தப் பகுதியிலுள்ள மக்கள் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசு முறையாகப் பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று நகரியமாக அது 30 ஆண்டுகளுக்கு முன்னேயிருந்து இருக்கிறது. அதை இப்பொழுது மறுபரிசீலனை செய்வதிலே தவறில்லை. நகரமன்றமாக இருந்தால் பலன் ஏற்படும் என்ற சூழ்நிலை இருக்குமானால் அதை புனராலோசனை செய்வதில் தடை இருக்காது. அரசாங்கம் அதைப்பரிசீலித்து தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** தலைவர் அவர்களே, நகரியங்களுக்கு உறுப்பினர்களுக்கு யோக்கியதாம்சங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** உறுப்பினர்கள் அரசாங்க அலுவலர்களாகவும் இருப்பார்கள், அல்லது அரசுச் சார்பற்றவர்களும் இருப்பார்கள் என்ற முறையிலேதான் அமைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக அந்த ஊரில் அக்கறை கொண்டவராகவும், பல்வேறு வகைகளிலே பிரதிநிதித்துவம் உள்ளவராகவும் இருந்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனவே இதிலே என்ன என்ன வகையில் அவர்கள் பொருத்தமாக இருக்கவேண்டுமென்ற திட்டவட்டமான குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பொதுவாக அந்த நகரத்திலே அக்கறை கொண்டவராகவும் பல்வேறு வகைகளில் ஈடுபட்டவராகவும் இருக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே அந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர் ஒரு உறுப்பினராக இருந்தாரே, இந்தத் தடவை அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலிலே சட்ட மன்ற உறுப்பினரைக் காணோமே, என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கூடுமானவரையில் சட்ட மன்ற உறுப்பினர்களைப் போடுகின்ற பழக்கம்தான் இருந்துவருகிறது. இது 1969-லே அமைக்கப்பட்டபொழுது என்ன காரணத்தினாலோ போடப்படவில்லை. சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் இவர்கள் அந்த அந்த நகரியங்களிலே உள்ள குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று சட்டம் இல்லை, நியமிக்கப்படுவார்களானால் நல்லது என்ற கொள்கை இருந்து வருகிறது. அந்தக் குழுவிலே பாராளுமன்ற உறுப்பினராக முன்பு இருந்த திரு. கந்தப்பன் அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், சட்ட மன்ற உறுப்பினர் விடப்பட்டிருக்கிறார்கள்,

## *Loans for production of films.*

238 Q—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to advance loans to the producers of historic and patriotic films?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், தமிழகத்திலே தேசிய இயக்கத்திலே ஈடுபட்டவர்கள், அப்படி இடுபட்ட தொழிற்சங்கத் தலைவர் திரு. சிங்காரவேலு செட்டியார், திரு. வி. கே. சர்க்கரை செட்டியார் தேசிய இயக்கத்திலே ஈடுபட்டு நாடகக் கலைகள் மூலம் அந்தக் கருத்துக்களைப் பரப்பிய விஸ்வநாததாஸ் போன்றவர்களைப்பற்றியெல்லாம் குறிப்பிடாத நிலையில் இருந்து வருகின்ற காரணத்தினால் அப்படிப்பட்ட படங்களை எடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அரசு எடுக்கின்ற செய்தித் துறை படங்களில் வேண்டுமானால் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளை இணைக்கலாம். முழு நீளப் படம் எடுத்தால் மிகப் பிரசித்திபெற்ற



கப்பலோட்டிய தமிழ படம் பெருமளவே வெற்றியடையவில்லை. எனவே அப்படிப்பட்ட பெருஞ்சோதனையிலே இறங்குவதற்குப் படத் தயாரிப்பாளர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். பெரியவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்கவர்கள், விடுதலை வீரர்கள், நாட்டுப் பற்று மிக்கவர்கள், தாய்மொழிப்பற்று கொண்டவர்கள், தொழிற் துறைத் தலைவர்கள் இவர்களைப்பற்றிய குறிப்புகளை அவ்வப்பொழுது மக்களுக்கு நினைவுபடுத்துகின்ற அளவிலே செய்தித்துறைப் படங்களிலே இணைக்கலாம்.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்பையும் பழைய பெருமையையும் எடுத்துக்காட்டுகின்ற வகையில் சேரன் செங்குட்டுவன் போன்ற கதைகள் எல்லாம் இருக்கின்றன. தமிழக முதல்வர் அவர்கள்தான் தமிழகத்திலே தலைசிறந்த வசனகர்த்தா என்பது உலகம் அறிந்த உண்மை. அவர்கள் அதை எழுதிக்கொடுத்தால் லாப நோக்கம் கருதாமல் நான் படமெடுக்கத் தயாராக இருக்கிறேன். அதற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இது என் வீட்டிலே வந்து படத் தயாரிப்பாளர்கள் பேசவேண்டிய விஷயம். நான் பகிரங்கமாக ஒத்துக் கொள்கிறேன். அதற்கு அவர் தருகின்ற பெரும்தொகையைப் பிச்சைக்காரர் நிதிக்குத் தரவும் சம்மதிக்கிறேன்.

DR. H. V. HANDE: Is it a fact that the film industry in Tamil Nadu in general is in a low ebb and even the president of the Film Chamber of Commerce was also complaining that the film industry is in a very bad shape? If it is a fact will the Hon. Chief Minister be pleased to tell us whether steps will be taken by this Government to see that this most important industry in Tamil Nadu, probably second to Bombay, is protected?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதற்கு அரசினுடைய ஒத்துழைப்பு தேவை என்றுகூட நான் கருதவில்லை. அந்தத் தொழிலிலே ஈடுபடுகின்ற தயாரிப்பாளர்கள், அந்தத் தொழில் ஒளிவிடத்தக்க அளவிலே இருக்கிற நடிகர் பெருமக்கள், தொழில் நுணுக்கப் பெருமக்கள் இவர்கள் எல்லாம் அமர்ந்து கூடிப் பேசுவார்களானால் இப்பொழுது உள்ள மந்த நிலையை நிச்சயமாகப் போக்கமுடியும். அரசினுடைய உதவி, பணத்தைத் தவிர, மற்றைய உதவிகளைத் தர அரசு சித்தமாக இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** சரித்திரப்புகழ்பெற்ற அல்லது வரலாற்றுச் சிறப்பு மிக்க படங்களை எடுப்பதற்கு நிறையப் பணம் செலவாகிறது. சாதாரணப் படங்களுக்கு 10 லட்சம் செலவாகிறது என்றால் அப்படிப்பட்ட படங்களுக்கு 50 லட்சம் ரூபாய் செலவாகிறது. அப்படி மூலதனம் போடவேண்டுமென்றால் பணம் கொடுக்கின்றவர்கள் 5, 6 ரூபாய் வட்டி கேட்கிறார்கள். எனவே சரித்திரப் புகழ்பெற்ற படங்களை எடுப்பதற்கு நிறையச் செலவாகிற நிலைமை இருப்பதினாலே அரசாங்கம் அப்படிப் படம் எடுக்கிறவர்களுக்குக் கடன் கொடுக்கவோ அல்லது வேறு உதவிகள் செய்யவோ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதில் கடன் கொடுப்பதற்கான பிரச்னை எழவில்லை. அப்படிப் பெரிய படங்களை எடுப்பதற்கு வசதி மிக்கவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற ஒரு நிறுவனத்தை பம்பாயிலே வைத்திருக்கிறார்கள். அந்த நிறுவனம் இதுவரையிலும் தமிழ்ப் படங்களுக்கு நிதி உதவி செய்ததாக இல்லை. அப்படி ஒரு நிறுவனத்தை தமிழகத்திலே தென்னாட்டுப் பகுதிகளைப் பொறுத்தவரையிலும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிப் படங்களுக்காகத் தனியாக ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த நம்முடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதுபற்றிய முழு விவரங்கள் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையிடமிருந்து வந்தால் ஆராயலாம்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றை முழு நீளப் படமாக எடுக்க தமிழக அரசு முயற்சி எடுக்குமா? அல்லது அந்த முயற்சியைத் தனியார்கள் எடுத்தால் அரசு ஆதரவு தருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: யாருடைய வாழ்க்கை வரலாற்றையும் முழு நீளப் படமாக எடுப்பதென்றால் நிதி இவைபற்றியெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கிறது. அண்ணா அவர்களுடைய வாழ்க்கைப் பகுதிகள் அவ்வப்பொழுது துண்டு துண்டாக நம்முடைய செய்தித் துறைப் படங்களில் வெளியிடப்படுகின்றன. அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளை மையமாக வைத்து அவர்களுடைய லட்சியங்கள் படத் தயாரிப்பாளர்களாலும் எழுத்தாளர்களாலும் மக்களிடத்திலே பரப்பப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சிறந்த படங்களுக்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் ஊக்குவிக்கக்கூடிய வகையில் பரிசு கொடுக்கிறது. அப்படிப் பரிசு கொடுக்கப்படும்பொழுது வரலாற்றுச்சிறப்பும் நாட்டுப் பற்றும் ஆராய்ந்து பார்க்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவினர் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தையும் அடிப்படையாக வைத்து ஆராய்கிறார்கள்.

திரு. சோ. கருணைநாதன்: நாட்டில் மண்டிக்கிடக்கும் அறியாமையை அகற்ற பராசக்தி போன்ற திரைப்படங்களுக்கும் பரிசளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல் அதுபோன்ற படங்கள் வெளிவருமானால் அந்தக் குழுவினர் அதையும் கருத்தில் கொண்டு ஆராய்ந்து படங்களைத் தெரிந்தெடுக்கக் கூடும்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, கேரளத்திலும் வங்கத்திலும் எடுக்கப்படுவதைப்போல சமுதாயப் பிரச்னைகளைக் கொண்ட பரிசுக்குரிய படங்களைத் தயாரிக்கும்படி தயாரிப்பாளர்களுக்கு அரசு ஆலோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: படம் எடுப்பவர்கள் அவ்வப்பொழுது மக்களுடைய ரசனைகளை மனத்திலே வைத்துப் படங்களை எடுத்துக்கொண் டிருக்கிறார்கள், இந்தக் கடுமையான சோதனையில் இறங்க பலபேர் தயாராக



இருப்பதில்லை. அவர்களுக்கெல்லாம் அரசும் இப்படிப்பட்ட படங்களை எடுங்கள் என்றும் கூற முடியாது. ஆனால், ஆபாசம் மிகுந்ததாயும், மக்களி டத்திலே துவேஷ உணர்ச்சிகளைப் பரப்பும் வகையிலேயும் இருந்தால் அவை களைத் தடுக்க அரசு இயலுமே தவிர, இப்படிப்பட்ட படங்களை எடுங்கள் என்று கூறி அவர்களை வற்புறுத்த இயலாது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிச் செய்திப்படங்கள் துண்டு துண்டாக இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த வரிசைகளையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு முழுநீளப் படமாகத் தயாரித்து, அவர்களுடைய வாழ்க்கையிலே சில நிகழ்ச்சி களைச் சேர்த்து மெருகு ஊட்டி ஒரு நீளப்படமாகத் தயாரிக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தணியாத ஆவலை நான் பாராட்டுகிறேன். அந்த ஆவலின் அடிப்படையில் அப்படிப்பட்ட முயற்சிகளை நாம் செய்யலாம். ஏற்கனவே அண்ணா அவர்க ளுடைய வாழ்க்கை வரலாறுகள், அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள், அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் இவைகளெல்லாம் செய்திப்படங்களின் மூலமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும் அந்த முயற்சியிலே ஈடுபட எந்தத் தடையும் இல்லை. அதற்கேற்ற காலம் வரும் நேரத்தில் அதற்கான முயற்சிகளில் அரசோ அல்லது மற்றப் படத் தயாரிப்பாளர்களோ ஈடுபடக் கூடும்.

### கிழக்கு ஜெர்மனியிலிருந்து நாய்கள் இறக்குமதி

*239 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு அரசின் துப்பறியும் இலாக்காவிற்காக கிழக்கு ஜெர்மனியிலிருந்து நாய்கள் வரவழைக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான செலவுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். ஆறு நாய்க்குட்டிகள் வரவழைக்கப்பட்டன.

(இ) அதற்கான செலவுத்தொகை ரூ. 37,049.

DR. H. V. HANDE: Sir, may I know from the Hon. Chief Minister the number of police dogs now in the hands of the Government and whether they are liberally used for the detection of crimes? Also, may I know the ratio between the number of dogs used and the positive results achieved?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் சென்னையிலே 9 நாய்களும், மதுரையிலே 5 நாய் களும், கோவையிலே 2 நாய்களும் இருக்கின்றன. இந்தத் துப்பறியும் நாய் களின் படை 1951-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதுமுதல் இதுவரையி லும், இந்த நாய்கள் கொலை, கொள்ளை, கள்ளக்கடத்தல், வீட்டுத் திருட்டுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்பட்ட வகையில் இதுவரையில் 133 கொலைக் குற்றங்கள், 32 கொள்ளைக் குற்றங்கள்,

167 பெரிய திருட்டுகள், 51 வீட்டுத் திருட்டுகள் மற்றும் கள்ளக்கடத்தல் குற்றங்களில் கணிசமான அளவு வெற்றியோடு இவை உபயோகப்படுத்தப் பட்டுள்ளன என்பதைத் தவிர வேறெதுவும் சொல்வதற்கில்லை.

**திரு. என். கணபதி:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் போலீஸ் துப்பறியும் நாய்ப் படை இருப்பதால் ஓரளவுக்குக் குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்பது ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயம். அப்படிப்பட்ட துப்பறியும் நாய் படை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இருந்தால் அது குற்றங்களைக் கண்டுபிடிக்க எளிதாகப் பயன்படும் என்ற ஒரு எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. அதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நான் ஏற்கனவே சென்னை, மதுரை, கோவை ஆகிய இந்தத் தலைநகரங்களில் இருப்பதாகச் சொன்னேன். இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தின் தலைநகராகிய திருச்சியிலே இதுபோன்ற நாய்களின் படையை அமைக்க அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, இந்தத் துப்பறியும் நாய்கள் சில சந்தர்ப்பங்களில் யாதுமறியாத குற்றமற்றவர்களைப் போலீசுக்குக் காட்டிக்கொடுத்து, அதனால் அந்த அப்பாவி மக்கள் பல தொந்தரவிற்கு ஆளாகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? மேலும் இதுவரை இந்தத் துப்பறியும் நாய்களால் கண்டுபிடிக்கப்பட்ட கேஸ்களில் எத்தனை கேஸ்கள் தவறானவை என்று உயர் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றத் தகவலை அரசு எங்களுக்கு அளிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** துப்பறியும் நாய்கள் சொல்வதையே முழுக்க நம்பி வழக்குகள் போடப்படுவதில்லை. குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பல்வேறு உபாயங்களில் துப்பறியும் நாய்களைக் கொண்டு பயன்படுத்துகின்ற உபாயமும் ஒன்றாகவே இருக்கிறதேயல்லாமல் முழுக்க முழுக்கத் துப்பறியும் நாய்களை நம்பியே வழக்குகள் பதிவுச் செய்யப்படுவதில்லை. குற்றமற்றவர்கள் சிலர் தொந்தரவிற்கு ஆளாகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் குற்றமற்றவர்கள் என்று இவர்களுக்கேத் தெரியும்பொழுது போலீசாருக்கும் குற்றமற்றவர்கள் என்று தெரிந்துவிடலாம். ஒரு சிறிது நேர இன்னலுக்கு ஆளானாலும் பிறகு அந்த இன்னலிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

### *Re-opening of closed Textile Mills.*

* 246 Q.—THIRU N.K. PALANISAMI :
THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to re-open closed textile mills in the State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மூடப்படும் நிலையிலும் மூடிய நிலையிலும் உள்ள பஞ்சாலைகள் மீண்டும் திறப்பதற்கென வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன் தொகைகள் பெறும்பொருட்டு இவ்வரசு உத்திரவாத நிதியுதவி அளித்து உள்ளது. மேலும், இந்த அரசு தமிழ்நாடு பஞ்சாலைக் கார்ப்பரேஷனை ஏற்படுத்தியுள்ளது. அது கோவையில் ஐந்து பஞ்சாலைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், கோவையிலே மூடப்பட்டிருந்த மில்களைத் திறக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மதுரையிலே அமைச்சரவர்கள் பேசும்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் கலெக்டரின் தலைமையில் மூடியே மில்களைத் திறக்கப் பரிசீலிப்பது சம்பந்தமாக ஒரு குழு அமைக்கப்படும் என்று தெரிவித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அப்படியானால் அம்மாதிரியான குழு மதுரை, நெல்லை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களிலே அமைக்கப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் அப்படிச் சொன்னதாகவும் தெரியவில்லை, பத்திரிகையில் வந்திருப்பதாகவும் தெரியவில்லை. கலெக்டர் தலைமையின்கீழ் அமைக்கப்படும் குழு, தொழில்களை எளிதாகத் தொடங்க உள்ள சங்கடங்களை நீக்கவும், கடன் கொடுக்கவும் அமைக்கப்படுகிறது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கானப் பட்டியலை மத்திய கார்ப்பரேஷனுக்கு தமிழகத்திலேயிருந்து எவ்வளவு மில்களை எடுக்கக் கேட்கப்பட்டது. மத்திய கார்ப்பரேஷன் இந்த ஆலைகளை எடுக்க பணம், அவர்கள் போடுவது முழுவதும் ஒதுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இந்தப் பிரச்னையைப் பற்றி அண்மையிலே நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் தலைவர் என்னையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பெரிய பிரச்னையை எழுப்பிவிட்டுச் சென்று விட்டார்கள். இன்று காலையில் மீண்டும் அவர்கள் இந்த அரசாங்கம் எதுவுமே செய்யவில்லை என்று அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். மத்திய சர்க்காரில் பொறுப்பிலே உள்ளவர்கள் கொடுத்த காரணத்தால் பெரிய சந்தேகம் ஏற்படுகிறது.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் 1968-ஆம் ஆண்டே 3 கடிதங்களின் மூலமாக நாம் ஏறத்தாழ 20 மில்களை எடுக்கும்படி ஐ.டி.ஆர். அவர்களே உத்தரவு போட்டிருக்கிறார்கள். அது கையில் இருக்கிறது. மே 20-ஆம் தேதி 6 மில்களைப் பரிசீலிக்க வேண்டுமென்று கமிட்டி போட்டிருக்கிறார்கள். ஜூலை 6-ம் தேதி 2 உத்தரவுகள் மூலம் ஏழும், ஏழும் 14 மில்களை எடுக்க வேண்டுமென்று ஐ.டி.ஆர். கமிட்டி போட்டிருக்கிறார்கள். அவர்களின் உத்தரவு, மத்திய சர்க்காரின் உத்தரவே இருக்கின்ற காரணத்தால், அதற்குச் சம்பந்தமில்லாத ஒரு என்.டி.சி. சேர்மன் மத்திய சர்க்காரை அணுகவில்லை என்று செய்தி கொடுத்திருப்பது பொருத்தமில்லாததாயிருக்கிறது. அவர்கள் இங்கே பேசும்பொழுது, முதலமைச்சரோடும், என்னோடும் பேசும்பொழுது, இந்த விளக்கங்களைச் சொன்னோம்.

மொத்தம் 21 ஆலைகள் எடுக்க வேண்டுமென்று—ஐ.டி.ஆர். ஆக்டின்படி—நாம் அறிக்கை அனுப்பி, ஒன்றைத் தவிர 20 ஆலைகளைப்பற்றி அவர்கள் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதைப்பற்றித்தான் சொன்னேன். ஆறு ஆலைகளை மட்டும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஐந்தை எடுத்துவிட்டோம். ஒன்றைக் கோர்ட்டிலே இன்னொருவர் வாங்கிவிட்டார். கடன் அவர்கள் கொடுப்பதைப் பொறுத்து மத்திய அரசு ஒப்புக்கொண்டால் நாம் எடுத்து நடத்துவதிலே 51 சதவிகிதம் என்.டி.சி. தரவேண்டும்; நாம் 49 சதவிகிதம்

தரவேண்டும். இப்பொழுது நான்கு ஆலைகளில் நாம் போட்டிருக்கும் முதல் 77 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய். அவர்கள் கொடுக்க வேண்டிய 51 சதவிகிதம், கிட்டதட்ட 33 இலட்சம் ரூபாய் வரலாம். அவர்கள் கொடுத்திருப்பது 26 இலட்சம் ரூபாய்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, இதுபற்றி ஏற்கனவே அமைச்சரவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். அதன்பிறகும் தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷனின் தலைவர் ஒரு அறிக்கை விட்டார்கள். மீண்டும் இன்றைய பத்திரிகையில் மாநில அரசு எதுவும் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே இந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க இதுபற்றி மத்திய அரசோடு நடத்திய கடிதப் போக்குவரத்துகளை இந்த அவை முன்வைப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதைத்தான் இங்கே கடிதத்தைப் படித்துக் காண்பித்தேன். அதற்குமேலே விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் தொடர்புடைய இதில் என்.டி.சி. சேர்மன் எப்படி வருகிறார் என்று புரியவில்லை. மத்திய சர்க்கார் ஆணையிட்ட பிறகு தான் என்.டி.சி. பணம் கொடுக்க முடியும். அவர்கள் கொடுக்க வேண்டிய 51 சதவிகிதத்தில், கிட்டத்தட்ட 33 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்க, 26 இலட்சம்தானே கொடுத்திருக்கிறது என்று கேட்ட பொழுது எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை. அவர்கள் சொன்னதெல்லாம் ஏற்கனவே எடுக்கின்ற காலத்திலே எவ்வளவு பணம் வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டதோ அதிலேதான் பங்கு தர முடியும் என்றார்கள். நம்மால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய அரசாங்கத்தில் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சருக்குக் கடிதம் எழுதுவதாக முடிவு செய்துள்ளோம்.

**Dr. H. V. HANDE**: Is it not a fact that the Chairman of National Textile Corporation made a specific grievance, viz., that Government had not approached the Centre for appointment of a Committee to go into the condition of sick mills? May I know whether this was not negotiated with the Centre and may I also know whether in the recent agreement with textile mill workers, the workers had agreed to the demand of Government that they should forego the dearness allowance? May I know what was the latest terms of the agreements with the workers of textile mills? May I know whether things have started moving and if so may the Hon. Minister give us the details now?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதில் எந்த விதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஒரு மில்லை எடுத்து நடத்த வேண்டுமானால் அரசின் சார்பில் இண்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் ரெகுலேஷன் ஆக்டின் கீழ்தான் முடியும். அப்படி எடுத்துக் கொள்ளும்போதும் மத்திய அரசின் கீழ் அமைக்கப்படும் குழு அதை எடுத்துக் கொள்ளும்படி சிபாரிசு செய்ய வேண்டும். அந்தச் சிபாரிசின் அடிப்படையில்தான் மத்திய அரசு ஆணை பிறப்பிக்கிறது. அந்த ஆணையைப் பெற்று நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்ப-





ரேஷன் எடுத்துக் கொண்டு வருகிறது. நம்முடைய தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் அதனுடைய ஆதரைஸ்டு கண்ட்ரோலராக நியமித்திருக்கிறார்கள். அதன்பிறகுதான் ஒரு மில்லை ஏற்று நடத்துகிறோம். அதற்குப் பிறகு அவர்கள் 51 சதவிகிதம் தருகிறார்கள், நாம் 49 சதவிகிதம் போடுகிறோம். நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் தலைவர் இந்த விவரத்தைத் தெரிந்து பேசுகிறாரா அல்லது தெரியாமல் பேசுகிறாரா என்று தெரியவில்லை, அவர்களே மத்திய சர்க்காரிடத்தில் விசாரித்து விட்டுப் பேசியிருக்கலாம். ஒரு மாநில முதலமைச்சர் சொல்கிறார்களே என்று டெல்லிக்குச் சென்று விசாரித்து விட்டுப் பேசியிருக்கலாம். ஆனால் அவர்கள் தொடர்ந்து அதே விதத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் அரசியல் நோக்கமும் இருக்கலாம், அதைப் பற்றி நாங்கள் கவலைப்படத் தயாராக இல்லை. இந்தப் பிரச்சினைப் பற்றி சம்பந்தப்பட்ட தலைவர்கள் மிகுந்த அக்கரையோடு விளக்கங்களைக் கேட்டார்கள். மத்திய அரசுக்கு நாமும் சொல்லியிருக்கிறோம். இப்போது எடுத்த முடிவுப்படி ஆறு ஆலைகளில் நான்கு ஆலைகளை நாம் எடுத்திருக்கிறோம். அதே முறையில் எடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாங்களும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் போராட்டம் திரும்பப் பெறப் பட்டிருக்கிறது.

### *Legal-retainors for Textile Corporation*

* 247 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether Legal-retainers have been appointed for the Textile Corporation in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### *Allowances to unemployed persons*

* 248 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are proposals under the consideration of the Government to pay allowances to the unemployed persons registered with the employment Exchanges?

**மாண்புமிகு திரு. செ மாதவன்:** இல்லை.

### *Study on jurisdiction of Courts*

* 249 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the Government have constituted any Committee to study the jurisdiction of subordinate Courts in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்), குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பினைக் குறித்து மாநிலம் முழுவதிலும் விரிவான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ள குழு ஒன்றினை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்குழுவில் முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரும், மாவட்ட-செஷன்ஸ் நீதிபதி பதவித்தரத்தில் உள்ள முதுநிலை அதிகாரி ஒருவரும் உள்ளனர். சட்டத்துறை, அரசு உதவிச் செயலாளர், பதவித்தரத்தில் உள்ள அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி ஒருவர் இக்குழுவிற்கு உதவி புரிவார். அவர் இக்குழுவின் செயலாளராகப் பணியாற்றுகிறார். கருவூல-கணக்கு இயக்குநராகிய திரு. டி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ். அவர்களும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாகிய திரு. எ. வரதராசன் அவர்களும் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு 11—12—1970-லிருந்து செயல்படத் தொடங்கியது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் பரிந்துரை எந்தக் கால அளவுக்கு முன்னதாகக் கிடைக்க வேண்டுமென்று வரையறுத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

THIRU N. GANAPATHY : May I know whether this Committee has been asked to send recommendation in respect of territorial or pecuniary jurisdiction of courts?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் இப்போது எண்ணி வருவது மாவட்ட அளவில் உள்ள நீதிமன்றங்களை எந்தெந்த இடத்தில் அமைக்க முடியும், நீதிமன்ற எல்லைகளை எப்படி மாற்றியமைக்க முடியும், அதிகமான நீதிமன்றங்கள் எங்கே தேவைப்படுகின்றன என்ற அளவிலே பரிசீலிக்கப்படுகின்றன.

### பெண் நீதிபதிகள்

* 250 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் தற்போது எத்தனை பெண்கள் மாநில நீதித்துறையில் நீதிபதிகளாக உள்ளனர்?

(இ) எந்தெந்த மாவட்டங்களில்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) இம்மாநிலத்தில் நீதித் துறையில் இரண்டு பெண்மணிகள் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் ஒருவர், மாவட்ட முன்சிப்பாகவும் மற்றொருவர் தற்காலிக சப்-மாஜிஸ்ட்ரேட்டாகவும் உள்ளனர். திருமதி எ. சுப்புலட்சுமி, மதுரை மாவட்டம் மதுரை நகரில் இரண்டாவது மாவட்டக் கூடுதல் முன்சிப்பாக பணியாற்றுகிறார் திருமதி சி. ஆர். ராமாமி, வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் தற்காலிக சப்-மாஜிஸ்ட்ரேட் I ஆகப் பணியாற்றுகிறார்.

**திரு. பெ. மலைச்சாமி :** ஆசிரியர் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் அதிகமான பெண்கள் வருகிறார்கள். ஆனால் வழக்குரைஞர் தொழிலை நடத்துவதற்கு அதிகமான பெண்கள் வருவதில்லை. ஒருசில பெண்கள் வக்கீலுக்குப்



படித்திருந்தாலும் அரசியலுக்கு வந்து விடுகிறார்கள். (திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள்) ஆகவே, பெண்களுக்காகத் தனித் திட்டம் வைத்து வழக்குரைஞர் தொழிலுக்கும், நீதிபதி பொறுப்புக்கும் தயாராகும் வரையில் அவர்களை முன்னேற்ற அரசுக்குத் திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதுதான் வந்து சேர்ந்தார்கள்—பார்த்திருக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** வக்கீல் துறையில் இருப்பவர்கள் அரசியல் துறைக்கு வந்து விடுகிறார்கள் என்பது சரியல்ல. இப்போதே அதிகமான பெண்கள் இருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் அவர்கள் கோர்ட்டுக்கு வந்து பார்த்தால் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீதிபதிகளைப் பற்றிய கேள்வி இது.

### கூவம் சீரமைப்புத் திட்டம்

* 251 வினா—**திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூவம் சீரமைப்புத் திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை மாற்றியமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** (அ) & (இ) கூவம் சீரமைப்புத்திட்டத்திற்கான திருத்த மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

DR. H. V. HANDE : May I know whether there was increase in the amount of estimate during the last one year, whether the first increase has already been accepted by Government, whether the increase is due to the fact that Government also wanted to expand some bridges which were not taken into consideration before and also whether some slabs were pasted at Cooum initially and because of rain they were washed out? May I know the details and the exact increase in the estimate?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme was designed to be executed in three stages. In the first stage the estimate was Rs. 32 lakhs, the second stage 56.50 lakhs and third stage Rs. 30 lakhs. The original estimate was Rs. 118.50 lakhs. Subsequently due to increase in tender and some other works taken up just like construction of Dhobikana for washermen, cost of inlet arrangement at Ennore for diverting Coolant water into Ennore Thermal Scheme, larger provision for beautification works and revision of standards and measurements for the works during actual execution, putting all these things together the estimate increased in the first stage from Rs. 32 lakhs to Rs. 70 lakhs. The amount of excess over estimate was Rs. 38 lakhs. Second stage estimate was Rs. 62 lakhs. The revised estimate was Rs. 108 lakhs.

Excess is Rs. 46 lakhs. In the third stage the estimate was Rs. 30 lakhs and the revised estimate was Rs. 16.45 lakhs. In the third stage, there is saving of Rs. 13.55 lakhs. The matter is under the consideration of Government and the revised has not yet been sanctioned by Government.

* 252 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether any provision is being made in the Cooum Improvement Scheme for establishing Dhobikhanas to wash cloths; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** (அ) ஆம்.

(இ) நமச்சிவாயபுரத்தில் சலவைத்துறை அமைப்பதற்கு ரூபாய் பத்தாயிரத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும் இத்தகைய ஏற்பாடுகளைக் கீழ்க்கண்ட இடங்களில் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் கவனத்திலுள்ளது.

| இடங்கள். | செலவு. |
|---|---|
| | ரூ. |
| 1. அண்ணாநகர் | 33,000 |
| 2. வெங்கடாசலம் பிள்ளைத்தெரு | 20,000 |
| 3. அப்பாசாமி முதலித்தெரு, சேத்துப்பட்டு | 24,000 |
| 4. அவ்வைபுரம் | 20,000 |
| 5. நமச்சிவாயபுரம் (கிணறும் மேல்தளத் தொட்டியும்) | 14,000 |
| மொத்தம் | 1,11,000 |

*** 253 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கூவம் நதியில் அரசு படகு விடும் திட்டம் எப்போது செயல் படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** கூவத்தில் படகு விடும் திட்டம் தற்போது நடைபெற்று வரும் சீரமைப்பு வேலைகள் எல்லாம் முடிவுற்ற பின் எடுத்துக் கொள்ளப்படும். கூவம் சீரமைப்புப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** கூவத்தில் படகு விடும் திட்டத்தில் பொது மக்களுக்குப் போக்குவரத்துத் துறைக்கு அது பயன்படுத்தப்படுமா அல்லது உல்லாசப் பயணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக்பாட்சா :** அதுபற்றி இப்போது முடிவு எடுக்கப்படவில்லை. கூவத்தில் படகு விடும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட உல்லாசமாகப் பயணம் செய்யலாம்.



### சிறப்பு அங்காடிகள்.

*** 254 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறு நகரங்களிலும், பெரு நகர பஞ்சாயத்துக்களிலும் கூட்டுறவு முறையில் சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** ஆம்.

**திரு. என். கிட்டப்பா :** இந்தக் கூட்டுறவு சிறப்பங்காடிகளில் தரமாகவும், நியாயமான விலையிலும் பொருள்கள் மக்களுக்குக் கிடைப்பதால் எல்லா நகராட்சி மன்றப் பட்டணங்களிலும் ஊராட்சிமன்ற நகரங்களிலும் விரைந்து இத்திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** இப்போது இந்த மினி சூப்பர் மார் கெட்ஸ், சிற்றங்காடிகள், 28 சிறிய நகரங்களில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, அல்லது நடைபெறும் தருவாயில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு எங்கேயாவது நாள் ஒன்றுக்கு ரூ. 2,000 அளவிற்கு விற்பனையாகக் கூடிய இடத்தைச் சொல்வார்களானுல் அங்கேயும் தொடங்குவதற்கு அரசு தயாராகயிருக்கிறது. இதுவரையில் 28 சிற்றங்காடிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. 100 வரையில் தொடங்குவதற்கு நிதி வசதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் முடிவுற்றது. கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நீட்டித்து மீதிக்கேள்விகளை எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கும்படி அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. பா. சாரதி :** தமிழ்நாட்டில் நடைபெற்றுவரக்கூடிய சூப்பர் மார்கெட்ஸ் எவ்வளவு லாபகரமாக நடக்கிறது? எவ்வளவு நஷ்டத்தில் நடக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** இந்தச் சிறப்பங்காடிகள் இரண்டு வகைப்படும். ஒன்று சூப்பர் மார்க்கெட், பேரங்காடி, இன்னென்று சிற்றங்காடி. 13 இடங்களில் பேரங்காடிகள் நடைபெறுகின்றன. திருச்சி நகரத்திலும் மதுரை நகரத்திலும் தவிர, மற்றவிடங்களிலும் நஷ்டமில்லாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சிற்றங்காடிகள், கோவையில் சர்க்கார் ஊழியர்களுக்கென்று நடைபெறுகின்ற ஒரு தனி சிற்றங்காடி தவிர, நஷ்டத்தில் நடைபெறவில்லை.

**திரு. மா. சுப்பிரமணியன் :** கோவையில் நடைபெறுகிற சிறப்பங்காடியில் லாபம் மிக அதிகமாகக் கிடைக்கிறது. அந்தஅளவிற்கு லாபம் மற்ற சிறப்பங்காடிகளிலும் கிடைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** இதற்காக ஒரு கருத்தரங்கினை விரைவில் கூட்டி, எப்படி சிந்தாமணி என்ற பேரங்காடி கோவையில் ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வருவதோடு மட்டுமல்லாமல் மக்களுக்குப் பெரிய பணி செய்யக் கூடிய அளவில் நடைபெற்று வருகிறதோ, அதேபோல் மற்ற ஊர்களிலும் ஏன் அப்படி நடைபெறக் கூடாது என்பதை ஆராய்வதற்கு, ஒரு கருத்தரங்கு விரைவில் நடைபெற இருக்கிறது. அதற்குப் பிறகு முடிவுகள் எடுக்கப்படும்.

[1971 ஜூலை 15

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that super markets are generally the luxury of advanced countries where it is difficult to sell goods and ordinary well-established markets with less expenses are enough for countries where there is shortage and particularly to India and Tamil Nadu?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Probably the hon. Member is under the impression that the State Government's monies are involved in this matter.

THIRU K. M. SUBRAMANIAM : Whomsoever's monies they are, it is national wealth. That is all.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : As I answered, except in the case of Tiruchirappalli super market and Madurai super market, all the other super markets are not losing money, but they are helping to hold the price line. Similarly in smaller municipalities and major town panchayats we have started mini-super markets in 28 of them. Exception in that special mini market opened for public servants in Coimbatore, all the mini markets are not losing. We are satisfied that we are not losing. The object is to hold the price line.

திருமதி. த. ந. அனந்தநாயகி : இந்தக் கூட்டுறவு சிறப்பங்காடிகள் எல்லாம் சொந்தக் கட்டடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ? அல்லது தனி நபர் கட்டடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சில அங்காடிகள் சொந்தக் கட்டடங்களில் இருக்கின்றன. சில வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன.

## ஆடுதுறையிலுள்ள விவசாயப் பண்ணைக் கட்டடம்.

* 235 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆடுதுறையில் தற்போது காலியாக உள்ள அரசாங்க விவசாயப் பண்ணைக் கட்டடங்களை சுற்றுலா மாளிகையாக ஆக்க திட்டம் ஏதேனும் தற்போது அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆடுதுறையிலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது அரசுக்கட்டிடம் எதுவும் காலியாக இல்லை. அங்குள்ள கட்டிடத்தைச் சுற்றுலா மாளிகையாக்கும் திட்டம் எதுவும் இல்லை.

## மின்சாரம் விநியோகம் செய்யும் தனியார் கம்பெனிகள்.

* 256 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மின்சாரம் விநியோகம் செய்யும் தனிப்பட்ட கம்பெனிகள் ஏதேனும் உள்ளனவா ?



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஆம். ஏழு தனிப்பட்ட கம்பெனிகள் தமிழ்நாட்டில் மின் விநியோகம் செய்கின்றன. அவை பின்வருமாறு :—

1. நாகப்பட்டினம் மின் விநியோகக் கம்பெனி.
2. கும்பகோணம் மின் விநியோக கார்ப்பரேஷன்.
3. வேலூர் மின் விநியோக கார்ப்பரேஷன்.
4. சேலம்-ஈரோடு மின் விநியோக கம்பெனி.
5. திருநெல்வேலி-தூத்துக்குடி மின் விநியோக கம்பெனி.
6. திருச்சி-ஸ்ரீரங்கம் மின் விநியோக நிறுவனம்.
7. செங்கோட்டை மின் வழங்கு உரிமதாரர்.

திரு. என். கிட்டப்பா : நம் கழக அரசு பொறுப்பேற்றவுடன் சிலவிடங்களில் தனியார் மின்சார நிறுவனங்களை அரசுடைமையாக்கியது. அதுபோல இப்போதிருக்கிற இந்தத் தனிப்பட்ட மின்சார விநியோகம் செய்யும் உரிமங்களையும் அரசுடைமையாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசுடைமையாக்குவது என்பதுதான் அரசின் கொள்கையாகும். அரசுடைமையாக்கி நோட்டிபை செய்யப்பட்ட கம்பெனிகள் விவகாரம் நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தினால் தீர்ப்புகள் வந்ததற்குப் பின்னால்தான் முடிவுகள் எடுக்கப்படும்.

திரு. கு. காமாட்சி : திருச்சியில் இருக்கிற ஒரு தனியார் நிறுவனம் விவசாயத்திற்கு வேண்டிய பம்ப் செட்ஸ் கனக்ஷன் கொடுப்பதற்குக்கூட தாமதம் ஏற்படுத்தி விநியோகக் கட்டணத்தையும் அதிகமாக்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி ஒரு விண்ணப்பம் வந்திருக்கிறது. பரிசிலனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏழு நிறுவனங்கள் தனியார் துறையில் இருக்கின்றன என்று சொன்னாலும் அவை மூன்று பேர்களுக்குத்தான் சொந்தமாக உள்ளன. சேஷசாயி, ராஜம் ராமசாமி, காட்வில்ஸ் கம்பெனி என்பவர்களுடையது. இந்த நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு நமது வாரியத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்குள்ள ஊதியம் கூடக் கிடைக்காமல் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனிப்பட்ட கம்பெனிகளில் சட்டதிட்டங்களுக்கொப்ப கொடுக்கிறார்கள். நாம் சட்ட அளவில் கட்டாயப்படுத்த முடியாது. சுமுகமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : நோட்டிபை செய்யப்பட்ட ஏழு நிறுவனங்கள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிற காரணத்தினால் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். இதற்கிடையில் மின்சாரக்கட்டணம், மீட்டர் ரென்ட், டெப்பாஸிட் எமௌண்ட் இவைகளை எல்லாம் அந்த நிறுவனங்கள் உயர்த்தியிருக்கிறார்களே ! அப்படி உயர்த்தக்கூடாது என்று அரசாங்கம் தடை விதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சட்டத்தை ஆராய்ந்து பார்த்தோம். உயர்த்தக் கூடாது என்று தடை விதிக்க சட்ட பலமில்லை என்று கருதுகிறோம்.

[1971 ஜூலை 15

**திரு. சோ. அழகர்சாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அதிகமாக வசூல் செய்கிறவர்களைத் தடுக்க முடியாது என்று சொன்னார்கள். இப்போது நம் அரசாங்க மின்வாரியத்தில் ஒன்பது பைசா என்றிருக்கும்போது அவர்கள் 12½ பைசா என்று உயர்த்தியிருக்கிறார்கள், திருச்சி-தென் மதுரை நிறுவத்தினர் அதேமாதிரி ஐந்து ரூபாய் இருந்த மினிமம் சார்ஜை 15 ரூபாய் என்று உயர்த்தியுள்ளார்கள். இவற்றினையெல்லாம் உயர்த்தியது போக சில விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் இடைஞ்சல்கள் செய்து கொண்டு வருகிறார்கள். இதைத் தடுக்க சட்டத்தில் இடமில்லையென்று சொன்னால் எப்படித்தான் விவசாயிகளுக்கு உதவி செய்ய முன்வருவது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதிலிருந்து கட்டணம் விதிப்பதில் மின்சார வாரியம் ஏமாந்திருக்கிறது என்பது தெரிகிறது.

**திரு. என். கணபதி :** குடந்தை மின் கழகம் சம்பந்தப்பட்ட வழக்கு ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன்பாகவே முடிந்துவிட்டதாக அறிகிறேன். ஆகவே அந்த மின்கழகத்தினை எடுப்பதில் என் அரசு காலதாமதம் செய்கிறது? தயக்கம் காட்டுகிறது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நாகப்பட்டிணம், கும்பகோணம், செங்கோட்டை இம்மூன்றில் செங்கோட்டை உரிமைதாரர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்ட காரணத்தினால் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. பாக்கி இரண்டு கம்பனிகள் விஷயத்தில் நமக்குச் சாதகமாக இருந்த காரணத்தினால் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறார்கள். முடிவு வந்ததன் பின்னால் யோசித்து தீர்மானமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்தத் தனியார் கம்பனிகளை எல்லாம் தேசியமயமாக்கும் முறையில், அந்தந்த இடங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் இன்று பம்ப் செட்ஸ் இணைப்புகளுக்கு அதிகப்படியான கட்டணம் கட்டவேண்டியிருப்பதால் அங்குள்ள விவசாயிகளுக்கு உதவித் தொகையாக அந்த வித்தியாசத்தை அரசாங்கம் கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது எலக்ட்ரிசிட்டி போர்ட் சார்பாக வசூலிக்கப்படுகிற தொகையால் இந்தப் போர்ட் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட எட்டு கோடி ரூபாய், ஒன்பது கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டுதான் இந்தக் கட்டணத்தை நாம் இன்று பெற்று வருகிறோம். அதையே மேலும் உயர்த்தலாமா என்ற யோசனை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. இதில் போய் தனியார் வசூலிக்கிற அதிகக் கட்டணத்திற்கு மானியத்தொகை கொடுப்பது என்பது இயலாத காரியம்.

*Bus accident near Queen Mary's College.*

* 257 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there was any serious bus accident in Madras City near the Queen Mary's College about the **21st January, 1971; and**

**(b)** if so, the details **thereof?**



1971 ஜூலை 15]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) சென்னை மாநகரில் ராணி மேரி கல்லூரிக்கருகில் 20—1—1971 அன்று மரண விபத்து ஒன்று ஏற்பட்டது.

(இ) 20—1—1971 அன்று பிற்பகல் 3.00 மணி வாக்கில் அரசுப் போக்குவரத்துப் பேருந்து எண்.ம. 943. பேருந்து வழித்தட எண் 21- N, மந்தவெளிக்குப் போய்க் கொண்டிருந்தது. வாடகைக்கார் ஒன்றை முந்தும் போது சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர்மேல் அந்தப் பேருந்து மோதியது. அவர்கள் இருவரும் அந்த இடத்திலேயே இறந்தனர். பிறகு வலவர் வண்டியைக் கட்டுப்படுத்தும் திறத்தை இழந்ததால், ராணி மேரி கல்லூரிக்குப் பக்கத்திலுள்ள நடைபாதை கான்க்ரீட் வேலியமைப்புக்கள் மீது மோதி அங்கு நடந்து சென்று கொண்டிருந்த மூன்று பெண்கள் மேல் பேருந்து மோதியது. பேருந்து மோதிய இடத்திலேயே அம்மூவருள் இருவர் மாண்டனர்.

விபத்தில் இறந்த குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும், ரூ. 1,500-ம், விபத்திற்குள்ளாகி காயம் பெற்ற மாணவிக்கு ரூ. 250-ம் கருணை மானியமாக அளிப்பதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தத் தொகை 21—1—71-லும், 27—1—71-லும் உரிமையுடையோருக்கு வழங்கப்பட்டது. கொடுக்கப்பட்ட மொத்த கருணை மானியம் ரூ. 6,250 ஆகும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, was the accident due to the brake-failure of the bus or was it for other causes?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The accident has been investigated by the police and there is a case pending before the court.

DR. H. V. HANDE : Sir, there are quite a number of buses which ply in the city without proper brake certificate. Even recently such cases have been brought to the notice of the Court and they do not have even competency certificate. Was this matter brought to the attention of the Hon. Minister also and if so, what are the steps which he is going to take to see that all the buses which ply in the City have the necessary competency certificate and the brake certificate and that they are checked properly in time?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இப்போது எல்லா வண்டிகளும் பிரேக் சர்டிபிகேட் இருந்தால் தான் ஓட்டப்படுகின்றன. பிட்னஸ் சர்டிபிகேட் இல்லையென்றால் ஓட்டுவது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல் உயர் நீதி மன்றத்தில் ஒரு அறிவிப்பு இருந்தது. நான் இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிட்னஸ் சர்டிபிகேட் என்பது கட்டாயம் எடுக்கவேண்டுமென்பது முறைதான். ஆனால் போக்குவரத்துத் துறையிலே இருக்கிற தகுதி பெற்ற இன்ஜினியர்கள் அந்த வண்டிகளை சரியாகப் பார்த்து அனுப்பினாலே போதும், ஓரளவுக்கு அது உகந்ததாகத் தான் இருக்கும். அந்த முறையை அரசு போக்குவரத்துத் துறை பயன்படுத்தி வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த 'ஸ்கூல் சோன்' ஏரியாவிலே ஒரு குறிப்பிட்ட லிமிட்டில் தான் வண்டிகளை ஓட்டவேண்டுமென்று வைத்து இருக்கிறார்கள். அது போல், கல்லூரிகள் இருக்கும் பகுதி

களிலும், பேருந்துகள், மற்ற கார்கள், அந்த லிமிட்டில் தான் ஓட்டவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கல்லூரிகளிலே படிப்பவர்கள் ஓரளவு வயதானவர்கள், விவரம் தெரிந்தவர்கள். ஆகையால், அவர்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பொறுப்பு, கடமையுணர்வு அவர்களுக்கே ஏற்படவேண்டும். இந்த நிலை ஏற்பட்டால் விபத்துகள் குறைவதற்கு ஏதுவாக இருக்கும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, பொதுவாக அரசு போக்குவரத்துத் துறையில் இப்படிப்பட்ட விபத்துகள் ஏற்படுவதற்குக் காரணம் அந்த வாகனத்தை ஓட்டிச் செல்பவர்கள் வேகமாக ஓட்டுவதால் தான் என்று பரவலாக பொதுமக்களிடையே பேசப்படுகிறது. வேகத்தைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு டி.வி.எஸ். பஸ்களில் வைக்கப்பட்டு இருக்கும் கருவிகளை, நம்முடைய அரசு போக்குவரத்துகளிலும் வைத்தால் ஓரளவு விபத்துகள் கட்டுப்படும். இந்தக் கருவியைப் பயன்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஓட்டுநர்கள் வேகமாக ஓட்டுவதால் பேருந்துகளால் விபத்துகள் ஏற்படுகின்றன என்பது ஓரளவு ஒப்புக்கொள்ளக்கூடிய காரணம் தான். அதே நேரத்தில் அது மட்டும் முக்கிய காரணமாகி விடாது. நடை பாதையில் நடப்போர், நடை பாதையைக் கடப்போர், ஆங்காங்கே திடீரென்று குறுக்கே வரும் குழந்தைகள், யார் ஆதரவும் இல்லாது வரும் மாடுகள், இவை போன்றவையும் விபத்துக்குக் காரணமாக இருக்கின்றன. ஆகையால், இது சம்பந்தப்பட்ட அனைத்து துறையினரும் விழிப்போடும் கண்காணிப்போடும் இருந்தால் தான் விபத்துகள் குறைவதற்கு ஏதுவாக இருக்கும். விபத்துகள் நடைபெறவேண்டுமென்று யாரும் விரும்புவது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சிடி போலீஸ் ஆக்ட் 41-வது பிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவு குறித்து

MR. SPEAKER : The hon. Member Thiru R. Ponnappa Nadar, has given notice of an adjournment motion which is as follows :

'I move that the business of the House do stand adjourned to discuss about a matter of urgent public importance, namely, the promulgation of an order under Section 41 of the City Police Act banning processions, meetings and assemblies by the Commissioner of Police in Madras with effect from the mid-night of 13th July 1971 for a period of 14 days which curtailed the fundamental rights of freedom of assembly, freedom of speech, etc.

Thiru K. T. K. Thankamani and Thiru M. Surendran have also given notice of similar motions.

Thiru Ponnappa Nadar will now speak.



THIRU R. PONNAPPA NADAR : Sir, the motion has already been read to the House by the Hon. Speaker. I would say that consequent on the procession taken out by the Rubber Factory workers on 12th July if I remember aright, certain incidents have happened and that might be the reason why an order under Section 41 of the City Police Act has been invoked. I would incidentally submit that such a drastic step is not needed because it is only an agitation by the workers and the wholesale banning of all processions, meetings, assemblies, etc., may not be proper in the circumstances of the case. Even with regard to the procession that has been taken out, only small incidents have happend and those incidents are all trivial things and I am sure that the extraordinary provision under the City Police Act need not be invoked. This is an urgent matter which has happened very recently and so I request that the House dostand adjourned to discuss about the details connected with the incidents which have happened just prior to the promulgation of this order. I think the Government will agree to discuss the matter.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்ததன் நோக்கம், ஏற்கெனவே நமது சட்டமன்றத்தைச் சுற்றி ஊர்வலங்கள் வரக்கூடாது என்று தடைஉத்தரவு விதிக்கப்பட்டு இருக்கிறது, அதுவே சரி தானா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி இருக்கும்போது, இப்போது நகர் பூராவிலுமே ஊர்வலங்கள் எடுக்கக்கூடாது என்று ஒரு பிளாங்கட் ஆர்டர் போடுவது அவ்வளவு சரியல்ல. இந்த நகரத்தில் பல விதமாக சம்பவங்கள் நடைபெறுகின்றன. எப்போது ஊர்வலம் எடுக்கவேண்டுமென்றாலும், சாதாரணமாக போலீசாருக்கு அறிவித்து விட்டு, ரூட் கொடுத்து விட்டு, போலீஸ் பந்தோபஸ்தோடுதான் ஊர்வலங்கள் செல்கின்றன. அப்படி இருக்கும்போது, இப்படிப்பட்ட 'ஆம்னிபஸ்' ஆர்டரை, அதுவும் சட்ட மன்றம் நடந்து கொண்டு இருக்கும்போது, ஒரு போலீஸ் அதிகாரி போடுவது சரியல்ல. இம்மாதிரியான செய்கை சரிதானா என்று இந்தச் சபையே அதிகமாக சிந்திக்கவேண்டிய நிலைமை வருகிறது. இது ஒரு முக்கியமான விஷயம். இந்த அரசு எடுத்த அந்த நடவடிக்கை சரியில்லை என்ற அடிப்படையில்தான் இந்தச் சபையை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

* திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, நான் அளித்து இருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே சாராம்சமான விஷயங்களைக் கூறியிருக்கிறேன்.

சமீபத்திலே திருவொற்றியூரிலே நடந்து கொண்டு இருக்கும் 1,600 பேர் கொண்ட மெட்ராஸ் ரப்பர் பாக்டரித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம், கிட்டத்தட்ட 90 நாட்களாக நடந்து கொண்டு இருக்கிறது. இந்த வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து, இதர தொழிற்சாலையில் இருக்கும் தொழிலாளர்களும் சேர்ந்து ஒரு பெரிய ஊர்வலம் கோட்டைக்கு முன்னால் வந்து, ஆர்ப்பாட்டத்தை நடத்தி, ஒரு பெரும் பரபரப்பையே உண்டாக்கியிருக்கிறார்கள். அந்தப் பரபரப்பைத் தொடர்ந்து இந்தத் தடைஉத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேலை நிறுத்தம், ஆர்பாட்டம் ஆகியவை நடப்பதற்கு மூலகாரணமாக இருக்கிற நிலைமைகளை மாற்றி, அதை ஒழுங்குபடுத்துவதுதான்

சரியான முறையாகும். அதுதான் ஜனநாயக முறைக்கு ஒப்பாகும். அதை விடுத்து, ஜனநாயக முறைக்கு விரோதமாகத் தடைகளைப் போட்டு, அவைகளைத் தடுத்து, அடக்கிவிடலாம் என்பது சரியல்ல. ஆகவே, இம்மாதிரியான தடைகளைப் போடுவதன் மூலம் அவர்களுடைய வேலை நிறுத்தத்திலே கலந்து கொண்டு இருப்பவர்களின் உறவானது வேறு ரகசியத் துறைகளில் மாறி, இன்னும் பல சீர்கேடுகளை உண்டாக்குவதற்கான சூழ்நிலைக்கு ஏதுவாகும் என்ற காரணத்தால், அவர்கள் ஜனநாயக முறையில் செயல்படும் வகையில், ஜனநாயக முறையில் அவர்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்த ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள், வேலை நிறுத்தம் ஆகியவை செய்வதற்கு, இந்தத் தடை உத்தரவு இடைஞ்சலாக இருக்கும்.

இந்தத் தடைஉத்தரவால் பல கேடுகள் உண்டாகக்கூடும் என்பதால் சபையின் இதர நடவடிக்கைகளை நிறுத்தி, இந்தப் பிரச்னையை விவாதிப்பது மிகவும் முக்கியமானது என்று கூறி, இந்த ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைக் காப்பாற்றுவதற்காகக் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கை தவறானது என்று கூறும் அளவிற்கு, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துப் பேசிய உறுப்பினர்களுடைய பேச்சைக் கேட்டு, உள்ளபடியே நான் வியப்பில் ஆழ்கிறேன். ஏனென்றால், 13-ம் தேதி மெட்ராஸ் ரப்பர் தொழிற்சாலையைச் சார்ந்த சிலரும், அவர்களுக்கு ஆதரவு அளிப்பதாகக் கூறிக்கொண்டு, வேறு எந்தவிதமான கோரிக்கைகளோ, குறைபாடுகளோ, முறையீடுகளோ இல்லாத வேறு தொழிற்சாலைகளைச் சார்ந்த தொழிலாளர்களும் ஆக சுமார் 4,000 பேர்கள் சென்னையிலே பல முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்து, திருவொற்றியூர் பெரியசாலை, பேஸின் பிரிட்ஜ் பெரியசாலை, வால் டாக்ஸ் சாலை, அரசாங்கப் பொதுமருத்துவ மனை சாலை, பூந்தமல்லி பெரிய சாலை, வேப்பேரி பெரிய சாலை, ரண்டால்ஸ் சாலை, காந்தி-இர்வின் பாலம், அருணாசல நாயக்கன் சாலை, சாமி நாயக்கன் தெரு, டாம்ஸ் சாலை, பிளாக்கர்ஸ் சாலை, அண்ணா சாலை, வாலாஜா சாலை வழியாக வந்து, தெற்குக் கடற்கரைச் சாலைக்கு வந்தார்கள்.

வந்த வழிகளிலெல்லாம் ஊர்வலம் அமைதியாக நடப்பதாக இருந்தது என்றால், அதைச் சந்தித்த பல பேர்களும், வழியில் போய்க் கொண்டிருந்தவர்களும் பலவிதமான இம்சைகளுக்கு ஆளானார்கள்; பலருடைய மோட்டார் சைகிள், சைகிள்கள் உடைக்கப்பட்டன என்பதும், ஊர்வலத்தினர் எத்தனை அச்சகங்களில், அலுவலகங்களில் புகுந்து சூறையாடினார்கள் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இப்பொழுது என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் புகைப்படம், கோட்டைக்கு அருகாமையில் ஊர்வலத்தினர் நின்றுகொண்டிருக்கும்போது காவல் துறையினர் வான்கள் மீது எறியப்பட்ட கற்களின் குவியலைக் காட்டும் புகைப்படம். காவல் துறையினர் மட்டுமல்ல, இவர்கள் பாரகன் தியேட்டர் வழியாக வந்த போது, கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் உள்ள சாதாரண கடைநிலை ஊழியர்கள் வசிக்கும் இடங்களில் படங்களை உடைத்தும், துவம்சம் செய்தும் வந்திருக்கிறார்கள். பிறகு ஊர்வலத்தினர் மாலை 6 மணியளவில், கடற்கரையில் கூட்டம்போட்டு, நேப்பியர் பார்க்கில் முதலில் கூட்டம் போட்டுவிட்டு, பிறகு ரகசியக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். போலீசார் வலியுறுத்திக் கூறியும், 'இரவு நேரமாகிறது,



பாலத்தின் இடையில் நீங்கள் இருப்பது வழியை அடைக்கிறது, போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது' என்று சொல்லியும், அவர்கள் எங்களுக்கு முடிவு எடுக்க இன்னும் கால் மணி, அரை மணி வேண்டும் என்று கூறி, ஊர்வலத்தினர், குசேலரும் மற்றவர்களும் அமர்ந்த பிறகு, தடையை மீறப்போகிறோம் என்று அறிவித்து, போலீசாரையும் மீறி, தடையை மீறியவர்கள் 30 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சட்டசபையைச் சுற்றிலும் மாத்திரம் தடைஉத்தரவு போடப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவு போதாது, சென்னை நகரம் முழுமைக்கும் தேவையா என்று நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த நண்பர் திரு. கே. டி. கே. தங்கமணி கேட்டார்கள். சட்டசபைக்கு அருகாமையிலுள்ள இடங்களில் நடக்கும் அசம்பாவிதங்கள் மாத்திரம் இன்றி, அவர்கள் வந்த வழிகளிலெல்லாம் அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜனநாயகத்திற்கு விரோதமற்ற முறையில் ஊர்வலங்கள் யாதேனும் நடத்தப்பட்டது, அது ஜனநாயகத்திற்குப் புறம்பானது என்று நம்முடைய மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும், அவர்களைத் தொடர்ந்து பேசிய நம்முடைய சுரேந்திரன் அவர்களும் கருத்துக்களைக் கூறினார்கள். ஆனால், இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டிருப்பதில், அனுமதி வாங்கிக் கொண்டு, ஊர்வலம் நடத்த எந்தவிதமான தடையும் விதிக்கவில்லை. இன்றுகூட காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள் ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

அது மாத்திரமல்லாமல், அரசாங்கத்தை எதிர்த்து, மாவட்ட அலுவலகத்திற்கு முன்னால் இவ்வளவு தினம் உண்ணாவிரதம் இருக்க, டெல்லியில் இடமில்லாமல், சென்னையில் நடத்தவிருக்கும் உண்ணாவிரதத்திற்கு, தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, நல்ல அமைதியான முறையில். ஆகவே, ஜனநாயகத்திற்கு விரோதமான அளவில் இந்தத் தடையில்லை. அசம்பாவிதங்கள் ஏற்படாமல், வன்முறை நிகழ்ச்சிகளைத் தவிர்க்க இந்தத் தடை பயன்படுத்தப்படும் என்ற அளவில் போடப் பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மெட்ராஸ் ரப்பர் தொழிற்சாலையில் 500-க்கு மேற்பட்டவர்கள் வேலைக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கேயும் தொழிற்சாலைக்குக் குந்தகம் இல்லாமல் வேலை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இதற்கிடையில், எங்கே வேலைநிறுத்தம் தோல்வியுறுமோ என்று நினைத்து, வேறு பல தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்கள் வன்முறை மூலமாக வெற்றி தேடக் கருதுகிறார்கள்.

திரு. சுரேந்திரன் சொன்னது, அரசுக்கு எச்சரிக்கையாகவும் இருக்கலாம், பயமுறுத்தலாகவும் இருக்கலாம். அவர்கள் சொன்னார்கள் இப்படியெல்லாம் போட்டால், ரகசிய வழிகளிலே போக மாட்டார்களா என்று கேட்டார்கள். நான் எடுத்துக் கூற விரும்புகிறேன், இந்த அரசு எந்த வன்முறையையும் கடுமையாகச் சந்திக்கத் தயாராக இருக்கிறது (பலத்த ஆரவாரம்) என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தொழிலாளர் நல அரசுதான். ஆனால் தொழில் அமைதி கெட இடம் தராது.

80 நாள், 90 நாள் என்றெல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டது. அரசு வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கவில்லை. எந்த, எந்த வகைகளில் முடியுமோ அப்படி சமரசத்திற்கு ஆயத்தங்கள் செய்து, அதிகாரிகள்

மட்டத்திலும், அதற்குப் பிறகு தொழிலாளர் நல அமைச்சர் மட்டத்திலும், அதற்கும் பிறகு என்னுடைய மட்டத்திலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று, கேட்ட கோரிக்கைகளிலே பெரும் அளவிற்கு, வித்தியாசம் இல்லாமல் இரும் அளவில் சமரச முடிவை அரசு சொல்லியும், வேலைநிறுத்தத்தை நீட்டியே தீருவது, அரசுக்கு நெருக்கடியை உண்டாக்குவது என்று வன்முறையை நாட்டிலே உருவாக்கத் தீவிரவாத முறையில் முனைப்போடு இறங்கி அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்குத் தொழிலாளர்கள் பலியாக வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், அதிலே பலியாகி விட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். சில பேர்கள், விஷயம் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமல் இருந்த காரணத்தால், அதற்கு ஆதரவு அளிக்கும் முறையில் ஈடுபட்டார்கள். உண்மை உருவத்தைத் தெரிந்து கொண்ட பிறகு, அதை விட்டு விட்டது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அளவில் வெகு மோசமான நிலைக்கு, தீவிரவாதிக்கு இடம் தரக்கூடாது. இதில் உறுப்பினர்கள் யாவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, சட்டம் ஒழுங்கு இவற்றைக் காப்பாற்றும் பிரச்சினை இது என்ற அளவில், அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று, தலைவர் அவர்களே, உங்கள் முன்னால் எடுத்து வைத்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த அவசர ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்த மூன்று தீர்மானங்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) அறிக்கை அளித்தல்

1968-69-ம் ஆண்டுக்கான சாட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேற்பட்ட தொகை குறித்த பொதுக்கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

THIRU R. PONNAPPA NADAR : Sir, I present the Report of the Committee on Public Accounts on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1968–69.

(4) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத்தலைவர்: இன்றையதினம் மூன்று மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற வேண்டியிருக்கிறது. இருப்பது மூன்று மணி நேரம். பின்தங்கியோர் நலன் பற்றிய கோரிக்கை ஒன்று, அட்மினிஸ்ட்ரேஷன் ஆப் ஜஸ்டிஸ் இரண்டு, மூன்றாவது, சிறைச்சாலைகள் பற்றியது. இந்த மூன்றும் முக்கியமான மானியக் கோரிக்கைகள். பின்தங்கியோர் நலன் கோரிக்கையின் மீதான விவாதத்தில் 18 உறுப்பினர்கள் பங்குகொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆளுக்கு நான்கு நிமிடங்கள் என்றாலும் சரியாகப் போதாது போல் தோன்றுகிறது. எப்படி நேரத்தை ஒதுக்கீடு செய்வது என்பதை மாண்புமிகு அவையின் முன்னவரும், மற்ற கட்சித் தலைவர்களும் கலந்து பேசி வரம்பு செய்துகொடுத்தால், விவாதத்தை நடத்த வசதியாக இருக்கும். உறுப்பினர்களும் ஒத்துழைத்து, உரையை சுருக்கமாக முடித்துக் கொள்ள வேண்டும். அவையின் முன்னவர் தன் கருத்தைச் சொல்ல வேண்டும்.





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பிற்பட்ட வகுப்பினர் நலத் துறை மானியத்திற்கு இரண்டு மணி நேரமும், மற்றும் ஜெயில், சட்டம் ஆகியவைகளுக்கு ஒரு மணி நேரமும் ஒதுக்கப்படலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு மணிநேரம் ஒதுக்கப்படுவது என்றால், 12½-க்கெல்லாம் வாக்கெடுப்பு உட்பட முடிந்து விட வேண்டும். அமைச்சருக்கு அரை மணி நேரமாவது அளிக்க வேண்டும். 18 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, ஒவ்வொருவரும் 4 அல்லது 5 நிமிடங்கள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) கோரிக்கை எண் 25-ஏ—பின்தங்கிய வகுப்பினர் நலன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல்,

"கோரிக்கை எண் 25-எ—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்கின்ற தலைப்பின்கீழ் ரூ. 4,41,84,100-க்கு மேற்பட்ட தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to increase the educational facilities now given to backward classes, I move the cut motion standing in my name, viz.—

"That the allotment of Rs. 4,41,84,100 under Demand No. 25-A—Welfare of the Backward Classes be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகையை அதிகரிப்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 25-ஏ—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,41,84,100-ல் ரூ. 100-யை குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலன் குறித்து கொள்கை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 25-ஏ—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,41,84,100-ல் ரூ. 100-யை குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, பின்தங்கிய நலத் துறை கொள்கை விளக்கம் பற்றிய குறிப்பு * ஒன்றினை ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கும் பார்வைக்கும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குறிப்பில் பின்தங்கியவர்களுடைய குறைகளைக் களைவதற்குத் தமிழக அரசு என்னென்ன முறைகளில் பாடுபட்டுக்

* 367-382ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திட்டங்களைப் பற்றியும் நடவடிக்கைகளைப் பற்றியும் ஓரளவு விளக்கமாக அதில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மானியத்தில் மிக் முக்கியமான அம்சம் ஏதாவது ஒன்று இருக்குமானால், அது, இந்தச் சட்ட மன்றத்தில், இது முதல் முறையாக அமைந்திருக்கின்றது என்பதாகும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக 25(ஏ) என்று ஒரு எண் கொடுக்கப்பட்டு மானியம் விவாதத்திற்கு முன்வந்திருக்கிறது. 1949-ஆம் ஆண்டு தான் ஹரிஜனங்களுக்கும் பிற்பட்டோர்களுக்குமாக அவர்கள் சார்பில் ஒரு இலாக்கா உருவாக்கப்பட்டது. அதிலிருந்து பின்தங்கியவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அவர்கள் நலன்களைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1969-ஆம் ஆண்டு நம்முடைய கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபின்தான், பின்தங்கியோர் நிலை பற்றிப் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி, இதற்காக ஒரு தனி இலாக்கா உருவாக்க வேண்டும் என்ற கருத்துகள் சொல்லப்பட்டன. கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, முதல் முதலாக, இந்த இலாக்காவைத் தனியாகப் பிரித்து, அதற்காக ஒரு தனி இலாக்காவை உருவாக்கி, அதைக் கொஞ்ச நாள் தன்னுடைய பொறுப்பிலேயே வைத்துக் கொண்டு, அதற்குப் பிறகு ஒரு அமைச்சரை அதற்காக உருவாக்கினார்கள். அதற்குப் பிறகு, இந்தப் பின்தங்கியோர்களுக்காக என்னென்ன காரியங்கள் செய்யப்படுகின்றன, செய்யப்பட்ட காரியங்கள் ஒழுங்காகவும் சீராகவும் நடைபெற்று இருக்கின்றனவா என்பதையெல்லாம் அறிய ஆணைக் குழு ஒன்றினை உருவாக்கினார்கள்.

அந்தக் குழு தன்னுடைய பரிந்துரைகளையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறது. அவற்றையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையில் பல கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்து வைத்திருக்கிறது. பின்தங்கிய வகுப்பினர்களுக்கு கல்விச் சலுகைகள், மாணவர்களுக்குச் சலுகைகள், உணவு மானியம், புத்தகங்கள் வழங்குவது போன்ற பல சலுகைகள் தரப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு இந்தக் குழு, பலவற்றைப் பற்றி விளக்கமாக மிக அழகாக எடுத்து விவாதித்திருக்கிறது. அந்த விவாதத்திலே உள்ள கருத்துக்களையெல்லாம், அரசு சீர்தூக்கிப் பார்த்து, அதன்படி பின்தங்கிய வகுப்பினர்களுக்கு சலுகைகள் அளித்து வருகிறது. அதில் முக்கியமாக, கல்வி நிறுவனங்களிலும், பொதுப் பணிகளிலும் பின்தங்கிய வகுப்பினர் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகத் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள இடம் 25 சதவிகிதம் ஆக இருந்ததை 31 சதவிகிதம் ஆக இந்த அரசு மாற்றியிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு சாதாரணமான காரியமல்ல, சாதாரணமான முறையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சி அல்ல என்பதைக் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும், இந்தியப் பணிகளில், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். போன்ற பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் அதிகமாக—அதிகமாகக் கூட அல்ல—அந்த இலையே தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற குறை இருந்து வந்திருக்கிறது. அந்தக்





குறையைப் போக்குகின்ற முறையில், பிற்படுத்தப்பட்டோர்களில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்கு மாணவர்களைத் தயாரிப்பதற்காக ஒரு நிலையை உருவாக்கி, அதற்காக ரூ. 1,52,300 ஒதுக்கி, ஒரு தனிப்பயிற்சி நிலையம் ஒன்றினை உருவாக்க இந்த அரசு பொறுப்பேற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போலவே, மாணவர் இல்லங்களில் பயின்று வருகின்ற பின்தங்கிய மாணவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அதிகத் தொகை வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் இந்த எண்ணங்களை மனதிற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசுக்கு இன்னும் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற அவாவிருந்தாலும் நிதிநிலை குறைவாக இருப்பதை நினைவில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நிதிநிலை நல்ல அளவுக்கு வரும்போது அவைகளையெல்லாம் கவனத்திற்கொண்டு அரசு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதே நிலையை உறுப்பினர்களும் தங்கள் எண்ணங்களைச் சொல்லும்போது மனதிற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியம் மிகமிக முக்கியமானது. காரணம், இன்றைக்கு நமது சமுதாயத்திலேயே 50 சதத்தைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை மனதிற்கொண்டு, அவர்களுக்கு எவ்வளவு உதவி அளிக்கிறோமோ அந்த அளவுக்கு சமுதாயம் முன்னேறும் என்பதை மறுக்க முடியாது. இன்றைக்கு நமது அரசு இதை உணர்ந்து ஓரளவுக்கு மானியத்தை உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. ஆனால், பாராட்டுகின்ற அதே சமயம், இது போதாது என்று சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். 380 கோடி ரூபாய் வருமானம் உள்ள அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரூ. 2½ கோடி தான் ஒதுக்கியிருக்கிறது என்று பார்க்கும்போது அது வருந்தத்தக்கதாக இருக்கிறது. இதைக்காட்டிலும் அதிகமாக செலவழிப் போமேயானால் அது அதிக நன்மை பயப்பதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பின்தங்கிய வகுப்பினர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், சலுகை தரவேண்டுமானால், இவ்வளவு வருமானத்திற்கு மேலல்லாதவர்களாக இருக்க வேண்டும் என்று விதி வகுத்திருக்கிறார்கள். 2,000 ரூபாய் வருமானத்திற்குக் கீழ் உள்ளவர்களுக்குத் தான் அந்தச் சலுகை என்று இருக்கிறது. இந்தத் தொகை ரொம்ப நாட்களுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டது. வருஷத்திற்கு ரூ. 2,000 என்றால், மாதத்திற்கு ரூ. 166. இந்தக் காலத்தில் ஒரு சாதாரண தொழிலாளியின் வருமானம் என்ன என்று கேட்டால் அது ரூ. 166-ஐ விட அதிகமாகத்தான் இருக்கிறது. பேக்வார்ட் கமிஷன் கூட இதைச் சுட்டிக்காட்டி, இதை ரூ. 3,600 ஆக உயர்த்த வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். இந்த சிபாரிசை அரசாங்கம் ஏற்று, ரூ. 2,000 என்று இருப்பதை ரூ. 3,600 ஆக உயர்த்த வேண்டும். அப்போதுதான் அதிக மாணவர்கள் இதனால் சலுகை அடைவார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று செண்டிரல் கவர்ன்மெண்டு நமக்கு சோசியல் பேக்வார்டுனெஸ் இல்லாமல் வெறும் பொருளாதாரத் துறையில் பின் தங்கியவர்களுக்கு உதவிப் பணம் கொடுத்தது. 1969-லிருந்து அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் படித்தேன். ஏன் நிறுத்தப்பட்டது, திருப்பிப் பெறுவதற்கு என்ன முயற்சி எடுத்தோம் என்பதை அரசாங்கம் தீவிரமாக யோசித்துப் பார்த்து, கூடுதலாக வாங்குவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இக்கனாமிக்கலி பேக்வார்டு, சோஷியலி பேக்வார்டு ஆக இல்லாவிட்டாலும் கூட, பொருளாதாரத் துறையில் உயர்ந்த ஜாதிக் காரர்கள் வாழ வசதியற்றவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உதவி தரவேண்டும். பல ஆண்டுக்காலமாக சட்டசபையில் பேசினோம். அதை நம்முடைய, இன்றைக்கு நம் முன்னால் இருக்கிற, அரசு யோசித்துப் பார்த்து தனியாக ஒரு தொகையை ஒதுக்கி வைக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். ஏனென்றால், அதையும் பின்தங்கிய வகுப்போடு சேர்த்தால், இருக்கிற வசதிகளும் குறைந்துவிடும். அதோடு சேர்க்காமல் பின்தங்கிய வகுப்புகளுக்குத் தனியாக ஒதுக்க வேண்டும். 'ஒன்லி இக்கனாமிக்கலி பேக்வார்டு நாட் சோசியலி பேக்வார்டு' என்பதையும் பார்க்க வேண்டும். சமுதாயத்திற்கு எந்தவிதமான சங்கடங்கள் ஏற்படும் என்பது தெரியும். பொருளாதாரத் துறையில் பின்தங்கியிருந்தால் அவர்களுக்கு உதவி தர வேண்டும். அப்படி இருக்கும் ஏழைகள், கோவில்களில் அர்ச்சகர்களாக இருப்பவர்களுக்கு வருமானம் மிகக் குறைவு. சமுதாயத் துறையில் உயர்ந்த ஜாதிக்காரர்களாக இருப்பார்கள். அவர்கள் குழந்தைகளுக்கு நன்றாகப் படிக்கும் திறன் இருந்தாலும் படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. நான் மயிலாப்பூர் பிரதிநிதி, ஆகவே கட்டாயம் பேசத் தான் வேண்டும். அந்தப் பிரச்னையை நம் அரசாங்கம் சற்று யோசித்துப் பார்த்து, ஏழைகளுக்கு என்ன உதவி செய்திருக்கிறோம் என்று பார்த்து, அதற்காகத் தனியாக ஒரு தொகையை ஒதுக்கிவிட்டால் கட்டாயம் மயிலாப்பூர் மக்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். சமுதாயம் கட்டாயம் முன்னேறும். அந்தத் தொகை வீணாகாது கட்டாயம் முதலமைச்சர் சேர்ப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மற்ற பல ஜாதிகள் எல்லாம் தங்களையும் பேக்வார்டு பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று பல ஆண்டுகளாக மனுக் கொடுத்து வருகிறார்கள். பாவம், அவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை. அன்றைக்குக் கூட முதலமைச்சர் சொன்னார். இந்த பேக் வார்டு கிளாஸ் கமிஷன், இருக்கின்ற ஜாதிகளுக்கு என்ன பிரச்னைகள், அவர் களுக்கு நாம் என்ன செய்ய முடியும் என்பதுதான் 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்', அதற்கு மீறி, புதிய ஜாதிகளைச் சேர்க்க இடம் இல்லையென்று சொன்னார்கள். நம்முடைய தமிழகத்தில் கார்ணீகர் வகுப்பு அதாவது கணக்குப் பிள்ளை, சமுதாயத்தில் தாழ்ந்து இல்லாவிட்டாலும் பொருளாதாரத் துறையில் தாழ்ந்திருக்கிறார்கள். கணக்குப் பிள்ளை வில்லேஜ் கர்ணம் அவர் களுக்கு எழுதப் படிக்கத் தெரியும். பெரிய அறிவாளிகள் அல்ல பொருளா தாரத் துறையில் பின்தங்கியவர்கள். பாவம், எத்தனையோ ஆண்டுகாலமாக அவர்கள் பின்தங்கிய வகுப்பினரோடு சேர்க்கவேண்டுமென்று மனுக் கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லை. மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். காரணம் பேக்வார்டு கிளாஸ் கமிஷன் முடியாது





என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே பின்தங்கிய ஜாதிகள் இருக்கின்றன. அவற்றைச் சேர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும்.

ஒரு வேளை அரசாங்கம் பயப்படலாம், இம் மாதிரி கதவைத் திறந்தால் பல ஜாதிகள் வந்து சேர்ந்துவிடும் என்று. அகமுடியர்கள், துளுவ வேளாளர்கள், இவர்களுடைய முக்கால் பங்கை முதலியார்கள் பயன்படுத்துகிறார்கள். தெற்கே இருக்கிற அகமுடியர்கள் பயன்படுத்துவதில்லை. இராமநாதபுரம், மதுரை ஜில்லா அகமுடியர்கள் பின்தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கு கிற பணம் எங்கே போகிறது என்றால் நார்த் ஆர்காட், செங்கற்பட், பங்களூர், ஆற்காடு முதலியார் வகுப்பைச்சேர்ந்தவர்கள் பயன்படுத்துகிறார் கள். உண்மையிலேயே ஆற்காடு முதலியார் முன்னேற்றமான ஜாதி. பேக் வார்டு கிளாஸ் கமிஷனிடம் சொல்லியிருக்கிறார்கள், எங்களில் 60 சதவிகிதம் 'எடுக்கேடட் பீபிள்' என்று. அவர்கள் சலுகை பெறும்பொழுது கார்ணீகர் ஜாதிக்கு ஏன் மறுக்க வேண்டும், என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும். அத்தகைய கஷ்டப்படுகிற ஜாதிகளைப்பொறுத்து பேக்வார்டு கிளாஸ் கமிஷன் ஆராய்ந்து பார்த்து, கதவைத் திறந்தால் அதிகமாக வந்து விடுவார்கள் என்று பயப்படக்கூடாது.

காகா சாகிப் கலேல்கர் கமிஷன் வந்த பிறகு பேக்வார்டு இல்லாத ஜாதிகளை மோஸ்ட் பேக்வார்டில் சேர்த்திருக்கிறார்கள். ஆகவே நிலைமையை ஆராய்ந்து பார்த்துத்தான் சேர்க்க வேண்டும். உயர்ந்த ஜாதிகளைச் சேர்த் தால் மறுபடியும் நிறைய பேர் வந்தால் என்ன செய்வது என்று பயப்படுவது சரியல்ல. அரசாங்கம் அவர்கள் பிரச்னையைக் கருணையோடு பார்த்து, முடிந்தால் சேர்த்துக் கொள்வது வசதியாக இருக்குமென்று நினைக்கிறேன். பேக்வார்டு கிளாஸ் என்ற லிஸ்டில் சற்றேறக்குறைய 75 ஜாதிகள் உண்டு. அதில் ரொம்ப ஜாதிகள் இப்போது கிடையாது. காம்போசிட் மெட்ராஸ் ஸ்டேட்டாக இருந்தபொழுது அந்த ஜாதிகள் சேர்க்கப்பட்டன. அன்றைக்குக் கூட ஒரு கேள்வி போட்டேன், முக்குலத்தோரை மோஸ்டு பேக்வார்டில் சேர்க்கக்கூடாதா என்று. பலர் பின் தங்கிய வகுப்பில் இருக்கிறார்கள். குறிப்பாக இராமநாதபுரம், மதுரை போன்ற பகுதிகளில் பார்த்தால் மிக வசதிக்குறைவாக வாழ்கிறார்கள். இதைப் பார்க்கும்பொழுது அவர்களையும் மோஸ்ட் பேக்வார்டு கிளாஸில் சேர்க்க வேண்டியிருக்குமோ என்பதை சிந்திக்க வேண்டும். இதோடு அல்லாமல் நாம் மோஸ்ட் பேக்வார்டு என்று கேட்கும்பொழுது பார்பர்ஸ், டோபிஸ், இப்படிப்பட்டவர்கள் ஆகியவர்களை ஷெடூல்டு காஸ்டில் சேர்த்தால் வசதிகள் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். நியாயம். அவர்களுக்குக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அதையும் இந்த அரசாங்கம் யோசித்துப் பார்த்து அவர்களுக்கு ஏதாவது வசதியை . . .

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஷெடியூல்ட் காஸ்டைப் போல் நாவிதர்கள், வண்ணார்கள், இவர்களுக்குக் கல்வித் துறையில் வசதிகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அளிக்கப்பட்டிருந்தால் வரவேற்கிறோம் அதில் சேர்த்து விடுங்கள், எல்லாவித வசதியும், சர்வீஸ் வசதியும் கிடைக்கும் என்று சொன்னார்கள்.

பால்வாடியில், பிற்பட்ட வகுப்பினரின் குழந்தைகள் ப்ரீ ஸ்கூல் ஸ்டேஜ் பள்ளிக்கூடங்கள் மூலம் நல்ல பழக்கவழக்கங்கள் ஏற்படும் என்ற காரணத்தால் சோசியல் வெல்பேர் போர்டு பால்வாடியை நடத்திக் கொண்டு வருகிறார்கள். பாவலாகச் சமூக சேவையில் யார் ஆசைப்பட்டு வருகிறார்களோ, அவர்கள் உதவி கொடுத்தால் செய்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் பாக்வர்டு கிளாஸ் பகுதியில் இப்படிப்பட்ட பால்வாடியை நர்சரி ஸ்கூல் ஆரம்பிக்க முயற்சி எடுத்துப் பணம் செலவு செய்தால் மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

அடுத்தபடியாக பேக்வார்டு கிளாஸ் ஸ்டுடன்ட்ஸ் ஆஸ்டல் சம்பந்தமாகக் குறிப்பாக ஒரு யோசனை கூறலாம் என்று நினைக்கிறேன். நம்முடைய தமிழ் மாநிலத்தில் லிஸ்டட் டெம்பிள்ஸ், ஒரு லட்ச ரூபாய் வருமானம் உள்ள கோவில்கள், இவ்வளவு வருமானம் இருக்கிற கோவில்கள் பிற்பட்ட இனத்துக்கு ஆஸ்டல் நடத்துங்கள் என்று கேட்டு, அவர்களை நடத்தச் சொன்னாலும் கூட, அரசாங்கத்திற்குப் பளு குறையும். நல்ல பணியும் நடக்கும். இதைப் பிற்பட்ட நலத் துறை அமைச்சர் ஆராய்ந்து பார்த்து எங்கெல்லாம் வசதிப்படைத்த கோவில்கள் இருக்கின்றனவோ, பிற்பட்ட இனத்தார் அதிகமாக வாழும் மாவட்டங்களில் ஆஸ்டல்களை ஆரம்பித்து உதவி செய்ய முடியுமா என்று யோசித்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

குறிப்பாக பிற்பட்ட வகுப்பினர் பகுதியில் சற்று அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இராமநாதபுரம் ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூர், முதுகுளத்தூர் பகுதிகளில் ரோடு இல்லை. குடிநீர் வசதி இல்லை, எந்த விதத்தில் அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று பார்த்தால் நாம் எல்லாம் வெட்கப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இப்படிப்பட்ட பகுதிகளில் ரோடுகள் போடுவது குடி நீர் வசதி செய்து கொடுப்பது ஆகிய பணிகளை ஆரம்பிக்க வேண்டும். அவைகளுக்கு 'பிரையாரட்டி' முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதைப் பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்தந்த அமைச்சரைப் பார்த்து, எந்த எந்தப் பகுதியில் என்ன வசதி முக்கியமோ அவைகளைப் பெற முன்வர வேண்டும். காரணம் அவர்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லி, என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. க. உரோ. எட்மண்ட்: துணைத் தலைவரவர்களே, பிற்பட்ட நலத் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற மானிய கோரிக்கையை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தில் கூற விரும்புகிறேன்.

இதற்கு முன்னால் அரிஜன நலத்துறையும் பிற்பட்டோர் நலத்துறையும் ஒன்றாக இயங்கிக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி இன்றையதினம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே, 1969-ம் ஆண்டு மே திங்களில் இதற்கான ஒரு தனித் துறையை ஆரம்பித்து, அந்தத் துறையைப் பராமரித்து, அதன் மூலம் பிற்பட்ட மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் ஒரு தனி அமைச்சரவையும் ஏற்படுத்தி, அதற்குப் பின்னர் இந்த பிற்பட்ட நலத்துறையில் உள்ள குறைபாடுகளை எப்படிக் களைய வேண்டும், இந்த நாட்டிலுள்ள பின்தங்கிய மக்களுக்கு எந்த வகையில் முன்னேற்றத்தைக் கொடுக்கலாம் என்ற நல்லெண்ணத்துடன், பிற்பட்டோர் நலக்குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழு





இந்த மாநிலம் முழுவதும் சுற்றி அங்கங்கே உள்ள முக்கியமான பிரமுகர்களைச் சந்தித்து, இந்த பிற்பட்ட வகுப்பில் உள்ள மக்களின் குறைபாடுகளை எந்த எந்த முறையில் களையலாம் என்ற அளவுக்கு இந்த அரசு நல்ல முயற்சி எடுத்ததற்கு இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இந்தக் குழுவை அமைத்த பிற்பட்டோர் நலத்துறை அமைச்சருக்கு பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

எனக்கு முன்னால் மன்றத்தில் பேசிய ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர் பெருமதிப்பிற்குரிய திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் பல குறைகளை எடுத்துக் கூறி அவற்றை அரசு களைய வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். நான் உண்மையிலேயே மிகவும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருந்தாலும் கூட இந்த அரசியல் நிலையை யார் இந்த நாட்டில் உருவாக்கித் தந்தவர்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். 20 ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்து, சட்டங்களை அமைத்து, யார் யார் எல்லாம் பின்தங்கிய வகுப்பினர்கள் என்று அவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள். அந்த நேரத்தில் இந்தக் குறைகளைக் களைய முடியாதவர்கள், இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பார்த்து, இந்தக் குறைகளை எல்லாம் களைய வேண்டுமென்று சொன்னால், அந்தச் சாதனையைச் சாதிக்கக் கூடிய திறமை வாய்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு தான், என்பதை நன்கு உணர்ந்த காரணத்தால் இன்றையதினம் அந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் பிற்பட்டோர் நல குழுவின் அறிக்கையை நாம் பார்க்கிற நேரத்தில் சில உண்மைகளை அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பிற்பட்டோர் நலக்குழு உறுப்பினர் திரு. மு. அ. ஜமால் உசேன் என்பவர், தாம் கொடுத்துள்ள மாற்றுக் கருத்துக் குறிப்பில் (பக்கம் 305—தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழு அறிக்கை பாகம்-1)

"பொதுப்படையாகப் பேசுமிடத்து கிறிஸ்துவ வகுப்பினரை அல்லது பிற்பட்ட சாதியினராக உள்ள கிறிஸ்துவப் பிரிவினரை, மத அடிப்படையை வைத்தே விலக்குவதென்பது இயலாது. நமது பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில், கிறிஸ்துவ மதத்துக்கு மாறிய ஷெடியூல் வகுப்பினர் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இதிலும் தாமாக மதம் மாறியவர்கள் மட்டும் என்று வரம்பு காட்டப்பட்டுள்ளது. இத்தகைய தடை நீக்கப்பட வேண்டும். ஷெடியூல் வகுப்பிலிருந்து கிறிஸ்துவ மதத்துக்கு மாறியவர்கள் எல்லோரும் அவர்கள் பிற்பட்டவர்களாக இருந்தால் இதே நிலையில் உள்ள சாதியினர், வகுப்பினர் பெறும் சலுகைகள் அனைத்தையும் இவர்களும் பெற வழி செய்ய வேண்டும். நலிந்த சாதிகளில் ஒன்று என்ற வகையில் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் உள்ள மற்ற நலிந்த சாதியினருக்கு இணையாக அந்தச் சலுகைகளை இவர்கள் பெறலாம்."

என்பதாகத் தம்முடைய பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் குழு மாநிலத்தின் பல பாகங்களிலும் சுற்றி தன்து பணிகளைச் செய்கிற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்கள்,

முதல் அமைச்சர்கள் ஆகியோரும் இந்தக் குழுவின் முன்னால் தம்முடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

முன்னால் முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்தக் குழுவின் முன்னாலே தம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்கிற நேரத்தில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"கிறிஸ்தவ மதத்துக்கு மாறினார்கள் என்பதால் அதே மூச்சில் அவர்கள் முன்னேற்றமடைந்தவர்களாகிவிட முடியாது. அவர்கள் முன்பு இந்து மதத்தில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால், பிற்பட்ட வகுப்பினராகவே கருதப்பெற வேண்டும். அவர்கள் ஷெட்யூல் வகுப்பில் முன்பு இருந்தவர்களானால், கிறிஸ்தவ மதத்தில் தீண்டாமை இல்லாத காரணத்தினால், அத்தகையவர்கள் மிகப் பிற்பட்டவர்களாகவோ, பிற்பட்டவர்களாகவோ கருதப்பட வேண்டும். அரசியலமைப்பின் மதச் சார்பற்ற தன்மைக்கு இது பொருத்தமாக இருக்கும்."

என்பதாக அவர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நானும் இதே கருத்தைத்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு முன்னால், பிற்பட்ட நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்துக்களாக இருந்தவர்கள் மதக் கொள்கையின் காரணமாக, மத நம்பிக்கையின் அடிப்படையில் கிறிஸ்தவர்களாக மாறினார்கள் என்பதற்காக சமுதாய அடிப்படையிலும், தொழில்துறையிலும், கல்வித்துறையிலும், பொருளாதாரத்துறையிலும் அவர்கள் முன்னேறிவிட்டார்கள் என்று நினைக்கிற கருத்தினை இனிமேலாவது நாம் மாற்றி அமைத்தாக வேண்டும். மிகமிகப் பிற்பட்ட நிலையில்தான் அவர்கள் இன்னமும் இருந்து கொண்டிருக்கிறார்கள். வேண்டுமென்றால் கைவிரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் வாழ்க்கைத்துறையில் முன்னேறியிருக்கிறார்கள் என்று சொல்லலாமே தவிர, பெரும்பான்மையானவர்கள் பிற்பட்ட நிலையில்தான் இருக்கிறார்கள். ஆகவே இந்தச் சமுதாயத்தினர் மதம் மாறிவிட்டார்கள் என்கிற ஒரே நிலையைக் கொண்டு, இவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நியாயமான உதவிகளை அளிக்க இந்த அரசு மறுக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

உதாரணமாகச் சொல்கிறேன். தமிழகத்திலுள்ள மீனவ மக்கள் ஆங்காங்கு வாழ்கிறார்கள் என்றால் அவர்கள் எல்லோரும் செய்கிற தொழில் ஒன்றுதான்—ஆனால் பல சாதிகளின் அடிப்படையில் பலவாறாக அவர்கள் கருதப்படுகிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் மீன் தொழிலில் ஈடுபடுகிறவர்கள்—'பரவர்' என்பதாகவும், 'முக்குவன்' என்பதாகவும், 'பர்வதராஜகுலம்' என்பதாகவும், 'செம்படவர்' 'பட்டனவர்' என்பதாகவும், சாதியின் பெயரால் அங்கங்கே அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் எல்லோரும் செய்கிற தொழில் மீன் பிடித்தல்தான். வாழ்க்கையில் இவர்கள் எல்லோரும் பிற்பட்ட நிலையில்தான் இருக்கிறார்கள்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், இந்த ஆண்டு வைத்தியக் கல்லூரியில் சேருவதற்கான விண்ணப்பத்தோடு கொடுக்கப்பட்ட ப்ராஸ்பெக்டஸில் கன்னியாகுமரி, செங்கோட்டை தாலுக்காவில் வசிக்கும் பரவன் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை ஷெட்யூல் காஸ்ட் லிஸ்டில் போட்டிருக்கிறார்கள். ஆனால்





"For purposes of admission a candidate who is himself a convert to any other religion from any Scheduled Class will be treated as a person belonging to Backward Castes. A candidate descended from a Scheduled Caste and converted to any other religion (and who continue in that religion) will be treated neither as a Scheduled Caste nor as Backward Class candidate but only as a non-Backward Class candidate."

என்பதாகப் போட்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்து ஒருவர் தன்னுடைய காலத்தில் மதம் மாறியிருந்தால் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவராகக் கருதப்படுவார் என்று சொல்லிவிட்டு, மதம் மாறியுள்ள குடும்பத்தில் வந்தவராக இருந்தால் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகவோ, பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகவோ கருதப்பட மாட்டார்—நான் பாக்வேர்ட் க்ளாஸ் என்று கருதப்படுவார் என்று சொல்லியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவன் ஒருவன் இந்துவாக இருக்கிறான், மற்றவன் கிறிஸ்தவனாக இருக்கிறான் என்பது போன்ற மாறுபட்ட கருத்துக்களைக் கொடுத்திருப்பது நியாயம் அல்ல என்பதை பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்னும் சொல்ல வேண்டுமென்றால், 1954-ஆம் வருஷம் ஜூலை மாதம் 1-ஆம் நாள் ஜி.ஓ. எம்.எஸ். நெ. 922 எஜுகேஷன் உத்தரவில் பரவன் என்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறியிருந்தாலும் அவர்கள் பிற்பட்ட வகுப்பினராக—தொழில்துறைக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு கருதப்படுவார்கள் என்பதாக அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறது. அதே சமுதாயத்தைப் பொறுத்த மட்டில் 1957-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் 4-ஆம் நாள் ஜி.ஓ. எம்.எஸ். நெம். 3345-இல்

"The Government direct that the community known as 'Parayan' be included in the list of 'Most Backward' Classes annexed to G.O. Ms. No. 353, Industrial, Labour and Co-operation, dated 31st January 1957 and granted the educational concessions admissible to the Scheduled castes as laid down in the order."

என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த இடத்தில் அதைக் குறிப்பிடுவதற்கு —கல்லூரிகளில் இடம் கொடுக்க பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகவும், கல்விச் சலுகைகளை அளிக்க மிகவும் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவராகவும் குறிப்பிட்டிருந்தவர்கள் மேற்படி ஜி.ஓ.-விலேயே

"The question of the deletion of 'Paravan' (Kanyakumari district and Schencottah taluk of Tirunelveli district) community from the lists of Scheduled Castes. will be taken up with the Government of India separately along with the other proposals for revision of the list of Scheduled Castes and Scheduled Tribes."

என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த உத்தரவு 1957-ல் போடப்பட்டிருந்தாலும் கூட அன்றையதினம் ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள் அதற்குப் பின்னால் பத்தாண்டு காலம் ஆட்சியில் இருந்தும் கூட தங்கள் கருத்தை மத்திய அரசுக்கு எடுத்துரைத்து அவர்கள் போட்ட உத்தரவையே நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை.

நமது அரசாவது அத்தகைய முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1971 ஜூலை 15

இந்த அளவுக்கு இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவர் சமுதாயத்தை ஷெட்யூல் வகுப்பில் சேர்த்திருக்கிற அரசு—திருநெல்வேலி மாவட்டத்தில் வாழ்கிற பரவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை மோஸ்ட் பாக்வேர்ட் கிளாஸ் என்ற அடிப்படையில் கல்விச் சலுகைகளையும், கல்லூரியில் இடம் அளிப்பதற்கு 'பாக்வேர்ட் க்ளாஸ்' என்றும் போட்டிருக்கிறது. இப்படிப்பட்ட குழப்பங்களை மாற்றி எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—மதம் மாறியவர்களாக இருந்தாலும்—கல்வித்துறையிலும், பொருளாதாரத் துறையிலும், சமுதாயத்துறையிலும், பின்தங்கிய நிலையில் இருப்பார்களேயானால் மதத்தின் அடிப்படையில் அவர்களிடையே பாகுபாடு காட்டாமல் நடத்த முன்வர வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாம் மதத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்கிற கொள்கையை மனத்தில் கொண்டு, உண்மையிலேயே சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் எல்லாம் முன்னேற்றம் அடையப் பாடுபட வேண்டும்.

சமுதாயத்திலே இருக்கிற குறைபாடுகளையெல்லாம் களைந்து, தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள மக்களையெல்லாம் உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அன்று, அல்லும்பகலும் பாடுபட்டு வந்த திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கிறது. ஆகவே, அந்தக் குறைபாடுகளையெல்லாம் களைந்தெறிந்துவிட்டு, அந்தச் சமுதாயத்திற்கு நியாயம் வழங்குவதற்கான முயற்சிகளை பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகத்தில் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் இந்துக்களாக இருந்து மதம் மாறியவர்கள்தாம். அவர்களில் 'லப்பை' என்கிற பிரிவினரைப் பின்தங்கிய வகுப்பினராக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிகளில் இடம் கிடைப்பதற்கும், கல்விச் சலுகைகள் பெறுவதற்கும், மற்றத் துறைகளில் இடம் பெறுவதற்கும் அவர்களைப் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அதுபோலவே, ஒருகாலத்தில் இந்துக்களாக இருந்து மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கும் இந்தச் சலுகைகளையெல்லாம் தர வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, at the very outset I have to say that the Government have taken certain concrete steps to improve the lot of the backward community. I must give a compliment to the Government on a particular aspect of the matter, namely the appointment of a Commission under the distinguished Chairmanship of Thiru Sattanathan which have brought out three volumes on the problems of the Backward Communities and also for the detailed manner in which they have gone into all the aspects of the matter. I am sure the Government deserve congratulation. Recently I had an occasion to meet a couple of members of the Andra Pradesh Legislature. They were all happy that this Commission has brought forward some useful



1971 ஜூலை 15]

suggestions. In fact they wanted me to request this Government to send a few copies to the neighbouring States because that will give them an idea as to how they should proceed.

Sir, it is a well-known fact that the very purpose of creating a separate department for the Backward Classes is to see that the most backward and backward persons in a particular community are elevated from the lower strata and then pumped into the general stream of the people who are supposed to be slightly higher in the economic and social structure so that probably after 50 or 100 years or a couple of centuries, it might be possible to evolve a society wherein one would not ask a person to which community or caste he belongs. That is the ultimate goal. In this particular context, Sattanathan Committee has made a very valuable suggestion which I would like to place for the careful consideration of the Hon. Minister.

In paragraph 206 of the report, it is stated—

'In spite of our recommendation for raising the limit of income for scholarship very substantially, the comparatively affluent section will be excluded from getting the benefit of the State Scholarships. Till now, for employment, there has been no limit of income, and the sons and daughters of well-to-do people who cannot complain of social or environmental handicaps are allowed to complete freely with the children of the poor who suffer from all the handicaps of a backward society.'

For instance, for 100 posts 150 persons belonging to the backward community will be competing but among them at least 25 persons might belong to the affluent classes. Instead of considering their cases, the cases of the persons in the bottom might be considered. That is the point.

Then it is stated—

'Applicants from the Backward Classes have to compete even within the reservation with applicants from particular castes which have a fairly high level of advancement in every sphere and also from their own caste men who have overcome economic, environmental and therefore, social handicaps also to a considerable extent.'

Then the Commission goes on to suggest to the Government—

'We think, it is time that the Government recognise the inequity that is being perpetuated in this system. The sons of a senior official, or of a doctor, engineer, accountant, lawyer or anybody similarly placed in a good profession, and sons of landlords and business executives should have no reasons to complain of environmental handicaps. . .'

I am sure, the Hon. Minister will give careful consideration to this aspect of the matter.

Then it is stated—

'While scholarships are intended to overcome economic handicap, reservation in appointment is primarily intended to overcome social and environmental handicaps . . .'

Even if it is a question of touching the social handicap by means of professional opportunities, that might for the present be left untouched. In the matter of granting scholarships, the economic aspect may also be taken into consideration. Now the funds at the disposal of the Government are fixed and they cannot afford to spend a larger amount for this purpose. Then the Commission says—

We propose the following criteria for determining the advanced section in each Backward Caste :—

They have given 5 criteria for determining the economic status and I hope and trust that the Government will implement or at least give careful consideration to it. That is an important point.

Then I come to another aspect which the hon. Member, Thirumathi Anandanayaki also mentioned and that is that a few persons who are economically backward irrespective of the fact that they are born in a particular community should be selected. This is not the first time that such a suggestion has been made. That suggestion was made by even Anna when he was Chief Minister and I hope and trust that the present Government also will give consideration to this aspect of the matter.

Then I would like to make two or three suggestions. With regard to hostels, we are spending more that Rs. 4 crores. Now only a few persons belonging to the backward community are able to get hostel accommodation. So, I would request the Government to find out the exact number of students belonging to the backward community who are able to get hostel accommodation, and whether it is possible to increase the accommodation. Also the standard of food served in the hostels is not satisfactory. I did visit a few hostels and I was rather disappointed. So, I request the Hon. Minister to give consideration to this aspect of the matter also.

Sir, there is a certain backward community which provides funds for the education of persons belonging to that community. When those persons get good jobs and earn more money, they have been asked to pay something to the lower sections of their community and that is a good scheme. This scheme can well be adopted by the Government who spend so much for the backward community. I do not say that there should be such a compulsory scheme but the Government can consider this aspect of the matter also.

Another suggestion I would like to make. There are many areas in Madras City, Thanjavur, Madurai, etc., number of taluks, which are economically and sociologically backward. The Sattanathan Committee had given a beautiful picture of all such places in each district and had given descriptions of large sections of people who are economically neglected and who are all backward communities.



Let Government have a pilot scheme, let them select 20 or 30 taluks, spend about Rs. 50 lakhs on these taluks and see how best these people are brought up to come on a par with those who are forward economically and sociologically.

Government must also take into consideration the position of the most-backward strata among the backward communities. It is a huge list and the Backward Class Commission had gone into the question thoroughly. The report is in 3 volumes and I had gone through it. It is a beautiful report and that is why it is welcomed in other States. I give a clean chit. In that report, there is a huge list of backward classes. But even among them, there are some most-backward. Never mind, X, Y, Z. We are not concerned with names. They are all put in the same category. What are those particular communities which are most-backward, what are their salient features are all given in the report. We can sift those communities and try to do what we can for their upliftment.

Finally I would request that some more money should be pumped for the upliftment of backward classes. As Martin Luther King had observed, society must evolve itself in such a way that a person, never mind if he is X, Y or Z, does not bother to what particular community or caste he belongs; It should be a class-less society. If it is possible to evolve such a society, hats off to this Government.

*திரு. கே. பி. கோபால்: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நல மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது பின்தங்கிய வகுப்பினர்களுக்கு 442 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிதியில் எல்லா பின்தங்கிய வகுப்பினருக்கும் அப்படிப்பட்ட சலுகைகள் கிடைக்கின்றவா என்றால் இல்லை யென்றுதான் சொல்வேன். இதற்காக அமைக்கப்பட்ட குழுவே இந்தக் கருத்தைத்தான் வலியுறுத்திக் கூறியிருக்கிறது. இந்த அரசும் அவர்களுடைய பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து அந்த சமூகங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் என்று உறுதியளித்திருக்கிறது. ஆனால் அந்தக் குழுவின் அலுவல்களில் வரம்பு வரையறுக்கப்பட்டு இருந்ததால் 3 உறுப்பினர்கள் கொண்ட அந்தக் குழுவில் உள்ள மூன்று பேர்களும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பல முக்கியமான பிரச்னைகளிலே அவர்கள் ஏகோபித்த முடிவை எடுக்க முடிந்திருக்கிறதா என்றால் இல்லை.

உதாரணமாக லப்பை என்று எடுத்துக்கொண்டால் அது தமிழ் முஸ்லீம்களைக் குறிக்கிறதா அல்லது தமிழ் பேசும் முஸ்லீம்களைக் குறிக்கிறதா என்று ஏகோபித்த முடிவுக்கு அவர்கள் எல்லோரும் வர முடியவில்லை. அதேபோன்றுதான் இந்து நாடார்களும், கிறித்தவ நாடார்களும் பொருளாதார ரீதியிலே மாறுபட்டிருக்கிறார்களா என்பதைப் பற்றியும், அதைப்போன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பவர்களில் கிறித்தவ மதம் மாறியவர்களும் மற்ற பின்தங்கிய வகுப்பினரும் தனிப்பட்டவர்களா, இல்லையா, பொருளாதார ரீதியிலே மாறுபாடு உள்ளதா என்று ஏகோபித்த ஒரு முடிவுக்கு அவர்களால் வர முடியவில்லை.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர் என்று பல பிரிவுகள் இருக்கின்றன. இவர்களையெல்லாம் முன்னேற்றவேண்டுமென்று அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையிலே சொல்லியிருக்கிறது. பிற்பட்ட வகுப்பினர் என்றும், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் என்றும் வேறுபாடு தேவை இல்லை என்ற கருத்தை ஜமால் உசேன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். திரு. சின்னப்பன் அவர்கள், இந்துக்கள் 70 சதவிதமும் முஸ்லிம்கள் 70 சதவிதமும் இதனால் பலனடைகிறார்கள் ஆனால் கிறித்துவர்கள் 5 சதவிகிதம் தான் பயனடைகின்றார்கள் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே நிதி ஒதுக்கீடு செய்யும் பொழுது இப்படிப்பட்ட ஜாதி சமய வேறுபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று கிறித்தவர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட கோரிக்கைகளையெல்லாம் அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வண்ணார் இனத்தைச் சேர்ந்தவர்கள் சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். கிராமங்களிலே சலவைத் துறை கட்டுவதற்காக என்று 2½ லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக என்று நிலம் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அந்த நிலங்களை சிலர் ஆக்கிரமித்துக்கொள்கிறார்கள். அதுபோன்று கம்பம் பகுதியில் ஆக்கிரமிப்புச் செய்கின்றவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்விச் சலுகைகளும் மிகவும் பின் தங்கிய வகுப்பினருக்குப் போதுமான அளவுக்கு அளிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* THIRUMATHI ALDA M. FOWLER : Sir, what I had to say has already been said and probably more ably than I can do. It has been treated by people who are so much more experienced than I. Even so I would like to underline what they have expressed in this House.

I am also full of admiration for this great project of uplift by which we get hold of those classes of people who are our fellow citizens and nationals, by which we want to make them partners, equals and peers. But, Sir, if we call them "Backward", one would imagine that there is a scheme by which they would want to get rid of the stigma. That does not appear to be so.

I am also exercised in my mind regarding those people, who have benefited by the scholarship and other emoluments. One would imagine there would come a time when this group would call itself as emancipated group of people. But that is not so. Backward we have named them and backward they choose to be because of the benefits. It seems to be that it is like a see-saw, on the top of which you have better placed persons and at the bottom of which you have those who just cannot help themselves except by a greater power than themselves. When those people at the top end are going to get off one does not know. They will perpetuate this name of being backward because it suits them best to be so. One does not mind if the State were rich enough to always nurse them in this condition.





So, Sir, I find that a person who has benefited (and you and I know quite a few) who have sent their sons to college and who should no longer call themselves backward, still perpetuate this class and still reap the benefits for their children, their children's children to the third and fourth generation.

On the other hand I want to draw the attention of this House to a small group of people, about whom nobody seems to take notice, namely, domestic servants of whom all of us are aware and all of us know.

They earn a small pittance. They feed on the crumbs that fall from the master's table. They live in near starvation and are perpetually in debts. These people have large families too. By some twist of circumstances when these poor people send their children, if they ever manage to do so, to a college or to the diploma course, I.T.I. and so on and so forth, they cannot benefit by the scholarships or the boarding grants. There is one great disadvantage. Most of these domestics are Christians and I do not have any special brief for them as Christians. I just say that their need is as great as any other's and they should be considered when grants and scholarships are being handed out. I know them I have seen them. They take a painful journey to the institution. There is no lunch packet with them. They have to get there by bus by walking and also on borrowed cycles, if they are lucky. When we, in our ignorance, try to get them these various aids, we discover with horror that it cannot be done. There is this great disadvantage. Of course I will say, to state that a Christian is not a backward person is somewhat of a compliment, but these people cannot live on compliments. Sir, I feel that in a secular State and under a socialistic pattern of Government these people should be considered. Grants should be made to them and all possible help should be given to them because, Sir, their association with a more cultivated group of people, the people whom they serve, will help them to be emancipated quicker than all the other groups which are given to us in our lists. So, Sir, I urge that this be given all due consideration.

There is another problem which troubles me and it is this. I do not understand why we consider dhobies and barbers to have occupations which are not clean as shown in the books given to us. What shall we do without dhobies? Surely they are the ones who keep us looking fresh and clean and what would the gentlemen in this House do without barbers ? They would all be looking like those people who come in for considerable criticism in this House from time to time The trouble seems to be with us. Surely we are not paying them sufficiently . Surely we do not give them the equipment that they need. Once these facts are faced, they also will enjoy an exalted position as their colleagues and counterparts in every other part of the world. These are not despised professions in other places. So, Sir, we should try to give them a place of honour and we should try to pay them more. That is what I would like to recommend this morning.

A. IRR.

திரு. வி. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிற்பட்டோர் நலத் துறை ஒதுக்கீட்டின்மீது ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

கடந்த அரசுகள் 20, 22 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிற்பட்டோர் நலத்துறை, பிற்பட்டோர் சமுதாயத்தைப்பற்றி எண்ணிக் கூட பார்க்காத அந்த அரசுக்குப் பின்னால், இரண்டாண்டுக் காலத்தில் கலைஞர் முதல்வர் பொறுப் பேற்றதற்குப் பின்னால், இந்திய உபகண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு புதிய துறையை, நிர்மாணித்து, அதற்காக ஒரு அமைச்சரையும் ஏற்படுத்திச் சிறப்பு மிக்க திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருப்பதற்காக பிற்பட்ட துறையைச் சேர்ந்த சமுதாயத்தினர் அத்தனைபேரும் கலைஞர் முதல்வரவர்களைப் பாராட்டுதற்கும், போற்றுதற்கும் கடமைப்பட்டவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பட்டோர் நலத்துறை கடந்த காலங்களில் பல துறைகளிலே ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு பல காரியங்களின் மூலமாக முன்னேற்றப்பட்டிருந்தாலும்கூட கணிசமாக அதிலிருந்து பல பிரிவினர்கள் குறிப்பிட்டு எண்ணக் கூடிய, விரல் விட்டு எண்ணக்கூடிய சமுதாயத்தினர் அரசின் நிதி ஒதுக்கீடுகளையும், அரசின் சலுகைகளையும் அனுபவித்துக்கொண்டும், அதிலுள்ள மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் அனுபவிக்காமலும் இருக்கும் நிலையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது அரசு பொறுப்பேற்ற பிறகு நிறைய நிதி ஒதுக்கீடுகள், சலுகைகளை அளித்திருந்தாலும் சமீபத்தில் பிற்பட்ட நலத்துறையில் 31 சதவிகிதத்தை வேலைவாய்ப்புகளிலும், கல்வித்துறையிலும் ஒதுக்கியிருந்தாலும் நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தப் பிற்பட்டோர் நலத் துறையில், பிற்பட்ட சமுதாயத்தில் மேம்பாடு அடைய, கல்வித்துறையில் மேம்பாடு அடைய, பொருளாதாரத்துறையில் மேம்பாடு அடைய மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கென்று பிற்பட்டோருக்கென ஒதுக்கப்படும் 31 சதவிகிதத்தில் குறைந்தபட்சம் 15 சதவிகிதத்தையாவது ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசைக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் கம்மாபுரம் ஊராட்சி துறையையும் சமமாகப் பாவித்து ஒதுக்குவதால் வளர்ந்த சமுதாயத்தினர் அனுபவித்துக்கொண்டிருப்பதால் இந்த நிலையைச் சீர்தூக்கிப் பார்த்து இந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசை பிற்பட்ட சமுதாயத்தினருக்கு அளிக்கும் சலுகைகளின் மூலமாக தமிழகத்தில் 50 மாணவர் விடுதிகளை இந்த அரசு ஏற்படுத்தி இருப்பதற்காக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திருநாவலூரில் ஒரு மாணவர் விடுதியை ஏற்படுத்தித் தந்திருப்பதற்காக அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்தில் கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கே ஒரு விடுதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிகவும் பிற்பட்ட சமுதாயத்தினர் மேம்பாடு அடைவதற்காக இந்தச் சலுகைகளையும் அரசு அளித்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பட்டோர் நலத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை வரவேற்று இந்த வாய்ப்பை அளித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடை பெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. தேவராசன் அவர்கள். உறுப்பினர்கள் பேசும்பொழுது 5 நிமிஷங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டும். இதில் ஒத்துழைத்தால்தான் நேரத்தோடு முடிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். தேவராசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுகையில் என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

குறிப்பாக, நீலகிரி, மாவட்டத்திலே உள்ள வடுகர் இனத்தைப்பற்றிச் சில தவறான குறிப்புகள், தவறான தகவல்கள் நீலகிரி மாவட்ட கெஜட்டியரில் முதல் பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குச் சென்னையிலுள்ள வடுகர் சங்கமும், உதகையிலே உள்ள வடுகர் இனச் சங்கமும் கொண்டு வந்திருக்கிறார்கள். வடுகர்கள் விவசாயம் செய்யாத நாட்களிலே நாவிதத் தொழிலையும், சலவைத் தொழிலையும் மற்றவர்களுக்குச் செய்கிறார்கள் என்ற தவறான தகவல்களைப் பார்த்து அங்குள்ள மக்கள் மிகவும் வேதனையடைந்திருக்கிறார்கள். அதை உடனடியாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனித்து அதை நீக்கினால் அந்த மக்கள் என்றென்றும் இந்தத் தமிழக அரசுக்குக் கடமைப் பட்டிருப்பார்கள் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, உதகை நகரத்தைப் பொறுத்த வரையில் உதகை வடுக இன மக்களுக்காக ஒரு கல்லூரி இருக்கிறது, உதகை மக்களுக்கு என்று. அந்தக் கல்லூரிக்கு விடுதி கிடையாது என்பதை அமைச்சரவர்கள் நன்கு அறிவார்கள்.

கிராமங்களில் இருந்து உதகைக்கு வந்து படிக்கும் மாணவர்களுக்கு விடுதி வசதி இல்லாத காரணத்தால் அங்கு இருந்து படிக்க முடியவில்லை. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து உடனடியாக ஒரு விடுதியை ஏற்படுத்தித் தருமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பெண்களுக்கு, குறிப்பாக படக பெண்களுக்கு படிப்பறிவு மிக மிகக் குறைவு. அவர்களுக்காக நீலகிரியில் அரசு ஒரு கல்லூரியை அமைத்துத் தந்தால் அந்த இன மக்கள் முன்னேற வசதியாக இருக்கும். நீலகிரி மாவட்டத்தில் பெண்கள் கல்லூரி ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு சந்தர்ப்பம் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

*திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பினர் நலனை நாடும் ஒரு நல்ல அரசு, அதற்கு ஒரு நல்ல அமைச்சு, அவர்கள் ஏற்படுத்திய ஆணைகள் எல்லாம் கண்டு நாட்டில் இருக்கும் பிற்பட்ட சமூக மக்கள் எல்லாம் மகிழ்ச்சியடைந்து இருக்கும் இந்த நேரத்தில் அவர்கள் கொண்டு வந்த மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுகிறேன்.

சமுதாயம் என்ற பயிரை சில இடங்களில் பயிரைப் பூச்சிகள் அரிப்பது போல் வறுமை அரிக்கப்படுகின்ற நிலையில் இந்த அரசு பூச்சி அரிக்கப்பட்ட பயிருக்குப் பூச்சி மருந்து போடுவது போல் பிற்பட்டவர்களுக்கு [illegible] ஊக்கமும் ஊக்கமும் தரும் அதே நேரத்தில் பயிருக்கு [illegible] பிற்பட்டோருக்காக ஒதுக்கப்பட்டது 25 விழுக்காடு [illegible] ஆக மாற்றியிருப்பதை பிற்பட்ட சமுதாய மக்கள் [illegible] வரவேற்கிறேன்.

முஸ்லீம்களில், லப்பைகளைப்பற்றிப் பேசப்பட்டது. லப்பைகள் பின் தங்கிய வகுப்பில் இருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. முஸ்லீம்கள் அத்தனை பேருமே இந்த நாட்டில் பொருளாதாரத்திலும், கல்வித் துறையிலும் பின் தங்கியவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் கவனத் திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். லப்பை என்ற சொல்லுக்கு என்சைக் ளோபிடியா ஆப் பிரிட்டானிகா என்ற புத்தகத்தில் தமிழ் பேசுகிற முஸ்லீம் கள் என்று குறிப்பிட்டிருந்தாலும் உண்மையாக லப்பை என்பதற்கு அர்த்தம் என்னவென்று கேட்டால் இறைவனை நாடுகிறவர்கள், நம்புகிறவர்கள் என்பது தான் லப்பைக்கு அரபி வார்த்தையின் அர்த்தமாகும். அதுமட்டுமல்லாமல் முஸ்லீம்கள் அத்தனை பேருமே காரணப் பெயர்களால் தான் பிரிக்கப்பட்டிருக் கிறார்களே தவிர, அடிப்படையாக எல்லோரும் முஸ்லீம்கள்தான். ராவுத்தர் என்று அழைக்கப்பட்டால் முன்பு குதிரை வியாபாரம் செய்தவர்கள் சந்ததியினராக இருப்பார்கள். மரைக்காயர் என்று அழைக்கப்பட்டால் கப்பல் வியாபாரம் செய்தவர்களின் சந்ததியினராக இருப்பார்கள். மரக்கல ராயர் என்பது மரைக்காயன் என்று திரிந்திருக்கிறது. தட்சிண பிடபூமி நாத்தில் வாழ்ந்து வந்தவர்கள் தக்கணிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த முறையில் தான் முஸ்லீம்கள் பிரிக்கப்பட்டார்களே தவிர, ஜாதியின் அடிப்படையிலோ அல்லது வேறு அடிப்படையிலோ அல்ல.

தமிழகத்தில் இருக்கும் முஸ்லீம்களைப் பொறுத்தவரை மொழியால் தமிழர்கள், இனத்தால் திராவிடர்கள், நாட்டால் இந்தியர்கள், மார்க்கத்தால் இஸ்லாமியர்கள் என்று பெருமைப்படும் விதத்தில் இருந்து வருகிறோம். உருது பேசும் காரணமாக சலுகை அளிக்காமல் இருப்பதும், பொருத்த முடையது அல்ல. உருது பேசுகின்ற மக்கள் உயர்ந்த நிலை மக்கள் என்று கூறி அவர்களைப் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. உருது பேசியவர்கள் ஒரு காலத்தில் இந்த நாட்டில் பல்லக்கில் ஏறிச் சென்றவர்களானாலும் இன்று இந்த நாட்டில் பல்லக்கு தூக்குபவர்களாகவும் மற்றும் குறைந்த வேலைகளைச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். முஸ்லீம் கள் அவ்வளவு பேரையும் பின்தங்கிய பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு உரிய எல்லாச் சலுகைகளையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. லத்தீப் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்போது 'காலம் கனியட்டும், கவனிக்கிறேன்' என்று சொன்னார்கள். இது எங்களுடைய அரசு என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் வகையில் அறிஞர் அண்ணா அவர்களுடைய பாரம்பரியத்தில் ஏற்பட்ட இந்த அரசு இன்று கலைஞர் அரசாக இருக்கிறது. இதுதான் கனிவான காலம். இதைவிடக் கனிவான காலம் எப்போதும் வாய்க்காது. [illegible] கனிந்துவிட்ட காலம்.





'காத்திருந்தோம் காத்திருந்தோம் காலமெல்லாம்
காத்திருந்தோம்

பார்த்திருந்த நல்ல அரசும் பாரான வந்தபின்பும்
காத்திருக்கச் செய்யாமல், கனிய வைப்பீர் கலைஞர் ஏறே!

என்று கனிவான வேண்டுகோளாகக் கூற ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கவிதை கனிந்திருக்கிறது, ஆனால் கிஜானு கனியவில்லை.

திரு. கே. ஏ. வகாப்: கலைஞர் அவர்கள் மனது வைத்தால் மத்திய அரசின் அனுமதியைக் கனிய வைப்பார் என்ற நம்பிக்கை இருக்கும் காரணத்தால்தான் தைரியத்தோடும் உரிமையோடும் கேட்கிறோம்.

பிற்பட்டோர் நலத்துறை நடாத்தும் மாணவர் இல்லங்களைப் பார்க்கிற போது எல்லா மாவட்டங்களிலும் பல இல்லங்கள் இருக்கின்றன, ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு இல்லம் கூடக் காணப்படவில்லை. இதைக் கவ னித்து ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்று சர்டிபிகேட் கொடுப்பதைப் பொருத்து பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. பதிவுப் பத்திரங்களை எடுத்து வந்தால்தான் சர்டிபிகேட் கொடுக்கப்படும் என்று அரசினர் ஆணை வந்திருப்பதாகத் தாசில்தார்கள் சொல்லுகிறார்கள். அதைப் பற்றி நிறையப் புகார்கள் வந்திருக்கின்றன. மாணவர்களுடைய கல்லூரி அல்லது பாடசாலை சர்டிபிகேட்டில் எழுதி இருப்பதைக் கொண்டு அவர்களுக்குச் சான்றிதழ் களை அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்ளுகிறேன்.

* திரு. கே. என். குமாரசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கையின் பேரிலே சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பின்தங்கிய வகுப்பினர்களும் சமுதாயத் தில் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல என்பதைக் காட்டுவதற்காக அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகின்ற நடவடிக்கைகள் சரியான முயற்சியாக இருக்கிறது என்பதிலே நிறைவு கொள்கிறோம். அவர்களும் மற்ற மக்களுடைய அந்தஸ்துக்குச் சரியாக வாழ்கின்ற சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய பல அங்கத்தினர்களும் கருத்தினை எடுத்துக் கூறி யிருக்கி றார்கள். அதே முறையில் என்னுடைய கருத்தையும் கூற விரும்புகிறேன்.

இன்று அந்தப் பிற்பட்ட மக்களுக்குச் சலுகைகள் கொடுக்கும் போது வருட வருமானம் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருந்தால்தான் சலுகைகள் அளிக்கப்படும் என்ற நிலைமையில் இருக்கிறது. சலுகைகளை அளிப்பதில் இந்த வரம்பைக் கூடுதலாக்க வேண்டும். இல்லையென்றால் அவர் கள் ஓரளவு விவரம் தெரிந்தவர்களாக இருந்தாலும், அறிவு பெற்றவர்களாக இருந்தாலும், முழு அறிவு பெற வாய்ப்பு இல்லாமல் ஒதுக்கப்பட்டுவிடும். ஆகவே, இந்த இரண்டாயிரம் ரூபாய் என்ற வருமான வரம்பை உயர்த்த வேண்டும்.

[திரு கே. எஸ். குமாரசாமி] [1971 ஜூலை 15

உயர்நிலை பள்ளி வரையில் மிகப் பின்தங்கிய வகுப்பினருக்கு 1,500 ரூபாய் வருமானம் வந்தால் பள்ளிக் கட்டணச் சலுகை இல்லை என்று சொல்லப் படுகிறது. அந்த வரம்பே இல்லாமல் மிகப் பின் தங்கிய வகுப்பினருக்கு முழு கல்விச் சலுகை அளித்தால்தான் சமுதாயத்தில் ஐந்து சதவிகிதத்தினருக்கும் குறைவாக இருப்பவர்கள் முன்னேறும் அளவுக்கு இந்த அரசு பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை நிலச் சீர்திருத்தத்தின் மூலம் வருகிற உபரி நிலங்களை அவர்களுக்குக் கொடுத்து சமுதாயத்தில் அவர்கள் மேன்மை அடைவதற்கான வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினர்களில் டோபி போன்றவர்களுக்குக் கிராமங்களில் எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் குடியிருக்க வீடு கட்டுவதற்குப் பணம் இல்லாமல் மிகவும் திண்டாடுகிறார்கள். டோபி கானா அமைப்பது போன்ற பிரச்சினைகளிலும் வசதி ஏற்படாத நிலையில் இன்று அவர்கள் மோசமான நிலையில் தங்களுடைய தொழிலை நடத்திக் கொண்டிருக் கிறார்கள். அந்தத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லும்போது அவை நம்மைப் பாதுகாக்கும் தொழில்களாக இருப்பதால்தான் சொல்கிறோம். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு தோபிகானா கட்டப்பட வேண்டும். அவர்களில் ஒரு ஜில்லாவிற்கு ஆண்டு ஒன்றுக்கு 60 பேர்களுக்குத்தான் இலவசக் கருவிகள் வழங்குகிற திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம். அதை அதிகப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு ஜில்லாவிற்கு 60 பேர்கள் என்று சொல்லும் போது ஒரு கிராமத்திற்கு ஒரு ஆள்கூட வர வாய்ப்பில்லாமல் போய்விடும். ஆகவே அந்த 60 பேர்கள் என்பதையும் அதிகப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிணறு வெட்டுவதற்கு 2,000 ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அதனால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அவர்களுக்குள்ள முக்கியத் துவத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேண்டிய கிணறுகள் முழுவதையும் வெட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னர் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு 1,200 ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 1,200 ரூபாயைக் கொண்டு எந்தவிதமான வீடும் கட்ட முடியாது. ஆகவே அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள கொடுக்கப் படும் தொகையையும் அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதில், சீருடை வழங்குவதில் அவர்களுக்கு என்று கட்டப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களில் ஏற்கனவே உள்ள உயர்நிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் இவற்றில் அந்தக் குழந்தைகளைச் சேர்த்து இந்தச் சலுகைகள் முழுவதையும் அளித்து அந்தப் பிள்ளைகள் அந்தப் பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாணவர்கள் ஹாஸ்டலில் நடத்துவதில் மிகப் பின் தங்கிய வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதுமானதாக இல்லை. ஆகவே பராமரிக்கும் முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் சமுதாயத்தில் மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே அந்தச் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டு அவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 15] [திரு கே. எஸ். குமாரசாமி]

பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசத்தை ஓரளவிற்குப் பார்க்க வேண்டும். மிக மிகப் பின்தங்கிய வகுப்பினரில் கூட பல பேர்கள் வருவாய் அதிகமாக வருகிறவர்கள் இருக் கிறார்கள். அவர்களுக்கும் அந்தச் சலுகை அளிக்கிற நிலையை விட ஏழை களுக்கு அளிக்கிற நிலையில் அது மாற்றியமைக்கப்பட வேண்டும். பின் தங்கிய வகுப்பினருக்கு, கிராம மக்களுக்குப் பயன்படுகிற முறையில் திட்டங்களை வெளிப்படுத்திக் காட்டி அவர்களுக்கு இந்தமாதிரிச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன, அந்தச் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்ற அளவில் அதிகாரிகள் மூலமாக எடுத்துக்காட்டும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி, அந்தந்தப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் தெரியப்படுத்தி, அவர்களுக்கு அந்தச் சலுகைகள் வழங்குவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு அனுமதித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker Sir, before I make observations on the Demand before the House, I should congratulate Thiru Sattanathan, Chairman of the Backward Classes Commission, for having brought out one of the most excellent, well-worded and intelligent reports on Backward Classes in the State of Tamil Nadu. Sir, he has pointed out that out of about 4 crores of population, 2 crores are still backward. I think except a few people, almost the entire population is backward. Among the two crores of backward people, certain communities are benefited much more than other backward communities. 11.8 per cent of the backward communities share 34.63 per cent of the scholarships and out of that one particular community—he has not named it but I think is Thulava Vellala—which is only .25 per cent of the population get 18 per cent of the scholarships. This shows that under the cloak of backwardness many forward communities among the backward communities are enjoying much more than the other backward communities.

Thiru Sattanathan has pointed that other backward communities are not wanting in education and they are not indifferent to education. Everybody wants to be educated but unforunately certain backward communities are not encouraged by the society to take advantage of the scholarships and other benefits and so, that has to be rectified. Then, the point is why should be economically forward community get benefit under the cover of backwardness. Sir, now the so called forward communities have gradually become backward and of course, the Government may say that they may come under the general grant of scholarships and other things. Sir, even some of the forward communities in Tamil Nadu are not able to make a living in Tamil Nadu and thousands of such Tamilians are living in U.S.A. and Canada.

Then, I suggest that the Government should give opportunities to the backward classes to improve their position but by giving some sort of subsidy they are encouraging backwardness. I do not say that they should not be given subsidy to make them come forward. They can start kindergarten schools or public schools on the lines of the public school at Lovedale, in every district and that will

மதிப்பிற்குரிய நண்பர் சுப்பிரமண்யம் கூறியது போல், 2 கோடி மக்களைப் பொறுத்த மான்யம் இது. இரண்டு கோடி மக்கள் இந்த நாட்டில் பின்தங்கிய மக்களாக இருக்கிறார்கள். பட்டியலில் சேரவேண்டுமென்று புதிது புதிதாக தினமும் மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. 442 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்டு இருந்தாலும், அது போதுமா என்பது ஒரு பிரச்னை தான். குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, அடுத்து வரக்கூடிய பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த பிள்ளைகளுக்கு விசேஷமான வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று விரும்புகிறேன். ஏனென்றால் அவர்கள் இப்போது இருக்கும் வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களின் மூலம் பெரிய அளவில் உத்தியோகம் பெற முடியவில்லை. ஆகவே, ஒரு ஸ்பெஷல் எம்பிளாய்மெண்ட் எக்சேஞ் ஏற்படுத்தி அவர்களுக்கு அதன் மூலமாக வேலை தேடித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஹாஸ்டலில் இருப்பவர்களுக்கு உணவு சம்பந்தமாக ரூ. 20 தான் கொடுக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் அந்த அளவு போதாது. சில பணக்காரர்கள் சத்திரத்தில் சில ஏழைப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுவது மாதிரி அரசாங்கம் செய்யக்கூடாது. அந்த அளவை அதிகரித்து, ஓரளவு நாகரிகமாகச் சாப்பிடுகிற அளவுக்கு அந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஹாஸ்டல் பட்டியலைப் பார்க்கிற போது, மன்னார்குடியில் இரண்டு ஹாஸ்டல்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. திருத்துறைப்பூண்டி, வேதாரண்யத்தில் பெரிய அளவில் ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்தில் ஒரு ஹாஸ்டல் கூட இல்லை. இதை என்னுடைய தொகுதியின் கோரிக்கையாக இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அந்த பின் தங்கிய வகுப்பினர் வேலை கிடைத்து முன்னுக்கு வரவேண்டுமானால், அரசாங்கத் துறைகளின் மூலம் மட்டுமே உத்தியோகம் தந்து விட முடியாது. ஆகவே, சர்க்காரிடமிருந்து மான்யம் பெறும் தனியார் ஸ்தாபனங்களிலும் இந்தப் பிற்பட்டோருக்கு என்று தனியாக இடம் ஒதுக்கி, அவற்றிலும் இவர்களுக்கு உத்தியோக வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த பின் தங்கிய மக்களுக்கு இந்த அடிப்படையில் வேலை தேடித்தருவதோடு மட்டுமல்லாமல், பின் தங்கியோர் அதிகமாக இருக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் விசேஷமாக தொழில்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குத் தொழில் நடத்துவதற்கு இயந்திரங்களை வாங்குவதற்கும், அதனைப் பயன்படுத்துவதற்கும் போதிய வசதிகளைச் செய்து கொடுத்தால், வெகு சீக்கிரத்தில் அவர்கள் முன்னுக்கு வந்து விடுவார்கள். அதோடு, இந்த தரிசு நிலங்கள் ஒதுக்குவதில் ஹரிஜனங்களுக்கு ஒதுக்குவது மாதிரி இவர்களுக்கும் ஒதுக்க வேண்டும். இந்த விசேஷ சலுகையும் அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச்சொல்லி முடித்துக்கொள்கிறேன். மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த பின் தங்கியோர் பட்டியலைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துளுவ வேளாளர் ஜாதியார் நான அதிகமான லாபம் அடைந்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதை நான் ஆராய்ச்சி செய்து பார்க்கவில்லை. ஆகவே, அந்த பட்டியலைப் பரிசீலித்து,





யார் உண்மையிலேயே பின் தங்கியோராக இருக்கிறார்கள், யார் மேல் நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்று பார்த்து, அந்த அடிப்படையில் இந்தப் பட்டியலைச் சீர்திருத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பின் தங்கியோர் நலத் துறை மான்யத்தின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் பேறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, மாண்புமிகு கலைஞர் அவர்களின் தலைமையில் இப்படிப்பட்ட பின் தங்கியோர் வகுப்பினருக்கு என்று தனிப்பட்ட ஒரு இலாகாவை அமைத்து, அதை ஒரு அமைச்சரிடத்திலே பொறுப்பு கொடுத்து, அத்தனை பின் தங்கிய மக்களும் முன்னேறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதற்காகப் பாராட்டுகிறோம்.

இந்த பின் தங்கியோர் நலக்குழுவின் பரிந்துரைகளைப் பார்க்கிற நேரத்தில் என் கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த பிற்பட்டோர் இவ்வகுப்பில் 105 வகுப்பினர் சேர்க்கப்பட்டு இருந்தாலும், அதிலே செல்வாக்கு உள்ள ஒரு சிலர் தான் அந்த சலுகைகளைப் பெற முடிகிறது என்று அந்தக் குழுவின் அறிக்கையிலேயே கூறியிருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கையைக் கருத்திற்கொண்டு, அந்த பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கையில் இருக்கும் அத்தனை வகுப்பினருக்கும் சரிசமமான வாய்ப்பை இனியாவது நம்முடைய அரசு ஏற்படுத்தித் தந்து, அவர்கள் முன்னேறுவதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களைப்பற்றி பிற்பட்டோர் நலக் குழுவினால் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு பொற்கொல்லர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பொற்கொல்லர்களை மிகவும் பிற்பட்டோர் வகுப்பில் சேர்த்து தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் அத்தனையும் கொடுத்து வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்குக் கடன்வசதி செய்து கொடுத்து, தாங்களாகவே சிறு தொழில்களை ஆரம்பிக்க வசதிசெய்து கொடுக்க வேண்டும் என்று பரிந்துரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றையும் ஆராய்ந்து, நல்ல வழிகளில் அவர்களுக்கு உதவிகள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தலைமைச் செயலகத்தில் பதவி உயர்வு கொடுப்பதில் பாக்வர்ட் கிளாஸ் என்ற ரொடேஷனில் கொடுக்கப்படுவதில்லை. அதற்கான வழிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தஞ்சை மாவட்டத்தில் அர்ச்சகர் வெள்ளாளர் என்ற வகுப்பினர் தாழ்த்தப்பட்ட சமுதாயமாக எந்தப் பட்டியலிலும் சேர்க்கப்படவில்லை. அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். 5,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் இந்த பரிந்துரைப்படி பிற்பட்ட வகுப்பில் சேர்த்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த பிற்படுத்தப்பட்டவர்களுக்கெல்லாம் வசதிசெய்ய தொகைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சமமாக சலுகைகள் கொடுக்க வேண்டும், பரிந்துரையில் இருப்பவற்றை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மதிப்பிற்குரிய நண்பர் சுப்பிரமண்யம் கூறியது போல், 2 கோடி மக்களைப் பொறுத்த மான்யம் இது. இரண்டு கோடி மக்கள் இந்த நாட்டில் பின்தங்கிய மக்களாக இருக்கிறார்கள். பட்டியலில் சேரவேண்டுமென்று புதிது புதிதாக தினமும் மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. 442 லட்ச ரூபாய் ஒதுக்கப் பட்டு இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்டு இருந்தாலும், அது போதுமா என்பது ஒரு பிரச்னை தான். குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, அடுத்து வரக்கூடிய பின் தங்கிய வகுப்பைச் சார்ந்த பிள்ளைகளுக்கு விசேஷமான வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று விரும்பு கிறேன். ஏனென்றால் அவர்கள் இப்போது இருக்கும் வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களின் மூலம் பெரிய அளவில் உத்தியோகம் பெற முடியவில்லை. ஆகவே, ஒரு ஸ்பெஷல் எம்பிளாய்மெண்ட் எக்சேஞ் ஏற்படுத்தி அவர்களுக்கு அதன் மூலமாக வேலை தேடித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஹாஸ்டலில் இருப்பவர்களுக்கு உணவு சம்பந்தமாக ரூ. 30 தான் கொடுக்கப்படுகிறது. இந்தக் காலத்தில் அந்த அளவு போதாது. சில பணக்காரர்கள் சத்திரத்தில் சில ஏழைப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடுவது மாதிரி அரசாங்கம் செய்யக்கூடாது. அந்த அளவை அதிகரித்து, ஓரளவு நாகரிகமாகச் சாப்பிடுகிற அளவுக்கு அந்தத் தொகையை உயர்த்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஹாஸ்டல் பட்டியலைப் பார்க்கிற போது, மன்னார்குடியில் இரண்டு ஹாஸ்டல்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. திருத் துறைப்பூண்டி, வேதாரண்யத்தில் பெரிய அளவில் ஒரு ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த இடத்தில் ஒரு ஹாஸ்டல் கூட இல்லை. இதை என்னுடைய தொகுதியின் கோரிக்கையாக இந்த சந்தர்ப்பத் தில் சொல்லிக்கொள்கிறேன்.

அந்த பின் தங்கிய வகுப்பினர் வேலை கிடைத்து முன்னுக்கு வரவேண்டு மானால், அரசாங்கத் துறைகளின் மூலம் மட்டுமே உத்தியோகம் தந்து விட முடியாது. ஆகவே, சர்க்காரிடமிருந்து மான்யம் பெறும் தனியார் ஸ்தாபனங் களிலும் இந்தப் பிற்பட்டோருக்கு என்று தனியாக இடம் ஒதுக்கி, அவற்றிலும் இவர்களுக்கு உத்தியோக வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த பின் தங்கிய மக்களுக்கு இந்த அடிப்படையில் வேலை தேடித்தருவதோடு மட்டுமல்லாமல், பின் தங்கியோர் அதிகமாக இருக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் விசேஷமாக தொழில்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குத் தொழில் நடத்துவதற்கு இயந்திரங்களை வாங்குவதற்கும், அதனைப் பயன்படுத்து வதற்கும் போதிய வசதிகளைச் செய்து கொடுத்தால், வெகு சீக்கிரத்தில் அவர்கள் முன்னுக்கு வந்து விடுவார்கள். அதோடு, இந்த தரிசு நிலங்கள் ஒதுக்குவதில் ஹரிஜனங்களுக்கு ஒதுக்குவது மாதிரி இவர்களுக்கும் ஒதுக்க வேண்டும். இந்த விசேஷ சலுகையும் அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச்சொல்லி முடித்துக்கொள்கிறேன். மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த பின் தங்கியோர் பட்டியலைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். துளுவ வேளாளர் ஜாதியார் தான் அதிகமான லாபம் அடைந்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதை நான் ஆராய்ச்சி செய்து பார்க்கவில்லை. ஆகவே, அந்த பட்டியலைப் பரிசீலித்து,



யார் உண்மையிலேயே பின் தங்கியோராக இருக்கிறார்கள், யார் மேல் நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்று பார்த்து, அந்த அடிப்படையில் இந்தப் பட்டியலைச் சீர்திருத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பின் தங்கியோர் நலத் துறை மான்யத்தின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, மாண்புமிகு கலைஞர் அவர்களின் தலைமையில் இப்படிப்பட்ட பின் தங்கியோர் வகுப்பினருக்கு என்று தனிப்பட்ட ஒரு இலாகாவை அமைத்து, அதை ஒரு அமைச்சரிடத்திலே பொறுப்பு கொடுத்து, அத்தனை பின் தங்கிய மக்களும் முன்னேறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதற்காகப் பாராட்டு கிறோம்.

இந்த பின் தங்கியோர் நலக்குழுவின் பரிந்துரைகளைப் பார்க்கிற நேரத்தில் என் கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த பிற்பட்டோர் வகுப்பில் 105 வகுப்பினர் சேர்க்கப்பட்டு இருந்தாலும், அதிலே செல்வாக்கு உள்ள ஒரு சிலர் தான் அந்த சலுகைகளைப் பெற முடிகிறது என்று அந்தக் குழுவின் அறிக்கையிலேயே கூறியிருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கையைக் கருத்திற்கொண்டு, அந்த பிற்பட்டோர் நலக்குழுவின் அறிக்கையில் இருக்கும் அத்தனை வகுப்பினருக்கும் சரிசமமான வாய்ப்பை இனியாவது நம்முடைய அரசு ஏற்படுத்தித் தந்து, அவர்கள் முன்னேறுவதற்கு வழி வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களைப்பற்றி பிற்பட்டோர் நலக் குழுவினால் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கை களை ஏற்றுக்கொண்டு பொற்கொல்லர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். பொற்கொல்லர்களை மிகவும் பிற்பட்டோர் வகுப்பில் சேர்த்து தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் அத்தனையும் கொடுத்து வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் களுக்குக் கடன்வசதி செய்து கொடுத்து, தாங்களாகவே சிறு தொழில்களை ஆரம்பிக்க வசதிசெய்து கொடுக்க வேண்டும் என்று பரிந்துரையில் சொல்லப் பட்டிருக்கிறது. அவற்றையும் ஆராய்ந்து. நல்ல வழிகளில் அவர்களுக்கு உதவிகள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தலைமைச் செயலகத்தில் பதவி உயர்வு கொடுப்பதில் பாக்வர்ட் கிளாஸ் என்ற ரொடேஷனில் கொடுக்கப்படுவதில்லை. அதற்கான வழிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தஞ்சை மாவட்டத்தில் அர்ச்சகர் வெள்ளாளர் என்ற வகுப்பினர் தாழ்த்தப்பட்ட சமுதாயமாக எந்தப் பட்டியலிலும் சேர்க்கப்பட வில்லை. அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். 5,000 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் இந்த பரிந்துரைப்படி பிற்பட்ட வகுப்பில் சேர்த்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த பிற்படுத்தப்பட்டவர்களுக்கெல்லாம் வசதிசெய்ய தொகைகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சமமாக சலுகைகள் கொடுக்க வேண்டும், பரிந்துரையில் இருப்பவற்றை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: மதிப்பிற்குரிய உப தலைவர் அவர்களே, இந்த பிற்பட்டோர் நலன் கருதி ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 4 கோடி, 41 லட்சம் சொச்சம். இது வரவேற்கும் அளவில் இருந்தாலும் இன்னும் பல துறைகளில் பிற்பட்ட மக்கள் கஷ்டப்படும் நிலையைப் பார்க்கிறோம். அந்த வகையில் பின்தங்கிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகள் குறைவாக இருக்கின்றன. போர்டிங் அண்ட் லாட்ஜிங் கிராண்ட் ரூ. 20 ஆக இருக்கிறது. அது மிகக் குறைவு. இந்த 20 ரூபாயை உயர்த்தி, எப்படியாகிலும் குறைந்த பட்சம் 30 ரூபாய் என்றாவது கொடுக்க வேண்டும். பின்தங்கியோர் நல ஆணைக் குழு பல சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அதில் தீர்மானங்கள் ஒன்றும் மூன்றும் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆனால், இரண்டாவது சிபாரிசு மிகவும் அவசியமானது—தனியார் கல்லூரிகளில் அவர்களுக்கு இடங்கள் கொடுக்கப்படும் முறையில் விதிமுறைகளை மாற்றி செயல்படுத்த வேண்டும் என்பது. இப்பொழுது இருக்கும் செயல் முறை நீக்கப்பட வேண்டும். அதை இந்த ஆண்டே செய்திருந்தால் இந்த 'அகாடமிக் இயரில்' நலமாக இருந்திருக்கும்; பல மாணவர்களுக்குத் தனியார்க் கல்லூரிகளில் சேர வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இனிமேலும் தாமதமின்றி அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த டி-நோடிபைட் ட்ரைப்ஸ் மாணவர்களுக்கு ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்டி லிருந்து ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. பாக்வர்ட் கம்யூனிடிக்கும் இந்தச் சலுகை கொடுக்கப்படவேண்டும். ஒதுக்கப்பட்டிருக்கும் 4 கோடி ரூபாய், டிஸ்பாரிடி இல்லாமல் எல்லோருக்கும் முறையாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். ஸ்காலர்ஷிப் கொடுப்பதில், பெற்றோர்களுடைய ஆண்டு வருவாய் ரூ. 2,000 என்று இருப்பது மிகக் குறைவு. இதில் மத்திய சர்க்காரும் ஒரு பங்கைக் கொடுக்கிறது. இந்த லிமிட்டை அதிகப்படுத்த வேண்டும். It will be laying the axe at the very root of the purpose we are thinking of— ஆகையினால், திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டதுபோல் இந்த வருமானத்தின் அளவை ரூ. 3,600 என்று உயர்த்த வேண்டும். ஆண்டுக்கு ரூ. 3,600 வருவானம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் இந்த சலுகை கொடுக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பாக்வர்ட் லிஸ்டைப் புதுப்பிக்க வேண்டும். இன்றைக்கு தமிழ் நாட்டில் எந்த வகையில் மக்கள் இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அதைப் புதுப்பிக்க வேண்டும். இது ஒரு ரெடி ரெக்கனராக இருப்பதால், காம்போஸிட் ஸ்டேட்டாக இருந்தபோது செய்யப்பட்டது. ஆகவே, இதைப் புதுப்பிக்க வேண்டும். முன்பு ரெட்டி (கஞ்சம்) என்று இருந்தார்கள். அவர்கள் பிற்பட்ட வகுப்பினராகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இன்றைக்கு அவர்கள் பட்டியலி லிருந்து நீக்கப்பட்டு விட்ட காரணத்தால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகை, அவர்களுக்குக் கொடுத்த பணத்தை வாபஸ் செய்ய வேண்டும் என்று அரசு கேட்பதாகத் தெரிகிறது. தயவுசெய்து அரசு அதை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களால் திருப்பிக் கொடுக்க இயலாது. For no fault of theirs அரசு கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்கப்படாது. அது நன்றாக இருக்காது. அதை வற்புறுத்த வேண்டாம் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைத் துறைகள் கட்ட 50 : 50 என்ற அளவில் கடனும் மானியமும் கொடுக்கத் திட்டம் இருக்கிறது. ஆனால் அது சரியாக இல்லை என்பதால், கடன் 25 என்றும், மானியம் 75 என்றும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சலவைத் தொழிலாளர்களை ஷெடுல்ட் பிரிவில் சேர்க்க வேண்டும் என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்களே. அதைப்பற்றி அம்மையாருடைய கருத்து என்ன? (திருமதி த. ந. அனந்தநாயகி: சண்டை மூட்டி விடுகிறீர்களா?)

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பாக்வர்ட் கம்யூனிடியிலேயே இருப்பது நலமாக இருக்கும். ஷெடூல்ட் வகுப்பில் சேர்ப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை கொடுக்கக் கூடிய சலுகையை நல்லபடியாகக் கொடுத்தால், எந்தப் பிரிவில் இருந்தால் என்ன? பாக்வர்ட் கம்யூனிடி நலக் குழுவின் ஸ்டாடிஸ்டிக்ஸ் பிரகாரம் பார்த்தால், இன்னும் அதிகப்படியாக backward community யில் சார்ந்தவர்களைச் சேர்க்க வாய்ப்பு இருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் மிகவும் பிற்பட்டவர்கள். அவர்களை ஷெடூல்ட் வகுப்பில் சேர்ப்பதிலும் தவறு இல்லை. அவர்களுக்கு 75 சதவிகிதம் மானியமாகக் கொடுத்து துறைகளை அமைக்க உதவி செய்ய வேண்டும்.

வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று இருக்கும் திட்டத்தை வரவேற்கிறேன். மானியம் ரூ. 900-ஐ 1,000 ஆகவும் ரூ. 300 கடனை ரூ. 200 ஆகவும் கொடுக்க வேண்டும். கல்வித் துறையிலும் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்ய வேண்டும். கடன் தொகையை அதிகமாக்கிவிட்டால், அவர்களுக்கு பின்னால் திருப்பி கொடுக்கமுடியவில்லை ஆதலால் மாவட்ட ஆட்சியாளர்கள் தொந்தரவு செய்கிறார்கள். பெற்றோர்களின் வருமான அளவை ரூ. 3,600 என்று உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. வெ. கரிவேங்கடம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பிற்பட்டநலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

1969-70-லே ரூ. 166 லட்சமாக இருந்த இந்தத் தொகை இன்று ரூ. 440 லட்சமாக உயர்ந்திருக்கிறது. எதிர்க் கட்சித் தரப்பிலிருக்கின்ற ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த அனந்தநாயகி அம்மையார் அவர்களும் டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும், இந்தத் துறையிலே பலனடைகின்ற மாணவர்களின் எண்ணிக்கை, செலவு செய்யப்படுகின்ற தொகை இவைகளையெல்லாம் குறிப்பிட்டு ஏகோபித்த பாராட்டுரைகளை எடுத்துச் சொல்லி, ஒரு சில குறைகளையும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

பிற்பட்ட நலத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு காலத்திலே இதற்காகத் தனி கவனம் செலுத்தி இவ்வளவு நன்மைகளைச் செய்ய முடியாத நிலைமை இருந்தது. 50 சதவிகிதம் அல்லது 55 சதவிகிதம் மார்க்குகளைப் பெற்றால்தான் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப், என்ற நிலைமையெல்லாம் இருந்தது. அதை மாற்றி 40 சதவிகிதத்திற்கு மேல் வாங்குகின்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ அத்தனை பேர்களுக்கும் ஸ்காலர்ஷிப் உண்டு என்ற நிலைமையும் டி-நோடிபைட் ட்ரைப்பைச் சேர்ந்த 6,000 மாணவர்களுக்கு இலவசமாக உணவு மற்றும் வசதிகளை ஏற்படுத்தித் தருகிற நிலைமையும் இன்று ஏற்பட்டிருக்கிறது. மேற்கொண்டு 50 மாணவர் இல்லங்களைத் திறப்பதற்குத் திட்டம் அரசினிடம் இருக்கிறது. ஆகவே, இந்த பிற்பட்டோர் நலத் துறையைப் பொறுத்தவரையில், எத்தனை பேர்கள்

பொருளாதாரத் துறையிலே பிற்போக்கான நிலையிலே இருக்கின்றார்களோ, அத்தனை பேர்களுக்கும் இந்தத் துறையில் சலுகைகள் வழங்கப்படக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே சமயத்தில், இந்தத் துறையினரால் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் —ஆறுவது பக்கத்தில் என்று கருதுகிறேன்—பார்வேட் கம்யூனிட்டி என்று சொல்லக் கூடிய முற்போக்கு மாணவர்களுக்குக் கூட மாணவர் இல்லங்களில் இடமளிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. டி-நோடிபைட் ட்ரைப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஹாஸ்டல்களிலே 100 பேர்களுக்கு 8 பேர்கள் என்ற விதத்தில் மாணவர்களை எடுத்துக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல பேக்வார்ட் கம்யூனிடி ஹாஸ்டலில் 10 சதவிகிதம் முற்போக்கு மாணவர்களை அனுமதிக்கிறார்கள். ஒரு காலத்தில் இருந்த அரசு, இப்படியெல்லாம் முற்போக்கு மாணவர்களுக்காகச் சலுகைகள் தர முன்வரவில்லை. இந்த அரசுதான் 5 சதவிகிதம், 10 சதவிகிதம் என்ற அளவுக்கு முற்போக்கு மாணவர்களுக்குக்கூட சலுகைகள் தர முன்வந்திருக்கிறார்கள். முற்போக்கு ஜாதியினர்களில் கூட பொருளாதாரத் துறையிலே மிக மிகப் பிற்போக்காக இருக்கின்றவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கும் ஓரளவுக்கு சலுகைகள் அளித்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இரண்டொரு குறைகளைக் கூற விரும்புகிறேன். பாலக்கோட்டிலே ஒரு பிற்பட்டமாணவர் இல்லம் ஒன்று உடனடியாகத் துவக்கப்பட வேண்டும் என்று பிற்பட்ட நலத் துறை அமைச்சரவர்களை கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மாரண்டஹள்ளியில் சின்னாறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அதில் ஏராளமான சலவைத் தொழிலாளர்கள் தொழில் செய்கிறார்கள். அவர்களுக்கு டோபிகானு கட்டித் தர வேண்டுமென்று அரசுக்குத் தீர்மானமொன்று அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அங்கே சலவைத் துறை ஒன்றினைக் கட்டித்தர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட வகுப்பினருக்கு மேன்மேலும் சலுகைகள் வழங்கி அவர்கள் முன்னேற வழிவகைகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம். நன்றி.

* திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, பிற்பட்ட நலத் துறை அமைச்சரவர்களால் இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று, நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இந்தப் பிற்பட்ட சமுதாய முன்னேற்றத்தின் அவசியத்தைப் பற்றி இந்த மாமன்றத்தில் பேசியவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்சொல்லி, அதற்குப் பிறகு இன்னின்னவற்றைச் செய்ய வேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், மற்றப் பிரச்னைகளைப் போலவே இந்தப் பிரச்னையிலும், நான் கூற விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அது என்னவென்றால், பிற்பட்ட சமுதாயத்தினருக்காக ஒரு அமைச்சரைத் தந்து. அந்த அமைச்சரிடம் ஒரு இலாகாவைத் தந்து, அந்த இலாகாவின்மீது இந்த விவாதம் இந்த மாமன்றத்திலே ஒரு நாள் வருவதற்கு யார் காரண கர்த்தாவாக இருந்தாரோ, யார் இந்தப் பிற்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு முன்வந்தாரோ, யார் இந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களைத் தூக்கி நிறுத்துவதற்கு ஓடோடி வந்து நாளும் மிக மிக மிக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்று கூறி, 'வாருங்கள்', 'வாருங்கள்' என்று அள்ளி அணைத்து, உச்சி முகந்து, கட்டி அணைத்தாரோ, அந்தப் பெருமகனுக்கு, மாபெரும் கலைஞருக்குத் தலை சாய்த்து அந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பாக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.





இன்றையதினம் அந்தக் கலைஞர் மட்டும் இல்லாவிட்டால், அந்த நாதியற்ற சமுதாயத்திற்கு வழிகாட்ட அவர்களைத் திரும்பிப் பார்ப்பதற்குக்கூட வகையற்ற நிலையில் அந்தச் சமுதாயம் தள்ளப்பட்டிருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், நதி என்றால் காவிரி. மன்னன் என்றால் சோழன். நாடு என்றால் சோழநாடு. இன்றைக்கு அந்த முறையிலே பிற்பட்ட சமுதாய மக்களின் இதய தெய்வம் என்று சொன்னால் அது நமது முதலமைச்சர் கலைஞர் அவர்களைத்தான் குறிக்கும் என்று மக்களெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (கையொலி) யாருக்குக் கண் இல்லை என்று சொல்லிக்கொண்டிருந்தோமோ, யாருடைய வாழ்க்கைகளெல்லாம் இருண்டு போய்விடும் என்று கவலைப்பட்டோமோ, அத்தகையோர் வாழ்விலெல்லாம் இன்றையதினம் ஒளிவிளக்காகக் கலைஞர் அவர்கள் இந்தச் சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்தால், இந்த ஒரு தலைமுறை மட்டுமல்ல, இன்னும் ஏழு, எட்டுத் தலைமுறையினர் பிற்பட்ட சமுதாயத்தினர் நமது கலைஞர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாக, நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இத்தகைய திட்டத்தை—பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நமது கலைஞர் அவர்கள் தந்த இந்தத் திட்டத்தைப் போன்று—எந்த மாநிலத்திலும் தந்ததில்லை, இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதில்லை என்ற பெருமை நமது கலைஞர் அவர்களையே சாரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், சூரியன் உள்ளளவும் என்றெல்லாம் இலக்கியத்தில் புலவர்கள் புகழ்வதைப்போலப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் கடைசி மனிதன் இருக்கும்வரை, அவன் உடம்பில் ஒரு சொட்டு ரத்தம் இருக்கும்வரை, உங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டவனாக இருப்பான் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வு உயர வேண்டுமென்ற சிறந்த நோக்கத்தோடு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த அறிக்கையின் உள்ளே நுழைந்து பார்த்தால், அதிலே மிகச் சிறந்த முறையில், அருமையாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. நான் இன்னும் சொல்வேன். இந்த அறிக்கை பிற்படுத்தப்பட்ட மக்களின் 'மாக்னா கார்டா' வாகும். அதாவது அவர்களின் உரிமைச் சாசனம் ஆகும். இதைப் புகழ்ந்து பேசிக்கொண்டே போனால் நேரம் போதாது. காழ்ப்பு உணர்வு, விருப்பு வெறுப்பற்ற முறையில் நடுநிலைமையாக, அந்தந்த நேரத்தில் வாதிட்டு, எதிர்வாதங்களுக்கு விடைகண்டு நியாயமானவற்றை ஏற்று, சிறந்த முறையில் இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கலைஞர் அவர்களைப்பற்றி நண்பர் ஆறுமுகம் அவர்கள் ஒன்று சொன்னார்கள். தனது

வந்து கையை முறித்துச் சிலை வைக்கிறேன் என்று சொன்னார்கள். என்னைக் கேட்டால், நான் சொல்லுவேன், அதுமட்டும் போதாது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் ஒவ்வொரு வீட்டிலும் மூத்த மகனின் வலக் கை எலும்புகளை யெல்லாம் முறித்து சிலைவைக்க வேண்டும் என்று சொல்வேன். அத்தகைய முறையிலே சிறப்பாக அமைந்திருக்கிறது இந்த அறிக்கை.

நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம் என்னவென்றால், எந்த மக்கள முன்னேற வேண்டுமென்று கருதி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறதோ, எந்தத் தாழ்த்தப்பட்ட குடிமகனின் வாழ்வு எதிர் காலத்தில் ஒளிமயமானதாக இருக்க வேண்டுமென்று இந்த அறிக்கை அமைக்கப்பட்டிருக்கிறதோ, அந்தச் சமுதாயம் சிறப்புறுகின்ற வகையில் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்திச் செயலாற்றி நடத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருபுறத்திலே வசதி படைத்தவர்கள் முன்னேறிக்கொண்டு போகிறார்கள். மறு பக்கத்திலே பிற்படுத்தப்பட்ட மக்கள் நசுக்கப்பட்டுக்கொண்டே போகிறார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று இந்த அறிக்கை எடுத்துக் காட்டியிருப்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை இன்னும் சற்று ஆழ்ந்து பார்க்கும் போது மருத்துவக் கல்லூரிகளிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென்று 35 சத விகிதம் என்று கூறுகிறார்கள். மற்றொரு பகுதியிலே .9 சதவிகிதம் ஆகத்தான் இருக்கிறது. இந்தக் குறைகளையெல்லாம் கருத்திற்கொண்டு அவற்றையெல்லாம் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பிற்பட்டோர் நலக் குழு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே நீங்கள் எதையெதைச் செய்யப்போகிறீர்கள், எதையெதை விட்டுவிடப் போகிறீர்கள் என்பதை எங்களுக்கு முன்கூட்டியே சொன்னால், அதையெல்லாம் பரிசீலித்து விவாதிக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

இந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் 105 சாதிகள் இருக்கின்றன. அதில் பல வகுப்பினர் இந்த பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் சலுகைகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு ஏற்கெனவே முன்னேறிவிட்டனர். முன்னேறிக் கொண்டு இருக்கின்றனர். அப்படிச் சில வகுப்பினர் பின்னேற்றத்திலிருந்து முன்னேறுவதும், சில வகுப்பினர் பின்னோக்கிப் போவதும் சமதர்ம சமுதாயம் அமைய வழிகோலாது என்கிறேன். ஆகையினாலேதான் கலேல்கர், கமிட்டியும்சரி, சட்டநாதன் கமிட்டியும்சரி, இந்த பிற்பட்ட சமுதாயத்தை இரு பிரிவாகப் பிரித்துள்ளனர். அதாவது 'Backward and Most Backward' என்று. நான் முதலமைச்சரை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வேன், இந்த மிகப் பிற்பட்ட சமுதாயத்தில் 80 வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் அன்றும், இன்றும், என்றும் அதே நிலையில் இருக்கின்றனர்.

ஒரு புறத்தில் மேட்டுக் குடியினர் மேல் தட்டில் உள்ளதால் ஏற்கெனவே முன்னேறியுள்ளனர். மறுபுறத்தில், தாழ்த்தப்பட்ட குடிமக்கள், அவர்களுக்கென்று இருக்கின்ற தனிச்சலுகையைப் பயன்படுத்தி ஒருவகையில் முன்னேறுகின்றனர். இடையில் எவ்வழியும் இன்றி இடப்பட்டு இருக்கின்றவர் இந்த மிகமிகப் பின்தங்கிய வகுப்பினர்தான் என்பதை நான் மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்வேன். ஆகையினால், நான் முதலமைச்சரை



மன்றாடிக் கேட்டுக் கொள்வேன்—மிகப் பின்தங்கிய மக்களின் சார்பாக—அருள் கூர்ந்து இந்த சட்டநாதன் அறிக்கையில் கூறியிருப்பதைக் கூட்டாமல் குறைக்காமல் அப்படியே அமல்படுத்த வேண்டுகிறேன்.

அப்படி அமல்படுத்திவிடுவீர்களானால், கலைஞர் அவர்களே, எங்கள் குருட்டுக் கண்களுக்கு ஒளி தந்தவரே! எங்கள் கூனை நிமிர்த்தியவரே! எங்கள் குலம் காத்த குலத்தெய்வமே! குடி காத்த எங்கள் குலக் கொழுந்தே! என்றெல்லாம் இந்த மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் தங்களை வாழ்த்துவார்கள். நாய்போல் நன்றி காட்டுவார்கள்.

அப்படி இதை அமல்படுத்துகின்ற நேரத்தில் இது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதாக இருக்கும் என்று சிலர் கூறியதாகக் கேள்விப் பட்டேன். அதற்கு, அந்த அறிக்கையிலேயே, 130-வது பக்கத்தில், 188-வது பாராவிலே அதற்கான விளக்கம் தந்திருக்கிறார். நானும் எனக்குத் தெரிந்த சட்ட நிபுணர்களையெல்லாம் அணுகி இதைப்பற்றிச் சொன்னபோது, இதில் ஏதும் அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாக இருப்பதாகத் தெரியவில்லை என்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். அப்படியே ஏதேனும் முரண்பாடு வருமென்றாலும் உங்கள் பின்னாலே கோடானுகோடிப் பேர்கள் இருக்கிறார்கள். அதற்காக சுப்ரீம் கோர்ட்டையே சந்திக்க வேண்டுமானாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையில், பிற்பட்ட நல சமுதாயத்தினர் நல்வாழ்வு வாழ வழிவகைகள் வகுத்துத் தந்த எங்கள் கலைஞருக்கு நாங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம் என்று கூறி, இந்த அறிக்கையை அமல் நடத்துங்கள் என்று கூறி, விடைபெறுகிறேன், வணக்கம் (பாராட்டொலி).

* திரு. கோவை செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பின்தங்கிய நலத்துறை மானியத்தை வரவேற்கிற வகையில் இரண்டொரு கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பட்ட வகுப்பினருக்காக ஒரு இலாகாவையும் அதற்கென ஒரு அமைச்சரையும் நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் வேறு எந்த மாநில அரசும் செய்யாத ஒரு காரியத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நாடு கடமைப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1949-ம் ஆண்டு ஒரு லட்ச ரூபாயில் ஆரம்பித்து இன்றைக்கு ரூ. 334 லட்சத்துக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்குப் பணம் ஒதுக்கப்பட்டது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

தமிழகத்தின் பெரும்பான்மையான சமுதாயம் நம்முடைய முதல்வரைப் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்ளுகிறேன். அதேபோல் வேலை வாய்ப்புகளில் 25 விழுக்காடு என்பதை மாற்றி 31 விழுக்காடாக உயர்த்தியிருக்கிறது. இதுவும் நம்முடைய முதல்வர் அவர்கள் செய்து தந்திருக்கிறார்கள். இதற்கும் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆனால் அதே நேரத்தில், நம்முடைய முதல்வருக்கும் பின்தங்கிய நலத் துறை அமைச்சருக்கும் ஒரு சிறு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். என்னைத் தேர்ந்தெடுத்த தொகுதியும் கோவை மாவட்டமும் ஏறத்தாழ

[illegible] கொங்கு வேளாள கவுண்டர்கள் அதிகமாக உள்ள பகுதியாகும். இந்தக் குறிப்பிட்ட சமுதாயம் இன்றைக்கு ஏறத்தாழ 35 லட்சம் மக்களைக் கொண்டிருக்கிறது. சேலம், திருச்சி, மதுரை மாவட்டத்திலும் இன்றைக்கு இவர்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்கள். 100-க்கு 95 பேர் இந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் கூலி வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். யாரோ சிலர் குறிப்பாக இரண்டொருவர் மட்டும்தான் இந்தச் சமுதாயத்தில் முன்னேறி இருக்கிறார்கள். அவர்களை வைத்து இந்தச் சமுதாயத்தைக் கணக்குப் போடக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இது வரையிலும் ஒரே ஒரு ஐ.எ.எஸ். ஆபிசரும் அதேபோல் ஒரு ஐ.பி.எஸ் ஆபீசரும் வந்து இருக்கிறார்கள். அந்த அளவுக்குத்தான் இந்தச் சமுதாயம் தர முடிந்திருக்கிறது. ஆகவே இந்தச் சமுதாயத்தைப்பற்றி 'எட்கார்தாஸ்டன், கேஸ்ட் அண்டு டிரைப்ஸ் ஆப் சவுத் இண்டியா, என்ற புத்தகத்தில் ஒரு குறிப்பு எழுதி இருக்கிறார். அதைமட்டும் இங்கு வாசிக்க அனுமதி கோருகிறேன்.

Edgar Thurston—Castes and Tribes of Southern India

"For the following note on the Konga Vellalas of the Coimbatore and Trichonopoly districts, I am indebted to Mr. F. R. Hemingway. They seem to have little in common with the other vellalas, except their name, and appeal to hold a lower position in society, for Reddis will not eat with them, and they will dine with Tottiyans and others of the lower non-Brahman castes. They live in compact communities, generally in hamlets. Their dwellings are thatched huts, containing only one room. They are cultivators, but not well off."

என்று ஆராய்ச்சி செய்து இந்த இனத்தைப் பற்றி எழுதி இருக்கிறார். அப்பேர்ப்பட்ட தாழ்ந்த இனத்தைத் தயவு செய்து நீங்கள் பிற்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டு மென்று முதல்வர் அவர்களையும் பின்தங்கிய நலத் துறை அமைச்சர் அவர்களையும் மன்றாடி கேட்டுக் கொள்கிறேன். அன்று அமைக்கப் பட்ட கமிஷன் அறிக்கையில்,

"It must be stated that no representation was made by any recognised organisation on behalf of this caste from the districts of Salem and Coimbatore where they are found to be in large numbers."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் ரிப்போட்டில் முன்னுக்குப் பின்னாக அந்தக் கமிட்டியில் உள்ளவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். வால்யூம் எண். 1, பக்கம் 2-ல் அவர்கள் குறிப்பிட்டிருப்பது-1953 காகா கலேல்கார் கமிஷனுக்கு மட்டும்தான் அந்த உரிமை இருக்கிறது, இது ஏற்கனவே இருக்கிறவர்களுக்கு என்ன சலுகை தரலாம் என்பதை மட்டும்தான் கமிஷன் விளக்கும், புதிதாகச் சேர்ப்பதற்கு அதிகாரம் இல்லை என்று ரிப்போர்டில் குறிப்பிட்ட காரணத்தால் யாரும் அந்தக் கமிஷனில் போய்க்குறை சொல்லவில்லை. அப்படியிருந்தாலும்கூட, குறையை எடுத்து விளக்கிச்சொல்லுகிற அளவுக்கு இந்தச் சமுதாயத்தில் அதிகப்படியாக யாரும் இல்லையென்ற காரணத்தை வைத்து எப்படியாவது பின்தங்கிய வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமருகிறேன்.



* திரு. தொ. ப. சீனிவாசன்: துணைத் தலைவரவர்களே, இந்த பின் தங்கிய வகுப்பினர் நல மானியத்தின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்குப் பணிவன்பான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த மானியத்தை வரவேற்பதற்கு முன்பு, என்னைப் போன்ற ஒரு சாதாரண ஏழை எளிய பின்தங்கியவர்கள், மன்றத்தில் வரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த நமது கழகத் தலைவர் தமிழக முதல்வருக்கும் நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். காரணம், இந்த மன்றத்தில் தமிழ் நாட்டிலே பொதுவாக உள்நாட்டு மீனவர்கள் சார்பில் யாரும், ஒரு நபரும் வந்ததாக வரலாறு கிடையாது. மிகமிகப் பின்தங்கிய உள்நாட்டு மீனவர்கள் இந்த மன்றத்துக்கு வருவதற்கு நல்ல சூழ்நிலையை உருவாக்கித்தந்த முதல்வர் அவர்களை உள்நாட்டு மீனவர்கள் சார்பாக நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் சட்டநாதன் குழு தமிழகத்தைச் சுற்றி வருகிற நேரத்தில், போளூர் தொகுதிக்கு வந்தார்கள். ஒவ்வொரு பிரிவினரையும் கூப்பிட்டுக் கேட்டநேரத்தில், அங்குள்ள குறவர்களும் ஒட்டர்களும் ஏனையோர்களும் மிக உற்சாகத்தோடு எதிர்காலத்தில் நமக்குச் சிறப்பான வாழ்வு வரப்போகிறது என்ற எண்ணத்தில், அணி அணியாக வந்து சட்டநாதன் குழுவிடம் குறைப் பாடுகளைச் சொன்னார்கள். அதற்கேற்ப அவர்களும் அறிக்கை தந்திருக்கிறார்கள்.

மதிப்பிற்குரிய துரைமுருகன் கூறியதுபோல் அறிக்கையில் கண்டதுபோல் முதலமைச்சர் செயல்படுத்தியது நீண்ட நெடுங்காலத்திற்குத் திகழும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், மீனவர்களைப் பார்த்தால் தமிழ்நாட்டில் கடலோரத்தில் பரதவர்கள் என்றும், மீனவர்கள் என்றும் பலதரப்பட்ட பிரிவினர் இருக்கின்றனர். உள்நாட்டு மீனவர்களில் பர்வத ராஜகுலம் என்று ஒரு பிரிவு இருக்கிறது. உள்நாட்டு மீனவர்களுக்கு ஓரளவு வழிவகை செய்யவேண்டும். குறிப்பாகச் சட்டத்தில் மீனவர்கள் வீடு கட்டுவதற்கு ரூ. 700 மானியமும் மீதித் தொகையைக் கடனாகவும் கொடுக்கிறார்கள். சட்டத்தில் ஒரு சிக்கல் இருக்கிறது. இயக்குநரிடம் சொன்னேன். வீடுகள் கட்டுவதில் ஒதுக்குப்புறத்தில் ஓரமாகக் கட்டினால்தான் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். உள்நாட்டு மீனவர்கள் ஊர் மத்தியில் மனை சொந்தமாக இருந்தால் பொருந்தும். தனியாக இருந்தாலும் அந்த இடத்தை அதிகாரிகள் வந்து பார்த்தால்தான் பொருந்தும் என்கிறார்கள். அங்கு அவர்கள் இடம் கொடுத்து வீடுகள் கட்டிக் கொள்ள வழிவகை செய்தால் ஏழைகளுக்கு வசதியாக இருக்குமென்று சொல்லிக் கொள்வதோடு மீனவர்கள் சமுதாயத்தில் எந்தப் பகுதியில் எடுத்துக் கொண்டாலும் ஒரு பட்டதாரி வரை உயர்ந்த நிலை கிடையாது. அரசியலில் ஒருவன் வந்திருக்கிறேன் என்று சொன்னால் தமிழ் நாடு பூராவும் ஒரே பிள்ளையாக வந்திருக்கிறேன். தமிழ்நாட்டு மீனவர்கள் சார்பாகப் பாராட்டிக் கூறிக்கொண்டு என்தொகுதியில் மலைஜாதி மக்கள் 30,000 பேர்கள் இருக்கிறார்கள். அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கலைஞர் அவர்கள், நான் என் உயிரைப் பணயம் வைத்துச் சொல்லுகிறேன், பின் தங்கிய வகுப்பினரின் நலன்கள் பாதிக்கப்படாது என்று

சொன்னார்களே, அப்போதே இந்த சபை மட்டுமல்ல, மாநிலத்தில் உள்ள அத்தனை மக்களும் பின்தங்கிய வகுப்பினர் முழு நம்பிக்கை வைத்து நம் நலன்கள் பாதுகாக்கப்படும், நாம் முன்னேறப் பல சந்தர்ப்பங்கள் எடுத்துச் செயல் படுத்தப்படும் என்ற நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த ரீதியில் இந்த அறிக்கை பின்தங்கிய வகுப்பினருக்கு அநேக வகைகளில் நன்மை செய்யக் கூடியதாக இருக்கிறது. சுருக்கமாகப் பேசவேண்டியிருப்பதால் ஒரு சில விஷயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தப் பின்தங்கிய வகுப்புகளில் நான்கு பிரிவினர் செங்குந்தர், தேவாங்கர், சௌராஷ்டிரர், சாலியர் என்று சொல்லக்கூடியவர்கள்—நெசவுத்தொழிலேயே ஈடுபட்டிருப்பவர்கள்—அவர்களுடைய தினசரி வருமானம் நாள் ஒன்றுக்கு 2½ ரூபாய்க்கு மேல் இல்லை. 2½ ரூபாய் தினசரி வருமானத்தில் அவர்கள் என்ன செய்ய முடியும்? இந்த நெசவாளர்களுக்கு அதிகச் சலுகை காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்—இந்தச் சமுதாயத்தில் இருந்து யாரும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரியாக வந்ததில்லை. அப்படி இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வருவதற்கும் வழிவகை ஏற்படுத்தப்படவேண்டுமென்டு கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இருந்து 2 நாட்களுக்குமுன் ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு சலவைத் தொழிலாளி தொழில் செய்வதற்கு பிற்பட்ட நலத்துறை கருவிகள் வழங்குகிறது என்று கேள்விப்பட்டு விண்ணப்பம் செய்தாராம். அவர் கிறிஸ்துவர் என்ற காரணத்திற்காக "உனக்குத் தொழில் கருவி கொடுக்கப்படமாட்டாது" என்பதாகப் பதிலளித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், மதத்தை அடிப்படையாக வைக்காது, சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றவேண்டும். எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஒருவர் மதம் மாறினார் என்றவுடனேயே பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் பெரிய ஏற்றம் பெற்றுவிட்டார் என்று சொல்ல முடியாது. சாதிக்கு மதிப்பளிக்காது, அவரவர்கள் செய்கிற தொழிலுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று எஸ்.எஸ்.எல்.ஸி. புத்தகத்தில் எந்த மதம், எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று போடும்படி முதல் பக்கத்தில் இருக்கிறது. அதில்

Scheduled caste, scheduled tribe, most backward class, convert to Christianity from scheduled caste, if so, pupil himself or herself is a convert or not, or other backward class.

என்பதாகக் குறிப்பிடப்பட்டு—அதற்கு நேரே, ஆம் அல்லது இல்லை என்று போடுகிற வழக்கம்தான் இருக்கிறது. இந்தமாதிரிப் போட்டுவிடுவதால் பின்னால் பலவிதமான குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதனால் அந்த மாணவனுடைய இனத்தைக் குறிப்பிட்டு எழுதவேண்டும் என்பதாக எல்லாத் தலைமை ஆசிரியர்களுக்கும் ஒரு ஆணை பிறப்பிக்கவேண்டுகிறேன்.

தமிழ்நாடு பிற்பட்ட நலக்குழு அறிக்கையைப் படித்தால் அதைத் தயாரித்த உறுப்பினர்களும் மாறுபட்ட கருத்துடையவர்களாகவே இருந்திருப்பதைப் பார்க்கிறோம். அதன் தலைவர், தான் சார்ந்த இனத்தைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்து விட்டத்தைப்போலக் காணப்படுகிறது. பல இனங்களைப்





பற்றிய புள்ளிவிவரங்கள் சரியாக இல்லை. அதை அப்படியே ஏற்றுக்கொள்ளாது நல்லதை எடுத்துக்கொண்டு அதில் உள்ள குறைகளை எல்லாம் களைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டாகவேண்டும்.

நான் முன்னே குறிப்பிட்டதைப்போல, மதத்தை அடிப்படையாக வைத்து இந்தப் பிரச்சினையைப் பார்க்கக் கூடாது. எங்கள் பகுதியில் சால்வேஷன் ஆர்மி என்று ஒரு இனம், இன்னும் எல்.ஐ.பு.வி., வி.எல்.ஐ. என்றெல்லாம் இருக்கிறார்கள். லாதின் கத்தோலிக், ரோமன் கத்தோலிக்--இவை எல்லாம் ஒரே இனம். அவர்களிடம் சாதியைக் கேட்டால் பள்ளர், சாம்பவர் என்று தான் சொல்வார்கள். ஆகவே கிறிஸ்துவர்களாக மாறிவிட்டார்கள் என்று கருதாது அவர்கள் நிலையைக் கருதி மதப் பாகுபாடின்றி—தாழ்த்தப்பட்ட அந்தச் சமூகத்தைச் சேர்ந்த எல்லோரையும் ஒரே இனத்தில் கொள்ளவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பின்தங்கியோர் நல மானியத்தின் மீது ஏறக்குறைய இருபது மாண்புமிகு உறுப்பினர்கள்—பல்வேறு கட்சியைச் சார்ந்தவர்கள்—பலதரப்பட்ட கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் அத்தனை பேர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியத்தின் கீழ் பேசிய உறுப்பினர்களில் ஒருவர் கூட இந்தப் பட்டியல் தேவையில்லையென்றோ, பிற்பட்டோர் நல இலாக்கா தேவையில்லை என்றோ குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக இப்படிப்பட்ட ஒரு இலாக்காவை உருவாக்கித் தந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டிப் பேசியதை நாம் அனைவருமே செவிமடுத்தோம்.

இந்த பின்தங்கியோர் நல இலாக்கா மானியத்தின் மீது முதலில் பேசிய அம்மையார் அவர்கள் பொருளாதாரத் துறையில் பிற்பட்ட நிலையில் உள்ள வேறு சில வகுப்பினரையும் சேர்க்க வேண்டும் என்று ஆரம்பித்தார்கள். பின் தங்கியோர் பட்டியலில் ஏறக்குறைய நூறு சாதிகள் வரை இருக்கின்றன. அந்த நூறு சாதியினரையும் நாம் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் இந்தப் பின்தங்கியோர் நல இலாக்காவினர் பணியாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறதென்பதை நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

நம்முடைய அரசியல் அமைப்பு 15-வது பிரிவு—4 வது உட்பிரிவில்

" Nothing in this article or in clause (2) of article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the Scheduled Castes and the Scheduled Tribes."

என்பதாக மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எஜுகேஷனலி பாக்வர்ட்', 'சோஷலி பார்வர்ட்' என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, பொருளாதாரத் துறையில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் என்பதாகக் குறிப்பிடவில்லை. இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கித்தந்த டாக்டர் அம்பேத்கார் போன்ற உறுப்பினர்கள் பெயர்கள் எல்லாம் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். அவர்களே அன்றையதினம் சமுதாயத்தில் பின்தங்கியோர் பட்டியலை உருவாக்குகிறபோது—பலவற்றையும் எண்ணிக்

[திரு. க. இராசாராம்] [1971 ஜூலை 15

சிந்தித்து அமைக்கிற நேரத்தில்—'பொருளாதார அடிப்படையில்' என்பதை நீக்கியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபைக்குத் துணைத்தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பொருளாதாரத்தின் அடிப்படையில்' என்று நாம் போவோமானால் அதற்கு வேறுபல கோணங்களில் நாம் விவாதங்களை வளர்த்துக்கொண்டு போய் ஆகவேண்டும். திருமதி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தான் சார்ந்திருக்கிற மயிலாப்பூர் தொகுதியைப் பார்க்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதைக்கூட சட்டநாதன் குழு ஆராய்ச்சி செய்திருக்கிறது. அதைப்பற்றியும் அவர்களே நன்றாக எடுத்து விளக்கியிருக்கிறார்கள். உயர்ந்த சாதிக்காரர் வறுமையைச் சொல்கிறபோது—உயர்ந்த சாதிக்காரருடைய வறுமை தனிப்பட்டவர்களுக்கு இருக்கலாமே தவிர அந்த சாதியை வறுமை சாதியாகச் சொல்ல முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு என் பேச்சைத் தொடங்கும் முன் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று கருதினேன். பிற்பட்டோர் நலனுக்காக தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திரு. ஆ. நா. சட்டநாதன், திரு. கு. சின்னப்பன், திரு மு அ ஜமால் மைதீன் ஆகிய மூவரையும் ஒரு குழுவாக அமைத்து அந்தக் குழுவினர் தயாரித்து அளித்துள்ள அறிக்கையைப் பலபேர் பார்த்திருக்கிறீர்கள். அந்த அறிக்கை ஒரு நல்ல இலக்கியமாகவே அமைந்திருப்பதையும் பார்க்க முடியும். அறிக்கை மிக விளக்கமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் வறுமையைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் "தனிப்பட்ட ஒரு சாதிக்கே வறுமை இருக்கிறது" என்று சொல்ல முடியாது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அதில் பாகங்கள் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

டெல்லியில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அந்த மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் தலைமை வகித்துப் பேசினார்கள். அவர்கள் எடுத்த எடுப்பில், இந்தியாவில் உள்ள எல்லாச் சாதிக்காரர்களும் இன்றையதினம் தங்களைப் பிற்பட்ட வகுப்பில் சேர்க்க விரும்புகிறார்கள் என்றார். அதைப் போல இன்றையதினம் பல சாதிக்காரர்கள் தங்கள் சாதிகளைப் பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோருகிறபோது—நாம் நிதிநிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பின்தங்கியோர் இலாக்கா உருவாவதற்கு முன்பு, இது சம்பந்தமாக நடைபெற்ற வழக்குகளில் கூட, ஹைக்கோர்ட் அரசியல் அமைப்பு 15-வது பிரிவின்படி தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

பிற்பட்ட சாதிகளின் பட்டியலில் உள்ளவர்களும்கூட இந்த நாட்டுப் பிரஜைகளேதான். அரசியல் அமைப்புச் சட்டப்படி தங்கள் பட்டியலில் உள்ள பிற்பட்ட வகுப்பினர்களுக்குத் தேவையெனக் கருதப்பெறும் உதவிகளைச் செய்து கொடுப்பதற்கு அதிகாரங்கள் இருக்கின்றன என்றே அந்தத் தீர்ப்பில் கூறியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் பின்தங்கியோர் பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலேயும், சுதந்திரம் அடைந்து 24 ஆண்டுகளுக்குப் பிறகுதான் பின்தங்கியோருக்கு என்று ஒரு இலாகா, பின்தங்கியோருக்கு என்று ஒரு அமைச்சர் என்ற நிலைகள் எல்லாம் உருவாக்கப்பட்டு, பின்தங்கியோர் நலன்களைப் பாதுகாக்கின்ற முறையிலே இந்த மன்றத்திலே இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1971 ஜூலை 15] [திரு. க. இராசாராம்]

இந்த இடம் யாரால் அளிக்கப்பட்டது என்பதை நண்பர்களும், எதிர்க் கட்சிக்காரர்களும் அறிவார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் இதிலே தனி அக்கறை காட்டிய காரணத்தினால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பின்தங்கிய சமுதாயத்திற்கு நாம் எவ்வளவுதூரம் நன்மைகளைச் செய்திருக்கிறோம், மேலும் என்ன என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் நன்கு சீர்தூக்கிப் பார்க்கும்படி அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நண்பர் திரு. எட்மண்ட் அவர்களும், நண்பர்களும் கருத்துக்களை எடுத்துகூறிய நேரத்தில், குறிப்பாக கிறிஸ்துவ சமுதாயத்தை பின்தங்கிய சமுதாயமாக பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். கிறிஸ்துவ மதத்திலே உள்ளவர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பிலே உள்ளவர்கள், மதம் மாறியவர்கள் எல்லோரையும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அதிலேயும் அரசு தனி அக்கறை செலுத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்தில் இருக்கிற நிலைமைகளையெல்லாம் பரிசீலித்துப் பார்த்த பிறகுதான் அரசு எந்த முடிவையும் எடுக்க முடியும். இப்போதே ஒரு முடிவுக்கு வருவது என்பது கடினமான காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் சட்டநாதன் குழுவிலே மிக விளக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. 'ஏற்கெனவே இருக்கிற காரியங்கள் சரியாகச் செய்யப்படுகிறதா என்பதைப் பார்ப்பதற்கும், மேலும் பரிந்துரைகளைச் செய்வதற்காகவும்தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது' என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கலேல்கார் குழு என்ற ஒன்றை மத்திய சர்க்கார் போட்டது. கலேல்கார் குழுவின் அறிக்கைகளின்படி மத்திய அரசு நடைமுறையில் செய்ததா என்றால், இல்லை. அப்போதிருந்த மாநில அரசாவது அதைச் செய்ததா என்றால், இல்லை. ஆனால் இன்றையதினம் அம்மையார் அவர்களும், திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களும், ஷெட்யூல்ட் வகுப்பில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுடைய பேச்சை கலைஞர் அவர்கள் ரிக்கார்டிலே பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். கலேல்கார் குழுவின் அறிக்கை மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றுகின்ற அளவில் எந்தக் காரியமும் நடைபெறவில்லை.

பின்தங்கிய வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்று பல நண்பர்கள் குறிப்பிட்டார்கள். நண்பர் திரு. துரை முருகன் போன்ற நண்பர்களும் பின்தங்கிய மக்களுக்கு கல்லூரிகளில், பள்ளிகளில் அதிலும் மிகமிகப் பின்தங்கிய மக்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பின்தங்கியோர் பட்டியலை எடுத்து வைத்துக் கொண்டு வரிசையாகப் பார்த்தால், ஏறக்குறைய 53.5 சதவீதத்திற்கு மேல் போகும் போல் இருக்கிறது. ஆனால் அந்த அளவிற்குச் சலுகைகளும் மற்றவைகளும் உருவாக்க முடியுமா? சுப்ரீம் கோர்ட் நீதிபதி அளித்த தீர்ப்பின்படி 50 சதவீதத்திற்கு மேல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் தருவது இயலாது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவிற்கு நம்மால் செய்வதற்கு நம்மிடம் வழியும் இல்லை, வகையும் இல்லை. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு நம் முன்னால் இருக்கிறது.

பின்தங்கிய மக்களின் நல இலாகா ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம், பின்தங்கிய மக்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதேயாகும். முற்போக்கு சமுதாயம், பிற்போக்கு சமுதாயம் என்று இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் பின்தங்கியோரை முற்போக்கு சமுதாயமாக ஆக்க முயன்று வருகிறோம். இரண்டு சமுதாயமும் இணைந்து ஒரே சமுதாயமாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதாக அமைய வேண்டுமென்பதுதான் நமது நோக்கம். இந்த இலாகா எஃறென்றைக்கும் இருக்கும், அதற்கென்று ஒரு அமைச்சர் இருப்பார் என்று யாரும் தயவுசெய்து நினைக்க வேண்டாம். பின்தங்கியோர் என்றைக்கும் பின்தங்கியோராக இருக்கக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி நிறுவனங்களில் சலுகைகள் அளிப்பது பின்தங்கியோருக்கு மட்டு மல்ல, நமது கலைஞர் அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு மேல் ஜாதி, கீழ் ஜாதி—எந்த ஜாதியானாலும், பொருளாதாரத்திலே வளமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்கள் அத்தனை பேருக்கும், பி.யு.சி. வரை இலவசக் கல்வி அளிக்கப்பட்டிருக்கிறது. கல்வி நிறுவனங்களில் பின்தங்கி யோருக்கான இட ஒதுக்கீடுகள் பற்றி நண்பர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். நமது கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் எல்லாக் கல்லூரிகளுக்கும் தனியாக சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் 25 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாகவும், அரிசனங்களுக்காக ஒதுக்கப்படும் இடங்கள் 16 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள். இது சாதாரணமான சாதனை அல்ல என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு பெரிய சாதனைகளை இந்த இலாகா செய்திருக்கிறது. இந்த மாநிலத்தில் மட்டுமல்ல; இந்த ஆணைக்குழுவினுடைய பரிந்துரைகளைப் பார்த்து ஆந்திர மாநிலத்திலுள்ள மக்களே பாராட்டுகிறார்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதை நீங்கள் அறிவீர்கள். அந்த அளவிற்குக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதையெல்லாம் நாம் பயன்படுத்திக் கொண்டு நாம் முன்னேற வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முஸ்லீம் சமுதாயத்தைப்பற்றிச் சொன்னார்கள். அவர் களுடைய மொத்த மக்கள் தொகை 18,54,425 ஆகும். அவர்களுக்குள்ளே கருத்து வேறுபாடுகள் பல இருக்கலாம். இவற்றையெல்லாம் ஆணைக் குழுவின் பரிந்துரைகளைப் படித்தால் தெரியும். 'லப்பைகள்' என்று சொல்லப்படுபவர் கள் 6,53,639 பேர்கள் இருப்பதாகத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. கல்விச் சலுகையைப் பொறுத்தவரையில் சட்டநாதன் குழு ஒரு விளக்கம் செய்திருக்கிறார்கள். முஸ்லீம் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் கல்விச் சலுகைகளைப் பொறுத்தவரையில் அநேகமாக எல்லோரும் 'லப்பை' என்று எழுதுகிறார்கள் என்பதாக எழுதியிருக்கிறார். இந்தக் கருத்தையும் நண்பர் திரு. வகாப் அவர்கள் முன்னிலையில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு அவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

நண்பர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிற நேரத்தில், பொருளாதார வசதியுள்ளவர்களுக்கு சலுகைகள் எதற்கு? அதை நீக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் இதற்குப் பல



நடவைகளில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பொருளாதாரத் துறையில் சிலர் முன்னேறுகிறார்கள் என்றால் அந்தச் சமுதாயமே முன்னேறியிருக்கிறது என்பது பொருள் அல்ல. சிலர் முன்னேறியிருக்கலாம். அந்தச் சமுதாயம் முன்னேறியிருக்கிறதா என்றால் இல்லை. பின்தங்கிய வகுப்புக்கு என்பதில், அரசியல் சட்டத்தில் நீங்கள் எங்கே பார்த்தாலும் ஜாதி என்ற சொல்லைப் புகுத்தாமல் இருக்கிறார்கள். ஜாதி என்று போட்டால் ஒரு காலத் தில் உணர்ச்சி வந்து, கொந்தளிப்பு வந்து நாட்டிலே குழப்பம் ஏற்படும் என்ற அடிப்படையில் ஜாதி என்ற சொல்லையே மிக அழகாக நீக்கியிருக்கிறார்கள். 'வீக்கர் செக்ஷன்' என்று போட்டிருக்கிறார்களே தவிர,' 'காஸ்ட்' என்று எங்கேயும் போடவில்லை.

ஆனால் ஷெட்யூல்ட் காஸ்ட் ஷெட்யூலை மட்டும் சேர்த்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தைத் துருவி துருவிப் பார்த்தாலும் அந்த ஒன்றுதான் கிடைக்கும். பின்தங்கிய வகுப்பினரைப்பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்திலே அரசியல் சட்டத்தினுடைய 15-வது பிரிவு, நான்காவது உட்பிரிவின்கீழ்தான் நாம் நிற்கிறோம். சமூக நிலையின் அடிப்படையிலும் கல்வியின் அடிப்படை யிலும்தான் பின்தங்கியவர்கள் என்ற நிலை வருகிறதே தவிர, பொருளா தாரத்தை அடிப்படையாக வைத்து அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெள்ளத் தெளிவாக உணர்த்திக்கொள்ள விரும்புகிறேன்.

பல உறுப்பினர்கள் பேசிய நேரத்தில் எங்கள் இனத்திலே ஒரு ஐ.பி.எஸ். ஆபீஸர்கூட இல்லை, எங்கள் இனத்திலே ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸர்கூட இல்லை, எங்கள் இனத்திலே ஒரு டெபுடி கலெக்டர் கூட இல்லை என்று அங்கலாய்த்துக் கொண்டு பேசியதைப் பார்த்திருப்பீர்கள். இந்த மன்றத்திலே இன்னும் பலர் பேசியிருந்தால் அப்படிப்பட்ட நிலைமை இன்னும் இருந்திருக்கும். இந்தப் பின்னணியிலே பின்தங்கிய வகுப்பினர்க்கு செய்யவேண்டிய பல காரியங்களை நம்முடைய அரசு செய்துகொண்டுதான் வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காக நியமிக்கப்பட்ட சட்டநாதன் குழுவினர் போன இடங்களில் எல்லாம் பல சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பல ஜாதி சங்கங்களின் தலைவர்கள் அவர்களைப் பார்த்து விண்ணப்பம் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலேயும் இந்தக் குழு ஆராய்ந்து தன்னுடைய அறிக்கையிலே பல பரிந்துரைகளைத் தந்திருக்கிறது. தமிழக அரசு மிகத் தீவிரமாக அவற்றை யெல்லாம் நல்ல முறையிலே எண்ணிப் பார்த்து 13 ஜாதிகளை சேர்த்துக் கொள்வதென முடிவெடுத்திருக்கிறது என்ற நல்ல செய்தியை நான் தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 27 சிறு சிறு ஜாதிகள் இருக் கின்றன, அவற்றின் சமூக நிலைமை என்ன, அவற்றின் வாழ்க்கை நிலைமை என்ன, அவர்களின் கல்வி நிலைமை என்ன என்பதைப்பற்றியெல்லாம் ஆராய் வதற்கேற்ற வகையில் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகக் கருத்தறிய இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வண்ணார், நாவிதர் பற்றியும் குறிப்பிட்டார்கள். கருணம்ரெட்டி பற்றி திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவித் தொகை தரப்பட்டிருக்கிறது. அவர்களையும் 'பின்தங்கியவர்கள்' பட்டியலிலே வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்

கிறேன். தரப்பட்ட உதவித் தொகை வாபஸ் பெறப்படவில்லை, மீண்டும் அவை வாங்கப்படவில்லையென்பதையும் நான் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக செலவு செய்வதைப் பொறுத்தவரையில் 1967-68-ஆம் ஆண்டு ரூ. 161.40 லட்சமாக இருந்தது 1969-70 ஆண்டிலே ரூ. 265.46 லட்சமாக அதிகரித்து, பிறகு 1970-71-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டிலே ரூ. 334.49 லட்சமாகவும் உயர்ந்து இப்பொழுது 1971-72-ம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டிலே ரூ. 411.64 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அளவுக்கு பின்தங்கிய சமுதாயத்தினர் வாழ்வதற்காக, அவர்கள் உயர்வதற்காக இவ்வளவு காரியங்களை கடந்த 24 ஆண்டுக் காலத்திலே எந்த ஆட்சியும் செய்யவில்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ஐ.ஏ.எஸ்.இல் ஆட்கள் இல்லை, ஐ.பி.எஸ்.ஸில் ஆட்கள் இல்லையென்றெல்லாம் சொன்னார்கள். அவற்றிலேயும் பின் தங்கிய மக்களை உருவாக்குவதற்காக—எப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளிலே வெற்றியடையச் செய்ய பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோமோ அதைப் போன்றே—தமிழகத்திலே ஏறத்தாழ ஒன்றே முக்கால் லட்சம் ரூபாய் செலவில் பின்தங்கிய மக்களைப் பயிற்றுவித்து நல்ல எண்ணிக்கை பெற்றுள்ளவர்கள் ஐ.ஏ.எஸ்., ஆகவும் ஐ.பி.எஸ்., ஆகவும் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய முறையில் அவர்களைத் தயார் செய்வதற்கு ஒரு நிலையத்தை உருவாக்குவதற்கு இந்த அரசு முன்வந்திருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இவையெல்லாம் சாதாரண சாதனைகள் அல்ல என்று சொன்னேன். முடிதிருத்துவோர், சலவையாளர்களுக்கு ஷெட்யூல்ட் கேஸ்ட்டாக உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பல சலுகைகளும் தந்துகொண்டு வருகிறோம். உணவு விடுதிகளிலே தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் சென்னை நகரமாக இருந்தால் 40 ரூபாய் அளித்து வந்தார்கள், அதை 60 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது, மற்ற நகரங்களிலே உள்ளவர்களுக்கு 35 ரூபாய் கொடுக்கப்பட்டது இன்றைக்கு 50 ரூபாயாக உயர்த்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு உணவு விடுதிகளிலே தங்கிப் படிப்பவர்களுக்கு மாணவர் ஒன்றுக்கு 20 ரூபாய் என்று இருப்பதை 25 ரூபாய் என்ற அளவுக்கு அரசு உயர்த்தியிருக்கிறது. மாணவி ஒன்றுக்கு 21 ரூபாய் என்று இருந்ததை 26 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்லூரிகளிலே உள்ள விடுதிகளிலே தங்கிப் படிக்கின்றவர்களுக்கு, சென்னையிலே 40 ரூபாய் என்று அளிக்கப்பட்டது 45 ரூபாயாகவும் பிற நகரங்களிலே 35 ரூபாய் என்று அளிக்கப்பட்டது 40 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.



இந்த வகையில் பின்தங்கியோர் நல இலாகாவின் மூலமாக ஏராளமான சலுகைகள் அளித்துக்கொண்டுவருகிறோம் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே பேசிய பல உறுப்பினர்கள், பல இடங்களுக்கு உணவு விடுதிகள் வேண்டும் என்று எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். 50 உணவு விடுதிகளை இந்த ஆண்டு உருவாக்கவேண்டுமென்று ஆணை பிறப்பித்து இருக்கிறது என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள். அந்த வகையிலே ஒரு திட்டம் உங்கள் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிறது. அதே உணவு விடுதிகளிலே இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்ற முறையிலே தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைமட்டும் சொல்லிக்கொள்கிறேன். பின்தங்கிய சமுதாயத்தினரை உயர்த்துவதற்கும், கல்வியின்மை, பின்தங்கிய தன்மை இவற்றை மாற்றியமைப்பதற்கும், அவர்களை உன்னதமான உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருகின்ற நல்ல பணியில் இந்த ஆட்சி ஈடுபடுகிறது என்பதை சொல்லிக் கொண்டு பல நண்பர்கள் வெட்டுப் பிரேரணைகள் தந்திருக்கிறார்கள், அவற்றிற்கெல்லாம் என்னுடைய பதிலிலே பதில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெட்டுப் பிரேரணைகள் கொடுத்த நண்பர்கள் அருள்கூர்ந்து அவற்றை வாபஸ் வாங்கி இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விவாதம் இத்துடன் முடிவுற்றது.

திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. ஏ. சுப்பிரமணியம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,41,84,100 under Demand No. 25-A—Welfare of the Backward Classes".

The Demand was put and carried and the Grant was made.

### (ஆ) கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம்

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,06,35,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 3,06,35,600 under Demand No. 10—Administration of Justice be reduced by Rs. 100."

திரு. க. சுப்பு : தலைவாவர்களே, நீதி மன்றங்களில் துரிதமாகத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 10—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,06,35,600-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need to provide quickly adequate accommodation for the lawyers attached to the High Court to have their offices within the High Court campus itself, I move—

'That the allotment of Rs. 3,06,35,600 under Demand No. 10—Administration of Justice be reduced by Rs. 100.'

THIRU A. SUBRAMANIAM : Sir, to discuss the need to exempt workers, Harijans and other economically backward class people from payment of court fees and stamp fees, I move—

'That the allotment of Rs. 3 06 35,600 under Demand No. 10—Administration of Justice be reduced by Rs. 100.'

### (இ) கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள்

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவாவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,55,48,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU K. T. K. THANGAMANI : Sir, to discuss about the release of life prisoners on completing 10 years, I move—

'That the allotment of Rs. 2,55,48,900 under Demand No. 11—Jails be reduced by Rs. 100.'

DR. H. V. HANDE : Sir, to discuss the need to shift the Central Jail from Park Town to give way to the expansion of the General Hospital in that area, I move—

'That the allotment of Rs. 2,55,48,900 under Demand No. 11—Jails be reduced by Rs. 100.'

திரு. கே. என். குமாரசாமி : தலைவாவர்களே, சிறைத் தண்டனை பெற்ற கைதிகளுக்கு தொழிற்பயிற்சி கொடுப்பதின் மூலம் அவர்கள் திருந்துவதற்கு வழிவகை காண முடியும் என்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,55,48,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவாவர்களே, மதுரையிலே ஒரேயிடத்தில் எல்லா நீதி மன்றங்களையும் அமைத்துச் சிறப்பாக நீதி வழங்க ஏற்பாடு செய்யும் முறையில் கட்டடங்கள் கட்டியதற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். அதைப்போல நமது அரசாங்கம் மதுரையிலே ஒரு சட்டக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு



உயர்நீதிமன்ற பெஞ்சையும் அங்கே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அந்தப் பக்கத்திலேயிருக்கும் வழக்குகளைச் சென்னைக்குக் கொண்டு வரவேண்டுமென்றால் ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள். இதைத் தவிர்க்கும் முறையில் செய்ய வேண்டும். நீதி துரிதமாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே மத்திய சர்க்கார் திரு. ஷா தலைமையில் கமிட்டி ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். அதற்காக எதிர்பார்த்துக் கொண்டிராமல் இந்த அரசாங்கமே இரண்டு மாதங்களுக்குள் அறிக்கையை எடுத்துச் சொல்லுகின்ற முறையில் குறுகிய காலக் கமிட்டி ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, இன்றுள்ள நிலைமையில் சில இடங்களில் பதவிகள் காலியாக இருக்கிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் பப்ளிக் ப்ராசிகியூட்டர் போஸ்ட் காலியாக இருக்கிறது. இது நிரப்பப்பட வேண்டும். ஏனென்றால் இது முக்கியமான போஸ்டாக இருக்கிறது.

அதைப்போலவே, ஜில்லா ஜட்ஜுகள் தேர்வு நடைபெற்று ஹைகோர்ட் பேனல் அனுப்பியிருக்கிறது. முடிவு இன்னும் வெளியிடப்படாமல் இருக்கிறது. அதையும் விரைவில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவேயிருக்கும் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அதிகப்படியான புரமோஷன் வாய்ப்புகள் இல்லாமல் இருக்கின்றன. சப்-மாஜிஸ்ட்ரேட்களுக்கு 75 சதவிகிதம் வழக்குகள் ஏற்கனவே புரொஹிபிஷனாகத்தான் இருந்தது. அவைகள் எடுக்கப்பட்டுவிட்டால் ஸ்மால் காஸஸ், ரெண்ட் கண்ட்ரோல் போன்ற வழக்குகளை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை டிஸ்டிரிக்ட் முன்சீப்புகளாக 3 ஆண்டுக்குள் கொடுக்க, புரோமோஷன் கிடைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காரணம் என்னவென்றால், சப்-மாஜிஸ்ட்டிரேட்டுகள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் திறமையாக இருந்தாலும்கூட அவர்கள் முன்னுக்கு வர வாய்ப்பில்லாமல் இருக்கிறது. நேரடியாகவே, அனுபவம் இல்லாமல் இருப்பவர்கள்கூட டிஸ்ட்ரிக்ட் முன்சீப்பாக வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. நான் இதை இங்கே குறிப்பிடும்பொழுது ஒரு உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள், நீதித்துறையில் அந்தஸ்தோடு இருப்பவர்கள் ஆகிய இவர்கள்மீது குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்பவில்லை. அப்படி இருப்பது பாவம் அல்ல என்று ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. அப்படி இருப்பதை ஏற்றுக்கொண்டாலும் கூட, உயர்ந்த அந்தஸ்திலே இருப்பதாலேயே அதுவே தகுதியாகவும் மாறி விடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காகவே நான் இதைக் கூற விரும்புகிறேன். காரணம், உயர்ந்த நிலையிலேயிருப்பவர்களின் உறவினர்கள், அல்லது அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை கிடைக்கிறது என்ற குற்றச்சாட்டுக்குத் தமிழகத்தில் இடம் இருக்கக் கூடாது, அதற்கு நீதித்துறையில் இடம் கொடுக்கக்கூடாது. தகுதியையும் திறமையையும் வைத்தே எடுக்க வேண்டுமே தவிர, அரசியல் கண்ணோட்டம் அதிலே ஊடுருவுவதற்கு இடம் அளித்தல் கூடாது. காரணம் இப்பொழுது அதிகமான நம்பிக்கையை இந்த நீதித்துறையிலே மக்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

நல்ல சட்டத்தைக் கொண்டுவந்தாலும்கூட, நீதி மன்றங்களுக்குச் சென்று தடை வாங்கிவிடுகிறார்கள். இனும் ஒழிப்புச் சட்டத்திற்கும் தடை வாங்கினார்கள். பிறகு ஹைகோர்ட்டில் தடை வாங்கினார்கள். இப்படி முக்கியமான சட்டங்களுக்குத் தடை வாங்குகிறார்கள். இப்படித் தடைகள் வாங்கும் பொழுது உடனடியாகப் பரிசீலித்து அதை நிவர்த்தி செய்ய சட்டங்களை இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

சாகுபடியாளர்கள் பாதுகாப்புச் சட்டத்திலே, 'கல்டிவேட்டிங் டெனென்ட்ஸ் ப்ரொட்டக்ஷன் ஆக்ட்'டிலே சாகுபடியை நிரூபிக்காவிட்டால் அதை உடனே ரெவின்யூ கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்று விதி இருக்கிறது. சில இடங்களில் நீதிமன்றங்களிலே கல்டிவேட்டிங் டெனென்ட்ஸ் புரொட்டக்ஷன் ஆக்டிற்கு இவர்களை எடுத்து இன்ஜங்ஷன் கொடுத்து விடுகிறார்கள். இப்படிக் கொடுத்து சாகுபடியாளர்களை வெளியேற்றுவதைப் பார்க்கிறோம். இது தஞ்சை மாவட்டத்திலே அதிகமாக இருக்கிறது. வெளியேற்றப்பட்ட பிறகு சில இடங்களில் இரண்டு பேருக்குமே, வாதிக்கும் பிரதிவாதிக்கும் இன்ஜங்ஷன் கொடுக்கிறார்கள். இதனால் இருபுறமும் நிலைமைகள் ஏற்படுகின்றன, தகராறுகள் மூளுகின்றன. ஆகவே இவற்றை மாற்ற வேண்டும்.

இன்ஜங்ஷன் கொடுப்பதில் ஜுடிஷியல் டிஸ்கிரிஷன் பயன்படுத்தப் படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பர்சனல் டிஸ்கிரிஷனில்தான் கொடுக்கப் படுவதாகத் தெரிகிறது. இதுபோன்ற நிலைமைகளில் விரைவாக முடிக்க வழி வகைகளைக் காண வேண்டும்.

விஜிலன்ஸ் கமிஷன் அமைத்து எத்தனை வழக்குகள் ஏற்பட்டன, எத்தனை வழக்குகள் முடிந்தன, எத்தனை வழக்குகள் முடிவுறாமல் இருக்கின்றன என்பது போன்றவற்றிற்கு ஒரு ஆன்யுவல் ரிப்போர்ட்டைக் கொடுக்க வேண்டும். எத்தனை வழக்குகள் போடப்பட்டன, அதன் முடிவுகள் என்ன என்பதைச் சொல்ல வேண்டும். அப்படியிருந்தால்தான் நீதித்துறை தூய்மையாக இருக்க வாய்ப்பு ஏற்படும்.

அடுத்தபடியாக, ஜட்ஜ்களின் அலவன்ஸைக் கூட்ட வேண்டும். ஒரே காரிலே இரண்டு ஜட்ஜ்கள் போவதாக இருக்கிறது. எனவே கார் அலவன்ஸைத் தனித் தனியாகக் கொடுக்க வேண்டும். சென்னையிலே இருப்பவர்கள் குற்றாலத்திற்கோ, கொடைக்கானலுக்கோ போவதற்கு ஆசைப் படுவதில் தவறு இல்லை. அவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள், குடும்பத்திலே இருப்பவர்கள், அவர்களுக்கும் வாழ்க்கை இருக்கிறது. அவர்கள், வெளியூர்களுக்குச் செல்ல விரும்பும் நேரத்தில் யாராவது போனால் அவர்களுடனே, அல்லது ஏதாவது கம்பெனியிலிருப்பவர்கள் சென்றால் அவர்கள் காரிலோ சேர்ந்து செல்லும் நிலைமையிருந்தால் அதனால் பாதகம் ஏற்படும். 'சீஸர் இஸ் வைஃப் ஆஃப்' என்று சொல்கிறோம். அவர்களுக்கும் மனித உணர்வுகள் இருக்கும். அந்த வழிகளில் செல்லுகிறார்கள் என்று மக்கள் கருதும் நிலை உருவாகக் கூடாது. நீதியை வழங்கினால் மட்டும் போதாது. It must appear to be rendering justice ஆகவே, நீதி வழங்குவதாகத் தோற்றம் இருக்க வேண்டும். பிரிட்டிஷ் முறையில் அப்படி வைத்திருந்தார்கள். எனவே அவர்களுக்கு மேலும் சில வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீதிபதிகளுக்குச் சம்பளத்தை கொடுப்பதும் அவசியம்.



வழக்குரைஞர்களுக்கு ஷெட்யூல் ஃபீஸ் முன்பு என்ன இருந்ததோ அந்த ஃபீஸ்தான் இப்பொழுதும் இருக்கிறது. பல வழக்கறிஞர்கள் வயதான காலத்திலே எப்படி வாழ்க்கை நடத்துவார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களுக்கு ஷெட்யூல் ஃபீசை ரிவைஸ் செய்து உயர்த்திக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் வசதியாக இருக்கும்.

ஃப்ரீ லீகல் எய்ட் கொடுக்கவேண்டும். ஏழைகள் அதிகமாக வழக்காட முடிவதில்லை. நீதி வழங்கப்படுகிறது என்பதைவிட நீதி வாங்கப்படுகிறது என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறது. ஃப்ரீ லீகல் எய்ட் கொடுத்து ஒரு பேனல் அமைக்க வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் ஏழைகளுக்கு வறுமையில் இருப்பவர்களுக்கு உதவி செய்யும் முறையில் இந்தப் பேனல் இருக்க வேண்டும்.

ஃபீஸ் கட்டினால்தான் சிவில் கோர்ட்டுக்குப் போக முடியும் என்ற நிலையிருக்கிறது. பாப்பர் சூட் ஃபைலை வைப்பதற்கே பல வருஷங்களாகின்றன. ஏழைகளுக்கும் நீதி கிடைக்கும் என்ற முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். அப்படியிருந்தால்தான் ஏழைகளுக்கும் நீதி வழங்கப்படுகிறது என்று உணரும் வகையிருக்கும்.

ஸ்மால் காஸ் கோர்ட்டுகளில், மொஃபசல் கோர்ட்டுகளில் 500 ரூபாய்க்கு மேல் ஆகிறது. ஒரு தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு அதிலே பாதகமான நிலையிருந்தால் அப்பீல் செய்ய வேண்டுமானால் சென்னைக்கு வர வேண்டியதாக இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுக்குப் போக முடியாது. 500 ரூபாயைச் செலவழித்துவிட்டு அங்கேயிருந்து இங்கே வருவது சாத்தியமில்லை. பெகுனியரி ஜூரிஸ்டிக்ஷனுக்கு சிட்டி சிவில் கோர்ட்டின் பணிகளை அதிகப்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால் ஏழை எளியவர்களுக்குப் பயன்படும்.

மாஜிஸ்டிரேட்டுகளுக்குச் சிவில் அதிகாரம் கொடுக்க வேண்டும். இப்படிச் சில சீர்திருத்தங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மதுரைக்கு, நான் முன்பே கூறியதைப்போல், ஒரு உயர்நீதி மன்றப் பெஞ்சையும், சட்டக்கல்லூரியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. கா. வேழவேந்தன்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் நீதி நிர்வாகம், சிறைச் சாலைகள் ஆகிய இரண்டு மானியக்கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நீதி நிர்வாகம் ஆற்றல் மிக்க வழக்கறிஞர்கள் பலராலும், நல்ல நடுநிலையோடு இருந்தவரும் நீதிபதிகளாலும் சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்பதை எல்லா மாநிலத்தவரும் பாராட்டிக் கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையிலே புதிதாக இந்த நீதி நிர்வாகம் சிறப்பாக நடைபெற மதுரையிலே நீதிமன்றக் கட்டிடங்களை அமைத்துச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கும் இந்த அரசை நல்லவர்களெல்லாம் இன்றைக்குப் போற்றிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல் வழக்கறிஞர்களுக்குச் சில குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதிலே ஒன்று ஆங்கிலேயர்கள்

காலத்தில் போடப்பட்ட ஷெட்யூல் ஆஃப் பீஸ் திருத்தப்படவில்லை என்றும், கணிசமாக, நியாயமான அளவுக்குக் கிடைக்க அது திருத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வழக்கறிஞர்கள் நீண்ட காலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்தக் குறிப்பிட்ட சட்டத்தைத் திருத்தியமைத்து நியாயம் வழங்கவேண்டுமென்று நான் நம்முடைய ஆற்றல் மிக்க அமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய புதிய கழக அரசு ஏற்பட்ட பிறகுதான் நியாயம் ஒழுங்காக வழங்கப்பட வேண்டுமென்ற வகையில், தாய்மொழியில் நீதிமன்றங்கள் நடைபெறவேண்டுமென்ற சிறப்பான திட்டத்தை அமல் படுத்தக் கருதி, அதற்காக அந்தத் துறையிலே சிறப்பாகத் தமிழிலே தீர்ப்பு எழுதுகின்ற நீதிபதிகளுக்குப் பரிசு வழங்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட பரிசுகள் அண்மையில் வழங்கப்பட்டிருக் கின்றன. இதிலே மேலும் காலதாமதம் வேண்டியதில்லை. நேற்றைக்குப் பிறந்த இந்தி மொழியில் நீதிமன்றங்கள் நடைபெற வேண்டுமென்ற கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கும் நேரத்தில், நம்முடைய தமிழ் மொழி நல்ல வளர்ச்சி பெற்ற மொழியாக இருக்கும் நிலையில், பண்பாடான மொழியாக (ரிஃபைண்டு லாங்வேஜ்) இருக்கும் நிலையில், கிளாசிகல் லாங்வேஜ் என்று சொல்லப்பட்ட தரமான மொழியாக இருக்கும் காரணத்தால் தாய்மொழியிலேயே நீதி வழங்க முடியும். நீதிமன்ற நடவடிக்கைகளைத் தமிழ் மொழியில் கொண்டு வர நிச்சயமாக நம்முடைய அரசு தன்னுடைய காலத்திலேயே முழுக்க முழுக்க நடவடிக்கை எடுத்து, அதனைக் கொண்டு வரவேண்டும்.

ஆங்கிலத்தில்தான் 'ஆர்குமென்ட்ஸ்' என்று சொல்லப்பட்ட வாதங்களை எடுத்து வைக்க முடியும், நீதி வழங்க முடியும் என்று சொல்லுகின்றபோது, இதே ஆங்கிலம் 300, 400 ஆண்டுகளுக்கு முன்னால் ஆலிவர்கிராம் காலத்தில் இங்கிலாந்தில் கூட நீதி வழங்கும் மொழியாக இல்லை என்பதனை உணர வேண்டும்.

இலண்டன் மாநகரத்தில் 350 ஆண்டுகளுக்கு முன்னால் லத்தீன் மொழியில் நீதிமன்ற நடைமுறை இருந்து வந்தது. சாட்சியை வழக்குரைஞர்கள் விசாரணை செய்யும் நேரத்தில் லத்தீன் மொழியில்தான் விசாரிக்க வேண்டும். வாதங்களை எடுத்து வைக்கும் நேரத்தில் லத்தின் மொழியில்தான் எடுத்து வைக்க வேண்டும். நீதிபதி லத்தின் மொழியில்தான் தீர்ப்பு எழுதிப் படிக்க வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தது. அப்போது ஆங்கில நாட்டு இளைஞர்கள் இலண்டன் மாநகரத்தில் ஆங்கில மொழியில் அல்லாமல் லத்தின் மொழியில் தீர்ப்பு வழங்குவது அநியாயம் அல்லவா என்று கிளர்ந்தெழுந்தார்கள். அன்று எழுந்த கிளர்ச்சிப் போராட்டத்தின் விளைவாக இன்று உலகம் முழுவதும் 350 கோடி மக்கள் மத்தியில் ஆங்கிலம் செல்வாக்குப் பெற்று, நம்முடைய சாதாரண சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வரை இன்று ஆங்கிலம் பரவி இருக் கிறது. இந்தமாதிரி உணர்வு தமிழ் மக்களுக்கு உண்டாக வேண்டுமென்ற வகையில் இன்று நீதிமன்ற முறைகள் தமிழில் அமல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சிறப்பான முறையில் வாதங்களை எடுத்துச் சொல்ல வழக்குரைஞர் கள் தமிழினைப் பயன்படுத்த வேண்டும். இதை நடைமுறைப்படுத்துவதை இன்னும் தீவிரப்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



வழக்குகள் காலதாமதப்படுகிறது என்ற குற்றச்சாட்டு பொதுவாக இருக்கிறது. தொழிலாளர்கள் வழக்குகளைப் பொறுத்தவரை கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் தீர்ப்புக் கூறிய பிறகு வசதி வாய்ந்த முதலாளிகள் உயர்நீதி மன்றங்களுக்குப் போய் காலதாமதப்படுத்துகிறார்கள். இதனால் தொழி லாளர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி, கடைசியாகத் தங்களுடைய கோரிக்கைகளை விட்டு விட்டு வேறு எங்காவது போய்ச் சேர்ந்து விடும் நிலைமை இருக்கிறது. தொழிலாளர் நலன் பற்றிய சட்ட வழக்குகளைப் பொறுத்தவரை குறிப்பிட்ட காலத்தில் முடிய வேண்டுமென்ற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடையத் தொகுதியைப் பொறுத்தவரை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை பொன்னேரியில் வைக்கவேண்டுமென்பது நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகிறது. பழவேற்காடு பகுதியில் இருப்பவர்களும், பொன்னேரியில் இருப்பவர்களும் 35, 40 மைல் கடந்து தங்களுடைய வழக்குகளை எடுத்துக் கொண்டு திருவள்ளூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதற்காக அமைக்கப்பட்ட டெரிடோரியல் கமிட்டியின் முன்னாலும் இதைப் பற்றிச சொல்லியிருக்கிறோம். ஆகவே, பொன்னேரியில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டை விரைவாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரை அண்ணா அவர்கள் கூறியது போல் சிந்தனைச் சாலைகளாக மாற வழிவகுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்கூட சிறைச்சாலையில் இருக்கும் நேரத்தில் சிந்தனைக் கருத்துக்களை எழுதமுடியும் என்று கூறுவார்கள். இன்றைக்கு சிறைச்சாலைகளைச் சிந்தனைச் சாலைகளாக மாற்ற நம்முடைய அரசு முயல வேண்டும். திறந்த வெளி சிறைச்சாலைகளை மிகுதியாக அமைத்துத் தர வேண்டும். எங்களுடைய பகுதியில் செங்குன்றத்தில் திறந்த வெளி சிறைச சாலையை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எந்த காரணத்தாலோ அது கைவிடப்பட்டிருக்கிறது. அங்கு நிறைய திறந்த வெளிகள் இருக்கின்றன. திறந்த வெளி சிறைச்சாலைகளை ஏற்படுத்தி கைதிகளை முழுக்க முழுக்க விவசாயத்திற்கும், காய்கறிகளைப் பயிரிடவும் பயன்படுத்த வேண்டும். அந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

* திரு. எ. சுவாமிதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக மக்களுக்கு நீதி நியாயம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் கோர்ட்டுக்குத் தான் போகிறார்கள். கோர்ட்டிலே நேர்மையாக நமக்கு நீதி கிடைக்குமென்ற நம்பிக்கை பொதுமக்களிடத்தில் இருக்கிறது. அரசாங்கம் நட்பு செய்தாலும் அதற்கும் நீதி தேடிக் கோர்ட்டுக்குத்தான் செல்லுகிறார்கள். கோர்ட்டில் இருக்கும் மாஜிஸ்ட்ரேட், முன்சீப், ஜட்ஜஸ் ஆகியோர் நிச்சயமாக நீதி வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான அடிப்படையில் நீதித்துறை செயல்பட்டு வருகிறது.

இன்று கோர்ட்டுகளில் எப்போது பார்த்தாலும் ஒரே கூட்டமாக இருக்கிறது. ஒருவர் ஒரு கேசுக்காக கோர்ட்டுக்குப் போகத் தொடங்கி விட்டால் மாதக் கணக்கில் போய்க் கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது.

வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. வழக்குகளை உடனுக்குடன் பைசல் செய்யும் வகையில் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு வழக்கு வந்தால் இவ்வளவு காலந்தான் என்று அதற்கு ஒரு வரையறைச் செய்யவேண்டும். அதே போன்று ஹைகோர்ட்டிலும் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. சாதாரண பணக்காரருக்கு ஒரு கேஸ் ஏற்பட்டு, அதற்காக நடக்க ஆரம்பித்தால் அவர் தம் சொத்தை எல்லாம் இழந்து பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கு வந்து விடுகிறார். ஆகவே, ஹைகோர்ட்டாக இருந்தாலும், வேறு எந்த கோர்ட்டாக இருந்தாலும் ஒரு வழக்கு வந்தால் அதிலே முடிவு எடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட காலவரையறையை ஏற்படுத்த வேண்டும்.

நீதித் துறையைப் பொறுத்தவரை முன்னால் பேசிய நண்பர் அவர்கள் சொன்னபடி ஜட்ஜுகள், மாஜிஸ்ட்ரேட்டுகள், முன்சீபுகள் ஆகியவர்களுக்கு வசதிகளைக் கொஞ்சம் அதிகமாகவே கூடச் செய்து கொடுக்க வேண்டும். அவர்களும் மனிதர்கள்தான். அவர்கள் தேவைகளை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும். இதை நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். ஆகவே, நீதித் துறையில் இருப்பவர்களுக்கு மற்றவர்களுக்குக் கொடுத்திருப்பதைவிட அதிகமான வசதிகளைச் செய்து கொடுத்தால்கூட நல்லது என்று தெரிவித்துக் கொளகிறேன்.

கிராமப் பகுதிகளில் சிறு சிறு வழக்குகள், சாதாரணத் திருட்டு, அடிதடி வழக்கு போன்று வரலாம். அதெல்லாம் போலீஸ் இலாகாவுக்குப் போய் அவர்கள மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாக்கல் செய்கிறார்கள். இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும். நாம் இன்று பஞ்சாயத்து ஆட்சியில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். பஞ்சாயத்தில் இருக்கும் தலைவர்களுக்கும், உறுப்பினர் களுக்கும் இந்த மாதிரி சிறு சிறு வழக்குகளை விசாரிக்க அதிகாரம கொடுத்தால் ஒரே நாளில் வழக்கு தீர்ந்துவிடும். கோர்ட்டுக்கு நடக்கும் தேவை இருக்காது. வாதி, பிரதிவாதியை வரவழைத்து பஞ்சாயத்தே முடிவு செய்யும் வகையில் சட்டத்தை மாற்றியமைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சென்னையிலுள்ள பல வழக்கறிஞர்கள் பல குறைகளைச் சொன்னார்கள். அரசியல் நீதித் துறையில் ஊடுருவுவதாகச் சொன்னார்கள். அந்தக் குறை களுக்கு ஆதாரம் அரசுக்குக் கிடைத்திருக்கும். இருந்தாலும் நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அரசு ஜட்ஜுகளைத் தேர்ந் தெடுக்க—ஏழு பேர்களைத் தேர்ந்தெடுக்க—உயர்நீதி மன்றத்தில் பானல் ஆப் லிஸ்ட் கேட்டார்கள். அந்த ஏழு பேர் கொண்ட லிஸ்டில் இருந்து மூன்று பேரைத் தேர்ந்தெடுத்துவிட்டு மீதிப் பேரைத் தேர்ந்தெடுக்கவில்லை. வழக்கறிஞர்கள் மத்தியில் இந்தப் பேச்சு பரவலாக இருக்கிறது. இந்த மாதிரிக் குறைபாடுகள் எல்லாம் இல்லாமல் இருந்தால் நல்லது.

நாங்கள் சுமார் 500 மைலுக்கு அப்பால் இருக்கிறோம். ஹைகோர்ட்டுக்கு வரவேண்டுமென்று சொன்னால் சென்னைக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. மதுரையில் ஒரு ஹைகோர்ட் பெஞ்ச் இருந்தால் வசதியாக இருக்கும். அதைப் பற்றிப் பல உறுப்பினர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்குமென்று நம்புகிறேன். அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





இன்னொன்று. ஹைகோர்ட்டுக்கு இரண்டு மாடிகள் உள்ளன. அந்த மாடிகளில் ஏறி இறங்க வயதான வழக்கறிஞர்களுக்கும் வயதான கட்சிக்காரர் களுக்கும் சிரமமாக இருக்கிறது. அந்தக் கட்டடம் நல்லதொரு பழங்காலக் கட்டடம். அங்கு ஒரு லிஃப்ட் அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. டி. கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீதி நிர்வாக மானியக் கோரிக்கையின் மீது பேசும் வகையில் நான் இரண்டொரு வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கிறேன்.

தமிழ் நாட்டில், நாடு முழுவதும் மனு நீதி நாள் என்று நமது முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் அறிகுறியாக ஆங்காங்கு பட்டிதொட்டிகளில் எல்லாம் சென்றிருக்கிறார்கள், கேட்கிறார்கள். ஆகவே கிராமங்களைத் தேடி நீதி செல்கிறது. குறைகள் தீர்க்கப்படுகின்றன. அதை மக்கள் பாராட்டுகிறார்கள். அதே முறையில் நடமாடும் நீதிமன்றத்தையும் ஆங்காங்கு பெரிய பெரிய நகரங்களில் அமைக்க நினைக்கிறோம். அப்படி அமைப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதி நாங்குனேரி. அங்கு, நாங்குனேரி வட்டத்தில் நான்கு லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அந்த நான்கு லட்சம் மக்களில் மிகவும் பின்தங்கிய மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நாங்குனேரி வட்டத்தில் ஒரு முன்சிப் கோர்ட் கூட அமைக்கப்படவில்லை என்பதை இங்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். அப்படி அங்கு நான்கு லட்சம் மக்கள் இருந்தும் அங்குள்ள கேஸ்கள் டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட்டுக்கு 65 மைல்கள் கடந்து அம்பாசமுத்திரத்திற்குப் போகிறது. ஐம்பது மைல்கள் கடந்து திருநெல்வேலிக்குப் போகிறது. நாங்குனேரி வட்டத்தில் வழக்குகள் கூடுதலாகி அம்பாசமுத்திரத்திற்குச் செல்கிறது, திருநெல்வேலிக்குச் செல்கிறது. அம்பா சமுத்திரத்தில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் இருந்தது இப்போது இரண்டு கோர்ட்டுகளாக ஆகியிருக்கின்றன. நெல்லையில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட் இருந்தது இரண்டாக ஆகியிருக்கின்றன. இந்த அவல நிலை எதற்காக? அன்றே புறப்பட்டு 65 மைல்களுக்கு அப்பால் உள்ள அந்த அந்த கோர்ட்டுகளுக்கு போக முடியுமா? வள்ளியூரில் நல்ல கட்டடங்கள் இருக்கின்றன. ஆகவே மக்களுக்கு அதிகச் செலவில்லாத முறையில், நெல்லையில் உள்ள அடிஷனல் ஜில்லா முன்சிப் கோர்ட்டை வள்ளியூரில் அமைத்துக் கொடுக்க நல்ல மார்க்கம் இருக்கிறது. அப்படி வள்ளியூரில் அதை அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குனேரி வட்டத்தில் உள்ள க்ரிமினல் வழக்குகளை விசாரிக்க அடிஷனல் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் திருநெல்வேலியில் இருக்கிறது. ஆக, நாங்குனேரியிலிருந்து 65 மைல்கள் செல்ல வேண்டியிருக்கிறது. நாங்குனேரி வட்டத்திலுள்ள க்ரிமினல் வழக்குகளை மட்டும் நடத்த அந்த அடிஷனல் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் திருநெல்வேலியில் இருக்கிறது. அது எதற்காக அங்கு இருக்கவேண்டும்? 65 மைல் தொலைவில் அது ஏன் இருக்க வேண்டும்? மக்கள் பணத்தை விரயம் செய்து அங்கு ஏன் போக வேண்டும்? போலீஸ் நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கு ஒன்றிரண்டு நாட்கள் அலைந்து சர்க்கார் பாட்டாக்களை அதிகமாகச் செலவழித்து அவர்களும் பலவித அல்லல் களுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே நாங்குனேரி வட்டத்தில் உள்ள கிரிமினல்

வழக்குகளை விசாரிக்கும் அந்த அடிஷனல் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நெல்லையில், திருநெல்வேலியில் இருப்பது என்பது தேவையற்றது. ஆகவே அதையும் சேர்த்து வள்ளியூரில் மாஜிஸ்ட்ரேட் சார்பாக டிஸ்ட்ரிக்ட் முன்சிப்-கம்-ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாக அமைப்பது நல்லது, அப்படி அமைக்கவேண்டுமென்ற என் கருத்தை எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன் அமைச்சர் அவர்களிடம்.

சட்டத் துறை அமைச்சர் அவர்கள் 1968-69-ல் திருநெல்வேலிக்கு வந்திருந்தபோது வக்கீல் சங்கத்திற்கு வந்திருந்தார்கள். வக்கீல் சங்கக் கட்டடத்தை விரிவுபடுத்த வேண்டும் என்றும் நல்லதொரு கட்டடம் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். அமைச்சர் அவர்கள் வந்து சென்ற பின்னர் அவர்கள் வாக்கு கொடுத்தமுறையில் வக்கீல் சங்கம் நல்லதொரு கட்டடத்தைப் பெற்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

அவர்கள் இன்னொரு கோரிக்கையும் விடுத்திருந்தார்கள். நெல்லையில் இரண்டு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் உள்ளன. அதை செஷன்ஸ் கோர்ட்டும் முன்சிப் கோர்ட்டும் ஒரே காம்பவுண்ட்டுக்குள் வைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை எடுத்து வைத்தார்கள். அங்குள்ள அடிஷனல் முன்சிப் கோர்ட், ஒரு அடிஷனல் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இரண்டையும், அதாவது நாங்குனேரி வட்டத்தைப் பொறுத்தவரையிலுள்ள கேஸ்களை விசாரிக்கக்கூடிய அந்த இரண்டு கோர்ட்டுகளையும் அங்கிருந்து மாற்றிவிட்டால், அந்த இடத்திலேயே, ஒரே காம்பவுண்டுக்குள்ளேயே நெல்லையிலுள்ள இரண்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளையும் வைத்துக்கொள்ளமுடியும். அதனால் வக்கீல்களுக்கும் நல்லது, கட்சிக்காரர்களுக்கும் நல்லது. ஆகவே அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மனு நீதி நாள் எப்படி தமிழ்நாட்டில் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறதோ அதேபோல் பிற்படுத்தப்பட்ட மக்களைக் கொண்ட வள்ளியூரில் ஒரு டிஸ்ட்ரிக்ட் முன்சிப்கோர்ட்-கம்-அடிஷனல் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டையும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, நீதி எல்லா மக்களுக்கும் எளிதில், அதுவும் குறைந்தச் செலவில் கிடைக்கவேண்டும் என்ற கருத்தை, கொள்கையினை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரு கட்சிதான் இன்றையதினம் ஆட்சி நடத்துகிறது. அந்தக் கொள்கையை நடைமுறையில் கொண்டுவருகிற வகையில் நீதி எளிதிலும் எளிமையாகவும் கிடைப்பதற்கான வழிவகைகள் இன்றும் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்வேன்.

குறிப்பாக, ஏழை எளிய மக்கள், ஹரிஜனங்கள், தொழிலாளர்கள், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்கள், இவர்களுக்கெல்லாம் ஸ்டாம்ப் ட்யூட்டி, கோர்ட் ஃபீ செலவுகள் இவற்றில் இருந்து விதிவிலக்கு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். தொழில் தகராறுகள் வருகின்றன. அதற்குக் கூட ஃபீஸ் கட்டி, ஸ்டாம்ப் ட்யூட்டி கொடுக்க வேண்டியிருப்பதால் பல தொழிலாளர்களுக்கு, வேலை அற்றுப்போன தொழிலாளர்களுக்கு அவற்றைக் கட்டி





முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே சமுதாயத்தில் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய மக்களுக்கு இந்த ஸ்டாம்ப் ட்யூட்டியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வேன்.

நீதிபதிகளைப் பொறுத்தவரையில், நம் மாநிலத்திலுள்ள நீதிபதிகள் மிகச் சிறப்பாக நீதி வழங்குகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. சில தீர்ப்புகள் தள்ளுபடியாகின்றன என்றாலும் நீதியை சிறப்பாக வழங்குகிறார்கள் என்று தான் சொல்லவேண்டும்.

எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் நீதி வழங்கினால் மட்டும் போதாது. நீதி வழங்கியதாக தோற்றமளிக்கவும் வேண்டும் என்று சொன்னார்கள். அந்த விஷயத்தில் நான் ஒன்றிரண்டு கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வடக்கேயிருந்து அமைச்சர்கள் வருகிறார்கள் சென்னைக்கு. அப்படி அமைச்சர்கள் வரும்போது அவர்களை வரவேற்பதற்கு அமைச்சர்கள் போகிறார்கள், அதிகாரிகள் போகிறார்கள். அவர்களோடு நீதிபதிகளும் ஏன் செல்ல வேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. நீதிபதிகளை கூடுமானவரையில் அரசியல் தொடர்பு இல்லாமல் இருக்கச் செய்வது மிக மிக அவசியம் என்று நான் கருதுகிறேன். அதனால் அவர்கள் கெட்டுவிடுவார்கள் என்பதல்ல. அதனால் மக்களுக்கு அவர்களின் மீது ஒரு குறை ஏற்பட்டு விட வழி ஏற்படும். ஆகவே நீதிபதிகள் அமைச்சர்கள் வரும் போது அல்லது அரசியல் தலைவர்கள் வரும்போது அவர்களை வரவேற்கச் செல்கிற அந்த முறையை தயவுசெய்து நிறுத்துவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

இன்னொன்று, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜிலிருந்து கீழ் மட்டத்திலுள்ள நீதிபதிகள் ரிட்டயரான பிறகு உத்தியோகத்திற்குச் செல்கிற நிலை தவிர்க்கப்பட வேண்டும். அதற்காக அவர்களுக்கு முழுச் சம்பளத்தையும் பென்ஷனாகக் கொடுப்பதில் தவறு இல்லை என்று சொல்லிக் கொள்வேன். ஆனால் ரிட்டயரானப் பிறகு அவர்கள் உத்தியோகத்திற்குச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேழவேந்தன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தொழிலாளர்கள் வழக்குகள் அதிக நாட்கள் ஹைகோர்ட்டில் நீடிக்கப்படுகின்றன. ஹைகோர்ட்டில் ஏராளமான ரிட் பெட்டிஷன்ஸ் வருகின்றன. வேலை இழப்புகள், தொழிலாளர் தகராறுகள் போன்று பல இருக்கின்றன. முதலாளிகள் எளிதில் ஹைகோர்ட்டுக்குச் செல்கிறார்கள், சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். ஒரு தொழிலாளி வேலை நீக்கம் செய்யப்பட்டு கீழ்க் கோர்ட்டில் அல்லது ட்ரிப்யூனலில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வந்தாலும் சரி அல்லது பாதகமாக வந்தாலும் சரி முதலாளி உடனே ஹைகோர்ட்டில் ரிட் போட்டு விடுகிறார். அது அட்மிட் ஆவதற்கு ஆறு, ஏழு மாதங்களாகின்றன. பிறகு அது டிஸ்போசல் ஆவதற்கு பல ஆண்டுகளாகின்றன. அந்த கேஸ் டிஸ்போஸாவதற்குள் அந்தத் தொழிலாளியே இறந்து விடுகிறான். அல்லது வேறு வழியில்லை என்று எங்கேயாவது போய்விடுகிறான். ஆகவே தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட ரிட் பெட்டிஷன்களை விசாரிப்பதற்காக உயர் நீதிமன்றத்தில் ஒரு தனி பெஞ்ச் ஏற்படுத்துவது நன்றாகயிருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதிர்ஷ்டவசமாக, சிறையைப் பற்றிய கருத்து இப்போது வேகமாக மாறி வருகிறது. உலகமெங்கிலும் மாறிவருகிறது. நம் நாட்டிலும், குறிப்பாக தமிழ் நாட்டிலும் அந்தக் கருத்து மாறிவருகிறது. முன்பு சிறை சென்றவன் என்றால் அவன் கண்டெம் செய்யப்பட்டு, அவன் சமுதாயத்திற்கே ஆகாதவன், நிலை பாராதவன் என்ற கருத்து ஒரு காலத்தில் இருந்தது. இப்போது சிறைச் சென்றவன் என்றால் அவன் சீர்திருத்தப்பட வேண்டியவன், ஏதோ தவறு செய்து விட்டான் என்று நினைக்கிற இந்தக் காலத்தில் சிறைச் சென்றவன் மேலும் தவறுகள் செய்யாமல் அவனை திருத்துவதற்கு வழி செய்யவேண்டும். எனவே, திறந்த வெளிச் சிறைச்சாலைகளை அதிகப்படுத்த வேண்டும். இருக்கிற சிறைச்சாலைகளில் உள்ள வசதிகளை அதிகப்படுத்த வேண்டும்.

உணவு சப்ளை செய்வதைப் பொறுத்தவரையில் சென்னைக் கைதிகளுக்கு இட்டிலி, உப்புமா போன்றவை தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது சென்னையில் மட்டும் ஏன் தரப்படவேண்டும்? மற்ற சிறைகளிலும் இந்த உணவு சப்ளையை இந்த முறையில் மாற்றி அமைத்து, இட்லி, உப்புமா போன்ற தமிழக உணவை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சிறையில் குளிப்பதற்கு எப்போதாவது ஒரு முறைதான் வசதி கிடைக்கிறது. அன்றாடம் குளிப்பதற்குச் சிறைக்கைதிகளுக்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் இல்லாத பகுதியில் இந்த வசதி இல்லாமல் இருக்கலாம். ஆனால் மற்ற இடங்களில் அன்றாடம் குளிப்பதற்கான வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேட்டிகளுக்கான சந்தர்ப்பம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதன் பீரியாடிசிட்டியை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு முறை ஒருவன் சிறைக்குச் சென்று வந்து விட்டால் அவனைக் கண்டெம் என்று சமுதாயம் ஒதுக்கி வைத்து விடுகிறது. ஆகவே, சிறைக் கைதிகளுக்கு குறிப்பாக லாங்டர்ம் பிரிசினர்களுக்கு, 3 அல்லது 5 ஆண்டுகாலம் இருப்பவர்களுக்கு தொழிற் பயிற்சி கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். கோவை ஜெயிலில் இந்த வசதி இருக்கிறது. சில ஜெயில்களில் இல்லை. இந்த வசதி எல்லா ஜெயில்களிலும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். அப்படி, அவர்களுக்குத் தொழிற்பயிற்சி கொடுக்கப்படுமானால் அவர்கள் வெளியே வந்த பிறகு சமுதாயத்தோடு ஒட்டி வாழ்ந்து நிச்சயமாக ஒரு நல்ல குடிமகனாக வாழமுடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆயுள் கைதிகளுக்கான தண்டனை காலம் 20 ஆண்டுகள் என்று இருக்கிறது. மார்க்குகள் மூலம் அது குறையும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் குறைந்தாலும் 15 ஆண்டுகள் ஆகலாம். அப்படியில்லாமல், இந்த மார்க்குகள் எல்லாமே சேர்த்து இந்த ஆயுள் தண்டனை காலம் 15 ஆண்டுக்குள்ளாகவே முடிந்து விடுகிற அடிப்படையில் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால், மனிதனாக சிறைக்குச் சென்றவன் மிருகமாகத் தான் விடுதலையாகி வருவான். ஆகவே, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு, இந்த மான்யத்தின் மீதான விவாதம் முடியும் வரையில் இந்த அவையின் அலுவல் நேரத்தை நீடிக்கிறேன்.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், எங்கள் கட்சியின் சார்பில் 2 வெட்டுப் பிரேரணைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்று துரிதமாக நீதி வழங்கப்படவேண்டுமென்பது, மற்றொன்று, ஆயுள் கைதிகள் 10 ஆண்டுகளுக்கு மேல் இருந்தால் அவர்களை விடுதலை செய்து விடவேண்டுமென்பது. இந்த முதல் வெட்டுப்பிரேரணை சம்பந்தமாக என் கட்சியின் சார்பில் பேசிய சுப்பு அவர்கள் நல்ல முறையில் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வெகு துரிதமாகச் சில முக்கியமான கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இப்போது கேஸ்கள் எல்லாம், கிரிமினல் அப்பீல்கூட 1956 வருஷத்திலிருந்து பெண்டிங்காக இருக்கிறது. விவசாயிகள் அப்பீல் 4-5 ஆண்டுகளாக இருக்கிறது. தொழிலாளர்கள் அப்பீல் 4-5 வருஷங்களாக இருக்கிறது. இன்றுகூட ஹைகோர்டிலே இரண்டு ஜட்ஜ்கள் உடல் நலம் குன்றி இருக்கிறார்கள். ஒருவர் இப்போது வந்து இருக்கிறார். இன்னொருவர் வந்து வந்து போய்க்கொண்டு இருக்கிறார். இது மாதிரியான நிலையில் என்னுடைய ஆலோசனை we can appoint two *ad hoc* Judges. They will have no lien.
அதனால் எந்த விதமான கமிட்மெண்டும் இல்லாமல் செய்யலாம். 2-3 ஜட்ஜ்களைப் போடுவதால் அவர்கள் இந்த அர்ரியர்சை உடனடியாகக் கவனிக்க முடியும். அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வரதராஜன் கமிட்டியைப் பற்றி இந்த மன்றத்தில் இரண்டு மூன்று முறை எழுப்பி இருக்கிறேன். டிசம்பர் மாதத்தில் வேலை ஆரம்பிக்கப் பட்டது என்று சொன்னார்கள். அந்தக் குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டும், இவ்வளவு காலதாமதமாகி வேலையைத் தொடங்கக் காரணம் என்ன? அந்தக் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணத்தை அரசாங்கம் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டிலேயே சிவில் கோர்ட், கிரிமினல் கோர்ட் எங்கே அமைத்தால் நல்லது என்று சிபார்சு செய்யவேண்டும்.

ஹைகோர்டில் விஜிலென்ஸ் செல் இருக்கிறது. அந்த விஜிலென்ஸ் செல்லில் ஒரு ஜட்ஜ்தான் இருக்கிறார். ஒரு ஜட்ஜ் கையில் அந்த அதிகாரம் இருக்கக்கூடாது. 2—3 ஜட்ஜ்கள் அதில் இடம்பெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் விஜிலென்ஸ் செல் நடைமுறையைக் கண்காணிக்க முடியும். ஹைகோர்ட்டுக்கு கட்டடம் கட்டவேண்டுமென்று ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுள்ளது. அது தாமதமாகி இருக்கிறது என்று மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். அதைத் துரிதமாக கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹைகோர்ட் வக்கீல்களுக்கு பூராவும் சேம்பர்ஸ் ரூம் கட்டித் தரவேண்டும்.

லேபர் கோர்ட்டைப் பொறுத்தவரையில், இன்று லேபர் கோர்ட்டில் தொழிலாளிக்கு எவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்து விடுகிறார்கள். அந்த முடிவை அமுல் நடத்த வேண்டிய பொறுப்பு ஜில்லா கலெக்டரிடத்தில் இருக்கிறது. லேண்ட் ரெவின்யூவை ரிகவர் செய்வது போல், செய்கிறோம். அந்த முறையில் செய்வது நீண்ட காலம் ஆகிறது. ஆகவே, அந்த லேபர் கோர்ட்டுக்கு, பேமெண்ட் ஆப் வேஜஸ் ஆக்ட்,

பேமெண்ட் ஆப் வேஜஸ் கமிஷன் அதிகாரம் கொடுத்து இருப்பதுபோல், இதை வசூலிப்பதற்கும் அந்தக் கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்பெல்லாம் விவசாயிகளுக்கு 'ஸ்ப்ரி லீகல் எய்ட்' கொடுத்து வந்தார்கள். அது இப்போது அதிகமாக செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன். மதுரையில் ஹைகோர்ட் பெஞ்ச் ஒன்று அவசியம் வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

மதுரைக்கு ஒரு சட்டக் கல்லூரி வேண்டும். பலர் வரவேற்கக்கூடிய விஷயமாகையால் இதை வற்புறுத்துகிறேன்.

சிறைச்சாலைகள் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள். ஆயுள் கைதிகளுக்கு பெரோலில் கொடுத்து வருவது உண்மை தான். அந்த பெரோல் கொஞ்சம் லிபரலாக இருக்க வேண்டும். 20 வருஷம் ஆயுள் தண்டனைக் காலம் என்று இப்பதை 10 ஆண்டுகளாகக் குறைக்க வேண்டும். கைதிகளுக்கு சிறைச்சாலைக்குள்ளேயே கேண்டின்கள் வைக்கவேண்டும். சிறைச்சாலையில் தொடர்ந்து 2—3 வருஷம் இருந்து விட்டால், அவர்களுக்கு அங்கே உள்ள சூழ்நிலை தவிர வேறு இருப்பது இல்லை. ஆகவே, அந்தச் சூழ்நிலை ஏற்படாத வகையில் அவர்கள் வேறு உணவு வகைகளைச் சாப்பிடுவதற்கும் வழி வகைச் செய்யவேண்டும். கேரளாவில் சிறைச்சாலையில் கேண்டின்கள் இருக்கின்றன. நான் தொடர்ந்து 4 வருஷம் சிறைச்சாலையில் இருந்து இருக்கிறேன். அங்கே எழுதுவதற்கு படிப்பதற்கு வசதி இருந்தாலும், உணவு வகையில் சில மாற்றங்கள் இருந்தால் தான் அந்த வசதிகளும் பிரயோசனப்படும். ஆகவே, சிறையில் கேண்டீன்கள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலையில் வேலை செய்கிறார்கள். வேலை செய்தால் கூலி உண்டு என்ற முறை வரவேண்டும். கூலி இல்லாமல் வேலை செய்வது என்ற போக்கை மாற்ற வேண்டும். குறைந்த அளவுக்குக் கூலி போட்டாவது அவர்கள் கணக்கில் வரவு வைத்து கடைசியாக அவர்கள் விடுதலையாகி வெளியே வரும்போது அவர்கள் 'பர்சனல் கேஷ் பிராபர்டி அகௌண்டில்' ரூ. 50, ரூ. 500, ரூ. 1,000. என்று இருக்குமானால், அது அவர்களை மிகவும் ஊக்குவிக்கும், உற்சாகப்படுத்தும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குப் பலர் சிறைக்குச் செல்கிறார்கள். சில பேர் 144 தடை உத்தரவை மீறிச் சிறைக்குச் செல்கிறார்கள். சிலர் அரசியல் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைக்குச் செல்கிறார்கள். வசதி படைத்தவர்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ் சிறை கொடுக்கிறார்கள். பட்டதாரிகளாக இருந்தால் அவர்களுக்கு என்று தனியாக சலுகைகள் அளிக்கிறார்கள். அரசியல் காரணத்திற்காக சிறைக்குச் செல்பவர்களுக்கு தனியாக ஒரு சிறை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சிறையில் இருக்கும் வார்டன்களுக்கு 8 மணி நேரம் வேலை என்று சொல்ல முடியாது. சில சிறைகளில் தான் இருக்கிறது. நான் சேலம் சிறையில் இருந்து இருக்கிறேன். அந்தச் சிறையில் மாத்திரம் தான் 8 மணி நேர வேலை வார்டன்களுக்கு இருக்கிறது. மற்றச் சிறைகளில் இருக்கும் வார்டன்களுக்கு இந்த 8 மணி நேரம் வேலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறையில் இருக்கும் அதிகாரிகளின் நிலையும், போலீஸ் துறையில் இருக்கும் அதிகாரிகளின் நிலையும் ஒரே மாதிரி இருக்கவேண்டும். மதுரையில் சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸ் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தமாதிரி ஜெயில் அதிகாரிக்கும் நிலை இருக்கவேண்டும். போலீஸ் அதிகாரிக்கு என்னென்ன வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அது மாதிரி ஜெயில் அதிகாரிகளுக்கும் கொடுக்கவேண்டும். அதே மாதிரி, டி.ஐ.ஜி., ஐ.ஜி. போன்றும் இருக்கவேண்டும். அப்படி இருந்தால், அந்த இலாகா இன்னும் நன்றாக இருக்கும்.





ஜெயிலில் இருப்பவர்களிடத்தில் இன்டர்வியூவைப் பற்றிச் சொன்னார்கள். குடும்பத்தோடு சிறைச்சாலைக்கு வந்து பார்ப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உட்கார்ந்து பேசுவதற்குக் கூட வசதி இல்லை. ஸ்பெஷல் கிளாசிலே இருப்பவர்களுக்கு எல்லா வசதியும் இருக்கிறது. வரும் விசிட்டர்ஸ் உட்கார்ந்து பேசுவதற்கு ஒரு ஷெட் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலூரில் நல்ல முறையில் சிறை அமைந்திருப்பதைப் போலவே மதுரைச் சிறையும் இருக்க வேண்டும். சிறை அமைக்கும்போதெல்லாம் வேலூர் சிறையை மாதிரியாக வைத்து அமைக்க வேண்டும்.

நீதித் துறையில் தமிழை அதிகமாக உபயோகப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். என் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவரே தமிழில் தீர்ப்புகளை எழுதினால் எப்படித் தெளிவாக எழுத முடிகிறது என்று ஒரு உதாரணம் கொடுத்தார். தமிழில் தீர்ப்புக்களை நல்ல முறையில் எழுதக்கூடிய ஜட்ஜுகளுக்கு இந்த அரசு ரெகக்னிஷன் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட முக்கியமான விஷயங்களை உடனடியாகக் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட சாதிக்கக் கூடிய விஷயங்களைச் சாதிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, என்பேரில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தி ஒருசில கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

மதுரையில் பெஞ்சு அமைக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிற இந்தத் தீர்மானம் மிக முக்கியமானது. ஏனைய மற்ற மாகாணங்களிலெல்லாம் இப்படிப்பட்ட பெஞ்சுகள் இருக்கின்றன. சான்றுகள் இருக்கின்றன. அலகாபாத்தில், லக்னோவில் ஹைகோர்ட் பெஞ்சுகள் இருக்கின்றன. முன்பு திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம் ஒன்றாக இருந்தபோது திருவனந்தபுரத்தில் ஒரு பெஞ்சு இருந்து வந்தது. இப்போதும்கூட திருவனந்தபுரத்தில் பெஞ்சு வரவேண்டுமென்று கேரள அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. பத்திரிகையில் பார்த்தேன். அங்கே உள்ள முதலமைச்சர் அவர்கள் ஹைகோர்ட்டை கேட்டிருக்கிறார்கள் என்று பத்திரிக்கையில் செய்தி வந்தது. அதே மாதிரி நமது அமைச்சரவர்களும் மதுரையிலே இந்த பெஞ்சை கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, இந்த ராஜ்யத்தில் தான் பெஞ்சு நீதிபதிகளுக்கு சங்கடங்கள் இருக்கின்றன. மதுரையில் பெஞ்சு வந்தால் இந்தச் சங்கடங்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 15

இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். கோர்ட்டுகளில் எந்த மொழி இருக்க வேண்டுமென்பதைப்பற்றி மத்திய அரசு தனது கருத்தை மாநில அரசுகளுக்குத் தெரிவிப்பதாக அறிகிறேன். மற்ற மாநிலங்களில் இந்தி கோர்ட் மொழியாக இருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழ்மொழிதான் கோர்ட் மொழியாக இருக்க வேண்டும், அதுதான் பொறுத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஹைகோர்ட்டைப் பொறுத்தவரையில் அங்கே ஆங்கிலம் இருக்கிறது. ரெகார்டுகளெல்லாம் ஆங்கிலத்தில் இருக்கிறது. தமிழ் மொழியில் இருந்தால், அதை மொழி பெயர்த்துத் தரவேண்டும் என்பது போன்ற கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன. வீணாகப் பணமும் செலவாகிறது. இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஹைகோர்ட் விதி முறைகளைத் திருத்தி அமைத்து ட்ரான்ஸ்லேஷன் போன்ற காரியங்களுக்குப் பணம் வீணாகச் செலவு செய்யாமலிருப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, தமிழில் ஜட்ஜ்மெண்ட் கூறுகிறவர்களுக்குப் பரிசுத் திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் இருப்பதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம். நீதி நடப்பது எந்த மொழியில் இருக்க வேண்டுமென்றால் அது அந்நாட்டுத் தாய் மொழியில்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் எல்லோரும் புரிந்துகொள்ள முடியும். வழக்கறிஞர்கள் சரியாக வாதாடுகிறார்களா என்பதைக் கட்சிக்காரர்களும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும். ஆங்கிலத்தில் நடந்தால் கட்சிக்காரர்களுக்குப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால், சில ஆங்கிலத்தில் இருக்கலாம். மேற்கோள் காட்டுவது, வாதங்கள் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும். ஏனென்றால், சுப்ரீம் கோர்ட், மற்ற மாநிலக் கோர்ட்கள் தீர்ப்புகளை மேற்கோள் காட்ட வேண்டுமானால், அந்தத் தீர்ப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கும். இருந்தாலும், படிப்படியாகத் தமிழைக் கொண்டுவரலாம். நீதி மன்றங்களில் தமிழுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். தலைமை நீதி மன்றத்தில் கூட அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். டிஸ்ட்ரிக்ட் லெவலில் மட்டும் கொடுத்தால் போதாது என்று கூற விரும்புகிறேன்.

கோர்ட்டுகளில் அதிகமாகக் கேஸ்கள் தங்கிவிடுகின்றன. உயர்நீதி மன்றத்தில் ரிட் பெட்டிஷன்கள் அதிகமாக இருக்கின்றன. கிரிமினல், சிவில் வழக்குகள் எல்லாம் அதிகமாகத் தங்கியிருக்கின்றன என்ற புகார்கள் அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறோம். இவைகளைப் பைசல் செய்வதற்கு, தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு நீதித் துறையிலே அதிகமாக உதவி புரிவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும். "லீகல் எய்ட் டு தி புவர்" அதிகரிக்கப்பட வேண்டும். இது நடைமுறையில் கொஞ்சம் இருக்கிறது. பெரிய கிரிமினல் குற்றங்களில்தான் வக்கீல்கள் அரசாங்கத் தரப்பிலிருந்து தரப்படுகிறார்கள். சிவில் வழக்குகளில் கூட மிகவும் சாதாரண ஏழை எளியவர்களுக்குப் போதிய வசதிகளை செய்து தரவேண்டும். எத்தனையோ வழக்கறிஞர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இப்படிப்பட்ட உதவி செய்வதற்குத் தாராளமாக முன்வருவார்கள். நல்ல உள்ளம் படைத்த வாலிபர்கள்—வக்கீல்கள்—இருக்கிறார்கள். அவர்களை உபயோகப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1971 ஜூலை 15] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இப்போது காப்பியின் விலை எல்லாம் ரொம்ப விலைக்கு விற்கிறது. 70 பைசா என்று போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக சர்டிபைட் காப்பி எடுக்க வேண்டுமானால் ஏழை எளியவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. வீண் செலவு ஏற்படுகிறது. சாதாரணமாக, சமுதாயத்திலிருக்கின்ற அமைப்பினைப் பார்க்கும்போது ஏழை எளியவர்களுக்கு இந்த மாதிரியான அதிகமான கஷ்டங்களைக் கொடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காப்பியின் ஷீட்டின் விலையை உயர்த்தியிருப்பது பொருத்தமானதல்ல.

அடுத்து, நீதிபதிகளை நியமிக்கின்ற போது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுவதாகப் புகார்கள் இருக்கின்றன. இந்த விஷயம் கட்சிக் கண்ணோட்டத்திற்கப்பாற்பட்டதாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அப்படிப் பார்க்கும்போதும் கூட அதிலே திறமையும் தகுதியும் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும். சமீபத்தில் நடந்த ஜில்லா நீதிபதித் தேர்வு பற்றிக் குறிப்பிட்டார்கள். பேனலில் 7 பேர்கள் இருந்தாலும் 3 பேர்களைத்தான் நியமனம் செய்தார்கள், கட்சிக் கண்ணோட்டம் இருந்தது என்று சொன்னார்கள். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

பப்ளிக் ப்ராசிக்யூட்டர்கள், கவர்ன்மென்ட் ப்ளீடர்கள் நியமனம் செய்கின்ற போதும் தகுதியும், திறமையும் படைத்தவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும். இஷ்டப்பட்டவர்களுக்கு. கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுப்பது என்ற நிலையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்னொரு விஷயம். மேஜிஸ்ட்ரேட்களைப்பற்றி. மேஜிஸ்ட்ரேட்களாக நியமனம் பெறுகிறவர்கள் கடைசிவரை மேஜிஸ்ட்ரேட்டுகளாக இருக்கின்ற நிலையை மாற்ற வேண்டும். "ஒன்ஸ் எ மார்ட்கேஜ்—ஈஸ் ஆல்வேஸ் எ மார்ட்கேஜ்—ஒன்ஸ் எ மாஜிஸ்ட்ரேட் ஈஸ் ஆல்வேஸ் எ மாஜிஸ்ட்ரேட்' என்று சொல்வார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டும். மேஜிஸ்ட்ரேட்களை முன்சீப் தேர்வில் கலந்துகொள்ளச் செய்யலாம். மேஜிஸ்ட்ரேட்களை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டுவருவதற்கு என்னென்ன வழிவகைகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். கூடியவரையில், கிரிமினல்—சிவில் பிரிவுகளை பிரித்து வைக்க முடியுமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

நமது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு யோசனையைக் கூறினார்கள். அவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பொதுவாக, ஹானரரி ஃபர்ஸ்ட் க்ளாஸ் மேஜிஸ்ட்ரேட், கௌரவ மேஜிஸ்ட்ரேட் என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். இவர்களையெல்லாம் ஸ்டைபெண்டரி மேஜிஸ்ட்ரேட்களாக மாற்றினால் சிறப்பாக இருக்கும். இந்த ஹானரரி மேஜிஸ்ட்ரேட்கள் எல்லாம் பயிற்சி பெற்றவர்களாக இருப்பதில்லை. அவர்களுக்கு சட்டத் துறையில் போதிய ஆர்வமும் ஆற்றலும் இல்லாத காரணத்தால் பல வழக்குகளில் தீர்ப்பு எழுதும்போது வேறு சிலருடைய உதவியை நாட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

பொதுவாக நாம் இந்தத் துறையைப் பார்க்கும்போது இந்தத் துறையிலே இன்னும் அதிகமான காரியங்களெல்லாம் செய்ய வேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1971 ஜூலை 15

நீதிபதிகள் எல்லாம் பொது விழாக்களிலேயும், மற்ற மற்ற விழாக்களிலேயும் கலந்துகொள்ளாது என்பது அவ்வளவு பொருத்தமானதாக இல்லை.

சாதாரணமாகச் சொல்லுவார்கள், 'ஜஸ்டிஸ் ஷுட் பி டன் அன்டு இட் ஷுட் அப்பியர் டு ஹேவ் பீன் டன்' என்று. அதே மாதிரி நீதிபதிகள் எல்லாம் பொதுவான காரியங்களில் திறப்பு விழாக்களில் கலந்து கொள்ளாமல் இருந்தால் அது பொது மக்களுக்கும் தப்பான பிரச்சாரம் செய்வதற்கு எந்த விதமான வாய்ப்பாகவும் இருக்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக நமது நீதிபதிகள் அதிகமாக்கப்பட வேண்டும். பல இடங்களில் பல முறைகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சிவில் நீதித் துறையைப் பொறுத்தவரையில் லிஸ்ட் சிஸ்டம் என்று வைத்திருக்கிறார்கள். லிஸ்டட் கேஸை எடுப்போம் என்ற ஒரு நியதியை வைத்திருக்கிறார்கள். இதனால் பல கஷ்டங்களும் துன்பங்களும் ஏற்படுகின்றன. ஒரு கேஸ் லிஸ்டில் வந்துவிட்டது என்றால் எக்காலத்திலும் மாறுவதில்லை. ஒன்று வழக்கறிஞர் சாகவேண்டும் இல்லாவிட்டால் அவர் கட்சிக்காரர் சாகவேண்டும் என்ற நிலைமையில் இருக்கிறது. ஆகையால் லிஸ்ட் சிஸ்டப்படி ஒரு வழக்குக்கு மேல் 4, 5 கேஸ்கள் போட அசௌகரியம் இருந்தால், நீதிபதிகள் அதிகப்படுத்த வேண்டும். அதற்கு ஹைகோர்ட் மூலம் கேட்க வேண்டும். உயர்நீதி மன்றம் சற்று பிடிவாதத்தில் இருக்கிறது. முன்சிப் ஆனாலும் சரி, ஜில்லா ஜட்ஜ் ஆனாலும் சரி அவர்கள் பிடிவாதமாக இருப்பதால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும். தவிர்த்தால்தான் நீதித் துறைக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதை இங்கு குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

பொதுவாக பல பகுதிகளில் பல கோர்ட்டுகளுக்கு கட்டிடங்கள் இல்லை. நீதிபதிகள் தங்குவதற்கு போதிய வசதி இல்லை. இது மாதிரி கஷ்டங்கள் இருக்கின்றன. தனியார் வீடுகளில் அவர் இருப்பது சங்கடமாக இருக்கிறது. நீதித் துறையில் இருக்கிறவர்களுக்காவது உடனடியாக அரசாங்கத் தரப்பிலிருந்து கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வழிவகை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எங்கள் ஊரில் நாகர்கோவிலில் ஜில்லா கோர்ட் இருக்கிறது. ஆனால் ஜில்லா மாஜிஸ்ட்டிரேட் கோர்ட் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அந்தக் கோர்ட்டை அதே காம்பவுண்டில் அமைத்துத்தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் முன்சிப் உத்தியோகத்திற்கு நியமனம் செய்வதில் சுறுசுறுப்பானவர்களையும் திறமைமிக்க வாலிபர்களையும் நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கட்சிக் கண்ணோட்டத்தை அப்புறப்படுத்த வேண்டுமென்று மறுமுறையும் வலியுறுத்தி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீதித்துறை பற்றியும் சிறைச்சாலை நிர்வாகம் பற்றியும் மாண்புமிகு அங்கத்தினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



1971 ஜூலை 15] [திரு. செ. மாதவன்]

நீதித் துறையைப் பற்றி அவர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் உயர்நீதி மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க ஆண்டுதோறும் அரசு ஏற்பாடு செய்வதுபோல் இந்த ஆண்டும் ஏற்பாடு செய்யும் என்று நம்புகிறேன். நீதி நிர்வாகத்தில் நீதித்துறை சிறந்த முறையில் நடைபெற வேண்டும், சுதந்திரமாக இயங்க வேண்டும். யாருக்கும் அஞ்சாது நியாயம் வழங்குவதில் அவர்கள் சுதந்திரமாகச் செயல்படவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அந்தக் கருத்தைத்தான் பல்வேறு அங்கத்தினர்கள் வலியுறுத்தினார்கள். இதில் அரசியல் கட்சிக்கோ அரசியல் கட்சியினுடைய விருப்புகளுக்கோ இடம் இல்லையென்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இதில் கட்சி இருப்பதாக யூகித்துக் கொண்டு சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. எந்த அடிப்படையில் சொல்லப்பட்டது என்ற விளக்கம் இல்லை. நான் யூகிப்பது எல்லாம், ஏதோ ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்திருநதால் அவர்கள் நீதித் துறைக்கு எந்தக் காலத்திலும் வரமுடியாது என்ற அடிப்படையில் சொல்லியிருக்கலாம் என்று கருதுகிறேன். நான் அறிந்தவரை அப்படிப்பட்ட ஒரு நியதி எந்த நாட்டிலும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகள் ஒவ்வொருவராகப் பார்த்தால் யார் யார் என்பது புலப்படும். அவர்கள் முன்னாலே எங்கு இருந்தார்கள் என்று புலப்படும். அண்மையிலே திருநெல்வேலி மாவட்டத்தில் நடந்த தேர்தலில் ஈடுபட்டு ஒரு கட்சியைச் சேர்ந்தவர் நம்முடைய மாவட்ட முன்சீபாக சர்வீஸ் கமிஷனால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது எல்லாம் சட்ட விரோதமானதாக நாம் பார்க்க முடியாது. அதற்கு சட்டம் போட்டாலும் அது அரசியல் சட்ட அமைப்புச் சட்டப்படி செல்லாது. நீதித் துறையில் யார் யாருக்கு தகுதி இருக்கிறதோ அவர்கள், முறைகள் பின்பற்றப்பட்டு சட்டத்துக்கும் விதிகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

மாவட்ட நீதிபதியைப் பொறுத்த அளவில் உயர்நீதி மன்றம் பல பெயர்களை சிபாரிசு செய்கிறது. குறிப்பிட்ட நபர்கள் பலரை சிபாரிசு செய்கிறது. அதுவும் திறமையானவர்களைப் பொறுக்குகிறார்கள். இதுவரை நமக்குத் தெரிந்தவரை எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்கள் அதில் அனுமதித்ததாகத் தெரியவில்லை. அரசியல் குறுக்கீடு என்று சொல்லி இதற்கு ஒரு மாசு கற்பிப்பது சரியானதல்லவென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சுதந்திரமான நீதிபதிகள் தேவை என்று கருதுகிற அதே நேரத்தில் மக்களுக்கு நீதிமன்றம் நன்மை செய்யவேண்டும். மக்களுக்கு நன்மை செய்வதற்கு கொண்டு வரக்கூடிய சட்டங்களை மக்களின் நன்மைகளைக் கருதி அமல் நடத்த வேண்டுமென்பதை யாரும் சுட்டிக்காட்டாதது வருத்தமாக இருந்தது. சுதந்திரமாக நீதி இயங்கும்பொழுது, அதே சமயத்தில் மக்கள் நன்மைகளைத் தடுக்க நீதித்துறை இருப்பதாக அந்த எண்ணத்துக்கு இடம் கொடுக்கலாகாது. ஆகவே சுதந்திரத்தை ஆதரிக்கிறபொழுது மக்களுக்காக இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் சிறந்தமுறையில் அமல் நடத்தப்படும் என்ற முறையில் அரசு கவனத்தோடு செயல்படுகிறது.

எல்லோரும் கூறிய கருத்து, காலதாமதம் ஒரு நீதிமன்றத்தில் இருந்தால் எந்த நன்மைக்கு சட்டம் இயற்றுகிறோமோ அந்த நன்மை கிடைக்காத அளவுக்கு சூழ்நிலை உருவாக்கப்படும் என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். அதை நம் நீதி மன்றங்கள் சிறந்த முறையில் பரிசீலித்து

அதனுடைய திட்டங்களை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று நான் விரும்புகிறேன். மற்ற மாநிலங்களை நம் மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் நாட்டிலுள்ள நம் நீதி மன்றங்கள் சிறந்த முறையில் செயல்படுவதும் அதிக காலதாமதம் இல்லாத அளவுக்கு அரியர்ஸ் இல்லாத அளவுக்கு நீதித்துறை செயல்படுவதற்கு வாய்ப்புகளை உருவாக்குகிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம். இந்திய நாட்டு அளவில் பரிசீலித்தபோது நம் தமிழ்நாடு நீதிமன்றங்களில் அதிகக் காலதாமதம் இல்லையென்பதையும் நாம் காணமுடிகிறது. இருக்கிற காலதாமதத்தைப் போக்க வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடில்லை.

ஆனால், அதற்காக நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்ன கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. நீதிபதிகள் எண்ணிக்கையும், நீதிமன்றங்கள் எண்ணிக்கையும் ஒரு நாட்டில் குறைந்தால் தான் அந்த நாட்டிலே நீதியான ஆட்சி நடைபெறுவதாக இந்த அரசு கருதுகிறது. அந்த எண்ணத்தை ஆதரித்து இடைக்காலமாக சில நீதிபதிகள் போடவேண்டுமென்ற யோசனையை நாம் ஏற்றுக் கொள்வதாக இல்லை. ஆனால் தேவைக்கேற்றபடி நீதிபதிகளை அதிகப்படுத்துவதில் அரசு தயக்கம் காட்டியதில்லை. நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு கூடுதலாக எப்போது தேவை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் நீதிபதிகளைப் போட்டிருக்கிறோம், என்பதை கவனப்படுத்த ஆசைப்படுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோவையில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஜில்லா கோர்ட்டில் கேஸ்கள் அதிகமாகிவிட்ட காரணமாக உபரியாக ஒரு ஜில்லா நீதிபதியைப் போட்டு, ஆறு மாதங்களில் எல்லா கேஸ்களும் செட்டில் செய்ய முடிந்தது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத் தெரிந்துதான் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் போடுவதற்கு அரசு தயக்கம் காட்டாது என்று சொன்னேன்.

அதுமட்டுமல்ல. இந்த நீதிமன்றங்களுக்குச் சென்றுதான் நீதி பெற வேண்டும் என்பதல்லாமல் ஆங்காங்கு மக்கள் மன்றங்கள் நீதிமன்றங்களாக செயல்பட வேண்டுமென்று கருத்து வலியுத்தப்பட்டது. ஆனால் பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் கருத்தை ஆதரிக்கவில்லையோ என்ற சந்தேகம். ஹானரரி மேஜிஸ்ட்டிரேட் பற்றி சொன்னதால் இதை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஒரு சில இடங்களில் முழுமையான அளவுக்கு நீதிமன்றங்கள் செயல்படாவிட்டாலும் மக்கள் மன்றத்தில் எளிய முறையில் நீதி கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற கருத்தை நாம் பரிசீலிக்க வேண்டும். சிவில் வழக்குகளைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் அது கிட்டாத அளவுக்கு சூழ்நிலையைக் காண்கிறோம். ஏற்கனவே வில்லேஜ் கோர்ட்ஸ் இருந்தன. அதற்குமுன் பஞ்சாயத்து நீதிமன்றங்கள் இருந்தன. அவைகளையும் 1958 பஞ்சாயத்து சட்டத்துக்குப் பின்னால் எடுத்துவிட்டோம். நம்முடைய அரசு இதைப்பற்றி பரிசீலித்து கிராமங்களில் எல்லாம் சிவில், கிரிமினல் நீதித்துறைகள் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு நடத்துவதற்கு ஊர் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டுமென்ற திட்டத்தை அரசு பரிசீலித்து



வருகிறது. அது நிறைவேற்றப்படும். ஆனால் கிராம மக்கள் எளிய முறையில் விரைவாக சிறுசிறு வழக்குகளுக்கு நீதிமன்றங்களையும் வழக்கறிஞர்களையும் நாடிச் செல்லாத சூழ்நிலையை உருவாக்கலாம் என்று நம்புகிறோம். புதிய புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதற்கும் இருக்கிற நீதிமன்றங்களின் எல்லைகளை பரிசீலிக்க ஒரு குழு அமைத்திருக்கிறோம். அதில் அரசு சார்பில் ஒரு அதிகாரியும் நீதி மன்றங்களின் சார்பில் ஒரு ஜில்லா நீதிபதியையும் போட்டிருக்கிறோம். ஊர் ஊராகச் சென்று பரிசீலித்து வருகிறார்கள். அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்வது தவறாகும். இன்னும் விரைவாக அறிக்கை தருவார்களானால், அதன்மேல் செயல்பட பி.ப.
அரசுக்கு வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன். 2-00

நீதிமன்றத்தில் வழங்குகிற மொழி மக்களுக்குத் தெரிந்த மொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினார்கள். அதை முற்றிலும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நாம் பொறுப்பேற்ற பிறகு மாவட்ட அளவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சாட்சியங்களைத் தமிழில் பதிவு செய்யவேண்டுமென்ற நிலைமையில் நடைபெற்று வருகிறது. இதை உயர்நீதி மன்றத்திற்கும் கொண்டு வரவேண்டுமென்ற கருத்தை இந்த அரசு மனப்பூர்வமாக ஏற்று வரவேற்கிறது. எந்த அளவில் மாவட்ட அளவில் செயல்படுகிறது என்பதைப் பார்த்து, பின்னர் இங்கே நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்று அரசு கருதுகிறது. நீதிமன்றத்திலும் மொழிப் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மாவட்ட அளவில் நீதிபதிகள் தமிழில் தீர்ப்பு அளிக்க வாய்ப்பு ஏற்படுத்த--ஜெட்ஜ்மெண்டுகள் மாடல்—ஒன்று தயாரிக்கும் முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது. அதை விரிவுபடுத்த வாய்ப்பு இருக்கும் என்று கருதுகிறேன்.

மாவட்ட நீதிமன்றங்களுக்கு நல்ல கட்டடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதிமன்றங்களுக்கு நல்ல கட்டடம் அமைய வேண்டும் என்ற கருத்தோடுதான் மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். தர்மபுரியில் தொடங்கப்பட்டுவிட்டது. மற்ற மாவட்டங்களிலும் இந்த வேலை தொடங்க காலதாமதம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்ற கருத்தை நான் வரவேற்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு நீதி கிடைப்பதோடு வழக்காடுவதற்கும் உதவி செய்ய வேண்டுமென்று கருத்து நீண்ட நெடுநாளாகவே நாம் வலியுறுத்திக் கொண்டு வருகிற ஒன்றுதான்.—லீகல் அசிஸ்டென்ஸ்—எந்த எந்த முறையில் ஏழை எளியவர்களுக்கு எல்லாம் அளிக்கலாம் என்பது இப்போது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதற்காக இப்போது ஒன்றுமே இல்லை என்று சொல்லமுடியாது. கிரிமினல் வழக்குகளைப் பொறுத்து வழக்காட லீகல் அசிஸ்டென்ஸ் கொடுக்கிறோம். சிவில் வழக்குகள் சம்பந்தப்பட்ட வரை பாப்பர் சூட்டாக இருந்தால் ஸ்டாம்ப் கட்டண விலக்கு கொடுத்து வருகிறோம். இன்னும் வழக்கு அறிஞர்களையே நியமித்துக் கொடுக்கவேண்டும் தொழிலாளர்களுக்கு, விவசாயிகளுக்கு என்கிறபோது அதை எப்படி கொடுக்கலாம் என்பதை ஆழ்ந்து பரிசீலித்தே ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய நீதிபதிகளுக்கு அதிக வசதி, வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என்று சொன்னார்கள். உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு சில வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என்ற கருத்தை அண்மையில் நாம் வலியுறுத்தியிருக்கிறோம். மத்திய அரசுதான் முடிவு எடுக்க வேண்டும். அவர்களும் அனுமதிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நீதிபதிகளுக்கு வசதிகளை அதிகப்படுத்திக் கொடுத்தால் அவர்கள் சுதந்திரமாக யாரையும் எதிர்பாராமல் செயல்பட வாய்ப்பு இருக்கும் என்பதை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அதன் காரணமாக மாவட்ட அளவில் வீடுகள் கட்ட ஒரு முயற்சி எடுத்தோம். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நாங்கள் அதைக் கைவிட்டுவிட்டோம் என்று நினைத்தார்களோ என்னவோ, அப்படி இல்லை. இன்றையதினம் கீழே இருந்து சப்-மாஜிஸ்ட்ரேட் அளவில் இருந்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பலவிடங்களில் கட்டப்பட்டும் இருக்கின்றன. சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகளுக்கும் அத்தகைய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு பரிசீலனையில் இருக்கிறது. இந்தத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றிக் கொடுக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதித் துறையில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான பிரச்சினை மக்களுக்காக நாம் நிறைவேற்றுகிற சட்டத்தின் பலன்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்வதுதான். வழக்கறிஞர்களின் திறமைக்கு ஏற்றவாறு பலபல சந்தர்ப்பங்களில் பல பலவிதமாக வாதிட்டு அந்த நன்மைகள் மக்களுக்கு கிடைக்காது காலதாமதம் ஆவது தவிர்க்கப்பட வேண்டும். அதற்காகத்தான் இந்த அரசு சில முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு வருகிறது.

அண்மையில் மத்திய சட்ட அமைச்சரோடு கூட வாதிட்டோம். திரு. ராஜமன்னார் குழுவிலும் அது விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக நாம் காணவேண்டுமென்று விரும்புகிற பரிகாரம்—புதியதாக நாம் மக்களுடைய நன்மைக்காக ஒரு சட்டம் இயற்றுகிறபோது—அது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானதா, இல்லையா என்பது பற்றிய கருத்தை எல்லாம் உயர்நீதிமன்றம் நமக்கு முன்கூட்டியே அறிவித்துவிட ஒரு சந்தர்ப்பம் இருக்க வேண்டும். அவர்களுடைய கருத்தின் அடிப்படையில் நாம் சட்டத்தை நிறைவேற்றிவிட்டால்—அதுசம்பந்தமாக வழக்குகள் கோர்ட்டுக்குச் செல்கிறபோது எல்லா வழக்குகளையும் போல இதையும் விசாரிக்க வேண்டுமென்ற நிலை இல்லாமல்—உடனடியாக இதற்கென்று ஒரு பெஞ்சு—சில நீதிபதிகளைப் போட்டு அந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களுக்கும் இறுதியான விளக்கத்தை தந்துவிட வேண்டும். அதற்குப் பிறகு வழக்கு மன்றத்திற்குப் போகவே வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட வேண்டும் என்பது ஒரு முக்கிய கருத்தாகும்.

இப்போது இருக்கிற 1948-ம் வருடத்திய ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம்—அதற்கான விளக்கங்கள் இன்னமும் ஒவ்வொன்றாக வந்துகொண்டிருக்கின்றன. இதுபோல இல்லாமல் முழுமையாக இனி ஒரு சட்டம் வருவதற்கு முன்னரே அவர்கள் கருத்து அறியப்படவும், சட்டம் இயற்றிய பின்னர் அது நீதி மன்றத்தில் செல்லத்தக்கது அல்ல என்று வாதிட வசதியில்லாத ஒரு நிலையும்





ஏற்பட்டாக வேண்டும். இது சம்பந்தமாக நம்முடைய கருத்தை மத்திய அரசாங்கம் நல்ல முறையில் பரிசிலனை செய்து நல்ல முடிவை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்களது மகாநாட்டிலும், முதல் அமைச்சர் அவர்களுடைய மகாநாட்டிலும் இந்தக் கருத்தை வலியுறுத்திய நான் மக்களுக்கு நன்மை தரக்கூடிய நல்ல சட்டங்களுக்கு முன்கூட்டியே விளக்கம் தருகிற நிலைமையை ஏற்படுத்த அரசியல் சட்டத்திலேயே வழிவகை செய்யப்படவேண்டும் என்பதும் வற்புறுத்தியிருக்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் நீதித்துறை நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. இந்த நீதித்துறை இன்னும் நல்லமுறையில் செயல்பட நாம் எல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும். நீதித்துறை எந்த அளவுக்கு திறமையாகவும், செம்மையாகவும் நடைபெறுகிறதோ, அந்த அளவுக்குத்தான் மக்களுக்கு இத்துறையில் நம்பிக்கை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறைச்சாலையைப் பொறுத்த அளவிலும் மனிதத்தன்மையோடு குறைந்த அளவு நல்ல வசதிகளையாவது ஏற்படுத்தித்தர வேண்டும். சிறைக்குச் செல்கிறவர்கள் திருந்தி வரக்கூடிய அளவுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமே தவிர அவர்களைக் கொடுமையாக நடத்தி, துன்புறுத்த வேண்டும் என்ற எண்ணம் இருக்கக்கூடாது என்பதை எல்லோரும் சொன்னார்கள். அரசும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் ஓப்பன் யார்ட் சிறைச்சாலைத் திட்டத்தையே கொண்டுவந்திருக்கிறோம். புதிய உணவுத் திட்டத்தையும் கொண்டுவந்திருக்கிறோம். இது எப்படி செயல்படுகிறது என்று பார்த்து சென்னைக்கு மட்டும் இல்லாமல் எல்லா சிறைச்சாலைக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கருதிக்கொண்டிருக்கிறோம்.

‘ஏ’ கிளாஸ், ‘பி’ கிளாஸ், ‘வி’ கிளாஸ் என்பது பணத்தை அடிப்படையாக வைத்து ஒதுக்கப்படுவதாகச் சொன்னார்கள். நான் அறிந்த வரையில் அப்படி இல்லை. சிறைச்சாலைக்கு வருவதற்கு முன்பு அவர்கள் எந்தவிதமான வாழ்க்கை வசதிகளோடு வாழ்ந்துகொண்டிருந்தார்கள் என்பதைப் பார்த்து அந்த அடிப்படையில்தான் ‘ஏ’ கிளாஸ், ‘பி’ கிளாஸ், ‘வி’ கிளாஸ் கொடுக்கப்படுகிறது என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படி சொல்வதினாலேயே எல்லா வசதிகளையும் அங்கே பெறவேண்டுமென்று வற்புறுத்தமாட்டார்கள் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால் யாரும் சிறைச்சாலைக்குப் போக அச்சப்படமாட்டார்கள் என்பது தெரிந்த விஷயம்.

தூக்குத் தண்டனைக்குப் பதிலாக ஆயுள் தண்டனைபற்றிய கருத்து சொல்லப்பட்டது. அந்தக் கருத்தை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குத்தான் ஏற்றுக்கொள்ள முடியும். ஒருவருக்கு 30 ஆண்டு தண்டனை என்றால் மூன்றில் இரண்டு பங்கு அனுபவித்த உடனேயே அவர் விடுதலை செய்யப்படலாமா என்பதை ஆராய்வதற்கு ஒரு குழு இருக்கிறது. வெளியில் விட்டால் அவர் திரும்ப குற்றம் புரியாமல் நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்வார் என்று அந்தக் குழு கருதினால் விடுதலை செய்ய வழியிருக்கிறது. ஆனால் பத்தாண்டு காலம் சிறை தண்டனை அனுபவித்துவிட்டாலே விடுதலை அளித்துவிடவேண்டும் என்ற கருத்தை

ஏற்பதற்கில்லை. அதுவும் சில குற்றவாளிகள் சம்பந்தமாக கவனமாகப் பரிசீலிக்கவேண்டும். கொள்ளை வழக்கு—திருடுவதற்காக கொலை செய்த வழக்கு போன்றவற்றில்—அவர்களை வெளியே அனுப்பிவிட்டால் சமுதாயத்திற்கு எத்தகைய கேடு விளையும் என்பதையும் நாம் கருதிப்பார்க்கவேண்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுவாக சிறையிலே கைதிகளைப் பார்ப்பது என்பதிலே கருத்து வேறுபாடு இருக்காது. முன்பு கைதிகள் எல்லாம் சிறையில் குல்லாய் வைத்துக் கொண்டு இருந்தார்கள். இப்போது குல்லாய் தேவையில்லை. முன்னாலே ஏ. பி. சி. பிரிவுகளிலுள்ள கைதிகள் உறவினரைப் பார்க்க வேண்டுமென்றால் குல்லாய் போட்டு, சிறை உடையிலேதான் பார்க்க வேண்டும். இப்போது அப்படி இல்லை. அவர்களுடைய சொந்த உடையிலே பார்க்கலாம். சிறையிலே கொடுப்பது அவர்களுக்குப் பொருத்தம் இல்லையென்றால் அவர்கள் தைத்து வைத்துக்கொள்வதற்கும் வசதி செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் மனிதத் தன்மையின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கின்ற காரியங்கள்.

அடுத்தபடியாக, சுகாதார வசதிகளைப்பற்றிச் சொன்னார்கள். சிறையில் ஃப்ளஷ் அவுட், லெட்ரின் வசதிகள் எல்லாம் தேவை என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் செய்துகொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் 'ஃபேஸ்டு ப்ரொகிராம்' ஏற்படுத்தி சிறைகளிலே பல சுகாதார வசதிகளை அமைத்துக் கொடுத்திருக்கிறோம், பல சிறைகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. சில சிறைச்சாலைகளில் இந்த சுகாதார வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப் பட்டு வருகின்றன.

இப்படிப்பட்ட பல முயற்சிகளிலே இந்த அரசாங்கம் கவனம் செலுத்தி மனிதத் தன்மையுடன் நடந்து வருகிறது. ஒரு சமுதாயம் சிறந்த முறையில் வளர வேண்டுமானால், வாழ வேண்டுமானால் சுகாதார வசதிகள் நல்ல முறையில் ஏற்படுத்தித் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சிறந்த கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். சிறந்த சுகாதார வசதிகளையும் மற்ற வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டுமென்பதிலே கருத்து வேறுபாடு இருக்காது. நானும் அரசாங்கத்தின் சார்பிலே இந்தக் கருத்துக்களை வரவேற்று, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத்தீர்மானங்களை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : Is the hon. Member, Thiru Ponnappa Nadar pressing his cut motion?

THIRU R. PONNAPPA NADAR : Sir, I am not pressing my cut motion in view of the assurance given by the Hon. Minister.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.*

*திரு. க. சுப்பு அவர்களும், திரு. எ. சுப்பிரமணியன் அவர்களும் தங்களுடைய வெட்டுத்தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை, பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.*

*டாக்டர் ஹாண்டே அவர்கள் தம் இருக்கையில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.*





MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,06,35,600 under Demand No. 10—Administration of Justice.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Thiru K. T. K. Thangamani, to Demand No. 11 was by leave, withdrawn.

As the hon. Members Dr. H. V. Hande and Thiru K. N. Kumaraswamy were not in their seats, their cut motions were deemed to have been withdrawn.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,55,48,900 under Demand No. 11—Jails.'

The Demand was put and carried and the Grant was made.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைந்து, பேரவை மீண்டும் நாளைக் காலை 9.00 மணிக்குக் கூடும்.*

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

பி.ப. 2-53

*(5) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.*

A. *Statutory Rules and Orders*

157. Notification issued with Roc. No. 12149-70-E5, dated the 24th October 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Thanthoni town Panchayat in Tiruchirappalli district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

158. Notification issued with Roc. No. 6096-68-E3, dated the 12th December 1968 in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Vadugapatty Town Panchayats in Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

159. Notification issued with Roc. No. 72285-70-E5, dated the 18th December 1970 in regard to extension of cretain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Thenkarai village, Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

## B. *Reports, Notifications and Other Papers*

@ 133. Note on Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties—Administration (Tamil).

@ 134. The Review on the working of the Stationery and Printing Department for the year 1970–71 (Tamil).

@ 135. The Tamil Nadu Sales Tax (Surcharge) Bill 1971 (L.A. Bill No. 22 of 1971).

136. The Performance Budget of the Backward Classes Department for the year 1971–72.

137. Report of the Committee on Public Accounts on the excesses over voted Grants and charged Appropriations for the year 1968–69.

@ Despatched to Members on 18th July 1971.



### இணைப்பு.

[ 301- ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானியம் கொள்கை விளக்கக் குறிப்பு 1971-72

"பின்தங்கிய வகுப்பினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் மானியக் கோரிக்கையை நான் இம்மன்றப் பேரவை முன் வைக்க உங்கள் முன்பு வந்துள்ளேன். நமது மாநிலத்தில் பின்தங்கிய வகுப்பினரின் குறைகளைக் களைவதற்காக நாம் மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளும், அதனால் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் 1971-72-ம் ஆண்டில் நாம் மேற்கொள்ளவிருக்கும் திட்டத்தையும் பற்றி நான் இப்பேரவையில் விளக்க விரும்புகிறேன்.

1949 ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளுக்கு முன்பு அரிசன வகுப்பினர் நலன், பழங்குடி வகுப்பினர் நலன் ஆகியவற்றுடன் பின்தங்கிய வகுப்பினர் நலனையும் தொழிலாளர் நலத்துறை கவனித்து வந்தது. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரின் நலனைக் காவல்துறை கவனித்து வந்தது. அரிசனங்கள், பழங்குடியினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர், பின்தங்கிய வகுப்பினர் ஆகியோரின் நலனைக் கவனிக்க 1949 ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளன்று அரிசன நலத்துறை அமைக்கப்பட்டது. இவர்களில் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக 1948-49 தொடக்கத்தில் ரூ. 1 லட்சம் செலவுத் தொகை ஒதுக்கப்பட்டது. 1970-71-ல் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையின் மானியம ரூ. 334 லட்சமாக உயர்ந்தது. பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக நாம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பெருகி வருவதனாலும், இப்பணிக்காக அதிக நாட்டம் செலுத்த வேண்டியிருப்பதாலும், 1969 மே திங்கள் 2-ஆம் நாளன்று அரிசன நலத்துறை இரு கூறாக்கப்பட்டது. இதன் விளைவாக பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை உருவாகியது. இத்துறையின் பொறுப்பை முதலமைச்சர் நேரடியாக வகித்து வந்தார். பின்னர் பின்தங்கிய வகுப்பினர் நலனுக்கென்று ஓர் அமைச்சர் நியமிக்கப்பட்டு அவரிடம் இத்துறையின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இத்துறை ஐ.ஏ.எஸ்., பதவித் தரத்திலான ஓர் இயக்குநரது நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்தது. நடப்பு ஆண்டு முதல் வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கென்று புதிதாக தனி மானியக் கோரிக்கையும் உருவாக்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையின் முக்கியமான நடவடிக்கைகள் பற்றி நான் சுருக்கமாக விளக்குகிறேன் :—

படிப்பு உதவித் தொகை.—பின்தங்கிய வகுப்பினரின் நிலை உயர வேண்டுமானால் அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு வகை செய்வதுதான் மிகச் சிறந்த வழி என்று கருதப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த மாணவர்களும், தங்களது படிப்பினைத் தொடர்வதற்கு இயலும் வகையில் அவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதனாலும், அவர்களுக்காக மாணவர் இல்லங்கள் தொடங்கப்படுவதனாலும் அவர்களின் கல்வியின் தரம் உயர்ந்தது. பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒன்பதாம்

வகுப்பு முதல் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒன்றும் வகுப்பு முதல் படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. இப்படிப்பு உதவித் தொகைகள் பெற விழையும் மாணவர் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவராக/குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். மேலும் அவரது பெற்றோரின் முந்திய ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்கு மேற்படக்கூடாது. கடந்த ஆண்டுத் தேர்வில் 40 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுள்ள பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

பின்தங்கிய வகுப்பினருக்குப் படிப்பு உதவித்தொகைகள் வழங்கும் திட்டம் ஒரு லட்சம் ரூபாயுடன் 1948-49-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பின்னர் இத்தொகை 1949-50-ஆம் ஆண்டில் ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டது. படிப்பு உதவித் தொகைக்கான மனுக்கள் படிப்படியாகப் பெருகி வந்துள்ளன. ஆனால் 1968-69-ஆம் ஆண்டு வரை மனுதாரர்கள் அனைவருக்கும் படிப்பு உதவித்தொகை வழங்க முடியவில்லை. தனித் துறை ஒன்று அமைக்கப் பட்ட பின்னர், ரூ. 2,000-க்குள் பெற்றோரின் ஆண்டு வருமானம் உள்ளவர்களும், கடந்த ஆண்டுத் தேர்வில் மொத்தத்தில் 40 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுள்ளவர்களுமான பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள் அனைவருக்கும் படிப்பு உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. இதற்கென பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை 1969-70-ல் ரூ. 1,60.89 லட்சம் செலவு செய்தது, இதன் மூலம் 90,565 மாணவர்கள் பயனடைந்தனர். 1970-71-ல் ரூ. 2,01.20 லட்சம் செலவிடப்பட்டது. 1,34,249 மாணவர்கள் பயனடைந்தனர்.

இந்த வழியில் கடந்த சில ஆண்டுகளில் எய்திய சாதனைகள் வருமாறு :—

| ஆண்டு. | | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் | | | பின்தங்கிய வகுப்பினர். | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மெட்ரிக்குக்கு முன். | மெட்ரிக்குக்குப் பின் | செலவான மொத்தத் தொகை. (ரூ. லட்சத்தில்) | மெட்ரிக்குக்கு முன் | மெட்ரிக்குக்குப் பின் | மொத்தம் செலவான தொகை. (ரூ. லட்சத்தில்) |
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1966-67 | .. | 24,745 | 1,619 | 13·71 | 10,306 | 21,099 | 82·90 |
| 1967-68 | .. | 27,967 | 1,941 | 14·50 | 10,075 | 25,260 | 91.78 |
| 1968-69 | .. | 32,347 | 2,122 | 16·71 | 20,375 | 33,162 | 113.07 |
| 1969-70 | .. | 41,361 | 2,828 | 21.16 | 42,515 | 48,050 | 160.89 |
| 1970-71 | .. | 53,769 | 3,173 | 25.55 | 74,842 | 59,407 | 201.20 |



புதிதாக பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைக்கப்பட்ட பின்னர் படிப்பு உதவித்தொகைகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. அத்துடன் பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ் வித்துவான் முதலிய 55 பாட முறைகளைப் பொறுத்த வரையில் படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதற்கு வரை யறுக்கப்பட்டிருந்த பழைய வரம்புகள் நீக்கப்பட்டு விட்டன என்பதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும். இவ்வாறு வரம்பு நீக்கப்பட்டதனால், பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த தகுதியுடைய மாணவர்கள் அனைவரும் இவ்வுதவியைப் பெற ஏதுவாகிறது. உணவு உறைவிடச் செலவு கட்டணங்களை உயர்ந்த கருதப் பட்டுள்ளது. இதனால் ரூ. 55.25 லட்சம் கூடுதல் செலவாகும்.

படிப்பு உதவித் தொகைகள் வழங்குவதற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள செலவுத் தொகை பின்வருமாறு :—

| | 1969-70 கணக்குகள். | 1970-71 திருத்த மதிப்பீடு. | 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| பின்தங்கிய வகுப்பினர் | 1,60·89 | 2,25·00 | 2,75·96 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் | 21·16 | 23·90 | 30·65 |

இந்திய அரசு தெரிவித்துள்ள விதிகளின்படி குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த மாணவர்களுக்கும், குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகைகள் வழங்கும் மற்றொரு திட்டம் உள்ளது. ஆண்டு தோறும் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 14.84 லட்சமாகும். இத் திட்டம் மாற்றியமைக்கப் பட்டு இந்திய அரசு குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் 1964-65 முதல் செயல்படுத்தப்பட்டிருந்துங்கூட, இச்செலவுக்காக இந்திய அரசு அளித்து வந்துள்ள உதவி 1969-70 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. 1964-65-க்கு முன்பு குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் உட்பட பின் தங்கிய வகுப்பினர்க்காக என்றே இத்திட்டம் வகுக்கப்பட்டது.

**பள்ளிக் கட்டண சலுகை.**—புகுமுக வகுப்பு வரையில் எல்லா மாணவர்களிடமும், அவர்கள் எந்த வகுப்பினராயிருந்தாலும், தற்போது பள்ளிக் கட்டணம் எதும் வசூலிக்கப்படுவதில்லை. புகுமுக வகுப்பிற்குப் பின்னர் பெற்றோருடைய ஆண்டு வருவாய் ரூ. 1,500 வரை உள்ள மிகப் பின்தங்கிய வகுப்பினருக்கு முழுக்கட்டணச் சலுகையும், பின்தங்கிய வகுப்பினருக்கு அரைக் கட்டணச் சலுகையும் அளிக்கப்படுகிறது. இந்தச் சலுகை அளிக்கப்

படுவதன் காரணமாக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் வருவாய் இழப்பு பின்தங்கிய நலத்துறையினுல் ஈடு செய்யப்படுகிறது. 1970-71-ல் ரூ. 3.13 லட்சம் அளிக்கப்பட்டது. இதற்காக, 1971-72 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1.30 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. தேவைப்பட்டால், கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

உணவு மானியங்கள்.—ஏற்பு பெற்ற தனியார் விடுதிகளில் தங்கியிருக்கும் பின்தங்கிய வகுப்பினர்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோரைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உணவு மானியமாக மாணவர் ஒருவருக்கு திங்களொன்றுக்கு ரூ. 20 வீதம் 10 திங்களுக்கு வழங்கப்படுகிறது. இக்காரியத்திற்காக 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 5 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

மாணவர் இல்லங்கள்.—பின்தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காகவும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலனுக்காகவும் மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டு அரசினுல் பேணப்பட்டு வருகின்றன. அவற்றில் அரிசனங்களுக்காகவும், முன்னிலை வகுப்பினர்களுக்காகவும் கீழ்க்காணும் வீதத்தில் இடங்களை ஒதுக்கியுள்ளனர் :—

| | குற்றப் பட்டியலி லிருந்து நீக்கப் பட்டோர் இல்லங்கள். | பின்தங்கிய வகுப்பினர் இல்லங்கள். |
|---|---|---|
| | (1) | (2) |
| | (சதவிகிதம்.) | |
| பின்தங்கிய வகுப்பினர்கள் | 10 | 65 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். | 60 | |
| அரிசனங்கள் .. .. | 25 | 25 |
| முன்னிலை வகுப்பினர் .. | 5 | 10 |
| மொத்தம் .. | 100 | 100 |



மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு :—

| ஆண்டு. | பின்தங்கிய வகுப்பு. எண்ணிக்கை. | பின்தங்கிய வகுப்பு. பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை. | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். எண்ணிக்கை. | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர். பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1966-67 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1967-68 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1968-69 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1969-70 .. .. | 11 | 979 | 37 | 3,619 |
| 1970-71 .. .. | 28 | 1,769 | 40 | 4,049 |

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காகவும், பின்தங்கிய வகுப்பினர்களுக்காகவும் மாணவர் இல்லங்களை பேணுவதற்கு 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 24.48 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் மாணவர்களும் தங்களுடைய படிப்பைத் தொடர்வதற்கு வசதியளிக்கும் வகையில் 1971-72-ல் 50 பின்தங்கிய வகுப்பு இல்லங்களையும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இல்லங்கள் 6-ஐயும் ஏற்படுத்த அரசு கருதியுள்ளது.

பள்ளிகள்.—குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் நலனுக்காக இம் மாநிலம் முழுவதிலும் 270 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அது குறித்து விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் மாவட்டமும் | உயர் நிலைப் பள்ளி. எண்ணிக்கை. | உயர் நிலைப் பள்ளி. மாணவர்கள். | உயர் தொடக்கப் பள்ளி. எண்ணிக்கை. | உயர் தொடக்கப் பள்ளி. மாணவர்கள். | தொடக்கப் பள்ளி. எண்ணிக்கை. | தொடக்கப் பள்ளி. மாணவர்கள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 வட ஆற்காடு | .. | .. | .. | .. | 4 | 399 |
| 2 தென் ஆற்காடு | 1 | 296 | 1 | 392 | .. | .. |
| 3 மதுரை | 4 | 1,454 | 34 | 9,258 | 204 | 20,259 |
| 4 இராமநாதபுரம் | .. | .. | 1 | 283 | 6 | 904 |
| 5 திருநெல்வேலி | .. | .. | .. | .. | 10 | 932 |
| 6 சேலம் | .. | .. | .. | .. | 2 | 294 |
| 7 கோயம்புத்தூர் | .. | .. | .. | .. | 2 | 381 |
| 8 தர்மபுரி | .. | .. | .. | .. | 1 | 127 |
| மொத்தம் .. | 5 | 1,750 | 36 | 9,933 | 229 | 23,296 |

பிற வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும் இந்தப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். கீழ்க்காணும் வசதிகளை இந்தப் பள்ளிகள் செய்து தருகின்றன :—

**நண்பகல் உணவு.**—உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களைத் தவிர இந்தப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் அனைவருக்கும் நாளொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு 15 காசு மதிப்புள்ள நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. மாணவர்கள் வகுப்புகளுக்கு ஒழுங்காக வரத்தூண்டுவதே இந்த நண்பகல் உணவுத் திட்டத்தின் நோக்கமாகும். இதற்கென 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 9.54 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

**புத்தகங்களும், உடைகளும்.**—குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு அவர்களுடைய பெற்றோரின் ஏழ்மையான பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு புத்தகங்களும், கற்பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1969-70-ல் 7,600 மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ. 0.38 லட்சம் செலவிடப்பட்டது. 1970-71 திருத்த மதிப்பீட்டில் ரூ. 0.41 லட்சமும், 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.41 லட்சமும் வகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் உள்ள பள்ளிகள் தவிர, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகள், மாணவர் இல்லங்கள் அனைத்திலும் ஆண்டுக்கு இருமுறை உடைகள் வழங்கப்படுகின்றன. பொங்கல் காலத்தில் ஒரு முறையும், அடுத்து தீபாவளியின்போதும் அவை வழங்கப்படுகின்றன. எனினும், மதுரை மாவட்டத்தில் இத் திட்டம் முதல், இரண்டாவது வகுப்புகளில் பயிலும் அவர்களுக்கு ஒரு முறை உடைகள் மட்டும் அளிக்கப்பட்டன. எல்லா வகுப்புகளிலும் பயிலும் மாணவர்களுக்கு 2 உடைகள் வழங்க தற்போது கருதப்பட்டுள்ளது. இத் தலைப்பின்கீழ் 1969-70-ல் ரூ. 2.07 லட்சம் செலவிடப்பட்டது. இத் திட்டம் 9,477 மாணவர்களுக்குப் பயனளித்தது. இதற்கென 1971-72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.79 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. 1971-72-ல் பின்தங்கிய வகுப்பினர் இல்லங்களில் தங்கி உள்ள அனைவருக்கும் 2 உடைகள் வழங்கவும் கருதப்பட்டுள்ளது. அதற்கென ரூ. 0.41 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

**பயிற்சி அளித்தல்.**—விடுதியில் தங்கியிருக்கும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கும் பின்னிலை வகுப்பினருக்கும் பயிற்சி அளிப்பதற்கென பகுதி நேரப் பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1969-70-ஆம் ஆண்டு ரூ. 0.03 லட்சம் செலவிடப்பட்டது. 1970-71-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும், 1971-72-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடும் முறையே ரூ. 0.16, 0.40 லட்சமாகும்.

இத்துடன் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கென நடத்தப்படும் மாணவர்களுக்கு மட்டும் பயன்படும் வகையில் 1969-70-ல் தொடங்கப்பட்டது. இன்ற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ரூ. 6,200 செலவில் (ஒவ்வொரு



வீட்டு மனைக்கும் உரிய விலையினையும் சேர்த்து) வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. 1969-70-ஆம் ஆண்டில் ரூ. 0.35 லட்சம் செலவில் 6 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1970-71-ஆம் ஆண்டில் 7 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 1971-72-ஆம் ஆண்டில் ஆசிரியர்களுக்கென 7 வீடுகள் கட்டுவதற்காக ரூ. 0.35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான கூடுதல் தொகை ஒதுக்கப்படும்.

**பொருளாதார உயர்வு.**—சென்னை மாநகரம் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்துவோர்களுக்கும் இலவசமாகக் கருவிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு தொழிலிலும் 60 பேர் இதன்மூலம் பயன் பெறுவர். இத் திட்டத்தின்கீழ் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| ஆண்டு. | | | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| 1966–67 | .. | .. | 1,440 |
| 1967–68 | .. | .. | 1,425 |
| 968–69 | .. | .. | 1,498 |
| 1969–70 | .. | .. | 1,542 |
| 1970–71 | .. | .. | 1,512 |

இத் திட்டத்திற்கென 1971-72-ஆம் ஆண்டிற்கு ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மூன்று பொறியியல் பணிமனைகள் அமைக்கப்பட்டு இரண்டாம் திட்ட காலத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன. அவை முறையே இராமநாதபுரம் மாவட்டம் முதுகளத்தூரில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டம் வீரகோளம்புதூரில் ஒன்றும், மதுரை மாவட்டம் செக்கனூரணியில் ஒன்றுமாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிமனைகள் முறையே 1960-61, 1965-66, 1962-63 ஆண்டில்தான் செயல்படத் தொடங்கின. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு தொழில் நுணுக்கப் பயிற்சி அளித்து அதன் வாயிலாகப் பயன் தரக்கூடிய தொழில்களை தனிப்பட்ட முறையில் நடத்தி வாழ்வில் வளம்பெற வகை செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி அளிக்கப்படுகின்ற காலம் 18 திங்களாகும். இத்தகைய பயிற்சி நிலையங்களின் மூலம் இதுவரை பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஆண்டு. | | | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| 1963–64 | .. | .. | 15 |
| 1965–66 | .. | .. | 24 |

| ஆண்டு. (1) | | | நபர்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|---|
| 1966-67 | .. | .. | 48 |
| 1968-69 | .. | .. | 51 |
| 1970-71 | .. | .. | 47 |

இத்துடன் சேர்ந்து அஜீஸ்நகர் குடியிருப்பில் ஒரு கயிறு பயிற்சி உற்பத்தி நிலையம் பேணி வரப்பட்டு வருகிறது.

மேற்சொல்லப்பட்ட நிறுவனங்கள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப் பட்டோரின் பயன்கருதித் தொடங்கப்பட்டுள்ளன. இதற்கென 1971-72-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.95 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், பாக்கோடில் 2 கயிறு, நார் பயிற்சி-உற்பத்திப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அதற்கென 1971-72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.28 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை.**—குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் தங்கள் வேளாண்மையை மேம்படுத்திக்கொள்ள அவர்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்கென ஜோடி ஒன்றுக்கு ரூ. 500-ம், பாசனக் கிணறுகள் தோண்டுவதற்கு கிணறு ஒன்றுக்கு ரூ. 2,000 வரையும் கொடுக்கப்படுகின்றது. இத் திட்டத்தினால் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஆண்டு. | | | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|
| | | | உழவு மாடுகள். | பாசனக் கிணறுகள். |
| (1) | | | (2) | (3) |
| 1966-67 | .. | .. | 442 | 185 |
| 1967-68 | .. | .. | 417 | 10 |
| 1968-69 | .. | .. | .. | 105 |
| 1969-70 | .. | .. | 81 | 80 |
| 1970-71 | .. | .. | 145 | 100 |

இத் திட்டங்களுக்காக 1971-72-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடலூரிலும், சேலத்திலும், நான்கு பாறை உடைக்கும் பிரிவுகள் செயல் படுகின்றன. இத் திட்டம் வேளாண்மைத் துறையினரால் செயல்படுத்தப் படுகின்றது. 1971-72-ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.41 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள்.**—1956-57-ஆம் ஆண்டிலிருந்து, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு கடன்-உதவித் தொகை அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இத்தகைய வீடுகள் உறுதியாக இல்லாததாலும், இயற்கைப் பேரிடர்களைத் தாங்கக்கூடிய வகையில் இல்லாததனாலும் மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் மூலம் ரூ. 1,200 செலவில் நல்ல வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இதற்கான தொகையில் ரூ. 900 உதவித் தொகையாகவும், ரூ. 300 கடனாகவும் இந்திய அரசின் ஆலோசனையுடன் மாநில அரசு வழங்கும். களிமண் பாங்கான இடங்களில் வீடு கட்டுவதற்கு ரூ. 1,600 செலவிடப்படும்.

சலவைத் துறை கட்டுவதற்காக நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும், 50 : 50 என்ற கடன்-மானிய அடிப்படையில் பொருளுதவி வழங்கக் கருதப் பட்டுள்ளது. இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 2.5 லட்சம் மானியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்யவும், அவர்கள் நிலையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டது. நடவடிக்கைகளின் பலனை மதிப்பிடவும், குறிப்பாக கல்வித் திட்டங்கள் குறித்தும் அரசுப் பணிகளில் அவர்களின் விகிதாச்சாரத்தைப் பற்றி மதிப்பிடவும், 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு ஒன்றை அரசு அமைத்தது. (1) கல்வியில் அவர்களின் நிலை, (2) அரசுப் பணிகளில் அவர்களின் விகிதாசாரம், (3) வர்த்தகம், வாணிகம், தொழில்கள், இவற்றில் அவர்களின் நிலை, (4) கடன் வசதி, வாணிப வசதி கூட்டுறவு இவற்றில் அவர்களின் வாய்ப்பு, (5) வீட்டு வசதி வாய்ப்பு போன்ற இக்கூறுகளில் பின்தங்கிய வகுப்பினர் நிலையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பரிந்துரைக்கும்படியும், அவ்வாணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆணைக்குழு 1971-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 2-ஆம் நாள், தன் அறிக்கையை அரசிடம் பணிந்தனுப்பியது. கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார நடவடிக்கைகள், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் பல்வகை இனங்கள் குறித்து ஆணைக்குழு 110 பரிந்துரைகள் செய்துள்ளது. அவைகள் அரசின் ஆய்வில் உள்ளது. அவற்றுள் முக்கிய தீர்மானங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

(1) கல்வி நிறுவனங்களிலும், பொதுப்பணிகளிலும பின்தங்கிய வகுப்பினர் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காகத் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள இடம் 25 சதவிகிதத்திலிருந்து 31 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும்.

(2) தனியார் கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கப்படுவதற்கான விதிமுறையைச் செயல்படுத்துவதில் உள்ள சட்டத் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(3) அனைத்து இந்தியப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்குப் பின்தங்கிய வகுப்பினரைப் பயிற்றுவிப்பதற்காகச் சென்னையில் பயிற்சி நிலையமொன்று அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(4) முடி திருத்துவோர், சலவையாளர் ஆகியோரை இழிதகு செயல் புரியும்படிக் கட்டாயப்படுத்துவோர் தண்டிக்கப்படவேண்டும் என்று ஆணைக் குழு செய்துள்ள பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்குத் தனியாக சட்டம் இயற்றப்படவேண்டும்.

(5) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சில வகுப்பினரை புதிதாக சேர்த்துக்கொள்ள ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அவர்களின் கல்வி, பொருளாதார, சமூக நிலைகளைப் பற்றிய எல்லாத் தகவல்களும் பெறப் பட்டவுடன் தேவையென்றால் இது குறித்துப் பரிசீலிக்கவேண்டும்.

மேலே சொன்ன (1) (3) இனங்கள் குறித்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மற்ற முடிவுகளும், பரிந்துரைகளும் நடவடிக்கையில் இருக் கின்றன.

பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தலைமையின்கிழ் மாநிலப் பின்தங்கிய வகுப்பினர் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது ஆறு மாதங்களுக்கொருமுறை கூடி, பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக வழி முறைகளைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. அக் குழுவை மாற்றி யமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றது.

பின்தங்கிய வகுப்பினர் ஆணைக் குழுவின் அறிக்கை மீது அரசு முடிவுகள் எடுக்கும்போது, இத் துறையினால் மேலும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் படுமென்றும், புதிய திட்டங்கள் தொடங்கப்பெறுமென்றும், தற்போதுள்ள திட்ட நடவடிக்கைகள் மும்முரப்படுத்தப்படுமென்றும் எதிர்பார்க்கப்படு கின்றது. வரும் ஆண்டுகளில் இவைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு தேவையா யிருக்கும்.

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கான பயிற்சி திட்டங்களைச் செயல்படுத்துவதில் பின்தங்கிய வகுப்பினர் துறைக்கு தொழில்-வாணிகத் துறை இயக்குநர், மகளிர் நலத்துறை இயக்குநர் ஆகியோர் உதவி புரிகின்றனர்.

பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகியோரது முன்னேற்றத்திற்கான செலவு, 1967-68-ல் ரூ. 161.40 லட்சமாக இருந்து, 1969-70-ல் ரூ. 265.46 லட்சமாக அதிகரித்துள்ளது. 1970-71-ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுசெலவு ரூ.3 ,34.49 லட்சமாகும். 1971-72 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 4,41.84 லட்சமாகும்.

பின்தங்கிய வகுப்பினர் சமுதாயத்தில் தமக்குரிய இடத்தைப் பெறுவதற் காக அவர்களை விரைவில் முன்னேறச் செய்வதற்கான பல்வேறு நடவடிக்கை களை அரசு பரிசீலித்து வருகின்றது. மக்கள் தொகையில் பெரும்பாலோர் பின் தங்கிய வகுப்பினராக உள்ளதால் வரும் ஆண்டுகளில் இந்த நடவடிக்கை களுக்குப் படிப்படியாக அதிகம் செலவிட வேண்டியிருக்கும்.



அட்டவணை "அ"

பிற்பட்டோர் நலத் துறை.




| | பிற்பட்ட வகுப்பு 1,51·70 | குற்றப்பரம்பரை சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு 53·19 | பிற்பட்ட வகுப்பு 1,51·50 | குற்றப்பரம்பரை சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு 65·03 | குறைந்த வருவாய் பிரிவினர் 14·84 |
|---|---|---|---|---|---|
| 1 படிப்புதவிப் பணம் .. | 1,35·96 | 15·97 | 1,40.00 | 14·68 | 14·84 |
| 2 பள்ளிகள் .. .. | .. | 12·18 | .. | 30·83 | .. |
| நண்பகல் உணவு .. | .. | 2·23 | .. | 7·31 | .. |
| 4 புத்தகங்கள், சீருடைகள் | 0·41 | 11·04 | .. | 0.16 | .. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 உணவு மானியம் .. | .. | .. | 4·70 | 0·30 | .. |
| 6 மாணவர் இல்லங்கள் .. | 10·73 | 3·84 | 2.31 | 9·80 | .. |
| 7 பல்கலைக் கழகங்களுக்கு ஈட்டுத் தொகை. | .. | .. | 1·30 | .. | .. |
| 8 ஆசிரியர் வீட்டு வசதி | — | 0·35 | .. | — | .. |
| 9 மாணவர் இல்லங்களைக் கட்டுதல். | 2·60 | 5·28 | .. | .. | .. |
| 10 வேளாண்மை .. .. | .. | 0·35 | 0·41 | .. | .. |
| 11 கைத்தொழில் .. | .. | 1·95 | 0·28 | .. | .. |
| 1 தொழிற் கருவிகள் .. | 2·00 | .. | .. | .. | .. |
| 13 குடிநீர் வசதி .. | .. | .. | .. | 0·01 | .. |
| 14 ஒழுக்கக் கல்வி .. | .. | .. | .. | 0·01 | .. |
| 15 சாலை அமைத்தல் .. | .. | .. | .. | 0·17 | .. |
| 16 தோபிகானா கட்டுதல் .. | .. | .. | 2.50 | .. | .. |
| 17 அஜீஸ் நகர் குடியிருப்பு | .. | .. | .. | 1.76 | .. |
| மொத்தம் .. | 1,51·70 | 53·19 | 1,51·50 | 65·03 | 14·84 |



## அட்டவணை "ஆ"

### கைத்தொழில் கூடங்கள்

இயக்குநர், தொழில்–வணிகத் துறையினரால் நடத்தப்படும் தொழில் பயிற்சிக் கூடங்கள்.

(1) பொறியியற் பயிற்சிப் பட்டரை, செக்கனூரணி, மதுரை.

(2) பொறியியற் பயிற்சிப் பட்டரை. முதுகுளத்தூர், ராமநாதபுரம்.

(3) பொறியியற் பயிற்சிப் பட்டரை, வீரகேரளம்புதூர், திருநெல்வேலி.

(4) கயிறு திரிக்கும் பயிற்சிப் பள்ளி மற்றும் உற்பத்திக் கூடம், அஜீஸ்நகர் செட்டில்மெண்ட். தென்னாற்காடு.

(5) மூங்கில் மற்றும் அறை அணிகள் செய்யும் பயிற்சிக் கூடம், பிரிஸ்லி நகர், செட்டில்மெண்ட், சென்னை.

இயக்குநர், மகளிர் நலத்துறையினரால் நடத்தப்படும் தொழில் பயிற்சிக் கூடங்கள்.

(6) தையல் மற்றும் ரெடிமேட் துணிகள் பயிற்சிக் கூடம், பெருங்குளம், திருநெல்வேலி.

(7) மூங்கில் கைத்தொழிற்கூடம், சமயபுரம், தர்மபுரி.

இயக்குநர், விவசாயத் துறையினரால் நடத்தப்படுவது.

(8) கல் உடைக்கும் கூடங்கள் மூன்று, தென்னாற்காடு.

(9) கல் உடைக்கும் கூடம் ஒன்று, சேலம்.

இயக்குநர், பின்னிலை வகுப்பு துறையினரால் நடத்தப்படுவது.

(10) தச்சுத் தொழிற்கூடம், அஜீஸ் நகர் செட்டில்மெண்ட், தென்னாற்காடு.

(11) கைநெசவு தொழிற் கூடம், அஜீஸ்நகர் செட்டில்மெண்ட், தென்னாற்காடு.

(12) கைப்பிரம்பு தொழிற் கூடம், பாக்கோடு, கன்னியாகுமரி.

(13) கைப்பிரம்பு தொழில் மற்றும் உற்பத்தி நிலையம், பாக்கோடு, கன்னியாகுமரி.

அட்டவணை "இ"

பிற்பட்டோர் நலத்துறை நடாத்தும் மாணவரில்லங்கள்.

| அ. பிற்பட்டோர் மாணவரில்லங்கள். | அனுமதிக்கப் பட்ட மாணாக் கர்களின் எண்ணிக்கை |
|---|---|
| **சென்னை நகர்.** | |
| 1 அரசினர் மாணவியர் இல்லம், அடையாறு .. .. | 150 |
| 2 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், சென்னை நகரம் | 75 |
| **நெல்லை மாவட்டம்.** | |
| 3 அரசினர் மாணவியர் இல்லம், புதூர் .. .. | 75 |
| 4 அரசினர் மீனவர் சிறார்கள் உணவு இல்லம் தூத்துக்குடி. | 150 |
| **தஞ்சை மாவட்டம்.** | |
| 5 அரசினர் மாணவர் இல்லம், மகாதேவப்பட்டினம் .. | 50 |
| 6 அரசினர் மாணவர் இல்லம், பேராவூரணி .. | 50 |
| 7 அரசினர் மாணவியர் இல்லம், அரந்தாங்கி .. | 40 |
| 8 அரசினர் மாணவர் இல்லம், மன்னார்குடி .. .. | 100 |
| 9 அரசினர் மாணவியர் இல்லம், வலங்கிமான் .. | 50 |
| 10 அரசினர் மாணவர் இல்லம், நீடாமங்கலம் .. | 75 |
| **தென்னாற்காடு மாவட்டம்** | |
| 11 அரசினர் மாணவர் இல்லம், விருத்தாசலம் .. | 100 |
| 12 அரசினர் மாணவர் இல்லம், பெண்ணாடம் .. .. | 90 |
| 13 அரசினர் மாணவர் இல்லம், பெரியகுப்பம் .. .. | 40 |
| 14 அரசினர் மாணவர் இல்லம், சேத்தியாத்தோப்பு .. | 140 |
| **மதுரை மாவட்டம்** | |
| 15 அரசினர் மாணவர் இல்லம், அலங்காநல்லூர் .. | 104 |
| 16 அரசினர் மாணவர் இல்லம், திருநகர் .. .. | 80 |
| 17 அரசினர் மாணவர் இல்லம், தல்லாகுளம் .. .. | 110 |
| 18 அரசினர் மாணவர் இல்லம், தர்மபுரி (பெரியகுளம் தாலூகா) | 40 |
| 19 அரசினர் மாணவர் இல்லம், பெரியகுளம் .. .. | 80 |
| **திருச்சி மாவட்டம்** | |
| 20 அரசினர் மாணவியர் இல்லம், மேட்டுப்பாளையம் .. | 30 |
| 21 அரசினர் மாணவர் இல்லம், குல்லக்குடி .. .. | 50 |
| 22 அரசினர் மாணவர் இல்லம், விராலிமலை .. .. | 75 |
| 23 அரசினர் மாணவர் இல்லம், திருவரம்பூர் .. .. | 110 |
| **தர்மபுரி மாவட்டம்** | |
| 24 அரசினர் கல்லூரி மாணவர் இல்லம், தர்மபுரி .. | 120 |



| | அனுமதிக்கப் பட்ட மாணாக்கர் களின் எண்ணிக்கை. |
|---|---|
| **சேலம் மாவட்டம்** | |
| 25 அரசினர் மாணவர் இல்லம், இளம்பிள்ளை .. | 80 |
| **முகவை மாவட்டம்** | |
| 26 அரசினர் மாணவியர் இல்லம், பாகனேரி .. .. | 30 |
| 27 அரசினர் மாணவர் இல்லம், கண்டரமாணிக்கம் .. | 30 |
| 28 அரசினர் மாணவர் இல்லம், வடக்கு சமுத்திரம் .. | 30 |
| மொத்தம் .. | 2,144 |

ஆ. குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவரில்லங்கள்

| | |
|---|---|
| **மதுரை மாவட்டம்.** | |
| 1 அரசினர் மாணவர் உணவு இல்லம், திருமங்கலம் .. | 80 |
| 2 அரசினர் பிரமலைக் கள்ளர் மாணவர்கள் உணவு இல்லம், திண்டுக்கல். | 260 |
| 3 அரசினர் மாணவியர் உணவு இல்லம், உசிலம்பட்டி .. | 450 |
| 4 அரசினர் மாணவர் உணவு இல்லம், உசிலம்பட்டி .. | 500 |
| 5 அரசினர் மாணவர் உணவு இல்லம். மதுரை (தேவர் இல்லம்). | 60 |
| 6 அரசினர் மாணவர் உணவு இல்லம், செக்கனூரணி .. | 200 |
| 7 அரசினர் மாணவியர் இல்லம், திருமங்கலம் .. .. | 100 |
| 8 அரசினர் மாணவியர் இல்லம், சின்னமனூர் .. .. | 100 |
| 9 மாணவர் இல்லம், நாட்டமங்கலம் .. .. .. | 100 |
| 10 பிரமலைக் கள்ளர் மாணவர் உணவு இல்லம் (பயிற்சிக்காக) தொழிற்பயிற்சி நிலையம், கே. புதூர். | 80 |
| 11 அரசினர் உணவு இல்லம், உத்தமபாளையம் .. .. | 150 |
| 12 அரசினர் மாணவர் உணவு இல்லம், வத்தலகுண்டு .. | 120 |
| 13 அரசினர் மாணவியர் இல்லம், கம்பம் .. .. .. | 30 |
| 14 அரசினர் மாணவர் இல்லம், கடமலைகுண்டு .. .. | 30 |
| 15 அரசினர் மாணவர் இல்லம், பாப்பாப்பட்டி .. .. | 80 |
| 16 அரசினர் மாணவியர் இல்லம், செக்கானூரணி .. | 50 |
| 17 அரசினர் நரிக் குறவர் இல்லம், விளாத்தூர் .. .. | 45 |
| **நெல்லை மாவட்டம்.** | |
| 18 அரசினர் மாணவர் உணவு இல்லம், கயத்தார் .. | 50 |
| 19 அரசினர் மாணவர் உணவு இல்லம், கோயில்பட்டி .. | 60 |
| 20 அரசினர் மாணவர் உணவு இல்லம், சங்கரன்கோயில் | 110 |
| 21. அரசினர் மாணவர் உணவு இல்லம், நான்குநேரி . | 90 |
| 22 அரசினர் மாணவர் உணவு இல்லம், ஸ்ரீவைகுண்டம் | 60 |

| | அனுமதிக்கப் பட்ட மாணக்கர் களின் எண்ணிக்கை. |
|---|---|
| **நெல்லை மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 23 அரசினர் மாணவர் உணவு இல்லம், அம்பாசமுத்திரம் | 75 |
| 24 அரசினர் மாணவர் உணவு இல்லம், தென்காசி .. | 60 |
| 25 அரசினர் மாணவர் உணவு இல்லம், பாளையம்கோட்டை | 75 |
| **செங்கை மாவட்டம்** | |
| 26 அரசினர் குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவரில்லம் (உணவு இல்லம்), வில்லிவாக்கம். | 130 |
| 27 அரசினர் குற்றப்பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவியர் உணவு இல்லம், வில்லிவாக்கம். | 50 |
| **முகவை மாவட்டம்** | |
| 28 அரசினர் குறவர் மாணவியர் உணவு இல்லம், அருப்புக் கோட்டை. | 50 |
| 29 அரசினர் குறவர் மாணவர் உணவு இல்லம், அருப்புக் கோட்டை. | 100 |
| 30 அரசினர் மரவர் மாணவர் உணவு இல்லம், கமுதி | 150 |
| 31 அரசினர் மரவர் உணவு இல்லம், முதுகுளத்தூர் .. | 100 |
| 32 அரசினர் மரவர் மாணவர் உணவு இல்லம், நைனார் கோவில். | 75 |
| 33 அரசினர் மரவர் மாணவர் உணவு இல்லம், பொம்ம நேந்தல், கமுதி தாலூகா. | 50 |
| 34 அரசினர் மரவர் மாணவர் உணவு இல்லம், கடலாடி .. | 60 |
| 35 அரசினர் மாணவர் இல்லம், மேலக் கொடாரம் .. | 50 |
| **திருச்சி மாவட்டம்** | |
| 36 அரசினர் குறவர் மாணவர் உணவு இல்லம், புதுக் கோட்டை | 44 |
| 37 அரசினர் மாணவர் இல்லம், திருச்சி .. .. .. | 50 |
| 38 அரசினர் மாணவியர் இல்லம், திருச்சி .. .. .. | 30 |
| 39 அரசினர் மாணவியர் இல்லம், பொன்னமராவதி .. | 50 |
| 40 அரசினர் மாணவர் இல்லம், மேல்மாயனூர் .. .. | 50 |
| மொத்தம் .. | 4,054 |



**வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 16.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### *Chickkaya Naicker's College at Erode*

*260. Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(a) whether the Chickkaya Naicker's College at Erode collects full fees for one year at the time of joining the college;

(b) whether a student has to pay the fees for full 3 years for a degree course at the time of leaving the college in the middle; and

(c) the action taken by this Government thereon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(ஆ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE: I have received a number of complaints that an amount of Rs. 1,170 is asked from 3-year degree students Rs. 450 initially and Rs. 720 afterwards. Have the Government checked up the fact whether for degree courses Rs. 450 had to be paid initially and balance of Rs. 720 is insisted finally to be paid, otherwise students are not permitted to leave in the middle? May I know whether this Government have received such complaints, and if so will the Government give a categorical assurance that colleges of this type will not be permitted to insist on such amounts in the beginning itself?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஈரோடிலே உள்ள இந்த சிக்கைய நாய்க்கர் கல்லூரியைப் பொறுத்தவரையில், மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து கட்டணம் வசூலிக்கப்படுகிறதா என்று கேட்டதற்கு, 'அப்படிப்பட்ட நிலை ஏற்படவில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பற்றிக் கனம் உறுப்பினரிடம் ஏதாவது கம்ப்ளெயின்ட் வந்திருக்கிறதென்றால், அந்த கம்ப்ளெயின்ட்டை என்னிடம் தந்தால் அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுக்கலாம். அதுபற்றிய முறையீடு அரசாங்கத்திற்கு எதுவும் வரவில்லை. அத்தகைய முறையீடு அரசாங்கத்திற்கு வருமானால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கலாம். அந்தக் கல்லூரியைக் கேட்டதற்கு, மூன்று

ஆண்டுகளுக்கும் சேர்த்து கட்டணம் வாங்குவதில்லை என்றுதான் பதில் எழுதியிருக்கிறார்கள். உள்ளபடியே ஏதாவது முறையீடு இருக்குமானால், அந்த முறையீட்டை எனக்குத் தந்தால் அதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நாம் இப்பொழுது பி.யு.சி. வகுப்பு வரையில் இலவசக் கல்விக் கொள்கையைக் கைக்கொண்டிருக்கிறோம். அதைப் போலவே, பி.யு.சிக்கும், எஸ்.எஸ்.எல்.சி. க்கும் உள்ள பரீட்சைக்கான கட்டணத்தையும் விதிக்காமல் அதையும் தளர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இலவசக் கல்வி அளிப்பதே ஒரு பெரிய சலுகையாகும். கல்வியின் தரத்தை வேறு பல வகைகளில் வளர்ப்பதற்கு நாம் இடர்ப்பட்டுக் கொண்டிருக்கும் இந்நிலையில் சலுகைகளை மேலும் நீட்டிக்கொண்டே போவதற்கில்லை. கட்டணம் இல்லை என்பதே பெரிய சலுகையாகும்.

DR. H. V. HANDE: In several colleges free education has become a farce because they go on insisting on different types of funds. If such a thing has come to the notice of this Government, will this Government make an investigation into such methods of fund-raising in different colleges in different names and see that some sort of order is passed by which such fund-raising will not be permitted in these colleges?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றியெல்லாம் பல்கலைக் கழகம்தான் முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படி 'நன்கொடை' என்ற பெயரால் கல்லூரிகளில் பணம் வசூலிப்பது போன்றவற்றையெல்லாம் தடுக்கவேண்டும் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தரிடத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம் சட்டதிட்டங்களின் அடிப்படையில் கல்லூரிகளைக் கண்காணிக்கும் நிலைமை ஏற்படவேண்டும். பல்கலைக் கழகச் சட்டத்தில் போதுமான அளவுக்கு விதி முறைகள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கேற்றுபோல் பல்கலைக் கழகச் சட்டமும் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்தை அரசு கொண்டிருக்கிறது. ஆகவே, அதைப் பரிசீலித்து வருகிறது. பரிசீலித்த பிறகு இந்த மன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டு, அதை நடைமுறைக்குக் கொண்டுவரலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: 'ஸ்பெஷல் பீஸ்' எவ்வளவு வசூலிக்க வேண்டும் என்று ஏதாவது நியதி இருக்கிறதா? அப்படி நியதி இல்லாவிட்டால் ஆணை ஏதாவது பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படி நியதி இருப்பதாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரம் தரலாம்.

திரு. ஏ. எம். இராஜா: நன்கொடை வசூலிப்பதைத் தடுக்க சட்டத்தில் இடம் இல்லை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் இது நன்கொடையின்கீழ் வருவதில்லை. காரணம் ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கின்ற நேரத்தில்தான் இந்தப் பணம் கட்டாயமாகக் கொடுத்தால்தான் கல்லூரியில் இடம் கொடுப்போம் என்று கட்டாயப் படுத்துவதன் காரணமாக, இது லஞ்சமாகக் கருதப்படுமா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்த வழக்கு மன்றத்திற்குச் சென்று முறையிட்டாலும், 'நன்கொடை' என்றுதான் சீட்டு இருக்கும். பெற்றோர்களும், தாங்கள் விரும்பியே பணம் கொடுத்ததாகச் சொல்லுவார்கள். ஆகவே, சீட்டின் (ரெஸீட்ஸ்) அடிப்படையில் பார்க்கும்போது சட்ட திட்டங்களுக்குட்பட்டதாகத்தான் இருப்பதாக வழக்கு மன்றத்தில் முடிவு கட்டக் கூடிய நிலை இருக்கும்—உள்ளே நோக்கம் எப்படி இருந்தாலும், செய்யக்கூடிய முறைகளைப் பொறுத்தவரையில் தக்க பாதுகாப்பாகத்தான் வைத்திருக்கிறார்கள். அதையும் எப்படிக் கட்டுப்படுத்தலாம், நன்கொடை என்று வசூலிக்கும் பணத்தையும் கல்லூரிக் கணக்குகளில் கொண்டு வந்து, அவற்றைக் கண்காணிக்கும் வண்ணம் சட்டங்களைத் திருத்தி, விதிமுறைகளை ஏற்படுத்தலாமா என்பதைப்பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, அரசாங்க அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்களா, இல்லையா என்பதைக் கண்காணிக்க விஜிலன்ஸ் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. அதேபோல், கல்லூரிகளில் 'நன்கொடை' என்ற பெயரால் வாங்கும் லஞ்சத்தைத் தடுக்கவும் அம்மாதிரியான ஏற்பாட்டைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, லஞ்சம் இருக்குமானால் அதைத் தடுக்கலாம். இதற்குப் பெயர் நன்கொடையே தவிர இது லஞ்சம் அல்ல. கல்லூரிகளில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்கிறார்கள். அதற்கு 'நன்கொடைச் சீட்டு' கொடுக்கிறார்கள். பணம் கொடுத்தவர்களைக் கடைசியில் விசாரிக்கின்றபோது, தங்களைக் காப்பாற்றிக்கொள்ளவும், தங்கள் பிள்ளைகள், பெண்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், 'தாங்கள் நன்கொடையாகத் தான் அளித்தோம்' என்று சொல்லிவிடுகிறார்கள். கடைசிக் கட்டத்தில் அப்படித்தான் வந்து சேர்ந்து விடுகிறது. என்றாலும், அப்படிப்பட்ட நிதி வருவதையெல்லாம் கூட—நன்கொடை வசூலிப்பதைக் கூட—கல்லூரிக் கணக்கிலே கொண்டுவந்து காட்டச் சொல்லி, அதைக் கண்காணிக்கலாம் என்றாலும், அதைப் பொறுத்து சட்ட திட்டங்களைத் திருத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: சொல்லால் 'லஞ்சம்' என்று இல்லையென்றாலும், செயலால் 'லஞ்சம்' என்றுதான் அதைக் கொள்ள வேண்டும். இதுகுறித்து யாருமே சாட்சியம் சொல்வதற்கு முன்வர மாட்டார்கள். ஆகவே, அரசாங்கமே இதுபற்றிப் புலன் விசாரணை செய்து, அம்மாதிரி பணம் பெறுகின்ற கல்லூரிக்கு அரசு அளிக்கும் மானியத்தை நிறுத்தவும் அம்மாதிரி கல்லூரியை அரசே ஏற்று நடத்தவும் வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு கல்லூரிக்குக் கொடுக்கிற மானியத்தை அரசாங்கம் நிறுத்த வேண்டுமென்றால் ஒரு காரணம் காட்டித்தான் நிறுத்த வேண்டும். அந்தக் காரணங்களும், வழக்கு மன்றங்களில் செல்லும்படியாகக்கூடிய காரணங்களாகவும் இருக்கவேண்டும்.

ஆகவேதான் ஒப்புதிப்பக்கீ நாம் இதற்கேற்றபடி திருத்த வேண்டும். சட்டத்தைத் திருத்திய பிறகு யாராவது தவறு செய்தால் சட்ட அடிப்படையில் நாம் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: நன்கொடை என்ற பெயரால் சில கல்லூரிகளில் வசூல் செய்கிறார்கள். எந்த எந்த மாணவர், எந்த எந்த வகுப்பில் படிப்பவர் என்று குறிப்பிட்டு மாணவர்கள் பெயரிலேயே நன்கொடை ரசீதுகள் போட்டுக் கொடுக்கிறார்கள். அப்படிப் போட்டுக்கொடுத்து மாணவர்களிடமிருந்து பணம் வாங்குவது தவறான முறைதான். எனவே, அத்தகைய கல்லூரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே எடுத்துச்சொன்ன மாதிரி, இப்பொழுதிருக்கும் சட்டதிட்டத்தின் அடிப்படையில் அதையும் கல்லூரிக் கணக்கில் கொண்டுவரும்படி வற்புறுத்துவதற்கு இயலாமல் இருக்கிறது. அதற்காகத்தான் சட்டதிட்டம் திருத்தப்பட வேண்டும். அதுபற்றிய பரிசீலனையை அரசாங்கம் செய்து வருகிறது.

## *Pension scheme for Municipal Employees*

* 261. *Q.*—DR. H. V. HANDE :

THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have implemented the pension scheme to the Municipal superior employees with effect from 14th January 1970.

(*b*) if so, the total number of employees benefited by this scheme;

(*c*) whether this scheme is applicable to those who have retired from service on or before 14th January 1970; and

(*d*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இன்னும் செயல்படுத்தவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) இல்லை.

(எ) இவ்வினா எழவில்லை.

DR. H. V. HANDE : I understand that Government have some idea of giving effect to this in respect of those who have retired on 14th January 1970 and before that date. The Hon. Minister when I asked that question had given the answer in the negative. While implementing the order, have the Government any intention of taking into consideration the requests of those who had retired before 14th January 1970? Is it not a fact that Government also received a memorandum from the President, Municipal Retired Employees' Association, Palni (copy of the memorandum had already been given to Hon. Chief Minister and Minister for Local Administration) with regard to these requirements and if so, may I know what action has been taken by this Government?





மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 14—1—1970 லிருந்து இந்த ஓய்வூதியத் திட்டம் செயல் முறைக்குக் கொண்டு வரலாம். என்கிற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதை நடைமுறைப் படுத்துவதனால் ஏற்படக்கூடிய சிக்கலைப்பற்றித்தான் இப்பொழுது அரசு ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கிறது. 90 ரூபாயும் அதற்கு மேலும் (2—10—1970 க்கு முன்பு) குறைந்த அளவு சம்பள விதம் பெறுகிற நகராட்சிப் பணியாளர்கள் குறித்து மாநிலம் எங்கனும் பரந்து நிற்கும் வகையில் நகராட்சிப் பணிகளை ஏற்படுத்தவும் மாநில நகராட்சிப் பணிகளின்கீழ் வரும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் அரசு முடிவு செய்தது. இதற்கிணங்க, 5—1—1970 அன்று அரசு ஆணையொன்றைப் பிறப்பித்தது. அந்த ஆணையில், இம் மாநிலத்தில் எல்லா நகராட்சி மன்றங்களிலும் மேட்டூர், பவானிசாகர், குற்றாலம், கொடைக்கானல் ஆகிய நகரியக் குழுக்களிலும் குறைந்தளவு 90 ரூபாயும் அதற்கு மேலும் சம்பள விதம் பெறுபவர்களுக்கும் ஓய்வூதியச் சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது.

மாநில நகராட்சிப் பணியின்கீழ் வரும் நகராட்சிப் பணியாளர்களால் செய்யப்பட்ட பணியின் கால அளவு ஓய்வூதியத்திற்காக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அவ்வாறு அமைக்கப்பட்ட நகராட்சியின் வகைப்பாடு, பணியில் சேர்த்துக்கொள்ளும் முறை, பணியின் நிபந்தனைகள், ஊதியம், படிகள், ஒழுங்கு முதலியவற்றை முறைப்படுத்துவதற்கென, தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 77(2) பிரிவின்கீழ் விதிகள் எடுக்கப்பட்ட பின்னர் ஓய்வூதியத்திற்கு அனுமதி வழங்கலாம். தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 77(2) வது பிரிவின்கீழ் வகுக்கப்படும் இந்த விதிகள் சட்ட மன்ற இரு அவைகளின் ஏற்பளிப்பையும் பெறவேண்டும். வரைவு விதிகள் வகுக்கப்பட்டு சட்ட மன்றத்தின்முன் வைக்கத் திட்டமிடப்பட்டது. அதற்கிடையில் இதை 14—1—1970 லிருந்து செயல்முறைக்குக் கொண்டுவரலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

14—1—1970-க்கு முன்பு ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கும் ஏதாவதொரு தனிப்பட்ட அடிப்படையில் ஓய்வூதியம் தரலாமா என்பது தனியாகக் கவனிக்கவேண்டிய அளவுக்கு இருக்கிறது. சில விதி முறைகள் வகுப்பதுபற்றித் தனியாக ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. ஏதாவது தனிப்பட்ட அடிப்படையில் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்பது பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஜி.ஓ. எம்.எஸ். நம்பர் 12, 5—1—70ன் படி இந்த 14—1—70-க்குப் பின்னால் ஓய்வுபெறக்கூடிய உயர்நிலைப் பணியாளர்களுக்குப் பூராவும் பென்ஷன் கொடுப்பது என்று ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டிருக்கிறது, அது எந்த அளவுக்கு அமலில் இருக்கிறது? அதே நேரத்திலே அதற்கு முன்னால் ஓய்வுபெற்றவர்கள் மொத்தம் எடுத்துப் பார்த்தால் அரசாங்கத்தின் கணக்குப்படியே 763 பேர்கள்தான் இருக்கிறார்கள். 14—1—71-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு அதற்குப் பின்னால் ஓய்வுபெற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போன்று ஓய்வு ஊதியம் கொடுக்க—அவர்கள் 763 பேர்கள் தான் இருக்கிறார்கள்—அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 14—1—70 என்று வரையறை வைத்துக்கொண்டு அதற்குப் பின்னாலே ஓய்வுபெற்றவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும். அதற்கு முன்னாலே ஓய்வுபெற்றவர்களுக்குக் கொடுப்பதைப்

பற்றித் தனியாகக் கவனிக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று அவர்கள் அவ்வளவு குறைந்த எண்ணிக்கையில் இருப்பார்களானுல் அதைப்பற்றிப் பரிசிலனை செய்வதில் தவறு இருக்காது.

குப்பல் திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, குறைந்த எண்ணிக்கையில் இருக்கின்றவர்களும் மாதம் ஒன்றுக்கு மூன்று பேர்கள் இறந்து போகிறுர்கள் என்று கணக்குச் சொல்கிறுர்கள். அதிகமாக இதிலே காலதாமதம் செய்தால் அதிலே அநேகம் பேர்கள் இறந்துவிடுவார்கள். எனவே இதிலே காலதாமதம் செய்யாமல் உடனடியாகக் கொடுக்கச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனிப்பட்ட முறையிலேதான் அது கவனிக்கப்படவேண்டுமென்று சொன்னேன். 1971-72 பார்ட் 'பி' ல்கீழுக்குள் அதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

பஞ்சாயத்துக்களுக்கு மானியம்.

* 262 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபாரிசுப் பிரகாரம் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டியதால் பஞ்சாயத்துக்களுக்கு ஏற்படும் நிதி பற்றுக்குறையை ஈடு செய்ய பஞ்சாயத்துக்களுக்கு அரசு மானியம் வழங்க உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்போது அமுலில் இருக்கும் விதிகளின்படியே பேரூராட்சி மன்றங்களில் அந்தந்த வருட வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையையோ அல்லது நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுடன் முன்னுள் வழங்கப்பட்ட பஞ்சப்படி உட்பட கூடுதலாகும், செலவின மொத்தத் தொகையில் எது குறைவோ அதை ஈடு செய்ய பேரூராட்சி மன்றங்கள் அரசிடம் மான்யமாக பெற்று வருகின்றன.

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிரணி படிப்பகங்கள்.

* 263 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிரணி அறிவகங்கள் (படிப்பகங்கள்) தற்போது எத்தனை உள்ளன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மாப்படுகைக் கிராமத்தில் ஒரு சிரணி அறிவகம் உள்ளது.

*Collection of taxes by Village Officers*

* 264 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(a) whether village officers have been directed to collect **taxes** for the Panchayats; and

**(b) if so, the details thereof?**





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் அவ்வப்போது சேர வேண்டிய வரிகள், கட்டணங்கள் அனைத்தையும் கிராமத் தலைவர் வசூலிக்க வேண்டும். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்காக வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிப்பதற்கு வசதியாக இருப்பதற்காக, வரி விதிப்புப் பதிவேடுகளையும், அவ்வப்போது வரையறுக்கப்படக்கூடிய பிற பதிவுகளையும், கிராமக் கர்ணம் எழுதி வைத்து வர வேண்டும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, ஊராட்சி வரிகளை பில் கலெக்டர்கள் மூலம் வசூல்செய்வது எஃபெக்டிவ் ஆக இருக்கும் என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அது இப்பொழுது தேவையில்லை என்று அரசு கருதித்தான் இப்பொழுது கர்ணம் போன்ற கிராம அதிகாரிகளால் வசூலிக்கவேண்டுமென்று அரசு உத்திரவிட்டு இருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து வரிகளை பஞ்சாயத்துக்களோடு கொஞ்சங்கூடத் தொடர்பில்லாத கிராம அதிகாரிகள் வசூல் செய்வதில் பலவகையான தவறுகள், குழப்பங்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்ப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தனி அதிகாரிகளை நியமித்து அந்த வரிகளை வசூல்செய்வதற்கு அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் குழப்பம் ஏற்படுவதாகத் தெரியவில்லை. கிராம அதிகாரிகள் வசூலிப்பதற்காக அவர்களுக்குத் தனியாகப் பணம் வேறு கொடுக்கிறோம். இடையிலே கிராம அதிகாரிகள் கொஞ்ச நாட்கள் வசூலிக்க மறுத்தார்கள். இப்பொழுது ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இப்பொழுது சிரமம் இருக்காது என்று கருதுகிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய வரிகளை வசூலிக்கின்றபொழுது கிராம அதிகாரிகள் ஊராட்சி வரி, ஊராட்சி ஒன்றிய வரி, சர்சார்ஜ் என்று கேட்காமல் மொத்தமாக கந்தாயம் கொடு கந்தாயம் கொடு என்று கேட்டு வருகிறார்கள். அதனால் அரசு கந்தாயத்தை இன்னும் நீக்கவில்லை என்று பொதுமக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஊராட்சி வரி, ஊராட்சி ஒன்றிய வரி, சர்சார்ஜ் என்று தனித்தனியாக அவர்கள் வசூல் செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி எங்காவது தவறு ஏற்பட்டிருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் கவனிக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : பஞ்சாயத்து வரிகளை வசூலிக்கின்ற நேரத்தில் கிராம அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்ற காரணத்தால் சில மாவட்டங்களில் கிராம சேவக்குகள், சமூக நல ஊழியர்களை வைத்துப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைப் பிற மாவட்டங்களுக்கும் பயன்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒன்றிரு மாவட்டங்களில் கிராம சேவக்குகளை வைத்து வசூலித்தது உண்மை. ஆனால் அரசு மீண்டும் கிராம அதிகாரிகள்தான் வசூலிக்கவேண்டுமென்று உத்திரவு பிறப்பித்து இருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** ஊராட்சி மன்ற வரிகளைக் கர்ணம் வசூலிக்க வேண்டுமென்ற அரசாங்க ஆணையையும் மீறி குளித்தலை வட்டத்திலே 200 கிராம கர்ணங்கள் வரி வசூலிக்காமல் இருக்கிறார்களே, அவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படி அவர்கள் வசூலிக்க மறுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னால் கிராம முன்சீப்கள், கர்ணங்கள் இந்த வரியை வசூலிக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்பொழுது வசூலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி அடிக்கடி தகராறு செய்து வசூலிப்பதைவிட நான்கு பஞ்சாயத்துக்களுக்கு ஒன்றாக ஒரு வசூலிப்பவரைப் போட்டு வசூல்செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படி எந்தத் தகராறும் இல்லை. இப்பொழுது வசூலிக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்னை எழவில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, the workload of the Karnams is being increased day by day due to collection of regular loans *plus* house tax and other things. Will the Government come forward to give more salary for the Karnams?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தனியாக ஊராட்சி ஒன்றியப் பணம் வசூல்செய்வதற்குப் பணம் கொடுக்கப்படுகிறது என்று முதலிலேயே சொன்னேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் அந்த மாதிரி வசூலிப்பதற்கு முழு நேர ஊழியர்களாக ஆக்கி சம்பளம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்களா? அதேமாதிரி கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள கிராம அதிகாரிகள் முழு நேர ஊழியர்களாக இருக்கிறார்கள். அந்தமாதிரி தமிழகத்திலும் ஆக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் இருப்பது முன்னாலே இருந்த திருவாங்கூர்-கொச்சின் முறையிலே இருப்பதாகும். ரயத்வாரி முறை இன்னும் அங்கே அமலில் வரவில்லை. தமிழ்நாட்டு முறை அங்கேயும் அமல் செய்யப்படும்.

**திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்:** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து வரி வசூல் செய்கின்ற கிராம அதிகாரிகள் நிலத்தீர்வை வசூல் செய்கிற—ஜனவரி மாதத்திலேதான்—மற்ற வரிகளையும் வசூல் செய்கிறார்கள். கால் ஆண்டு முடிந்து வசூல் செய்கின்ற வரி, அரையாண்டு முடிந்து வசூல் செய்யப்பட வேண்டிய சைக்கிள்வரி போன்றவைகள், இதனால் வசூல் செய்யப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆதலால் காலதாமதம் இல்லாமல் அவர்கள் முறைப்படி வசூல் செய்யவேண்டுமென்று அறிவுரை வழங்கி அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது ஒரு யோசனை. இதைப்பற்றிப் பரிசீலித்துச் செய்யலாம்.





**அளவுக்கு மேல் நெல், அரிசி கையிருப்பு.**

*** 265 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல் உற்பத்தியாளர்கள் அளவுக்கு மேல் நெல் அல்லது அரிசியினைக் கையிருப்பாக வைத்திருப்பதனைக் கண்டு பிடிக்க "பறக்கும் படை"களை அமைத்திட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இப்பொழுது அரிசியும் நெல்லும் அதிகமாக நமது அரசாங்கத்திடம் ஸ்டாக் இருக்கிற காரணத்தினால் அந்த ஸோனல் சிஸ்டத்தை எடுத்துக்கொள்ளவோ அல்லது முழுமையாகக் கட்டுப்பாட்டை நீக்கவோ அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஸோனல் சிஸ்டத்தை நீக்குவது இயலாத காரியம் என்று ஏற்கெனவே அரசு முடிவு செய்திருக்கிறது. இப்பொழுது முழுமையாக கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிறது. எல்லையோரத்தில் 15 மைல் பெல்ட் ஏரியா என்று வைத்து, அதற்குள் அரிசி நடமாட்டத்தில் கள்ளக் கடத்தல் இல்லாமல் இருப்பதற்காக வைத்து, கள்ளக் கடத்தல் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஸோனல் சிஸ்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு தனி ஸோனலாக இருக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இப்பொழுது எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது, இந்த ஆண்டுக்கு நமக்கு எவ்வளவு தேவைப்படும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, எவ்வளவு கையிருப்பில் இருக்கிறது என்பதற்குத் தனிக்கேள்வி போட்டால் நான் விபரம் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, பெல்ட் ஏரியா என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். கன்னியாகுமரி ஜில்லாவின் மொத்த நீளமே ஏறத்தாழ 30 மைல்கள்தான் இருக்கும், அதிலே 15 மைல்களை பெல்ட் ஏரியா என்று வைத்திருப்பதால் ஏழை விவசாயிகளுக்குப் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகவே இந்த பெல்ட் ஏரியாவின் அளவைக் குறைக்க அரசாங்கம் கருதுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இந்த பெல்ட் ஏரியாவை ஆந்திரத்தில் ஓரளவு குறைத்திருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி போன்ற பகுதி கேரளப் பகுதியின் ஓரத்தில் இருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லா பகுதியில், கனம் அங்கத்தினர் அவர்களுக்கே தெரியும், அங்கேயிருக்கிற விசித்திரமான சூழ்நிலை எதிர்வீடு கேரளாவைச் சேர்ந்திருக்கும், இந்த எதிர்வீடு தமிழ்நாட்டைச் சேர்ந்ததாக இருக்கும். அப்படியிருக்கும் இடத்தில் கள்ளக்கடத்தலுக்கு ரொம்பச் சுலபமாகிறது எளிதாகிறது. அதைத் தடுக்கத்தான் 15 மைல்கள் என்று வைத்திருக்கிறோம். 15 மைல்கள் என்று வைத்தே

கள்ளக்கடத்தல் நிறையச் செய்து கொண்டிருக்கிறார்கள், இப்பொழுது கண்டு பிடித்துக் கொண்டேயிருக்கிறோம். எனவே இதைக் குறைப்பது என்பது இயலாத காரியம், சாத்தியமற்ற காரியம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, அரசாங்கத்தின் கையிருப்பிலே அரிசிக் கையிருப்பு நிறைய இருக்கிறது என்ற தகவல் சொல்லப்படுகிறது, அப்படியிருந்தும் சிங்காநல்லூர், கோவை போன்ற பகுதிகளிலே படியரிசித் திட்டத்தின் கீழ் அரிசியின் அளவு குறைக்கப்பட்டிருக்கிறதே, அது ஏன்? குறைக்கப்பட்ட அளவு மீண்டும் உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அரசாங்கத்தின் கையில் நிறையக் கையிருப்பு இருப்பதாக நான் சொல்லவில்லை. அரசாங்கத்திற்குத் தேவையான அரிசி கையில் இருக்கிறது, எவ்வளவு தேவையோ அந்த அரிசி இருக்கிறது என்று குறிப்பிட்டேன். படியரிசித் திட்டத்தின்கீழ் அளவு குறைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். படியரிசி இப்பொழுது கொஞ்சம் குறைக்கப்பட்டுத்தான் இருக்கிறது. அதற்குத் காரணம், படியரிசி வைத்திருப்பதே அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தத்தான். அதை அதிகமாகப் போடுவதைப் பற்றிப் பின்னால் யோசிக்கலாமே தவிர இப்பொழுது ஒன்றும் யோசனை இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the belt area around Hosur is very big and about 40 to 50 villages come within the belt area and so people are experiencing a lot of difficulties. Therefore, will the Hon. Minister reduce the belt area and place it near the Mysore border?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அந்த ஹோசூர் பகுதியிலேயும் கள்ளக்கடத்தல் நிறைய நடைபெற்றிருக்கிறது. அந்தப் பகுதியில் பெல்ட் ஏரியாவைக் குறைப்பதாக யோசனை இல்லை.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, உணவுக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மதுக்கரை பகுதியில் சொந்த உபயோகத்திற்குக் கொண்டு போனால்கூட பிடிக்கிறார்களே, அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, சொந்த உபயோகத்திற்கென்று கொண்டு போகின்றவர்களை யாரும் தடுப்பது இல்லை. ஆட்சி மன்றத் தலைவரின் அனுமதி வாங்க வேண்டும். அப்படி அனுமதி வாங்காமல் போனால் சொந்த உபயோகத்திற்கா அல்லது வியாபாரத்திற்கா என்று தெரியாது, அதனால் பிடிப்பார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, போதுமான அரிசி கையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்பொழுது பல வியாபாரிகள் அவர்கள் கொடுக்க வேண்டிய லெவி அரிசியை ஏராளமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது, அதையெல்லாம் கணக்கில் சேர்த்து அமைச்சரவர்கள் சொல்லுகிறார்களா அல்லது அது இல்லாமலே சொல்லுகிறார்களா?

**மாண்புமிகு திரு. ப உ. சண்முகம் :** தலைவரவர்களே, வியாபாரிகளிடம் உள்ளதையும் அரசாங்கக் கணக்கிலே உள்ள இருப்பையும் சேர்த்துத்தானே தவிர தனித்து இல்லை. வியாபாரிகளிடத்திலும் கூட நமது ஸ்டாக் இருக்கிறது.





**திரு. எ. சுவாமிதாஸ் :** தலைவரவர்களே, நமக்குப் போதுமான அரிசி கையிருப்பில் இருந்தும் வெளிச் சந்தையிலே அரிசியின் விலை படிப்படியாக உயர்ந்து ஏறிக்கொண்டிருக்கிறதே, அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, வெளிச் சந்தையிலே விலை சற்று ஏறியிருப்பது உண்மைதான். இது ஏற வேண்டிய காலம், ஏறும். ஏனென்றால் அறுவடையில்லாத நேரம். ஆனால் இந்த விலையைக் கட்டுப்படுத்த, மட்டுப்படுத்த—ஏற்கெனவே நான் சொன்னேன், வருவாய்த்துறை மானியத்தில் பேசும்பொழுது சொன்னேன் என்று நினைக்கிறேன்—அரசாங்கம் கவனித்து வருகிறது. விலை கொஞ்சம் அதிகமானால் அரிசிக் கையிருப்பிலுள்ளதை கூட்டுறவுக் கடைகளின் மூலமாக விற்பனை செய்ய தயாராக இருக்கிறது. கவனித்து வருகிறது, தேவையான இடங்களில் அது கொடுக்கப்படும்.

**திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, வெளி மாநிலங்களுக்கு அரிசி கொண்டுபோவதைத் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நம் எல்லையோரங்களில் சோதனைச் சாவடிகளைப் போட்டிருக்கிறோம். பறக்கும் படை செயல்பட்டு வருகிறது. 'ஃபுட் விஜிலென்ஸ் செல்' என்று தனியாக வைத்து, டி.ஐ.ஜி. யும், 2 எஸ். பிக்களையும் போட்டு, இப்படிப் போலிஸ் வைத்து வெளியிலே செல்பவர்களைக் கண்காணித்து வருகிறது. சமீபத்தில் கிடைத்த ஒரு புதிய தகவலின்படி, சென்னையிலேயிருக்கும் ஒரு வியாபாரிகூட அரசாங்கம் கொடுத்ததைப்போன்ற பொய் பெர்மிட்டுகளைக் கொடுத்து அரிசியைக் கள்ளக் கடத்தல் செய்திருக்கிறார்கள். அதைக் கண்டுபிடித்து வியாபாரியைக் கைது செய்து வைத்திருக்கிறார்கள்.

### நக்ஸல்பாரிகள்.

* 258 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நக்ஸல்பாரிகள் நடவடிக்கைகளைத் தடுக்க அரசு தனி போலீஸ் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது வரையில் எத்தனை நக்ஸல்பாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :**

(அ) ஆம்.

(இ) 1968-ம் ஆண்டில் 7 நக்ஸல்பாரிகளும், 1969-ஆம் ஆண்டில் 19 நக்ஸல்பாரிகளும் கைது செய்யப்பட்டனர். 1970-ம் ஆண்டில் காவல் துறைத் தனித் பிரிவும், உள்ளூர் காவலரும் 62 நக்சல்பாரிகளைக் கைது செய்தனர். 1971-ஆம் ஆண்டில் இது வரை 44 நக்சல்பாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவரவர்களே, கைது செய்யப்பட்ட நக்ஸல்பாரிகள் ஏதாவது அரசியல் கட்சிகளில் உறுப்பினர்களாக இருக்கிறார்களா, ஆமெனில் அந்த அரசியல் கட்சியின் பெயரைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள், எல்லா அரசியல் கட்சிகளும் தங்களுக்குப் பயன் தரக்கூடிய கட்சிகள் அல்ல, தங்கள் தீவிரத்திற்கு ஏற்றவை அல்ல என்று கருதுவதால் அவைகளில் இருந்து விலகி தீவிரவாதிகளாக இன்றையதினம் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த நக்ஸல்பாரி இயக்கத்தைத் தடுப்பதற்காகக் கன்னியாகுமரி ஜில்லா கேரள எல்லை ஓரத்திலே யிருப்பதால் அங்கே விசேஷ நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொள்ளப் பட்டிருக்கின்றனவா, எத்தனை கேஸ்கள் 1971-லே ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருக் கிறது, எத்தனை கேஸ்கள் தள்ளுபடி ஆகியிருக்கின்றன என்ற விவரத்தைக் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதற்காகவே ஒரு தனிப் பிரிவு மாநில அளவிலே ஏற்படுத்தப்பட்டு ஒரு சூப்பிரண்டெண்டெண்டும், 4 டெபுடி சூப்பி ரண்டெண்டெண்டுகளும், 10 இன்ஸ்பெக்டர்களும், 18 சப்-இன்ஸ்பெக்டர்களும், 14 தலைமைக் காவலர்களும், 13 காவலர்களும் கொண்ட ஒரு பிரிவு இதற்காகப் பணியாற்றி வருகிறது. மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்ட கன்னியாகுமரி பகுதியிலும் தக்க கண்காணிப்பு இருந்து வரு கிறது. கடந்த 3 ஆண்டுகளில் இவர்கள் செய்த முக்கிய குற்றங்கள் என்ன என்ற விவரத்தைப் பார்த்தால் 4 கொலைகள், 2 வெடி வைத்தல், பஸ்ஸிற்குத் தீ வைத்தல் 2 குற்றங்கள், 2 காயப்படுத்துதல் 2 குற்றங்கள், 3 கொள்ளை; இதிலே இந்தக் கொலைகளில் ஒன்றுக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற வழக்குகளில் 2, 3 வழக்குகளுக்குத் தண்டனை அளிக்கப்பட்டிருக்கின்றது; மற்ற வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த ஆண்டு சிலோனிலே ஏற்பட்ட கலவரத்தையொட்டி தென் மாவட்டங்களிலே ஏற்கனவே திலப்பறி இயக்கத் திலே ஈடுபட்டவர்களைக் கட்சிப் பாகுபாடு இல்லாமல் இந்த நக்சல்பாரி என்று கைது செய்யப்பட்டும், அவர்கள் இப்பொழுது விடுதலை செய்யப்பட்டாலும் இன்னும் அவர்களைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்களே, அவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திராவிடக் கழகம் போன்ற கட்சிகளில் உள்ளவர்களாக இருக்கிறார்கள், தொழிற்சங்கத்திலே இருக்கும் பலரை பிரியம் இல்லை என்றால், நக்சலைட் என்று நெய்வேலி போன்ற இடங்களில் கருதப்பட்டு அம்மாதிரி ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றனவா? அதேபோல் இன்னும் சில இடங்களில் இம்மாதிரி நிலை உண்டாகியிருக்கிறதே, அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திலப்பறி இயக்கம் என்று குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தையை அவர்கள் கட்சியே ஒத்துக் கொள்ளாது என்று நினைக்கிறேன். நில மீட்சி என்றுதான் வைத்திருக்கிறார் கள். திரு. தங்கமணி அவர்கள் அந்த வார்த்தையைத் திருத்திக்கொள்ள வேண்டும். நான் திருத்திக் கொள்வதாக இல்லை. அவர்கள் பல்வேறு கட்சி களிலே உள்ளவர்கள், தொழிற்சாலைகளிலே உள்ளவர்கள். பாதிக்காதவர்களாக யிருந்தால் அவர்கள் மீது நக்சலைட் என்ற குற்றத்தைச் சுமத்தி அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் அல்லது இன்னலுக்கு ஆளாகிறார்கள் என்று குறிப் பிட்டார்கள். அப்படி வேண்டுமென்று இந்தக் காரியம் நடைபெறவில்லை. நக்சலைட் என்பது இன்றையதினம், தீவிரவாதிகள், அதி தீவிரவாதிகள்



பிரிவுகளின் காரணமாகப் பிடிப்பட்ட பிறகு சொல்வது மாத்திரம் அல்ல, மாவோவின் சுவரொட்டிகளை ஒட்டவேண்டும், அவரது பொன்மொழிகள் நாட்டுக்கு ஏற்றவை என்று கூறவேண்டும், துரைத்தனம் துப்பாக்கியிலே நடை பெற வேண்டுமென்கிற கருத்தைக் கொண்டவர்களும் நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல் அவர்கள் அரசியல் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அல்ல, பல்வேறு கட்சிகளிலேயும் இருக்கக்கூடும். எங்கேயிருந்தாலும் தேடிக் கண்டுபிடிப்பதிலே காவல் துறை கண்காணிப்பாக இருந்து வருகிறது.

**திரு. சொ. காவேரிமணியம்:** இவ்வாறு தவறுதலான, ஜனநாயகத்திற்குப் புறம்பான எண்ணங்களை வைத்துக் கொண்டிருக்கும் நக்சலைட்டுகளைக் கைது செய்து காவலில் வைத்திருக்கும்போது அவர்களுடைய உள்ளத்தை மாற்ற ஏதாவது பொலிடிகல் டியூஷன் என்ற அளவில் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவைகளும் உரிய நேரத்தில் ஏற்ற வகையில் நடைபெறும் என்று நம்புகிறேன்.

DR. H. V. HANDE: May I know from the Hon. Chief Minister whether most of these people are from other States and not from our States Will the Hon. Chief Minister also given an assurance that he will also get in touch with similar departments in Kerala, Mysore and Andhra Pradesh and see that a joint action as is done between Orissa and Andhra Pradesh (not that it has grown to such an extent—I do not feel it necessary) is taken? Will he consider such a thing also?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அவர்கள் குறிப்பிட்டது போல் ஜாயிண்ட் ஆக்ஷன் என்ற அளவில் காவல் துறைக்கு இடையில் இணைப்பு இல்லாவிட்டாலும் மற்ற மாநிலங்களில் இருந்து வேறு மாநிலங்களுக்கு வந்து விட்ட நக்சலைட்டுகளும் பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்படுகிறார்கள். 1968-ல் கைது செய்யப்பட்ட 7 நக்சலைட்டுகளில் 3 பேர் கேரளத்தைச் சேர்ந்தவர்கள்; 1969-ல் கைது செய்யப்பட்ட 19 நக்சலைட்டுகளில் 9 பேர் ஆந்திரப் பிரதேசத் தைச் சேர்ந்தவர்கள். இதைப் போலவே அந்தந்த மாநிலங்களில் உள்ளவர் களும் ஒத்துழைப்புத் தருகிறார்கள். கூட்டு முயற்சியாக காவல் துறையில் வைக்கலாம் என்பது மெல்ல, மெல்ல யோசிக்கப்படும்.

**திரு. என். கணபதி:** தஞ்சை மாவட்டத்தில் சில மிராசுதார்களுக்கு மிரட்டல் கடிதங்கள் வந்ததாகத் தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா? அது நக்சலைட் வேலையாக இருக்குமா? அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படி ஒரு தகவல் வந்திருக்கிறது. ஆனால் நக்சலைட்டுகள் பெயரால் பயமுறுத்துவது போல் வேறு யாராவது எழுதியிருக்கக்கூடுமோ என்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. எஸ். ஆறுமுகம்:** அரசு இதற்காகத் தனிக் காவல் துறை ஏற்படுத்தி தகுந்த நடவடிக்கை எடுத்ததன் மூலம் நக்சல்பாரிகளின் நடமாட்டம் தமிழ் நாட்டில் தடுக்கப்பட்டிருக்கிறதா? இவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை துக்குத் தண்டனையாக இருக்குமா? இவர்களுக்கு நக்சல்பாரிகள் என்று ஏன் பெயர் வந்தது என்பதை முதல்வர் அவர்கள் விளக்குவார்களா?

[1971 ஜூலை 16

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மேற்கு வங்கத்தில் நக்சல்பாரி என்ற இடத்தில் இப்படிப்பட்ட தீவிரவாதிகள் தோன்றத் தொடங்கிய காரணத்தால் அவர்களுக்கு நக்சல்பாரிகள் என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. தண்டனை பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய குற்றத்தின் அளவு குறித்துத் தான் இருக்கின்ற சட்டத்தின்படி தண்டிக்கப்படுகிறார்கள். நக்சல்பாரிகளைத் தடை செய்வது குறித்து மத்திய அரசு பொதுவான முடிவை மேற்கொள்ள வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறும் போது நக்சலைட்டுகள் மாவோவின் சுவரொட்டிகளை ஒட்டுகிறார்கள் என்பதிலிருந்து அவர்கள் மாவோவின் வழிகாட்டுதலைப் பின்பற்றுகிறவர்கள் என்பது புலனாகிறது. அப்படி இருக்கின்றவர்கள் நம்முடைய தமிழகத்தில் ஆங்காங்கு சிதறி இருக்கிறார்களா அல்லது ஓர் இணைப்பு பெற்று காரியங்களைச் செய்யும் நிலையில் இருக்கிறார்களா? 1948-ல் தெலிங்கானா கம்யூனிஸ்டுகள் என்று சொல்வது போன்று இன்று இந்த நக்சலைட்டுகள் இருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நக்சலைட்டுகள் சிதறி இருக்கிறார்களா அல்லது இணைந்து இருக்கிறார்களா என்று கேட்டார்கள். அவர்கள் பல பகுதிகளிலும் இருக்கிறார்கள். பொதுவாக இந்த எண்ணங்கள் ஏற்படக் காரணம் நாட்டிலுள்ள பல்வேறு குறைபாடுகள், சமுதாயத்திலும், பொருளாதாரத் துறையிலும் இருக்கின்ற நிலைமைகள், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், இப்படிப்பட்ட அடிப்படைக் காரணங்கள் இதுபோன்ற தீவிர உணர்ச்சிகளை சில பேருக்கு ஏற்படுத்தக் காரணமாக இருக்கிறது. ஆனால் இவைகளை எல்லாம் போக்கக் கையாளும் முறை சரிதானா என்ற கேள்வியை மறந்துவிடக்கூடாது. அதே நேரத்தில் வறுமையை ஒழிக்கவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும், மாநில அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதோடு இதிலே பெரும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டாக வேண்டும். அப்படி ஏற்றுக் கொள்ளாத காரணத்தாலே கொலை, கொள்ளை போன்ற படுபாதகச் செயல்களிலே இறங்குவது ஜனநாயகத்திற்கு விரோதமானது. இந்தியா முன்னேற வேண்டுமென்றால் அது ஜனநாயகத் துறையில் முன்னேற வேண்டுமென்ற எண்ணத்தை இந்தத் தீவிர வாதிகள் உணரவேண்டும். அப்படி உணர்ந்து அவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் இந்தியா ஜனநாயக முறையில் பல துறைகளிலும் முன்னேற முடியும். இந்தக் கேள்விக்கு, இந்தப் பிரச்சினைக்கு இதைத்தான் நான் விளக்கமாகத் தர விரும்புகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** எந்த மாவட்டத்தில் நக்சல்பாரிகள் நடவடிக்கைகள் அதி தீவிரமாக இருக்கிறது? நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் பாமர மக்களை நக்சல்பாரிகள் என்ற அடிப்படையில் போலீசார் கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதை அரசு அறியுமா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நீலகிரி மாவட்டத்தில் நக்சல்பாரிகள் என்ற பெயரால் பாமர மக்கள் இடையூறுகளுக்கு ஆளாவது போன்ற தகவல் அரசுக்கு வரவில்லை. அப்படி ஏதாவது இருந்தால் அதுபற்றி அரசு ஆராயும். எந்த மாவட்டத்தில் அதிகமாக இந்தத் தீவிரவாதிகள் பயங்கரமான நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். இதுவரை தமிழ் நாட்டில் இவர்கள் மிகப் பயங்கரமான நடவடிக்கையில் ஈடுபட்டது தென்னாற்காடு மாவட்டத்தில்.



1971 ஜூலை 16]

**திரு. கா. வேழவேந்தன் :** நக்சல்பாரிகள் ஆந்திராவில் ஸ்ரீகாகுளம் பகுதியிலும், கேரளாவின் சில பகுதிகளிலும் ஆடிய வெறியாட்டங்களைப் பற்றி அவ்வப்போது ஏடுகளில் செய்திகள் வந்தன. சமுதாயத்தில் இருக்கும் இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்தால் இந்தமாதிரி பயங்கரமான கேடுகள் ஏற்படும் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் அந்த நிகழ்ச்சியை அரசு பத்திரிகையில் வெளியிட்டு அதில் இளைஞர்கள் பங்கு பெறாமல் இருக்க உரிய எச்சரிக்கையைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவை சில பத்திரிகைகளில் வெளியிடப் படுகின்றன. அவைகள் வெளியிடுவதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்திற்கு மாறாக தூண்டுதல் உணர்ச்சி கூட ஏற்பட்டு விடும். இவைகளை ஆராய்ந்துதான் செய்யவேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கையும், அதே நேரத்தில் இந்தியாவின் எதிர்கால வளத்தில் ஆர்வமும், அக்கறையும் உள்ளவர்கள் எந்த முறையில் நாட்டு மக்களைச் சுபிட்சப் பாதைக்கு அழைத்துச் செல்லலாம் என்பதைப் பற்றி பிரசாரம் செய்வது பயன்தரக்கூடும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தப் பயங்கரமான இயக்கத்தைச் சட்ட பூர்வமாகத் தடை செய்ய மத்திய அரசும், மாநில அரசாங்கங்களும் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதில் மத்திய அரசு தான் சட்டபூர்வமாக இந்த இயக்கத்தைத் தடை செய்கின்ற பணியைச் செய்ய வேண்டும். மத்திய அரசு இதனைத் தடை செய்யும் நேரத்தில் அதற்குக் குறுக்கே மாநில அரசுகள் நிற்காது என்று கருதுகிறேன்.

* 259 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாக பணி புரிந்த எவரேனும் நக்சல்பாரி என்பதற்காக கைது செய்யப்பட்டாரா?

(இ) ஆம் எனில், அவர் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) :** கேரள மாநில அரசால் தேடப்பட்டு வந்த ஒரு நக்சல்பாரிக்குப் புகலிடம் கொடுத்ததற்காக நாகர் கோயில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த உதவி யாளர் ஒருவர் 22—4—71-ல் கேரள மாநில எல்லைகளுக்குள் கைது செய்யப் பட்டார். கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை காவல் நிலையத்தில் அவர் மீது வழக்கொன்று விசாரணையில் உள்ளது. அவர் அலுவலகத்திற்கு வராமலிருந்த நாளான 6—4—71 லிருந்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைத்துள்ளார்.

**திரு. கோவை செழியன் :** தனிப்பட்ட முறையில் கொலை செய்பவர்கள், கொள்ளையடிப்பவர்கள் கூட, தாங்கள் பிடிப்பட்ட நேரத்தில் தங்களை நக்சல் பாரிகள் என்று சொல்லிக் கொள்வதாகச் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட செய்திகள் உண்மையா? சமீபத்தில் உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற கொலை அவர்களால் நடத்தப்பட்டதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உடுமலைப்பேட்டையில் நடத்தப்பட்ட கொலை நக்சல்பாரிகளால் நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. சாதாரண மாக கொலை, கொள்ளை செய்பவர்கள் கூட நக்சல்பாரிகள் என்று சொல்லிக் கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிக் கூறினாலும் அவர்கள் உண்மை யிலேயே நக்சல்பாரிகள்தானா அல்லது வேண்டுமென்றே சொல்லிக் கொள்ளு கிறார்களா என்பதை எல்லாம் காவல்துறையினர் சரியாக ஆராய்ந்து முடிவு எடுக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப்: அலுவலகத்தில் வேலை செய்பவர்களிடத்தில் மட்டு மல்லாமல் மாணவர்களிடத்திலும் இந்த இயக்கம் வளர்ந்து பரவிவருகிறது என்பதை அரசு அறியுமா? அப்படிப்பட்ட ஒருவர் வட ஆற்காடு மாவட் டத்தில் ஆசிரியராக நியமிக்கப்பட்டு அதன்பிறகு சஸ்பெண்ட் செய்யப்பட்டார். படித்து வேலை இல்லாதவர்கள், கல்லூரி மாணவர்கள் இதிலே ஈடுபட்டால், காந்திய வழியில், அண்ணா வழியில் போதனைகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பூக்களுக்குள்ளே பூ நாகம் இருக்கிறது. அதைப் போல் கல்லூரிகளிலும், மற்ற இடங்களிலும் இந்த நிலைமை உருவாகி யிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. காந்திய வழி, அண்ணா வழி, சமரச சன்மார்க்க வழியில் நாட்டின் எதிர்காலத்தை ஒளி மயம் ஆக்குவதற்காக அவர் களிடையே ஏற்கெனவே பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவர் அவர்களே, இந்த நக்சல்பாரிகள் என்று சொல்கிறவர்கள் செய்யும் கொலைக்கும் அப்படி அல்லாதவர்கள் செய்யும் கொலைக்கும் சர்க்கார் ஏதாவது வித்தியாசம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கொலை செய்தவர்களை ஆராய்ந்து அந்த வித்தியாசத்தை காவல்துறையினர் கண்டு பிடிக்கிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் நில மறு அளவு, ரீ சர்வே பார்டி, ஆபீஸிலிருந்த ஒரு வேலையாளை இந்த இயக்கத்தில் ஈடுபட்டவர் என்று சொல்லி அரெஸ்ட் செய்து விடுதலை செய்ததுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனிக் கேள்வி கேட்டால் பதில் தயாரித்துத் தரலாம்.

### பல்லடத்தில் சிறு தொழில்

*266 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு தொழில் கார்ப்பரேஷன் மூலம் பல்லடத்தில் சிறு தொழில் ஆரம்பிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.





### திருப்பூர் பகுதியில் தொழிற்பேட்டை

*267 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் நகர் அல்லது திருப்பூர் ஊராட்சி ஒன்றிய பகுதிக்குள் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள் திருப்பூரில் ஒரு கூட்டுறவுத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தொழில் வணிக இயக்குநரிடம் கேட்டுள்ளார்கள். இதற்கான பூர்வாங்க விசாரணைகளை இயக்குநர் நடத்தி வருகிறார்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் ஏறத்தாழ 600 பனியன் பாக்டரிகள் இருக்கின்றன. மேலும் இப்போது அவை பலயிடங்களில் வாடகைக் கட்டடங்களில் இருந்து வருகின்றன. அந்த இடத்தில் ஒரு தொழில் பேட்டை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அந்தத் தொழிலுக்கு சிரமம் பயன்படும். மேலும் பஞ்சாப் மாநிலத்திலிருந்து ஊசிகள், மெஷின்ஸ் போன்றவை தருவிக்கப்படுகின்றன. அவற்றை கூட்டுறவுத் தொழிற்பேட்டை மூலம் தமிழ்நாட்டில் தயாரித்தால் அந்தத் தொழிலுக்கு இன்னும் ஊக்கம் ஏற்படும். ஆகவே, அதை சிறு தொழில் வாரியத்தின் மூலம் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவு தொழிற்பேட்டை அங்கு அமைப்பது நியாயம் என்று அரசு கருதுகிறது. விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### பனியன்கள் ஏற்றுமதி

*268 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பனியன் (பின்னல்) தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. சு. துரைசாமி: கைத்தறித் துணிகளை நாம் வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு எடுத்துக்கொள்கிற முயற்சியைப்போன்று இந்தப் பனியன் தொழிலும் சிறந்தோங்க வெளிநாடுகளில் சந்தையைப் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதற்கென்று எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சில் இருக்கிறது. பனியன்களைப் பொறுத்தவரையிலும் வெளி மாநிலங் களுக்கு வாங்கி அனுப்புகிறார்கள். இங்குள்ளவர்கள் அதற்கான முயற்சிகளை எடுப்பார்களானால் அரசாங்கம் ஒத்துழைக்கும்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவர் அவர்களே, பனியன் தொழில் என்பது இப்போது வளர்ச்சி அடைந்து வருகிற ஒரு தொழில். அதை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை அரசு செய்யவேண்டும்.

அந்தத் தொழிலை நடத்துகிறவர்கள் நூல் விலையேற்றம் வேறு சில காரணங்களினால் மிகவும் ஸ்தம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய வருங்காலத்தை உத்தேசித்து அவர்களுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான காரியங்களை இந்த அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : 12 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தியாகிறது நம் மாநிலத்தில். இதில் 75% வெளி மாநிலங்களில் விற்கப்படுகிறது. நம் மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி எடுத்தால் அரசாங்கம் ஒத்துழைப்பு தரலாம். நூலைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது விலை ஏறுகிற சமயத்தில் அரசு தலையிட்டு குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யலாம்.

## மாயூரத்தில் தொழிற்பேட்டை

* 269 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தற்போது இல்லை.

## வாலாஜாபேட்டையில் தொழிற்பேட்டை

* 270 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜா நகராட்சி எல்லையில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இல்லை.

## *Bridge across Cooum near Poonamalee*

* 271Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have any proposal to construct a bridge across the Cooum on the road leading to Tiruverkadu near Poonamallee;

(b) if so, the estimated cost of the bridge; and

(c) the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (அ), (இ) & (உ) : மேற்கு பெருவழி தேசிய நெடுஞ்சாலையில் மைல் 10/4-ல் திருவேற்காடு அருகில் தேவி கருமாரி அம்மன் கோவிலுக்கு பிரியும் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே எழு இலட்ச ரூபாய் மதிப்பளவில் ஒரு மூழ்குப் பாலம் கட்ட அரசு பிப்ரவரி 71-ல் ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வேலையை செய்ய ஒப்பந்தம் முடிவு ஆகிவிட்டது. வேலை விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.



Dr. H. V. HANDE : Tiruverkadu is an important place because daily from Madras some thousands of persons go there for dharsan. May I know from the Hon. Minister the exact date on which this work will commence and the probable date by which the work will be over What are the steps the Government going to take to expedite the work?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : டெண்டர் முடிவுசெய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. விரைவில் வேலை தொடங்கப்படும். கருமாரியம்மன் கோவிலுக்குப் போகிற இடத்தில் ஒரு காஸ்வே இருக்கிறது. அந்த காஸ்வேயை கட்டவேண்டுமென்ற கோரிக்கை இருந்தது. அந்தக் காஸ்வேயைக் கட்டுவதால் கிராம மக்களுக்குப் பயன் கிடைக்காது என்று சொல்லி அந்தக் கிராம மக்களும், தொகுதி எம்.எல்.ஏ. யும் சொல்லியதற்குப் பிறகு வேறு ஒரு இடத்தில் போடப்பட்டு மீண்டும் அந்த காஸ்வேயை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற கோரிக்கை பெறப்பட்டது.

The existing causeway has been affected by recent rains.

The rough stone embankment on either side of the vented causeway has been washed off as the course of the river has been changed, and that therefore the following provisions will have to be made for repairing the causeway :—

(1) Apron will be provided on both upstream and downstream with retaining wall throughout line at waterway;

(2) Additional rows of R.C.C. hume pipes 3 feet diameter will be provided in washed out portions to enable free flow of water so that there cannot be any breach in future.

The retaining wall of the causeway will be extended on both sides for a length of 100 feet. The existing cement concrete pavements will be extended for the whole length of the causeway.

The existing top level of the causeway will be reduced to avoid obstruction to flow in flood periods.

The approximate cost of repairs for the existing causeway works out to Rs. 85,000.

அந்தக் கோவிலுக்குப் போகிற இடத்திலுள்ள காஸ்வேயை புதுப்பிக்க திட்டம் இருக்கிறது. இன்னொரு பால வேலையும் இருக்கிறது. அது உடனடியாகத் துவக்கப்படும் என்று நம்புகிறேன். ஆறு மாத காலத்திற்குள்ளாக முடியும் என்று நம்புகிறேன்.

## வழுக்குப்பாறை, வரட்டுப்பள்ளத்தில் அணைகள்

* 272 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டத்திலுள்ள வழுக்குப்பாறை, வரட்டுப்பள்ளம் அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இத்திட்டங்கள் ஆய்வில் உள்ளன.

(இ) வழுக்குப்பாறை அணைத் திட்டம் ரூபாய் 50 லட்சம், வரட்டுப் பள்ளம் அணை திட்டம் ரூபாய் 60 லட்சம்.

திரு. ஏ. எம். இராஜா: இந்த வழுக்குப்பாறை வரட்டுப்பள்ளம் திட்டம் வந்தால் பவானி வட்டத்தில் பெரும் பகுதிகள், வறட்சிப் பகுதியாக இருக்கிற அந்தப் பகுதிகள் நல்லமுறையில் பயனடைய முடியும். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவில் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாக செயல்படுத்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வழுக்குப்பாறைத் திட்டத்தில் சுமார் 200 ஏக்கர் வனத்துறை நிலங்கள் நீர்பிடிப்பால் பாதிக்கப்படுவதால் வன இலாகா ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஒப்புதல் கிடைத்தவுடன் இத் திட்டம் பற்றிய அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென்று தலைமைப் பொறியாளர் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மதிப்பீடு பற்றி வருவாய்த் துறை வாரியம், வனத்துறை தலைவர் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது கிடைத்தவுடன் வேலையை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படும்.

### *Intensive Banana Plantation in Dharmapuri District*

* 273 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have any scheme to start Intensive Banana Plantation in Dharmapuri District; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Rental flats in Government Estate*

* 274 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Secretariat staff have requested the Government about the 22nd August-September 1970 for the construction of rental flats in the Government Estate, Mount Road, Madras; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) அரசு எஸ்டேட்டில் உள்ள வெற்று நிலம் அரசின் காரியங்களுக்காகத் தேவைப்படுவதால் அதைச் சங்கத்துக்கு அளிக்க இயலாது. எனவே சங்கத்தின் வேண்டுகோள் தள்ளுபடி செய்யப்பட்டது.



### தஞ்சை மாவட்டத்தில் சின்கோனா மரங்கள்

* 275 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969-70-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் சின்கோனா மரங்களை வளர்க்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நிலங்கள் சின்கோனா மரங்கள் வளர்க்க உகந்ததாக இல்லை. ஆகையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் சின்கோனா மரங்களை வளர்க்கும் நோக்கம் இவ்வரசிற்கு இல்லை.

திரு. சோ. கருணாநாதன்: ஏற்கெனவே இருக்கின்ற சின்கோனா தோட்டங்கள் நல்லமுறையில் செயல்படுகின்றனவா? நம் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் சின்கோனா தோட்டங்கள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோவை மாவட்டத்தில் யானைமலைப் பகுதியிலும் நீலகிரி மாவட்டத்திலும் சின்கோனா மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த சின்கோனா மரங்கள் அதிகமாக வால்பாறைப் பகுதியில் வளர்க்கப்படுகின்றன. அங்குள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு மற்ற தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஊதியங்கள் கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லை என்றால் அப்படிக் கொடுப்பதற்கு என்ன ஏற்பாட்டினை அரசாங்கம் செய்ய உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற ஆண்டுதான் சம்பள உயர்வு கேட்டார்கள். அவர்களுக்கு கணிசமான அளவிற்கு, ஒத்துக்கொள்கிற அளவிற்கு உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்த சின்கோனா துறை கழக அரசு வந்ததற்குப் பின்னால் நல்ல லாபத்தில் நடத்தப்பட்டு அயல்நாடுகளுக்கு அனுப்பப்பட்டு அன்னியச் செலவாணி கிடைக்கிறது. இதை மற்ற மாவட்டங்களில் எங்கெல்லாம் சின்கோனா பயிரிடப்பட முடியுமோ அங்கெல்லாம்—நெல்லை மாவட்டம் போன்று கொஞ்சம் மலைப்பகுதிகளாக உள்ள இடங்களில், மாஞ்சோலை போன்ற பகுதிகளில் இந்தத் தோட்டங்களை வைத்து மேலும் நம் அன்னியச் செலாவணியைப் பெருக்குவதற்கு தமிழக அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சென்ற ஆண்டு இருபது லட்ச ரூபாய் பெறுமானமுள்ள சின்கோனா மருந்துகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. சின்கோனா செடி வைப்பதற்கு, தரைமட்டத்திலிருந்து 3000 அடி முதல் 8000 அடி உயரத்திலுள்ள இடங்களில்தான் அவை வளரும். ஆகவே தகுந்த இடமாக யானைமலை பகுதியும், நீலகிரி மாவட்டமும் கருதப்படுகிறது. கொடைக்கானலில் பரீட்சார்த்தமாக போட்டு பார்க்கப்பட்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், தஞ்சாவூர் மாவட்டத்திலே சின்கோனா மரம் வளர்க்க முடியவில்லை என்றாலும், அங்கே தேக்கு மரம் பயிரிடப்படுகிறதே அதையாவது விரிவு படுத்த திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** சரியான கேள்வி.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், நீலகிரி மாவட்டத்தில் சின்கோனா பயிரிடுகிற பணி செய்கிறவர்களுக்கு வீடுகள், வசதிகள் இல்லை, கூலி சரி வர கொடுப்பது இல்லை என்றும் அரசாங்கத்திற்கு புகார் வந்து இருக்கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கேள்வி மரங்களைப் பற்றியது. இது அனுமதிக்கப்படவில்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, சுமார் 4000 அடி உயரம் உள்ள ஏலகிரி மலை சின்கோனா பயிரிடுவதற்கு ஏற்ற இடம் என்று டைரக்டர் ஆப் சின்கோனா அவர்கள் பரிந்துரை வழங்கியிருக்கிறார்களா ? அதன் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு என்ன செய்து இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இந்த மரம் பயிரிடுவதற்கு 3000 முதல் 8000 அடி வரை உயரம் வேண்டுமென்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, மழை சற்று அதிகமாக இருக்க வேண்டும். அந்த அளவில் எந்தெந்த இடங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் இதைப் பயிரிடும் திட்டத்தை பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Denkanikottah hill area is situated on the Mysore Tableland and it is more than 3000 feet in height. So, may I know whether the cinchona plantations will be introduced in those hilly areas?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, திட்டம் எடுப்பதற்கு முன்னாலே பரிசீலனை செய்து இருக்கவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த சின்கோனா மரங்களிலிருந்து நீலகிரித் தைலம் என்று உலகப் பிரசித்தி பெற்ற தைலம் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது யூகாலிப்டஸ் என்ற மரத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது. இது கொயினா மாத்திரை தயார் செய்யப் பயன்படுகிறது.

**திரு. சோ. கருணாநாதன் :** தலைவரவர்களே, நமது அரசாங்கத்திற்கு சின்கோனா திட்டத்தின் மூலம் அதிக லாபம் வருகிறது. ஆகவே, அந்த திட்டத்தை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் ஏதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, விரிவாக விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆனமலை, நீலகிரி போன்ற மலைப் பிரதேசங்களில் 5000 ஏக்கர் நிலத்தில் இப்போது பயிரிடுகிறோம். அங்கே போதுமான வளமுள்ள நிலம் கிடைக்க வில்லை. நிலம் இல்லாததால் விஸ்தரிக்கும் திட்டம் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், சின்கோனா மரத்திலிருந்து ஆராய்ச்சி செய்து ஒரு புதிய மருந்தை நமது ஆராய்ச்சி நிலையத்தில் கண்டு பிடித்தார்களே, அது சிறந்த மருந்து என்று கருதப்பட்டதே, அதை இன்னும் விரிவுபடுத்தி நல்ல விதமாக செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ? அந்தக் கண்டுபிடித்தவருக்கு ஏதாவது இனும் அளிப்பதற்கு, பாராட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்து இருக்கிறதா ?



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, விவரத்திற்குத் தனியான கேள்விபோடவும்.

## *Shortage of coin in State Transport Buses*

* 276 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state whether the Government are aware of the hardship experienced by the bus crew in Madras City due to coin shortage?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆம். இந்திய ரிசர்வ் பாங்கி, போதிய அளவு சில்லரை நாணயங்கள் வெளியிடும் வரை, நிலைமை சீரடையாது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, நமது அரசு பஸ்ஸில் செல்லக் கூடியவர்கள் சில சமயங்களில் அவசரமாகச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் சில்லரை வைத்து இல்லாவிட்டால், அவர்களைக் கீழே இறக்கி விட்டு போகிறார்கள். அதன் காரணமாக அவர்கள் சொல்லக்கூடிய காரியம் தாமதமாகிறது. அது மட்டுமல்லாமல் அரசுக்குக் கிடைக்கக்கூடிய அந்த வருமானம் குறைகிறது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, இன்னொரு பக்கம் சில்லரை கொடுக்காமலேயே செல்வதற்குப் வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பேருந்து நடத்துனர்களிடத்தில் ரூ. 5 வரை சில்லரை கா[illegible]யில் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அச்சம் தேவையில்லை.

**திரு. கோவை செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சில்லரைப் பிரச்னையைப் போக்குவதற்காக டெல்லி டிரான்ஸ்போர்டிலே கூப்பன்கள் அடித்து விநியோகிப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முறையை தமிழக அரசு கடைப்பிடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அந்த முறை பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் அது சில்லரை விஷயம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த பஸ்ஸிலே பிரயாணம் செய்யக் கூடியவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் போர்டு ஒன்று 'Exact fare saves time' என்று போட்டால் சௌகர்யமாக இருக்கும். அவர்கள் இப்படி கரெக்ட்டாக 25 பைசா, 35 பைசா, 20 பைசா என்று கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும் என்று பிரசாரம் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இப்போதே இந்தப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. கட்டணமும் 10, 15, 20, 25 என்று கொடுப்பதற்கு சௌகர்யமான முறையில் இருக்கிறது. ஆகையால் சில்லரை கொடுப்பதில் இப்போது ஒன்றும் கஷ்டம் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், ரிசர்வ் வங்கியிலே இந்தச் சில்லரை கொடுக்கும் வரை இந்தப் பஞ்சம் இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி என்றால் எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இது ரிசர்வ் வங்கியைக் கேட்க வேண்டிய கேள்வி.

**திரு. எம். தேவராசன்:** தலைவரவர்களே, மஞ்சள் நிற 20 பைசா நாணயத்தில் மெட்டாலிக் வேல்யூ, பேஸ் வேல்யூவை விட அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால், உருக்கி விற்று விடுவதால் இந்தச் சில்லரை பஞ்சம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அப்படி ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது. அது நம்முடைய நாட்டு விஞ்ஞானிகளின் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறது.

**திரு. மா. சுப்பிரமணியன்:** தலைவரவர்களே, இந்தச் சில்லரைப் பிரச்னையைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அரசுப் போக்குவரத்துத் துறை ரிசர்வ் வங்கியோடு இடைவிடாமல் கடிதத் தொடர்பு மூலம் வற்புறுத்தி வருகிறது. அவர்கள் இன்னும் போதிய அளவு சில்லரை தராத காரணத்தால் இந்தத் தட்டுப்பாட்டைச் சந்திக்கிறோம்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவரவர்களே, பயணிகள் வண்டியில் ஏறுவதற்கு முன்னாலேயே டிக்கெட் வாங்கிவிட்டால் சில்லரைத் தகராறு வராது. பயணிகளுக்கு ஏறுவதற்கு முன்பே டிக்கட், அனுமதி சீட்டு வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்த நல்ல யோசனை இப்போது அமுலில் இருக்கிறது. ஆனால் எல்லாப் பயணிகளுக்கும் முன்னதாக டிக்கட் கொடுப்பது முடியாத காரியம். இருந்தாலும், எந்தெந்த இடங்களில் பேருந்துகள் நிற்கிறதோ, அந்த இடங்களில் ஸ்டாண்ட் கண்டக்டர்கள் போட்டு, முன்னதாகவே டிக்கட் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கி. பொன்னுமலை:** தலைவரவர்களே, இப்போது ஒரு மாதகாலமாக சில்லரை தட்டுப்பாடு கிடையாது. வேண்டிய சில்லரை கிடைக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சில்லரை அங்கத்தினருக்குக் கிடைத்தால் எனக்கு மகிழ்ச்சி.

**திரு. எஸ். நல்லசாமி:** தலைவரவர்களே, பஸ்ஸில் போகும்போது சைடில் இருக்கும் படிதா மூஞ்சியில் அடிக்கால் இருக்கும் வகையில் அதைச் சுருட்டி கட்டுவதற்கு ஏதாவது வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தலையை வெளியே நீட்டாமல் உட்கார்ந்து கொண்டால் இந்தப் பிரச்னை வராது.



**திரு. எம். ஏ. லத்தீப்:** * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அனுமதிக்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதை 'expunge' பண்ணிவிடலாம்.

Mr. SPEAKER: I order expunction.

### *Visit of President to Sri Meenakshi Amman Koil*

* 277 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religiuos Endowments be pleased to state whether entry by the members of the public into Sri Madurai Meenakshi Amman Koil was suspended in June 1971, in connection with the vist of the President of the Union to the temple?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** இல்லை.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவரவர்களே, அன்று அம்மன் சன்னதியில் திருமணம் செய்து கொள்வதற்காக வந்தவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் சென்று விட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவரவர்களே, 71-வது ஆண்டு ஜூன் மாதத்திலே கோவிலுக்கு குடியரசுத் தலைவர் வருகை தந்தார்கள். அன்றைய தினம் 9-40 மணிக்கு வந்த குடியரசுத் தலைவர், கோவிலுக்கு வந்து சுமார் 6 நிமிடங்கள் அம்மன் சன்னதியில் இருந்து இருக்கிறார்கள். அதற்கு பிறகும், அதற்கு முன்னும் திருமணங்கள் நடந்து இருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக குடியரசுத் தலைவர், ஆளுநர் போன்றவர்கள் முக்கியமான நகரங்களுக்கு வரும்போது அவரவர்களுடைய மதத்திற்கேற்ப கோயில்களுக்குப் போவது அரசாங்க மதச் சார்பற்ற தன்மைக்கு மாறுபட்டிருக்கிறதே, இதுபோல ஆளுநர், குடியரசுத் தலைவர் ஆகியோர் இம் மாதிரி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாதிருக்க கேட்டுக் கொள்ளப்படுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மதச்சார்பற்ற அரசு என்றால் மதங்களே இல்லாத அரசு என்று பொருள் இல்லை. ஒரு மதத்தைச் சார்ந்திருப்பது அல்ல. குடியரசுத் தலைவர், ஆளுநர் போன்றவர்கள் எங்கெல்லாம் போகிறார்களோ அங்கே பிற மதத்தினர் அழைத்தாலும் அங்கே போகிறவர்கள் தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குடியரசுத் தலைவர் அவர்கள் அங்கே இருந்தது 6 நிமிடம் தான் என்றாலும், அதற்கு முன்பும், பின்பும் போலீஸ் பந்தோபஸ்து போடப்படுவதனால் திருமணங்கள் நடக்க முடியாமல் போய்விடுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** குடியரசுத் தலைவர் போன்றவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறபோது ஏன் பாதுகாப்பு போடப்படுகிறது என்று கேட்கப்படுகிறது. இல்லாவிட்டால் ஏன் பாதுகாப்பு போடப்படவில்லை என்றும் கேட்கப்படும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் : ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திரு. என். கணபதி :** கோயில்கள் எல்லோருக்கும் பொது என்பது யாவரும் அறிந்த விஷயம். இருந்தாலும் மீனாட்சி அம்மன் கோயில் போன்ற இடங்களில் சட்டையில்லாமல் போய்த்தான் தரிசனம் செய்யவேண்டும் என்கிறார்களே, இதுபோன்ற தடையை நீக்கினால் வெளிநாட்டுப் பிரயாணிகள் அதிகம்பேர் சென்று சுவாமியை தரிசிக்க வாய்ப்பு ஏற்படாதா? ஆகவே இதுபோன்ற தடையை நீக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த அந்தக் கோயில்களில் சிலசில சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அந்தச் சம்பிரதாயங்களில் கை வைக்க அரசு என்றைக்கும் முன்வருவதில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** தெய்வ சந்நிதானத்திற்குச் செல்கிறபோது குடியரசுத் தலைவர் அவர்களும், ஆளுநர் அவர்களும் மற்றவர்களும் சமமாகத் தான் போய்விடுகிறார்கள். ஆகவே அவர்கள் வரும்போது மற்றவர்களின் தெய்வ வழிபாட்டிற்கு இடையூறு ஏற்படாது, மற்றவர்களும் தெய்வ வழிபாடு செய்ய இனி வழியேற்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தெய்வத்தைப் பொறுத்தவரை கொலைகாரர்களும் ஒன்றுதான். கொலைகாரர் அந்த இடத்தில் அனுமதிக்கப்படுவாரானால் அதன் விளைவுகளுக்கும், நாம் தான் பதில் அளித்தாக வேண்டும். இந்த 5 நிமிடத்தில் பக்தர்களுக்குத் தரிசனம் செய்ய முடியாது வீணாகப் போய்விட்டதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. சொ. காவேரிமணியம் :** மத்திய அரசில் இருந்து வரக்கூடிய அமைச்சர்கள் தான் இதுபோல தரிசனத்திற்கு வருகிறார்கள். மதுரையில் நான்கு வாயில்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு வாயில் வழியாக இவர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தால் மற்றவர்கள் சென்று வழிபடுவதற்கும் வசதியாக இருக்குமல்லவா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போதிருக்கிற முறையினால் பக்தர்கள் மனம் புண்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களுக்காக வக்காலத்து வாங்குகிறவர்கள் மனம் புண்பட்டதாகத்தான் தெரிகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் அவர்கள் திருமண நாட்களில் கோயில் தரிசனத்திற்கு வாராமலிருக்க ஆலோசனை அளிக்கப்படுமா? இதுபோல திருமணம் தடைப்பட்டுப் போகாதிருக்க. . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அன்றைக்குத் திருமணம் எதுவும் தடைபடவில்லை என்றுதான் இலாக்கா தொடர்புடைய அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** குடியரசுத் தலைவர் அவர்கள் மதுரை கோயிலுக்கு வந்திருந்தபோது அவரிடம் அங்கே ஒளி ஒலி காட்சி அமைப்பது பற்றித் தெரிவிக்கப்பட்டதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த ஆலோசனை குடியரசுத் தலைவரிடம் தெரிவிக்கப்பட வேண்டியதில்லை. அது சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.





**திருமதி த. ந. அனந்தநாயகி :** குடியரசுத் தலைவர், ஆளுநர் போன்றவர்கள் ஆலயத்திற்கு வரும்போது பந்தோபஸ்து அளிக்கப்பட வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆண்டவன் கொடுக்காத பாதுகாப்பையா இவர்கள் கொடுக்க முடியும்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆண்டவனுக்கும் ஆளுநர்கள் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அறிவிப்பு

### தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு நிலமேம்பாட்டு வாரியத்திற்கு (Tamil Nadu Land Improvement Board) கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளன :—

1. திரு. என். இராஜாங்கம்.

திரு. என். கிட்டப்பா.

3. திரு. ஆ. கு. சுப்பையா.

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது மூன்று என்பதால், மூவரும் தமிழ்நாடு நிலமேம்பாட்டு வாரியத்திற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

## (3) கவன ஈர்ப்பு

### சென்னை மாநகரில் வாடகை வண்டி (டாக்சி) ஓட்டுனர்கள் நடத்த இருக்கும் வேலை நிறுத்தம் பற்றி

THIRU K. T. K. THANGAMANI : Sir, I call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the proposed strike of Taxi drivers in Madras City on 19th July 1971 and likely hardships to the people and the need to settle the demands of the Taximen at an early date. I request that the Hon. Minister may be pleased to make a statement thereon.

**திரு. ஏ. எம். இராஜா :** சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ்,

19—7—1971-ம் நாள் அன்று சென்னை மாநகரில் வாடகை வண்டி ஓட்டுனர்கள் நடத்தவிருக்கும் வேலை நிறுத்தமும், அதன் காரணமாக மக்களுக்கு ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளும் உடனடியாக வாடகை வண்டிக்காரர்களின்

தேவைகளை நிறைவு செய்வதுபற்றியுமான அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Repeated representation for revision of fares for taxis and autorickshaws were received from Tamil Nadu Taxi and Autorickshaw Drivers' Association. The Government after careful consideration of the public interest, as well as the trade interest, took a decision to revise the rates of fares of autorickshaws and taxis as follows :—

| *Autorickshaws —* | *Old rate.* | *Rate proposed to be revised* |
|---|---|---|
| 1. For each kilometre | 20 paise | 25 paise |
| 2. Minimum charge | 35 ,, | 40 ,, |
| 3. Detention charge | Paise 5 for every five minutes. | No change. |

***Baby and medium taxis —***

| | | |
|---|---|---|
| 1. For each kilometre | 40 paise | 50 paise |
| 2. Minimum charge | 70 paise | Re. 1 |
| 3. Detention charge | 10 paise for every five minutes waiting. | |

A notification was accordingly published in the *Tamil Nadu Government Gazette,* dated 2nd June 1971, and objections or suggestions were called for regarding the revised rates of fares notified. A period of thirty days time was allowed for taking into consideration the draft direction regarding the revised rates of fare for Autorickshaws and Taxis. The Tamil Nadu Taxi and Autorickshaws Drivers' Association, Madras in their representation requested that the minimum charge for Autorickshaw be fixed as 50 paise instead of 40 paise, as notified. The Madras Bus Passenger's Association, Madras, objected to the increase in the fare. The Contract Carriage (Taxi) Owners' Association requested that the rate of fare for Taxis be increased to 60 paise per kilometre.

An oral hearing was given to the objectors on 6th July 1971. After perusing the written representations of the objectors and taking into account the arguments advanced at the time of hearing and the views of the State Transport Authority, Madras and in the light of a comparative study of rates obtaining in other cities in this country, the Government have fixed with effect from 12th July 1971 the following rates of fares for autorickshaws, baby taxis and medium taxis.



***Autorickshaws :—***

| | | |
|---|---|---|
| 1. For each kilometre | .. .. | 25 Paise |
| 2. Minimum charge | .. .. | 50 Paise |
| 3. Detention charge | .. .. | 5 Paise for every five minutes. |

The meter should be so set that it shows 50 paise at the completion of two kilometres and moves up at the rate of 5 paise for every one-fifth kilometre.

***Baby and Medium Taxis—***

| | | |
|---|---|---|
| 1. For each kilometre | .. .. | 50 Paise |
| 2. Minimum charge | .. .. | Re 1 |
| 3. Detention charge | .. .. | 10 paise for every five minutes waiting. |

"The Taxi meter should be so set that as soon as it is engaged it should record the minimum fare of Re. 1 and after completion of 2 kilometres it moves up at the rate of 10 paise for every one-fifth kilometre.

No representation has been received by the Government about the proposed taxi strike on 19th July 1971.

In view of this revision of fares, it is not likely that there will be any taxi strike on 19th July 1971.

Even if there is any such move, it will definitely be against public interest and they will have no public sympathy for such action.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பேரவைத் தலைவரவர்களே, 12—7—71 முதல் டாக்சிக் கட்டணங்கள் ரூ. 0.70 ஆக இருந்ததை ரூ. 1 ஆகவும், 40 பைசாவாக இருந்ததை 50 பைசாவாகவும் ஆக்கிய காரணத்தால் டாக்சி ஓட்டக்கூடிய டிரைவர்கள், தாங்கள் ஸ்ட்ரைக் செய்யப் போவதில்லை என்று அறிவித்தும் கூட, டாக்சி சொந்தக்காரர்கள் எப்படியாவது ஸ்ட்ரைக் செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் அந்த ஸ்ட்ரைக்கை நிறுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இப்போது மாற்றப்பட்டுள்ள கட்டணத்தை டாக்சி ஓட்டுனர்கள் சங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் உரிமையாளர்கள் சங்கம் இதை எதிர்ப்பதாகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகவும் பத்திரிகைகளில் செய்தி அறிவித்திருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற இந்தக் கட்டணமே நடைமுறையில் இருக்குமானால் அதுவே போதுமானது. ஏனென்றால், இந்த விகித உயர்வினால் நாள் ஒன்றிற்கு ரூ. 10 அவர்களுக்கு அதிகமாக வருவாய் வருகிறது. அதில்

ரூ. 5 செலவிற்கும், ரூ. 2 ஓட்டுனருக்கும் என்று வைத்துக் கொண்டால் ரூ. 3 லாபம் கிடைக்கிறது. ஆகவே, வேலை நிறுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள் என்று அரசு நம்புகிறது. மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் தேவையில்லை. பயணிகளின் நலனைக் கருதி அவர்களும், ஓட்டுனர்களும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஓட்டுனர்களின் ஊதிய விகிதம் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதுபற்றி அரசு டாக்சி உரிமையாளர்களைக் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கும். இப்போது அவர்களுக்கு அதிக வருவாய் வர வழிவகைகள் இருப்பதால் அவர்களே இதைச் செய்ய முன்வருவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, டாக்சி சொந்தக்காரர்களுக்கு ஏற்கனவே நிறைய வருமானம் வருகிறது. வரி கட்டக்கூடிய அளவுக்கு வருமானம் வருகிறது. கிலோ மீட்டருக்கு 40 காசு என்று இருந்ததை அரசு 50 காசு என்று உயர்த்தியிருக்கிறது. அதுவும் போதாது, 60 காசு என்று கேட்கிறார்கள், மக்கள் நலனுக்காக இவர்கள் டாக்சி ஓட்டுவதாக வேறு கூறுகிறார்கள். ஆனால் மக்கள் நலனை கவனிப்பதில்லை. வருமான வரி போன்ற வரிகளைக் கூட கட்டுவதில்லை. ஆகவே, இவ்வளவையும் மீறி ஸ்ட்ரைக் செய்தால் டாக்சிகளை சொந்தக்காரர்களிடமிருந்து பிடுங்கி டிரைவர்களுக்கு மாதத் தவணையில் கொடுப்பதற்கு அரசு யோசிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்படாது என்று நினைக்கிறேன். அவர்கள் எடுக்கின்ற நிலைகளை அரசு கவனித்து, அதற்கேற்ற முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## (4) அமைச்சரின் அறிக்கை

**'விற்பனை வரி' மீதான நிதிக்கோரிக்கை விவாதத்தில் தாம் அளித்த விவரத்தைத் திருத்தி உணவு வருவாய்த் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, விற்பனைவரி மானியத்தின் மீது விவாதம் நடைபெற்றபோது டாக்டர் ஹாண்டே அவர்கள் 6-வது சோன் சி.டி.ஓ. பற்றிக் குறிப்பிட்டார்கள். விஜிலன்ஸ் என்கொயரியின் போது அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்று குறிப்பிட்டிருந்தேன். அது அப்படியல்ல. அவர் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. அவர் நீண்ட நாள் விடுமுறையில் இருந்தார். தவறுக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.





## (5) 1971-72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**(அ) கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.**

**(ஆ) கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

**(இ) கோரிக்கை எண் 33—பல்வகை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971-72-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்புக்கான விவாதத்தில் இன்று பன்னிரண்டாம் நாள். இப்போது மானியக் கோரிக்கைகள் எண் 7, 8, 33 ஆகியவை எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இம் மூன்றிக்கும் இரண்டு மணிநேரம் விவாதத்திற்கு ஒதுக்கப்படுகிறது. பிறகு மாநிலச் சட்டமன்ற மானியக் கோரிக்கைக்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்படுகிறது. இந்த முறையில் இன்றைய அலுவல்கள் நடைபெறும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கோரிக்கை எண்-7 தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 36,70,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் "கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,32,07,400-க்கு மேற்படாத தொகை அரசுகக்கு வழங்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், "கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,63,14,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss about the desirability of conducting fair and impartial elections and to dissuade the State Ministers in participating in the election propaganda, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 36,70,200 under Demand No. 7—Elections—be reduced by Rs. 100."

திரு. ஆ. கு. சுப்பையா : பேரவைத் தலைவரவர்களே, தேர்தலில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,70,200-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss the need to introduce Mobile Polling Stations, I move the following cut motion :

"That the allotment of Rs. 36,70,200 under Demand No. 7—Elections—be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, தேர்தல் செலவுகளைக் குறைப்பது குறித்தும், தேர்தல் பணிகளை எளிமையாக்குவது குறித்தும் விவாதிக்க—

"கோரிக்கை எண் 7—தேர்தல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 36,70,200-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, to discuss the urgent changes to be brought in the method of elections, I move the cut motion standing in my name, namely,

" That the allotment of Rs. 36,70,200 under Demand No. 7—Elections—be reduced by Rs. 100."

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, தேர்தலுக்கு 6 மாதங்களுக்கு முன் அமைச்சர்கள் தங்கள் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டியதின் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,82,07,400-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்."

திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறும் அரசு அதிகாரிகளுக்குப் பதவிகால நீடிப்பு கூடாது என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,82,07,400-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்".

DR. H. V. HANDE : Sir, to discuss the need on the part of the members of Cabinet to lead an austere life, I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 5,82,07,400 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters staff—be reduced by Rs. 100."

திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுற்றுப் பயணச் செலவுகளையும் ஆடம்பரத் தன்மையையும் குறைப்பது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,82,07,400-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்".

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் மணியாச்சி புகைவண்டி நிலையத்தில் வாஞ்சிநாதனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பக் கோரி விவாதிக்க—

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,63,14,900-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்".



DR. H. V. HANDE : Sir, to discuss the need to give adequate facilities for Ex-servicemen and better opportunities for their children in matters of employment, etc., I move the cut motion standing in my name, namely,

"That the allotment of Rs. 12,63,14,900 under Demand No. 33—Miscellaneous—be reduced by Rs. 100."

திரு. ஏ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,63,14,900-ல் ரூ. 100-ஐ குறைக்க வேண்டும்".

* திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்வருகிறேன்.

தேர்தல் சம்பந்தமாக விதாச்சார பிரதிநிதுத்துவம் இன்றைய தினம் நாட்டில் அவசியப்படுகின்றது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள், ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்திருக்கிறது. நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த முறையிலே ஒவ்வொரு கட்சியும் தாங்கள் பெறுகின்ற வாக்குகளுக்கு உகந்த முறையிலே விதாசாரப் பிரதிநிதிதுவ முறை இருக்குமானால் எல்லாக் கட்சிகளுக்கும் சட்ட மன்றத்திலும் பாராளுமன்றத்திலும் பங்கு கொள்வதற்கு உதவிகரமாக இருக்கும். நீண்டகாலமாகவே அரசியல் கட்சிகளும் முற்போக்கான எண்ணம் கொண்டவர்களும் சொல்லிக் கொண்டு வருகின்ற கருத்தாகும். என்ன காரணத்தாலோ, இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள்—மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சி நடத்தி வந்தவர்கள்—இந்தக் கருத்தை புறக்கணித்து விட்டார்கள். ஆனால், இன்றைய தினம் நிலைமை மாறியிருக்கிறது. இன்றையதினம் பெரிய கட்சிகளுக்கும் சிறிய கட்சிகளுக்கும் சட்டமன்றங்களில் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. அந்த முறையில் அவர்கள் பெறுகின்ற வோட்டுக்களுக்கிணங்க அவர்கள் சட்ட மன்றங்களிலே பிரதிநித்துவம் பெற வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, முதலமைச்சர் அவர்களையும் எல்லாப் பிரதிநிதிகளும் சேர்ந்து வாக்களித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்குமானால் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற சம்பிரதாயம் மாறி, பொதுவான பார்வையில் இருக்கக் கூடிய ஒருவர் முதலமைச்சராக வரக்கூடிய நிலை உருவாகும். அது ஜனநாயகத்திற்கு உகந்ததாகவும் இருக்க முடியும் என்ற எண்ணம் இன்றையதினம் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் கருத்தை அரசு கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல இன்றையதினம் அமைச்சர்களுக்குப் பொது மக்கள் விண்ணப்பங்கள் தருகிறார்கள். விண்ணப்பங்கள் என்று சொன்னால் அது சொல்ல முடியாத அளவுக்கு அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படாமல் இருப்பதால் எப்படியாவது அமைச்சர்களிடம் விண்ணப்பங்கள் செய்வதன் மூலமாக விரைவாக தங்கள் குறைகள் தீர்க்கப்படும் என்று கருதுகிறார்கள். தனி நபர் குறைகள் ஒருபுறம் இருக்கட்டும், பொதுமக்களுடைய கிராமங்களுடைய

அல்லது அவர்களுடைய மாவட்டத்தினுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக மகஜர்கள் கொடுக்கிறார்கள். அதுமாதிரி மகஜர்கள் கொடுக்கிற காலத்தில் மக்களும் நேரடியாக கொடுக்கிறார்கள். மக்களின் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களும் கொடுக்கிறார்கள். அவ்வாறு கொடுக்கிற அந்த மகஜர்களுக் கெல்லாம் அந்தக் காரியங்கள் கவனிக்கப்படுகிறது அல்லது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைப் போன்ற விஷயங்கள் அவர்களுக்கு நேரடியாக பதில் வருவதன் மூலமாக அந்தக் கோரிக்கைகள் தீர்க்கப்படுவதற்கான நிலை ஏற்பட முடியும். அதே சமயத்தில் நடவடிக்கைகளும் அரசாங்கத்தில் சம்பந்தப்பட அதிகாரிகள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படக்கூடும். அந்த முறையில் இன்றையதினம் அவர்களுக்கு உடனுக்குடன் பதில் கொடுக்க வேண்டிய ஒரு ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்கிற நேரத்தில் இன்றையதினம் தங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கிற தொகுதிகளில் மட்டும் சுற்றுப்பயணம் செய்வதாக இருக்கக் கூடாது. தமிழகத்தின் அமைச்சர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தமிழ்நாடு முழுவதும் பொதுவான மக்கள் எந்தப் பகுதியில் இருந்தாலும், அந்தப் பிரதேசத்திலிருந்து யார் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் சரி எல்லாத் தொகுதிகளையும் சமமாகப் பாவித்து எல்லாத் தொகுதி மக்களையும் சந்திக்க வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இன்றையதினம் அறவே இல்லை யென்று சொல்லவில்லை. இருந்தாலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் சில தொகுதிகளில் அந்தக் குறைபாடுகள் இருக்கின்றன. அம் மாதிரி குறைபாடுகள் இருக்கக் கூடாது என்பதற்குச் சொல்லுகிறேன். அம்மாதிரி அமைச்சர்கள் வருகிற நேரத்தில் அந்தத் தொகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினரையும் கலந்து கொள்வது நல்லதாக இருக்குமென்று நினைக்கிறேன். அந்த முறையில் அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்லுவதற்கு ஒரு ஏற்பாடாக இருக்க முடியும்.

அதுபோல அமைச்சர் அவர்கள் ஒரு பிரதேசத்துக்கு வந்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தகவல் அனுப்பி அவர்களை கலந்து பேசுவதற்கு சில நேரங்கள் ஒதுக்கியாக வேண்டும் சிலச் சந்தர்ப்பங்களில் அமைச்சர்களைச் சந்திக்கச் சென்றால் சந்திக்க முடியாத அளவில் கூட்டம் நெரிசல் தாங்க முடியவில்லை. பலர் கும்பலாகக் கூடுகிறார்கள். தாங்கள் சந்தித்து சொல்ல விரும்புகிற கோரிக்கைகளை கூடச் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. அதையெல்லாம் தவிர்க்கிற முறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திக்க ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது உதவிகரமாக இருக்க முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசாங்கத்தில் தற்காலிகமாக வேலைக்குச் சிலர் நியமனம் செய்யப்படுகிறார்கள். 1 வருஷம் 2 வருஷம் வேலை செய்கிறார்கள். பிறகு வேலை நீக்கம் செய்துவிடுகிறார்கள். இம்மாதிரி செய்வதன் மூலம் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வருகிறது. அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள் என்ற ஐயப்பாடு அவர்களிடம் ஏற்படுகிறது. மீண்டும் வேலை கொடுப்பது கஷ்டமாகி விடுகிறது. இந்த நிலையைப் போக்கக்கூடிய அளவில் அரசாங்கத்தில் ஒரு



குறிப்பிட்ட காலம் பொதுப் பணித் துறையில் 2 வருஷம் வேலை செய்தால் அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அது போல எல்லாத் துறைகளிலும் தற்காலிகமாக வேலை செய்பவர்கள் நிரந்தரம் ஆக்கப்படுவதற்கு முன்வர வேண்டும்.

சட்டமன்ற இலாக்காவில் வேலை செய்யக்கூடியவர்கள் தற்காலிகமாகப் பல ஆண்டுகள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். 10, 15 ஆண்டுகளாக இன்னும் தற்காலிகமாக வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நித்திய கண்டம் பூரண ஆயுசு என்ற முறையில் இருக்கிறது. அவர்களை எல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டும். அதன் மூலம் அவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் ஏற்படுத்த முடியும். பியூன்கள், காவலாளிகள் போன்று தற்காலிகமாக வேலை செய்பவர்களை நிரந்தரப் படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சுற்றுலா மாளிகை, பயணிகள் விடுதிகள் என்று இருக்கின்றன. நமது சட்டமன்ற உறுப்பினர்கள் சென்றால் பெரிய அதிகாரிகள் வருகிறார்கள் கெஜடட் ஆபீசர்ஸ் வருகிறார்கள் என்று சொல்லி அவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களை சாமத்தில் கூட வெளியே போகச் சொல்லக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அம் மாதிரியான நிலைமை இருக்கக் கூடாது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்குத் தகுந்த வசதிகள் இருக்க வேண்டும்.

ஊட்டியில் சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரண நாட்களில் போய்த் தங்க முடியாத நிலை இருக்கிறது. அரசாங்க அலுவல் கமிட்டியில் இருந்தால் தான் தங்குவதற்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் நிறைய தங்குவதற்கு குடும்ப சகிதமாக உல்லாசமாக சுகத்தை அனுபவிக்க ஏற்பாடுகள் வெள்ளையன் காலத்திலும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் செய்து கொடுத்தார்கள். இன்றையதினம் அதையெல்லாம் மாற்றியாக வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு சென்றால் அவர்கள் தங்குவதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கக்கூடிய முறையில் இன்றைக்கு விதிமுறைகளை மாற்றியமைக்க முதலமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியிலோ அல்லது ராஜ்யத்தில் பல இடங்களுக்குச் சென்று வர பஸ் பாஸ் கொடுப்பதற்கு உத்தேசம் செய்து எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்கள் புகைப் படங்களைக் கேட்டு அனுப்பி இருக்கிறார்கள். விரைவில் கிடைக்குமென்று நம்புகிறேன். அது மட்டும் போதாது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற ராஜ்யங்களைப் போல ரயிலில் பயணம் செய்ய வசதி செய்து கொடுத்தாக வேண்டும். அண்ணா இருக்கும்பொழுது அதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். அதில் கணக்கு வைத்துக் கொள்வது சிரமமாக இருக்குமென்று சொன்னார்கள். அதனை யோசனை செய்ய வேண்டு மென்றும் சொன்னார்கள். அதற்கும் முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு வாதாடி அம்மாதிரி உரிமை பெற்றுக் கொடுப்பதன் மூலம் ரயிலில் செல்ல வசதி வாய்ப்பு ஏற்படும்.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதிகளில் கூட்டுமன்றங்கள் இருக்கக்கூடிய பிரதேசத்தில் இருக்கக்கூடிய ஜீப்கார்களை உபயோகித்துக் கொள்ள அனுமதித்திருந்தார்கள். ஆனால் அந்த ஜீப்கார்களை ஆர்.டி.ஓ. க்கள் தாசில்தார்கள் உபயோகித்து வருகிறார்கள். சில இடங்களில் பி.டி. ஓ. க்கள் கொடுப்பதில்லை. அம்மாதிரி சலுகையில் சட்டமன்ற உறுப்பினருக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற நிலையை ஏறபடுத்த வேண்டுமென்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் கடந்த நான்கு ஆண்டுக் காலமாக நம்முடைய முன்னேற்றக் கழக அரசு சீரோடும் சிறப்போடும் அரசாண்டு வருவதும் முதலமைச்சர் அவர்கள் ஆங்காங்கு உள்ள தொகுதிகளுக்குச் சென்று நாட்டு மக்களின் குறைகளை அறிந்து அதைப் போக்க முயற்சிகள் எடுத்திருப்பதும் உள்ளபடியே நாம் எல்லாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இதேபோல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மனு நீதித் திட்டத்தை வகுத்ததன காரணமாக இந்த நாட்டில் சங்க காலத்திலிருந்த மனு நீதி ஆட்சி, முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்திலும் மீண்டும் ஒரு சங்க காலம் உதயமாவதற்கு வழி வகுத்ததற்கு உள்ளபடியே நாமும் இந்த நாடும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அதேநேரத்தில் நம்முடைய சட்டமன்றம் ஏனைய மாநிலங்களின் சட்டமன்றத்தைப்போல் அல்லாமல் அமைதியான சூழ்நிலையில் நல்ல விறுவிறுப்போடும், நல்ல சுறுசுறுப்போடும் நல்ல சிறப்போடும் இயங்கி வருகிறது என்பதை எண்ணும்போது உள்ளபடியே நாமெல்லாம் மெத்த மகிழ்ச்சியடைகிறோம். அதேபோல் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் ஆங்காங்குள்ள அலுவலங்களுக்குச் செல்கின்ற நேரத்தில் அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தக்க மதிப்பு அளிக்க வேண்டும், மரியாதை தர வேண்டுமென்கிற முறையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மேன்மையை உயர்த்துவதற்காக ஆணை பிறப்பித்தது வேறு எந்த நாட்டிலும், வேறு எந்த சட்டமன்றங்களிலும் இல்லாத நிலைமை என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தல் நேரத்தில் நம்முடைய மாநிலம், இடைத் தேர்தலாக இருந்தாலும் சரி, முறையான ஊராட்சி ஒன்றியத் தேர்தலாக இருந்தாலும் சரி, ஊராட்சி மன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, எந்தத் தேர்தலாக இருந்தாலும் எவ்வளவு அமைதியோடும், பொறுமையோடும் கடந்த காலத்தில் நடந்து வந்திருக்கிறது என்பதை நம்முடைய வரலாறே தகுந்த முறையில் எடுத்துக் காட்டும்.

ஊராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்தவர்கள் சட்டமன்ற இடைத் தேர்தலில் வாக்களிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. அந்தமாதிரியான நிலை ஏற்படாதவாறு ஊராட்சி மன்றத் தேர்தலுக்கும், சட்டமன்றத் தேர்தலுக்கும் ஒரே வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். ஊராட்சி மன்றத் தேர்தலில்



வாக்களித்தவர்களை சட்டமன்றத் தேர்தலிலும் வாக்களிக்கின்ற நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் தயாரித்தலும், வாக்களிக்கின்ற வாக்காளர்களுக்கு அளிக்கப்படுகின்ற, அதாவது வாக்காளர் பெயர், அவருடைய வீட்டின் எண், அவருடைய வரிசை எண் போன்றவற்றைக் குறிக்கும் பட்டியலைத் தயாரித்தலும் இப்போது வேட்பாளர் தலையில் சுமத்தப்படுகிறது. இதனால் வேட்பாளருக்கு அதிகச் செலவும் சிரமமும் ஏற்படுகிறது. வேட்பாளருக்கு நிறைய சுமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்தப் பணியை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்கிற நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

இந்த மாநிலத்தின் சட்டமன்றம் எவ்வளவு மேன்மையாக இயங்குகிறதோ, அதேபோல் இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் ஒரு நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கு நம்முடைய அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல கருணையுள்ளம் படைத்தவர். சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும்—பெரும்பான்மையோர்—ஏழை-எளியவர்கள் தொழிலை விட்டு வந்தவர்கள்தாம். இப்படிப்பட்டவர்களுக்கு உரிய சம்பளம் வழங்குவது என்பது நியாயமான கோரிக்கைதான். நான் ஏன் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், நான் ஒரு வழக்குரைஞர். வழக்காடுவது என்னுடைய தொழிலாக இருக்கிற காரணத்தால், ஏனைய சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வழக்காடுவதற்காக இதை எடுத்து வைக்கிறேன். நம்முடைய நாட்டிலுள்ள சட்டமன்றங்களை எடுத்துக் கொண்டால், சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள் என்பதை நான் புள்ளிவிவரங்களோடு இந்த மன்றத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆந்திர மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினருக்கு மாதம் ஒன்றுக்கு 350 ரூபாய் சம்பளம், 20 ரூபாய் தினப்படி; மைசூரில் மாதம் 250 ரூபாய் சம்பளம், 25 ரூபாய் தினப்படி, அதுதவிர மாதா மாதம் தனிப்படியாக 150 ரூபாய் வழங்குகிறார்கள். அதேபோல் கேரளாவில் மாதம் 500 ரூபாய் சம்பளம், 15 ரூபாய் தினப்படி. குஜராத்தில் மாதம் 300 ரூபாய் சம்பளம், 21 ரூபாய் தினப்படி, 150 ரூபாய் தனிப்படி.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவாவர்களே, உறுப்பினர் அவர்கள் ஏனைய உறுப்பினர்களுக்காக வழக்காடுகிறேன் என்கிறார். ஒருவேளை இதற்குக் கட்டணம் வாங்காமலே வாதாடுவார் என்று கருதுகிறேன். அவர் கோர்ட் தவறி வேறு கோர்ட்டில் வாதாடுகிறார். அடுத்த கோர்ட்டிலே வாதாடுவதை இந்தக் கோர்ட்டிலே வாதாடுகிறார். இந்தக் கோர்ட்டிலே இந்தப் பேச்சை எடுத்துக்கொள்ள வேண்டாம். இதை அடுத்த மானியத்திலே வைத்துக் கொண்டால் நல்லது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, பின்னாலே எனக்குப் பேச வாய்ப்பு இருக்குமோ, இல்லையோ என்பதற்காகத்தான் இப்போதே நான் இந்தப் புள்ளிவிவரங்களை யெல்லாம் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோர்ட் தவறி, வேறு கோர்ட்டில் வாதாடுவதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். எல்லாவற்றையும் சுப்ரீம் கோர்ட்டிலே சொல்லிவிடலாம் என்பதற்காகத்தான் உறுப்பினர் அவர்கள் இப்போது சொல்லிவிடுகிறார் என்று கருதுகிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மீதியுள்ள புள்ளிவிவரங்களையும் எடுத்துக் காட்டி என்னுடைய பேச்சை முடித்து விடைபெறலாம் என்றிருக்கிறேன் . . . (மணியடிக்கப்பட்டது).

*** திருமதி த. ந. அனந்தநாயகி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான மானியங்களைக் கொடுத்துவிட்டு நேரம் குறைவாகக் கொடுக்கிறீர்கள். குறிப்பாக எதிர்க் கட்சிக்காரர்களுக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும். இந்த மானியங்களிலேதான் அரசியல் நிலை என்ன என்பதை ஓரளவுக்கு எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கருதி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது 'எலெக்ஷன்ஸ், ஹெட் ஆஃப் ஸ்டேட், மினிஸ்டர்ஸ் அண்ட் ஹெட் க்வார்ட்டர்ஸ் ஸ்டாஃப்' என்ற மானியங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன.

நாங்கள் தேர்தலானது எப்படி எப்படி நடந்தன, என்னென்ன சங்கடங்கள் இருந்தன என்பதையெல்லாம் அடிக்கடி இந்தச் சபைக்குத் தெரிவித்து வற்புறுத்தியிருக்கிறோம். தேர்தலிலே இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுவதற்குக் காரணமே தேர்தல் நேரத்திலே அமைச்சர்கள் பதவியில் இருப்பதுதான். நான் இதைச் சொல்கின்றபொழுது, 'உங்கள் ஆட்சிக் காலத்தில் அப்படிச் செய்தார்களா?' என்றுதான் கேட்பார்கள். நான் இதற்குச் சொல்லிக் கொள்வதெல்லாம் எங்கள் காலத்தில்தான் அப்படி நடந்துகொள்ளவில்லையென்றால் உங்கள் காலத்திலாவது சரியாக நடந்து கொள்ளக் கூடாதா?

தேர்தல் காலத்திலே, மத்திய அரசாங்கமாக இருந்தாலும் சரி, மாநில அரசாங்கமாக இருந்தாலும் சரி—எந்த அரசாங்கமாக இருந்தாலும்—தேர்தல் நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன் அமைச்சர்களாயிருப்பவர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்து, அவர்களும் மற்ற அபேட்சர்களைப்போல் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வர வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அப்படிச் செய்வதுதான் உண்மையான ஜனநாயகத்தின் அடிப்படையாக இருக்கும். அந்த முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்** : திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னபடி அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் அமல் நடத்தப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : அப்போது அமல் நடத்தப்படாவிட்டால் இப்போது இந்த அரசாங்கமாவது அமல்படுத்தக் கூடாதா? 1967-ல் ஏற்பட்ட புதிய அரசாங்கம் தேர்தலின்போது பதவியை ராஜினாமா செய்து, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய வகையில் செயல்களைச் செய்ய வேண்டும். எதெதற்கோ வழிகாட்டியாக இந்த மாநிலம் அமைந்திருக்கிறது. நல்ல ஜனநாயக மரபுகளைக் கைக்கொள்வதில், சிறந்த பண்பாடுகளை எடுத்துக் காட்டுவதில், தமிழக அரசாங்கம் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தேர்தல் காலங்களில் வெளியிடப்படுகிற வாக்காளர் பட்டியலில் நிறையத் தவறுகள் இருக்கின்றன. மத்திய அரசாங்க தேர்தல் லிஸ்டிலே கவுண்டர் பாயில் வைத்து கையெழுத்து வாங்கலாமா என்று யோசித்துக்கொண்



டிருக்கிறது. எல்லோருக்கும் பொதுவான முறையில் வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும். 'வோட்டர்ஸ் லிஸ்ட் ஃபார் ஜெனரல் எலெக்ஷன்' என்ற வகையில் வாக்காளர் பட்டியல் தவறுகள் இன்றி இருக்க வேண்டும்.

இப்பொழுது வாக்காளர் பட்டியலை எடுத்துக் கொண்டால் அதில் எத்தனையோ அடிஷன்ஸ், ஒமிஷன்ஸ் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, லெஜிஸ்லேசர்ஸ் வோட்டர்ஸ் லிஸ்ட்' நல்ல முறையில் இருக்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாக்காளருக்குப் பாஸ் போர்ட் சைஸில் போட்டோ பாஸ் வழங்கி ஒரு புதிய நிலைமையைத் தோற்றுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் இப்பொழுது நல்ல வாக்காளர் பெயரைச் சொல்லிக் கொண்டு, வேறு நபர்கள் வாக்களிக்கின்ற நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. ஆகவே, அதைத் தடுப்பதற்கு போட்டோ பாஸ் வைப்பது மிகச் சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அமல்படுத்துவதற்கு கொஞ்சம் செலவாகலாம். ஆனாலும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கொஞ்சம் செலவழிப்பது முறையான செலவாகத்தான் இருக்கும். கொஞ்சம் செலவானாலும் உண்மையான வாக்காளர் வாக்களிப்பதற்கு வகை செய்ததாக இருக்கும், வழி செய்வதாக இருக்கும். ஆகவே, வாக்காளர்களுக்குப் போட்டோ பாஸ் அளித்து வாக்களிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நடைபெறுகின்ற நேரங்களில் பலதரப்பட்ட வன்முறைகள் நடைபெறுகின்றன. சட்டமன்றத் தேர்தலாயிருந்தாலும் சரி, நகரசபைத் தேர்தலாய் இருந்தாலும் சரி, பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலாயிருந்தாலும் சரி, பஞ்சாயத்துத் தேர்தலாயிருந்தாலும் சரி, எந்தத் தேர்தலாயிருந்தாலும் சில சங்கடங்கள் வருகின்றன. இந்தத் தேர்தல்கள் எல்லாம் மாறி மாறி வருவதால் மக்களுக்கும், அதேசமயத்தில் அரசாங்கத்திற்கும் சிரமத்தைக் கொடுத்து வருகின்றன. சட்டமன்றத் தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. நகரசபைத் தேர்தல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று இருக்கிறது. இடையிலே பஞ்சாயத்துத் தேர்தல் போன்றவை வருகின்றன. மேலும், கிராமங்களில் எல்லாம் தேர்தல் முடிந்தவுடனே பல அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன. தேர்தல் காரணங்களை முன்னிட்டு பல விளைவுகள் ஏற்படுகின்றன. தேர்தல் நடந்து முடிந்த பிறகும் மக்களிடத்தில் காழ்ப்பு உணர்ச்சி நின்றுவிடுவதில்லை. ஆகவே, எல்லா வகைத் தேர்தல்களையும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை என்று வைத்துவிட்டால் மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும். அதேநேரத்தில் அரசினருக்கும் செலவைக் கட்டுப்படுத்த முடியும். மூன்று ஆண்டுகளுக்கொருமுறை என்பதையெல்லாம் விட்டுவிட்டு, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறைதான் தேர்தல் என்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் அடிக்கடி வாக்காளர் பட்டியலை எடுத்துக் கொண்டிருக்கிறோம். பஞ்சாயத்துத் தேர்தல், முனிசிபல் தேர்தல், கார்ப்பரேஷன் தேர்தல், சட்டமன்றத் தேர்தல் இவைகளுக்கெல்லாம் வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கிறோம். ஒன்றிலே பெயர் இருந்தால் மற்றொன்றில் பெயர் விட்டுப் போயிருக்கும். 'ரெப்பரசன்டேஷன் ஆஃப் பீப்பிள்ஸ் ஆக்ட்' லே சொல்வதைப்போல எல்லாவற்றிற்கும் ஜெனரல் லிஸ்ட் இருக்க வேண்டும். இப்போது ஒவ்வொரு தேர்தலுக்கும் நாம் புதுப்புது வாக்காளர் பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருக்

கிறோம். பஞ்சாயத்துத் தேர்தல் பட்டியலில் வாக்காளர் பெயர் இருந்தால், சட்டமன்ற பட்டியலில் பெயர் இருப்பதில்லை. இதனால் பலவிதமான சங்கடங் களும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. எல்லாவற்றையும் ஒரே பட்டியலாகத் தயாரித்துவிட்டால் சங்கடங்கள் இருக்காது, சிக்கல்களும் இருக்காது. தமிழக அரசு இந்த வகையிலும் வழிகாட்டியாக அமைய வேண்டும்.

அடுத்தபடியாக, எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்களே என்று எடுத்துக் கொள்ளாமல், நாங்கள் சொல்கின்ற கருத்துக்களை எடுத்துப் பார்த்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்கள் எல்லாம் முடிந்த அள விற்குத் தங்களுடைய சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும். மாதத்திற்கு பத்து நாட்கள் சுற்றுபிரயாணம் இருந்தால் போதும், பெரிய ஜனநாயகவாதியான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார், நான் இதைச் சொல்லும்போது, உடனே 'நீங்கள் செய்தீர்களே' என்று கேட் கலாம்.

(திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் அவர்கள் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுகின்ற உறுப்பினர் அனுமதித்தால்தான் மற்ற உறுப்பினர்கள் எழுந்து பேச முடியும். தாங்கள் பேச விரும்புவதை உரையாற்றுகின்ற அம்மையார் அவர்கள் அனுமதிக்கிறார்களா என்று தெரியப் படுத்த வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, நான் அனுமதிக்கிறேன். உறுப்பினர் அவர்கள் கருத்தைச் சொல்லட்டும்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** தலைவர் அவர்களே, இந்த அவையில் முன்பு பேசிய ஒரு அங்கத்தினர், அமைச்சர்கள் சரியான சுற்றுப்பயணம் செய் வதில்லை, 'சில இடங்களுக்குப் போகிறார்கள், சில இடங்களுக்குப் போவதில்லை' என்று கூறினார். ஆனால் அம்மையார் அவர்கள் அமைச்சர்கள் சுற்றுப் பயணத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். இது எப்படி முறையாக இருக்கும்?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாதத்திற்குப் பத்து நாட்கள் என்று சொன்னேன். மாதத்திற்குப் பத்து நாட்கள் என்றால் வருடத்திற்கு எத்தனையோ நாட்கள் இருக்கும். எனவே சுற்றுப்பயணம் செய்வதைப் பொறுத்தவரையில் மாதத்திற்குப் பத்து நாட்கள் என்று வரையறை செய்து கொண்டால், அது வரவேற்கத்தக்கது. இது தலைமைச் செயலகம். பல அவசர வேலைகளுக்கு வருவார்கள் பொதுமக்கள். மந்திரிகளைச் சந்திக்க வேண்டிய நிலைமைகள் இருக்கும். சுற்றுப்பயணம் மாதத்திற்குப் பத்து நாட்கள் அதுவும் பரவலாகச் செய்தால் தமிழகத்திலுள்ள 15 வட்டங்களுக்கும் வெகு சாமர்த்திய மாகச் சென்று வர முடியும் என்று நினைக்கிறேன்.

மொத்தமாக விழாக்களில் கலந்து கொள்வதற்கு 8 மந்திரிகள், 10 மந்திரிகள் என்று கலந்துகொள்கின்ற நிலைமையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஒன்று அல்லது இரண்டு மந்திரிகள் போகலாம். பல நிகழ்ச்சிகளிலே மொத்த மாக மொத்தமாக 10 மந்திரிகள், 12 மந்திரிகள் என்று கலந்துகொள்வதைப் பார்த்தால் சிக்கனம் இல்லாமல் பணம் எப்படிப் பாழாகிறது என்று எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் வருத்தப்படாமல் இருக்க முடியாது. தற்பொழுது



மாவட்ட, வட்டச் செயலாளர் வீட்டுக் கல்யாணங்களுக் கெல்லாம்கூட மந்திரிகள் மொத்தமாகப் போவது சரியல்ல, இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அமைச்சர்கள் பல தொகுதிகளுக்குச் செல்கின்றபொழுது சட்டசபை உறுப்பினர் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர் இருக்கிறாரே அவரைச் சட்டசபை அங்கத்தினராகவே கருத வேண்டும். திருச்சியிலே ஒரு அமைச்சருடைய நிகழ்ச்சியே ரத்து செய்யப்பட்டுவிட்டது. அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினருக்குப் பிரதிநிதித்துவம் அதிலே இல்லை யென்பதால், சமீபத்திலே என்னுடைய தொகுதியாகிய மயிலாப்பூரிலே ஒரு நல்ல நிகழ்ச்சி நடந்தது. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள்கூட வந்தார்கள். பாவம் இந்த ஏழைக்கு அங்கே பிரதிநிதித்துவம் இல்லை, பங்கு இல்லை, மேடையிலே இடம் இல்லை. இதற்காக நான் ஸ்லம் போர்டு சேர்மனிடம் சண்டை போட்டேன். அழைப்புகள் கட்சிப் பிரதிநிதிகளுக்கு அனுப்புகிறார்கள். எங்களுக்கு அனுப்புவதில்லை, நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தானே வந்திருக்கிறோம். அந்த வட்ட கவுன்சிலருக்கு இடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினருக்கு இடம் இல்லை. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன், முடியவில்லை, இங்கே வந்து பேசித் தீர்ப்பது என்று கருதி இதைக் குறிப்பிடுகிறேன். முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி கவனம் செலுத்த வேண்டும். அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவருக்கு அழைப்பு மட்டும் போதாது, அந்த நிகழ்ச்சியிலே அவர் பங்குகொள்ளும்படி செய்ய வேண்டும், பார்டிசிபேஷன் மஸ்ட் பி தேர். அதற்குப் பிறகு அங்கே மேம் பாலம் அடிக்கல் நாட்டு விழா நடந்தது, அதிலேயும் சட்டசபை உறுப்பினராக இருக்கின்ற அடியேனுக்கு அழைப்புத்தான் வந்தது. பார்டிசிபேஷன் கிடை யாது. குடிசை வாரிய விழாவிலே பாராளுமன்ற உறுப்பினருக்கும் வாய்ப்பு இருந்தது, அறநிலைய அமைச்சர் அவர்களுக்கும் பங்கு இருந்தது, ஆனால் அடியேனுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இனியாகிலும் இதை முறைப்படி செய்ய வேண்டும் . . . . .

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, இவ்வளவு காலமாக என்ன வழக்கங்கள் இருக்கிறதோ, அதே வழக்கங்கள் இப்பொழுதும் இருக் கின்றன. நான் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது வீட்டு வசதி வாரிய விழாக்கள் நடைபெற்றபொழுது நான்—எனக்கு அழைப்புக்கூட இல்லாமல்—வேடிக்கை பார்க்கிறவனாக இருந்திருக்கிறேன். குடிசை வாரிய விழாவிலே சட்டமன்ற உறுப்பினருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் கூட அன்று கேட்டார்கள்; நான் தேடினேன். அவர்கள் இல்லை. குடிசை வாரியத்தைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர் களுக்கும் கவுன்சிலர்களுக்கும் ஒத்துழைப்புத் தருகின்ற நிலையில் திறப்பு விழாவின்போது அவர்களை யெல்லாம் அழைக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்த வாரம் வண்ணையம் பதியிலே நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவிலே அந்தச் சட்டமன்ற உறுப் பினர் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் திரு. வேதாசலம். அவர்கூட அழைக்கப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவருக்கும் சேர்த்துத்தான் நான் இதைச் சொல்கிறேன். திறப்பு விழாக்களில் அழைக்கப்படுவோம் என்றால், அதற்குள் தேர்தல் வந்துவிடுமோ என்னவோ நாங்கள் இருப்பமோ என்னவோ தெரியாது. இதற்கு முன்னாலே இருந்ததா இல்லையா என்பது பிரச்னையல்ல. அந்தக் கொடுமைக்கு நான் ஆளாகியிருக்கிறேன். எனவே இதிலே யாராக இருந்தாலும்—டெமாக்ரொடிக் கன்வென்ஷன்ஸ் மஸ்ட் பி தேர்—எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி அழைக்க வேண்டும், எங்களை அழைத்தால் என்ன உங்கள் கட்சி பலஹீனப்பட்டுவிடுமா? அப்படிப் பயந்து கொண்டா நீங்கள் கட்சி நடத்துகிறீர்கள்? அந்தந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருக்கு அழைப்புக் கொடுக்க வேண்டும். அழைப்பு என்றால் 1,000 பேருக்கு அழைப்பு, அதிலே இது ஆயிரத்து ஒன்றாவது அழைப்பு என்றுதான் இருக்கும், எனவே அவர்கள் பங்கு எடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் ஜனநாயக மரபு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இராம அரங்கண்ணல்: பாராளுமன்ற உறுப்பினர் அங்கே தலைமை வகிக்க அழைக்கப்படவில்லை. குடிசை வாரியத்திலே அவர் ஒரு உறுப்பினர் என்ற முறையிலேதான் அழைக்கப்பட்டார். உறுப்பினர்களை மக்கள் எதற்காகத் தேர்ந்தெடுக்கிறார்களோ, அந்தப் பொறுப்போடு அவர்களும் நடந்து கொள்ளவேண்டியவர்கள்தான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நாங்கள் பொறுப்பில்லாமலா இருக்கிறோம். பொறுப்போடுதான் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம். முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்பொழுது இதைச் சொல்வார்கள் என்ற நம்பிக்கையில் நான் இவற்றையெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலுக்கு முன்பு நல்ல மாறுதல்களையெல்லாம் செய்தவர் சீப் செக்ரட்டரி. தேர்தலுக்குப் பிறகு அவரை மாற்றிவிட்டார்கள், ஐ.ஜி. யையும் மாற்றிவிட்டார்கள். அரசாங்க சிப்பந்திகளை வைத்துக் கொள்வதற்கு உரிமை இருக்கிறது. நான் அதைத் தடுக்கவில்லை. தேர்தலுக்குப் பிறகு சூட்டோடு சூடாக அரசாங்க ஊழியர்களை இப்படிச் செய்தால் அரசாங்க ஊழியர்கள் கட்சி விருப்பு வெறுப்போடு செயல்படக் கூடிய நிலைமை உருவாகும். அந்த சீப் செகரட்டரியைப் போட்டதே இந்த அரசாங்கம்தான். அந்த சீப் செகரட்டரியை இறக்கியதும் இந்த அரசாங்கம்தான் . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சீப் செகரட்டரி பற்றியும் ஐ.ஜி. பற்றியும் சொன்னார்கள். ஏதோ அங்கத்தினர் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவதாகத் தெரிகிறது. அவர்கள் வெளிப்படையாகப் பேசலாம். அதிலே ஒன்றுமில்லை. அரசாங்கம் நியாயமாகத்தான் செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: உள்நோக்கம் கற்பிக்கவில்லை. நீங்கள் செய்த காலம்தான் தவறு. சீப் செகரட்டரிக்கே இந்த கதி என்றால் நம்முடைய கதி என்ன என்று மற்ற அதிகாரிகள் நினைப்பார்கள். ஐ.ஜி. க்கே இந்த கதி என்றால்—அவர்கூட இறந்துவிட்டார்—மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஜனநாயகத்திலே ஒழுங்கு முறைகள் காப்பாற்றப்பட வேண்டும். நீங்கள் நல்லெண்ணத்திலே செய்து இருக்கலாம். ஆனால் அப்படிச் செய்த காலம், முறை இவற்றையெல்லாம் பார்க்கிறபோது கன்னம் கடமற்றவர்கள் சற்று பயந்து கட்சி விருப்பு வெறுப்போடு காரியங்களைச்



செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். கட்சியின் அடிப்படையில் ஆட்சி செய்யாமல், ஜனநாயகத்தின் அடிப்படையில் ஆட்சி செய்ய வேண்டும். கட்சி அடிப்படையில் ஆட்சி செய்கிறோம் என்ற நிலைமை வரக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படிப்பட்ட தவறுகள் குறைந்துகொண்டு வந்தால்தான் We can bring about healthy democracy " நல்ல ஆரோக்கியமான சமுதாயம் ஏற்படும். எனவே அரசாங்கம் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து முடிக்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, என் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் இந்தக் கருத்துக்களைச் சொல்லும்பொழுது எந்த அரசியல் அடிப்படையிலும் பேசவில்லை என்பதை முதலிலேயே குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டிலே கடந்த தேர்தலிலும் அதற்கு முன்னர் நடந்த தேர்தலிலும் ஒரு சிறந்த ஜனநாயகப் பண்பு இங்கே ஏற்பட்டிருக்கிறது. உலகத்திற்கெல்லாம் எடுத்துக் காட்டாக இருக்கிற முறையிலே மக்களாலே ஜனநாயக வழியிலே அரசினை மாற்றிட முடியுமென்ற உண்மை எடுத்துக் காட்டப்படுகிறது. அப்படிப்பட்ட ஜனநாயக உணர்வு சிறிதும் மாசுபடாமல் அது வளர வேண்டும். அப்படி வளர்ப்பதனைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறவர்கள், அதை மேலும் சிறப்பாக வளர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக தேர்தல்கள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயகத் தேர்தல்கள் நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்தலுக்காக ஆகின்ற செலவுகள் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தால் 12 ஆயிரம் ரூபாயும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் 25 ஆயிரம் ரூபாயும் செலவு செய்யலாம் என்று வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட வரம்பிற்கு உட்பட்டுச் செலவுகள் செய்வதில்லையென்பது எல்லோருக்கும் தெரியும். அந்த வரம்புகூட அண்மையிலே உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த வரம்பைக் காட்டிலும் மூன்று மடங்கு, நான் மடங்கு, சிலர் 15 மடங்குகள் என்று அதிகமாகச் செலவு செய்கிறார்கள் என்பது எல்லோருக்குமே தெரியும்.

ஆகவே, இதற்கு என்ன மாற்று என்று பலர் யோசிக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புவேன், இந்தத் தேர்தல் முறைகளையே மாற்றியாக வேண்டும். இந்தத் தேர்தலுக்கு ஆகின்ற செலவுகளை வேட்பாளர்கள் செய்வதைவிடுத்து அரசாங்கமே சில வரையறைகளுக்குட்பட்டுச் செய்ய வேண்டும். இத்தனைக் கூட்டங்கள் என்று நிர்மாணித்துச் சில இடங்களை ஒதுக்கிக் கொடுத்து அரசாங்கமே எல்லாக் கட்சியினரையும் ஒரே மேடையில் பேசுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சுவரொட்டிகளை ஒட்டுவது, துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவது ஆகிய காரியங்களில் எவ்வளவுதான் செய்யலாம் என்று பார்த்து அரசாங்கம் செய்ய வேண்டும். அதற்காக வேட்பாளர்களிடமிருந்து ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு செய்யலாம். அம்மாதிரி காரியங்களைச் செய்ய அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டு, வோட்டர்களை வீட்டிற்குச் சென்று கேன்வாஸ் செய்வதை மட்டும் வேட்பாளர்களின் பொறுப்பாக, கட்சிகளின் பொறுப்பாக விட்டுவிடலாம்.

மற்றச் செலவுகளை யெல்லாம் அரசாங்கமே பொறுப்பேற்றுச் செய்தால் கொடுத்தீமைகளுக்கு முடிவேற்பட்டு, மெய்யான ஜனநாயகத் தேர்தல் ஏற்படச் செய்ய முடியும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஐடெண்டிட்டி கார்டைப்பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அது நல்ல ஏற்பாடுதான். அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன், அதை நான் வலியுறுத்துகிறேன்.

ஓட்டுச் சாவடிகளை அமைக்கும்பொழுது வோட்டர்கள் இருக்கும் இடத்திலிருந்து ஒருமைல் தூரத்திற்கு மேல் இல்லாமல் இருக்க வேண்டும். வோட்டுச் சாவடிகள் தூரமாக இருப்பதால் வோட்டர்கள் வாகனங்களைப் பயன்படுத்துகின்ற முறை மிகவும் அதிகமாக இருக்கிறது. சில சட்டமன்றத் தொகுதிகளில் 40, 50 கார்கள்கூடப் பயன்படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். அதோடு தூரமாக உள்ள சில கிராமங்களில் போவதற்கும், வருவதற்கும் இடைஞ்சலாக இருக்கும் பகுதிகளுக்கு மொபைல் போலிங் பூத்துகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்தபடியாக, தேர்தலின்பொழுது அமைச்சரவை பதவியில் இருக்கக் கூடாது என்று இப்பொழுது அல்ல—எனக்கு முன் பேசிய அம்மையார் அவர்களுக்கு இப்பொழுதுதான் அந்த உணர்வு பிறந்திருக்கிறது—எங்களைப் பொறுத்தவரையில் வெகுநாட்களாகச் சொல்லிக் கொண்டு வருகிறோம், எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும்கூட தேர்தலுக்குச் சில மாதங்களுக்குமுன் அது விலகிவிடுவது நல்ல ஜனநாயக மரபை உண்டாக்குவதாக ஆகும். நான் இதை எந்த அரசியல் கண்ணோட்டத்தோடும் சொல்லவில்லை, எந்தக் கட்சியாகயிருந்தாலும் சரியே, முன்பே காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபொழுதும் சொன்னோம், அப்பொழுது திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, இப்பொழுது ஏற்றுக் கொள்கிறார்கள். எங்களைப் பொறுத்த வரையில் எந்த நோக்கமும் இல்லாமல் சிறந்த மரபை உருவாக்க வேண்டும், அமைச்சரவையில் இருக்கிற காரணத்தினால் தவறாக ஒன்றைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படாத அளவிற்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன்.

அடுத்தபடியாக, அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்வதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். திரு. சுப்பையா அவர்களும் குறிப்பிட்டார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு முன்னால் டென்டேட்டிவ் ப்ரோகிராம் போட்டு அதை அந்தந் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி அவர்களுடைய யோசனைகளைக் கேட்டு, எதையாவது சேர்க்க வேண்டுமா என்று கேட்டறிந்து சுற்றுப்பயணத் திட்டத்தை இறுதிப்படுத்தினால் பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்வேன்.

அமைச்சர்கள் தொகுதிகளுக்கு வரும்பொழுது அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் பார்த்து ஏதேனும் குறைகளை எடுத்துச் சொல்ல போதுமான வசதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.



தலைமைச் செயலகத்திலேகூட சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான வசதியில்லை. சில அமைச்சர்களைப் பார்ப்பது சுலபமாக இருக்கிறது, சில அமைச்சர்களைப் பார்ப்பது கடினமாக இருக்கிறது. அவ்வாறு கடினமாக இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்சலுகை அளித்து அமைச்சர்களைப் பார்ப்பதற்கு இங்கே தலைமைச் செயலகத்திலே ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களைப் பார்க்க வரும்பொழுது உட்காருவதற்கான இருக்கைகள்கூட பல அமைச்சர்களின் அலுவலகங்களிலே இல்லை, மணிக்கணக்காக நின்றுகொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. அதை மாற்றியமைத்து இருக்கை போட்டு வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதும்பொழுது அதற்கான மறுமொழிகளை அமைச்சரோ அல்லது தனிச் செயலாளரோ அனுப்பவேண்டும். வழக்கமாக இலாக்காக்களிலிருந்து வருகின்ற பதிலாக இல்லாமல் அமைச்சர்களின் நேரடிப்பார்வையில் அந்தப் பதில்கள் வந்தால் பிரச்னைகளைத் தீர்க்கச் சுலபமாக இருக்கும்.

இன்னொரு விஷயம். நம்முடைய நாடு ஏழை நாடு. ஏழை நாட்டிலே மக்கள் தருகின்ற வரிப்பணத்தில் ஒவ்வொரு சல்லிக்காசும் மிகவும் கண்காணிப்போடு செலவழிக்கப்படவேண்டும். மற்ற நாடுகளைப்போன்ற சில முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற ஆசையிருக்கலாம். ஆனாலும், அந்த ஆசைகளை நம் நாட்டின் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும் வரையில் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆகவே, நிர்வாகத்திலே ஏற்படும் செலவுகள், விழாக்கள் போன்றவைகளுக்கு ஏற்படும் செலவுகள்—எந்த அரசியல் கண்ணோட்டத்தோடும் நான் சொல்லவில்லை—இவைகளைக் கட்டுப்படுத்தி நாம் மிகவும் சிக்கனமாகச் செய்ய வழியேற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

அடுத்தபடியாக இன்னொரு விஷயம். பல்வேறு துறைகளைப்பற்றி நாம் விவாதிக்கிறோம். ஆண்டுக்கொரு முறை இங்கே விவாதம் நடைபெறுகிறது. நான், இது போதாது என்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஒவ்வொரு துறையும் எப்படி இயங்குகிறது, சட்டங்கள் இயற்றப்படுகின்றன, அமைச்சர்கள் ஆணைகளைப் பிறப்பிக்கிறார்கள், அந்தச் சட்டங்களும், ஆணைகளும் எந்த அளவில் நிறைவேற்றப்படுகின்றன, எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதையெல்லாம் கண்காணிக்கின்ற வசதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருந்தாக வேண்டும். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி என்றெல்லாம் இருக்கின்றன. இரண்டாண்டுகள், மூன்றாண்டுகளுக்குப் பிறகுதான் இந்த விஷயங்கள் இந்தக் கமிட்டியின் கவனத்திற்கு வருகின்றன. அதனால் பயன் இல்லை. அறிக்கை வந்தால் ஆறின கஞ்சி பழங்கஞ்சி என்ற நிலையில் இருக்கிறது. அதுமாதிரியில்லாமல் இருக்க சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஸ்டாண்டிங் கமிட்டிகளை ஏற்படுத்தி, ஒவ்வொரு இலாக்காவிற்கும் ஸ்டாண்டிங் கமிட்டி ஏற்படுத்தி, அந்தக் கமிட்டி மாதத்திற்கு ஒருமுறையாவது கூடி இலாக்காக்கள் எப்படி இயங்குகின்றன என்று கண்காணிப்பதற்கும், ஆராய்வதற்கும், அவற்றிற்குக் கருத்துத் தெரிவிக்கவும், பரிந்துரை வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவேன்.

அடுத்தபடியாக, இந்த நாட்டிலே பெரும் விடுதலைப் போராட்டம் நடைபெற்றது, உலகமெல்லாம் கண்டு வியந்த விடுதலைப் போராட்டம் நடைபெற்றது. அந்த விடுதலைப் போராட்டம் விடுதலைக்காக மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களின் உள்ளத்திலே நாட்டுப்பற்றை உண்டாக்க மிகவும் அதிகமாகப் பயன்பட்டது. இன்றைக்கு நாம் பார்க்கிறோம், புதிய தலைமுறையினருக்கு அதுபற்றி எதுவும் தெரியாமலிருப்பதைப் பார்க்கிறோம். அதனால் நாட்டுப்பற்று என்பதே மறந்துபோய், வெகுவாகக் குறைந்துபோய், வீட்டுப்பற்று, தன்பற்று என்று தேய்ந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இதனால் பல தீய விளைவுகள் ஏற்படக்கூடும். நாட்டின் சொத்துக்களைப்பற்றிக் கவலை இல்லை, பிறருடைய நலத்தைப்பற்றிக் கவலையில்லை, நாட்டு நலத்தைப்பற்றிக் கவலையில்லை, நாட்டின் முன்னேற்றத்தைப்பற்றிக் கவலை இல்லை என்ற முறையில் புதிய தலைமுறையினர் வளர்ந்துவருவதைப் பல்வேறு இடங்களில் பார்க்கிறோம். ஆகவே, விடுதலைப் போராட்டத்தின் சிறப்பான நிகழ்ச்சிகளை, வீரம் ததும்புகின்ற நிகழ்ச்சிகளை டாகுமெண்டரி படங்களாக எடுத்து வெளியிட அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, தமிழகத்தின் சிறந்த தியாகிகளிலே ஒருவர் திருப்பூர் குமரன். அந்தத் திருப்பூர் குமரனுக்குத் திருப்பூரிலே ஒரு சிலை எடுக்க வேண்டும். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும், எடுத்துவிட்டார்கள் என்றால் சரி.

தியாகி என். ஜி. ராமசாமி அவர்கள் இந்த நாட்டின் தொழிலாளர் இயக்கத்திலே, விடுதலை இயக்கத்திலே பெரும் பங்காற்றிய உயர்ந்த தலைவர். அவரைப் பற்றி முதலமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) வீட்டிலேயே இருந்திருக்கின்றார்கள். அவருடைய சிலையைக் கோவையிலே எழுப்ப வேண்டியதவசியம். நாங்களும் முயன்று கொண்டு வருகிறோம், அரசாங்கமும் துணையாகயிருந்து ஒத்தாசை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து திரு. கோவை செழியன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் 5 நிமிஷங்களுக்குள் முடித்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான் நேரம் இருக்கிறது.

*** திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, Head of State, Ministers and Headquarters staff, என்ற இந்த மானியத்தை வரவேற்றுப் பேசும்பொழுது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே இந்த மன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் எங்களுடைய அமைச்சர்களையும், அவர்களுடைய சில நடவடிக்கைகளுக்கும் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவதைப்போல எனக்குத் தென்பட்டது. தேர்தல் முடிந்தவுடனே சில அதிகாரிகளை மாற்றியதைப்பற்றிச் சொன்னார்கள். அதிகாரிகள் மாற்றப்படுவதும், அதிகாரிகளுக்கு உயர்ந்த பதவி கொடுப்பதும் அரசாங்கத்தினுடைய அன்றாட நிகழ்ச்சிகளில், சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய ஒன்றாகும். அது தேர்தலுக்கு முன்னாலே வந்திருந்

(திரு. மா. வெ. கரிவெங்கடம் தலைமை)

தாலும் சரி, தேர்தலுக்குப் பின்னாலே வந்திருந்தாலும் சரி அதை அரசாங்ககாரியங்களிலே ஒன்று என்று எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர அதற்கெல்லாம் காரணத்தைக் கற்பித்துக்கொள்வது அழகாக இருக்காது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



இது ஒரு ஜனநாயக நாடு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆளும் ஆட்சியாகும். அப்படியே சில அதிகாரிகள் மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட அதிலே தவறு இல்லை என்பதே என்னுடைய வாதமாகும். நாம் எந்த இலட்சியத்தை மனத்திலே வைத்து, எந்தக் கொள்கைக்காக இந்த அரசாங்கத்தை நடத்த வேண்டுமென்று நினைக்கிறோமோ அதற்கு விரோதமாக இருப்பவர்கள் மாற்றப்படுவதில் தவறு இல்லை என்பதே என்னுடைய கருத்து. அரசாங்கம் என்பது ஒரு வண்டி, அந்த வண்டியை ஓட்டுகின்ற டிரைவர் நாம் எந்த இடத்திற்கு ஓட்ட வேண்டுமென்று சொல்லுகிறோமோ அதைக் கேட்காமல் அவருடைய இஷ்டத்திற்கு ஓட்டிச் சென்றால் ஒன்று அந்த டிரைவருக்கு அறிவுரை சொல்லிப் பார்க்க வேண்டும், அந்த அறிவுரையையும் கேட்காவிட்டால் அவரை வேறு இடத்திற்குப் போகச் சொல்வதுதான் முறையாகும். அதிலே ஒன்றும் தவறு இருக்காது. மக்களுக்காக அரசாங்கமே தவிர, அரசாங்கத்தை நடத்துகிறவர்களுக்காக மக்களுடைய கருத்தை மாற்றிக் கொள்ள முடியாது.

இன்றைக்கு நம்முடைய அரசாங்க நிர்வாகம் பிரிட்டிஷ்காரன் காலத்தில் உருவாக்கப்பட்ட முறையில்தான் நடந்து வருகிறது. அன்றைக்கு ஐ.சி.எஸ். ஆபீசர்கள் இந்த நாட்டைப் பல்வேறு வகையாகப் பிரித்து ஆண்டு வந்தார்கள். அதே முறையில் இன்றைக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கரத்தில் இருக்கிறது. முன்பெல்லாம் இந்த அதிகாரிகள் வரி வசூல் செய்வதற்காக நியமிக்கப்பட்டார்கள். இன்றைக்கு அந்த நிலை மாறி வரி வசூல் செய்வது மட்டுமல்லாமல் நாட்டினுடைய முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளவும் இந்த அதிகாரிகளுக்குப் பங்கு தரவேண்டுமென்ற முறையில் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, ஜில்லா நிர்வாகம் கலெக்டருடைய தலைமையின் கீழ் இயங்க வேண்டும். பல வேலைகள் இன்றைக்கு அதிகரித்திருக்கின்றன. அதிலே டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் என்ற அமைப்பு ஜனநாயக முறைப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை கூறும் முறையில் இருக்கிறது. அதற்கு தலைமை வகிப்பவர்கள் கலெக்டர்கள் என்ற நிலை இல்லாமல் மகாராஷ்டிரம், பஞ்சாப் போன்ற மாநிலங்களில் ஜில்லா பரிஷத் என்ற முறையில் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் தலைவர்களாக இருப்பது போல் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திற்கும் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தலைவர்களாகவும், ஜில்லா கலெக்டர்கள் செயலாளர்களாகவும் இருக்கும் முறையினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய அதிகாரிகளில் சிலர் நாட்டினுடைய நிலையைப் புரிந்து கொண்டு நாட்டு மக்களுக்காக உழைப்பதை மனத்தில் கொண்டிருக்கிறார்கள். சிலபேர் அதை உணராமல் பழைய போக்கிலேயே இருந்து வருகிறார்கள். எம்.எல்.ஏ.-க்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள். அவர்கள் அதிகாரிகளைச் சந்திக்க வருகின்ற நேரத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் ஓர் அறிக்கை அனுப்பி இருக்கிறது. எம்.எல்.ஏ.-க்கள் வந்தால் அவர்களுக்கு மரியாதை கொடுத்து சந்திக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை அமைச்சர்கள் கடைப்பிடிக்கிறார்கள்; பல அதிகாரிகள் கடைப்பிடிக்கிறார்கள். ஏனோ ஒருசிலர் மட்டும் அதைக் கடைப்பிடிக்கத் தயங்கிக்

கொண்டிருக்கிறார்கள். என் போன்ற எம்.எல்.ஏ.-க்கள் போனால் மணிக் கணக்காக வெளியில் நிற்க வைத்து விடுகிறார்கள். நாங்கள் போய் அவர்களிடம் பிரச்சினையை எடுத்துச் சொல்லுவதற்குள் அவர்கள் பொறுமையை இழந்து விடுகிறார்கள். அந்த அதிகாரிகள் எல்லாம் தங்களுடைய கருத்துக்களை மாற்றிக் கொள்ள அரசு அறிவுரை கூறவேண்டும்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பல துறைகளிலும் தலைவர்களாகப் போடப்படுகிறார்கள். அவர்களை டைரக்டர்களாக போடப்படுவதைக் கண்டித்து சில அங்கத்தினர்கள் பேசினார்கள். அந்த துறையிலே எக்ஸ்பர்ட்டுகளைத்தான் போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அக்ரிகல்சர் டிப்பார்ட்மெண்ட் டைரக்டர் என்றால் அக்ரிகல்சரல் கிராஜுவேட்டாகப் பார்த்துப் போட வேண்டுமென்று சொன்னார்கள். அது மிகவும் தவறாகும். அக்ரிகல்சர் டிப்பார்ட்மெண்ட் என்று சொன்னால் அதில் பல பிரிவுகள் உண்டு. எஞ்சினியரிங் செக்ஷன் இருக்கிறது, பெஸ்டிசைட்ஸ் இருக்கிறது, கெமிஸ்ட்ரி இருக்கிறது. வருகின்றவர் ஏதாவது ஒரு துறையில் எக்ஸ்பர்ட்டாக இருந்தால் அந்தத் துறைக்கு மட்டுந்தான் அதிக முக்கியத்துவம் தருவார்கள்; பாக்கித் துறைக்கு முக்கியத்துவம் தரமாட்டார்கள். பொதுவாக, ஐ.ஏ.எஸ். ஆபீசர்களைப் போட்டுவிட்டால் எல்லோருக்கும் பொதுவாக நடப்பார்கள். ஆகவே, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவதில் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில நேரங்களில் வெளிநாடுகளுக்கு அதிகாரிகளை அனுப்புகிறோம். விவசாயத் துறையில் பல நல்ல கருத்துக்களை ஆராய்ந்து வர அனுப்புகிறோம். அவர்கள் வந்தவுடன் அவர்களை விவசாயத் துறைக்குப் பயன்படுத்துகிறமாதிரி போட வேண்டும். விவசாயத் துறையில் பயிற்சி பெற்றவர்களை நலத் துறைக்குப் போடுவது போன்ற நிகழ்ச்சிகள் முன்பு நடைபெற்று வந்தன, அந்த முறை கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.எல்.ஏ.-க்களுக்குச் சில வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று சொன்னார்கள். இதிலே எதிர்க்கட்சிக்காரர்களும், ஆளும் கட்சிக்காரர்களும் ஒன்றுபட்டிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். எங்களுடைய சம்பளத்தை எல்லாம் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். எங்களுடைய சம்பளத்தை உயர்த்தாவிட்டாலும் கூட நாங்கள் அடிக்கடி எங்களுடைய தொகுதியில் இருந்து சென்னைக்கு வர வேண்டியிருப்பதால் ட்ரெய்ன் பாஸ் இலவசமாகத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். பார்லிமெண்ட் மெம்பர்களுக்குத் தரும் வசதியை எங்களுக்கும் செய்து தரவேண்டும். அவர்களுக்கு பர்ஸ்ட் கிளாஸ் பாஸ் கொடுக்கிறார்கள். எங்களுக்கு செகண்ட் கிளாசோ அல்லது தேர்டு கிளாஸ் பாஸோகூடக் கொடுத்தால் போதும். தொகுதியிலே எங்களுக்கு அடிக்கடி வேலை இருப்பதால் இதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டெலிபோன் வசதியும் செய்து தரவேண்டும். அதிகமான பல பிரச்சினைகள் தொகுதிகளில் வருவதால் டெலிபோன் வசதி இன்றியமையாததாக இருக்கிறது. இப்போது டெலிபோன் அமைத்துக் கொடுப்பதிலேயே டெலிபோன் டிப்பார்ட்மெண்டில் காலதாமதம் ஆகிறது. இதைப் பற்றியும் மத்திய அரசுக்குத் தெரிவித்து இலவசமாக டெலிபோன் வசதி செய்து தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மந்திரிகள் அடிக்கடி பல தொகுதிகளில் சுற்றுப்பயணம் செய்வது தவறு என்று சொன்னார்கள். அமைச்சர்கள் தொகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தால்தான் நாட்டின் நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியும். அமைச்சர்களுக்குத் தரப்படும் சம்பளமும் போதாது. அதை அதிகமாக்க வேண்டும். சிறிய கார்களில் போவதை நிறுத்தி பெரிய கார்களில் போகவேண்டும். பெரிய கார்களில் போனால்தான் ஆபத்திலிருந்து தப்ப முடியும். அதிலே ஒன்றும் தவறு இல்லை என்று கூறி இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்தல் மானியத்தின்மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அப்படிச் சொல்லுவதற்கு முன்னதாக இன்று சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லாம் ஒரு நல்ல செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை முன்கூட்டியே சொல்லியிருந்தால் பேசுவதிலும் சற்று உற்சாகம் கொண்டிருக்கக் கூடும்.

இப்போது நடந்து வரும் தேர்தல் முறையில் நான் சார்ந்துள்ள சிறுபான்மை சமூகத்ினருக்கு, பொதுவாக கிறித்தவர்கள், முஸ்லிம்கள், மற்றைய சிறுபான்மை சமூகத்தினருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் கிடைக்கவில்லை என்பது இந்த 25 ஆண்டு காலமாக ஐந்து பொதுத் தேர்தல்களின் முடிவுகளில் இருந்து கண்டு கொண்ட உண்மையை மறைக்க யாரும் எத்தனிக்கக்கூடாது. எப்படியோ தப்பிப் பிழைத்து ஒருசிலர் இந்த மன்றங்களிலே இடம் பெற்று விடுகிறார்கள் என்பதும் உண்மைதான். அது ஜனத்தொகை அடிப்படைக்கு ஏற்றவாறு உண்மையான அளவு நாங்கள் வரமுடியவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இந்தத் தேர்தல் முறையில் நிச்சயமாக மாறுதலைச் செய்தாக வேண்டும். இதுபற்றி இந்த அரசு நன்கு ஆலோசித்து மத்திய அரசுக்கு தங்களுடைய வன்மையான சிபாரிசைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாகவே எங்களுடைய மதிப்பிற்குரிய காயிதே மில்லத் அவர்கள் இதுகுறித்துச் சொல்லி வருகிறார்கள். குவியல்முறை வோட்டுப்படி இது நடைபெற வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். அதன் பிரகாரம் குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அந்த மாவட்ட மக்கள் அனைவரும் அவரவர் விரும்பும் கட்சிகளுக்கு வாக்களித்து அந்தந்தக் கட்சிகளுக்குக் கிடைத்த வாக்குகளுக்கேற்ப, ஒரு லட்சம் வாக்குகள் பெற்றிருந்தால் ஒரு சட்டமன்ற பிரதிநிதித்துவம் என்ற அடிப்படையில் அனுப்பும் அளவுக்கு ஏற்பாடு செய்தால் உண்மையிலேயே இந்த நாட்டில் ஜனநாயகம் தழைக்கவும், சிறுபான்மை சமுதாயத்தினரும் இந்த நாட்டினுடைய ஆட்சிப் பொறுப்பில் தங்களுக்குரிய பங்கு கிடைத்ததாக நம்பிக்கை கொள்ளவும், எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கவும் வழி ஏற்படும் என்று கூற விரும்புகிறேன்.

இரண்டாவது, வாக்காளர் பட்டியலைப் பற்றிக் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்துத் தேர்தலுக்கு ஒரு வாக்காளர் பட்டியல், பொதுத் தேர்தலுக்கு ஒரு வாக்காளர் பட்டியல் என்று இருக்கிறது. இதிலே உள்ள பெயர்கள் அதிலே இல்லை; அதிலே உள்ள பெயர்கள் இதிலே இல்லை என்ற குறைபாடுகள் இருப்பதன் காரணமாக எங்களைப் போன்ற வேட்பாளர்கள்தான் தொல்லைக்கு ஆளாகிறார்கள். இந்த முறை ஒழிக்கப்பட்டு பொதுவான ஒரு வாக்காளர் பட்டியலைத்

தயாரித்து அந்த வாக்காளர் பட்டியலை பஞ்சாயத்துத் தேர்தலாயினும் சரி, நகராட்சித் தேர்தலாயினும் சரி, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களாயினும் சரி பயன்படுத்தும் முறையில் அமைக்கவேண்டும்.

நான் சார்ந்துள்ள தொகுதியில் பட்டிதொட்டிகள், கிராமங்கள் அதிகமாக இருக்கின்றன. ஒரு வாக்குச் சாவடிக்கும் இன்னொரு வாக்குச் சாவடிக்கும் இடையே உள்ள தூரம் காக்கை பறந்து செல்லும் தூரம் இரண்டு மைல் என்று சொன்னாலும் நடந்து போகும்போது மூன்று, நான்கு மைல் தூரம் கூட வந்து விடுகிறது. ஆகவே, பலவற்றில் இன்று மொபைல் சர்விஸ் இருப்பதுபோல் பெரிய லாரியில் வாக்குச்சாவடி அமைத்து, வாக்குப் பதிவாளர்களை ஏற்படுத்தி இன்னின்ன கிராமங்களுக்கு இத்தனை மணி நேரத்தில் வரும் என்று முன் கூட்டியே அறிவித்துவிட்டு அந்தந்த கிராமங்களிலேயே மக்கள் தங்களுடைய வாக்குகளைச் செலுத்த வசதி செய்து கொடுப்பது பற்றி இந்த அரசு பரிவுடன் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம் ஆளுநர் அவர்களுக்குள்ள மதிப்பிற்கு, அவர்களது மாண்பிற்கு எந்தவிதக் களங்கமும் இல்லாத முறையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நல்ல நோக்கத்துடன்தான் இந்த அரசு, ஒரு ஏழை மக்களின் அரசு என்ற முறையில், தற்போது ஆளுநர் அவர்கள் இருக்கக்கூடிய இடமானது பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களைக் கொண்ட இடத்தில் அமைந்திருக்கிறது, இவ்வளவு பெரிய ஆடம்பரமானதொரு மாளிகை தேவையில்லை, ஒரு சிறிய இடத்தில் அவர்களது மாளிகை அமைந்திருந்தால் போதுமானது, அப்படி அமைவதுதான் ஏழை மக்களைக்கொண்ட நாட்டிற்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி அம்மாதிரியான மாறுதல் குறித்து விண்ணப்பித்த போது மத்திய அரசு அதை அலட்சியப்படுத்தி நிராகரித்ததை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த ஏழை நாட்டில் இவ்வளவு பெரியதொரு இடம் ஆளுநர் அவர்களுக்குத் தேவைதானா என்று மக்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மீண்டும் இந்த அரசு வற்புறுத்தி அந்த இட மாறுதலைச் செய்ய வேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர்கள் தொகுதிகளுக்கு வரும்போது நிச்சயமாக அந்தத் தொகுதி உறுப்பினரோடு, அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, குறிப்பாக எங்களைப் போன்ற தோழமைக் கட்சி உறுப்பினர்களைக் கலந்து கொண்டு திட்டங்களைத் தயாரிக்கவேண்டும். அந்தந்தத் தொகுதிகளில் சுற்றுப்பயணம் செய்யும்போது அந்த அந்தத் தொகுதி உறுப்பினர்களின் செல்வாக்கிற்குப் பங்கம் வராத முறையில் அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கௌரவம் அளித்து அமைச்சர்கள் நடந்து கொள்வது எங்களுக்கு நன்மை பயக்கும் என்பதை தாழ்மையுடன் சொல்லிக்கொள்கிறேன்.

அமைச்சர்களின் ஊதியத்தைப் பொறுத்தவரையில் அவர்களும் மனிதர்களாகத்தான் வாழ்கிறார்கள். அவர்களுக்கும் குழந்தை குட்டிகள் உண்டு. அவர்களுக்கும் கல்யாணம் போன்ற நல்ல காரியங்கள் உண்டு. அவர்கள் ஏதோ மதிப்பிற்காக, பிரசாரத்திற்காக சம்பளத்தைக் குறைத்துக்கொள்கிறோம் என்று சொல்வதில் நியாயம் இல்லை. உண்மையில் அவரவர்கள் செய்யக் கூடிய வேலைக்குத் தகுந்தபடி ஊதியம் கொடுக்கப்படவேண்டும். இன்று அமைச்சரவையில் உள்ளவர்கள் அவர்கள் தனிப்பட்டமுறையில் தொழில்கள் நடத்துவார்களேயானால்—வணிகர்கள், வழக்கறிஞர்கள் போன்று அவர்கள் பணியினைச்



செய்வார்களேயானால்—இதை விட பன்மடங்கு ஆதாயத்தை அவர்கள் தேடிக் கொள்ள முடியும். அவர்கள் சொந்த வாழ்வையும் பெருக்கிக் கொள்ள முடியும் என நான் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே அவர்கள் தங்கள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டு வறுமை நிலையில் இருந்து கொண்டிருக்கவேண்டும், அவர்களது குடும்பங்களும் வறுமை நிலையில் இருந்து கொண்டிருக்கவேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களும் எதிர்பார்க்க முடியாது, இந்த நாடும் எதிர்பார்க்கவில்லை.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடம் சிபார்சுக்கு வந்தால் அதை சற்று அனுதாபத்துடன் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுக்காக தேர்தலில் உழைத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து பல கோரிக்கைகளை எடுத்து வைத்து எங்களிடம் வந்து பேன் மொய்ப்பது போல் இரவு பகல் என்று பாராது பிடித்துக்கொள்கிறார்கள். நாங்களும் தொல்லை பொறுக்காது உங்களை நாடி வருகிறோம். ஆகவே நாங்கள் அமைச்சர்களிடம் வரும்போது எங்களுக்கு சலுகை காட்டவேண்டும். எங்களது தொகுதி மக்களுக்காக நாங்கள் சிபார்சு செய்யும்போது வேலையை நாடியோ அல்லது வேறு காரணத்திற்காகவோ அமைச்சர்களை அணுகும்போது அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பொறுப்புணர்ச்சியை உணர்ந்து தான் வருகிறார்கள் என்பதை உணர்ந்து எங்கள் கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டும். நாங்கள் மனச்சாட்சிப்படி செய்யக்கூடிய சிபார்சுகளை அமைச்சர்கள் முடிந்தவரையில் கவனித்து அதற்குரிய கவனம் செலுத்தவேண்டும். அனுதாபமாக அவற்றைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பளித்தமைக்கு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

* திரு. சோ. கருணைநாதன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

மலைப் பகுதிகளில் வாக்குச் சாவடிகளை அமைக்கிற முறையில் சிலயிடங்களில், ஆயிரம் பேர்கள் இருக்கும் இடத்தில் ஒரு சாவடி அமைக்க வேண்டும் என்று இருந்தாலும், சிலயிடங்களில் சில தொல்லைகள் காரணமாக குறைவான வாக்காளர்கள் இருந்தாலும் கூட அங்கு ஒரு சாவடி அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலையில் வாக்காளர்களின் கஷ்டத்தைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த பொதுத் தேர்தலில் வோட்டு எண்ணிய முறையையே கடைப்பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடிப்பதன் மூலமாக எந்த வாக்குச் சாவடியில் வாக்குகள் யாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியாமல் அதனால் தேர்தலுக்குப் பிறகு ஏற்படக்கூடிய விளைவுகள், சண்டைச்சச்சரவுகள் போன்றவை தவிர்க்கப்படலாம். ஆகவே சென்ற பொதுத் தேர்தலில் கடைப்பிடிக்கப்பட்ட முறையையே மேலும் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வர இருக்கிற நகரமன்றத் தலைவர்கள் தேர்தல்களிலும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல்களிலும் அவற்றை பொது மக்களின் தீர்ப்புக்கே விட வேண்டும். பொது மக்களே வாக்களித்து அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முறையில் நிலைமையை உருவாக்கவேண்டும்.

தேர்தல் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுகிற நேரத்தில் மிகவும் தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். அப்படி தரக்குறைவான வார்த்தைகளைப் பேசுவதன்மூலம் நம் நாட்டில் கூட்டங்களுக்கு வருகிற இளைஞர்கள் எல்லாம் அந்தத் தகாத வார்த்தைகளையெல்லாம் கேட்டு விட்டு அவர்களும் அதேபோன்ற வார்த்தைகளை உபயோகிக்க ஆரம்பித்தால் வருங்காலத்தில் நம் நாட்டின் அரசியல், நம் நிலைமைகள் எல்லாம் எப்படியிருக்கும் என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும் சிந்தித்துப் பார்த்து அதற்கேற்றவாறு செயல்படவேண்டும். தரக்குறைவான வார்த்தைகளைப் பேசுவதன்மூலம் அரசியலில் இடம் பிடித்துக் கொள்ளலாம் என்று தப்புக் கணக்கு போடுவது தவறான ஒன்றாகும். இன்று நாட்டில் நிலவுகிற இந்த நல்லாட்சி பாசத்தால் ஏற்பட்ட ஆட்சியாகும். மக்களிடத்தில் அந்தப் பாச உணர்ச்சியைப் பெறவேண்டுமென்றால்—முள்ளை முள்ளால் எடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள், அதே போல் பாசத்தை பாசத்தினால்தான் பெறமுடியும். ஆகவே பொது மக்களிடம் பேசும்போது நல்ல வார்த்தைகளில் எடுத்துச் சொல்லி, அரசாங்கம் செய்கிற குறைகளை மட்டும் எடுத்துச் சொல்லி அவர்களிடத்தில் பாச உணர்ச்சியோடு வாக்குகளைக் கேட்கவேண்டுமே தவிர, தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துவதால் நம் வருங்கால இளைஞர்களை நாம் திசை திருப்பி விடக்கூடும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடுமில்லை. ஆகவே தரக்குறைவான வார்த்தைகளை பேசுகிறவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கும்விதத்தில், அரசு ஒரு ஏற்பாட்டினைச் செய்திடவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், தேர்தல்கள் முடிந்ததும் வோட்டுகளை எல்லாம் கொள்ளை அடித்து விட்டார்கள் என்று சொல்லி மக்களிடம் தவறான செய்திகளையெல்லாம் பரப்புகிறார்கள். ஆனால் இந்த அரசு மக்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்ட அரசு. அதனால் வோட்டுக்குப் பஞ்சம் இல்லாமல் ஏராளமான வோட்டுக்களைப் பெறுகிறது. நாட்டிலுள்ள பலதரப்பட்ட மக்களின் உள்ளங்களில் குடிகொண்டுள்ள, புறக்கணிக்கப்பட்ட மக்களின் உள்ளங்களில் எல்லாம் குடிகொண்டுள்ள, பிச்சைக்காரர்களின் உள்ளங்களையும் கொள்ளைகொண்டுள்ள, நன்செய்யில் நல்ல கதிராக கருணை என்று உருவெடுத்து பூத்துக் குலுங்கும் நமது முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, அவை முன் இருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களையொட்டி நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இதுவரையில் இந்த அவையில் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளுக்கு ஒவ்வொரு அறிக்கை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் இருக்கிற மானியக் கோரிக்கைக்கு அது போன்றதொரு அறிக்கை கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் இந்த இலாக்காக்களைப் பற்றிய கூடுதல் விவரங்களை அறிந்து கொள்வதற்கு வகையாக இருந்திருக்கும். இதுவரையில் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளில், பல்வேறு மானியக் கோரிக்கைகளின் பேரில் கொடுக்கப்பட்டவற்றில் 1967-ல் உள்ள விவரங்கள், அதற்கொப்ப 71-ல் உள்ள விவரங்கள் இவை குறிப்பிடப்பட்டிருக்கும். அதுபோன்றதொரு நிலைமை இந்த மானியக் கோரிக்கைகளுக்கும் இருந்திருக்குமானால் இன்றிருக்கிற அமைச்சர்களின்





எண்ணிக்கை—1966-67-ல் எட்டாக இருந்த எண்ணிக்கை இன்று 1971-ல் 14 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. எண்ணிக்கையில் அல்ல இருக்கிறது சமாசாரம். எண்ணிக்கை கூடுந்தோறும் அமைச்சர்களின் செலவும், சுற்றுப்பயணச் செலவுகளும், மற்றவைகளும் இப்படிப் பல செலவுகள் ஏற்படுகின்றன. இப்படி எவ்வளவோ செலவாகிறது. 1966-ல் என்ன செலவு ஏற்பட்டது, 1971-ல் எவ்வளவு செலவு என்பதை இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆகவே இனிமேலாவது வருகிற ஆண்டிலாவது இப்படிப்பட்டதொரு முறையை இந்த அரசு கையாளும் என்று எண்ணுகிறேன்.

கழிந்த சில ஆண்டுகளுக்கு முன்னால் இப்போதுள்ள அமைச்சர்கள் ரூ. 1,000 என்று இருந்த சம்பளத்தை ரூ. 500-ஆக்க குறைத்துக்கொண்டார்கள். இப்போது அந்தச் சம்பளம் ரூ. 500 ஆக இருக்கிறதா ரூ. 1,000 ஆகிவிட்டதா என்பதை இந்த மன்றத்திற்கு அறிவிக்கவில்லை. அறிவிக்க வேண்டுமென்று கோரவில்லை. ரூ. 1,000 அதிகமாகக் கூட, தேவைக்கேற்ற அளவிற்கு சம்பளம் வாங்கிக்கொள்ளலாம். அதை நான் மறுக்கவில்லை. குறைக்கப்பட்ட சம்பளம் கூடுதல் ஆக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். இந்தச் சம்பளம் குறைக்கப்பட்டபோது சொன்னார்கள், இந்த நாட்டு மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி வழங்கும் வரையில் ரூ. 500-க்கு மேல் வாங்க மாட்டோம் என்று. இன்று ஒரு படி அரிசியின் விலை ரூ. 2 ஆக இருக்கிறது. அதற்கு மேலும் விற்கிறது. அந்த நிலையில் எந்தக் காரணத்தைக்கொண்டு அமைச்சர்கள் கூடுதலான சம்பளம் வாங்குகிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், இதுமாதிரி நடைமுறையில் கொண்டுவர முடியாத காரியங்களை விளம்பரத்திற்காக கூறவேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகத்தான்.

கடந்த சில மாதங்களாக, மத்திய அரசாங்கத்தில் ஒரு கொள்கை இருந்து வருகிறது. அதாவது, எந்த மாநில அரசாங்கம் தங்கள் கட்சிக்கு எதிராக இருக்கிறதோ, எந்த மாநிலத்தில் தங்கள் கட்சி ஆட்சியில் இல்லையோ அந்த மாநிலங்களைக் கவிழ்ப்பது என்று ஒரு கொள்கையை வைத்து இருக்கிறது. அதே போன்று, இந்தத் தமிழக அரசும் எந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஆளும் கட்சியைச் சாராதவராக இருக்கிறாரோ அந்தப் பஞ்சாயத்து யூனியனைக் கவிழ்ப்பது என்ற திட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். உதாரணத்திற்காக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கடந்த சில நாட்களுக்கு முன்பு நமது சட்டமன்றம் நடந்து கொண்டு இருக்கிறபோது ஒரு அமைச்சர் என்னுடைய தொகுதிக்கு சென்று இருக்கிறார். அங்கே சில பஞ்சாயத்து அங்கத்தினர்கள், தலைவர்கள், அமைச்சரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இதை உடனே பத்திரிகைகளில், மறுநாள் போட்டு விட்டார்கள், "6 பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்கள் ஸதாபன காங்கிரசை விட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து விட்டார்கள்" என்று. இதைப் பார்த்த அந்தப் பஞ்சாயத்து அங்கத்தினர்கள் அதுமாதிரி ஒன்றும் நடக்கவில்லை என்று மறுப்பு சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தொழிலாளர்கள் மத்தியில் கூறுவார்கள், 'அன்ஃபேர் லேபர் பிராக்டீஸ்' என்று. அதுபோன்று இது 'அன்ஃபேர் பொலிடிகல் பிராக்டீஸ்' என்று கூற விரும்புகிறேன். இது தடுத்து நிறுத்தப்படவேண்டும். இது நல்ல சூழ்நிலைக்கு உகந்தது அல்ல, ஜனநாயகப் பண்பாட்டுக்கு உகந்தது அல்ல. ஆகவே இப்படிப்பட்ட நடவடிக்கைகளை கைவிட்டுவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நமது மாநிலத்தைப் பற்றி மத்திய அரசாங்கத்தில் மதிப்பு இல்லை. "we have lost our image before the Central Government என்று கூற விரும்புகிறேன். ஏனென்றால் கழிந்த சில நாட்களாக நம்முடைய மாநில அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே நடக்கிற நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது இப்படிச் சொல்லத் தோன்றுகிறது. இந்த மாநில அரசை ஒரு பஞ்சாயத்து போல், பஞ்சாயத்து யூனியனைப்போல் மத்திய அரசு கருதுகிறது. உதாரணத்திற்காக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் தனிக்கொடி வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு மிகவும் துச்சமாக மாநிலங்களுக்கு மட்டுமல்ல, இந்திய ஜனாதிபதிக்கே, கவர்னருக்கே தனிக்கொடி கிடையாது என்று சொன்னார்கள். அந்தக் கோரிக்கையை நாம் வற்புறுத்தி நிறைவேற்றமுடியாவிட்டாலும், அந்த உரிமைக்கு குரல் எழுப்புவதற்குக் கூட நமக்கு தெம்பு இல்லை, கைவிட்டு விட்டோம்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனிக் கொடி பிரச்னையை மாண்புமிகு உறுப்பினர் வரவேற்று இருப்பதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: வரவேற்கிறேன். உண்மையிலேயே வரவேற்கிறேன். ஆனால், இவ்வளவு கீழ்த்தரமாக நமது கோரிக்கைகளை மத்திய அரசாங்கம் நிராகரித்து விட்டது என்று சொன்னால், இந்த அரசாங்கம் ,அதற்கு மேல் நடவடிக்கை எடுக்க செயலற்று இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்ததாக, மாநில சுயாட்சி கோரிக்கையை வைத்தோம். அதற்கென்று ஒரு உயர் மட்டக் குழுவை ஏற்படுத்தி, அதுவும் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறது. அந்த அறிக்கையை மத்திய அரசுக்கு மாநில அரசு அனுப்பியுள்ளது. மத்திய அரசு பிரதம மந்திரியும் நமது முதலமைச்சருக்கு அந்த அறிக்கை வந்ததைத் தெரிவித்து ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்கள். அந்தக் கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்தார்கள். உடனே ஒரு அதிகாரி மறுப்பு தெரிவித்து இருக்கிறார். இப்படி அதிகாரி மறுப்பு தெரிவிப்பது பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டுதான் செய்து இருக்கவேண்டும். பிரதமரின் சம்மதத்தோடுதான் செய்து இருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு அரசில் பணிபுரியும் அதிகாரி பிரதமரின் அனுமதி இல்லாமல் அப்படிப்பட்ட காரியத்தைச் செய்து இருக்க மாட்டார்கள். நமது மாநிலத்தைப் பற்றி மத்திய அரசாங்கம் கீழ்த்தரமாக நினைத்துக்கொண்டு இருக்கிறது. அதை எதிர்த்துப் போராடுவதற்கு, உரிமைகளை வாங்குவதற்கு சக்தி நமது மாநிலத்திற்கு இல்லை.

உதாரணமாக காவிரித் தண்ணீர் பிரச்னை இருக்கிறது. இது மிகவும் முக்கியமான பிரச்னை. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு ஜீவாதாரப் பிரச்னை. இதில் மத்திய அரசாங்கம் என்ன கொள்கையைக் கைக்கொண்டு இருக்கிறது என்று பார்க்கிறபோது, நாம் பரிதாபப்படவேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம் என்பதைத்தான் சொல்லவேண்டியிருக்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பிஷரீஸ் அமைச்சர் கூறினார்கள். நாங்கள் கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதிக்கொண்டு இருக்கிறோம், பிஷரீஸ் ரிசர்ச் ஸ்டேஷன் மாற்றியதற்காக. ஆனால் மத்திய அரசிலிருந்து பதில் வரவில்லை என்று சொன்னார்கள். நாம் எழுதுகிற கடிதங்களுக்கு பதில் வருவது இல்லை





என்று சொன்னால் மத்திய அரசாங்கம் நம்முடைய அரசை எந்த நிலையில் வைத்துப் பார்க்கிறது என்று புரிந்து கொள்ளவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்க விழாக்கள், நிகழ்ச்சிகளைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர்கள் கூறினார்கள். ஆடம்பரமாக அந்த நிகழ்ச்சிகளுக்கு செலவிடப்படுகிறது. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற வார்த்தைக்கு விரோதமாக இருக்கிறது இந்த ஆடம்பரச் செலவுகள் என்று கூறிக்கொள்கிறேன். இதைக் கொஞ்சம் சிந்தித்து சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செலவு குறைக்கப்படவேண்டும். ஆடம்பரம் குறைக்கப்பட வேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன்.

நமது அரசாங்க ஸ்தாபனங்களில் பதவி உயர்வு, நியமனம் ஆகியவற்றில் உள்நோக்கம், ஜாதி மதம் இவைகள் பார்க்கப்படுவதாக பல அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வருத்தப்படுகிறார்கள். ஆகவே அவற்றை நீக்கும் வகையில், பதவி உயர்வு, நியமனம் ஆகியவை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று காரியாலயங்களில் முதலமைச்சர் போட்டோக்கள் மாட்டப்பட்டு இருக்கின்றன. மறைந்த முதல்வர் அண்ணாதுரை அவர்கள் படமும், இன்றைய முதலமைச்சர் அவர்கள் படமும்தான் இருக்கின்றன. இவர்களுக்கு முன்பு பல பேர் முதலமைச்சர் பதவியில் இருந்திருக்கிறார்கள். அத்தனை முதலமைச்சர் போட்டோக்களையும் மாட்டவேண்டும். இன்று இருக்கும் முதலமைச்சருக்கும், மறைந்த முதலமைச்சர் அண்ணாதுரைக்கும் இடையில் சில நாட்கள் நெடுஞ்செழியன் அவர்கள் கூட முதலமைச்சர் பதவியில் இருந்து இருக்கிறார்கள். அவர் போட்டோ எங்கும் இல்லை. ஆகவே, எந்தப் பாகுபாடும் இல்லாமல் எல்லா முதலமைச்சர் போட்டோக்களையும் அரசுக் காரியாலயங்களில் மாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயக அடிப்படையில் அப்படிச் செய்யப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மானியங்களை வரவேற்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சிமன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சிலர் கருத்து தெரிவித்தார்கள். இன்றைய தினம் சாதாரண மக்கள், தாய்மார்கள் ஐ.ஆர். 8 புடவை தருகிறாயா என்று கேட்கிற அளவிற்கு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமுதாயத்தில் நேரடித் தேர்தல் நடத்துவது முறைதானா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அதிகமான மக்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால், அவர்கள் எப்படி இருக்கவேண்டுமென்று பார்க்கவேண்டும். அவர்களைச் சந்திக்க வேண்டிய காலமும், ஓட்டு கேட்கவேண்டிய காலமும் அதிகமாகிக்கொண்டே இருக்குமே தவிர அதனால் எந்தவிதமான பிரயோசனமும் ஏற்படாது.

இந்த ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் நடந்தவற்றை நாம் கண்கூடாகப் பார்த்து இருக்கிறோம். எந்த அளவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்தி பணத்தைச் செலவு செய்து வருகிறார்கள் என்பதைப் பார்த்தோம். செலவு அதிகமாக செய்தவர்கள்தான் வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஆகவே இந்த நேரடித் தேர்தல் முறை தவிர்க்கப்பட்டாகவேண்டும். ஏற்கனவே இருக்கும

தேர்தல் முறை சிறப்பான முறையில் இருக்கிறது, என்று தெரிவித்துக் கொண்டு அந்த முறையில் அடுத்த தேர்தல் நடைபெறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி எல்லாத் தேர்தல்களையும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை என்று கொண்டுவர வேண்டும். இப்போது நகராட்சி மன்றங்களுக்கு மூன்றாண்டு களுக்கு ஒரு முறை என்று இருக்கிறது. இரண்டு சட்டமன்ற தேர்தல்கள் நடைபெறுவதற்குள் மூன்று நகராட்சித் தேர்தல்கள் நடைபெற்று விடுகின்றன. முதல்வர் அவர்கள் கூட அடுத்து அடுத்து தேர்தல்களைச் சந்திக்கின்ற நிலைமையை உருவாக்கக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்கெல்லாம் கூட ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை என்று தேர்தலை நடத்த வேண்டும்.

நகராட்சி மன்றங்களிலும் மாநகராட்சி மன்றங்களிலும் சட்டமன்ற உறுப் பினர்களுக்கு இடம் வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. நகராட்சி உறுப்பினர்களுக்கும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் மேலவையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, ஊராட்சி மன்றக் கூட்டங்களிலும், பேரூராட்சி ஒன்றியக் குழுக் கூட்டங்களிலும் கூட சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம் என்று சட்டத்தின் மூலம் வழிவகைகள் இருக்கின்றன. அதேபோல நகராட்சி மன்றங்களிலும் மாநக ராட்சி மன்றங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம் என்று சட்டம் இயற்ற வேண்டும்.

அடுத்தபடியாக, அங்கத்தினர்கள் சம்பளம் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்த நாட்டில் சம்பளத்தைப் பொறுத்தவரையில் ஏற்றத் தாழ்வு இருக்கிறது. 2 ஆயிரம், 3 ஆயிரம் என்றெல்லாம் சம்பளம் வாங்குகிறார்கள். தனியார் நிறுவனங்களில் கூட ஐயாயிரம், பத்தாயிரம் என்று ஆயிரக்கணக்கில் சம்பளம் கொடுக்கிறார்கள். அதற்காக அவர்கள் வசதிகளைக் குறைக்க வேண்டும் என்று சொல்லவில்லை. இந்த ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டுமானால், குறைந்த பட்ச சம்பளம் ரூ. 200 என்றும் அதிக பட்ச சம்பளம் ரூ. 1,000 என்றும் இருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நாட்டில் அமைச்சர்களைவிட யாருக்கும் சம்பளம் அதிகமாக இருக்கக் கூடாது.

சட்டமன்ற உறுப்பினர்கள் சுற்றுலா மாளிகைக்குச் செல்வது பற்றி குறிப் பிட்டார்கள். ஊட்டியில் 'தமிழகம்' இருக்கிறது. அங்கே அதிகாரிகள் சென்றால் குறைந்த வாடகை ரூ. 10, ரூ. 5 என்று வாங்குகிறார்கள். அந்த விதிகளில், கடைசியாக "லெஜிஸ்லேட்டர்ஸ்" என்று போட்டிருக்கிறார்கள். அது நல்லதல்ல. அதிகாரிகளுக்கு அளிக்கும்படியான சலுகைகளைவிட சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் அதிகமாக அளிக்கப்பட வேண்டும். இப்படி கடைசியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்று கூறியிருப்பது சட்டமன்ற உறுப்பினர்களை குறைத்துக் கூறுவதுபோல இருக்கிறது.

தமிழ் நாட்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று பெரிய ஸ்டோரீட் 'பில்டிங்' இருக்கிறது. டெல்லியில் எம்.பி. க்களுக்கு நல்ல முறையில் வீட்டு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். இங்கேயும், சட்டமன்ற விடுதிக்கு எதிரே ஒரு பெரிய மைதானம் இருக்கிறது. அங்கே பல வீடுகள் கட்ட முடியும். அந்த முறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தால் உறுப்பினர்களுக்குப் பயனளிக்கக் கூடிய முறையில் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



நகரமன்றத் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தலைவர்கள் எல்லாம் டெலிபோன் வைத்துக் கொள்ளலாம் என்று வசதி செய்திருக்கிறார்கள். நகர சபைச் செலவில் அது செய்யப்படுகிறது. அதுமாதிரி, சட்டமன்ற உறுப்பினர் களுக்கும் வசதி செய்து கொடுக்காமலிருப்பது வருந்தத்தக்கது. செலவு அதிக மாகிவிடும் என்று குறிப்பிட்டார்கள். அந்த எஸ்டாபிளிஷ்மெண்ட் செலவை ஏற்றுக்கொண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு டெலிபோன் வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தபால் வசதிகளையும் அதிகமாக செய்து கொடுக்க வேண்டும். சம்பளத்தை அதிகமாக்க வேண்டும் என்று கூட கூறவில்லை. அலவன்ஸ் அதிக மாக்கப்பட வேண்டும். சென்னைக்கு சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ள வேண்டுமென்று வந்தால் டாக்சி செலவே அதிகமாகிவிடுகிறது. எம்.பி. க்களுக்கு ரூ. 51 கொடுக்கிறார்கள். அவ்வளவு தொகை எங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறவில்லை. ரூ. 40 கொடுத்தால் போதும். உறுப்பினர்கள் தொகுதி மக்களையெல்லாம் அழைத்துக்கொண்டு பல்வேறு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அதிகமாகச் செலவாகிறது. எனவே, அலவன்சை ரூ. 40 ஆக உயர்த்த வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Mr. Chairman, in support of the cut motions moved on behalf of our party I wish to offer a few remarks.

Firstly, I want to streess especially to our Hon. Chief Minister tnat he should pass an order to all the District Collectors and Departmental Heads not to be unnecessarily perturbed or persuaded too much by political interference. There is a feeling among the public, especially today, especially in the districts that most of the District Collectors and Departmental Heads in the Cities also are to great extent pressurised, sometimes even, to a certain extent, inside the office itself certain important political leaders of the ruling party come and pressuries them. That feeling is there, both among the Pressmen who are there in Tiruchirappalli, in Madurai and every other district headquarters and also the public. Such an idea is there. I do not even go in to the merits of the case. Maybe it is a genuine apprehension, maybe it is an exaggerated apprehension. But whatever it is, it is better that the Hon. Chief Minister appoints at least a few C.I.Ds. to go into it and find out whether the party leaders do really interfere, do really threaten, whether it is a fact whether it has a basis. I would like him to do that. Because he is a strong man of the party he can take a decision without affecting his position. I am quite sure it is possible for the Hon. Chief Minister, especially when the apprehension is brought in this House.

We are here in the opposition to remove the insulation which the Ministers have of their own party men and their own officers. Therefore, the ruling party has one disadvantage. They cannot directly cime into contact with the public opinion, especially the Opposition side, because they are inslated by their own party members who go on praising them, whatever they do is right, and out of fear, they do not tell what is wrong. The Officers alsoa go

on praising them, whatever they are doing is right and go on confusing them. The role of the Opposition is—the Ministers are protected and insulated—to tell the Ministers 'Look here, there is a feeling outside like that'. With all the emphasis and persuasiveness at my command, I request the Hon. Chief Minister to appoint a few C.I.Ds. and find out whether it is a fact, whether there is any basis, whether it is a fact that some of the district ruling party D.M.K. secretaries walk into the Officers' room and whether they are curbing them or not. I want a categorical answer. Of course, he may straightaway say 'there is no such thing'.

(Mr. Speaker in the Chair)

Because there is such an anxiety expressed on this side of the House. I request the Hon. Chief Minister to give careful consideration to this particular point and appoint his own C.I.D. men without the knowledge of his party men and find out how exactly these things are being done and pull just 2 or 3 persons. If he does that, it will have an excellant atmosphere. He would like to do this, I believe. So, I thought I could place this before the Hon. Chief Minister.

The second point is this . . .

*திரு. மு. முனு ஆதி: பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே, கட்சிக்காரர்களும் மற்றவர்களும் அதிகாரிகளையும் அலுவலர்களையும் பார்த்து சலுகைகள் பெறுகிறார்கள், பயமுறுத்துகிறார்கள், அரசியல் ரீதியில் அரசாங்க அலுவலர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்று பத்திரிக்கைகள் சொல்கின்றன என்று மாண்புமிகு அங்கத்தினர் சொல்கிறார்கள். அதற்குப் பதிலாக, பொறுப்புள்ள உறுப்பினர் அவர்களே, இப்படி, இப்படி என்று சான்றால், முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க அனுலமாக இருக்கும். அப்படி இல்லாமல், இல்லாததையெல்லாம் சொல்லி கட்சியை இழிவு படுத்த முனைவது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.*

DR. H. V. HANDE : Sir, I made my point clear and I have explained it in the interests of the adminstration. The Hon. Chief Minister can depute some C.I.D. men and find out how things are. If he does so, I am sure he will get certain information which will be shocking to him.

Secondly, I come to the most important point. Sometime ago in this House a sort of discontent was mentioned by the Hon. Chief Minister. One recent incident related to the C.S.I.R. function to which the Ministers were not invited and another incident related to the function organised by the Refineries in 1968. As regards the first incident the concerned Minister, Tiru Sethi has given a reply that nothing of that sort had happened. I want clarification from the Hon. Chief Minister. I want to know whether the Ministers have not been invited to the function or whether they have not been asked to participate in the function. There is a difference between the two. I presume that the Hon. Chief Minister has been invited but he has not been made a participant and that is his grievance.





*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மந்தியகள் அழைக்கப்படவில்லை என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் கொள்ளுகிற பொருள் என்னவென்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மந்திரிகள் அழைக்கப்படவில்லையென்றால் அவர்கள் ஒரு விழாவில் கலந்து கொள்வதற்கு அல்லது ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு அழைக்கப்படவில்லை என்று தான் பொருள். அதைப் புரிந்து கொண்டிருப்பார் என்று கருதுகிறேன்.*

DR. H. V. HANDE : That is what I said. I only presumed it. That is only my presumption. I do not want to say something which is wrong. In this connection, I wish to draw a corollary. This morning the hon. Member representing Mylapore pointed out that with regard to a particular function she herself was not asked to participate. The Chairman of the Slum Improvement Board stated that she was invited but there was no need to participate in the function. Just as the Hon. Chief Minister or any other Minister feels hurt when he is not invited to participate so also Members feel hurt if they are not invited to participate in the function. The hon. Members belonging to the Communist Party of India has given notice of the following cut motion—

*அமைச்சர்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களைப் புறக்கணித்து அமைக்கப்படும் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்பது பற்றி விவாதிக்க.*

They want that the Members also should be given an opportunity to participate in the functions. Now if the Central Government do not invite the State Ministers to a function, they feel hurt, and the members irrespective of the party affiliation also feel hurt when they are not invited to participate in the functions. So, I want the Chief Minister to give an assurance that whenever a function of the Government or Corporation takes place in a particular constituency, members of that particular constituency should be given an opportunity to participate in it. They should have the feeling of participation. Here it is not a question of good conduct of a member. It is not as if only if a Member behaves well for three months, he would be invited. . .

*அவர்கள் ஒத்துழைப்பு இருந்தால் அதை எல்லாம் பார்த்து பிறகு கவனிக்கப்படும் என்றால்.*

it is not a question of co-operation. It is also not like the Central Government watching the State Government a few months and then giving co-operation.

For instance, before the split of the Congress into two, the State Government did not see eye to eye with the Central Government but on that account it does not mean that the Central Government should not have invited the State Government to participate in their functions. It is the duty of the Central Government to invite the representatives of the State Government for their functions. Similarly Members also should feel a sense of participation. In this connection, I wish to point out that certain functions were cancelled on some members belonging to the ruling party writing to the concerned Ministers to cancel them due to the participation

of an M.L.A. belonging to the Opposition. I want an assurance from the Hon. Chief Minister that such things will not take place in future.

Then I want to stress another important point. We have a feeling that the Governmental machinery is being utilised for propagating party ideals or propagating party image. In this connection, I wish to refer to the Beggar Relief Fund. Rehabilitation of lepers is an excellent movement and I am all praise for the Hon. Chief Minister for association himself with the Beggar Relief Movement. I would have been happier if he had organised the function in a different manner. The ruling party symbol was used for that purpose and the symbol was almost the symbol of the ruling party. A number of Members put a question in regard to it.

"என்ன சார், இதுமாதிரி உதய சூரியன் போட்டு இருக்கிறதே" என்று

It is more or less like the rising sun. I would have been happier if he had made the function purely a governmental one, instead of associating it with his birth day. If it was a Governmental function, it would have been possible for the non-official members also to participate in it, and it would have been a nice thing. I am not saying that the personality cult is being introduced in regard to this matter. It may be that a certain officer would have done it to please the Hon. Chief Minister and it would have been difficult for the Hon. Chief Minister to refuse it. So, I want the Hon. Chief Minister to take an objective view of the matter and see that in future all sections of the people are invited to participate in such functions. Definitely the Beggar Relief Fund is an excellent thing. In fact the rehabilitation of lepers is a good thing and I have nothing against it.

But what I object to is the method of doinv it. On an other occasion I had referred to the Rajamannar Report. Of course, the Chief Minister has always the last word and he could make a humorous remarks and then I am out. What I wish to point out is the manner in which the preamble is put in the report. That is the report of an important Commission and it is going to all States. In fact the Chief Minister asked me what is your party's opinion regarding this report. I put a question and my friend Mr. Thangamani also put a starred question. The Hon. Chief Minister also said that it will be discussed later on, viz, the Rajamannar Committee's report. In the Business Advisory Committee also it was said that another day would be earmarked for the same. In the circumstances, how can I give my party's opinion so soon? It has to be discussed. I only brought the book, the report of the Commission. Just as Sattanathan Commission report is there, this report is also there. It is an official report. I have nothing personal against the Chief Minister. I have great respect for his beautiful handling of several other things. I have great respect for him. But in this Commission report an official report he should have had the guts (I cannot say he does not have the guts), he should have had the will-power to say " I do not want my photo there ". He should have passed such an order. He should have corrected the mistake. If he had done that, I would have very much appreciated it.



Another thing, Members of Legislature want to present some grievance or other to Ministers. But meeting the Ministers is a problem. In fact it is easy to get an interview with the Hon. Chief Minister than with some other Cabinet Ministers. I do not want to make any invidious distinction between members of the Cabinet. We should have opportunities to meet Ministers as far as possible. We write letters to Ministers and we write to Secretaries. I write a number of letters. Whenever I write a letter to a Secretary, pointing out some grievance, I get a reply not from the Secretary, but from the Assistant Secretary and even there it is not signed by the Assistant Secretary but somebody signs for him; probably he may be an upper division clerk. When we write to Hon. Ministers, I am sorry to say we do not get any reply at all. Rarely do we get any reply direct from the Minister. I can count on my fingertips the number of times I got direct reply from the Minister direct. I had written 10 or 12 letters to Ministers.

Let me bring out another point here. Whenever we write to Central Ministers, within 3 or 4 days we get a reply from the Minister concerned. I do not know what is the experience of Thiru K. T. K. Thangamani, who has been an M.P. We get a reply from the Minister that the matter is receiving attention and one or two lines on the matter we have raised is also there in the letter of the Minister. Such a touch on the part of the Minister will give a feeling to the M.L.A. that his point had been taken note of by the Minister and proper action would be taken. Such a thing may be done here also in Fort St. George. That will reduce the number of actual visits by M.L.As. to Ministers. If that practice is adopted here, members will not feel like disturbing Ministers. Personally I rarely go to Ministers, since I have no time. I only write letters. If Ministers concerned give their personal attention to what we write, members will feel satisfied. I believe that the present Chief Minister, who believes in quick disposal of files and papers, would introduce such a practice in Fort St. George, breaking the tradition which has been there for the past 20 years. Even when the Congress was in power this was the practice, if such a thing is done, if as in the Centre, we get reply from Ministers direct, members would feel satisfied. Thank you, Sir.

*திரு. கே. டி. கே. தங்கமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மானியங்கள் 7, 8, 33 ஆகியவை சம்பந்தமாக எங்கள் கட்சியின் சார்பில் பல வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிறோம். நமது சபை முறையின் அடிப்படையில் ஒரு மானியத்திற்கு ஒரு வெட்டுப் பிரேரணையைப் பிரேரிப்பது என்கிற அடிப் படையில் ஒவ்வொரு வெட்டுப் பிரேரணை பிரேரேபிக்கப்பட்டிருந்தாலும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வெட்டுப் பிரேரணைகள் பூராவையும் கொஞ்சம் கூர்ந்து கவனித்து அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

இரண்டு முக்கியமான விஷயங்கள்—ஒன்று தேர்தலைப்பற்றியது. இன்னொன்று—இங்கு இருக்கக்கூடிய அலுவலர்கள், அமைச்சர்கள், அவர்களுடைய நடைமுறைகள், நிர்வாகம் ஆகியவைப்பற்றி இருக்கக்கூடிய விஷயமாக இருப்பதனால் முக்கியமானதாக இருக்கிறது. தேர்தலைப்பற்றி கடைசியில் சொல்வதாக இருந்தாலும் ஒன்றிரண்டை முதலில் சொல்கிறோம்.

முதன்முதலாக 8-வது எண்ணுள்ள மானியத்திற்கு எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். அந்த வெட்டுப் பிரேரணையில் நான் குறிப்பிட்டிருப்பது இன்றைக்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் அவர்கள் ஓய்வுபெறக்கூடிய வயதை அடைந்தபிறகு நிச்சயமாக மேற்கொண்டு அவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கக்கூடாது என்பதாகும். இதை ஆரம்ப முதற்கொண்டே நான் சொல்லி வருகிறேன். அன்றைக்கே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இம்மாதிரி ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கிற நிலை இருக்காது. சிலருக்கு விதிவிலக்கு இருக்கலாம் என்றார்கள். இதுபோல அதிகமாக எங்கு வருகிறதென்றால் வைத்தியத் துறையில் வருகிறது, கல்வித்துறையில் வருகிறது, என்ஜினியரிங் பகுதியில் வருகிறது. இந்தப் பகுதிகளில் எல்லாம் நான் சொல்வது என்னவென்றால் ஓய்வு பெறப்போகிறவர்கள் தங்களுக்கு அடுத்தாற்போல அந்தப் பதவிக்கு வரக்கூடிய ஒருவருக்கு பயிற்சி அளித்துத் தயாரித்திருக்கவேண்டும். அப்படி தயாரிக்காமல் போனால் அந்த இலாக்கா தலைமையினரின் தவறு என்ற முறையில் அவரைக் கண்டிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சில சமயத்தில் வேறு வழியே இல்லை என்று சொல்லலாம். இன்னொரு முறை என்ன ஏற்படுகிறது என்றால் அவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்காமல் ரீ-அப்பாயின்ட்மெண்டு என்று கொடுக்கிறார்கள். இப்படி ரீ-அப்பாயின்ட்மெண்டு என்று போடுகிறபோது லோயர் காடரிலேயே இருக்கவேண்டும். பழைய பதவியைக் கொடுப்பது என்பது அதற்காக தயாராக இருக்கக்கூடிய பலரைப் பாதிக்கிறது என்று சொல்லவிரும்புகிறேன். இப்படி மேலதிகாரிகளைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. நான்காந்தர சிப்பந்திகள் முதற்கொண்டு முதல்தர சிப்பந்திகள்வரை இந்தக் கொள்கை சரியான முறையில் பின்பற்றப் படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முறையாகப் ப்ரமோஷன் கொடுக்காமலும், இரண்டு மூன்று தடவை எக்ஸ்டென்ஷன் கொடுத்த காரணத்தினாலும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு மந்திரி சபையிலேயே நெருக்கடி ஏற்பட்டது என்பது—இங்கிலாந்து நாட்டில்—பலருக்கு ஞாபகம் இருக்கும்.

அந்தமாதிரி இல்லாது முறையாகப் பணியாற்றக் கூடியவர்களுக்கு எல்லாம் சரியான வாய்ப்பும், ப்ரமோஷனும் கொடுக்கப்பட வேண்டும். ஓய்வுபெற்றவரையே திரும்பத் திரும்ப எக்ஸ்டென்ஷன் கொடுப்பது, ரீ-அப்பாயின்ட் செய்வது கூடாது என்பதை நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இரண்டாவது விஷயம் ரெவின்யூ போர்டைப்பற்றியது. ரெவின்யூ போர்டைப் பற்றி மற்ற இலாக்கா மானியத்தின் மீது நான் பேசியிருந்தாலும் இங்கும் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு அங்கே 6 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் கமிஷனர் என்ற பெயர்





கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அவர்கள் அமைச்சர்கள் என்ன செய்கிறார்களோ அதுபோல தமிழ்நாடு பூராவும் சுற்றுப்பயணம் வர ஆரம்பித்து விட்டார்கள். அமைச்சர்கள் வகுத்துத் தருகிற கொள்கை அடிப்படையில் செயலாற்ற வேண்டியவர்கள் என்ற நிலை இல்லாது சூப்பர் மினிஸ்டர்களாக மாநிலம் பூராவும் சுற்றுப்பயணம் செய்துகொண்டு பல விவரங்களைச் சேகரிக்கிறார்கள். சில அறிக்கைகளையும் வெளியிட்டு விடுகிறார்கள். அந்த அறிக்கை அரசாங்கத்திற்கு விரோதமானதாகவும் அமைகிறது. இதற்கு பல உதாரணங்கள் கொடுக்க முடியும். அதைக் குறைத்து, இந்த ரெவின்யூ போர்டை நீக்கக்கூடிய காலத்தில்

When we abolish the Revenue Board I would like the Revenue Board members to be treated as ordinary secretaries

மற்ற செயலாளர்களுக்கு என்ன என்ன அந்தஸ்து கொடுக்கப்படுகிறதோ அதே அந்தஸ்தில் இலாக்காவில் அவர்களை செக்ரடரியாக ஆக்கிவிடலாம். அந்த முறையில் அது வந்துவிடலாம் என்று கருதுகிறேன்.

அடுத்து ஒரு விஷயம்—நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைப்பற்றி சிலவற்றை வற்புறுத்திச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன். நிர்வாகச் சீர்திருத்தக் குழு பஞ்சாயத்துகளில் இருந்து தலைமைச் செயலக நிர்வாகம்வரை எந்த வகையில் புனர் அமைப்புச் செய்யலாம் என்பதைப்பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட குழுவாகும்.

இந்தக் குழுவிலே திரு. வர்கீஸ் தலைவராக இருக்கிறார். அவர் நல்ல அனுபவம் பெற்றவர். அவரை நான் பாராட்டுகிறேன். அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் மத்தியிலே ஒரு ரிபோர்ட் கொடுத்திருக்கிறார்கள். அது ஒரு பெரிய ரிபோர்ட். அதிலே நம் மாநிலம் உட்பட ஒவ்வொரு மாநிலத்திலும் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். மாதம் ஒருமுறையாவது அவர்கள் கூடி எடுத்துக்கொண்ட முடிவுகளைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்தச் சபைக்கு முன்னாலே அதை வைத்து அங்கீகரிக்க வேண்டுமென்று கொடுத்தால் மிக்க உதவிகரமாக இருக்கும். 10—6—71-ம் தேதி, 17—6—71-ம் தேதியிலே கூடினார்கள். பிறகு அவர்கள் கூடினார்களா? ஏதாவது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. நிர்வாகத்தைச் சீர்திருத்துகின்ற குழுவானது அதிலே உன்னிப்போடு இருந்து அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரசாங்கத்தை நடத்துகின்ற குழுவாக திட்டக் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறதே, அது இடைக்காலத்தில் ரிப்போர்ட் ஏதாவது கொடுக்குமா? அல்லது இறுதி ரிப்போர்ட் தான் கொடுக்குமா? அப்படியென்றால் எப்போது கொடுக்கும் என்பதையெல்லாம் அறிய விரும்புகிறோம். இறுதி ரிப்போர்ட் கொடுப்பதற்குள் இடைக்கால ரிப்போர்ட் ஏதாவது கொடுத்தால், நமது ஆலோசனைகளைக் கேட்கக்கூடிய நிலைமை உண்டானால், மிக நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் பணியாற்றக் கூடிய சிறப்பான நிபுணர்கள் திரு. நடராஜன், மால்கம் ஆதிசேஷய்யா போன்றவர்கள் இருக்கிறார்கள். திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் என்னுடைய சென்ற காலத்திய நண்பரும்கூட. அவர் காரியதரிசியாக இருந்தபொழுது எவ்வளவு பெரிய ஸ்தாபனங்களையெல்லாம் உருவாக்கினார் என்பது தெரியும். தமிழனாக இருந்து வெளிநாட்டுக்குச் செல்லக்கூடிய நேரத்தில் எல்லாம் தமிழன் பெருமையை உணர்த்தியிருக்கிறார். அவருடைய சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர்களைப் பொறுத்தவரையில் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். பண்டித ஜவஹர்லால் அவர்கள் பிரதமராக இருந்த பொழுது பாராளுமன்றம் 11 மணிக்கு அல்லது 12 மணிக்குக் கூடுகிறது என்றால், "ஸீரோ அவர்" க்குப் பிறகு ஒரு மணி நேரம் லாபியில் வந்து உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசுவார். பிரதம மந்திரியைப் பார்த்து மற்ற மந்திரிகளும் உறுப்பினர்களுக்கு உதவி செய்கின்ற வகையில் லாபியில் வந்து உறுப்பினர்களிடம் கருத்தறிந்து செல்வார். ' They muust be available for the Members அதாவது உறுப்பினர்களைத்தேடி அமைச்சர்கள் வரவேண்டும். இன்றைக்கு நமக்கு இருக்கும் நிலையில் சிலசமயங்களில் கஷ்டமாகக் கூட இருக்கிறது. அமைச்சர்கள் உறுப்பினர்களைத் தேடிக் கொண்டு வரவேண்டும். அந்த மாதிரியான நிலைமை உருவாக வேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை, தங்களுடைய கோரிக்கைகளை அமைச்சர்கள்முன் வைக்க முடியும்.

நான்கூடப் பார்க்கிறேன், அமைச்சர்கள் லாபியில் வந்தால் மெம்பர்கள் எழுந்து கொண்டு விடுகிறார்கள். இந்தமாதிரி 'காம்ப்ளெக்ஸ்' எல்லாம் இருக்கக்கூடாது. அமைச்சர்களும் லாபியில் வந்து உட்கார்ந்து மெம்பர்களுடன் பழக வேண்டும். நமக்கு இருபக்கங்களிலும் லாபி இருக்கிறது. ஆகவே, ஒருசில அமைச்சர்கள் அந்தப் பக்கத்திலும், ஒருசில அமைச்சர்கள் இந்தப் பக்கத்திலும் லாபியில் வந்து மெம்பர்களோடு உட்கார்ந்து பேசினால், சிறிய சிறிய விஷயங்களையும் சில பிரச்சினைகளைப்பற்றியும் பேசித் தீர்த்துக் கொள்ள முடியும். அதன்காரணமாக, நாங்களும் கொஞ்சம் அதிகமாகவே எதிர்க்கட்சியில் இருந்து நல்ல ஆலோசனைகளையும் சொல்ல முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களை அமைச்சர்கள் சந்தித்தால் நல்லது. ஒவ்வொரு கேபினட் மந்திரியும் எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய முக்கியமானவர்களுக்கு விருந்து கொடுக்க வேண்டுமென்று பிரதம மந்திரி அவர்கள் சொல்லியிருந்தார். இதனால் எதிர்க்கட்சியில் உள்ள முக்கியமானவர்களைச் சந்தித்துப் பழகுவதற்கு நல்ல வாய்ப்பும் வசதியும் ஏற்படும் என்றுதான் அப்படிச் சொல்லியிருந்தார் என்று கருதுகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் அதிகாரிகளைத் தொந்தரவு பண்ணாமல் இருப்பதுதான் நல்லது. சில விஷயங்களிலே கொள்கைப் பிரச்சினை என்றால் போய்ப் பார்க்கலாம். அதிகாரிகளைப் பொறுத்தவரையில் என்ன என்ன முறையில் பண்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சில காலத்திற்கு முன் 'டைரக்டர் ஆஃப் பிஷரிஸ்' சிறந்த அதிகாரியாக இருந்தார். அவரை ஸ்வீடன் நாட்டிற்குப் பயிற்சிக்காக அனுப்பினார்கள். ஆறு மாத காலம் பயிற்சி பெற்றுத்திரும்பினார். இங்கே இருக்கிற பிஷரிஸை எப்படி வளமாக்குவது, என்னென்ன புதிய முறைகளை மேற்கொள்வது என்பதற்காகத்தான் அவரை பயிற்சிக்கு அனுப்பினார்கள். ஆனால் அவர் திரும்பி வந்ததும், அவர் ஜாயின்ட் செக்ரடரியாக இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டிலே போய் உட்கார்ந்து விட்டார். அப்படிப்பட்ட நிலைமையில் அவரை ஏன் பயிற்சிக்கு அனுப்ப வேண்டும்? பயிற்சி பெற்று திரும்புபவரை அந்தத் துறைக்குப் போடாமல், வேறு துறையில் அமர்த்துவதன் காரணம் என்ன? அவரைப் பயிற்சிக்கு அனுப்பியதன் நோக்கம் என்ன? இவ்வாறெல்லாம் காரியங்கள் நடக்கின்றன. இவை இனி நடவாதபடி கவனித்துக்கொள்ள வேண்டும்.





அடுத்து, சர்க்கார் சிப்பந்திகளைப்பற்றியது. இரண்டாவது சம்பளக் கமிஷன் அமுலாகும்போது அதில் இருக்கக்கூடிய 'அனாமலீஸ்' களையெல்லாம் தீர்ப்பதற்காக 'ராகவன் கமிட்டி' போடப்பட்டிருக்கிறது. அதனுடைய முடிவுகள் எப்போது வரப்போகிறது என்று தெரியவில்லை. சிப்பந்திகளுக்கு இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் நிவர்த்திக்க வேண்டுமென்று ஆரம்பத்தில் சொன்னார்கள். அந்தக் கருத்தை மனதில் கொண்டு விரைவில் குறைகளை நீக்க வேண்டும்.

நாம் 9 மணிக்கு இந்தப் பேரவையை ஆரம்பித்து பகல் 1 மணி அல்லது 2 மணி வரை இருந்து பல சாதனைகளைச் சாதிக்க முடிகிறது. ஆகவே, தலைமைச் செயலகத்திலும் வேலையை 9 மணிக்கே ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். குளிர்நாடுகளில் எல்லாம் 8 மணிக்கே வேலை ஆரம்பிக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையினால் நாம் இங்கு 10 மணிக்குச் சாப்பிட்டுவிட்டு, 11 மணிக்கு வந்து தூங்குகிற நிலைமைதான் ஏற்படும். வேலையிலே கண்ணும் கருத்துமாக சிலர் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, பெண்கள் அதிகமாக பொறுப்புணர்ச்சியோடு வேலை செய்கிறார்கள் என்று சில அதிகாரிகள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆண்களும் வேலை செய்கிறார்கள். அதிகாலையில் வேலைக்கு வருவது உதவிகரமாக இருக்கும். அவர்களுக்குத் தேவையான போக்குவாத்து வசதிகளையெல்லாம் போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன் அவர்கள் கவனித்தால் மிக்க நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எம்.பி.எஸ்.சி. பற்றி பல மகஜர்கள் வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றுதான் இதைச் சொல்கிறேன். எம்.பி.எஸ்.சி.-க்கு 25 வயது என்று போட்டிருக்கிறார்கள். அந்த வயது வரம்பை உயர்த்தி 30 வயது என்றாவது ஆக்க வேண்டும். ஒருவருக்கு 25 வயதாகி விடுகிறது என்றால் வேலைக்குப் போக முடியாத நிலைமை ஏற்படுகிறது. 25 வயதுக்குள்ளும் வேலை சரியாகக் கிடைப்பதில்லை. ஆகவே, 25 வயது என்பதை 30 என்ற அளவில் உயர்த்த வேண்டும்.

அடுத்தபடியாக 'வாஞ்சிநாதன்' அவர்களுக்கு ஒரு சிலை வைக்க வேண்டும். அவர் பிறந்த இடத்திலாவது அல்லது எந்த இடத்தில் தன்னுடைய பகைவனை சுட்டுக் கொன்று, தானும் சுட்டுக்கொண்டாரோ அந்த இடத்திலாவது அவருடைய சிலை வைக்கப்படவேண்டும். வாஞ்சிநாதன் வீரமான வாலிபன். இறந்த வீரனுக்கு ஞாபகச் சின்னம் வைக்க வேண்டும். என்னுடைய கட்சியின் தலைவர் மணலி கந்தசாமி அவர்கள் வற்புறுத்தியதைப்போல் மணியாச்சியில் வாஞ்சிநாதனுக்குச் சிலை வைத்தால் சிறப்பாக இருக்கும். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நாம் சொல்வதைக் கொஞ்சமாவது செய்கிற அரசாங்கமாக இது இருக்கிறது. ஆகவே, இதையும் கருத்தில் கொள்ளும் என்பதற்காகவேதான் இதைக் கூறுகிறேன்.

இந்த இரண்டு மானியங்களும் முக்கியமானவை. என்னுடைய ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு, சிறப்பான காரியங்களை அரசு செய்ய இருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான மானியத்திலே பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன். முதலிலே தேர்தலைப்பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நடுநிலைமையான தேர்தல் நடக்க வேண்டும். ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டும், நாட்டில் நல்லாட்சி மலர வேண்டும் என்ற நல்ல கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நல்ல முறையில் தேர்தல் நடத்த வேண்டுமென்றால் என்ன என்ன காரியங்கள் செய்ய வேண்டும், சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்பதைச் சிந்திப்பது உசிதமாக இருக்கும்.

இப்போது தேர்தல் நடந்து முடிந்து, நாம் எல்லாம் பிரதிநிதிகளாக இங்கே இந்த மன்றத்திலே வந்திருக்கிறோம். முன்பெல்லாம் பெண்மணிகள் நிறைய அங்கத்தினர்களாக இருப்பார்கள். இப்போது அவர்களுடைய எண்ணிக்கையானது குறைந்த வருகிற தன்மையைக் காண்கிறோம். பெண்மணிகள் அதிக அளவில் அரசியலிலே ஈடுபடுவதற்கு போதிய வாய்ப்புகள் அளிக்க வேண்டும். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டத்திலே என்னென்ன வழிவகைகளைச் செய்வது என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். எலெக்ஷன் அமைப்பாவது ஒரு நீதிபதியின் அந்தஸ்தில் உள்ளவர்களின் கையில் ஒப்படைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற என்னுடைய ஆலோசனைகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தேர்தலானது என்னென்ன முறையில் நடக்க வேண்டும், அமைச்சர்கள் ஆறு மாதங்களுக்கு முன் ராஜினமா செய்ய வேண்டுமா, செய்ய வேண்டாமா என்பதற்கெல்லாம் பல முறையிலே இந்த மன்றத்திலே சுவையான வாதங்கள் எல்லாம் ஏற்பட்டு, அன்று இருந்த அரசாங்கம் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவித்தது. இன்று இருக்கும் அரசு அதை ஆதரித்தோ, அதற்கு மாறுபாடான கருத்தையோ இன்னும் தெரிவிக்கவில்லை. அது நியாயமான வாதம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். சிறந்த அறிஞர்களும் இதை வலியுறுத்துகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தத் தேர்தலில் நடைபெறுகின்ற முறைகேடுகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால் என்ன என்ன செய்ய வேண்டுமோ அவற்றை உடனடியாகச் செய்தாக வேண்டும். ஓட்டர் ஜாபிதா எல்லாம் பிரசுரம் செய்வதற்கு இருக்கின்ற கால அவகாசம் வேண்டும். ஒழுங்காக நடக்கிறது என்று அதிகாரிகள் சமாதானம் சொன்னாலும், நியாயமாக நடக்கிறதா, ஒழுங்காக நடக்கிறதா என்பதை மனச்சாட்சியின் பெயரால் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வாக்காளர் பட்டியல் எல்லாம் எங்கெங்கு கிடைக்கும் என்பதை நோட்டீசிலே போட்டு விளம்பரம் செய்ய வேண்டும். வாக்காளர் பட்டியல் சரியானபடி கிடைக்கவில்லையென்பதை ஞாபகம் ஊட்டக்கூடியவனாக இருக்கிறேன். பலமுறையும், நாங்கள் அரசியல்வாதிகள், எங்களுக்கு விலைக்காவது வாக்காளர் ஜாபிதாவைத் தாருங்கள் என்று கேட்டால் தேர்தலுக்குச் சில தினங்களுக்கு, ஒன்றிரண்டு தினங்களுக்கு முன்னால்தான் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே யாருடைய பெயர் சேர்க்கப்பட்டு இருக்கிறது, யாருடைய பெயர் நீக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகப் புரிந்து கொள்வதற்குப் போதிய அவகாசம் இல்லாத முறையிலே, விதிமுறைகள் இருந்தாலும் அது நடக்கவில்லையென்பதை நான் இந்த நேரத்தில் குற்றச்சாட்டாக மறுமுறையும் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஜனநாயகப் பண்புகள்பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். வோட்டுச் சீட்டுகள் எல்லாம் கவுன்டர் ஃபாயில் வைத்துக் கொடுக்க வேண்டும். கவுன்டர் ஃபாயிலில் என்ன நம்பர் இருக்கிறதோ அதுவே வோட்டுச் சீட்டிலும் இருக்க வேண்டும். இப்படிச் செய்தால் தவறுகள் நடக்காது, கள்ள ஓட்டுக்கள் போடுகின்ற நிலைமையைத் தவிர்க்க முடியும். ஐடன்டிபிகேஷன் கார்டு வேண்டுமா, போட்டோ வேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் இந்த அரசாங்கம் யோசிக்க வேண்டும். மத்திய அரசாங்கம் என்ன செய்வார்களோ தெரியவில்லை, ஒரு வேளை அவர்கள் மாகாண அரசாங்கத்தைக் கேட்பார்கள். அப்படிக் கேட்கிற போது நல்ல ஆலோசனைகளை நம்முடைய அரசாங்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புரப்போர்ஷனல் ரெப்ரஸன்டேஷன் வேண்டுமென்று இந்த மன்றத்திலே பலமுறைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் எ. கே. சுப்பையா என்று நினைக்கிறேன், அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த மாதிரியான நல்ல அமைப்பு பொருத்தமாக இருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இங்கே எதிர்க்கட்சியாக இருந்தபொழுது புரப்போர்ஷனல் ரெப்ரஸன்டேஷன் பொருத்தமாக இருக்கும் என்று தீவிரமாக வாதாடினார்கள். இப்பொழுது அந்த அதிகாரப் பொறுப்பு, ஆட்சிப் பொறுப்பு உங்கள் கையிலே இருக்கிறது. இதைப் புனராலோசனை செய்து முடிவெடுப்பதற்குள்ள பெரும்பான்மை உங்களுக்கு இருக்கும்பொழுது உடனடியாக இதைச் செய்வதற்கு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றைய டிமாண்டுகளிலே செல்லலாம் என்று நினைக்கிறேன். அமைச்சர்களும் உறுப்பினர்களும் என்ன என்ன முறைகளிலே பழகவேண்டும், அவர்களுடைய மனுக்களையெல்லாம் என்ன என்ன முறையிலே பரிசிலனை செய்ய வேண்டுமென்ற நல்ல கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் இங்கே எடுத்துக் கூறினார்கள். இவையெல்லாம் நல்ல முறையிலே ஆலோசிக்கப்படவேண்டும். அந்த வகையிலே ஒன்றிரண்டு அபிப்ராயங்களை என்னுடைய கருத்தாகக் கூறுவதற்காக நான் நிற்கிறேன்.

அமைச்சர்களுடைய தொகுதிகளுக்கு அதிகமாகப் பணத்தைச் செலவழிக்கிறார்களோ என்ற ஐயப்பாடு எங்களுக்கு இருக்கிறது. ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு நியதி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு நியதி என்ற மனப்பான்மை இருப்பதாகத் தெரிகிறது, எங்கள் பகுதியிலே. அப்படி ஒரு ஐயப்பாடு ஏற்படாத முறையிலே எல்லாப் பகுதிகளையும் கண்காணிக்கக்கூடிய முறையிலே அந்தப் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பெரிய பெரிய தொழில்களானாலும்சரி, மற்றவைகளானாலும்சரி குறிப்பிட்ட பகுதிகளுக்குத்தான் அவை கொடுக்கப்படுகின்றன. கிடைத்தவனுக்கு அதிகமாகக் கிடைக்கிறது, கிடைக்காத பகுதிக்கு ஒன்றுமில்லை என்ற நிலைமையில் இல்லாமல் எல்லோருக்கும் சம நீதி என்ற முறையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்திலிருந்து நடத்தப்படுகின்ற விழாக்களில் அந்த அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-க்களும் கலந்துகொள்ளச் செய்யவேண்டும். அவர்கள் விரும்பினால் பொது நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளச் செய்யலாம். கட்சி நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளச் செய்யவேண்டுமென்ற கருத்தை நான் கூறவில்லை.

பல கமிட்டிகள் இருக்கின்றன, தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன, அவற்றிற்குப் பல கமிட்டிகள் போடுகிறார்கள். அதிகாரத்திலேயிருக்கிற ஆளுங்கட்சிக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுகிறது. எங்களுடைய ஜில்லாவிலே கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. அதற்கு நான் தலைவராக இருந்திருக்கிறேன். அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். இன்னும் இருக்கிறார்கள். ஆனால் இன்று எந்தக் கமிட்டியைப் பார்த்தாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள்தான் இருக்கிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேண்டுமானால் தேர்தல் முறை வைத்துத் தேர்ந்தெடுத்தால் நாங்கள் ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். நாங்கள் ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆகையால் ஷேர்ஹோல்டர்களை வைத்துத் தேர்ந்தெடுத்துவிட்டால் அதை நாங்கள் பாராட்டுவோம், அதற்குத் தலைவணங்குவோம். நியமன அதிகாரம் அரசாங்கத்திடம் இருப்பதால் அவர்களுக்கு மட்டும் இதுபோன்ற பிரதிநிதித்துவ வாய்ப்புக்களை அளிப்பதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டேட் பிளானிங் கமிஷன்பற்றியெல்லாம் விரிவாக டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் என்னவாக இருக்கவேண்டுமென்பதைப்பற்றியெல்லாம் இங்கே பலர் பேசினார்கள். ஸ்டேட் பிளானிங் கமிஷன் என்ன என்ன காரியங்களைச் செய்திருக்கிறார்கள், சிறந்தவர்கள் அதிலே நியமனம் பெற்றிருக்கிறார்கள், அவர்களுடைய திறமைக்கும் ஆற்றலுக்கும் தலைவணங்குகிறோம். அவர்கள் என்ன என்ன வேலைகள் செய்திருக்கிறார்கள், மத்திய பிளானிங் கமிஷனோடு எந்த எந்த வகையிலே தொடர்பு கொண்டிருக்கிறார்கள், அவர்கள் ஏதாவது பரிந்துரை அனுப்பியிருக்கிறார்களா என்பதைப்பற்றியெல்லாம் இந்த மன்றத்திற்கு ஒரு ஆய்வுரை அளித்தால் நல்லதாக இருக்கும்.

இரண்டாவது சம்பளக் குழுவினால் சிப்பந்திகளுக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று பலரும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகப் புதிதாக வேலையில் சேர்ந்தவர்களுக்கு இருந்தாலும், நீண்டநெடுங்காலமாக இலாகாக்களில் பணியாற்றியவர்களுக்குப் போதிய ஊக்கம் இல்லை. வேண்டுமானால் புனராலோசனை செய்வதற்கு ராகவன் கமிஷன் இருக்கிறது என்று சொல்லலாம். அவர்கள் துரிதமாக இதைச் செய்தால்தான் தலைமைச் செயலகம் நல்ல முறையிலே இயங்கும்.

மத்திய அரசாங்கம் ஒரு விதமான பே ஸ்கேல்லை வைத்திருக்கிறது, நம்முடைய அரசாங்கம் ஒரு விதமான பே ஸ்கேல்லை வைத்திருக்கிறது. மத்திய அரசாங்கம் நம்மைக் கேட்காமல் உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள், பே மட்டுமல்ல, அலவன்ஸ் போன்றவற்றை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நம்முடைய அதிகாரிகளிடையே மனத்தாங்கல் ஏற்பட்டுக் கொண்டிருக்



கிறது. ஒரே வேலை செய்யும் அதிகாரிகளுக்கு இரண்டுவிதச் சம்பளம் கொடுப்பது சரியல்ல. இதைப்பற்றி நந்த அரசோடு மத்திய அரசு தொடர்பு கொண்டு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செகரட்டரியேட்டிலே பணியாற்றுகிறார்கள். இரவுக் காலங்களிலே அவர்கள் வேலை செய்யக்கூடிய கஷ்டம் இருக்கிறது. குறிப்பாக பெண்கள் வேலை செய்கிறார்கள், அவர்கள் திரும்பிச் செல்வதற்கு பஸ்கள் செல்வதற்குக் கஷ்டம் இருக்கிறது. ஆண்கள் வேலை செய்வதைப்பற்றி ஆட்சேபணையில்லை, இரவு நேரங்களில் பெண்கள் கூடிய மட்டும் வேலை செய்யாத அளவில் நேரத்திலேயே அவர்கள் போவதற்கு அனுமதி வழங்குவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திருமதி அனந்தநாயகி அவர்கள் அதிகாரிகள் இடம் மாற்றப்படுவதைப்பற்றியெல்லாம் குறிப்பிட்டுக் கூறினார்கள். அதுமாதிரி மாவட்ட அளவிலேயும் இருக்கின்ற நிலையில் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் அந்தப் பகுதியிலே பணியாற்றக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். ஒருவேளை அவர்கள்மீது கரப்ஷன் சார்ஜஸ் அல்லது வேறு சார்ஜஸ் இருந்தால் அவர்களை மாற்றுவதில் ஆட்சேபணையில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒரு பகுதிக்கு வந்தால் குறிப்பிட்ட காலமாவது அங்கே இருந்து பணியாற்றினால்தான் பல நல்ல காரியங்களைச் செய்யமுடியும். அடிக்கடி இடம் மாற்றப்படுவதால் அவர்கள் நல்ல காரியங்களைச் செய்வதற்கு தடையேற்படும். எக்ஸ்டென்ஷன் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். 55-வது வயதிலே ஓய்வுபெறவேண்டுமென்று விதியிருக்கிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஒரு காரியதரிசிக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஒரு அதிகாரியினுடைய Service is indispensable to the Government என்ற முறையில் இருக்கக்கூடாது. அதேமாதிரி அதிகாரிகள், தகுதிவாய்ந்த திறமையுடைய வேறு அதிகாரிகள் இருக்கலாம். வேண்டுமானால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அப்படிப்பட்ட இடங்களில் போடுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அதுவும் மிகவும் பொறுப்பு வாய்ந்த இந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்ற இம்மாதிரி இடத்திலே இருப்பவர்களெல்லாம் நல்லவர்களாக இருக்க வேண்டுமென்ற நியதியை இந்த அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும்.

அதுமாத்திரமல்லாமல், இன்றைக்குப் பலருக்கும் உத்தியோக உயர்வு கொடுப்பதில் எக்ஸ்டென்ஷன்கள் கொடுப்பதால் சங்கடங்கள் இருக்கின்றன. டெக்னிக்கல் எக்ஸ்பர்ட்ஸ், மெடிகல் எக்ஸ்பர்ட்ஸ் இருக்கலாம், அவர்களுக்கு இந்த எக்ஸ்டென்ஷன்கள் கொடுப்பதைப்பற்றி ஆட்சேபனை இல்லை, பொதுவாக இந்த இலாக்காக்களிலே பணியாற்றுகின்ற பெரிய அதிகாரிகளுக்கு எக்ஸ்டென்ஷன்கள் கொடுப்பது பொருத்தம் அல்ல என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைக் கூற வேண்டுமென்று விரும்புகிறேன். பொதுவாக, இந்த நம்முடைய செல்ட் நாவலஸ் போன்ற அளவிலே பல கருத்துக்கள், வெட்டுப்பிரேரணைகள் மூலம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. "தமிழகத்திலே" இடம் போதாது, அதிக வசதியைப் பெருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது.

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டங்களுக்கும், அதனுடைய கமிட்டிகளுக்கும் வாங்கப்பட்ட ஒரு ஸ்தாபனம், அதிலே இன்னும் நமக்குத்தான் பிரையாரிட்டி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேறொரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். ரிசர்வேஷன் செய்வதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. குறிப்பாக ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். தேர்தல் காலத்திலே நாங்கள், குழித்துறையிலே இருக்கிற ரெஸ்ட் ஹவுசிலே ஒருநாள் எங்கள் தலைவர், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. காமராஜ் அவர்களுக்குப் பகல் நேரத்திலே அங்கே தங்க இரண்டு நாட்களுக்கு முன்பு ரிசர்வேஷன் செய்தோம். அது தேர்தல் நேரம். என்னை எதிர்த்து நின்ற ஒரு அபேட்சகர், கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் அங்கு வந்து தங்கப் போகிறார்கள் என்ற தகவலைக் கொடுத்து அந்த ரிசர்வேஷனைக் கேன்சல் செய்தார்கள். அதுமாத்திரமல்ல, அந்த நாளில் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் அங்கே வரவேயில்லை. கலெக்டருக்குப் புகார் செய்தோம், அந்த அதிகாரிகளிடத்திலே புகார் செய்தோம் இம்மாதிரிச் சங்கடங்கள் ஏற்படாத வகையில், இம்மாதிரி அமைச்சர்கள் அங்கே தங்க வந்தால் பிரைவேட் செக்ரடரி அபேட்சை கொடுக்கலாமே தவிர, அவர்களுக்குப்பதில் இன்னொரு நபர் கொடுப்பது நியாயமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் எங்கள் தலைவரை அங்கே அழைத்துச் சென்றபொழுது உங்களுடைய ரிசர்வேஷன் கேன்சலாகியிருக்கிறது என்ற வார்த்தைகள் எங்கள் காதுகளுக்கு எட்டியது. இம்மாதிரி எங்கள் மனம் புண்ணாகும்படி அதிகாரிகள் நடக்கிறார்கள். அதைச் சற்றுக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு வேளை சில்லறை விஷயமாக அற்ப விஷயமாக இருக்கலாம். ஆனால் இதிலேயிருக்கும் அரசியல் வேற்றுமை அகற்றப்படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நல்லவர்கள், நல்ல வழிவகைகளை வகுப்பார்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமுமில்லை.

அடுத்து, பொதுவாக இம்மாதிரிச் சட்டசபை உறுப்பினர்கள் கொடுக்கின்ற எல்லா விண்ணப்பங்களுக்கும், முன்பே கூறினேன், காலாகாலத்திலே உடனடியாகப் பதில் எழுத ஒரு வரையறை வைக்க வேண்டும், இப்பொழுதும் இருக்கிறது, ஆனால் அதை அமல் நடத்துவதிலே உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று நான் கோருகிறேன்.

இன்னும் பல காரியங்கள் இருக்கின்றன. மந்திரிகள் போகும்பொழுது மற்றவர்களுக்குப் புரோகிராம்கள் ஒழுங்காக வருகிறதா என்றெல்லாம் கேட்கிறார்கள். எங்களுக்குச் சில நேரங்களில் மந்திரிகள் வந்துபோன பிறகுதான் புரோகிராம் வருகிற நிலைமை ஏற்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். இம்மாதிரிக் காரியங்களில் அதைத் தவிர்க்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தேர்தலைப்பற்றி ஒரு விஷயம். நான் முன்பே கூற மறந்து விட்டேன். அதாவது பத்து நாட்களுக்குப்பிறகு என்னும் சம்பிரதாயத்தை அறவே ஒழிக்க வேண்டும். எப்படிப் பஞ்சாயத்துத் தேர்தல்களிலே, பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தல்களிலே உடனடியாக எண்ணப்பட்டுச் சொல்வதைப்





பார்க்கிறோம், அதனால் எந்தவிதமான பூசலோ, கலவரமோ ஏற்பட்டு விடவில்லை. அதேபோல் இந்தத் தேர்தல்களிலேயும் இந்த முறையைக் கையாள்வது பொருத்தமாகயிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் எதிர்க்கட்சிகளை நியாயமான முறையிலே நடத்த வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி, எங்கள் தொகுதியிலே இருக்கின்ற அத்தியாவசிய வேலைகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர், அமைச்சர்கள், தேர்தல்கள், அரசு அலுவலாளர்கள் என்கின்ற தலைப்பில் மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய செழுமிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் ஜப்பார் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் நல்ல செய்தி ஒன்றுக்காக நாங்களெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறோம், ஆவலோடு அமர்ந்திருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். அந்த நல்ல செய்தியை அடுத்த மானியத்தில் நாவலர் அவர்கள் சொல்லுவார்கள் என்று நான் கருதுகின்றேன். ஆகவே, ஜப்பார் அவர்களைப் போன்ற உறுப்பினர்களெல்லாம் இன்றைக்கு அதிகமான தாக்குதலிலே ஈடுபடாததற்குக் காரணமேகூட அந்த நல்ல செய்தியை எண்ணித் தானோ என்னவோ எனக்குப் புரியவில்லை.

ஆகை இங்கே பேசிய அனைத்துக் கட்சினுடைய தலைவர்களும், எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும், எடுத்துச் சொல்லியிருக்கின்ற கருத்துக்கள் எதுவாயினும் அவற்றை நாங்கள் மேலும் சிந்தித்துப் பார்த்து, எவையெவைகளை நடைமுறைப்படுத்தலாம் என்பதையும், எவையெவைகளைத் தீவிரப்படுத்தலாம் என்பதனையும் பார்த்து நிச்சயமாகச் செயல்படுத்துவோம் என்கின்ற உறுதியினை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் 1967-இல் எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கியதிலிருந்து இதுவரையில் மற்றக் கட்சிகளை மதிக்கின்ற தன்மையிலேதான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுத்திட இயலாது. இங்கே முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு முதல் உரை ஆற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எங்களுடைய வெற்றிக்கும் உங்களுடைய தோல்விக்கும் என்ன காரணம் தெரியுமா என்று கேட்டுவிட்டு, அப்பொழுதும் மிகுந்த பெருந்தன்மையோடு சொன்னார்கள், நீங்கள் எண்ணிக்கையிலே குறைந்திருந்தாலும் நீங்கள் இந்தியாவை ஆளுகின்ற கட்சியாக இருக்கிறீர்கள், நாங்கள் தமிழகத்தைமட்டும் ஆளுகின்ற கட்சியாக இருக்கிறோம், நீங்கள் இங்கேதான் எதிர்க்கட்சி, ஆனால் அனைத்திந்தியாவில் ஆளும் கட்சி என்று குறிப்பிட்டுவிட்டு, தன்னுடைய பெருந்தன்மையைக் காட்டிவிட்டு, எங்களுடைய வெற்றிக்குக் காரணம் நாங்கள் மாற்றாரை மதிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறோம், ஆனால் நீங்கள் எங்களை மதிக்கத் தவறுகிறீர்கள், இதுதான் நம்முடைய வெற்றி தோல்விகளின் இரகசியம் என்று குறிப்பிட்டார்கள்.

அவர்களுடைய வழிநின்று மாற்றுக் கட்சிகளிலேயுள்ளவர்கள் யாராக இருந்தாலும், சொல்லுகின்ற கருத்து என்னவென்பதைச் சிந்தித்துப் பார்ப்பதிலே நாங்கள் கவனம் செலுத்துகிறோமேயல்லாமல், இது யார் சொல்லுகின்ற கருத்து என்று எண்ணிவிடாமல் செயல்பட்டு வருகிறோம் என்பதற்கு நூற்றுக்கணக்கான சான்றுகளை இந்த நான்கைந்தாண்டுக் காலத்திலே இந்த நாடு நன்கறிந்திருக்கிறது, நமது மன்றத்திலே இருக்கிற நீங்களும் வெகு தெளிவாக உணர்ந்திருக்கின்றீர்கள்.

அனைத்துக் கட்சியினரையும் பொதுவான விஷயங்களில் கலந்து கொள்ள வேண்டுமென்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு சுதந்திராக் கட்சியின் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் போன்றவைகளிலே எல்லாக் கட்சிகளுக்கும் நல்ல பங்கினைத் தந்திருக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டி, ஏதோ போடப்பட்ட அட்டையில் சூரியன் இருந்த காரணத்தினால் அது ஒருவேளை அவர்களுடைய கட்சியின் தேர்தல் சின்னமோ என்று நினைக்கத் தோன்றுகிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இப்படியே வளர்ந்து கொண்டுபோனால் வானத்திலேகூடச் சூரியன் இருக்கக்கூடாது என்ற அளவிற்கு வாதம் முற்றிவிடுமோ என்னவோ என்று அஞ்சுகின்றேன். அதிலே போடப்பட்டிருக்கும் படம் உதயசூரியன் அல்ல. எப்பொழுதுமே துன்பத்தைக்காட்ட இருளையும், துன்பத்திலேயிருந்து மீளுகின்ற மார்க்கத்தைக் காட்ட ஒளியையும் காட்டுவதுதான் வழக்கமாயிருந்து வருகிற ஒன்றாகும். உடனே டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லலாம், ஒளி காட்ட நட்சத்திரத்தைப்போடக் கூடாதா என்று. நட்சத்திரங்கள் சில சமயங்களில் விழுந்துவிடுவதைப் பார்க்கின்றோம், வால் நட்சத்திரங்களெல்லாம் இருக்கின்றன, ஆகவே நட்சத்திரத்தைப் போட்டால் இது எந்த நட்சத்திரம் என்று தவறாகப் புரிந்துகொள்வார்களோ என்பதற்காகத்தான் . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: நட்சத்திரங்களில் துருவ நட்சத்திரமும் இருக்கிறது, அது என்றைக்கும் விழாது, ஒளிவிட்டுக்கொண்டே இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: துருவ நட்சத்திரமும் இருக்கிறது, சில துறுதுறு நட்சத்திரங்களும் இருக்கின்றன. ஆகவேதான் இருளைக் கிழித்துக் கொண்டு ஒளி உலகத்திற்கு மனிதன் பிரவேசிக்கிறான், ஏழைகளின் வாழ்விலே ஒளி ஊடுருவுவதாக இருக்க வேண்டுமென்ற கருத்தில் பல்வேறு சித்திரங்களைத் தீட்டுகின்ற நேரத்தில்அந்த ஓவியர் தந்ததில் தத்துவ ரீதியாக நல்லமுறையில் அந்தச் சித்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டதேயல்லாமல் இதிலே உதய சூரியன் படத்தைப்போட்டுத்தான் அல்லது உதய சூரியனாக இல்லாவிட்டாலும் அதைப் போன்ற தோற்றத்தைப் போட்டுத்தான் எங்களுடைய கட்சியை வளர்க்க வேண்டுமென்ற எண்ணம் கிஞ்சித்தும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் திரு. ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொல்லுகின்றவரையில் அந்த நினைவுகூட யாருக்கும் எழவில்லை.

பொதுவாக, இந்த ஆட்சியினர் கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் கட்சி மாறுபாட்டோடு பணியாற்றி வந்திருக்கிறார்களா என்பதைச் சில விவரங்களை நான் சொல்லுகிற நேரத்தில் நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



இங்கே, மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற விழாவுக்கு அம்மையார் அவர்கள் அழைக்கப்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் சில தொகுதிகளில் நடைபெறுகிற விழாக்களில் அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படாமல் இருப்பது கடந்த சில ஆண்டுக் காலமாகவே இருந்து வருகின்ற ஒன்றாக இருக்கிறது.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இன்றைய தமிழக ஆளுநராக இருக்கும் திரு. கே. கே. ஷா அவர்களை அழைத்து டொம்மிக் குப்பம் என்ற இடத்தில் ஒரு விழா நடைபெற்ற நேரத்தில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அரங்கண்ணல் அவர்கள் அந்த விழாவுக்கு அழைக்கப்படவில்லை. அரங்கண்ணல் அவர்களே எடுத்துக் காட்டியதுபோல் வட சென்னையில் நடைபெற்ற மற்றொரு அடிக்கல் நாட்டு விழாவுக்கு அந்தத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் அழைக்கப்படவில்லை.

சென்னையைத் தவிர மற்ற இடங்கள் எல்லாவற்றிலும் நடைபெறுகிற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அந்தத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்கப்படுகிறார்கள், கலந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள்கூட நான் கன்னியாகுமரி சென்றபோது தோவாளை பகுதியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொள்ளும்படி அழைக்கப்பட்டு அவருடைய பெயர்கூடப் போடப்பட்டிருந்தது. ஆனால் அவர் வரவில்லை. அவர் சட்டமன்றத்திற்கு வந்தபோது 'ஏன் வரவில்லை?' என்று கேட்டேன். 'உடல் நலமில்லை, அவசரமான வேலை' என்று தன்னுடைய வரமுடியாமைக்குக் காரணத்தை எடுத்துச் சொன்னார்கள், இப்படி எதிர்க்கட்சிக்காரர்கள், மாற்றுக் கட்சிக்காரர்கள் அரசாங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று நாங்கள் யாரும் கண்டிப்பாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் காட்டியதுபோல் நானும் பழைய காலத்தில் நடந்த ஒன்றிரண்டைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1962-ல் இருந்து 1967 வரை ஐந்தாண்டுக் காலம் நான் தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது தஞ்சையில் நடைபெற்ற எந்த நிகழ்ச்சிக்கும் நான் அழைக்கப்பட்டது கிடையாது. எந்த நிகழ்ச்சியிலும் பங்கு பெற வாய்ப்புக் கொடுத்தது கிடையாது. 1957—62 வரை குளித்தலைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது ஒரு பிளாக் நிகழ்ச்சியில் என்னுடைய பெயர் போடப்பட்டதற்காக அன்றைக்கு இருந்த ஒரு அமைச்சர் அந்த பிளாக் அதிகாரியை அந்த ஊரைவிட்டு மாற்றிவிட்டு அந்த நிகழ்ச்சி நடைபெறும் நாளையே ஒத்தி வைத்துவிட்டு, அந்த நிகழ்ச்சியில் என் பெயரை இணைக்காமல் நடத்தினால்தான் தான் வருவேன் என்று கூறி அதற்குப் பிறகு அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. தஞ்சையில் போடப்பட்ட மருத்துவமனை ஆராய்ச்சிக் குழுவாக இருந்தாலும்சரி, ஆலோசனைக் குழுவாக இருந்தாலும்சரி இப்படிப்பட்ட குழுக்களில் எல்லாம் என்னுடைய பெயர் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. என் பெயர் மாத்திரமல்ல; அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நாவலர் அவர்களைக்கூட அன்றைக்கு நடைபெற்ற எத்தனையோ விழாக்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில்கூட அழைக்கப்படாமல் இருந்திருக்கிறார்கள்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் படத்தைப்பற்றிச் சொன்னார்கள். இவ்வளவு நாளைக்குப் பிறகும் அந்த எரிச்சல் இன்னும் அடங்கவில்லை. என்றாலும் ஒரு மகிழ்ச்சி. அடிக்கடி ராஜமன்னார் குழு புத்தகத்தை எடுத்துப் பார்க்கிறார், படிக்கிறார் என்பதில் ஒரு தனி மகிழ்ச்சி இல்லாவிட்டால் அந்தப் படமானது அவர்களை உறுத்திக் கொண்டே இருக்காது. அவருக்கு ரொம்பச் சங்கடமாக இருந்து கொண்டிருக்கிறது. தயவு செய்து அந்தப் பக்கத்தையே கிழித்து எறிந்து விடட்டும். இல்லையென்றால் கொஞ்சம் கரியை எடுத்துப் பூசி தன்னுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளட்டும். அப்படிச் செய்தால் ஒரு சவுக்கு அல்ல, இன்னும் பல ஆயுதங்கள் பரிசளிக்கப்படலாம். சட்டமன்றத்தில் நாங்களும் அன்று பணியாற்றினோம். பாராட்டப்படும் நேரத்தில் பண்போடு பாராட்டவேண்டும்; பரிசுகள் பண்பாடு வாய்ந்தவையாக இருக்கவேண்டும். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் நாவலர் அவர்களோ, நானோ, இன்றைக்குப் போலைத் தலைவராக இருக்கின்ற தாங்களோ கடுமையாகப் பேசியதைவிட இன்றையதினம் யாரும் பேசுவதாக எனக்குத் தோன்றவில்லை. அப்போதெல்லாம் எந்தச் சவுக்கும், தார்க்குச்சியும் பரிசாக யாராலும் அளிக்கப்படவில்லை. இன்றையதினம் அமைச்சர்களை ஓட்டுவதற்காக, அதட்டுவதற்காக, விரட்டுவதற்காக, ஏற்ற வகையில் சிலருக்குச் சவுக்குகளும், தார்க்குச்சிகளும் பரிசாகத் தரப்படும் அளவுக்குத் தமிழ் நாட்டின் மரபு நம்மையும் அறியாமல் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் படத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் உள்ளபடியே மிகவும் வருத்தப்படுகிறேன். அந்தப் படம் மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தி இருக்குமானால் அந்தப் படத்தை வெளியிட்டதற்காக உள்ளபடியே வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் படம் போடப்பட்டது அவர் சொன்னது போல் எனக்குத் தெரியாத ஒன்றுதான். அமைச்சர்களிடத்தில் புத்தகத்தைக் கொடுத்த நேரத்தில் படங்கள் இல்லை. அவசரமான பிரதி என்ற அளவில் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு புத்தகத்தை முழுமையாக வெளியிட்ட நேரத்தில் அந்தப் படம் இருந்திருக்கிறது. அதிலே படம் இருக்கும் காரணத்தால், ஒரு வரலாற்றுச் சிறப்பு மிகுந்த அறிக்கையிலே படத்தை வெளியிட்ட காரணத்தால் நாங்கள் எல்லாம் விளம்பரம் செய்து கொள்ளுவதற்காக இருக்கிறோம் என்று எண்ணுவது தவறு. நாங்கள் அரசாங்கத்தில் இல்லாவிட்டாலும் இதைவிட விளம்பரத்தைப் பெறும் அளவுக்குத்தான் இங்கு வீற்றிருக்கும் அத்தனை பேரையும் இந்த நாட்டு மக்கள் வைத்திருந்தார்கள் என்பதை ஆணவத்தோடு அல்ல, கர்வத்தோடு அல்ல, தாயன்புடன் இந்த நாட்டு மக்கள் வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள உள்ளபடியே பெருமைப்படுகிறேன்.

மாற்றுக் கட்சியினரை எவ்வளவு அரவணைத்துக் கொண்டு செல்லுகிறோம் என்பதற்கு ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மன்றத்தில் இருந்த கோமதிசங்கர தீட்சிதர் என்ற பெரியவரை நாங்கள் எங்கள் தந்தையைப்போல் பாராட்டி இருக்கிறோம். அவருடைய 80-வது பிறந்த நாள் விழாவுக்காக முதலமைச்சர் என்ற முறையில் ஒரு பாராட்டு விழா ஏற்பாடு செய்து, பொன்னாடை போர்த்தி, நிகழ்ச்சியைப் பெரிய விழாவாக்கி எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து கொள்ளச் செய்து, அனைவரையும் பாராட்டை வழங்கச் செய்து, செய்திப் படமாக எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது. இந்த மன்றத்திலேகூட அவருடைய 80-வது பிறந்த நாளன்று அனைவராலும் பாராட்டுரை தரப்படுகின்ற அளவுக்கு மற்ற நிகழ்ச்சியைக்கூட ஒத்திவைத்து அவருடைய பிறந்த நாள் விழாவைக் கொண்டாடியிருக்கிறோம். அது மாத்திரமல்ல, அவர் இந்த முறை தேர்தலில் நிற்கவில்லையென்றாலும் அங்கு நின்று வெற்றிபெற்று வந்த திரு. சங்குமுத்துத் தேவர் அவர்கள் என்னைச் சந்தித்து தியாகிகளுக்குத் தரப்படுகிற பென்ஷன் அவருக்குத் தரப்பட வேண்டுமென்று கேட்டார். உடனடியாக தியாகிகளுக்குத் தரப்படுகின்ற பென்ஷன் அவருக்குத் தரப்பட வேண்டுமென்று உத்தரவு போட்டேன். உத்தரவு போட்ட பிறகு அதிகாரிகள் கலெக்டரிடமிருந்து ரிப்போர்ட் கேட்கவேண்டாமா என்று கேட்டார்கள். நான் உத்தரவு போட்ட பிறகு கலெக்டரிடமிருந்து ரிப்போர்ட் தேவை இல்லை, என்று கூறி உடனடியாகப் பணத்தை அனுப்பும்படி கூறினேன். அவர் நீண்ட காலம் இருப்பதற்கு நாம் கொடுத்து வைக்கவில்லை. அந்த நல்ல தியாகியை நாம் இழந்தோம். நேற்றையதினம் திரு. சங்குமுத்துத் தேவர் அவர்களும் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் என்னைச் சந்தித்து—உறுப்பினர்கள் என்னைச் சந்திப்பதே இல்லையென்று சொல்லுகிறார்கள்—அவருடைய குடும்பத்தாருக்கு இந்தப் பென்ஷன் தொகையைத் தரவேண்டுமென்று கேட்டார்கள். இப்போது இருக்கும் முறைப்படி அவருடைய மனைவி உயிருடன் இருந்தால் தரலாம்; இருந்தாலும் அவருடைய மகன் இருக்கிறார்; அந்தப் பென்ஷன் தொகை அவருடைய மகன் காலம்வரையில் கொடுங்கள் என்று நேற்றையதினம் ஆணைபோட ஒப்புதல் அளித்திருக்கிறேன். இதிலே எதிர்க்கட்சி, சொந்தக் கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு இவை எல்லாம் ஆதாரம் என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

1966-ம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பழைய அரசு ஒரு முடிவு எடுத்து ஒரு ஆணை பிறப்பித்தது. 28—9—1966-ல் இருந்து பழைய அரசியல் தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி 1966-ல் பென்ஷன் பெற்ற நபர்கள் எண்ணிக்கை 6 பேர். 1967-ல் 1,254 காங்கிரஸ்காரர்கள் பென்ஷன் பெற்றிருக்கிறார்கள். 1968-ல் 1,817 பேர் பெற்றிருக்கிறார்கள்; 1969-ல் 1,742 பேர் பென்ஷன் பெற்றிருக்கிறார்கள்; 1970-ல் 1,914 பேர் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு 30—4—1971 வரை 257 பேர் பெற்றிருக்கிறார்கள். மொத்தம் 6,983 காங்கிரஸ் தியாகிகள், அரசியல் தியாகிகள் இதுவரை பென்ஷன் பெற்றிருக்கிறார்கள். மாதந்தோறும் ஒருவருக்கு 50 ரூபாய் வீதம் உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால் 1966—67-ல் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலத்தில் செலவானது ரூ. 3,057. அவர்கள் தொடர்ந்து ஆட்சியில் இருந்திருப்பார்களானால் மேலும் தந்திருப்பார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் நாங்கள் வந்த பிறகு அதை நிறுத்த வேண்டுமென்றால் நிறுத்தியிருக்க முடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாங்கள் அப்படி நிறுத்தக்கூடாது என்பதை மனதில் எண்ணி மிகுந்த பெருந்தன்மையோடு இந்தத் தியாகிகளை எல்லாம் மதிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு 1967—68-ல் பதினொரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாயும், 1968—69-ல் இருபத்தி ஐந்து லட்சத்து அறுபத்தி ஒன்பதாயிரம் ரூபாயும், 1969-70-ல் முப்பத்தி இரண்டு லட்சத்து அறுபத்தி ஆறாயிரம் ரூபாயும், 1970—71-ல் நாற்பத்தி ஏழு லட்சத்து எழுபத்து நாலாயிரம் ரூபாயும்

[திரு. மு. கருணாநிதி] [1971 ஜூலை 16

இந்தத் தியாகிகளுக்காக அரசு செலவழித்து வருகிறது. காங்கிரஸ் தியாகிகளுக்கு இந்த அரசு அளிக்கின்ற பென்ஷன் என்ற முறையில் வழங்கி வருகிறது என்பது ஒன்றே இந்த அரசு மாற்றுக் கட்சியினரை மதிக்கிறது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு மாதம் ஊதியமாகத் தரப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டது. நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டதும் அவர்களுக்கு மாத ஊதியம் தர அனுமதி தரப்பட்டு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அளிக்கப்பட்டு வந்தது. அந்த ஓய்வூதியத்தை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று அவர்கள் மறுபடியும் கேட்டு 5-9-1970-ல் இருந்து மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டு வருகிறது. நெல்லையப்பருக்கு வழங்கப்பட்டுவந்த ரூ. 100 அவர் மறைந்த பிறகு நிறுத்தப்பட்டிருக்கிறது.

கட்டபொம்மன் குடும்பத்தாருக்கு ஆங்கிலேய அரசு கொடுத்து வந்த பென்ஷன், 1952-ல் அந்த அரசியல் பென்ஷன் அவர்களுக்கு நிறுத்தப்பட்டு விட்டது. இப்போது 18-2-1969 முதல் சுப்ரமணிய துரையின் மகள் திருமதி பாஞ்சாலி அம்மாள், துரைராஜ் பாண்டியன், வீம ராஜ், துரை ராஜ், திரு. சோமசுந்தர கட்டபொம்ம துரை, இவர்களுக்கும், அதற்குப் பிறகு 11-1-1971 முதல் சுப்ரமண்ய கட்டபொம்ம துரை, சைவ வீரபாண்டிய துரை, ஊமைத்துரை புதல்வர்கள், சுப்ரமண்ய கட்டபொம்மு துரை, ஜெகவீர பாண்டியன் துரை, சின்னபொம்மு துரை ஆகிய இந்த பத்துப் பேர்களுக்கு, கட்டபொம்மன் பரம்பரையினருக்கு மாதம் ரூ. 80 என்று ஓய்வூதியம் இந்த அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்திய நாட்டு விடுதலைப் போராட்டங்களில் தேசியக் கனலை மக்கள் உள்ளங்களில் எழுப்பிக் கொண்டிருந்தவர்கள் அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள், எங்கிருக்கிறார்கள், இப்போது அவர்களுக்கு எந்தெந்தக் கட்சிகளில் ஈடுபாடு இருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் நாங்கள் ஒரு சிறிதும் கவலைப்படாமல் அதை மனதில் எண்ணிப்பார்க்காமல் இந்த அரசு மாற்றுக் கட்சி, ஆளும் கட்சி என்ற பாரபட்சம் காட்டாமல் அவர்கள் அனைவருக்கும் உதவி செய்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் நான் இந்த விவரங்களை உங்களிடம் எடுத்துக் கூறினேன்.

அமைச்சர்கள் இன்றைக்கு அதிகமாகச் சுற்றுப்பயணம் செய்கிறார்கள், அதன் காரணமாக அதிகச் செலவு ஏற்படுகிறது, அதில் சிக்கனம் செய்ய வேண்டும் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் வெட்டுத் தீர்மானத்தில் கொடுத்திருப்பதோடுகூட இங்கு பேசிய மற்றவர்களும் அதை எடுத்துச் சொன்னார்கள். நானும்கூடப் பார்த்தேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 1962-ம் ஆண்டு முதல் 1965-ஆம் ஆண்டு முடிய நான்காண்டு காலத்தில் ஒன்பது அமைச்சர்கள் இருந்தார்கள். அந்த ஒன்பது அமைச்சர்களுக்கு பயணப்படிக்கான செலவு சற்றேறக்குறைய ரூ. 2,50,000 ஆயிற்று. கழக ஆட்சிக் காலத்தில் நான்காண்டுக் காலத்தை எடுத்துக்கொண்டால் 1967 முதல் 1970-ம் ஆண்டு முடிய நான்காண்டு காலத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது உங்களுக்குத் தெரியும். முதல் ஒன்றிரண்டு ஆண்டுக் காலத்தில் ஒன்பது பேர்களாக இருந்தாலும் பிறகு 13 பேர்கள் என்றாகி, பிறகு 14 பேர்களாக ஆகியிருப்பது உங்களுக்குத் தெரியும். 1967-ம் ஆண்டு முதல் 1970-ம் ஆண்டு முடிய நான்காண்டுக் காலத்தில் அமைச்சர்களுக்கான பயணப்படி சற்றேறக்குறைய ரூ. 3,13,000 ஆகும். ஒன்பது பேர்கள்



1971 ஜூலை 16] [திரு. மு. கருணாநிதி]

நான்காண்டுக் காலத்தில் பயணப்படி பெற்றது ரூ. 2,50,000. 13, 14 பேர்களாக அமைச்சரவை விரிவடைந்து 1967 முதல் 1970-ம் ஆண்டு முடிய அமைச்சர்களுக்கான பயணப்படி ரூ. 3,13,000 தான். ஆகவே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நான்காண்டுகளில் ஒருவருக்குப் பயணப்படி சராசரியாக ரூ. 28,000. கழக ஆட்சியில் நான்காண்டுகளில் ஒரு அமைச்சருக்குப் பயணப்படி சராசரி ரூ. 20,000 தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1962-ல் மொத்தமாக ஆன பயணப்படிச் செலவு ரூ. 43,623. 1963-ல் ரூ. 64,708, 1964-ல் ரூ. 69,593, 1965-ல் ரூ 70,196, 1966-ல் ரூ 77,606. ஒன்பது பேர்களாக இருந்தபோது, 1967-ல் ரூ. 79,000, 1968-ல் ரூ. 59,000, 1969-ல் ரூ. 88,000, அமைச்சர்கள் 13 பேர்கள், 1970-ல் 13 பேர்கள், ரூ. 86,000 என்றளவிற்குத்தான் இந்தப் பயணப்படிக் கணக்கு இருக்கிறது. ஆகவே, அமைச்சர்களின் எண்ணிக்கையை வைத்துக்கொண்டு பார்க்கும்போது பயணங்கள் அதிகமாக நடைபெறவில்லை என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றும் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர்கள் அரசாங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டுத் திரும்புவார்களேயானால் அந்தப் பயணப்படியைப் பெற்றுக்கொள்வது என்றும் ஐந்து அரசாங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு மாலை ஆறு மணி அளவில் ஒரு கழக நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்களானால் அந்த நாள் முழுவதும் அதற்காக வாங்குகிற பயணப்படியை அவர்கள் வாங்கக் கூடாது என்று திட்டவட்டமாக நாங்கள் வலியுறுத்தி இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டு வருகிறோம். நான் ஒரு ஊருக்குச் செல்கிறேன். திருச்சி அல்லது தஞ்சை என்று வைத்துக் கொள்ளுங்கள். காலையில் நான்கு அரசாங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விட்டு மாலையில் ஒரு பொதுக்கூட்டத்தில்—கட்சிச் சார்பான கூட்டத்தில்—கலந்துகொண்டு திரும்பினால் அன்று அரசாங்க நிகழ்ச்சிகளுக்குச் சென்ற அவ்வளவு பயணப்படியும் ரத்து செய்யப்பட்டு கட்சித் தோழர்களிடத்தில், கிளைக் கழகத்தினிடத்தில்தான் அதற்கான போக்குவரத்துச் செலவைப் பெற்றுக்கொண்டு வருகிறேன். அதைத்தான் மற்ற அமைச்சர்களும் கடைப் பிடித்து வருகிறார்கள். அதில் ஏதாவது ஒரு சில தவறுகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று எல்லா அமைச்சர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

அதிகமாக அமைச்சர்கள் சுற்றுப்பயணத்தில் ஈடுபடக்கூடாது என்ற கருத்தும், அதிகமாகச் சுற்றுப்பயணத்தில் ஈடுபடவேண்டுமென்ற கருத்தும் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டது. நான் இரண்டிற்கும் இடையில் நின்று, அதிகமாகச் சுற்றுப்பயணத்தில் ஈடுபடுவது என்றால், ஒரு பத்துப் பதினைந்து நாட்களாவது சென்னையில், தலைநகரில் அமைச்சர்கள் தங்கிடவேண்டுமென்ற அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கேற்ற வகையில்தான் இன்றையதினம் அமைச்சர்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன.

நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகிற நேரத்தில் எங்களுக்கு அவை எல்லாம் ஒழுங்காக வந்து சேரவில்லை என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் எனக்குள்ள குறையைச் சொல்லியாக வேண்டும். நான் எவ்வளவோ முறை கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றிருக்கிறேன். ஏதாவது ஒரு முறை அல்லது இரண்டு முறை அவர்கள் வராமல் போயிருக்கலாம். எந்த ஒரு முறையாவது முதல் அமைச்சர் அவர்கள்

வருகிறார்களே அவர்களைச் சந்திக்கலாம் என்ற எண்ணம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எந்தக் காங்கிரஸ் கட்சித் சட்டமன்ற உறுப்பினருக்கும் என்றைக்குமே ஏற்பட்டது கிடையாது. ஒரு வேளை தாங்கள் இந்த இடத்திற்கு அவ்வளவு தகுதியுள்ளவர்களா இல்லையா என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்க முடியாது. இவர்களை ஏன் போய்ப் பார்க்கவேண்டும் என்ற வெறுப்பு கூட ஏற்பட்டிருக்க முடியாது. அவர்களுக்கு அந்தளவிற்கு அலுவல்கள் இருந்திருக்கலாம். இனிமேலாவது நீங்கள் எங்களையும் சந்திக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவர்களைச் சுற்றியிருக்கிறவர்களைப் பார்த்தால், அவர்களைச் சந்திப்பதற்கு மிகுந்த சிரமமாக இருக்கிற காரணத்தினால் அவர்களைச் சந்திக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எல்லோரும் வந்து என்னைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்கள் வந்திருப்பதாகச் சொன்னால், அவர்கள் கூறியதுபோல்—நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் முதலிடம் தர வேண்டுமென்று சொன்னார்கள்—குறிப்பாக எதிர்க் கட்சியில் உள்ளவர்களுக்கு முதலிடம் தருவதில் எங்களுக்கு மிஞ்சி யாரும் இருக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரு தடவை முயன்று பாருங்கள், அடுத்த தடவையாவது பாருங்கள் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (ஆரவாரம்).

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற இடம் 11-வது இடம், 10-வது இடமாக இருக்கிறது என்று குறை கூறப்படுகிறது. அவர்களுக்கு இருக்கிற 10-வது இடத்தை துறை அதிகாரிகள் என்பதற்கு அடுத்த இடமாக இப்போது சட்டமன்ற உறுப்பினருக்குத் தர வேண்டும் என்ற ஆணையை, இரண்டு வாரங்களுக்கு முன்பு பிறப்பித்திருக்கிறேன் (ஆரவாரம்.) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல்கள் பற்றி எல்லாம் பல விளக்கங்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. அதில் கட்சி வாரி பிரதிநிதித்துவம், தான் தேர்தலில் தேவை என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அமைச்சர்கள் ராஜிநாமா செய்துவிட்டுத்தான் தேர்தலை நடத்த வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் அப்படிச் செய்யாவிட்டாலும் நீங்களாவது செய்யுங்கள் என்று கேட்டார்கள். இது ஒரு மாநிலம் மட்டும் செய்து முடித்துவிடுகிற காரியம் அல்ல. நாங்கள் எல்லோரும் ராஜிநாமா செய்துவிட்டு, நாங்கள் தேர்தல் பணி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், மத்திய அரசில் இருக்கிற அமைச்சர்கள் ராஜிநாமா செய்யாமல் இங்கு வந்து அவர்களது மந்திரி அந்தஸ்தைக் காட்டி தேர்தல் சுற்றுப் பயணத்தில் ஈடுபடுவது என்பது தேர்தலுக்குப் பொருத்தமாகயிருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நான் இன்னும் கூடச் சொல்வேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காங்கிரஸ் ஒன்றாகயிருந்த நேரத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்கு தமிழ்நாட்டிற்கு வந்திருந்து மூன்று ஊர்களில் பேசியதற்காக ரூ. 90,000 இன்றைக்கும் காங்கிரஸ் கட்சி எங்களுக்கு கடன் தர வேண்டியிருக்கிறது. ஒருவேளை பொன்னப்ப நாடார் அவர்கள் நாங்கள் ஸ்தாபன காங்கிரஸ் அல்ல என்று சொல்லி, தப்பித்துக் கொண்டாலும் தப்பித்துக்கொள்ளக் கூடும். அவர்கள் தங்களை ஸ்தாபன காங்கிரஸ் என்று வலியுறுத்திக் கொள்வதற்காகவாவது அந்தப் பணத்தைக் கட்டி விடுவார்



களானால், இவர்கள்தான் ஸ்தாபன காங்கிரஸ், ஆகவே கடனைத் திருப்பிக் கட்டி விட்டார்கள் என்று நம்ப இடமேற்படும். இதுபற்றி பலமுறை விவாதிக்கப்பட்டு விட்டது. இப்போது கூட நான் கூறுகிறேன் . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இப்போதுதான் இந்திரா காங்கிரஸோடு நீங்கள் இணைந்து நிற்கிறீர்களே, அந்த ரூபாயை அவர்களிடம் வாங்கிக் கொள்வதுதானே. எது ஸ்தாபன காங்கிரஸ் என்பது கோர்ட் தீர்ப்பு கிடைக்கும்போது, எது உண்மை என்பது புரிந்துவிடும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உண்மையான காங்கிரஸ் எது என்பது கோர்ட் தீர்ப்பளிப்பதற்கு முன்பே, நீங்கள்தான் அது என்பதைக் காட்டிக் கொள்ள அந்தப் பண பாக்கியைத் தந்து விடுங்கள். கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்று கூறுவது போல், நாங்கள் இப்பொழுது கலங்கிக்கொண்டிருக்கிறோம், யாரிடத்திலிருந்து வாங்குவது என்று. தீர்ப்பு வரும்வரையில் நாங்கள் காத்திருக்க இயலாது. கடன் தொகை ஏறிக்கொண்டே போகிறது. இந்தியப் பிரதமரைப் போன்றோர் தேர்தல் சுற்றுப்பயணம் அல்லது கட்சிப் பிரச்சாரத்திற்காக வரும்போது கூடுமான வரையில் அந்தந்தக் கட்சி சார்பாக அழைக்கப்படுவதால், அவர்களே செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்று மாநில அமைச்சர்கள் யாராவது தேர்தல் சுற்றுப்பயணம் அல்லது கட்சிப் பிரச்சாரத்திற்காகச் செல்லும்போது அரசாங்கப் பயணப்படியைப் பெறுவதில்லை என்று அறிவித்திருக்கிறோம். அரசாங்கச் செலவில் போவதில்லை என்றால் பாதுகாப்பு போன்ற சில பணிகளுக்கு அரசாங்கப் பணம் செலவிடப்படலாமே தவிர, பிரதமர் போன்ற மிகப் பெரிய பொறுப்பில் உள்ளவர்களின் எல்லாச் செலவுகளுக்கும் நாங்களே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டுமென்ற நிலைமை இருக்கக் கூடாது. இதைச் சொல்வது இன்றல்ல. அன்றே இதைச் சொல்லியிருக்கிறோம். ஆகவே அந்த முறையில் நாங்கள் ராஜிநாமா செய்வது என்பது அது அகில இந்திய ரீதியில், மத்திய அரசு அளவில் இரண்டு மாதங்களுக்கு முன்பு, அல்லது ஒரு மாதத்திற்கு முன்பு, அல்லது ஆறு மாதங்களுக்கு முன்பே அமைச்சர்கள் எல்லா மட்டத்திலும் ராஜிநாமா செய்ய வேண்டுமென்ற நிலைமை வந்தால் அப்படி வருகிற முடிவை நிச்சயமாக தமிழக அரசு எதிர்க்காது, வரவேற்கும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேர்தலில் கட்சி வாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய சுப்பையா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பில் வீற்றிருக்கும் நாடார் அவர்களும் அதே கருத்தை எடுத்துக் காட்டினார்கள். இதற்கு பி.எஸ்.பி. நண்பர் மாரிமுத்து அவர்கள் கூறிய விளக்கம் எனக்கு நினைவுக்கு வருகிறது. நாட்டிலே இருக்கும் கட்சிகளின் எண்ணிக்கை குறைந்தால்தான் இந்த கட்சி வாரி பிரதிநிதித்துவம் ஒரு நல்ல இலக்கணமாக இருக்க முடியும், அது வரையில் முடியாது என்று சொன்னார்கள். அது போற்றத் தகுந்த கருத்து, பொருத்தமான கருத்து என்று சொல்லிக்கொள்கிறேன். இன்று நூற்றுக் கணக்கான கட்சிகள் இருக்கின்றன. அந்தக் கட்சிகள் இன்றைக்கு 2 இடங்களில் சட்டசபைக்கு வர வேண்டுமென்றால், குறைந்த பட்சம் லட்சம் வாக்கு வாங்க வேண்டுமென்று எண்ணி இருந்தால், 234 தொகுதிகள் இருக்கிறது என்று சொன்னால், அந்த 234 தொகுதிகளுக்கும் ரூ. 250, ரூ. 500 என்று தொகையைக் கட்டி எல்லா இடங்களிலும் தங்களுடைய வேட்பாளர்களை நிறுத்தி வைப்பார்கள். கூட்டிக் கழித்துப் பார்க்கிற நேரத்தில் அவர்கள் 1—2 இடங்

களில் தான் வெற்றி பெறுவார்கள். அதோடு யார் எங்கே போட்டியிட்டாலும், நாங்களும் அங்கே போட்டி யிடுவோம் என்று மார்தட்டிக்கொள்ளும் சுயேச்சை களும் இருக்கிறார்கள். அவர்களும் நாங்கள் 100 தொகுதிகளில் போட்டி யிட்டோம், ஆகவே, சுயேச்சை கட்சியின் சார்பாக, நின்றவர்களுக்கு கிடைத்த வாக்குகளை மொத்தமாக எண்ணி, எங்களுக்கும் கட்சியின் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கக்கூடும்.

மாற்றுக் கட்சி, ஆளும் கட்சி என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கு எதிர்க்கட்சியாக வரலாம். இன்று எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கு ஆளும் கட்சியாக வரலாம். ஆனால், இன்று ஆளும் கட்சி எது, மாற்றுக் கட்சி எது என்று வித்தியாசம் தெரியா மல் இருக்கிறது. கட்சிகள் அதிகம் இருக்கிற நேரத்தில், கட்சிவாரி பிரதி நிதித்துவம் மிகுந்த நன்மை பயக்காது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதோடு, எதிர்க்கட்சி, மாற்றுக் கட்சி என்ற நிலைமை யில்லாமல், 1967-ல் இருந்த நிலைமை கூட மாறி, இப்போது இருப்பதிலே எது மாற்றுக் கட்சி என்று எண்ணிடத்தக்க அளவிற்கு இன்று பல்வேறுபட்ட கட்சிகள் பல்கிப் பெருகி இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். இந்த நேரத்தில் கட்சிவாரிப் பிரதி நிதித்துவ முறை சரிப்பட்டு வராது, இப்போது எடுத்துக் கொள்வதற்கு இல்லை என்று எடுத்துக் கூறி, இங்கே அங்கத்தினர்கள் தேர்தலைப் பற்றி எந்தக் கருத்தை எடுத்துக் சொன்னாலும், நம்முடைய மாநில அளவிலே மட்டும் அதை செயல்படுத்த முடியாது, அகில இந்திய அடிப்படையில் செயல்பட வேண்டிய திட்டமாக இருப்பதால், எல்லாக் கட்சிக்காரர்களையும் கலந்து ஆலோசித்து, நல்ல முடிவு எடுக்கிற நேரத்தில்; அந்த முடிவை திராவிட முன்னேற்றக் கழக மும் ஏற்றுக்கொள்ள சித்தமாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளின் மாற்றங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஐ.ஜி.யை மாற்றினீர்கள். அவர் இறந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். ஐ.ஜி. யைப் பொறுத்தவரையில், இப்போது இருக்கும் ஐ.ஜி. அவர்கள் டெல்லிப் பட்டணத் தில் வேறொரு பொறுப்பில் இருந்த நேரத்தில், அங்கே மாற்றங்கள் செய்ய விரும்பி அந்த ஐ.ஜி. மீண்டும் திரும்பி அனுப்பப்பட இருக்கிறார் என்று செய்தி வந்த பிறகு தான், அவர் ஐ.ஜி. பொறுப்பில் அமர்த்தப்பட்டார். தலைமைச் செயலாளரை மாற்றி விட்டார்கள் என்றும் சொன்னார்கள். நிர்வாக வசதிக் காக, ஒரு அரசாங்கம் அதனுடைய நிர்வாகத்தை ஒழுங்காக நடத்திச் செல் வதற்காக என்னென்ன வழிவகைகளைக் கையாள வேண்டுமோ, அதைக் கையாளு வதில் எந்தவிதமான தவறும் இருக்க முடியாது. அந்த முறையில்தான் தலை மைச் செயலாளர் மாற்றப்பட்டு இருக்கிறார். அவரை எங்கேயும் தள்ளிவிட வில்லை. இங்கேயேதான் இருக்கிறார்கள். இங்கே அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்ட மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். மிகுந்த பொறுப்பு மிக்கப் பதவியில்தான் அமர்த்தப்பட்டு இருக்கிறார். அதிகாரிகள் மாற்றம் என்பது இன்று, நேற்று அல்ல. எத்தனையோ ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. முன்பெல்லாம் கூட சொல்லியிருக்கிறார்கள். திரு. பார்த்தசாரதி ஐயங்கார் ஐ.ஜி.-யாக வந்திருக்க வேண்டியவர் விமான நிலையத்தில் ஏற்பட்ட சின்னத் தகராறு காரணமாக ஐ.ஜி. யாக வர முடியாமல் போய்விட்டது என்று சொல்வார்கள். இப்படிப் பட்ட மாற்றங்களுக்கு உள்நோக்கம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.



சிபார்சுகள், அதிகாரிகள் மாற்றங்கள் பற்றி எடுத்துச் சொல்லப்பட்டது. அது பற்றி ஒரு அறிக்கை 2 வாரங்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டது என்று கருதுகிறேன். பத்திரிகையில் வந்திருக்கிறது. யாராவது மாற்றங்கள் பெற வேண்டுமென்றோ, உயர் பதவிகள் பெறவேண்டுமென்றோ சிபார்சுகள் சட்ட மன்ற உறுப்பினர் மூலமாகவோ, வேறு பிரதிநிதிகள் மூலமாகவோ யார் அனுப் பினாலும், அந்த அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்கு ஏற்ப இன்று கூடுமானவரை யில் அந்தக் காரியங்கள் குறைக்கப்பட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சிபார்சுகள் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவது இல்லை.

எதிர்க்கட்சிக்காரர்கள் எங்களைப்பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என் பதற்காக நல்ல சி.ஐ.டி. ஒற்றர்களை பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது சி.ஐ.டி.-கள் தகவல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். திரு. ஹாண்டே அவர்களை விட, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை விட, சி.ஐ.டி.-களை பொறுப்புள்ளவர்களாக கருதிக் கொள்ளக் கூடாது. உங்கள் கட்சியின் சார்பாக உள்ள மக்களின் குரலை உங்கள் மூலமாக அறிகிறேன். நீங்கள் பேசுகிற பேச்சில் சில நேரங்களில் காழ்ப்பு உணர்ச்சி ஏற்படுகிறது, கசப்பு உணர்ச்சி ஏற்படுகிறது, அரசியல் விருப்பு, வெறுப்பு களுக்கு இடம் அளித்தாலும், நாட்டில் இருக்கும் உங்களைச் சார்ந்திருக்கும் ஒரு பகுதி மக்களின் குரலை நீங்கள் ஒலிக்கிறீர்கள் என்ற பெருமிதத்தோடு, உங்கள் அனைவரின் கருத்துக்களையும் இந்த மன்றத்தில் நாங்கள் ஆராய்ந்து பார்க்கிறோம் என்று எடுத்துக் காட்டி, அதற்காக தனி ஒற்றர் படை தேவை இல்லை, இப்போது இருக்கும் ஒற்றர்களே போதுமானது என்று எடுத்துக் கூறி, இந்த மான்யத்தின் மீது தரப்பட்டு இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மான்யங்களை நிறைவேற்றித் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருக்கிற சட்டசபை உறுப்பினர்களை மாத்திரம் எந்த விதமான நிகழ்ச்சிகளி லும் இது வரையில் கலந்து கொள்வதற்கு வாய்ப்புக் கொடுப்பதில்லை என்று சொன்னதற்குப் பதில் கூற வில்லை. முன்பு இருந்ததுமாதிரி இங்கே சென்னையில் இருக்கிற அங்கத்தினர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப் படுமா என்பதற்கு முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகள் எல்லாம் உரிய நேரத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்.

DR. H. V. HANDE: Sir, the Hon. Chief Minister in his reply has ridiculed our symbol which I think is abosolutely uncalled for and I take exception to it. I did not ridicule the symbol of the ruling party and I just stated the fact, for which the Hon. Chief Minister should give a reply without ridiculing us.

As regards the photograph of the Chief Miniser in the Report of the Rajamannar Committee, I never ridiculed it and I am not allergic to it and in fact I like his face. Why should he try to

say something which is not in my mind. I would have been very happy if the discussion takes place at a high level without trying to make fun of each other.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :* டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது மத்திய மாநில உறவு பற்றி தங்கள் கருத்து என்ன என்று கேட்டேன். பிறகு சொல்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் புத்தகத்தைக் காட்டினார்கள், போட்டோவைக் காட்டினார்கள். கருத்தைச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, போட்டோவைக் காட்டினார்கள். அதற்குத்தான் அந்த பதில் சொன்னேன். இந்த விளக்கம் போதும் என்று கருதுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்துகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, in view of the assurance given by the Hon. Chief Minister, I withdraw my cut motion.

The cut motion was, by leave, withdrawn.

The cut motions of Thiru A. K. Subbiah, Dr. H. V. Hande, Thiru K. S. Kothandaramiah and Thiru M. Surendran were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 36,70,200 under Demand No. 7—Elections.'

The Demand was put and carried and the Grant was made.

9ப. 00 The cut motion of thiru J. James to Demand No. 8 was, by leave, withdrawn.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* ஓய்வு பெற்றவர்கள் சம்பந்தமாக, சர்க்கார் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையோடு, நான் வெட்டுத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

The cut motion of Thiru K. T. K. Thangamani was, by leave, withdrawn.

The cut motions of Dr. H. V. Hande and Thiru M. Surendran were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,82,07,400 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters staff."

The Demand was put and carried and the Grant was made.

The cut motions given notice of by Thiruvalargal K. Subbu, Dr. H. V. Hande and A. Subramaniam to Demand No. 33 were, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 12,03,14,900 under Demand No. 33—Miscellaneous".





The Demand was put and carried and the Grant was made.

*(எ) கோரிக்கை எண் 6—மாநிலச் சட்ட மன்றம்.*

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 29,32,700 under Demand No. 6 State Legislature."

*திரு. ஜே. ஜேம்ஸ் :* பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சிக்கென்று ஒரு அறை இருந்தும், தற்பொழுது பெரிய எதிர் குரூப்பாக செயல்படும் காங்கிரஸ் கட்சிக்கு அந்த அறையைக் கொடுக்க வேண்டியதைப் பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 6—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,32,700-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, to discuss the need for a separate printing press exclusively for the Legislature work, I move the following cut motion :—

"That the allotment of Rs. 29,32,700 under Demand No. 6 State Legislature be reduced by Rs. 100."

*திரு. எம். சுரேந்திரன் :* மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கேள்விகளுக்கு காலாகாலத்தில் விடை அளிக்காதது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண். 6—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,32,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* சார், டாக்டர் அம்பேத்கார் திருவுருவப் படத்தை சட்டமன்றத்தில் வைப்பது குறித்து விவாதிக்க—

"கோரிக்கை எண். 6—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,32,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

* *திரு. எம். சுரேந்திரன் :* சபாநாயகர் அவர்களே, இங்கே சபையில் முன்னால் வைத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, சட்ட மன்ற உறுப்பினர்கள் கேள்விகள் எழுப்பினால் அதற்கு காலாகாலத்தில் பதில்கள் வந்து சேருவதில்லை. குறிப்பாக, அங்கீகரிக்கப் பட்ட பல கேள்விகள்—சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னர் எழுதி அனுப்பிய கேள்விகள்—பதிலளிக்கப்படவில்லை. ஏழு மாதங்கள் ஆகியும் பதில் வாராமல் இருந்திருக்கின்றன. சட்டமன்றத்திலே கேள்விகள் கேட்பது என்பது, பல்வேறு விஷயங்களைப் பற்றி அவ்வப்போது சர்க்காரத்திலுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகச் செய்யப்படுகிற

காரியமாகும். இதில் இவ்வளவு நிதானமாக இருப்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிகுந்த சிரமத்தை அளிப்பதாக இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

அதேபோல, சட்டமன்றத்திலே கேள்வி நேரம் முடிந்தவுடனே, அவசரமான அம்சங்களை அரசின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வர வேண்டும் என்று சொன்னால், அதற்கு தற்போது வசதிகள் இல்லை. பாராளுமன்றத்திலே, இப்படிப்பட்ட வசதியை செய்து தரும் வகையில் 'ஸீரோ அவர்' என்று வைத்திருக்கிறார்கள். அத்தகைய வாய்ப்பை இங்கேயும் உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டசபை பட்ஜெட் கூட்டம் நடக்கும்பொழுது உறுப்பினர்கள் உத்யோகபூர்வமல்லாத தீர்மானங்களையும், மசோதாக்களையும்கொண்டு வர வேண்டுமானால் வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் மசோதாக்கள், தீர்மானங்கள் கொண்டு வர வசதி ஏற்படுத்த வேண்டும். இந்தச் சட்டசபை காலாவதி ஆவதற்குள் பல தீர்மானங்கள் கொண்டுவர முடியாமல் தங்கிவிடுகின்ற நிலை ஏற்படுகிறது. கடந்த கூட்டத்திலேயே ஒரு மசோதா நான் கொண்டுவந்தேன். சபை கலைக்கப்பட்டு விட்டது. எனவே, மீண்டும் அதே மசோதா கொண்டுவந்திருக்கிறேன். ஆகவே, எந்தக் காலத்திலேயும், சட்டசபை கூடுகின்ற போதெல்லாம், அது வரவு செலவுத் திட்டக் கூட்டமாகட்டும், அல்லது வேறெந்தக் கூட்டமாகட்டும், உத்யோகபூர்வமல்லாத தீர்மானங்கள் கொண்டுவருவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டசபை உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய வசதிகளைப் பற்றியெல்லாம் ஏற்கனவே மானியங்கள் மீது நடந்த விவாதத்தில் குறிப்பிட்டார்கள், அதில் இன்னும் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இப்போதுள்ள நிலைமையில், சட்டசபை விடுதியில், உறுப்பினர்கள், படிப்பதற்குக் கூட வசதியில்லாத நிலை இருக்கிறது. பல மெம்பர்களின் தொகுதி மக்கள் விடுதிகளில் ஆங்காங்கே கூச்சலையும் குழப்பத்தையும் உண்டாக்கிக் கொண்டிருப்பதால், கவனத்தை நல்ல முறையில் திருப்ப வசதி இல்லாமல் இருக்கிறது. கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. எனவே, அப்படி வருகின்றவர்கள் தங்குவதற்கு, விடுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற இடத்திலே ஏற்பாடு செய்து, அவர்கள் தங்க வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓரளவு வாடகை வாங்குவது கூட தவறில்லை.

அடுத்து, சட்டசபை அங்கத்தினர்கள் விடுதியில் இதர வசதிகளும் குறைவாக இருக்கின்றன. குடிப்பதற்கும் குளிப்பதற்கும் கூட போதிய தண்ணீர் வசதி செய்து தரப்படவில்லை, எல்லா நேரத்திலும் தண்ணீர் வருவதில்லை. எந்த நேரத்திலும் தண்ணீர் கிடைக்கும்படி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு உறுப்பினருக்கும் டெலிபோன் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ரூமிலும் டெலிபோன் இருக்கிறதே தவிர, அதைப் பயன்படுத்தும்போது திண்டாட்டத்திற்கு உள்ளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. டெலிபோனை எடுத்து காதில் வைத்துக்கொண்டால், ஒரு பதிலும் வருவதில்லை. அதைப் பராமரிக்கின்ற ஆட்கள் இல்லாமல் எக்சேஞ்சிலிருந்து தகவல்



கிடைப்பதில்லை. டெலிபோன் இருக்கிறது என்று சொல்லலாமே தவிர அது சரிவர உபயோகிக்கத் தகுந்த முறையில் இல்லை. இந்தச் சிரமங்களையெல்லாம் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற வசதிக்காக கேன்டீன், ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே பல சிரமமான நிலைகள் இருக்கின்றன. 1½ மணிக்கு சட்டசபை முடிந்து கேன்டீனுக்குப் பசியுடன் போனால், அங்கே அப்போது உணவு கிடைப்பதில்லை. நேற்றைய முன்தினம் கூட முதல் சாப்பாடு போட்டுவிட்டார்கள். இரண்டாவது சாப்பாடு உடனே கிடைக்கவில்லை. அரிசி வேகவில்லை என்று சொல்லி காத்துக்கொண்டிருக்கிற நிலைமையை ஏற்படுத்திவிட்டார்கள். எங்கள் பேராலே, எங்களுடைய வசதிக்காக கேன்டீன் என்று சொல்லிவிட்டு, எங்களுக்கே இப்படிப்பட்ட நிலை என்று சொன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னுடன் இரண்டு மூன்று பேர்கள் இருந்தார்கள். சாப்பிடாமலேயே போய்விட்டோம். அப்போதாவது, மரியாதைக்காகவாவது, பணம் வேண்டாம் என்று சொல்லியிருக்க வேண்டாமா? பணமும் வாங்கிக் கொண்டார்கள். (சிரிப்பு) இந்த மாதிரி நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும்.

வெஜிடேரியன் கேன்டீனைப் பொறுத்தவரையில், இந்த மேனேஜ்மெண்ட் மாறி வேறொரு மேனேஜ்மெண்ட் வரப்போவதாகச் சொல்கிறார்கள். வெஜிடேரியன் கேன்டீனில் உள்ளவர்கள், அங்கே சமைக்கிற சமையல்காரர்கள் முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கலாமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. எனவே, கேன்டீனில் வருமானத்தை மட்டும் கணக்கில் பார்க்காமல் உறுப்பினர்களின் வசதிகளைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு முதலிடம் அளித்து வசதிகளைச் செய்து தருவதிலே கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சட்டசபை உறுப்பினர்கள், போக வருவதற்கு பாஸ் வேண்டும் என்று பலபேர்கள் கூறினார்கள். ரெயிலில் பாஸ் தருவதில் இருக்கின்ற கஷ்டம், மத்திய அரசுடன் கலந்து செய்ய வேண்டும் என்பது உண்மையானது தான். வேறு பல மாநிலங்களில் அம்மாதிரியான சலுகை பாஸ் தருகின்ற சலுகை—இருக்கிறது. இங்கேயும் அந்த முறையில் நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று தொகுதியில் இருக்கிற வேலைகளில் அங்கிருக்கிற தொகுதி மக்களுடைய வேலைகளைக் கவனிக்க பஞ்சாயத்து யூனியன் சேர்மனை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு உதவி செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் சட்டசபை உறுப்பினர் பலருக்கு என்னைப் போன்றவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது, தமிழில் நன்றாக எழுதத் தெரியாது. உதவி செய்வதற்கு ஒரு ஆள் மிகத் தேவையாக இருக்கிறது. ஒரு ஆளை ஏற்படுத்தி அவருக்கு சம்பளம் தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும்.

சட்டசபை உறுப்பினர் மக்களின் பிரதிநிதியாக வந்துவிட்டால் மட்டும் போதாது. அந்த மக்களின் பணிகளை முறையாகச் செய்ய வேண்டுமென்றால் முறையாகச் செய்வதற்கான வாய்ப்பு வசதி இருந்தால்தான் முறையாகச் செய்ய முடியும். இது அவ்வளவு பேரும் உணர்ந்த விஷயம். ஆகவே அவர்களுக்கு உதவி செய்ய தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அங்கே டெலிபோன் வசதி செய்து தர வேண்டியது ஒரு முக்கியமான காரியமாகும்.

ஜனநாயகம் சரியான முறையில் செயல்பட வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கெட்ட பெயர் வாராமல் பாதுகாக்க வேண்டுமென்றால், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தந்து, அந்த மக்களுடைய பணிகளைச் செவ்வையாகச் செய்ய வழிகளையும் காட்ட வேண்டிய பொறுப்புக் கூட இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். அது ஒன்றும் அதிகமானதல்ல என்று நினைக்கிறேன். ஏனென்றால், சட்டமன்ற பிரதிநிதியாக வந்தபிறகு அரசாங்கம் ஏற்படுகிறது என்று சொன்னாலும் கூட, அவர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள், இவர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் என்றாலும் கூட, இருக்கிற நிலைமையில் ஜனநாயகம் தழைப்பதில் எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம். அந்த ஜனநாயகப் பணிகளைச் செய்வதற்கு இம்மாதிரியான காரியங்களைச் செய்து தர வேண்டும்.

இன்னொன்று, சட்டசபை வெளியீடுகள், சட்டங்கள் வருகின்றன. மற்ற வெளியீடுகளும் வருகின்றன. படித்துத் தெரிந்து கொண்டு அதன் பேரில் நாம் விவாதம் செய்தால் நாம் சரியாக சட்டமன்றத்தில் பணிசெய்கிறோம் என்று பொருள். இது ஆங்கிலத்தில் வருகிறது. ஆங்கிலத்தில் வருவதை புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு திருத்தம் தர வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் தான் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி ஆங்கிலத்தில் தருவதைத் தமிழில் தருவதற்கு ஏற்கனவே முயற்சி எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்த முயற்சி நிறைவேற்றப்படவில்லை. அதில் அரசு அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. ஏ. எம். இராஜா : சட்டசபைத் தலைவர் அவர்களே, இந்த சட்டசபை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே சட்டசபை உறுப்பினர்களுக்கு, சட்டபேரவைக்கு ரூ. 29 லட்சம் செலவிடுவதாக இருக்கிறது. இது போதாது. இந்த ரூ. 29 லட்சம் குறைவு. ரூ. 50 லட்சம் சட்டப் பேரவைக்காக செலவிடப்பட வேண்டும்.

இன்னும் சட்டசபை உறுப்பினர்களுக்கு எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. எம்.எல்.ஏ. கான்டீனில் போடுகிற சாப்பாடு மிகவும் மோசமாக இருக்கிறது. அதற்குக் காரணம் அந்தக் கான்டீன் நடத்துபவர்களைக் குறை சொல்ல முடியாது. அவர்களை இவ்வளவு ரூபாய்க்குத் தான் சாப்பாடு போட்டாகவேண்டுமென்று நாம் ஒரு விலையை நிர்ணயம் செய்து வைத்திருக்கிறோம். அப்படி அவர்களுக்கு கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டு சாப்பாடு மோசமாக இருக்கிறது என்று கூறுவதும் நல்லதல்ல. ஆகவே அந்தக் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டு அந்த ரேட்டுகளை உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கேன்டீனில் சாப்பாடு போடுவதற்கு ஆட்கள் மிகக் குறைவு. நாம் ஒரு காபி வேண்டுமென்று கேட்டால் அரைமணி நேரத்துக்கு மேலாகிறது. என்ன என்று கேட்க ஆட்கள் இல்லை.

அதேபோல் நம்முடைய ஹாஸ்டலை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு பிளாக்கிலும் இருக்கிற ஆட்கள் மிகக் குறைவு. அவர்கள் சட்ட சபை நடக்கிற நேரத்தில் நமக்கு அவசரமாக ஒரு காபியோ அல்லது ஒரு சாமானோ வேண்டுமென்றால் வாங்கிக்கொண்டு வருவதற்கு ஆட்கள் கிடைக்கவில்லை. அங்கு ஆட்கள் நிறைய அமர்த்தப்படவேண்டும்.





இன்னொன்று. ஹாஸ்டலில் ஒவ்வொரு பிளாக்கிலும் பேப்பர்கள் போடப்பட வேண்டும். இப்போது கீழே மட்டும் தான் போடப்படுகின்றன. கீழே இருப்பதால் ஆறாவது மாடியில் இருப்பவர் கீழே வந்து பேப்பர் படிப்பது சங்கடமாக இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மாடியிலும் பேப்பர்களைப் போடுவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று. சட்டசபை உறுப்பினர்கள் பெரும்பான்மையினர் மிகச் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சட்ட சபை உறுப்பினர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற சம்பளம் மிகக் குறைவான சம்பளம். என்.ஜி.ஓ.-க்களுக்கு இப்போது சம்பளம் உயர்த்திக் கொடுக்கிறார்கள். இங்கே சட்டசபை உறுப்பினர்களுக்கு சம்பளம் மட்டும் தான் கொடுக்கப்படுகிறது. பஞ்சப்படி கொடுக்கப்படுவதில்லை. மற்ற அரசு அலுவலர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இங்கே எங்களுக்கு கொடுக்கப்படுகிற ரூ. 250 சம்பளத்தை ரூ. 500 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை அதிகப்படுத்துவதால் அரசுக்கு அதிகமாக எந்தவித நஷ்டமும் வந்து விடாது. ரூ. 10 லட்சம் அதிகம் ஆகலாம். முதலமைச்சர் அவர்கள் நிதியமைச்சராகவும் இருக்கும் காரணத்தால் அவரிடம் வேண்டிக் கேட்டுக்கெகாள்ளுகிறேன்.

இன்னொரு வசதியையும் செய்து கொடுக்க வேண்டும். ரயிலில் தமிழ் நாடு முழுவதும் செல்லுவதற்கு பாஸ் கொடுக்க வேண்டும். இப்போது ரயிலில் செல்ல பணம் கொடுக்கிறார்கள். இது வேண்டாம். எங்களுக்கு பாஸ் கொடுங்கள். தமிழ்நாடு முழுவதும் எப்போது வேண்டுமானாலும் ரயிலில் செல்லுவதற்கு பாஸ் இருந்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். பாஸ் இல்லாத காரணத்தால் பணம் கொடுத்தால் கூட டிக்கட் வாங்குவது சங்கடமான காரியமாக இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களை எடுத்துக் கொண்டால் இரவு புறப்படுகிறார்கள் என்றால் காலையில் ஒரு லெட்டர் எழுதுகிறார்கள். உடனே இடம் ரிசர்வ் செய்யப்படுகிறது. ஆனால் சட்டசபை உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் இட வசதி செய்து கொடுக்க ரயில்வே இலாகா தகுந்த நடவடிக்கை எடுப்பதில்லை. ஆகவே எங்களுக்கு இந்த ரயில்பாஸ் அவசியம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதேபோல், தொலைபேசியும் எங்கள் தொகுதிக்கு கொடுக்கப்பட வேண்டும். தொலைபேசியில் ஒவ்வொரு மாதமும் பேசுவதற்குள்ள கட்டணத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். தொலை பேசிக்கான ஆண்டு வாடகையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த வசதியை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல் வெளியூர்களுக்கு செல்லும்போது இந்தப் பயணிகள் விடுதியில் நாங்கள் எப்போது போனாலும் ரிசர்வ் ஆகிவிட்டது என்று சொல்லுகிறார்கள். அங்கே இருந்து பார்த்தால் யாரும் வருவதில்லை. ரூம் காலியாக இருக்கிறது என்று அலுவலர்களைக் கேட்டால் ரூம் ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். அதேபோல் இந்த டூரிஸ்ட் பங்களாவில் இதே கதி தான் ஏற்படுகிறது. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு நம்முடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பதை அளித்ததற்கு நன்றி கூறி அமருகிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : பேரவைத் தலைவரவர்களே, முதல் முதலில் சட்டசபை உறுப்பினர் என்ற முறையில் எனக்குள்ள ஒரு இடைஞ்சலைச் சொல்லிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். டாக்டர் ஹாண்டே

அவர்கள் எப்போதுமே என்னுடைய இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுகிறார்கள், நான் அடிக்கடி அவரிடம் கேட்பது உண்டு. ஏன் என் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுகிறீர்கள் என்று கேட்டால் மெத்தை கிழிந்திருக்கிறது அழுக்காகப் போகிறது, ஆகவே உங்கள் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லுகிறார்கள். இதுவும் சட்டசபை உரிமை தான். தயவு செய்து காப்பாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். வெளிப்புறத்திலிருந்து வருபவர்கள் ரூ. 100 அலவன்ஸ் வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி வருகிறவர்களுக்கு பஸ்ட் கிளாஸ் படி இருக்கிறது. எட்டு நாளைக்கு ஒரு தடவை பஸ்ட் கிளாஸ் படி வாங்குகிறார்கள். தலைநகரத்தில் இருக்கும் எம்.எல்.ஏ. க்கள் என்ன பாவம் செய்தோமோ எங்களுக்கு எந்தவிதமான அலவன்சும் கிடையாது. நாங்கள் நடந்தா வருகிறோம்? நாங்களும் டாக்சியில் தான் வருகிறோம். ஒரு பத்து ரூபாய் அலவன்ஸ் கூட இல்லை. ஒரு கிராமத்திலிருந்து வருகிறவர் சொல்லுகிறார் ரூ. 40 படி வேண்டுமென்று. எட்டு நாளைக்கு ஒருதடவை ஊருக்குப் போகவர பஸ்ட் கிளாஸ். நாங்களும் எங்கள் விலாசத்தை வெளியூராகக் காண்பித்து படி பெற முடியும். அந்தத் தவறான காரியத்தைச் செய்யக்கூடாது அது கட்சிக்கும் நமக்கும் இழுக்கு என்ற முறையில் செய்ய வில்லை. நாங்கள் இங்கே வாழ்கிறோம் என்று முகவரி கொடுத்த பாவத்திற்காக ஒருவிதமான படியும் இல்லை. சிட்டியில்தான் அமைச்சர்களும் வாழ்கிறார்கள். ஆகவே இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பெண்களுக்கு இங்கே போதுமான பிரதிநிதிகள் இல்லை என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அரபு நாட்டுக் கதை, அது சம்பந்தப்பட்ட விஷயங்களை சபை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுத்து விட நான் உத்தரவிடுகிறேன். பத்திரிகைகளும் போட வேண்டாம்

It is not in good taste.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: * * * அடுத்து சட்டமன்ற விடுதிக்கு அருகில் உள்ள காண்டீனைப்பற்றி சொல்லப் பட்டது. அதிலுள்ள உண்மை என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும். 1½ மணிக்கு இங்கே சட்டமன்றம் முடிகிறது என்றால்—சட்டமன்ற உறுப்பினர்களுக்காக இருக்கக்கூடிய அந்த கேன்டீனில் சாப்பாடு நன்றாக இருக்கும் என்பதற்காக—எம்.எல்.ஏ. அல்லாதவர்கள் சென்று சாப்பிட்டு முடித்துவிடுகிறார்கள். நாங்கள் போகும்போது சட்டினி இல்லை, கூட்டு இல்லை, கறி இல்லை என்பதாக ஆகிவிடுகிறது. ஆகவே, அந்தக் கேன்டீன் சம்பந்தப்பட்டவரை எம்.எல்.ஏ.க்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நல்லது என்று கருதுகிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களின் மனைவி, குழந்தைகள் ஆகியவர்களுக்கும் மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். நான் இன்னும் மனைவியை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக்கொண்டு போகவில்லை. நான் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தபோது அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





கொண்டது. மனைவி குழந்தைகளுக்கும் அந்த உரிமை இருக்கவேண்டும் என்கிறார்கள். அது இல்லை என்றால் தயவு செய்து அதைக் கொடுக்கவேண்டும். என்.ஜி.ஓ. க்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதுபோல எம்.எல்.ஏ. க்களுக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் கோடைக்காலத்தில் நீலகிரியில் நடத்தலாம் என்பது சிலரது அபிப்பிராயம். முன்பு அதுபோல ஏற்பாடு செய்யப்பட்டபோது கோடைக்கா போகிறீர்கள் என்று கேட்கப்பட்டது எனக்குத் தெரியும். எனக்கு ரத்தக் கொதிப்பு நோய் உண்டு. இதுபோல ரத்தக் கொதிப்பு நோய் உடையவர்கள் பலரும் இருப்பார்கள் என்று கருதுகிறேன். இப்போர்ப்பட்டவர்களுக்கு எல்லாம் நல்ல கோடையில் குளிர்ந்த இடத்தில் இருப்பது நல்லது. மக்களுடைய பிரதிநிதிகள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தால் தான் நல்லது என்பதை மக்களே ஆதரிப்பார்கள். ஆகவே அந்த முறையில் கோடைக் காலத்தில் நீலகிரியில் சட்டமன்றத்தை நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. என். கணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியத்தை ஆதரித்து என்னுடைய ஓரிரு கருத்துக்களைச் சொல்லலாமென்று நினைக்கிறேன்.

சட்டமன்ற அங்கத்தினர்களுக்குப் போதுமான வசதி இல்லை என்பது சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் உள்ள பொதுவான கருத்தாகும். மக்களிடத்தில் ஜனநாயக உணர்ச்சியை—ஒரு நல்ல விழிப்பை ஏற்படுத்தியிருப்பதே நம்முடைய ஆட்சிதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. நாட்டு மக்களிடையே அத்தகைய ஜனநாயக உணர்ச்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாக என் போன்றவர்களுக்குத் தினம் இருபது, இருபத்தைந்து மனுக்கள் வருகின்றன. சிலவற்றை நேரில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டியிருக்கிறது. பலவற்றைத் தபால் மூலமும் அனுப்ப வேண்டியதாக இருக்கிறது. தபால் மூலம் அனுப்புகிறபோது ஆகிற செலவுகளை நாங்கள் எங்களுக்குக் கொடுக்கிற குறைந்த அலவன்சில்தான் பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. ஆகவே எங்களுக்கு ஸ்பெஷல் அலவன்சு என்ற முறையில் —ஏதாவது கொடுக்க வழி செய்யவேண்டும். அரசாங்க அலுவல் சம்பந்தமாக நாங்கள் அனுப்புகிற தபால்களை சர்வீஸ் ஸ்டாம்ப் ஒட்டி அனுப்ப எங்களுக்கு சர்வீஸ் ஸ்டாம்பு கிடைக்கவும் வழிசெய்யலாம். இதற்கென்று ஒரு அலவன்சு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பதன் மூலம் உறுப்பினர்கள் சற்று வளமாக தொகுதிக் குறைகள் சம்பந்தப்பட்ட காரியங்களில் ஈடுபட்டு, அவற்றை நிவர்த்திக்க செயல்பட முடியும்.

அடுத்து, சட்டமன்ற நிகழ்ச்சிகளை அச்சிட்டுத்தருவதில் ஒரு குறை இருக்கிறது. மன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சு டைப் செய்யப்பட்டு மறு நாளே உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறது. அவர்களும் உடனே திருத்தி அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் அது அச்சாகி உறுப்பினர்கள் கைக்கு வருவதற்குள் ஆறு மாதங்களுக்கு மேலாகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று ஆராய்ந்த நேரத்தில் சட்டமன்றத்திற்கு என்று தனி அச்சகம் இல்லாத குறைதான் என்று தெரிகிறது. உயர்நீதி மன்றத்திற்கு எப்படி தனியாக ஒரு அச்சகம் இருக்கிறதோ அதுபோல சட்டமன்றத்திற்கு

என்று ஒரு அச்சகம் கோட்டையிலே இருந்துவிட்டால் சட்டமன்ற நடவடிக்கைகள், சீக்கிரத்தில் அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்க வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரயில்வேக்களில் இலவச பாஸ் வழங்குவதில் சங்கடம் இருக்காது என்று நினைக்கிறேன். இருந்தாலும் போலீஸ் துறையினரில் உள்ளவர்களுக்கு வாரண்டு என்று கொடுக்கிறார்கள், அவர்கள் அந்த ஸ்டேஷனில் கொடுத்து டிக்கெட் வாங்கிப்போய்விடுகிறார்கள். பின்னர் அந்த வாரண்டுகளுக்கான பணத்தை அரசாங்கத்திடம் இருந்து ரயில்வே பெறுகிறது. அதுபோன்ற ஒரு வசதியை இந்த மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மாநிலத்திற்குள் எங்குசென்றாலும் இலவசமாக அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் உறுப்பினர்கள் தங்கள் பணியினைச் செவ்வனே ஆற்ற முடியும்.

இதன் காரணத்தினால் சட்டமன்ற உறுப்பினர்கள் மாநிலங்களில் பல பகுதிகளில் சுற்றிக்கொண்டே இருப்பார்கள் என்ற அச்சம் யாருக்கும் வேண்டாம். தொகுதியில் தங்கி தொகுதி காரியங்களைக் கவனிப்பதற்கே அவர்களுக்கு நேரம் போதாமல் இருக்கிறது. ஆகவே நல்லமுறையில் தங்கள் பணியினை ஆற்ற அவர்களுக்குத் தமிழ்நாடு பூராவுக்கும் செல்லுபடியாகக் கூடிய ரயில்வே பாஸ் இலவசமாக வழங்கப்படவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனி டெலிபோன் வசதி தேவை என்றும் சொல்லப்பட்டது. டெலிபோன் என்று சொல்கிற நேரத்தில் இருக்க இருக்க கட்டணம் உயர்ந்து கொண்டே போகிறது. நாங்கள் வாங்குகிற அலவன்சில் பாதி டெலிபோன் கட்டணத்திற்கு ஒதுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக டெலிபோன் வசதி அவசியம் செய்துதர ஆவன செய்யவேண்டும் என்று கேட்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது எனது கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை ஏற்கனவே படித்தும் காட்டினேன். இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க் கட்சியாகச் செயல்படுகிற கட்சிகள் இரண்டுதான் இருக்கின்றன. மற்ற பல்வேறு கட்சிகளும் ஒருவேளை ஆளும் கட்சியோடு கூட்டாக இல்லை என்றாலும் அவர்கள் தோழமைக் கட்சி என்ற நிலை எடுத்திருக்கிறார்கள். ஆக உண்மையில் எதிர்க் கட்சியாக இருப்பது இரண்டு கட்சிதான் என்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

இதற்கு முந்திய மானியத்தின் மீது முடிவுரையாற்றும்போது முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எதிர்க்கட்சிக்குரிய பெரிய மரியாதை கொடுத்து அவர்களது ஆலோசனைகளையும் கேட்டுக்கொண்டுதான் செயல் படுகிறோம் என்றார்கள். எதிர்க்கட்சி—காங்கிரஸ் கட்சி 60 லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இன்று இருக்கிற தேர்தல் அடிப்படையில் நாங்கள் இங்கே 15 பேர்கள்தான் வருவதற்கு வகை இருக்கிறது. இருந்தாலும் கூட பெரிய எதிர்க்கட்சி என்ற முறையில் காங்கிரஸ்தான் செயலாற்றி வருகிறது என்பதை முதல் அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.





அடுத்தபடியாக, கழிந்த பல ஆண்டுகளாக எதிர்க்கட்சிக்கு என்று ஒரு அறை இருந்தது, எதிர்க்கட்சித் தலைவருக்கு என்று ஒரு அறை இருந்தது. என்ன காரணமோ தெரியவில்லை, அந்த உரிமை இப்போது மறுக்கப் பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிக்கு இந்த சௌகரியங்கள் இல்லாமல் எந்த முறையில் எங்கள் காரியங்களை நடத்த முடியும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்றத்தில் எங்களுக்கு அளிக்கப்படுகின்ற பேப்பர்கள் இன்றைக்கு மானியக் கோரிக்கை என்றால் அதற்கு முந்தைய நாள் இரவுதான் எங்கள் அறையில் குறிப்புகள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. பில்கள் கூட ஒரு நாள்தான் முன்னதாகக் கொடுக்கிறார்கள். இப்படி கால அவகாசம் கொடுக்காமல் குறுகிய நேரத்தில் இவைகளைக் கொடுப்பதால் சட்டமன்றத்தில் நாங்கள் கடமைகளை எந்த முறையில் ஆற்ற முடியும் என்பதைச் சுட்டிக்காட்டு கிறேன். இந்தக் குறைபாடுகளையெல்லாம் நீக்குகின்ற முறையில் இரண்டு நாட்களுக்கு முன்னதாக இவைகளை எல்லாம் கொடுக்கும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சட்டமன்றத்தில் நான்கைந்து ஆண்டுகளாக ஒரு நிலையைப் பார்க்கிறேன். இங்கு வேலை செய்கின்ற லாஸ்ட் கிரேடு பியூன்கள் டெம்பரரி ப்யூன்களாகவே இருக்கிறார்கள். சிலர் பர்மனென்ட்டாக இருந்தாலும் அவர்களுடைய நிலையும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இன்றைய ஆட்சியில் இருக்கிற அமைச்சர்களானாலும் அங்கத்தினர்களானாலும் சரி, இந்த மன்றத்தில் என்னைவிட அதிக அனுபவம் பெற்றவர்கள். கடைநிலை ஊழியர்களின் குறைகளை நாம் நிச்சயமாகச் சிந்திக்க வேண்டும். அவர்களுடைய மறுவாழ்வுக்கு வழி செய்ய வேண்டும். உலகத்தில் எதேதற்கோ என்ன என்னவோ செய்ய வேண்டுமென்று கூறுகிற நாம் காலையிலிருந்து நம்மோடு இருந்து, நாம் எவ்வளவு நேரம் இருக்கிறோமோ அவ்வளவு நேரம் இருந்து நம்மோடு நமக்குச் சேவை செய்கின்றவர்களுக்கு நாம் நன்மை செய்யாவிட்டால் வேறு நாம் என்ன செய்ய முடியும்? சிலர் தற்காலிகமாக வேலை பார்த்து வருகிறார்கள். ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் டெம்பரரியாக வேலை பார்த்துவிட்டால் வேறு இலாக்காக்களிலாவது அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் 'ஸீரோ அவர்' பிரச்சினையைப் பற்றிப் பேசினார்கள். 'ஸீரோ அவர்' சென்ற ஆண்டுவரையில் நல்லமுறையாகப் பயன் பட்டு வந்தது. இந்த ஆண்டு நடைமுறையில் வரவில்லை. 'ஸீரோ அவர்' என்பது நாடாளுமன்றத்தில்கூட பயன்தரத்தக்க வகையில் இருக்கிறது. அமைச்சர்களிடமிருந்து விளக்கம் கேட்டுத் தெரிந்துக்கொள்ளக்கூடிய முறையில் 'ஸீரோ அவர்' பயன்பட்டு வந்தது. 'ஸீரோ அவர்' மீண்டும் நல்ல முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமென்றும், அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமக்கு சட்டமன்றத்திற்கு அருகில் முன்பு ஒரு கேன்டீன் இருந்தது. இப்போது சற்று தூரமாக அமைந்திருப்பதால் எல்லா அங்கத் தினர்களுக்கும் இடையூறு ஏற்படுகிறது. ஆகவே, சட்டமன்றத்தோடு சேர்ந்து பக்கத்தில் கேன்டீன் அமைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1971 ஜூலை 16

அடுத்தபடியாக, எதிர்க்கட்சிகள் எதைக் கூறினாலும், அதற்கு ஆதாரங்கள் வேண்டுமென்று கேட்கின்ற தொனியை நாம் அடிக்கடி கேட்கிறோம். ஆனால், நாங்கள் ஆதாரத்திற்கு எங்கே போவது என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது. அரசாங்கத்திடம் எல்லா ரிகார்டுகளும் இருக்கின்றன. நூற்றுக்கு நூறு உண்மை என்று தெரிந்த விஷயங்களுக்குக்கூட ஆதாரத்தோடு கூற வேண்டுமென்று சொல்கிறோம். ஆதாரத்திற்கு என்ன வழி? ஆகவே, எல்லா அங்கத்தினர்களுக்கும் பயன்படுகிற அளவிலே செகரடேரியட் அளவில் ஒரு செகரடிரியை அமைத்துக்கொடுத்து, நாங்கள் எந்த ஆதாரத்தைக் கேட்கின்றோமோ அதைப் பெற்றுத் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் நாங்கள் உரையாற்றும் போது, ஆதாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு உரையாற்றுவதற்கு வழி ஏற்படும், இந்த மன்றத்தின் தரமும் உயர்ந்து விளங்க வழிவகை ஏற்படும். சிலசமயங்களில் நாம் உண்மை என்று நம்பி கூறும் காரியங்கள்கூட தவறாக வந்துவிடுகின்றன. ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் செகரடரியை அமைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நேரத்தை நீட்டிக்க பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நான் யாருடைய மனத்தையும் புண்படுத்த வேண்டுமென்று கூறவில்லை. இந்தச் சட்டமன்றத்தின் தரம் பாதுகாக்கப்பட வேண்டும். எதிர்கட்சியில் இருக்கிறவர்களுக்கு ஆதாரம் கிடைக்காத நிலை இருக்கிற காரணத்தினால் சிலவற்றைக் கூறுமல் இருக்க முடியாது. அப்பொழுது ஆளும் கட்சி அங்கத்தினர்களும் குறிப்பாக அமைச்சர்களும் அவற்றைப் பொறுமையோடு கேட்டு, தாங்கிக் கொள்ளக்கூடிய நிலை இருக்க வேண்டும். அமைச்சர்களே கோபப்பட்டு விட்டால், எங்கள் நிலை என்னவாகும் என்பதை முதலமைச்சர் அவர்கள் கவனித்து இம்மாதிரியான நிகழ்ச்சிகள் வாராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, ஹாஸ்டலைப்பற்றி எல்லோரும் குறிப்பிட்டு விட்டார்கள். கெஸ்ட்டுகள் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. கெஸ்ட்டுகள் வந்தால் ஒரு நாளைக்கு இரண்டு நாட்களுக்குத் தங்குகிறார்கள். கெஸ்ட்டுகளுக்கென்று ஹாஸ்டலுக்கு அருகிலேயே ஒரு பெரியதனி அறை அமைத்துக்கொடுத்தால் அவர்கள் தங்குவதற்குச் சௌகரியமாக இருக்கும், அங்கத்தினர்களுக்கும் தொல்லை ஏற்படாது.

நம்முடைய ஹாஸ்டல் 65 லட்சம் ரூபாய் செலவில் கட்டியிருக்கிறோம். அதைப் பராமரிக்கும் பொறுப்பு பி.டபிள்யூ. டிபார்ட்மெண்டாரிடம் இருக்கிறது. ஹாஸ்டலில் தண்ணீர் வசதியில்லாமை, போன்ற மற்றக் கஷ்டங்கள் இருக்கின்றன. அதையும் கவனித்து, குறைகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Mr. Speaker, Sir, at the very outset I would like to say with great sorrow that our status in India today is in a very pathetic condition, in the sense that there is complete lopsided arrangement. As far as the position of the ruling party is concerned, there is a huge ruling party and a very small opposition party. All the opposition parties put together or separately cannot qualify themselves to call themselves as an official opposition side. That is the tragic state of our Legislature in Tamil Nadu. I am not going into the reasons and other things for the same. But that is the position. We have to function in this tragic set-up. How exactly are we going to function in this way and whether the rules are going to be changed substantially to see that we are able to function a little better—all these points I would request the Hon. Minister concerned, the Leader of the House, the Hon. Speaker, everybody including the hon. Members to give serious consideration to do something about it. Because of pauchy of time I am not able to give certain ideas. There are a number of suggesions which I would like to see that it is possible.



1971 ஜூலை 16] [Dr. H. V. Hande]

Whenever an Hon. Minister or the Hon Chief Minister talks and when the opposition members want to get up and say something. I expect the Hon. Chief Minister and all the members of the Cabinet to sit down and not to simply brush aside and do something like that. Because we have no other opportunity. There is a huge.........

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் நடக்காததையெல்லாம் சொல்கிறார்கள். யார் எழுகிற அளவிலும் குறிப்பாக கட்சித் தலைவர்கள் எழுந்திருக்கும்போது யாருக்கும் அனுமதி மறுக்கப்படுவதில்லை.

Dr. H. V. HANDE: I am happy if it is so. So many times the expression of the Ministers and the manner in which they would not like every one to get up, all these things are there. All that I am requesting is this. I want the Hon. Ministers and the Hon. Chief Minister to be a little liberal. We do not have an official opposition party now. Before 1967 it was possible for the D.M.K. to get things done because there was an opposition party. By the very presence of 40, 50 persons on the opposition side, they were able to get things done by persuasiveness. That advantage we do not have. I would not ask you to provide that advantage. It is not possible in democracy. The Ministers should bear in mind that we are functioning with tremendous disadvantage. That is another point that I ould request the Hon. Chief Minister and other Ministers to appreciate.

Then again, I want our Secretariat, especially Assembly Department, to be a little more helpful, in that I am not casting any aspersion on anybody—they have, to a great extent, acceded to our demands. We are having about two members of staff to get things done. As Thiru James pointed out we do not get any records. We do not get copies of G.Os. and so many things which we want. If a sort of a department is there with a higher responsible Officer, who has a greater responsibility or an Officer to give better orders at a higher level, if such an officer can be appointed to go into any Department and give us official records it will be better. We should not be made to run to the Information and Publicity Department to get copies; if such an arrangement can be done, it will help us to discharge our duties better.

Then I refer to the archaic system of the Governor addressing the Joint Session of the Legislature. A number of times we have stated that this system should be changed. Instead of putting all the words that the Hon. Chief Minister wants to say into the mouth of the Governor, the Hon. Chief Minister himself can address the joint session and take responsibility for it. When the Hon. Chief Minister was the Deputy Leader of the Opposition, certain suggestions were made by him. I request him to bear that in mind and see how best we can make it possible for the Chief Minister to address the joint session.

Then I come to the conditions prevailing in the Legislators' Hostel. I would request the Hon. Chief Minister and the Hon. the Leader of the House to look into the fantastic condition of the hostel. Legislators, both M.L.As. and M.L.Cs. are not able to discharge their duties because they do not have facilities. They do not have a private place to go and read the questions that are to be answered the next day. So some sort of re-arrangement and reorganisation of the hostel is necessary to provide more facilities for the legislators.

Finally, I come to another matter. A number of Members belonging to several parties have requested that their emoluments have to be raised. As I stated in the meeting of the Business Advisory Committee, what we say here should be stated in the public platform also. We should not say that though the pay of legislators is increased, the pay of the N.G.Os. has not been increased. So we should come to an understanding that this matter would not be utilised for party propaganda purposes.

Then I want to stress that Members should be given railway passes. A number of Members could not utilise the bus passes and so railway passes should be issued to them. Now the Members are paid the railway fare for their to and fro journeys......

MR. SPEAKER: So many Members have stressed this point. It is enough if the Member says that he also supports the issue of railway passes.

DR. H. V. HANDE: Yes, Sir,

Then I come to the tape-recorder. If a tape-recorder is installed in the Assembly Office, it would avoid confusion. I request the Hon. Chief Minister and the Hon. the Leader of the Opposition to give serious consideration to the necessity of having a tape-recorder.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஸ்பீக்கர் சார், நான் சுருக்கமாகப் பேச இருக்கிறேன், காரணம் நேரம் அதிகமாகிவிட்டது, மற்றொன்று நேரடியாக உங்களைத்தானே நாங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமேதவிர இது சரியல்ல என்று எடுத்துச்சொல்ல இதிலே எங்களுக்கு உரிமையில்லை. வேறு சில உறுப்பினர்கள் சொல்லியிருந்தாலும்கூட, சில குறிப்பிட்ட முக்கியமான விஷயங்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.



நம்முடைய சட்ட மன்றத்தின் வேலைகளுக்காக என்று ஒரு தனி அச்சகம் ஏற்படுமானால் பல விஷயங்களை விரைவாக அச்சிடுவதற்கும் அங்கத்தினர்களுக்கு உடனுக்குடன் கொடுப்பதற்கும் வசதியாக இருக்கும். சட்ட மன்ற நடவடிக்கைகள், கேள்வி பதில்கள் பூராவும் மறு நாளே லாபியிலே அன்கரெக்டட் காப்பியாக வைக்கவேண்டும். பல சட்ட மன்றங்களிலே அப்படித்தான் வைக்கிறார்கள். நேற்று சட்ட மன்றத்திலே என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ள அது வசதியாக இருக்கும். லைப்ரரியில் 10 நாட்களுக்குப் பிறகுதான் வருகிறது. நேற்று வராத உறுப்பினர் இன்றைக்கு மன்றத்திற்கு வந்தால் நேற்று சட்ட மன்றத்திலே என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வசதி இருக்க வேண்டும் என்ற முறையிலே அதை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் வசதிகள் வேண்டுமென்று கேட்பவனல்ல, வசதிகளைக் குறைத்துக் கொண்டு வருகிறவன். சட்ட மன்ற உறுப்பினர்கள் என்றால் எக்ஸ்க்ளுசிவ் ஆக சட்டமன்ற உறுப்பினர்கள் தான் பஸ்ஸிலே அனுமதிக்கப்படவேண்டும். வேறு யாராவது ஏறினால் "நோ, எம்.எல்.ஏ. ஒன்லி, ப்ளீஸ்" என்று சொல்லிவிட வேண்டும். மற்றவர்களுக்காக வேண்டுமென்றால் 4 பஸ்கள் போடலாம். எனவே எம்.எல்.ஏ.க்கள் பஸ் என்றால் எம்.எல்.ஏக்கள் தவிர சொந்த மனைவியாக இருந்தாலும் ஏறக்கூடாது என்று கட்டுப்பாடு வைத்துவிடவேண்டும். ஏனென்றால் பேசக்கூட முடியவில்லை.

சட்ட மன்ற விடுதியிலே தங்கியிருக்கின்றபொழுது சட்ட மன்றக் கூட்டம் நடைபெறுகிறபொழுது தன்னுடைய பெயரிலே எடுத்து மற்றவர்களைத் தங்க வைப்பது ரொம்ப ரொம்பத் தவறு. சட்ட மன்ற விடுதியின் கேன்டீனிலே நாங்கள் உட்காருவதற்குக்கூட அவஸ்தைப்படுகின்றோம். என்னைப் பொறுத்த வரையில் அடையாளம் புரியாமல் இருந்தால் இருக்கலாம். நாங்கள் க்யூவில் நிற்கிறோம். அப்படி நின்று ஏதோ சாப்பிடுகிறோம், சாப்பிட்டுவிட்டால் வயிற்றுவலிதான் வருகிறது. 2 ரூபாய், இரண்டரை ரூபாய் என்று போடட்டும், நல்ல சாப்பாடு போடட்டும். அதோடு எம்.எல்.ஏ. க்கள் தனியாக அமர்ந்து சாப்பிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். சட்டசபை உறுப்பினர்களுக்குத் தனி அறை, சாப்பிடுவதற்குத் தனி அறை, போக்குவரத்து வசதிகள் இவைகள் எல்லாம் எல்லா இடங்களிலும் நாடாளுமன்றத்திலே இருக்கிறது, கேரளாவிலே இருக்கிறது, எனவே இங்கேயும் அந்த வசதிகளைச் செய்து தரவேண்டும். எல்லா இடங்களிலும் இருந்து வருகிறது. இது பிரத்தியேக உரிமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுக்கும் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் டெலிபோன் கொடுத்திருக்கிறார்கள். தொடர்பு வேண்டுமென்று சொன்னால் டெலிபோன் வசதிகள் அவசியம். இங்கே இருக்கிற செக்ஷனிலே எங்களுக்கு அவ்வப்பொழுது என்னவேண்டுமோ அதை டைப் செய்து தருகிறார்கள். குறிப்பாக பெண்கள் அவர்கள் நன்றாக வேலை செய்கிறார்கள். ரெபரன்ஸ் அன்ட் ரிசர்ச் செக்ஷனை நாங்கள் நல்ல முறையிலே பயன்படுத்தி வருகிறோம். இங்கே இருக்கக்கூடிய பணியாளர்களுக்குத்தான் புரமோஷன் கொடுக்கவேண்டும். எல்லா அதிகாரிகளும் உங்களுக்குக் கீழே உள்ளவர்கள்தான் வரவேண்டும், வேறு டிபார்ட்மெண்டிலிருந்து இங்கு வரக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது.

நாம்தான் குறைந்த சம்பளம் அலவன்ஸ் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். மற்ற இடங்களிலே உள்ளவர்கள் அதிகமாக வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

இரயில்வே பாஸ்களைப் பொறுத்தவரையில் மேற்கு வங்காளம், பீகார் போன்ற மாநிலங்களில் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். நான் பஸ்ஸை விரும்புபவன். பஸ் பாஸ்கள் கொடுக்கிறார்கள். போட்டோ எல்லாம் அனுப்பி ஒன்றரை மாதம் ஆகியும் இன்னும் எனக்கு பாஸ் கிடைக்கவில்லை. இவையெல்லாம் சீக்கிரமாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். சட்டமன்ற விடுதியிலே தங்கவேண்டுமானால் தினசரி இரண்டரை ரூபாயும், மாதம் பூராவும் என்றால் 60 ரூபாயும் என்று இருப்பதை 50 ரூபாயாகக் குறைக்கலாம் இண்டர்செஷன் பீரியடில் குறைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு தாங்கள் இன்னும் எங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், நாங்கள் எங்களுடைய வேலைகளைச் செய்வதற்கான வசதிகளைச் செய்வதற்கும் தாங்களே ஆலோசித்து பல ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். பல ஆண்டுக்காலமாகவே சிறந்த மாபினையும் சிறந்த முறையையும் வகுத்து, பிற மாநிலச் சட்ட மன்றப் பேரவைகள் எல்லாம் கற்றுக்கொள்ளத் தக்க அளவுக்கும் அவர்கள் பாராட்டத் தக்க அளவுக்கும் நின்று நிலைபெற்று வருகின்ற இந்தச் சட்ட மன்றத்தின் பெருமையும் புகழும் தொடர்ந்து நடைபெற்றுச் செல்கின்ற வகையில் இந்தப் பேரவையைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கி வருகின்ற நிலையிலே நான் எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தங்களுடைய தலைமையின்கீழ் இயங்கி வரும் இந்தச் சட்டமன்றத் துறை பணிகளை எப்படி ஆற்றிவருகிறது என்பதைச் சொல்லி. உறுப்பினர்களுக்கான வசதிகள் பல்வேறு வகைகளிலே பெருக்கப்பட வேண்டுமென்ற காரண காரிய விளக்கங்களை உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த வசதிகளையெல்லாம் பெருக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டு. சட்டமன்றமே 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அப்பொழுதிருந்த தேவையையொட்டி அமைக்கப்பட்டதால் அதேயிடத்திலிருந்து கொண்டு நாம் பணியாற்றிக்கொண்டு வருவதால் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படுகின்றன. சட்டமன்றத்தை வேறு ஒரு இடத்தில் புதிதாக எல்லா வசதிகளுடனும் கூட கட்டவேண்டுமென்றால் அதற்குப் பெருஞ்செலவு ஏற்படுகிறது என்று எண்ணித்தான் அந்த எண்ணத்தை உருவாக்கி, அந்த எண்ணத்தைத் தள்ளிப்போட்டு பிறகு அந்த நிலையிலேயே இருக்கிறது. வேறு பல வகைகளிலேயும் செலவினத்திற்குத் தேடிக்கொண்டிருக்கும் நிலையில் சட்ட மன்றக் கட்டிடத்தை கட்டுகின்ற வகையில் செலவழிக்கக்கூடாது என்பதற்காகத் தள்ளி வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதைப்போல், சுட்டிக்காட்டியிருப்பதைப்போல மன்ற உறுப்பினர்கள் தனியாகப் பேசுவதற்கு வேறு பல சட்ட மன்றங்களிலே இருக்கின்ற அளவில் இங்கு வாய்ப்பு, வசதிகள் இல்லை. இரண்டு பக்கங்களிலே இருக்கின்ற தாழ்வாரங்களைத்தான் உட்காருவதற்கு ஏற்றதாக வைத்திருக்கிறோம். அங்கும்கூட



பக்கத்திலே பக்கத்திலேதான் உட்கார்ந்து பேச வேண்டுமே தவிர எதிரும் புதிருமாக உட்கார்ந்து பேசுவதற்கான வாய்ப்புக்கூட இங்கேயுள்ள தாழ்வாரப் பகுதிகளில் இல்லை.

அது மட்டுமல்லாமல், உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், உறுப்பினர்கள் மட்டும் அல்லாமல் மற்றைய துறை அதிகாரிகள் எல்லோரும் ஊடே ஊடே வந்து போகும் அளவில் நடைபாதையாகவும் இருக்கிறது, உறுப்பினர்கள் தங்குமிடமாகவும் இருக்கிறது. என்றாலும்கூட அந்த வசதிக் குறைவுகளை நீக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது, நிதி வசதி வரும்பொழுது நிறைவேற்றப்பட வேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் இருக்கிறது, அமைச்சரவைக்கும் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சங்கடங்களைப் பொறுத்துக்கொண்டு நம்முடைய பணிகளை ஆற்ற வேண்டியவர்களாக இருந்து கொண்டு வருகிறோம்.

இங்கே சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்புகளைப்பற்றி உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். விரைவிலே அந்த நடவடிக்கைகள் அச்சிடப்பட்டு உறுப்பினர்களின் பார்வைக்கு வைக்கப்படவேண்டுமென்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் அச்சகத்துறையில் சிலபல நேரங்களில் தனிப் பிரிவு ஒன்றை ஒதுக்கி இந்தச் சட்ட மன்றத் துறையைப் பொறுத்தவரையில் வருகின்ற நிகழ்ச்சிக் குறிப்புகள், நடவடிக்கைக் குறிப்புகளை அச்சிட்டு உடனுக்குடன் தருவதற்காக ஒதுக்கி வைத்தாலும் அங்கே வரும் வேறு பல வகையான வேலைகள் செய்யப்படுவதால் காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. அது உள்ளபடியே வருந்தத்தக்கதுதான். அந்த நிலை நீடித்துக்கொண்டுதான் வந்திருக்கிறது. மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சரவர்களோடு இது பற்றிப் பேசி அதற்காக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. தனி அச்சகம் உயர்நீதி மன்ற நடவடிக்கைகளை அச்சடிக்க இருப்பதைப்போன்று சட்ட மன்றத் துறைக்கும் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அது அச்சகத்துறையின் மேற்பார்வையின்கீழ் அமைந்து பணிகளையாற்ற முயற்சிக்கப்படும் என மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கேற்ற அளவிற்கு இட வசதி, மற்றவைகளெல்லாம் இந்தச் சட்ட மன்ற இடத்தையொட்டி கோட்டைக்குள்ளேயே இருக்குமா என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டியதொன்றாகும். முயற்சிகள் எடுப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். நடவடிக்கைகள் எதிர்காலத்திலே மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் பஸ்களில் எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே செல்வது பொருத்தமாகயிருக்கும் என்ற கருத்தினைச் சொன்னார்கள். அது இப்பொழுது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால் இந்தத் துறையின் மூலம் அது பற்றித் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதிலே எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே போவதற்கும், வருவதற்கும் வசதிகளைச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளக்கூடும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எம்.எல்.ஏ.க்களுக்குத் தனிச் சாப்பாட்டு இடம் வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். இந்தத் துறையைக் கொண்டு, அங்கேயிருக்கும் சாப்பாட்டுக் கூடத்திற்குப் பக்கத்தில் எம்.எல்.ஏ.க்களுக்குத் தனியாக ஒதுக்க இட வசதி இருக்கிறதா என்று ஆராயவும், எம்.எல்.ஏ.க்கள் சாப்பிடத் தனி வசதிகளைச் செய்யவும் முயற்சி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மௌப்பின் அவர்கள் கூறியதுபோல் இங்கே சட்டமன்றமே 2 மணி, 2½ மணிக்கு முடிந்து செல்லுகின்ற நேரத்தில் அங்கே சாப்பாடு இல்லை என்ற குறைபாடு, இப்படி எம்.எல்.ஏ.க்களுக்குத் தனி இடம் ஒதுக்குவதன் மூலம் அந்தக் குறைகளைப்போக்க தனியிடம் ஓரளவிற்குப் பயன் படும் முறையிலே அமையும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இரயில்வே பாஸ் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்பதை இந்தப் பேரவையில் பல்லாண்டு காலமாக எடுத்துச் சொல்லி வருகிறார்கள். அதுவும் ஆராய்ந்து பார்த்து ஆராய்ந்து பார்த்து பெரும் செலவு ஏற்படும் என்ற காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டு; நிறுத்தி வைக்கப்பட்டு அந்த நிலையிலேயே இன்றும் இருக்கிறோம். ஏனென்றால் அதனால் பெரும் செலவு ஏற்படுகிறது. 1967-ம் ஆண்டு கூட இந்திய சர்க்காருக்கு எழுதி அந்தப் பொறுப்புகளை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னோம். ஆனால் பாஸ் தருகிறோம், அதற்கான பணத்தை நீங்கள்தான் தர வேண்டுமென்று திருப்பி எழுதியிருக்கிறார்கள். இதனால் பெரும் செலவு ஏற்படுகின்ற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்கு முன்பு உறுப்பினர்களுக்கு பஸ் பாஸ் தந்துவிடலாம் என்று குறிப்பிட்டார்கள். அதற்கான வேலைகள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நேரமே கொடுத்திருக்கலாம் என்றுதான் எண்ணினோம். எனினும் உறுப்பினர்களுக்கு விரைவில் கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுத்துக்கூறியதைப்போல் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கக்கூடிய அந்த நிலைமைகள், தங்களுடைய படி, சம்பளம் ஆகிய வசதி வாய்ப்புகள் போதுமானதாக இல்லை என்று எடுத்துக் கூறினார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சில மாநிலங்களில் அடிப் படைச் சம்பளம் 250 ரூபாயாகத்தான் உள்ளது. சிலவிடங்களில் காம்பன் சேட்டரி அலவன்ஸ் என்றும், கன்சாலிடேட்டெட் அலவன்ஸ் என்றும், ஸ்பெஷல் அலவன்ஸ் என்றும் தனியாகச் சிலவிடங்களில் வைத்திருக்கிறார்கள். இப்பொழுது தமிழ்நாடு, மேற்கு வங்காளம், பீகார், மகாராட்டிரம், திரிபுரா, அசாம் ஆகிய மாநிலங்களிலே 250 ரூபாய் சம்பளம் என்றும், படிகள் என்ற வகையில் 20 ரூபாய், 17 ரூபாய், 21 ரூபாய் என்ற வகைகளிலேயும், சிலவிடங் களில் போக்குவரத்துப்படி என்று 50 ரூபாய் தனியாகவும் தருகிறார்கள். மகா ராட்டிரத்திலே 150 ரூபாய் கன்சாலிடேட்டெட் அலவன்ஸ் என்று தனியாகத் தருகிறார்கள். உத்தரப்பிரதேசத்திலே சம்பளம் 300 ரூபாய் தனியாகத் தருகிறார்கள். உத்தரப்பிரதேசத்திலே சம்பளம் 300 ரூபாய் தருகிறார்கள். ஆனால் அங்கே படியை 15 ரூபாயோடு நிறுத்திவிடுகிறார்கள். இப்படிப்பட்ட முறையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களின் நிலையை உணர்ந்து, அவர்களுக்குப் பல செலவுகள் ஏற்படுகின்றன, உள்ளபடியே அந்தச் செலவுகளைச் சரிக்கட்டிக்கொள்ளக்கூடிய நிலைமையில்லை என்பதையெல்லாம் உணர்ந்து அவர் களுடைய சம்பளம் 250 ரூபாய்தான் என்றும், படி 20 ரூபாய் என்றும், அவர் களுக்கு அலவன்ஸ் என்று 100 ரூபாய் வழங்குவது என்றும் மாண்புமிகு முதல மைச்சரவர்கள் இப்பொழுது முடிவு செய்திருக்கிறார்கள். காம்பன்சேட்டரி அலவன்ஸ் என்று முடிவு செய்திருக்கிறார்கள். (குறுக்கீடு). மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறுகிறார்கள், உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு மாதச் சம்பளத்தைப் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்ட நிதியில் ஈடுபடுத்த வேண்டுமென்று. அந்த முடிவைத் திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இந்த மாதத்திலே வாங்கும்



சம்பளத்தை, அதைக் கொடுத்துவிட வேண்டுமென்ற கூட்ட நிதிச் உறுப்பினர் களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மற்றக் கட்சியினரைப் பொறுத்த வரையில் அவர்களின் நிலையைப் பொறுத்து வாங்கிக் கொள்ளப்படும். ஏனென்றால் இப் பொழுது சட்ட மன்றம் நடக்கின்ற காரணத்தால் படிகளைப் பெற்றுக்கொண் டிருப்பதால் இந்த மாதச் சம்பளத்தைக் கொடுப்பதில் அதிகக் கடினம் வராது என்பதால் இந்த மாதச் சம்பளத்தைத் தரலாம். நகரத்திலே இருக்கின்ற உறுப் பினர்களுக்குப் படி கொடுக்கப்படுகிறது, எல்லோருக்கும் சேர்த்து. போக்கு வரத்து என்பதில் இரயில்வே ஒன்றைத் தான் வைத்திருக்கிறோம். அந்த வகை யிலே போக்குவரத்துப் படியாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். பஸ் பாஸ் கொடுக்கப்படவிருப்பதால் அவைகள் பயன்படும், அரசாங்க பஸ் என்று வரும் பொழுது சென்னையிலே அது பயன்படக்கூடிய அளவில் இருக்கும். ஆகவே இந்த 100 ரூபாய் காம்பன்சேட்டரி அலவன்ஸ் என்று தனியாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவு தந்திருக்கிறார்கள்.

• • • •

மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய விவாதத்தை நடத்த ஏற்றவகையில் பல்வேறு புள்ளிவிவரங்களையும் மற்றவைகளையும் தர வேண்டு மென்று எடுத்துக் கூறினார்கள். ரிசர்ச் அண்ட் ரெஃபரென்ஸ் செக்ஷன் என்று வைத்து ஒருசில அதிகாரிகளும் மற்றவர்களும் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். முன்கூட்டியே எழுதி னால் கூடுமான அளவிற்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறார்கள். அதை விரிவு படுத்துகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுது விரிவுபடுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் இந்த வகையிலே எடுத்துக்கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இரு சபைகளையும் சேர்த்து நடத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப் பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது உள்ள சட்டதிட்டத்தின்படி . . .

DR. H. V. HANDE : Instead of the Governor's Address, I wanted Chief Minister's Address. I did not say that both Houses should combine.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கும் அரசியல் அமைப்புச் சட்டத்திலே அந்தத் திருத்தம் கொண்டு வந்து நிறை வேற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போது எங்களுக்கேகூடச் சங்கட மாக இருக்கிறது. மேலவையும் இங்கே உட்கார்ந்து விட்டால் ஒரே பதிலாகச் சொல்லிவிடலாம். ஆனால் அதற்குச் சட்டதிட்டம் இடம் தரவில்லை.

விடுதி வசதிகளைப் பற்றிச் சொன்னார்கள். தண்ணீர் வசதி தடைப் படாது இருக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆதாரத்தோடு பேச வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆதாரத்தோடு பேச வேண்டுமென்று மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் வற்புறுத்து வதற்குக் காரணம் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான். பேசும்போது அதற்கான ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டு வரவேண்டும், அப்படி இல்லையென்றாலும் நிரூபிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

தொலைபேசி வசதிகளைப் பற்றிச் சொன்னார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒவ்வொரு கட்சி ஆபீசுக்கும் டெலிபோன் வசதி செய்து கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கட்சிகளுக்குத் தனி அறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறைகளுக்கு டெலிபோன் வசதி செய்து கொடுப்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு. எம். சுரேந்திரன்: தொலைபேசி இப்போதே ரூமில் இருக்கிறது. ஆனால் சரியாக வேலை செய்வதில்லை. லைன்ஸ் போதாது என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அந்தக் குறைபாடுகளைப் போக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்குவதற்கு மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் தலைமையின் கீழ் ஹவுஸ் கமிட்டி இருக்கிறது. அதன்மூலம் அந்தக் குறைபாடுகளைப் போக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இதிலே உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவை எல்லாம் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே இந்த அரசு முழு கவனமும் செலுத்தும். இந்த மானியத்தைப் பொறுத்தவரை பேரவைத் தலைவரைத் தலைமையாகக் கொண்டிருக்கின்ற மானியமாக இருக்கின்ற காரணத்தால் பொதுவாக வெட்டுப் பிரேரணைகளை வற்புறுத்தாமல் இருப்பது மரபு. அந்த மரபின்படி வெட்டு பிரேரணைகளை வற்புறுத்தாமல் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஸ்தாபன காங்கிரசுக்கு ஒரு அறை வேண்டுமென்று கேட்டோம். ஒரு அறை ஸ்தாபன காங்கிரசுக்குக் கொடுத்தால் உதவியாக இருக்கும். அதைக் கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கட்சிகளுக்கு இடங்கள் ஒதுக்கப்படுவதைக் குறித்து கழக அரசு வெகு தாராளமாக இருந்து வந்திருக்கிறது. 1967-ம் ஆண்டில் கழகம் 138 இடங்களைப் பெற்றபோது காங்கிரஸ் கட்சி 50 இடங்களை மட்டும் பெற்றபோதும் காங்கிரஸ் கட்சி எப்போதும் அனுபவித்து வருகிற அந்த இடத்தை கழகம் நியாயமாகப் பெற்றிருக்கவேண்டும். ஆனால் அப்போதிருந்த சட்டமன்ற மேலவை எதிர்க்கட்சித் தலைவர் வெங்கட்ராமன் அவர்கள் ஏற்கனவே அவர்கள் அனுபவித்து வந்த அந்தப் பெரிய இடமே அவர்கள் 50 பேராக ஆன பிறகும் வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது காங்கிரஸ் கட்சிக்கு அந்த இடத்தைத் தந்துவிட்டு ஏற்கனவே கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட இன்று சட்டசபை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிற இடத்தை நாங்கள் வைத்துக் கொண்டோம். இப்போது இன்னும் குறைந்த பிறகும் காங்கிரஸ் கட்சிக்கு அந்தப் பெரிய இடமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் சொல்லுவதற்குக் காரணம் பெருந்தன்மை என்று சொல்லாவிட்டாலும் அந்த அளவுக்கு விட்டுக் கொடுத்து நடந்து வருகிறோம் என்பதற்கு இவை எல்லாம் ஆதாரம்.

எதிர்க்கட்சித் தலைவருக்குச் சலுகைகள் வழங்க வேண்டும் என்பதைப்பற்றி நாவலர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது இலண்டன் மாநகருக்குச் சென்று வந்தபோது அங்கே எதிர்க்கட்சித் தலைவருக்கு என்னென்ன



சலுகைகள் இருக்கின்றன என்பதை இந்த அரசுக்கு உணர்த்துகிறேன் என்று கூறும் வகையில் எடுத்துக் கூறினார். அந்த ஜாடையைப் புரிந்து கொண்டு அப்போதே அந்தச் சலுகைகளைச் செய்து தந்திருக்க வேண்டும். நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்தஸ்து, கார் வசதி, கடைநிலை ஊழியர் வசதி எல்லாம் அளிக்க ஏற்பாடு செய்தோம். அப்போதிருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை வாங்கிக் கொள்ளவில்லை. அவருடைய கட்சி வாங்கிக்கொள்ள வேண்டாம் என்று கூறியதால் வாங்கிக் கொள்ளவில்லை. ஆனால் அன்று அவர்கள் 'கூடிய சீக்கிரத்தில் இவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக வருவார்கள், அப்போது அனுபவித்துக் கொள்ளலாம் என்று இந்த உத்தரவைப் போட்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். இன்று எதிர்க்கட்சித் தலைவராகக் கூட வரமுடியாத நிலைமை யாருக்கு ஏற்பட்டுவிட்டது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

இப்போதும் மேலவை எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் உரிய அறை கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்பு வாங்க மறுத்த சலுகைகள் இன்று வாங்க முடிவு செய்து அந்தச் சலுகைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே இருக்கின்ற கட்சிகளில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற நிலை இல்லை. கட்சிக் குழுக்கள்தான் இருக்கின்றன. நாடார் காங்கிரஸ் கட்சியின் தலைவர், திரு. தங்கமணி அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், திரு. மொய்தின் அவர்கள் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர், டாக்டர் ஹாண்டே சுதந்திராக் கட்சித் தலைவர் என்ற முறையில் குழுத் தலைவர்களாக இருக்கிறார்கள்.

அதனால்தான் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் கூட எதிர்க்கட்சித் தலைவர் தலைவராக இருக்க வேண்டுமென்ற முறையில் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் என்று இல்லாத நிலையில் அந்த முறை மாற்றப்பட்டு ஆண்டுக்கு ஒருவர் தலைவராக இருப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று காங்கிரஸ் கட்சிக்கு என்று ஒரு அறை கொடுத்தால் அடுத்த ஆண்டு அதை அடுத்த கட்சிக்குக் கொடுப்பார்களா என்று கேட்கக் கூடும். ஆகவே, காங்கிரஸ் கட்சிக்கு என்று அறை கொடுக்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: பெருந்தன்மையைப் பாராட்டுகிறோம். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு கட்சியும் தங்களுடைய வேலைகளைச் செய்ய ஒரு அறை கொடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் தலைவர் என்று இல்லாது ஒவ்வொரு கட்சிக்கும் இருந்து பணியாற்ற ஒரு அறை வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி ஒரு அறை தருவதைப் பற்றி யோசிக்கலாம்.

எல்லா வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

Mr. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 29,32,700 under Demand No. 6—State Legislature".

The Demand was put and carried and the Grant was made.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுறுகின்றன. மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

(6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.)

*A. Statutory Rules and Orders.*

160. Notification issued with G.O. Ms. No. 839, Home, dated the 24th March 1971, in regard to an amendment to the Tamil Nadu Distillery Rules, 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

161. Notification issued with Roc. No. 146975/70-E5, dated the 10th October 1970, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920, in the entire area of Lakkiampatty village panchayat in Dharmapuri district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

162. Notification issued with G.O. Ms. No. 1897, Rural Development and Local Administration, dated the 30th September 1970 in regard to modification of the Rural Development and Local Administration Department Notification S. No. 502 of 1960, published at pages 41–47 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 13th April 1960. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

*B. Reports, Notifications and Other Papers.*

@ 138. Policy note under Demand 25-A Welfare of the Backward Classes (Tamil).

---

@ Despatched to members on 14—7—1971.

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

SECOND SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

12TH, 13TH, 14TH, 15TH AND 16TH JULY 1971.

VOLUME VII (Nos. 1 TO 5.)


PAGES

**A**

ABDUL JABBAR, THIRU V. M.—
Budget (Revised) 1971–72 Voting:
**Elections**
**Head of State, Ministers and Headquarters Staff, Miscellaneous** ... ... ... ... ... 431–4[illegible]

ACCIDENT(S):
Bus, near Queen Mary's College ... ... ... 294–296

AGRICULTURE:
**Banana Plantation in Dharmapuri District** ... ... 402
Farms (Government) at Aduthurai, conversion of **buildings** ... ... ... ... ... ... 292
Intensive Cotton Cultivation Programme Palladam taluk ... ... ... ... ... 119–120

**AIRPORT:**
**Madras, State assistance for improvements** ... ... 114–116

ANANDANAYAKI, THIRUMATHI T. N.:
**Abkari (Amendment) Bill, 1971** ... ... ... 52–55, 80–81, 86

Budget (Revised), 1971–72, Voting:
Elections,
**Head of State, Ministers and Headquarters Staff,** Miscellaneous ... ... ... ... ... 413, 420–425
Stationery and Printing ... ... ... ... 245–247
**Welfare of the Backward Classes** ... ... ... 301, 303–306

A—*cont.*

PAGES

**ANANDANAYAKI, Thirumathi, T. N.**—*cont.*

- **City Municipal Corporation Act, 1919, alteration of Schedule IV (R)** ... ... ... ... ... 188
- **Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971** ... ... ... ... ... 168
- **Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971** ... ... ... ... ... ... 122–129, 138, 149, 153–154
- **Urban Land Tax (Amendment) Bill, 1971** ... ... 175–178, 179, 183

**ANIMALS:**

- **Mudhumalai Sanctuary, particulars** ... ... 33

**ARANGANNAL, Thiru Rama:**

- **Abkari (Amendment) Bill, 1971** ... ... ... 55–58

**ARUMUGHAM, Thiru S.:**

- **Budget (Revised), 1971-72, Voting:**
  - Welfare of the Backward Classes ... ... 322–323

B

**BANKS:**

- Madurai Sourashtra Co-operative Bank, enquiry ... 116–119
- Primary Land Development Bank, particulars ... 32

BILL(S):

- **Abkari (Amendment) Bill, 1971:**
  - Consid. ... ... ... ... ... ... 46–85
  - **Consid. cl.** ... ... ... ... ... 85–86
  - **Motion to pass**
  - **Passed** ... ... ... ... ... ... 86
- **City Civil Court (Amendment) Bill, 1971:**
  - Consid. ... ... ... ... ... ... 37–39
  - **Consid. cl.**
  - Motion to pass
  - **Passed** ... ... ... ... ... ... 39
- Court Fees and Suits Valuation (**Amendment**) Bill, 1971:
  - **Int.** ... ... ... ... ... ... ... 218



PAGES

B—*cont.*

BILL(S)—*cont.*

- Court Fees and Suits Valuation (Amendment) Bill, 1971—*cont.*
  - Message from Governor ... ... ... ... 218
- **Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971:**
  - **Consid.** ... ... ... ... ... ... 162–165
  - **Consid. cl.**
  - Motion to pass ... ... ... ... ... 165
  - Passed
- **Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971:**
  - **Consid.** ... ... ... ... ... ... 39–45
  - **Consid. cl.**
  - Motion to pass ... ... ... ... ... 45
  - Passed
- Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971:
  - **Message from Governor** ... ... ... ... 168
  - Consid. ... ... ... ... ... ... 165–170
  - Consid. cl. ... ... ... ... ... ... 170–174
  - Motion to pass ... ... ... ... ... 174
  - Passed
- **Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971:**
  - Consid. ... ... ... ... ... ... 87–90, 122–149
  - Consid. cl. ... ... ... ... ... 149–155
  - Motion to pass ... ... ... ... ... 155
  - Passed
- **Sales Tax (Surcharge) Bill, 1971:**
  - Message from Governor ... ... ... ... 37
  - Int. ... ... ... ... ... ... ...
- **Urban Land Tax (Amendment) Bill, 1971:**
  - **Consid.** ... ... ... ... ... ... 174–178
  - **Consid. cl.** ... ... ... ... ... ... 178–184
  - Motion to pass ... ... ... ... ... 184
  - **Passed**

PAGES

B—*cont.*

**BOARD(S):**

Advisory Board for salt works ... ... ... 2-3

**BRIDGE(S):**

**Cooum, near Poonamallee** ... ... ... ... 400-401

**BUILDINGS:**

**Agricultural Farms (Government) at Aduthurai,** conversion ... ... ... ... ... 292

C

**CALLING ATTENTION:**

Compulsory collection of payment towards I.M.S. loan from the agriculturists in Tirunelveli district. 36

**Palladam Constituency, hardship to people in villages** due to dearth of drinking water ... ... ... 120–122

Strike proposed by taxi drivers in Madras City on **19th July 1971** ... ... ... ... ... 409-412

**CHAIR:**

Land Improvement Board, election (Ann) ... 409

Rulings and Observations:

*Adjournment Motions:*

*Promulgation of Order under section 41 of the City Police Act:*

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the Chief Minister's statement ... ... ... 300

*Serious situation arising out of the new stand taken by the Central Government on reference of the Cauvery Water Dispute to Tribunal:*

Consent was withheld on the ground that there was no need for the motion in the light of the Chief Minister's statement ... ... ... 216

*Allegations:*

On 12th July 1971 when a Member persisted in levelling certain allegations, the Chair expunged those allegations and the connected interruptions as in his view those allegatons made without basis, might result in serious consequences ... 90



PAGES

C—*cont.*

**CHAIR—*cont.***

**Rulings and Observations—*cont.***

Privilege Matter:

***Disparaging remarks made by Thiru Sivappa, M.P., about the resolution passed by the House on the Cauvery Water Dispute:***

On the Chief Minister's drawing attention of the Chair to certain disparaging remarks made by Thiru Sivappa in the Lok Sabha about the resolution passed by the House on the Cauvery Water Dispute, the Chair observed that the remarks made by the Member of the Lok Sabha constituted, *prima facie*, a breach of privilege. As the custodian of the rights and privilege of the House and its Members, the Chair would not allow anybody to make inroads into those rights and privileges. However, in accordance with the conventions and procedures to be followed in dealing with such matters, he would refer the matter to the Speaker of the Lok Sabha for appropriate action and inform the House of the reply received in that regard ... ... ... 216–217

*Publication of expunged matter in 'Indian Express':*

On a matter of privilege given notice of by a Member regarding the publication of certain portions of the proceedings in the daily 'The Indian Express', the Chair held that the publication of portions ordered to be expunged constituted a breach of privilege, but that as a warning to the Press, in general, and the Indian Express in particular, was adequate, the matter might be dropped ... ... ... ... 209-210

*Questions and Answers:*

*Supplementary Questions:*

*Relevancy:*

Supplementaries should relate to the main question ... ... ... ... ... 196, 275

*Voting:*

In 'voting' besides the three stages— "*For*", "*Against*", and "*Neutral*" there was the fourth stage, namely, "Abstention" that is, some Members were not taking part in voting, though present in the House ... ... ... 84

C—*cont.*

CHEZHIAN, THIRU KOVAI—
**Budget, (Revised) 1971-72, Voting :**
**Elections,**
Head of State, Ministers and Headqurаters Staff, Miscellaneous ... 428–431

CINCHONA—
Plantation, Thanjavur district ... ... ... 403–405

COLLEGE(S)—
Chickkaya Naicker's College, Erode, fees collection ... ... ... ... ... ... 383–386
Engineering, Sandwich Courses at stduy ... ... 104
Law College at Madurai, proposal ... ... ... 5–7
Medical College, admission of Muslim students, number ... ... ... ... ... ... 33

COMMITTEE(S)—
Government Assurances, First Report (Fifth Assembly), presentation ... ... ... ... 217
Public Accounts, Report on Excess over Voted grants and Charged Appropriations, pesentation ... 300
Subordinate Legislation, Second Report (Fifth Assembly), presentation ... ... ... ... 217

CO-OPERATIVE(S)—
Madurai Sourashtra—Co-operative Bank, enquiry. 116–119
Match Societies, number ... ... ... 24
Mat Societies, number ... ... ... ... 24
Super-markets, establishment in small towns ... 291–292
Tea Factories, functioning ... ... ... 191–192

COOUM—
Imprvement Scheme, establishment of Dhobi Khanas ... ... ... ... ... ... ... 290
Improvement Scheme, revision of estimated amount. 289–290
River, operation of boat services ... ... ... 290

CORPORATION—
Textile Corporation, appointment of Legal Retaineds ... ... ... ... ... ... 287





C—*cont.*

COUNCILS—
Export Promotion Councils, review on work ... 15–16

COURTS—
Ramanathapuram district ... ... ... ... 101–102
Subordinate Courts' jurisdiction, constitution of Committee ... ... ... ... ... 287–288

D.

DAM(S)—
Noyyal River, repairs to ... ... ... ... 187–188
Palathurai village, construction ... ... ... 116
Vazhukkupparai and Varuthuppallam ... ... 401–402

DENNIS, THIRU N.—
Airport (Madras), State assistance for improvements... 114–116
Cooum Improvement Scheme, establishment of Dhobikhanas ... ... ... ... ... ... 290
Cultivation of salt ... ... ... ... ... 1
Engineering Colleges, Sandwich courses of study. 104
Leather factory at Wallajapet, setting up ... ... 101
Rental flats in Government Estate ... ... ... 402
Salt works, Advisory Board ... ... ... ... 2–3
Sodium Hydrosulphite Plant, Ramanathapuram ... 193–194
Sports stadium, construction at Kancheepuram ... 207
Subordinate Courts' jurisdiction, constitution of Committee ... ... ... ... ... ... 287–288,
Taxes, collection by village officers ... ... ... 388–390
Unemployed persons registered with Employment Exchanges, payment of allowance ... ... ... 287
Youth Goodwill Mission, visit to Madras ... ... 198–199

DEVARAJAN, THIRU M.—
Budget (Revised), 1971-72, Voting:
Welfare of the Backward Classes ... ... ... 317

DHARMALINGAM, THIRU A. P.—
Cotton Transport Rules, 1950, Amendments (R) ... 161–162

DHOBIKHANA—
Financial assistance to certain municipalities, particulars ... ... ... ... ... ... 32

PAGES

D—*cont.*

DIVISION(S)—
Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 81–84

DURAIMURUGAN, THIRU—
Budget (Revised) 1971–72, Voting:
Welfare of the Backward classes ... ... ... 328–332
Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... 131–133

DURAISAMI, THIRU S.—
Banians, export ... ... ... ... ... 399–400
Bar Association, Tiruppur, representation ... ... 194
Dams across Noyyal River, repairs ... ... ... 187–188
E.S.I. Dispensaries, increase in number ... 25–26
Fertilizer Factory in Coimbatore, proposal ... ... 16
Fertilizer Factory in Tuticorin ... ... ... 16–17
Hospital in Mangalam, closure ... ... ... 9–10
Industrial Estate in Tiruppur area ... ... ... 399
Intensive Cotton cultivation programme in Palladam taluk ... ... ... ... ... ... 119–120
Landless persons, allotment of lands, number ... 14–15
Noyyal river, desilting of channels ... ... 194–195
Stadium, construction at Coimbatore ... ... 205–206
Tiruppur Municipal officer, misappropriation of funds 24
Tyre retreading unit, Coimbatore ... ... ... 196–197

E.

EDMUND, THIRU G. R.—
Budget (Revised), 1971–72, Voting:
Welfare of the Backward Classes ... ... 306–310
Compulsory collection of payment towards I.M.S. Loans, Trunelveli district (C.A.) ... ... ... 36

EDUCATION—
Study of Sanskrit, steps taken ... ... ... 200–205

ELECTRICITY—
Electric Supply Companies (private), number ... 292–294



PAGES

E—*cont.*

EMPLOYMENT EXCHANGE(S)—
Unemployed persons registered with Employment Exchanges, payment of allowances ... ... ... 287

F.

FACTORIES—
A.C.C. cement factory, modern filter process to control the smoke ... ... ... ... ... 10–11
Fertilizer factory in Coimbatore, proposal ... ... 16
Fertilizer factory, Tuticorin ... ... ... ... 16–17
Foot-wear production under Indo-Italian auspices ... 100–101
Leather factory at Wallajapet, setting up ... ... 101

FILMS—
Loans to producers ... ... ... ... ... 280–283

FINANCIAL BUSINESS—
Budget (Revised), 1971–72, Voting:
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ... ... 341–365
Elections, ... ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff,
Miscellaneous ... ... ... ... ... 413–465
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... 219–244
State Legislature ... ... ... ... 465–483
Stationery and Printing ... ... ... ... 245–252
Welfare of the Backward Classes ... ... 300–341

FISHERIES—
Fishing Boats, supply to Fishermen, number ... 28

FOODGRAINS—
Paddy and rice, excess stock ... ... ... ... 391–393

FORESTS—
Sandalwood in Javadu Hills ,income ... ... 27

FOWLER THIRUMATHI ALDA, M.—
Budget (Revised), 1971–72, Voting:
Welfare of the Backward Classes ... ... 314–315

PAGES

G.

GANAPATHY, THIRU N.—
Budget (Revised), 1971-72, Voting :
State Legislature ... ... ... ... ... 471-472
Welfare of the Backward Classes ... ... ... 325
Administration of Justice ... ... ... ... 349-350
Jails ... ... ... ... ... ... ... 349-350
Rural Development, allocation of funds ... ... 7-8

GANESAN, THIRU S.—
Religious Institutions under H.R. & C.E. Department maintaining libraries, number ... ... 207-209

GOPAL, THIRU K. P.—
Budget (Revised), 1972-72, Voting :
Welfare of the Backward Classes ... ... ... 313-314

GRAMASEVAKS—
Training Centres ... ... ... ... ... 30-31

H.

HANDE, DR. H. V.—
Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 47-52, 80
Bridge across Coonm near Poonamallee ... ... 400-401
Budget (Revised), 1971-72, Voting :
Administration of Justice ... ... ... 342
Jails ... ...
Elections, ... ... ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff Miscellaneous ... ... ... ... ... ... 413, 414, 415, 439-443
General Sales Tax and Other Taxes and Duties— Administration ... ... ... ... ... ... 220, 232-234
State Legislature ... ... ... ... ... ... 465, 474-476
Welfare of the Backward Classes ... ... ... 310-313,
Bus routes, cancellation ... ... ... ... ... 19-21



PAGES

H—cont.

HANDE, DR. THIRU V. H.—cont.
Cauvery Water Dispute, Centre's action over the resolution passed by the House (A.M.) ... ... 211-212
Chickkaya Naicker's College, Erode, fees collection. 383-386
City Municipal Corporation Act, 1919, alteration of Schedule IV (R) ... ... ... ... ... 160
Contractors of Electricity Board, issue of fresh licences ... ... ... ... ... ... 17-19
House rent allowance, aided school teachers ... ... 277
House Rent Allowance, non-teaching staff of schools ... ... ... ... ... ... 276-277
Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 ... ... ... 40
Madurai Sourashtra Co-operative Bank, enquiry ... 116-119
Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 87-88, 89, 147-148, 150, 152-153
Pension for Municipal employees ... ... ... 386-388
Sodium Hydrosulphite Plant, Ramanathapuram ... 193-194
Township Committee, Mettur Dam ... ... ... 278-280,

HOSPITALS AND DISPENSARIES.
E.S.I. Scheme, Dispensaries, increase in number ... 25-26
E.S.I. Scheme, treatment of patients ... ... 189
Mangalam, closure ... ... ... ... ... 9-10

HOTELS :
Madras City, classification of grades ... ... 273-276

HOUSE RENT ALLOWANCE :
Aided School teachers ... ... ... ... 277
Non-teaching staff of schools ... ... ... ... 276-277

HOUSES—
Rental flat in Government Estate ... ... ... 409

PAGES

I


INDUSTRIAL ESTATE(S)—
- Mayuram ... ... ... ... ... ... 400
- Tiruppur area ... ... ... ... ... 399
- Wallajapet ... ... ... ... ... ... 400

INDUSTRIES—
- Beedi Industry, regulation of work ... ... 11–14
- Chemical—, starting ... ... ... ... 198
- Match—, shortage of materials ... ... ... 189–191
- Salt, cultivation ... ... ... ... ... 1
- Small industry in Palladam ... ... ... 398
- Sodium Hydrosulphite Plant, Ramanathapuram ... 193–194
- Southern Structurals Limited, starting of production 3–5
- Tyre retreading Unit, Coimbatore ... ... ... 196–197

INSTITUTIONS:
- Training centres for Gramasevaks, particulars ... 80–31

IRRIGATION—
- Noyyal river, desilting of channels ... ... ... 194–195
- Renovation of Channels, Bhavani Taluk ... ... 195–196


J


JAMES, THIRU J.—
- Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 59–62
- Budget (Revised), 1971–72, Voting:
  - Elections
  - Head of State, Ministers and Headquarters Staff, 414, Miscellaneous ... ... ... ... ... 434–437
  - General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 220
  - State Legislature ... ... ... ... ... 465, 472–474
- Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 ... ... ... 164
- Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... ... 167
- Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 150, 151–152, 155




PAGES

J—*contd.*


JUDICIARY:
- Bar Association, Tiruppur, representation ... ... 194
- Judicial Department, number of Women Judges ... 288–289


K


KANDAPPAN, THIRU S.:
- Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 133–136

KANDASAMI, THIRU MANALI C.:
- Budget (Revised), 1971–72, Voting:
  - Welfare of the Backward Classes ... ... ... 323–325
- Government Assurances Committee, First Report (Fifth Assembly), presentation ... ... ... 217
- Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... .. ... ... 167–168

KANNAN, THIRU M. R.:
- Budget (Revised), 1971–72, Voting:
  - General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... ... 231–232
  - Stationery and Printing ... ... ... 247–249

KARIVENGADAM, THIRU M. V.:
- Budget (Revised), 1971–72, Voting:
  - Welfare of the Backward Classes ... ... ... 327–328

KARUNAINATHAN, THIRU J.:—
- Budget (Revised), 1971–72, Voting:
  - Elections, Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ... ...
  - Miscellaneous ... ... ... ... ...

KARUNANIDHI, DR. M.—
- Budget (Revised), 1971–72, Voting:
  - Elections
  - Head of State, Ministers and Headquarters Staff, 413 Miscellaneous ... ... ... ... ... 453–464
  - State Legislature ... ... ... ... 482–483
  - Welfare of the Backward Classes ... ... 319, 327

PAGES

K—*cont.*


KARUNANIDHI, Dr. M.—*cont.*

Cauvery Water Dispute, Centre's action over the resolution (A.M.) ... ... ... ... ... 213–216

Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 127, 128, 135, 142, 148

Promulgation of Prohibitory Order under City Police Act (A.M.) ... ... ... ... ... ... 298–300

Remarks made by Thiru N. Sivappa in Lok Sabha on Cauvery Water dispute (Privilege Matter) ... 216–217

Urban Land Tax (Amendment) Bill, 1971 ... ... 177, 180–181

KITTAPPA, Thiru N.—

Agricultural Farms (Government) at Aduthurai, conversion of buildings ... ... ... ... ... 292

Barbers, supply of Tools ... ... ... ... ... 30

Bus permits, number ... .. ... ... ... 27–28

Cinchona Plantation in Thanjavur District ... ... 403–405

Co-operative Super-markets, establishment in small towns, etc. ... ... ... ... ... ... 291–292

Cooum river, operation of boat service ... ... 290

Dhobi Khanas to Washermen in certain Towns. Particulars ... ... ... ... ... ... ... 32

Electric Supply Companies (Private), number ... 292–294

Fishing Boats supplied to fishermen number ... 28

Gandhi Vidyalaya Teachers Training School, grants. 33

Hotels in Madras City, classification of grades ... 273–276

Industrial Estate in Mayuram ... ... ... ... 400

Mayuram Bus Stand, financial assistance, particulars ... ... ... ... ... ... ... 31

Mudhumalai Sanctuary animals, particulars ... 31

Naxalites, prevention of infiltration into our State ... 29

Paddy and rice, excess stock ... ... ... ... 301–303

Panchayat Union, Mayuram, reading rooms ... 355

Pension for Municipal employees ... ... ... 396–388

Poromboke lands, issue of pattas ... . . ... 27




K—*cont.*


KITTAPPA, Thiru N.—*cont.*

Printing Works of Government, printing in private presses ... ... ... ... ... ... ... 269–271

Revenue Board, abolition ... ... ... ... 272–273

Sandal Wood in Javadu Hills, income . ... ... 27

Seed Farms, particulars ... ... ... ... 28

Training Centres for Gramasevaks ... ... ... 30

KOTHANDARAMIAH, Thiru K. S.:

Budget (Revised), 1971–72, Voting:
Elections

Head of State, Ministers and Headquarters Staff, Miscellaneous ... ... ... ... ... 414

KUMARASAMI, Thiru K. N.:

Budget (Revised), 1971-72, Voting:

Administration of Justice ... ... ... 314
Jails

General Slaes Tax and other Taxes and Duties—Administration ... ... ... ... ... 220

Jails ... ... ... ... ... ... ... 342

Welfare of the Backward Classes ... ... ... 319–321

Palladam constituency, hardship to people in villages due to the death of drinking water (C.A.) ... ... 120–121

Small Industry in Palladam ... ... ... 398

Sub-treasury at Palladam, opening ... ... 103–104


L


LANDS:

Compensation, payment to Zamindars ... ... 113–114

Landless persons, allotment ... ... ... 14–15

Poramboke, issue of pattas ... ... ... 27

Poramboke, Udalaipattu village, particulars ... 32

Seed Farms, particulars ... ... ... ... 28–29

LATHEEF, Thiru M. A.:

Budget (Revised), 1971–72, Voting:

General Sales Tax and Other Taxes and Duties. Administration ... ... ... ... ... ... 229–230

Cauvery Water Dispute, Centre action over the resolution (A.M.) ... ... ... ... ... 212–213

PAGES

L—*cont.*

**LAW AND ORDER:**
- Naxalites, prevention of infiltration ... ... ... 30

**LIBRARIES:**
- Religious Institutions under H.R. & C.E. Department maintaining—, number ... ... ... 207–209

LICENCES:
- Contractors of Electricity Board, issue of ... ... 17–19

**LOANS:**
- Burma–Ceylon Repatriates, particulars ... ... 35
- Compulsory collection from Agriculturists, Tirunelveli District (C.A.) ... ... ... ... 36

LOCAL BODIES:
- City Municipal Corporation Act, 1919, alteration of Schedule IV (R) ... ... ... ... ... ... 156–161
- Mayuram Municipality, financial assistance for constructing Bus stand ... ... ... ... ... 31–32
- Municipal Chairmen and Corporation Mayors Election 104–109
- Tiruppur Municipal Office, Misappropriation of funds ... ... ... ... ... ... 24–25

M

MADHAVAN, Thiru S.:
- Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 46–47, 74–81, 86
- Budget (Revised), 1971-72, Voting:
  - Administration of Justice ... ... ... 341, 342, 358–364
  - Jails ... ... ... ... ... ... ... 311
- City Civil Court (Amendment) Bill, 1971 ... ... 37–38, 39
- Court-fees and Suits Valuation (Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... ... 218

MALAICHAMY, Thiru P.:
- Judicial Department, number of Women Judges ... 268–269



PAGES

M—*cont.*

MANIYAN, Thiru P. S.—
- Law College at Madurai, proposal ... ... ... 5–5
- Madurai-Palamedu, City Bus Service ... ... 120
- Primary Land Development Bank in Tamil Nadu, particulars ... ... ... ... ... ... 32

MARUDACHALAM, Thiru N.—
- A.C.C. cement factory, modern filter process to control smoke ... ... ... ... ... 10–11
- Budget (Revised, 1971–72, Voting:
  - General Sales Tax and Other taxes and duties— Administration ... ... ... ... ... 225, 249
  - Stationery and Printing ... ... ... ... 116
- Dam near Palathurai village ... ... ... ...

MILLS—
- Shanmughar Mills, Rajapalayam, reopening, particulars ... ... ... ... ... ... 33–35
- Textile Mills (closed), re-opening ... ... ... 284–287

MOHIDEEN, Thiru THIRUPPUR R. M.—
- Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 58–59
- Budget (Revised), 1971–72, Voting: State Legislature ... ... ... ... ... ... 469–471
- Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 129

MOTION(S)—
- Ad. Motions:
  - Cauvery water dispute, Centre's action over the resolution passed by the House ... ... ... 211–216
  - Promulgation of Prohibitory Order under City Police Act ... ... ... ... ... 296–300

N.

NARASIMHAN, Thiru A. C.—
- Budget (Revised), 1971–72, Voting:
  - Elections ... ... ... ... ... ...
  - Head of State, Ministers and Headquarters staff ... ... ... ... ... [illegible]–439
  - Miscellaneous ... ... ... ... ...

PAGES

N—*cont.*


NATARAJAN, THIRU N. V.—

Budget (Revised), 1971-72, Voting :

Stationery and Printing ... ... ... ... 245, 249-252

Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 ... ... 39-40, 45

NAXALITES—

Arrests, special police cell ... ... ... ... 393-397

Clerk in Nagercoil Collector's office ... ... ... 397-398

NEDUNCHEZHIYAN, THIRU V. R.—

Budget (Revised), 1971-72, Voting :

State Legislature ... ... ... ... ... 465, 478-482

City Municipal Corporation Act, 1919, alteration of Schedule IV (R) ... ... ... ... ... 156, 157, 160

Palladam Constituency, hardship to people in villages due to dearth of drinking water (C.A. St.) ... ... ... ... ... ... ... 121-122


O.


OFFICES—

Sub-treasury at Palladam, opening ... ... 103-104


P.


PALANISAMY, THIRU N. K.—

Film producers, grant of loans ... ... ... 280-283

Law College at Madurai, proposal ... ... ... 5-7

Match Industry, shortage of materials ... ... 189-191

Railway Cess Fund, utilisation ... ... ... 109-118

Textile Mills (closed), re-opening ... ... ... 284-287

PANCHAYATS—

Grants ... ... ... ... ... ... ... 366




PAGES

P—*cont.*


PANCHAYAT UNIONS—

Employees' conference ... ... ... ... 8-9

Mayuram, reading rooms ... ... ... ... 366

PAPERS LAID ON THE TABLE—

Abkari (Amendment) Bill, 1971 with annexure ... 185

Agricultural Income-Tax (Amendment) Bill, 1971 with annexure ... ... ... ... ... 185

Backward Classes Department, performance Budget 366

Cinemas (Regulation) Act, 1955, notification ... 91

Constitution of India, Article 320 (5), notification ... 184

General Sales Tax and Other taxes and duties —Administration, Note ... ... ... ... 253,366

Government Assurances Committee (Fifth Assembly), first report ... ... ... ... 253

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1971, notification ... 91

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971, annexure ... ... 185

Motor Vehicles (Second Amendment) Bill 1971 with annexure ... ... ... ... ... 185

Panchayat Act, 1958, notifications ... ... ... 365, 484,

Prohibition Act, 1937, notification ... ... 484

Public Accounts Committee, report ... ... 366

Sales Tax (Surcharge) Bill, 1971 ... ... ... 366

Stationery and Printing Department, review on working ... ... ... ... ... ... 366

Subordinate Legislation Committee (Fifth Assembly), Second report ... ... ... ... 253

Tamil Nadu Public Service Commission Regulations, 1954, notification ... ... ... ... 91

Unstarred questions and answers, list ... ... 91

Urban Land Tax Bill, 1971 with annexure ... 185

Welfare of Backward Classes, policy note ... 484

PENSION—

Municipal employees ... ... ... ... ... 386-388

PAGES

P—*cont.*


PERMITS—

Bus—, 1969–70, number ... ... ... ... 27–28

POLICE—

Dogs—, Import from East Germany for Investigation Department ... ... ... ... 283–284

PONNAPPA NADAR, THIRU R.—

Abkari (Amendment) Bill, 1971 ... ... 69–74

Budget (Revised), 1971–72, Voting—

Administration of Justice, Jails ... ... ... 341, 355–358,364

Elections, Head of State, Ministers and Headquarters Staff ... ... ... ... ... 448–453

Miscellaneous ... ... ... ... ...

General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... 234–237

Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 ... ... 163–164

Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 ... ... ... 44

Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 133, 136 139–141 146, 148

Promulgation of Prohibitary Order under City Police Act (A.M.) ... ... ... ... ... 297

Public Accounts Committee, Report on Excess over Voted Grants and Charged Appropriations, for the year 1968–69, presentation ... ... 300

PRINTING—

Works of Government–in Private Presses ... 269–271

PRIVILEGES—

Publication of expunged portions in Indian Express. 209–210

Remarks made by Thiru N. Sivappa in Lok Sabha on Cauvery water dispute ... ... ... 216–217

PROHIBITION—

Number of cases ... ... ... ... ... 23




PAGES

R.


RAILWAY(S)—

Cess Fund, utilisation ... ... ... ... 109–113

RAJA, THIRU A. M.—

Budget (Revised), 1971–72, Voting:

General Sales Tax and Other Taxes and Duties— ... ... ... 222–225

Administration ... ... ... ... 468–469

State Legislature ... ... ... ... 401–402

Dams at Vazhukkupparai and Varathuppallam ... 195–196

Renovation of Channels, Bhavani Taluk ... ... 

Strike proposed by taxi drivers in Madras City (C.A. st.) ... ... ... ... ... 409–411 412

RAJANGAM, THIRU N.—

Poramboke lands in Udalaipatti Village, particulars. 32

RAJARAM, THIRU K.—

Budget (Revised) 1971–72, Voting: ... ... 301–303

Welfare of the Backward Classes 335–341

RAMACHANDRAN, THIRU S.—

Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... ... 87, 87–90 127, 128, 130, 141–149, 154–155

Strike proposed by taxi drivers in Madras City (C.A.). 409–411

RAMAKRISHNAN, THIRU KUPPAL, K. S.—

Budget (Revised), 1971–72, Voting: ... ... 333–334

Welfare of the Backward Classes

RESOLUTION(S)—

City Municipal Corporation Act, 1919, alteration of ... 156–161

Schedule IV ... ... ... ... ... 161–162

Cotton Transport Rules, 1950, Amendments ... 272–273

Revenue Board, abolition ... ... ... ...

RURAL DEVELOPMENT—

Allocation of funds ... ... ... ... ... 7–8

PAGES

S.

SANCTUARY—
Mudumalai ... ... ... ... ... ... 31

SANGUMUTHU THEVAR, Thiru S.—
Coin shortage in State Transport Buses ... ... 405–407
Export Promotion Councils, review on work ... 15–16
Foot-wear Production under Indo-Italian auspices. 100–101
Italian Trade Team, visit to Madras ... ... 99–100
Sri Meenakshi Amman Koil, visit of President in June, 1971 ... ... ... ... 407–409
Study of Sanskrit, steps taken ... ... ... 200–205
Tamil Archanas in Temples ... ... ... 21–23
Textile Corporation, appointment of Legal-retainers 287
Thali snatching cases in Thanjavur district ... 102–103

SARATHY, Thiru M. P.—
Loans to Burma, Ceylon repatriates, particulars ... 35
Naxalites, Special Police Cell ... ... ... 393–397
Revenue Board, abolition ... ... ... ... 272–273
Tamil archanas in Temples ... ... ... ... 21–23

SCHOLARSHIPS—
Scheduled Caste Students, demonstration, Madras . 199–200

SCHOOL(S)—
Gandhi Vidyalaya Teachers Training School, grants 33
H.R.A. to non-teaching staff ... ... ... 276–277

SEENIVASAN, Thiru P.—
Subordinate Legislation Committee, Second Report (Fifth Assembly), presentation ... ... ... 217

SELVARAJ, Thiru M.—
Budget (Revised), 1971–72, Voting :
General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... 227–229

SHANMUGAM, Thiru P. U.—
Budget (Revised), 1971–72, Voting :
General Sales Tax and Other Taxes and Duties—Adminis tration ... ... ... ... 219, 220, 237–244



PAGES

S—cont.

SHANMUGAM, Thiru P. U.—cont.
Compulsory collection of payment towards I.M.S. loans (C.A. St.) ... ... ... ... 36
Correction to particulars given earlier (St.). ... 412
Holdings (Stay of Execution Proceedings) (Tamil Nadu Amendment) Bill, 1971 ... ... ... 162–163, 164, 165
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... 165–167, 169–170, 173, 174
Motor Vehicles (Second Amendment) Bill, 1971 ... 88, 89
Sales Tax (Surcharge) Bill, 1971 ... ... ... 37
Urban Land Tax (Amendment) Bill, 1971 ... ... 174, 178, 180, 181, 182, 183, 184

SIVAPRAKASAM, Thiru D. S. A.—
Cooum Improvement Scheme, revision of estimated amount ... ... ... ... ... ... 289–290
Dogs, import from East Germany for Investigation Department ... ... ... ... ... 283–284
Grants to Panchayats ... ... ... ... ... 388
Local Bodies, election of Chairmen and Mayors ... 104–109

SOUNDARAPANDIAN, Thiru P.—
Budget (Revised), 1971–72, Voting :
Elections ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff
Miscellaneous ... ... ... ... ... 418–420

SRINIVASAN, Thiru T. P.—
Budget (Revised), 1971–72, Voting :
Welfare of the Backward Classes ... ... 333

STADIA.—
Construction at Coimbatore ... ... ... ... 205–206
Sports—, construction at Kancheepuram ... 207

PAGES

S—*cont.*


**STATE TRANSPORT—**

Coins, shortage ... ... ... ... ... 405–407

**STRIKE(S)—**

Strike proposed by Taxi drivers in Madras City (C.A.) 409–412

**SUBBIAH, THIRU A. K.—**

Budget (Revised), 1971–72, Voting:

Elections ... ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff Miscellaneous ... ... ... ... ... 413, 415–418

Welfare of the Backward Classes ... ... 301

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... 171–172

**SUBRAMANIAM, THIRU A.—**

Budget (Revised), 1971–72, Voting:

Administration of Justice ... ... ... ... 349,

Jails ... ... ... ... ... ... 350–352

Elections, ... ... ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff Miscellaneous ... ... ... ... ... 415, 425–426

General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... 225–227

Welfare of the Backward Classes ... ... ... 301

Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... 169

**SUBRAMANIAM, THIRU K. M.—**

Budget (Revised), 1971–72, Voting:

General Sales Tax and Other Taxes and Duties—Administration ... ... ... ... 220–[illegible]

Welfare of the Backward Classes ... ... 321–[illegible]

City Municipal Corporation Act, 1919, alteration of Schedule IV (B) ... ... ...




PAGES

S—*cont.*


**SUBRAMANIAM, THIRU V.—**

Budget (Revised), 1971–72, Voting:

Welfare of the Backward Classes ... ... 316–317

**SUNDARAM, THIRU O. N.—**

Chemical Industry, starting ... ... ... 193

**SUPPU, THIRU K.—**

Budget (Revised), 1971–72, Voting:

Administration of Justice ... ... ... ... ...

Jails ... ... ... ... ... ... 342–345

Elections ... ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff, Miscellaneous ... ... ... ... ... 414

Courts (new), Ramanathapuram district ... ... 101–102

Rajapalayam Shanmugar Mills, reopening, particulars ... ... ... ... ... ... 33–35

Ramanathapuram district, Sub-Taluks, upgrading 15

**SURENDRAN, THIRU M.—**

Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 67–69

Budget (Revised), 1971–72, Voting:

Elections ... ... ... ... ...

Head of State, Ministers and Headquarters Staff Miscellaneous ... ... ... ... ... 414

State Legislature ... ... ... ... ... 465, 465–468

E.S.I. Scheme, treatment of patients ... ... 189

Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 ... ... ... 43–44

Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... ... 130–131

Promulgation of prohibitory order under City Police Act (A.M.) ... ... ... ... ... ... 297–298

**SWAMIDHAS, THIRU A.—**

Annamalai University, students demonstration ... 104

Budget (Revised), 1917–72, Voting:

Administration of Justice ... ... ... ...

Jails ... ... ... ... ... ... 347–349

Welfare of the Backward Classes ... ... 334–335

PAGES

S—*cont.*


Budget (Revised), 1971-72, Voting :

| | |
|---|---|
| Co-operative Tea Factories, functioning ... ... | 191-192 |
| Queen Mary's College, bus accident near ... | 294-296 |
| Scheduled Caste students' demonstration, Madras. | 199-200 |
| Southern Structurals Limited, starting of production | 3-5 |

T.

TALUKS—

| | |
|---|---|
| Upgrading of sub—in Ramanathapuram district ... | 15 |

TAXES—

| | |
|---|---|
| Collection by Village Officers ... ... ... | 388-390 |

TEMPLE(S) :

| | |
|---|---|
| Sri Meenakshi Amman Koil, visit of President ... | 407-409 |
| Tamil Archanas, steps taken ... ... ... | 21-23 |

TEXTILES :

| | |
|---|---|
| Banians, export ... ... ... ... ... | 399-400 |

THANGAMANI, Thiru K.T.K.—

| | |
|---|---|
| Abkari (Amendment) Bill, 1971 ... ... ... | 64-67, 85 |
| Beedi Industry, regulation of work ... ... | 11-14 |
| Budget (Revised), 1971-72, Voting : | |
| Elections | |
| Head of State, Ministers and Headquarters Staff | 414 |
| Miscellaneous ... ... ... ... ... | 443-447 |
| General Sales Tax and Other Taxes and Duties Administration ... ... ... ... ... | 219 |
| Jails ... ... ... ... ... ... | 342, |
| Administration of Justice ... ... ... ... | 353-355, 553-555, [illegible] |




PAGES

T—*cont.*


THANGAMANI, Thiru K.T.K.—*cont.*

Budget (Revised), 1971-72—Voting—*cont.*

| | |
|---|---|
| State Legislature ... ... ... ... ... | 465, 476-478 |
| Cauvery Water Dispute, Centre's action over the resolution passed by the House (A.M.) ... ... | 211 |
| City Civil Court (Amendment) Bill, 1971 ... ... | 38 |
| Employees of Panchayat Unions, Conference ... | 8-9 |
| Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1971 ... ... | 41-43 |
| Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... ... | 160, 171, 173 |
| Motor Vehicles (Tamil Nadu Second Amendment) Bill, 1971 ... ... ... ... ... | 136-139, 144, 146, 149-150, 155 |
| Promulgation of prohibitory order under City Police Act (A.M.) ... ... ... ... ... | 207 |
| Publication of expunged portions in Indian Express' (Privilege Matter) ... ... ... ... | 209-210 |
| Revenue Board, abolition ... ... ... ... | 272-273 |
| Strike proposed by Taxi drivers in Madras City (C.A.) | 409, 412 |
| Urban Land Tax (Amendment) Bill, 1971 ... ... | 174-175 |

THEFT :

| | |
|---|---|
| Thali snatching cases in Thanjavur District ... | 102-103 |

TOOLS :

| | |
|---|---|
| Free supply to barbers ... ... ... ... | 30 |

TOWNSHIP(S) :

| | |
|---|---|
| Committee, Mettur Dam ... ... ... ... | 278-280 |

TRANSPORT :

| | |
|---|---|
| Bus routes, cancellation ... ... ... ... | 19-21 |
| City Bus Service between Palamedu and Madurai ... | 120 |

U

UNIVERSITY :

| | |
|---|---|
| Annamalai, students' demonstration ... ... | 104 |

## V

VEERASAMI, THIRU N.—
Abkari (Amendment) Bill, 1971 ... ... ... 82-84

VENKATACHELLUM, THIRUMATHI JOTHI.—
Budget (Revised), 1971-72, Voting :
Welfare of the Backward Classes ... ... 326-327

VENKATASWAMY, THIRU B.—
Bananas, intensive cultivation in Dharmapuri District 402

VEZHAVENDAN, THIRU K.—
Budget (Revised), 1971-72, Voting :
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ... ... 345-347

VISITS :
Italian Trade team, visit to Madras ... 99-100
Youth Godwill Mission, Madras ... ... ... 198-199

V2:1,31 N71

## W

31N71.7

WAHAB, THIRU K. A. :
Budget (Revised), 1971-72, Voting :
Welfare of the Backward Classes ... ... 317-319
Co-operative Match Societies, number ... ... 24
Industrial Estate, Wallajapet ... ... ... 400
Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1971 ... ... ... ... 172-178
Local Bodies, election of Chairmen and Mayors ... 104-109
Mat Societies, number ... ... ... ... [illegible]
Medical College, admission of Muslim students, number ... ... ... ... ... 33
Naxalite [illegible], clerk in Nagercoil Collector's office ... ... ... ... ... 307-308
Payment of compensation to Zamindars ... ... 118-114
Prohibition cases, number ... ... ... ... [illegible]

61517